2892

T.N.L.A. Debates

Official Report

Vol XV No 3 & 4

1/20 January 1986

D
V211,31 N86
N86.15.3&4
136438

வெளியீடு 14-7-1986 Issued 14-7 1986

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

சனிக்கிழமை, சனவரி 11, 1986-தொகுதி XV எண் 3
Saturday the 11th January 1986-Volume XV No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras-600009

விலை ரூ. 3 00 காசுகள்] [Price Rs 3-00 paise

136438

V8211,31 N86
N86.15-3

## உள்ளடக்கம்

11—I—1986


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | இரங்கல் குறிப்பு— | |
| | முன்னாள் உறுப்பினர் திரு. சே. லிங்கராஜ் மறைவு குறித்து. | 179 |
| 2. | வினாக்கள்-விடைகள்— | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள் | 180—215 |
| 3. | தகவல் கோரல்— | |
| | (அ) கரும்பு விலையை உயர்த்திக் கொடுப்பது. | 215—216 |
| | (ஆ) குமரி மாவட்டம் பெருஞ்சிரக்கோணம் பகுதியில் நடைபெற்ற கலவரம் குறித்து. | 216—218 |
| | (இ) திரு. பால்ராஜ் மீது நடவடிக்கை எடுப்பது குறித்து. | 218—220 |
| 4. | கவன ஈர்ப்புகள்— | |
| | (அ) மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் மூடப்பட்டுள்ளது குறித்து. | 221—227 |
| | (ஆ) திண்டுக்கல் மாவட்ட மருத்துவமனை அறுவைச் சிகிச்சைக்கூடம் செயல்படாது உள்ள நிலை குறித்து. | 228—230 |
| 5. | அரசினர் சட்ட முன்வடிவுகள்— | |
| | (அ) சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு 1986. | 230—235 |
| | (ஆ) கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு 1986. | 235—238 |
| | (இ) மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு 1986. | 238—239 |
| | (ஈ) நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரி நியமனம்) திருத்த சட்ட முன்வடிவு 1986. | 239—240 |
| | (உ) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு 1986. | 240—241 |

| | | |
|---|---|---|
| | (ஊ) ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு 1986. | 241 |
| | (எ) ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு 1986. | 241 |
| | (ஏ) மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு 1986. | 242—243 |
| 6. | ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்—தொடர்ச்சி. | 243—296 |
| | திரு தி. அன்பழகன் | 243—249 |
| | திரு டி. தீர்த்தகிரி கவுண்டர் | 249—259 |
| | திரு துரை அன்பரசன் | 259—262 |
| | திரு கு. ரமணி | 262—273 |
| | திரு ஏ. தங்கராசு | 273—276 |
| | திரு பொ. உத்திராபதி | 276—282 |
| | திரு ப. பொன்னுரங்கம் | 282—289 |
| | திரு ஜி. கே. ஜெ. பாரதி | 289—296 |
| 7. | அரசினர் தீர்மானம்—பேரவை ஒத்திவைக்கப்பெறுதல். | 296 |
| 8. | பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள். | 296—298 |


## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1986, சனவரி 11, சனிக்கிழமை

மார்கழி 27, குரோதன, திருவள்ளுவர் ஆண்டு—2016

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"முகத்தான் அமர்ந்துஇனிது நோக்கி அகத்தானாம்
இன்சொ லினதே அறம்"

முகத்தால் விரும்பி இனிமையுடன் நோக்கி உள்ளம் கலந்த இன்சொற்களைக் கூறும் தன்மையில் உள்ளதே அறமாகும்.

### 1. இரங்கல் குறிப்பு

முன்னாள் உறுப்பினர் திரு. கே. லிங்கராஜு மறைவு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. கே. லிங்கராஜு அவர்கள் 3—1—1986ஆம் தேதியன்று மறைந்ததை இப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. லிங்கராஜு அவர்கள் 1946ஆம் ஆண்டிலிருந்து 1952ஆம் ஆண்டு வரை ராஜமந்திரி பொது கிராமப்புற தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்ட மன்றப் பேரவைக்கு தேர்ந்தெடுக்கப்பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும், இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நின்றனர்)

## 2. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### அனல்மின் நிலையங்களின் உற்பத்தித்திறன்

21—(*வினா எண் 329) திரு டி. ஆர். வேங்கடரமணன்—மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக மின் வாரியத்தில் உள்ள அனல் மின் நிலையங்கள் எத்தனை விழுக்காடு செயல் திறனில் செயல்படுகின்றன? (Production efficiency).

(ஆ) அனல் மின் நிலையங்களில் பராமரிப்பு (Maintenance) குறைவாக உள்ளதால் மின் உற்பத்தி சீர்குலைவு ஏற்படுவது உண்மையா?

(இ) இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: (அ) 1984–85 இல் எண்ணூர் அனல் மின்நிலையம் 36.2 விழுக்காடு திறனுடனும் தூத்துக்குடி அனல் மின்நிலையம் 62 விழுக்காடு திறனுடனும் செயல்பட்டது.

(ஆ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலிலே எண்ணூர் அனல்மின் நிலையம் 36.2 விழுக்காடும், தூத்துக்குடி அனல்மின் நிலையம் 62 விழுக்காடும் மின்சாரம் உற்பத்தி செய்கிறது என்ற தகவலையும் தந்து விட்டு, இந்தக் குறைவிற்கு காரணம் பராமரிப்பு குறைவு அல்ல என்றும் சொல்லியிருக்கிறார்கள். அப்படியானால் அந்த உற்பத்தித் திறன் குறைவதற்கு காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்களிட மிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, எண்ணூர் அனல்மின் நிலையத்தைப் பொறுத்த வரையில் அதிலே பல்வேறு வகையில்—அதாவது டிசைனிலிருந்து இயந்திரங்கள் வரை பல்வேறு வகையில்—கோளாறுகள் இருந்தன. அவற்றை யெல்லாம் மாற்றவேண்டும் என்பதற்காக மேம்பாடு திட்டம் உருவாக்கப்பட்டு முதல் நிலை மேம்பாடு திட்டம், இரண்டாவது நிலை மேம்பாடு திட்டம் என்று திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் பயனாக உற்பத்தித் திறன் 85 ஆம் ஆண்





ஏப்ரலிலிருந்து செப்டம்பர் வரையில் தமிழகத்திலே 52.4 சதவீதம் என்று இருந்தது தற்போது 64 விழுக்காட்டிற்கு உயர்ந்து வந்திருக்கிறது. தூத்துக்குடி அனல்மின் நிலையத்தைப் பொறுத்த வரையில் 62 விழுக்காடு என்பது வரவேற்கத் தக்க ஒன்று. நாடு முழுவதும் 50 சதவீதத்தைக் கூட எட்ட முடிய வில்லை. பொதுவாக 50லிருந்து 60 சதவீதம் அல்லது 60 சதவீதம் என்று வந்தாலும் அது வரவேற்கத் தக்கது.

திரு டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலியில் உள்ள அனல்மின் நிலையம் எல்லாம் 90க்கும் மேற்பட்ட சதவீதத்திலே உற்பத்தி செய்து கொண்டிருக்கும்போது, மற்ற பகுதிகளிலே 50 விழுக்காடு என்ற அளவிலே இருப்பதினால் நாம் 62 சதவீதம் உற்பத்தி செய்கிறோம் என்று சொல்வது அவ்வளவு ஏற்புடையதாக எனக்குத் தோன்ற வில்லை. ஏனென்றால் எண்ணூர் அனல்மின் நிலையமானாலும், தூத்துக்குடி அனல்மின் நிலையமானாலும், அங்கே பழுதுகள் அதிகமாக ஏற்படுகின்றன. சமீபத்திலே தூத்துக்குடியில் மின் உற்பத்தி அதிகரித்திருந்தாலும் கூட, பழுதுகள் அதிகமாகத்தான் ஏற்படுகின்றன. காரணம் கேட்டால், அந்த இயந்திரங்களை பழுது பார்க்க பி.எச்.இ.எல். நிறுவனத்தினர் வரவேண்டும் என்கிறார் கள். பி.எச்.இ.எல். நிபுணர்கள் 2 நாட்களில் வந்து தவறுகளை சரிசெய்து விட்டு செல்லும்போது என்ன சொல்லுகிறார்கள் என்றால்—அந்த நிபுணர்களின் கருத்து என்னவென்றால்—தமிழகத்தின் மின் இலாகாவின் குறிப்பாக தூத்துக்குடி அனல் மின் நிலையத்தைப் பொறுத்த வரையில், மெயின்டெனன்ஸ் மிகவும் மோசமாக இருக்கிறது என்கிற கருத்தை தெரிவித்திருக் கிறார்கள். இந்த மெயின்டெனன்ஸ் அத்தாரிட்டிகளினுடைய கருத்தை ஆராய்ந்து, அதற்கு தக்க நடவடிக்கை எடுத்தால் தூத்துக்குடி அனல்மின் நிலையத்தினுடைய உற்பத்தியின் அளவு உயரும். அதற்கு அமைச்சர் அவர்கள் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, தனி மரம் தோப்பாகாது. ஆகவே நெய்வேலி ஒன்றை மட்டும் வைத்துக்கொண்டு இந்தியாவிலே உள்ள அனைத்து அனல்மின் நிலையங்களையும் கணக்கிடுவது சரியாகாது. தூத்துக்குடி, எண்ணூர் போன்ற அனல்மின் நிலையங்களில் உள்ள இயந்திரங்கள் வெளிநாடுகளிலிருந்து வாங்கப்பட்ட இயந்திரங்கள் அல்ல. நாமே உருவாக்கிய இயந்திரங்கள்தான் அங்கே இருக்கின்றன. நெய்வேலி யில் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்கள் இருப்பதோடு மட்டுமல்லாமல், அங்கே தரமான கரியையும் அவர்களால் உற்பத்தி செய்து கொள்ளமுடிகிறது. நமக்கு கல்லும், மண்ணும், இரும்பும் இப்படி எல்லாம் சேர்ந்த தரக்குறைவான நிலக்கரியே வருகிறது என்பதையும் மறந்து விடுவதற்கில்லை. ஆகவேதான் இருப்பதைக் கொண்டு சிறப்பாகச் செய்கிறோம் என்று தெரிவித்தேன்.

[1986 சனவரி 11

திரு வி. பி. சிந்தன் : தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள மின் உற்பத்தி நிலையங்களில் அடிக்கடி ஏற்படுகிற இந்தக் கோளாறுகளைக் கணக்கில் எடுத்துக்கொண்டு—நான் விளக்கங் களுக்குப் போகவில்லை—மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு டெக்னோகிராட்டை, தொழில்நுட்பம் தெரிந்த ஒருவரை இந்த இலாக்காவிற்கு பொறுப்பாளராகப் போட முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, உரிய நேரத்தில் ஆராயப்படும்.

திரு தி. அன்பழகன் : தலைவர் அவர்களே, அனல் மின் நிலையங்கள் திடீரென்று பழுதுறும் சமயங்களில் தொடர்ந்து மின் உற்பத்தி செய்யும் வகையில் கேஸ் டர்பைன் திட்டத்தை அனைத்து அனல் மின் நிலையங்களிலும் செயல்படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, இது ஒரு நல்ல யோசனை. பொதுவாக வெளிநாடுகளில் எங்கெங்கே நிலக்கரியை வைத்து மின் உற்பத்தி நடைபெறுகிறதோ அங்கெல்லாம் கேஸ் டர்பைன் அதாவது டீசல் இயந்திரங்களை சர்த்தே வைக்கிறார்கள். உற்பத்தியில் ஏற்றத்தாழ்வு ற்படுகிறபொழுது பயன்படுகிற முறையில் அது இருக்கிறது. ாநில மின் துறை அமைச்சர்கள் மாநாடு டெல்லியில் நடைபெற்ற பாது இந்தக் கருத்து நம்முடைய அரசினால் வலியுறுத்தப்பட் டிருக்கிறது. இந்திய அரசு பரிவோடு ஆராயும் என்று எதிர் ார்க்கிறோம். நாம் ஏற்கனவே சேஸ் டர்பைனை பேசின் பிரிட்ஜில் அமைக்கவேண்டுமென்ற கருத்துருவை இந்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். விரைவில் அனுமதி கிடைக்குமென்று திர்பார்க்கிறோம்.

திரு செ. செம்மலை : தலைவர் அவர்களே, நலிவுற்ற நிலையில் இருக்கும் மாநில மின்சார வாரியங்களுக்கு நிதியுதவி அளிக்கும் வகையில் மத்திய அரசு மின்சார நிதியுதவி கார்ப்பரேஷன் ஒன்றை ஆரம்பிப்பதற்கு மத்திய அரசை நம்முடைய அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாநில மின்வாரியங்களுக்குத் தேவைப்படுகிற அளவிற்கு மின் உ பத்தித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு போதுமான நிதியாதாரங்களைப் பெற்றிருக்கவில்லை. ஆகவே மின்உற்பத்திக் கென்று தனி நிதியுதவி நிறுவனம், 'பவர் டெவலப்மெண்ட் பினான்ஸ் கார்ப்பரேஷன்' ஒன்றை மத்திய அரசு உருவாக்க வேண்டுமென்று நாமும் வற்புறுத்தி வருகிறோம். மத்திய அரசும் அதைப் பரிசீலனை செய்து வருகிறது.



1986 சனவரி 11]

திரு எ. எஸ். ஏ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, மின் துறை அமைச்சர் அவர்கள் பேசும்பொழுது நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்தில் இருக்கக் கூடிய இயந்திரங்கள் வெளி நாட்டிலிருந்து வாங்கப்பட்டவை என்றும், தூத்துக்குடி மின் நிலையத்தில் உள்ள இயந்திரங்கள் நம் நாட்டில் செய்யப் பட்டவை என்றும் தெரிவித்தார்கள். அதனால் சக்தி குறைவாக இருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுடைய கருத்தாக தெரிந்தது. அப்படியென்றால் வெளி நாடுகளிலிருந்து இயந்திரங்களை வாங்கியிருக்கலாம். உள் நாட்டில் தயாரிக்கப்படும் இயந்திரங்கள் சரியாக இல்லையென்பது அமைச்சர் அவர்களுடைய கருத்தாக இருக்கிறது. இதற்கு அமைச்சர் அவர்கள் விளக்கம் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே. இதற்கு விளக்கம் ஒன்றும் தேவையில்லை. வெளி நாடுகளில், தொழில்நுட்பத்திறமை அதிகமாக இருக்கிறது. அதை நம்பிக் கொண்டிராமல் தன்னிறைவு பெறவேண்டுமென்று, தற்சார்பு பெறவேண்டுமென்று நாம் நம்முடைய தொழில் நுட்பத்தை வளர்த்துக் கொண்டு வருகிறோம். அப்படி வளர்த்துக் கொண்டு வருகிறபோது ஏற்படுகிற சிக்கல்கள் இவை.

### மின் நிலையங்களை நவீனப்படுத்தல்.

22—(* வினா எண். 1641) திரு இரா. தாமரைக்கனி : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டிலுள்ள மின் நிலையங்களை நவீனப் படுத்த மத்திய மின்சார ஆணைக் குழுவிடம் (CEA) தமிழ்நாடு அரசு விண்ணப்பம் செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எத்தனை மின் நிலையங்களுக்கு அக் குழு உதவி புரிய முன் வந்துள்ளது ?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) எண்ணூர் மற்றும் தூத்துக்குடி அனல் மின் நிலையங்களை மேம்படுத்த மத்திய அரசு மின்சார ஆணைக்குழு (CEA) அனுமதி வழங்கியுள்ளது.

திரு இரா. தாமரைக்கனி : தலைவர் அவர்களே, புனல் மின் நிலையங்களில் ஒரே இடத்தில் ஜெனரேட்டர் வைப்பதற்குப் பதிலாக, பலயிடங்களில் வைத்து அதிக மின்சாரம் பெற திட்டம் இருக்கிறதா ? இது போன்ற ஒரு யோசனை ஏற்கெனவே ஆய்வில் இருந்தது. அது இந்த நவீனப்படுத்தும் திட்டத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது புனல் மின் நிலையங்களைப் பற்றியதாகும். அனல் மின் நிலையங்களை நவீனப் படுத்துகிற ஒரு திட்டத்தை நாம் மேற் கொண்டு வருகிறோம். இந்திய அரசும் அதற்காக ஒரு சிறப்புத் திட்டத்தை உருவாக்கி நடைமுறைப்படுத்தி வருகிறது. புனல் மின் திட்டத்திற்கும் இந்தக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லை என்று கருதுகிறேன்.

(முற்பகல் 9-10)

திரு இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே. அனல் மின் நிலையங்களில் மின் உற்பத்தி செய்ய கரி அதிகமாகச் செலவாகிறது. ஆனால் அணு மின் நிலையத்தைப் பொறுத்த வரைக்கும், அந்த யுரேனியத்தை மீண்டும் எரிக்க முடியும். எனவே அணு மின் நிலையத்தை மாநில அரசு அமைக்க மத்திய அரசிடம் அனுமதி கோரப்பட்டு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, அணு மின் நிலையத்தினுடைய பொறுப்பு முழுக்க முழுக்க மத்திய அரசின் சட்டவரையறைக்கு உட்பட்டது.

திரு. உ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது, இது அனல் மின் நிலையம் சம்பந்தப்பட்டது என்று சொன்னார்கள். ஆனால் இந்தக் கேள்வியிலே பொதுவாகத் தான் குறிப்பிடப்பட்டு இருக்கின்றது. அனல் மின் நிலையம் அல்லது புனல் மின் நிலையம் என்று குறிப்பிடப்படவில்லை. தமிழ்நாட்டில் காடம்பாறை மின் திட்டத்தில், புதிய முறையில், குறைந்த தண்ணீரை வைத்துக்கொண்டு, கூடுதல் மின்சாரத்தைத் தயார் செய்து இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதைப்போல் ஏனைய அணைக் கட்டுகளில் இருக்கின்ற தண்ணீரைப் பயன் படுத்தி, கூடுதலாக மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு அரசு ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, புனல் மின் நிலையத்திற்கு மேம்பாட்டு திட்டம், 'பெட்டர்மெண்ட் ஸ்கீம்' தேவையில்லை. ஏன் என்றால், அந்த இயந்திரங்களால் நமக்குச் சிக்கல் வருவதில்லை. அனல் மின் நிலையங்களில்தான் மேம்பாட்டுத் திட்டங்கள் தேவைப்படுகின்றன. அதனால்தான் நான் அப்படிக் குறிப்பிட்டேன்.

திரு சு. பாலன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, பேசின்பிரிட்ஜ் அனல் மின் நிலையம் பற்றிக் குறிப்பிடப்படுகிற போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நிலையம் நவீனப் படுத்தப்படும் என்ற உறுதியை அளித்திருக்கிறார்கள். சமீப காலத்திலே அதனுடைய அதிகாரிகள் அந்த மின் நிலையத்தை





மூடி விடப் போவதாகச் சொன்ன அறிக்கையை நான் பார்த்திருக்கிறேன். இதில் எது உண்மை? நவீனப்படுத்தப் போகிறார்களா அல்லது அதை மூடிவிடப் போகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், தற்போது அந்த அனல் மின் நிலையத்தில் பல விலை உயர்ந்த சாமான்கள் எல்லாம் களவு போவதாக எனக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இதுபற்றி அமைச்சர் அவர்களுக்கோ அல்லது அதிகாரிகளுக்கோ தகவல் வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தைப் பற்றி அடுத்த கேள்வி வருகிறது.

## பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையம்

23—(*வினா எண். 2156) திரு. அ. செல்வராசன், திருமதி பா. வளர்மதி, டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேசின் பிரிட்ஜில் உள்ள தெர்மல் ஸ்டேஷனை அதனால் விளையும் சுகாதார கேட்டினைக் கருதி மூடிவிட அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், மாற்று திட்டம் என்ன ?

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : (அ) ஆய்வில் உள்ளது.

(ஆ) 50 மெகாவாட் திறன்கொண்ட கேஸ் சுழலி மின் ஆக்கி இரண்டை பேசின் பிரிட்ஜில் அமைக்க இந்திய அரசுக்குப் பரிந்துரை அனுப்பப்பட்டுள்ளது. இதற்கான ஒப்புதல் எதிர் பார்க்கப்படுகிறது.

திரு அ. செல்வராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேசின் பிரிட்ஜ் தர்மல் நிலையத்தை மூடியாகி விட்டது. என் தொகுதியைப் பொறுத்தவரையில் வட சென்னைக்கு ஒரு நிவாரணமாக இருந்து வந்தது. அதைப்பற்றி 8 ஆண்டுகாலமாக இங்கே வாதாடி வாதாடி. அதற்கு ஒரு முடிவு கண்டுவிட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது போல் அங்கே உள்ளவர்கள் எல்லாம் இப்போது எங்கே பணியாற்றுகிறார்கள் ? தாங்கள் 2 தெர்மலுக்காக மைய அரசிடம் அனுமதி கோரி உள்ளதாக சொல்லியிருக்கிறீர்கள். அவைகள் எப்போது வரும் என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, பேசின் பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தை மூடிவிடவேண்டும் என்று மின் வாரியம் தீர்மானம் போட்டு அரசினுடைய ஆய்வுக்கு அது

வந்திருக்கிறது. அரசினுடைய முடிவு விரைவிலே அறிவிக்கப்படும். அதற்கிடையில் பேசின்பிரிட்ஜிலே நமக்குப் போதுமான மின் உற்பத்தியும் கிடைப்பது இல்லை. சுமார் 8 கோடி யூனிட்டுகள்தான் கிடைக்கின்றன. மேலும் தொழிலாளர்கள் அங்கே நிரம்ப இருக்கிறார்கள்.

அதோடுமட்டுமல்லாமல் அதிலே மின்சாரம் உற்பத்தி ஆவதைவிட சாம்பல்தான் அதிகமாக உற்பத்தி ஆகிறது என்று பொதுவாக எல்லோரும் புகார் கூறினார்கள். அந்த அடிப்படையிலேதான் அதை மூடிவிடலாமா என்பதைப்பற்றி அரசு விரைவிலே ஆய்ந்து முடிவு எடுக்கும். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் முடிவு எடுக்கவேண்டியுள்ளது. மேலும் பணியாளர்களைப் பொறுத்தவரையில் 711 பேர்கள் அங்கே இருக்கிறார்கள். அவர்களுக்கு உரிய இடத்திலே வேலை தரப்படும்.

**திரு அ. செல்வராசன் :** பேரவைத் தலைவர் அவர்களே, உரிய இடத்திலே வேலை தரப்படும் என்று சொல்கிறார்கள். அப்படி என்றால் தற்போது அவர்கள் எங்கே வேலை செய்கிறார்கள் ? அவர்கள் தற்போது வேலை செய்கிறார்களா அல்லது அவர்கள் எல்லாம் நிறுத்தப்பட்டு இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, மின் வாரியத்தில் வேலை செய்கிறார்கள்.

**திருமதி பா. வளர்மதி :** பேரவைத் தலைவர் அவர்களே, மின் பற்றாக்குறை உள்ள இந்த நேரத்தில் பேசின் பிரிட்ஜ் மின் நிலையத்தை விரிவாக்கச் செய்வதற்கு அரசு மேலும் முயற்சி செய்து நடவடிக்கை எடுக்குமா என்றும் பேசின்பிரிட்ஜ் அனல் மின் நிலையத்தால் சுற்றுப்புறச் சூழல் பாதிக்கப்படுகிறது என்பதால் அது மூடப்பட இருக்கிறதா ? அல்லது மதுரை மாவட்டத்தில் உள்ள சமயநல்லூர் அனல் மின் நிலையம் நஷ்டத்தில் ஓடிய காரணத்தால் அதை மூடவேண்டும் என்று முடிவு எடுத்ததைப் போல அரசு இதற்கும் முடிவு எடுத்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடிவு எடுக்க இருக்கிறோம். அந்த பேசின் பிரிட்ஜியிலே டிசல் என்ஜின் வைத்து அதாவது 120 மெகா வாட் அளவுக்கு உற்பத்தியை நாம் உருவாக்க மாற்றுத் திட்டம் வைத்து இருக்கிறோம். ஆகையால் இதற்கும் சமயநல்லூருக்கும் சம்பந்தம் இல்லை.

**டாக்டர் தே. குமாரதாஸ் :** தலைவர் அவர்களே, இந்த பேசின் பிரிட்ஜில் தொழிலாளர்களாக இருந்தவர்கள் மின்சார வாரியத்தில் பணி ஆற்றுகிறார்கள் என்பது எங்களுக்கும் தெரியும். அவர்கள் பிரித்து பல இடங்களுக்கு அனுப்பப்பட்டு பணிபுரிகிறார்களா அல்லது ஒரே இடத்தில் மின்சார வாரியத்தில் சம்பளம் கொடுக்கப்பட்டு வைத்து இருக்கிறோமா ?





**மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன்:** அந்த விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை.

**திரு சு. பாலன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கனவே நான் கேட்ட கேள்விகளுக்கும் மற்ற உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளுக்கும் பதில் சொல்லியிருக்கிறார்கள். கடைசியாக நான் கேட்பது அந்த மின் நிலையத்தை இப்போது யாரும் சரியான முறையில் பராமரிப்புச் செய்யாத காரணத்தால் அங்கே இருக்கிற விலை உயர்ந்த சாமான்கள் மற்றும் மிஷின்கள் எல்லாம் களவாடப்பட்டு அதே நேரத்தில் கட்டிடங்களின் மேல் கூரையும் இன்றையதினம் சமூக விரோதிகளால் திருடப்பட்டும் கீழே விழக்கூடிய நிலையிலும் இருப்பது அரசுக்குத் தெரியுமா ? அதை பாதுகாப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதுகாப்புக்கான தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். மாண்புமிகு உறுப்பினர் இடத்தில் உள்ள தகவல்களை அவர் எனக்கு அனுப்பி வைக்கலாம்.

**விவசாயப் பணிகளுக்கான மின்சார மோட்டார்கள்**

24 –(*வினா எண். 1418) **மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் விவசாயிகள் பொருத்தியுள்ள மின்சார மோட்டார்கள் பெரும்பாலானவைகள் தரம் குறைந்தவைகளாக உள்ளதால் கூடுதல் மின்சாரம் செலவாகிறது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அதை நிவர்த்திக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் :** (அ) மற்றும் (ஆ) விவசாயி விசையேற்றங்களின் தயாரிப்பு மதிப்பீடு செய்வது தமிழ்நாடு மின்சார வாரியத்தின் வரம்புக்குள் இல்லை. மின் கசிவு இல்லாமல் இருக்கிறதாவென்றும் மின்சாதன நிர்மாணங்களின் எதிர்ப்பு சக்திகள் சரியான முறையில் இருக்கிறதாவென்றும் உறுதி செய்து கொள்ளும்பொருட்டு விவசாய விசையேற்றங்களின் நிர்மாணங்களைச் சோதனை செய்த பிறகே தமிழ்நாடு மின்சார வாரியம் மின் இணைப்பு கொடுக்கிறது.

**மாண்புமிகு திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையில் உள்ள வேளாண்மைக் கல்லூரியைச்

சேர்ந்த மாணவர்கள் 200 க்கும்மேற்பட்ட மின்சார மோட்டார்களை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு அதிலே மோட்டாரை ஒட்டி இருக்கிற பம்பு பாகங்களில் சில மாற்றங்களை செய்து உதிரி பாகங்களைச் சேர்த்தால் 30 சதவீதம் முதல் 40 சதவீதம் வரை மின்சாரச் செலவை குறைக்க முடியும் என்று தெளிவாக தெரிவித்து இருக்கிறார்கள். அதுவும் ஐ. எஸ். ஐ. டைரக்டர் அவர்களும் அதை ஒட்டி 2, 3 ஆண்டுகளுக்கு முன்பு அறிக்கை விட்டு இருக்கிறார்கள். அது வாரியத்தினுடைய கவனத்திற்கு கொண்டு வரப்பட்டு இருக்கிறதா? இல்லை என்றால் அந்த ஆய்வின் அடிப்படையில் வாரியம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, சேமிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. கோவையில் நடந்த ஒரு ஆராய்ச்சியைப் பற்றிச் சொன்னார்கள். மின் வாரியம் மேற்கொண்ட ஆராய்ச்சியின் மூலம் கூட 35 சதவீதம், 40 சதவீதம் சேமிப்பு என்று இல்லை என்றாலும் கூட 15 சதவீதத்தை நாம் சேமிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆனால் அதற்கு சில செலவுகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. அதை விவசாயிகளை மேற்கொள்ளச் செய்யச் சொல்லுவது என்பது அவ்வளவு இயலாத காரியம். ஏன் என்றால் அப்படி எல்லாம் செலவுசெய்து அதனால் ஆதாயம் ஒன்றும் அவர்களுக்கு வருவது இல்லை. காரணம் விவசாயிகளுக்கு இலவசமாக மின்சாரத்தை கொடுப்பதால் அவர்களுக்கு மின்சாரம் கூடுதலாக செலவானால் என்ன அதிகமாக செலவானால் என்ன? ஆயினும் நாம் 3,125 பம்பு செட்களுக்கு ஒரு பைலட் ஸ்கீம் தயார் செய்து இந்திய அரசிடத்தில் சொல்லி ரூரல் எலக்ட்ரிபிகேஷன் கார்ப்பரேஷன் மூலமாக ஒரு ஆயிரம் ரூபாய் அளவுக்கு ஒவ்வொரு பம்பு செட்டுக்கும் மேம்பாட்டுக்கான அனுமதியைப் பெற்று அதை நடைமுறைப்படுத்தி வருகிறோம்.

மாண்புமிகு திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : தலைவர் அவர்களே, மின்சாரம் தவறாக உபயோகப் படுத்தப்படுகிறதா என்பதை கண்காணிக்க வாரியத்தில் விஜிலன்ஸ் பிரிவு இருக்கிறது. இலவச மின்சாரம், குதிரை சக்திக்கு 75 ரூபாய் என்று அரசு சலுகைகளை அறிவித்த பிறகு இன்றைக்கு மின்சார மோட்டார்களாலோ அல்லது விவசாயிகள் செய்கின்ற ஒயரிங்காலோ கூடுதலாக மின்சாரம் செலவாகிறதா என்பதை கண்காணிப்பதற்கு வாரியத்தில் தற்போது ஏதாவது ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறதா? இல்லை என்றால் அத்தகைய ஏற்பாடு செய்ய வாரியம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்லுவது சேமிப்பதற்கு ஊக்கம் இருக்க வேண்டும். இலவசமாக கிடைக்கும் போது அவர்கள் எதற்காக ஆயிரம் ரூபாய் 2,000 ரூபாய் பம்புசெட்டுகளுக்கு அனாவசியமாக



செலவு செய்யவேண்டும் என்று விவசாயிகள் நினைக்கும் நிலைமை தான் இருக்கிறது. அவர்களிடத்தில் போய் நீங்கள் இந்த செலவை எல்லாம் செய்யுங்கள் என்று சொல்லி செய்ய வைப்பது என்பது மிகவும் கடுமையாக இருக்கிறது. ஆகவே தான் நாமும் கொஞ்சம் உதவி செய்யலாம் இந்திய அரசும் உதவி செய்யலாம் சேமிப்பு என்பது மிகவும் முக்கியம், பற்றாக்குறை மாநிலங்களில் கடைப்பிடிக்க வேண்டியது என்ற அடிப்படையில் இந்த ஒரு திட்டத்தை மேற்கொண்டு இருக்கிறோம். பத்து லட்சம் பம்பு செட்டுகள் எங்கே, ஆயிரம் பம்புசெட்டுகள் எங்கே என்று நினைக்கும் போது போகவேண்டிய தூரம் நெடும் தூரம். அதிகமாகப் பயன்படுத்துகிறார்களா, இல்லையா என்பதைக் கண்காணிப்பதற்கு இப்போது இருக்கின்ற மீட்டர்களின்படி தான் அதைக் கணக்கிடவேண்டும்.

(முற்பகல் 9-20)

திரு ஏ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் புதிய மாற்றம் ஏற்படுவதனால், விவசாயிகளுக்குப் பளு அதிகமாகும் என்ற காரணத்திற்காக வேண்டாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதனால் மின் உபயோகம் குறைவாக இருக்குமானால், மின்சாரத் துறைக்கும் இலாபம், நாட்டுக்கும் இலாபம் என்ற வகையிலே அந்த மின்சார மோட்டார்களை உற்பத்தி செய்கின்றவர்களிடமே இந்த யோசனையைச் சொல்லி அந்த மோட்டாரில் இந்தத் திருத்தத்தை அமைச்சர் சொல்லி, அதன்மூலம் கட்டாயமாக அமலுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சியில் அரசு ஈடுபடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, ஓரளவு அவர்கள் செய்யலாம். மற்றவை அந்த கிணற்றைப் பொறுத்துத் தான் செய்யவேண்டும். சரியான ஃபுட்வால், டெலிவரி ஹெட் ஆகியவற்றை எப்படி வைத்துக் கொள்வது என்பது எல்லாம், விவசாயிகள் செய்ய வேண்டியுள்ளது. ஆக இது விவசாயியும் செய்ய வேண்டும், மோட்டார்களை உற்பத்தி செய்கின்றவர்களும் செய்யவேண்டும். அரசும் அதற்கு உதவி செய்ய வேண்டும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார விநியோகத்தில், மின்சாரம் ஓடிக் கொண்டிருக்கும்போதே திடீரென்று நின்று விடுகின்றது. அப்படி திடீரென்று நின்று விடும்போது, உடனே பர்ன் ஆகிவிட்டு, அதற்கு திரும்ப காயில் போடவேண்டும் என்றால் 1000 ரூபாய், 800 ரூபாய் ஆகின்றது. இது விவசாயிகளை மிகவும் பாதிக்கின்றது. அமைச்சர் அவர்கள் பதிலில் ஒரு ஹார்ஸ் பவருக்கு ரூபாய் 75 கட்ட வேண்டும் என்று சொன்னார்கள். கிணற்றிலே தண்ணீரே இல்லாதவர்களுக்குக் கூட 6

மாதத்திற்கு ஒரு தடவை ஒரு ஹார்ஸ் பவருக்கு 75 ரூபாய் கட்டவேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. அதை மாற்றி, தண்ணீரே இல்லாத கிணற்றுக்கு பணத்தைக் குறைத்து, 5 ரூபாய் மட்டும் கட்டும் நிலைமையை உருவாக்க அமைச்சர் அவர்கள் வழிவகை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் விவரம் தர இயலும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது புதிதாக அறிவிக்கப்பட்டு இருக்கிற சலுகையின் மூலம் விவசாயிகள் பெரிதும் பயன்பட்டாலும் கூட, சேலம், ஈரோடு, கோயம்புத்தூர் போன்ற மாவட்டங்களில் கிணறுகள் எல்லாம் மிக ஆழமாக இருக்கிற காரணத்தால், கிணற்றுக்குள் ஆழ் குழாய்கள் அமைத்து, அதிலே இருந்து ஒரு கம்ப்ரஸ்ஸர் மோட்டார் வைத்து, அந்தத் தண்ணீரை வெளியே எடுத்து, மேலும் ஒரு மோட்டார் வைத்து, வெளியிலே நீர் பாய்ச்சுவதற்கு உபயோகப்படுத்தும்போது, அதற்கென்று தனியாக தண்டத் தீர்வையைப் போட்டார்கள். விவசாயிகள் அதை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு கொண்டு வந்தபோது, அதற்கு விதிவிலக்கு அளித்து ஆணை பிறப்பித்திருந்தாலும்கூட கிணற்றுக்கு அருகிலேயே வெளிப் பிரதேசங்களிலே போடுகிற ஆழ் குழாய்க் கிணற்றில் மோட்டார் வைத்தால், அதற்குத் தனியாக தீர்வை போடுகிறார்கள். அதை விவசாயத்திற்குப் பயன்படுத்துகிற காரணத்தால், அதற்கு சலுகை அளித்து, அதிலே வைக்கப்படுகிற மோட்டார்களுக்கும் இதே சலுகைகள் பொருந்தும் என்று அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சட்டமன்றக் கூட்டத் தொடர் தொடர்ந்து நடைபெற இருக்கின்ற காரணத்தால் தனிக் கேள்வி போடவும்.

திரு ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத்திற்கு வானம் பொய்த்து விட்ட நிலையில், தஞ்சை மாவட்டத்தில் மோட்டார் பம்புசெட்டுகளுக்கு மின்சார கனெக்ஷனுக்காக 2,400 மனுக்கள் தேங்கியுள்ளன. அதை அரசு ஒரு மாதத்தில் ப்ரயாரிட்டி பார்க்காது, கனெக்ஷன் கொடுக்கும் என்று அண்மையில் தஞ்சை வந்திருந்த பொதுப்பணித் துறை அமைச்சர் அங்குள்ள விவசாயப் பெருமக்களிடமும், சட்டமன்ற உறுப்பினர்களிடமும் உறுதி அளித்தார்கள். அது குறித்து மின் துறை நடவடிக்கை எடுத்திருக்கிறதா? ப்ரயாரிட்டி பார்க்காமல் ஒரு மாதத்திற்குள் கனெக்ஷன் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, மூலக்கேள்வி மின்சாரத்தை எப்படி சிக்கனப்படுத்துவது என்பதைப் பற்றியது.

திரு டி. தீர்த்தகிரி கவுண்டர் : தலைவர் அவர்களே, விவசாயத்திற்கு மின்சாரம் வழங்குவதற்கு, ஒரு மின்சார மோட்டார் சக்திக்கு ரூபாய் 50 மினிமம் சார்ஜ் கட்டவேண்டும் 10 ஆண்டுக் காலத்திற்கென்று அந்தக் தொகை நிர்ணயம் செய்து மின்சார இலாகாவினுடைய விதியில் உள்ளது. விவசாயிகள் மின் உபயோகத்திற்காக, 10 ஆண்டுக் காலம் அந்தத் தொகையை செலுத்தியும் கூட, மேற்கொண்டும், 10 ஆண்டுக்கு மேல் நீடித்து அந்தத் தொகை வசூல் செய்கிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா, அது சம்பந்தமாக அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா? என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ச. இராமச்சந்திரன் : நல்ல கேள்வி தனிக் கேள்வியாகப் போடவும்.

கோவை வாலாங்குளத்தை செம்மைப் படுத்தல்.

25—(*வினா எண். 1234) திரு மு. இராமநாதன் : மாண்புமிகு சுற்றுலா மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாநகரத்தில் தென் பகுதியில் உள்ள வாலாங்குளத்தைச் செம்மைப்படுத்தி உல்லாச பொழுது போக்கிடமாகவும், படகு சவாரி ஏரியாகவும் ஆக்கிட ஏதேனும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

சுற்றுலா இடங்களில் மேம்பாட்டுப் பணிகள்.

26 - (*வினா எண். 1578) திரு இரா. தாமரைக்கனி, திரு. வைகை சா. துரைசாமி; திரு. செ. செம்மலை : மாண்புமிகு சுற்றுலா மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலா இடங்களின் மேம்பாட்டிற்காக தமிழக அரசு மத்திய அரசுக்கு ஏதேனும் திட்டம் கொடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத் திட்டங்களின் விவரம் யாது?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மாமல்லபுரம், இராமேஸ்வரம், கன்னியாகுமரி, உதகமண்டலம் போன்ற சுற்றுலா நகரங்களின் மேம்பாட்டிற்காக சுமார் ஐம்பது கோடி ரூபாய்க்கு ஒருங்கிணைந்த பெருந்திட்டங்கள் அளிக்கப்பட்டன. அவைகளில் சில குறிப்பிட்ட பணிகளுக்காக சுமார் 26 கோடி ரூபாய் அளவில் உலக வங்கியின் மூலம் நிதி உதவி பெற்றுத் தரும்படி மத்திய அரசிடம் கோரப்பட்டு அது நிலுவையில் உள்ளது. இதற்கிடையில் ஆசிய வளர்ச்சி வங்கியினுடைய உயர் அதிகாரி அடுத்த மாதம் நம்முடைய சுற்றுலாத் துறை செயலாளரோடு இந்தத் திட்டம் பற்றி விவாதிப்பதற்கு ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்.

திரு இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பம்பாய்க்கும் கோவாவிற்கும் இடையே சொகுசுக் கப்பல் போக்குவரத்து இருப்பதுபோல் சென்னை–மாமல்லபுரம், சென்னை-பழவேற்காடுக்கு சொகுசுக் கப்பல் விடுவதற்கு அரசு உத்தேசித்துள்ளதா ?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சுற்றுலா நகரங்களினுடைய மாஸ்டர் ப்ளான் பற்றிய கேள்வி.

திரு சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாப் பயணிகளின் வருகையால் தமிழ்நாடு அன்னியச் செலாவணி ஈட்டித் தந்த தொகை எவ்வளவு ? ஆண்டு தோறும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறதா ? அப்படி வருகிறது என்று சொன்னால் அதற்கு மத்திய அரசினுடைய உதவி அதிகமான அளவிற்குக் கொடுக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை மாநில அரசு வலியுறுத்தியிருக்கிறதா ? இந்த மேம்பாட்டுத் திட்டத்தில், பிச்சாவரத்தை இணைத்துக் கொள்ளாதது ஏன் ? அப்படி பிச்சாவரமும் இணைத்துக் கொள்ளப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட வேண்டும்.

திரு செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சைதை சா. துரைசாமி அவர்கள் எடுத்துச் சொன்னதுபோல் அன்னியச் செலாவணியை அதிகமாக ஈட்டித் தருகிற துறையாக இத்துறை இருப்பதால் 1984ல் டெல்லியில் நடைபெற்ற சுற்றுலாத் துறை அமைச்சர்கள் மாநாட்டில் நம் அமைச்சர் அவர்களும் கலந்து கொண்டு அதிக நிதி அளிக்க வேண்டுமென்று நமது அரசின் சார்பில் வற்புறுத்தப்பட்டதே, இப்பொழுது ஏழாவது திட்டக் காலத்தில் எந்தளவிற்கு கூடுதலாக மத்திய அரசு நிதி ஒதுக்கியிருக்கிறது என்ற விவரத்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திட்ட அமைச்சராகவும் இருப்பதால் மேலும் இந்தச் சுற்றுலாத் துறைக்குக் கூடுதலாக நிதி ஒதுக்க தொடர்ந்து வற்புறுத்துவார்களா என்பதையும் அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறை மூலம் ஆண்டு ஒன்றுக்கு, சென்ற ஆண்டினுடைய கணக்குப்படி 1,100 கோடி ரூபாய் அன்னியச் செலாவணி வருவதாக தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே இத்துறையை முக்கியமான துறையாக ஏற்று மத்திய அரசு நிதி உதவி அளிக்க வேண்டுமென்று மாநில அரசின் சார்பில் கேட்டிருக்கிறோம். இந்த மாஸ்டர் ப்ளான், திட்டங்களுக்காக மத்திய அரசு பொதுவாக நிதி உதவி செய்வதற்கு மறுத்திருந்தாலும் சில குறிப்பிட்ட திட்டங்களுக்காக சென்ற ஆண்டு ரூ. 21.71 இலட்சம் அவர்கள் நிதி உதவி அளித்திருக்கிறார்கள், இந்த ஆண்டு சுமார் முப்பது இலட்சம் ரூபாய் அளவிற்கு கொள்கை அளவில் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இதற்காக நிதி ஒதுக்கீட்டை அதிகமாக மத்திய அரசும் ஒதுக்க வேண்டும். மாநில அரசுகளும் உதவி செய்ய வேண்டும் என்ற நம்முடைய கருத்தை மத்திய அரசினிடத்தில் வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே, தென் இந்தியாவிலே ஒரு முக்கியமான சுற்றுலாத் தலம் கன்னியாகுமரி என்பது யாவரும் அறிந்ததே. தற்போது கன்னியாகுமரிக்கு ஆயிரக்கணக்கான பயணிகள் வருகிறார்கள். அவர்கள் குடி தண்ணீருக்கு மிகவும் சிரமப்பட்டு வருவது அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறதா ? அப்படியென்றால் கன்னியாகுமரிக்காக ஒரு தனி வாட்டர் சப்ளை ஸ்கீமை உருவாக்க நடவடிக்கை எடுக்கப் படுமா ?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாஸ்டர் ப்ளான் என்கிற பெரும் திட்டங்களில் கன்னியாகுமரிக்கு 8 கோடி ரூபாய் திட்டம் ஒன்றை மத்திய அரசினிடத்தில் நாம் அளித்திருக்கிறோம். அந்தத் திட்டத்தினுடைய ஒரு பகுதியாக தங்குமிட வசதிகள், மற்றும் குடி தண்ணீர் வசதி, போக்குவரத்து வசதி இவற்றிற்காக 842 இலட்சம் ரூபாய்க்கு தனியாக நிதி ஒதுக்கீடு கேட்டிருக்கிறோம். அதை, உலக வங்கி மூலம் உதவி பெற்றுத்தரவேண்டும் அல்லது கடன் பெற்றுத் தரவேண்டும் என்றும் கேட்டிருக்கிறோம். ஆகவே, அதைப்பற்றி மத்திய அரசு பரிசீலித்துக் கொண்டு இருப்பதால் இதன் தொடர்பாகத்தான் ஆசிய வளர்ச்சி வங்கியினுடைய உயர் அதிகாரி அடுத்த மாதம் முதல் வாரத்தில் விவாதிப்பதற்கு ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்.

### பட்டுக்கோட்டை நாடியம்மாள் திருக்கோயில்.

27—(*வினா எண். 2879) திரு ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு சுற்றுலா மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை நாடியம்மாள் திருக்கோயில் திருப் பணி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (அ மற்றும் ஆ) பட்டுக் கோட்டை நகர் அருள்மிகு நாடியம்மன் திருக்கோயிலுக்கு சுமார் ரூ. 11,50,000/- உத்தேச மதிப்பீட்டில் திருப்பணி செய்யும் திட்டம் உள்ளது. திருப்பணியின் முதற்கட்டமாக ரூ. 95,000/- உத்தேசமதிப்பீட்டில் பிரகாரத்தினை அகலப்படுத்தி மதில் சுவர் புதிதாக கட்டும் திருப்பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

(முற்பகல் 9-30)

திரு ப. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் அம்மன் வடக்கு நோக்கியுள்ள ஆலயங்களில் பட்டுக்கோட்டை, நாடியம்மன் திருக்கோயிலும் ஒன்று. ஆகவே, அந்த புகழ்பெற்ற திருக் கோயிலுக்குத் திருப்பணி செய்யும் திட்டம் அரசிடம் இருக் கின்றது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்காக தமிழக அரசுக்கும், அமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்தில், ஆலய பாதுகாப்பு நிதியிலிருந்து இந்தத் திருப்பணிக்கு ஏதேனும் நிதி கொடுக்கப் பட்டிருக்கிறதா? இந்தத் திருப்பணிக்கு அரசின் உதவி எந்த அளவிற்கு உள்ளது? எந்தெந்த வகைகளில் திருப்பணிக்கு நிதி உதவி தரப்பட இருக்கின்றது என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, ஆலய பாதுகாப்பு நிதியிலிருந்து உதவி செய்வது என்பது இயலாத காரியம். திருப்பணி என்பது அந்தப் பகுதியிலுள்ள மக்களாலே தொடங்கப்பெற்று, அவர்கள் முயற்சியாலே நடை பெற வேண்டும். அப்படி நம்முடைய முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் திரு. சுவாமிநாதன் தலைமையிலே திருப்பணிக் குழு அங்கே அமைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் தங்கள் முயற்சியின் விளைவாக நிதியைச் சேர்த்தால், மூன்றில் ஒரு பகுதிக்கு அதிகப்படாமல் அரசு மற்ற ஆலயங்களின் நிதியிலிருந்து மாற்றுகின்ற ஒதுக்கீடு முறையின் மூலம் இந்தத் திருப்பணிக்குக் கிடைக்க உதவி செய்யும்.

ஒலகடம், கல்பாவி, சேகரிமங்கலம் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்கல்.

28—(*வினா எண். 1652) திரு பு. கோ. நாராயணன் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம் பவானி தொகுதியில் ஒல கடம், சல்பாவி, சேகரிமங்கலம் பகுதிகளுக்குக் குடிநீர் கொடுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டத்தை துரிதப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ) ஆய்வு மேற்கொள்ளப்பட்டு திட்டமதிப்பீடு குடிநீர் வடிகால் வாரியத்தின் தயாரிப்பில் உள்ளது. அதன் பின்னர் செயலாக்கப்படும்.



வேதாரண்யத்திற்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர்.

29—(*வினா எண். 2721) திரு மா. மீனாட்சிசுந்தரம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் பகுதிக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், திட்டத்தின் மதிப்பென்ன?

(இ) அத்திட்டம் எத்தனை கிராமங்களுக்கு விஸ்தரிக்கப் படும்?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) ஆம்.

(ஆ மற்றும் இ) வேதாரண்யம் மற்றும் வேதாரண்யம் ஒன்றி யத்திலுள்ள 216 குடியிருப்புகளுக்கும் குடிநீர் வழங்குவதற்காக ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் ஆய்வில் உள்ளது. இத்திட்டத்திற்கான நீர் ஆதாரம் கண்டுபிடிக்கப்பட்ட பின்னரே திட்ட மதிப்பீடு பற்றி முடிவு செய்யப்படும்.

கருங்கல் ஆரம்ப சுகாதார நிலையம்.

30—(*வினா எண். 362) டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம் கருங்கல் ஆரம்ப சுகாதார நிலையத்தை 50 படுக்கைகள் கொண்ட மருத்துவ நிலையமாக உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : கன்னியாகுமரி மாவட்டம் கருங்கல் ஆரம்ப சுகாதார நிலையத்தை 50 படுக் கைகள் கொண்ட மருத்துவ நிலையமாக உயர்த்தும் செயற் குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம் கருங்கல் ஆரம்ப சுகாதார நிலையம் 15, 20 ஆண்டுகளுக்கு முன்னாலே ஆரம்பிக்கப்பட்ட சுகாதார நிலையம். அங்கே தினசரி 500, 600 க்கும் அதிகமான அளவுக்கு வெளி நோயாளிகள் வந்து செல்கிறார்கள். அப்படி வரும் வெளி நோயாளிகள் அங்கே தங்கி மருத்துவம் செய்வதற்கு அரசு மருத்துவமனை கிட்டத்தட்ட 20 கிலோ மீட்டர் சுற்றள விற்கு இல்லாத காரணத்தினால்—அதை அப்-கிரேட் செய்து 50 படுக்கைகள் என்று இல்லாவிட்டாலும் 20 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை ஒன்றை அமைத்துத் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி 50 படுக்கைகளைப் பொறுத்தது. மாண்புமிகு உறுப்பினர் 20 படுக்கைகளைக் கொண்ட ஒரு மருத்துவமனையாக உயர்த்தலாமா என்று கேட்கிறார்கள். சென்ற 4 ஆண்டுகளாகப் படிப்படியாக 6 படுக்கைகளைக் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையங்களை ஒரு நல்ல தரமான 20 படுக்கைகளைக் கொண்ட தாலுக்கா மருத்துவமனையாக உயர்த்திக் கொண்டிருக்கிறோம். அந்த அடிப்படையில் உயர்த்தலாமா என்று கேட்கிறார். அதை பரிசீலிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

உதகமண்டலம் அரசு மருத்துவமனை

31—(*வினா எண். 1357) திரு. கு. ரமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் உள்ள அரசு மருத்துவ மனையில் தற்பொழுதுள்ள படுக்கை வசதிகள் எவ்வளவு?

(ஆ) படுக்கை வசதிகளை அதிகரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) 386 படுக்கைகள்;

(ஆ) இல்லை.

திரு கு. ரமணி : தலைவர் அவர்களே, உதகை மருத்துவமனை ஒரு மாவட்டத் தலைமை மருத்துவமனை. அந்த மருத்துவமனையில் உள்ள படுக்கை வசதி 386 என்று அமைச்சர் குறிப்பிட்டார்கள். இது மிக மிகக் குறைவானது. இருக்கிற தேவையில் ஒரு பகுதி கூட கிடையாது. அங்கு ஜனங்களுடைய கஷ்டங்கள் மிக மிக அதிகரித்துக்கொண்டு, அங்கிருந்து ஏராளமான நோயாளிகள் அங்கு படுக்கை வசதி சிகிச்சை வசதி கிடைக்காமல் கோவை மருத்துவமனைக்கு வருகின்றார்கள். இந்த நிலையை மாற்றுவதற்கு படுக்கைகளை அதிகரிப்பதற்கான ஏதாவது திட்டத்தை ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, படுக்கைகளை இப்போது உடனடியாக உயர்த்த வேண்டிய தேவையில்லை என்று அரசாங்கம் கருதுகிறது. இப்போதுள்ள படுக்கை வசதி 386—பெட் ஸ்ட்ரென்த்—சராசரியாக இன்-பேஷன்ட்ஸ் எத்தனை பேர்கள் என்று பார்க்கிறபோது 324 பேர்கள் ஒரு நாளைக்கு

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.





இருக்கிறார்கள். ஆகவே ஆகுபன்சி ரேஷியோ இஸ் லெஸ் தேன் 100 பர்சன்ட். 100 சதவீதத்திற்கு மேற்பட்ட இடங்களில் தான் உடனடியாக படுக்கைகளை உயர்த்த ஏற்பாடு செய்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வின் அடிப்படையிலே பேஸ்டு ப்ரோகிரேம் அடிப்படையிலே படிப்படியாக ஸ்பெஷாலிட்டீஸை கூடுதலாக நாம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இப்போது அங்கு Tuberculosis, Gacnocology and Obstretics, Paediatrics, Inetnsive Care Units, Accident Emergency Wards ஸ்பெஷாலிட்டீஸை அங்கே உருவாக்கியிருக்கிறோம். கூடுதலாக இன்னும் சில ஸ்பெஷாலிட்டீஸை உருவாக்கலாம் என்று கருதுகிறோம்.

திரு கு. ரமணி : தலைவர் அவர்களே அங்கே வருகின்ற நோயாளிகள் உள்நோயாளிகள். அவர்களுடைய எண்ணிக்கை அங்கே இருக்கிற பெட் ஸ்ட்ரெங்த்துக்குக் குறைவாக இருக்கிறதென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால் வேறு ஆஸ்பத்திரிகளைப்பார்க்க அவர்கள் போகவேண்டிய நிலை ஏன் ஏற்பட்டிருக்கிறது? ஸ்பெஷாலிட்டீஸ் ஏற்படுத்துவதன் மூலம் அங்கே அதிகப்படியான படுக்கைகள் தேவைப்படும். ஸ்பெஷாலிட்டீஸ்க்காக என்னென்ன ஸ்பெஷல் டிபார்ட்மெண்ட்ஸ் இப்போது ஏற்படுத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது என்பதை நான் அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பொதுவாக இன்னொரு விவரத்தையும் கொடுத்தால் மாண்புமிகு உறுப்பினருக்கு ஆறுதலாக இருக்கும் என்று கருதுகிறேன். '99 lakhs budget allocation for the year 1984-85' 60 இலட்சமாக இருந்ததைச் சென்ற பட்ஜெட் அலாட்மெண்டிலே உயர்த்தியிருக்கிறோம்.

அதுமட்டுமல்ல. மருந்துக்காக மட்டும் கிட்டத்தட்ட 10 இலட்சம் ரூபாய் சென்ற ஆண்டு நாம் செலவிட்டிருக்கிறோம். இன்டென்சிவ் கேரில் ஒரு மானிட்டர் ஏற்படுத்தி அந்த மானிட்டர் மூலமாக இருதய நோய் சிகிச்சைக்காக அங்கு ஒரு பிரிவை ஏற்படுத்தியிருக்கிறோம்.

திரு கே. கல்லன் : தலைவர் அவர்களே, உதகை மருத்துவமனையில் குழந்தைகளுக்கான பகுதியில் படுக்கைகள் வசதி அதிகரிக்கப்படுமா? டாக்டர்கள் இல்லாத காரணத்தால் அந்தக் குழந்தைகள் பகுதி சில மாதங்களாக இயங்கவில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதைப் போக்க எடுக்கப்படும் நடவடிக்கை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9—40)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பலமுறை என்னிடத்திலே சொல்லியிருக்கிறார். குறிப்பாக குளிர்ப் பிரதேசமாக அது இருப்பதால் அந்த இடத்திலே பணியாற்ற விரும்பக் கூடியவர்களை அமர்த்தினால் நன்றாக இருக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் பரிசீலித்து படிப்படியாக நடவடிக்கை எடுத்து காலி இடங்களை நிரப்பிக் கொண்டுவருகிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1986 சனவரி 11

## குடும்ப நல அறுவை சிகிச்சை.

32—(*வினா எண். 1619) திரு சைதை சா. துரைசாமி, திரு
தி. அன்பழகன், திரு வி. தங்கவேலு : மாண்புமிகு மக்கள் நல்
வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்
பாரா—

(அ) கடந்த ஆண்டு குடும்ப நல அறுவை சிகிச்சை செய்து
கொண்ட ஆண்கள் எத்தனை பேர்? பெண்கள் எத்தனை பேர்?

(ஆ) ஆண்டு தோறும் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு
எவ்வளவு செலவு செய்யப்படுகின்றது?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) 1984 ஏப்ரல்
முதல் 1985 மார்ச்சு முடிய குடும்ப நல அறுவை சிகிச்சை
செய்துகொண்டவர்கள் ;—

| | | |
|---|---|---|
| ஆண் அறுவை சிகிச்சை | .. | 57,354 |
| பெண் அறுவை சிகிச்சை | .. | 4,67,987 |
| மொத்தம் | .. | 5,25,341 |

| | | |
|---|---|---|
| (ஆ) 1980–81 நிதியாண்டில் | ரூ. | 902.37 இலட்சங்கள் |
| 1981–82ல் | ரூ. | 1073.17 இலட்சங்கள் |
| 1982–83ல் | ரூ. | 1267.76 இலட்சங்கள் மற்றும் |

1983–84ல் தோராயமாக ரூ. 1912.62 இலட்சங்கள்
செலவிடப்பட்டுள்ளது. 1984–85 நிதியாண்டில் டிசம்பர் 1984
முடிய தோராயமாக ரூ. 1297.03 இலட்சங்கள் செலவிடப்பட்
டுள்ளது.

திரு சைதை சா. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே,
பல ஆண்டுக்காலமாக குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் சிறப்
பாகத் தமிழகம் பணியாற்றி வருகிற காரணத்தினால் பிறப்
எண்ணிக்கைக் குறைவு ஏற்பட்டுள்ளதா? அப்படிக் குறைவு
பட்டிருந்தால் மைய அரசு ஒதுக்குகின்ற நிதி குறையாமல் இருக்க
அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன? குடும்பக் கட்டுப்பாடு
திட்டத்திற்குக் கொடுக்கப்படுகிற தொகை எவ்வளவு என்பதை
யும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 3 கேள்விகளைக் கேட்டிருக்கி
றார்கள். தொடர்ந்து தமிழகத்தைப் பொறுத்தவரையில்-குடும்பக்
கட்டுப்பாடு என்பது இப்போது குடும்ப நல இலாகா என்று மாற்
றப்பட்டு நல்ல முறையிலே பல ஆண்டுக்காலமாக பணியாற்றிக்



1986 சனவரி 11]

கொண்டிருக்கிறது. 1981 ஆம் ஆண்டு சென்சஸ் பிரகாரம் 17.23
சதவீதம் 1971முதல் 1981ஆம் ஆண்டு வரையான 10ஆண்டுகளிலே
பாபுலேஷன் குரோத் ஏற்பட்டிருக்கிறது. பிறப்பு விகிதம் 1000க்கு
28 குறைந்திருக்கிறது. அதனால் நமக்கு டெவல்யூஷன் ஆஃப்
பண்ட்ஸ் மத்திய அரசிடமிருந்து வற்புறுத்திக்கொண்டிருக்
கிறோம். இந்த மாநிலத்தில் குடும்ப நல இலாகா நல்ல வகை
யில் பொறுப்புடன் செம்மையாக சீரிய வகையில் பணியாற்றி வரு
கிறது. ஆகவே தொகை அதிகமாகக் கொடுக்கவேண்டும் என்று
கேட்டு இருக்கிறோம். அவர்கள் அதை ஆராய்வதாகச் சொல்லி
இருக்கிறார்கள். அதைப்போலவே பிளானிங் கமிஷனுக்கும்,
பைனான்ஸ் கமிஷனுக்கும் தமிழக அரசின் சார்பில் சொல்லி
யிருக்கிறோம். அடுத்து அதற்காக தொகையை உயர்த்திக்
கேட்டு இருக்கிறார்களா என்று கேட்டார்கள், அதையும் நாம்
வற்புறுத்திக்கொண்டு வருகிறோம்.

திரு கி. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே,
குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு மைய அரசு எந்த வகை
யில் உதவித் தொகை அளிக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : நான் மூலக் கேள்விக்குக்
கொடுத்த புள்ளி விவரத்திலேயே தெரிவித்திருக்கிறேன். ஒவ்
வொரு ஆண்டும் எவ்வளவு செய்யப்படுகிறது என்று சொன்னேன்.
அது முழுக்க முழுக்க மைய அரசின் புராஜக்டாக இருப்பதால்
ஒவ்வொரு ஆண்டும் தமிழகம் 5 சதவீதமும், 95 சதவீதத்தை
மைய அரசும் செலவிடுகின்றன.

திரு வை. பாலசுந்தரன்: தலைவர் அவர்களே, 1984–85ஆம்
ஆண்டில் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்துகொண்ட
வர்களில் இந்துக்கள் எத்தனை சதவீதம், இஸ்லாமியர்கள் எத்
தனை சதவீதம், கிறித்துவர்கள் எத்தனை சதவீதம் என்பதையும்
குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம் என்பதுபற்றிச் சொல்கிறபோது
Family Planning Scheme is nothing but a
Implementation of the calculated attempt by the Government to weaken the Hindu
Society by reducing the size of Hindu Population என்ற ஒரு
கருத்துச் சொல்லப்படுகிறதே, அதைப் பற்றி அரசு என்ன கருது
கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே,
இந்தக் கேள்வி பலமுறை கேட்கப்பட்டிருக்கிறது. நான் அதைத்
தெளிவுபடுத்துவது நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன்.
கிறித்தவ பாபுலேஷனைப் பொறுத்தவரையில், All India Population
growth among Christians is little less than the all India
Population as such,—ஆகவே அந்த வகையிலே கொஞ்சம் சற்றுக்
குறைவாகத்தான் இருக்கிறதே தவிர ஜாஸ்தியாக இல்லை.
காரணம் என்னவென்றால், படித்தவர்களின் சதவீதம், அதிலும்
குறிப்பாகத் தமிழகத்திலே நாம் எடுத்துக்கொண்டிருக்கின்ற
சென்சஸ் அடிப்படையிலே படித்தவர்களின் சதவீதம் ஜாஸ்தி

யாக இருக்கின்ற காரணத்தாலே, எந்தெந்த குடும்பத்திலே படிப்பு ஜாஸ்தியாக இருக்கிறதோ, லிட்ரசி ரேட் ஜாஸ்தியாக இருக்கிறதோ. எந்த மாவட்டமாக இருந்தாலும் சரி அல்லது எந்தக் குடும்பத்திலே இருந்தாலும் சரி அங்கே குழந்தைகளின் பிறப்பு எண்ணிக்கை குறைவாக இருக்கிறது. உதாரணத்திற்கு எடுத்துக்கொண்டால் திருநெல்வேலி மாவட்டம். கன்னியாகுமரி மாவட்டங்களிலே நீங்கள் பார்த்தீர்களேயானால், பாபுலேஷன் குரோத், 1971, 81—இலே எடுக்கின்ற நேரத்திலே L west Population growth—the highest Ch istian Population,—இருக்கக்கூடிய இடத்திலே தான் இருக்கிறது. ஆகவே அந்த வகையில் பிரச்னை எழவில்லை. முஸ்லீம் பாபுலேஷனைப் பொறுத்தவரையிலே. முஸ்லீம் நண்பர்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும். இதனாலே அரசாங்கத்திற்கு எந்தவிதமான நன்மையையும் செய்வதாகக் கருதாமல் உங்கள் குடும்பத்திற்கே நீங்கள் நன்மை செய்து கொள்கிறீர்கள் என்ற விளக்கத்தை நாம் கொடுத்து, நல்ல வகையிலே விளக்கம் சொல்லி, அவர்களுக்கு நல்ல ஏற்பாடுகளைச் செய்தால் அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். ஏனென்றால், வறுமை முஸ்லிம் சகோதரர்களினுடைய குடும்பங்களிலே பலயிடங்களிலே ஜாஸ்தியாக இருக்கிறது. ஆகவே, கூடுதலாக விளக்கம் சொல்ல வேண்டியது நம்முடைய கடமை. அந்த வகையிலே செய்யும் நேரத்திலே நல்ல வெற்றிகரமாக நமக்கு ரிசல்ட் கிடைத்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 33 மற்றும் 34 ஒன்றாக எடுத்துக் கொள்ளப்பெறுகின்றன.

நூற்பாலைகள்.

33—(*வினா எண். 158) திரு கு. சுப்பராயன், திரு பொ. உத்திராபதி: மாண்புமிகு ஆயத்தீர்வை கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள மொத்த நூற்பாலைகள் எத்தனை?

(ஆ) அவற்றுள் எத்தனை நூற்பாலைகள் செயல்படுகின்றன?

(இ) செயல்படாத நூற்பாலைகளை மீண்டும் செயல்பட வைக்க அரசிடம் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன் : (அ) தற்பொழுது தமிழ்நாட்டில் 282 நூற்பாலைகளும் 24 நூற்பு மற்றும் நெசவாலைகளுமாக மொத்தம் 306 ஆலைகள் உள்ளன.

(ஆ) இவற்றுள் 293 நூற்பாலைகள் இயங்கி வருகின்றன. மீதமுள்ள 13 நூற்பாலைகளே மூடப்பட்டுள்ளன.



136438

(இ) நிதிப் பற்றாக்குறை மற்றும் தொழிலாளர் பிரச்சினை போன்ற பொதுவான காரணங்களால் நூற்பாலைகள் மூடப்படுகின்றன. நிதிப் பற்றாக்குறையைப் பொறுத்தவரையில் தகுதி அடிப்படையில் வங்கி கடனுக்காக 'அரசு உத்தரவாதம்' வழங்குகிறது. கடன் கொடுத்தவர்களிடமிருந்து காப்பாற்ற, தகுதி அடிப்படையில் 1969 ஆம் ஆண்டு 'தமிழ்நாடு விடுவிப்பு நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) சட்டத்தின்கீழ்' விடுவிப்பு நிறுவனங்களாகவும் அரசு அறிவிக்கிறது. தொழிலாளர் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் பொருட்டு தொழிலாளர் நலத்துறை, தொழிலாளர்களின் பிரதிநிதிகளுடனும் ஆலையின் உரிமையாளர்களுடனும் பேச்சு வார்த்தைகளை நடத்தி மூடப்பட்ட ஆலைகளைத் திறப்பதற்கான எல்லாவித சாத்தியக் கூறுகளையும் அரசு மேற்கொள்கிறது.

மூடப்பட்ட ஆலைகளின் எண்ணிக்கை.

34—(*வினா எண் 1994) திரு என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு ஆயத்தீர்வை, கைத்தறி மற்றும் நெசவாலைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் இதுவரை மூடப்பட்டுள்ள ஆலைகள் எத்தனை?

(ஆ) அவைகளைத் திறப்பதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன் : (அ) தமிழகத்தில் 1985-ம் ஆண்டு மே திங்கள் கணக்குப்படி பதின்மூன்று நூற்பாலைகள் மூடப்பட்டு இருந்தன.

(ஆ) பொதுவாக நிதிப் பற்றாக்குறை காரணமாகவும், தொழிலாளர் பிரச்சினை காரணமாகவும் தமிழ்நாட்டிலுள்ள நூற்பாலைகள் மூடப்பட்டுள்ளன. நிதி பற்றாக்குறையைப் பொறுத்தவரையில் தகுதி அடிப்படையில் வங்கிக் கடனுக்காக அரசு உத்தரவாதம் வழங்கப்படுகிறது. மேலும் கடன் கொடுத்தவர்களிடமிருந்து காப்பாற்ற தகுதி அடிப்படையில் 1969ம் ஆண்டு தமிழ்நாடு விடுவிப்பு நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) சட்டத்தின்கீழ் விடுவிப்பு நிறுவனங்களாகவும் அரசு அறிவிக்கிறது.

தொழிலாளர் பிரச்சினையைத் தீர்க்க தொழிலாளர் நலத்துறை தொழிலாளர்களின் பிரதிநிதிகளுடனும் ஆலையின் உரிமையாளர்களுடனும் பேச்சு வார்த்தைகளை நடத்தி வருகிறது.

திரு கு. சுப்பராயன் : பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டில் 13 நூற்பாலைகள் மூடிக் கிடப்பதாக அமைச்சரவர்கள் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக கோவை மாவட்டத்தில் மட்டும் 7 பஞ்சாலைகள் மூடிக் கிடக்கின்றன. மேலும் நேஷனல்

மாவட்டத்திலே, மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் உள்பட ஏறத்தாழ
7,500 தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தமிழ்நாடு
பஞ்சாலைத் தொழிலாளர் அனைத்துப் போராட்டக் குழு மத்திய
அமைச்சரை அணுகிய நேரத்தில், குஜராத் பாணியில் எடுத்துக்
கொள்வதற்குத் தமிழக அரசு திட்டம் தயாரித்து மத்திய நிதி
அமைச்சரை அணுகுமேயானால் மாநிலத்தில் மூடிக்கிடக்கின்ற
ஆலைகளை நாட்டுடமையாக்குவதற்கு மத்திய அரசு பரிவுடன்
உதவும் என்று நிதியமைச்சர் அறிவித்திருக்கிறார்களே, அதை
மாநில அரசு அறியுமா? இது குறித்து மாநில அரசுக்கு, போராட்
டக்குழுவின் சார்பாக முறையீடு ஒன்று கடந்த 11—ஆம் தேதி
அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த முறையீட்டின் அடிப்படையில்
குஜராத் பாணியில் தமிழ்நாட்டில் மூடிக்கிடக்கின்ற அனைத்து
ஆலைகளையும் நாட்டுடமையாக்குவதற்கு மத்திய அரசை
அணுகுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேர
வைத் தலைவரவர்களே, குஜராத் பாணியில் ஆலைகளைத்
தேசியமயம் ஆக்குவதற்கு முனைனால், மைய அரசு ஒரு அலுவல
கக் குழுவை நியமித்திருக்கிறது. அது பரிந்துரை செய்தால்
தமிழக அரசு நிச்சயமாகக் குஜராத் பாணியில் ஆலைகளைத்
தேச உடைமையாக்க முன்வரும்.

(முற்பகல் 9—50)

**திரு. பொ. உத்திராபதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபொழுது, 13
ஆலைகள் மூடி இருப்பதாகச் சொல்கிறார்கள். ஒரு பக்கம்
தொழில்களை அபிவிருத்தி செய்யப் போகிறோம் என்று அரசு
சொல்லிக் கொண்டிருக்கிறது. இன்னொரு பக்கம் ஆலைகள்
மூடப்பட்டு வருகின்றனவே, அதனால் தமிழகத்தினுடைய
உற்பத்தி அதிக அளவுக்குப் பாதிக்கப்படும் என்பது அரசுக்குத்
தெரியும். அந்த அடிப்படையில், இப்படி 7,000 தொழிலாளர்கள்
பாதிக்கப்படுவதும், 13 ஆலைகள் மூடப்படுவதும் தமிழகத்
தினுடைய எதிர்காலத்தைப் பாதிக்கும். அந்த நிலையில்,
மத்திய அரசு, அலுவல் குழு ஆலோசனையின் அடிப்படையில்.
குஜராத் அடிப்படையில் எடுப்போம் என்று சொல்கிறார்கள்,
மாநில அரசு, இதற்காக, விசேஷமாக, மத்திய அரசை அணுகி,
இந்தப் பிரச்சனையைத் தீர்க்க அமைச்சர் அவர்கள் முன்
வருவார்களா ?

**மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இதுபற்றி மத்திய அரசுடன் மாநில அரசு
கடிதப் போக்குவரத்து நடத்தி வருகிறது. மாண்புமிகு முதல்வர்
புரட்சித் தலைவர் அவர்கள் கூட தனியாகக் கடிதம் எழுதி
இருக்கிறார்.



**திரு என்.எஸ்.வி. சித்தன் :** மாண்புமிக்க பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிக்க அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற
நேரத்திலே குஜராத் பாணியிலே ஆலைகளை அரசுடமையாக்க
வேண்டுமானால் மைய அரசு நிறுவியுள்ள அலுவல் குழு
நம்மோடு தொடர்பு கொள்கிற நேரத்திலே அது சம்பந்தமாக
முடிவு செய்யலாம் என்று சொன்னார்கள். அந்த அலுவல் குழு
நம்மை அணுகுவதற்குப் பதிலாக, நாமே அந்த அலுவல் குழு
மூலமாக மைய அரசை விரைவாக அணுகி, அதன்மூலம் இந்த
ஆலைகளைத திறக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளக்
கூடாதா ?

அடுத்தபடியாக, வங்கிகள் மூலமாக, பணப் பற்றாக்குறை
இருக்கிற ஆலைகளுக்கு நாம் உத்திரவாதம் கொடுக்கிறோம்
என்று அவர்கள் சொல்லார்கள். அது மாதிரி இல்லாமல்,
நம்மிடமே அரசு நிறுவனங்கள் இருப்பதன் காரணமாக, அந்த
நிறுவனங்கள் மூலமாக நிதி உதவியைக் கொடுத்து, அந்த மூடிய
ஆலைகளைத் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய
விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே,
ஏற்கெனவே, தமிழ்நாடு டெக்ஸ்டைல் கார்ப்பரேஷன் 5 ஆலை
களைத் தன் நிர்வாகத்திலே வைத்திருக்கிறது. நிதிப் பற்றாக்
குறை காரணமாகத்தான் தமிழ்நாடு எடுத்து நடத்த முடியாமல்
இருக்கிறது. குஜராத் பாணியில் 1984ஆம் ஆண்டு ஏற்படுத்தப்
பட்ட அலுவல் குழுவில் தமிழ்நாடு கைத்தறித் துணிச்
செயலாளரும் ஒரு உறுப்பினர் ஆவார். விரைந்து மேற்படி
குழுவை தமிழ்நாட்டிற்கு அழைத்து, சாத்தியக் கூறுகளை ஆராய
தமிழக அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்கும்.

**திரு கு. ரமணி :** தமிழக அரசு இந்த 13 ஆலைகள் மூடிக்
இடப்பதற்கு இப்பொழுது கொடுத்துள்ள விளக்கம் நிதிப் பற்றாக்
குறையும் தொழிலாளர்கள் தகராறும். உண்மையிலேயே இந்த
ஆலைகளை மூடுவதற்குத் தொழிலாளர்கள் தகராறு அல்ல
காரணம். அந்த ஆலைகள் நிர்வாகத்தினுடைய மிஸ்மானேஜ்
மெண்ட் — பணமெல்லாம் எடுத்து செலவழிக்கப்பட்டு, இன்றைக்கு
பாப்பர் ஆகியிருக்கின்றன அந்த ஆலைகள். ஆகையினாலே,
தமிழக அரசு அலுவல் குழு, அவர்களாகவே வந்து பரிசிலனை
செய்ய வேண்டுமென்று காத்திராமல், தமிழக அரசே அந்த
ஆலை நிர்வாகங்களை எடுத்து நடத்த ஒரு திட்டத்தைத்
தயார் செய்து, மத்திய சார்க்காருக்குச் சமர்ப்பிக்குமா ? அப்படி
சமர்ப்பித்தால், பாண்டிச்சேரியில், எப்படி அவர்களுக்கு ரூ. 7
கோடிக்கு மேல் கொடுத்து, அந்த நிர்வாகத்தை எடுக்க
அவர்கள் சட்டம் போட்டார்களோ, அதே மாதிரி, இங்கேயும்
போடுவதற்கு அது வசதியாக இருக்கும். அப்படிப்பட்ட ஆக்க
பூர்வமான நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று நான் அறிய
விரும்புகிறேன்.

[1986 சனவரி 11

மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆலைகளை ஏற்படுத்துவதும் ஆலைகளை நிர்வகிப்பதும் மத்தியப் பேரரசின் சட்டத்தின்கீழ் இருக்கிறது. எனவே, மாநில அரசு நேரடியாக அதிலே தலையிட முடியாது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் சொன்னதைப்போல், விரைவில், பாண்டிச்சேரிக்குக் கொடுத்ததை போல், தமிழ்நாட்டுக்குக் கொடுக்க வேண்டுமென்று ஏற்கனவே கடிதப் போக்குவரத்து நடத்திக் கொண்டிருக்கிறோம்.

திரு. ஆர் செங்காளியப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மூடப்பட்ட ஆலைகளை, அரசு ஏற்று நடத்துவதிலே காலம் கடத்திக் கொண்டு வருவதை நாங்கள் பார்க்கிறோம். ஆனால், சென்ற மாதம் தொழிற் சங்கத் தலைவர்கள் டெல்லிக்குச் சென்றிருந்தபொழுது, மத்திய அமைச்சர் அவர்களைச் சந்தித்து, இந்தக் கோரிக்கைகளை எல்லாம் சொன்ன பொழுது மத்திய அமைச்சர் அவர்கள், உங்களுடைய தமிழக அரசானது, இந்த ஆலைகளை எடுத்துக் கொள்கிறோம், நிதி உதவி வேண்டுமென்று கேட்டால், நாங்கள் கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்று தொழிற் சங்கத் தலைவர்களிடத்திலே நேரடியாகத் தெளிவாக்கி இருக்கிறார்கள்: அதே போன்று பாண்டிச்சேரியில் ரூ. 18 கோடி கொடுத்திருக்கிறோம். குஜராத்துக்கு நாங்கள் கொடுத்திருக்கிறோம். ஆனால், நேரடியாக உங்களுடைய தமிழக அரசானது நிதி உதவி வேண்டுமென்று கேட்டால், கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்று மத்திய அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆகவே, மத்திய அரசாங்கத்திலேயிருந்து நிதி கோருவதிலே ஏன் தாமதம் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, மத்திய அரசு அறிவித்துள்ள புதிய ஜவுளிக் கொள்கையின் பிரகாரம் திடீரென்று நாம் கேட்டவுடன் கிடைத்து விடாது. எந்த எந்த ஆலைகள் தொடர்ந்து நடத்தப்பட முடியாத சாத்தியக் கூறுகள் இருக்கின்றன என்பதை நிபுணர் குழு நிர்ணயிக்க வேண்டும். ஆகவேதான் தாமதம் ஏற்படுகிறது.

திரு ஆர். ரெங்கசாமி : தலைவரவர்களே, இந்த 13 ஆலைகளும் மூடப்பட்டு ஏறத்தாழ 10 வருஷங்கள் ஆகின்றன. ஆகவே மேலும் தாமதம் ஏற்படாமல் திறக்க ஏற்பாடு செய்ய வேண்டும். மத்திய அரசு குழு அமைத்து, விசாரணை நடத்துவதற்கு முன்னால் தமிழக அரசு குழு அமைக்கலாம். இந்த ஆலைகள் மூடப்பட்டதற்கு நிர்வாகக் கோளாறா, நிதிக் கோளாறா அல்லது ஒர்க்கர்ஸ் கோளாறா என்பதை ஆராய்வதற்கு தமிழக அரசே குழு அமைத்து, விரைந்து நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, ஏற்கெனவே இருக்கிற குழு ஆராய்ந்து, மூடப்பட்ட 13 ஆலைகளில் 8 ஆலைகள் தொழில் தகராறு காரணமாகவும், 5



1986 சனவரி 11]

ஆலைகள் நிதிப் பற்றாக்குறை காரணமாகவும் மூடப்பட்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கிறது. மீண்டும் தீவிர ஆராய்ச்சி நடத்தி, விரைவில் மத்திய நிதி உதவியைப் பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. வி. தங்கவேலு : தலைவரவர்களே, நூற்பாலைகள் மூலம் உற்பத்தி செய்யக்கூடிய நூல் நூலிழைகள் எப்படி விற்பனை செய்யப்படுகின்றன ? நூல் நூலிழைகள் தனியார் நிறுவனங்களுக்குஎப்படி விற்பனை செய்யப்படுகின்றன ? நூலிழைகளை, அரசு நிறுவனம் எப்படி பெற்று விற்பனை செய்கிறது என்று அறிய ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, மூலக் கேள்விக்கு அப்பாற்பட்டிருப்பதால், தனிக் கேள்வி போட வேண்டும்.

பனியன் துணிகளுக்கு விற்பனை வரி.

35—(*வினா எண் 3980) திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் நாட்டில் பனியன் துணிக்கு விதித்துள்ள விற்பனை வரியை ரத்து செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு தா. வீராசாமி : தலைவரவர்களே, துணிகளுக்கு வரி விதிக்கக்கூடிய அதிகாரம் மாநில அரசுக்கு கிடையாது. அது மத்திய அரசினுடைய வரம்பிற்குள் வருகிற பொருளாகும். இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பனியன் தயாரிக்கின்ற பனியன் துணிக்கு விதிக்கப்படுகின்ற வரி ரத்து செய்யப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். தென்னிந்திய பனியன் உற்பத்தியாளர் சங்கத்திடமிருந்து இதுகுறித்து கோரிக்கை வந்திருக்கிறது. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. கு. சுப்பராயன் : தலைவரவர்களே, நான் வினா எழுப்பியிருப்பது பனியன் தயாரிக்கின்ற துணிமீது போடப்பட்டிருக்கிற வரியைப் பற்றியது. விடுதலைப் பெறுகின்றபோது இந்தியாவின் மொத்த வியாபாரத்தில் 75 சதவீதம் திருப்பூர் பனியன் தயாரிப்பாளர்கள் பெற்றிருந்தார்கள். அதற்குப் பின்னால் தற்போது பல்வேறு மாநிலங்களில் விற்பனை வரிச் சலுகை போன்ற பல்வேறு சலுகைகளை மாநில அரசுகள் வழங்குவதன் காரணமாக திருப்பூர் பனியன் மார்க்கெட் வெகுவாக சுருங்கி விட்டது. ஆண்டுதோறும் சுமார் ஆறு மாதங்கள் தொடர்ந்து வேலையிழப்பு ஏற்படுகிறது. வேலையிழப்பு ஏற்படுகிற தொழிலாளர்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய, 'லே ஆஃப் காம்பன்சேஷன்' கொடுக்க சட்டத்தில் உத்தரவாதம் இல்லை.

எனவே, தொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்படாமல் இருக்கவும், சிறு தொழில்களைப் பாதுகாக்கவும் மாநில அரசு பனியன் துணி களுக்கு விதித்திருக்கிற விற்பனை வரியை ரத்து செய்ய பரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தா. வீராசாமி : தலைவரவர்களே, நான் மீண்டும் சொல்கிறேன். பனியன் துணியின்மேல் வரி விதிக்கப் படவில்லை. பனியன் துணியால் தயாரிக்கப்படும் பனியன் களுக்கு தமிழக அரசு 5 சதவீதம் ஒருமுனை விற்பனை வரி விதித்திருக்கிறது. மாநிலங்களுக்கிடையே விற்கப்படும் பனியன் துணிகளுக்கு மத்திய விற்பனை வரி விதிக்கும் ஸ்தாபனம் மூலம் 2.5 சதவீதம் வரியும் விதிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்கின்ற பனியன்கள் வெளி மாநிலங்களில் விற்பனையாகும் பனியன் களுடன் போட்டியிட முடியாததன் காரணமாக அந்தத் தொழிற்சாலைகள் மூடிக்கிடப்பதாகக் கூறினார்கள். வரி விதிப்பால் மட்டும் அல்ல, வேறு காரணமும் இருக்கிறது. தமிழக அரசு சாதாரண பருத்தி நூலுக்கு 4 சதவீதம் வரியும், பனியன் தயாரிக்கப் பயன்படுத்துகிற '' ஹான்ட் மேட் '' நூலுக்கு 2 சதவீதம் வரியும் விதித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆலை மூடப்பட்டதற்கு வரிதான் காரணம் என்பதல்ல. ஒரு ஆலை சிறப்பாக நடக்கவேண்டுமென்றால் அதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தொழில் துறையினை இதுகுறித்து அணுகலாம் என்று நான் இந்த நேரத்தில் அவருக்கு ஆலோசனை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திரு கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பனியன் உற்பத்தி செய்து விற்பனை செய்கின்ற போது விதிக்கப்படுகின்ற வரியை ஒருமுனைப்படுத்துகிற முறையில் அரசும் தன்னுடைய வருமானத்தை இழக்காமல் பார்த்துக்கொள்கின்ற முயற்சிகளை மேற்கொள்கின்ற அதே நேரத்தில் இந்த பனியன் தொழில் துறைக்கு இருக்கக்கூடிய குறைந்தபட்ச நெருக்கடியைத் தீர்க்க உதவ இனிமேலாவது காரியார்த்தமாகப் பரிசீலிக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதி யுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

மாண்புமிகு திரு தா. வீராசாமி : பேரவைத்தலைவர் அவர் களே, மாநில அரசு எந்தத் தொழிலாக இருந்தாலும், தொழிற் சாலையாக இருந்தாலும் அதற்கு உதவி செய்யத் தயாராக இருக்கின்றது. ஆனால் அதே நேரத்தில் வரியின் மூலமாக



வருகிற மாநில அரசின் வருவாயை வைத்துத்தான் மாநிலத் திலே பல்வேறு வளர்ச்சிப் பணிகளையும் நல்ல திட்டங்களையும் நிறைவேற்றுகிற காரணத்தால் இப்படிப்பட்ட வரியினை அறவே ரத்துசெய்ய இயலாது என்பதை மாண்புமிகு உறுப்பின ருக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

விவசாய விளைபொருள்கள் மீதான விற்பனை வரி.

36—(*வினா எண். 2864) திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மஞ்சள், மல்லி, மிளகாய் போன்ற விவசாய விளை பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்குக் கேட்டு அரசிற்கு ஏதேனும் வேண்டுகோள் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு தா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (அ) இப்படிப்பட்ட கோரிக்கை வரவில்லை.

(ஆ) இந்த வினா எழவில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே. பெரும்பாலும். மிக அதிகமாக பொருளாதாரத் துறையிலே அடித்தளத்திலே இருக்கின்ற மக்கள் பயன்படுத்து கின்ற பொருள்களாக இவை இருப்பதன் காரணத்தால் இவை களுக்கு வரிவிலக்கு கொடுக்கவேண்டும் என்று பலமுறை இந்த மன்றத்தில் எங்களைப் போன்றவர்கள் அரசுக்குக் கோரிக்கை வைத்திருக்கிறோம். எனவே முறையாக அந்தத் துறையிலே இருந்து வராவிட்டாலும் கூட மக்களின் சார்பாக நாங்கள் இங்கே எழுப்புகிற நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டு இனியாவது இவைகளுக்கு வரிவிலக்கு அளிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு தா. வீராசாமி : பேரவைத் தலைவர் அவர்களே. பொதுமக்களிடத்திலிருந்தோ அல்லது வியாபாரி களிடத்திலிருந்தோ இப்படிப்பட்ட கோரிக்கை வரவில்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர்களிடத்திலிருந்து இப்படிப்பட்ட கோரிக்கை வந்திருக்கின்றது. பொதுமக்களுக்கும். வியாபாரி களுக்கும் இருக்கின்ற சிரமத்தைக் குறைக்கவும், விலைவாசியைக் குறைக்கவும் சென்ற ஆண்டு இந்த அரசு நிதிநிலை அறிக்கையில் இப்படிப்பட்ட பொருட்களுக்கு விதிக்கப்படுகின்ற பலமுனை வரியினை ஒருமுனை வரியாக மாற்றியது. இவ்வாறு சிறிய வியாபாரிகளும், மிகவும் சிறிய வியாபாரிகளும் பல்வேறு சிரமங் களிலிருந்து விடுபடவும், வாங்கி உண்கின்ற மக்கள்

[1986 சனவரி 11

மலிந்த விலையில் பொருட்களைப் பெற்றுக்கொள்ளவும் அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை உங்களுக்கெல்லாம் நன்கு தெரியும். எனவே, இப்படிப்பட்ட பொருட்களுக்கு அறவே வரியை நீக்குகின்ற உத்தேசம் அரசுக்கு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு மா. மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, மஞ்சள் என்பது விவசாயி உற்பத்தி செய்யக்கூடிய ஒரு பொருளாக இருக்கிறது. அப்படி விவசாயிகள் உற்பத்திசெய்கின்ற பொருளாக அது இருக்கின்ற நிலைமையில் அந்த விவசாயிகளுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்கவில்லை. எனவே விவசாயிகள் பல்வேறு மட்டங்களில் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். எனவே போதிய விலை கிடைக்காத நேரத்தில் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்படுகிற மஞ்சளுக்கு வரி விதிப்பதன் காரணமாக மஞ்சளில் தேக்கம் ஏற்பட்டு அதன் காரணமாக உற்பத்தி செய்கின்ற விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற நேரத்தில் மாநில அரசு விவசாய உற்பத்திப் பொருளான மஞ்சளுக்கு வரியை அறவே நீக்க முன்வரவேண்டும் என்று விவசாயிகள் சார்பாக நாங்கள் கோரிக்கை வைப்பதை மனத்தில் கொண்டு அதன்படி செய்ய அரசு முன்வருமா ?

அமைச்சர் அவர்களுக்கு வணிகப் பெருங்குடி மக்களும், விவசாயிகளும் கோரிக்கைகள் அனுப்பியது குறித்தெல்லாம் செய்தித் தாள்களிலே பார்த்துத்தான் நாங்கள் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறோம். எனவே செய்தித்தாள்களில் நாங்கள் பார்க்கின்றபடி அந்தக் கோரிக்கைகள் அரசுக்கு வரவில்லை என்றால் அரசுக்கு அனுப்பப்படுகிற வேண்டுகோள்கள் எல்லாம் புறக்கணிக்கப்படுவது பற்றி அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பார்களா ?

(மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு நா. வீராசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசுக்கு வருகின்ற மனுக்கள் அத்தனையையும் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை இந்த நேரத்தில் நான் திட்டவட்டமாகக் கூறிக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன். எந்த முனையிலிருந்து, யாரிடத்திலிருந்து கோரிக்கை வந்தாலும் அவற்றை அலட்சியப்படுத்துகிற பாங்கு, எண்ணம் மாண்புமிகு புரட்சித் தலைவரின் அரசுக்கு இல்லை என்பதை நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். எனவே விலை குறைவுக்கும், வரி விதிப்புக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள் சம்பந்தப்படுத்தக்கூடாது.



[illegible] சனவரி 11]

வரி விதிப்பு என்பது அரசினுடைய நிலையான கொள்கை. இந்த வரி விதிப்பின் மூலமாகத்தான் வணிகர்களிடத்திலேயிருந்து வரியைப் பெற்று அரசு நல்ல பல திட்டங்களைத் தீட்டி நிறைவேற்றக் கூடும் என்பதை இந்த நேரத்திலே கூறிக் கொள்கிறேன். அந்த அடிப்படையில்தான் மஞ்சளுக்கு வரி விதிப்பு என்பது இருக்கிறது. காலத்திற்கு ஏற்ப நேரத்திற்கு ஏற்ப அடிக்கடி நாம் வரி விதிப்புக் கொள்கையை மாற்றுவோமேயானால் வரி விதிப்பு நிலையிலே குழப்பமான சூழ்நிலை ஏற்படும் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு கூறிக் கொள்கிறேன்.

விவசாயிகளின் மேல் அக்கறை கொண்ட அரசாக இருக்கிற காரணத்தினால்தான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு, அண்டை மாநிலங்களில் நெல்லுக்கு, அரிசிக்கு, சோளத்திற்கு, கம்புக்கு இன்னும் விவசாயப் பெருங்குடி மக்கள் உற்பத்தி செய்கிற அத்துணைப் பொருள்களுக்கும் போடுகின்ற வரிகளை, இந்த அரசு போட முன்வரவில்லை. அதற்கு மனமும் இல்லை என்பதை இந்த நேரத்திலே தெளிவாக மாண்புமிகு உறுப்பினர்களுக்கு கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு ச. பாலகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மஞ்சள் கிழங்கு போன்ற விவசாய விளை பொருள்களுக்கு விற்பனை வரி விதிக்கப்படுவதால் நேரிடையாக [illegible] விவசாயப் பெருங்குடி மக்கள்தான். உடனடியாக மஞ்சள் விலை ஏறத்தாழ 300 ரூபாய்க்கு குறைந்திருக்கிறது என்று சொன்னால், அதற்கு காரணம் விற்பனை வரியை உயர்த்தியிருப்பதுதான் என்று வியாபாரிகள் சொல்லுகிறார்கள். எங்கள் பகுதியிலே மஞ்சள் அதிகமாக விளைந்துக் கொண்டிருக்கிறது. ஆனால் குவிண்டாலுக்கு 300 ரூபாயைக் குறைத்து வாங்கினால் தான் அந்த விற்பனை வரி குறையும் என்று சொல்லுகிறார்கள். ஆகவே விவசாயிகளைப் பாதிக்கின்ற வகையில் விதிக்கப்பட்டிருக்கும் இந்த விற்பனை வரியை ரத்து செய்வதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு நா. வீராசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட எண்ணம் அரசுக்கு இல்லை.

திரு எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மஞ்சள், மல்லி, மிளகாய் போன்ற பொருட்கள் அன்றாடம் ஏழைகளால் உபயோகப்படுத்துகின்ற பொருட்களாகும். இந்தப் பொருட்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கவேண்டும் என்று ஏற்கெனவே பல தடவை வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டிருக்கின்றன. சென்ற ஆண்டு நடைபெற்ற மாநாட்டில் கூட அனைத்து சங்க வியாபாரிகளும், அமைச்சர் அவர்களிடத்தில் இந்த வேண்டுகோளை விடுத்திருக்கிறார்கள். தென்காசி தாலுக்காவிலே உள்ள வியாபாரிகளிடத்திலேயிருந்தும், இந்தப் பொருள்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிக்க [illegible] என்று எத்தனையோ தடவை மனுக்களை [illegible] வேண்டும்

இங்கேயும் வந்து நேரிலும் பார்த்து சொல்லியிருக்கிறார்கள். நானே பல தடவை இந்த வரி விதிப்புகள் அதிகமாக இருக்கிறது. ஆகவே இதை விலக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். 8 சதவீதம் வரி விதிப்பு என்கிற நிலையில் மிளகாய்க்கு வரி விதிப்பு வந்தால் 1,200 ரூபாய் குவிண்டாலுக்கு விற்கும்போது, அதிலே 100 ரூபாயை அரசாங்கமே வரியாக எடுத்துக் கொண் டால் எப்படி ? அதே நேரத்தில் விவசாயிகளுக்கு நியாயமாக கிடைக்கவேண்டிய விலை குறைகிறது. மிளகாய் அழுகக் கூடிய பொருள் வேறு. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை யெல்லாம் கருத்தில் கொண்டு, அந்த வரிகளை தவிர்ப்பதற்கு ஆவன செய்வாரா என்று நம்பிக்கையோடு கேட்கிறேன்.

மாண்புமிகு திரு தா. வீராசாமி : சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மிளகாய் அழுகும் பொருள் என்று சொன் னார்கள். மிளகாய் வத்தலுக்கு வரி விதிக்கப்பட்டிருக்கிறதே தவிர, பச்சை மிளகாய்க்கு அல்ல என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். மஞ்சள், புளி, மிளகாய், மல்லி போன்ற பொருள்கள் எல்லாம் பணக்காரர்களும் பயன்படுத்துகிறார்கள், ஏழைகளும் உபயோகிக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மறந்து விட மாட்டார்கள். எங்களுடைய அரசுக்கு வரியே போடாமல் இருக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தாலும் கூட இந்த நாட்டிலே நல்ல பல திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அந்த நிதி ஆதாரம் தேவைப்படுகிறது. திட்டங்களை சரிவர நிறைவேற்றவில்லை என்றால், மாண்புமிகு உறுப்பினர்களே இதே சட்டமன்றத்தில் அதற்காக எங்கள் மீது கடுமையான குற்றச் சாட்டுகளை எடுத்து வைப்பார்கள். அப்படிப்பட்ட நல்ல பல திட்டங்களுக்குத்தான் இத்தகைய வரி விதிப்புகள் விதிக்கப்படு கிறதே தவிர, வேண்டுமென்றே வரி விதிப்பது இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்களே அறிவார்கள் என்பதை இந்த நேரத் திலே சொல்லி, இப்படிப்பட்ட பொருள்களுக்கு வரி விலக்கு அளிக் கின்ற உத்தேசம் அரசுக்கு இல்லை என்பதை மீண்டும் கூறிக் கொள்கிறேன்.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர் களே, மஞ்சள் என்பது மங்களகரமான பொருள். அதுவும் பெண் களுக்கு மிகவும் தேவையான பொருள். தாய்க்குலத்தின் மீது மிகுந்த அக்கறை கொண்டிருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு, தாய்க்குலத்தின் மீதுள்ள கருணையினாலா வது, இந்த மஞ்சளுக்கு மட்டும் இந்த விற்பனை வரியிலிருந்து விதி விலக்கு அளிக்க முன் வருமா என்று அறியவிரும்புகிறேன்.

(முற்பகல் 10–10)

மாண்புமிகு திரு தா. வீராசாமி : துணைத் தலைவர் அவர்களே, பெண்களுக்கு மட்டும் பயன்படுமென்று சொன்னால் நாம் அதைப் பரிசீலிக்கலாம். அதற்கப்பால் மஞ்சள் அதிக வருவாய் ஈட்டுகிற பல்வேறு பொருள்களைத் தயாரிக்கிற மூலப்பொருளாகவும் இருப் பதால் அதற்கு வரிவிலக்கு அளிக்கும் திட்டம் அரசிற்கு இல்லை யென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





## வட்ட அளவில் தொழில் மையங்கள்.

37—(*வினா எண் 2362, திரு மு. இராசாங்கம் : மாண்புமிகு ஊரகத் தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்ட தொழில் மையங்களை மாற்றி தாலுக்கா தோறும் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜகதீசன் : (அ) இல்லை;

(ஆ) இக் கேள்விக்கு இடம் இல்லை.

திரு மு. இராசாங்கம் : துணைத்தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் மாவட்ட தொழில் மையத்தில் சுமார் 5,000 பேர் களுக்குமேல் விண்ணப்பித்துள்ளார்கள். அதிலே நிதிப்பற்றாக்குறை காரணமாக 1,000 படித்த வேலையற்ற மாணவர்களுக்கு மட்டும் நிதி வழங்கப்பட்டது. ஆனால் அதே நேரத்தில் திருச்சி மாவட் டத்தில் சுமார் 800 பேர்களுக்கு மட்டும் வழங்கப்பட்டிருக்கிறது. அங்கே உபரியாகவுள்ள நிதியை தஞ்சை போன்ற தொழில் துறையில் பின்தங்கிய மாவட்டங்களில் விண்ணப்பித்துள்ள படித்த வேலையற்ற மாணவர்களுக்கு வழங்க அரசு அனுமதிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஆனூர் பு. கோ. ஜகதீசன் : துணைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கு சம்பந்தமில்லாத துணைக்கேள்வியை உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். ஆகவே தனிக்கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

திரு கூ. இரா. இன்னராசு : துணைத்தலைவர் அவர்களே, மாவட்ட தொழில் மையங்களை மாற்றி தாலுக்காதோறும் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பது கேட்கப்பட்ட கேள்வியாகும். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம் தொழில் வளர்ச்சியில் பின்தங்கியிருக் கிற வட்டங்களில் இதுபோன்ற தொழில் மையங்களை ஏற்படுத்தி அங்கே தொழில் வளர்ச்சி ஏற்படுத்துவதற்கும், சிறு தொழில்கள் ஆரம்பிப்பதற்கும் அரசிடம் திட்டமிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஆனூர் பு. கோ. ஜகதீசன் : துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய 19 மாவட்டங்களில் இன்றைக்கு 14 மாவட்டங்களில் மாவட்ட தொழில் மையங்கள் உள்ளன. சென்னை, நீலகிரி, காமராஜர், பசும்பொன் முத்துராமலிங்கம், அண்ணா மாவட்டங்களில் இன்னும் மாவட்ட தொழில் மையங் கள் அமைக்கப்படவில்லை. அதற்காக அங்கே அந்த மையங்களை ஏற்படுத்த செயற்குறிப்பு அரசினுடைய ஆய்வில் இருக்கிறது. ஆகவே தாலுக்காதோறும் தொழில் மையங்களை அமைத்திடும் உத்தேசம் அல்லது செயற்குறிப்பு அரசிடம் இல்லை.

[1986 சனவரி 11

திரு ஜே. ஹேமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட தொழில் மையங்களில் பல விஷயங்கள் ஒழுங்காக நடைபெறவில்லை. அங்கே என்னதான் நடக்கிறதென்பது சட்ட மன்ற உறுப்பினர்களுக்கே கூட தெரியாத நிலை இருக்கிறது. ஆகவே சட்டமன்ற உறுப்பினர்கள் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை அந்தத் தொழில் மையங்களில் பொறுப்பில் உள்ளவர்களை கூட்டி, மாவட்டத்தில் தொழில் வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்கு என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் வகையில், அந்தக் கூட்டங்களை நடத்துவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஆனூர் பு. கோ. ஜகதீசன் : துணைத்தலைவர் அவர்களே, இதுபற்றி பரிசீலிக்கலாம்.

திரு வி. தங்கவேலு : துணைத்தலைவர் அவர்களே, மாவட்ட தொழில் மையங்கள் முன்னேறிய மாவட்டங்கள் என்கிற காரணத்தால் சில மாவட்டங்களில் வைக்கப்படாமல் இருக்கின்றன. உதாரணமாக வால்பாறையை எடுத்துக்கொண்டால் அங்கே இந்தத் தொழில் மையம் வைக்கப்படாமல் இருக்கிறது. இதனை மாற்றி அரசு ஒன்றியங்கள் தோறும் பின்தங்கிய மாவட்டங்களில் தொழில் மையங்களை அமைத்து, அங்கே தொழில் துவங்குவதற்கு உதவித் தொகையாக அதாவது சப்சிடி தொகை என்ற வகையில் தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஆனூர் பு. கோ. ஜகதீசன் : துணைத் தலைவர் அவர்களே, இப்போது கேட்கப்பட்டிருக்கிற கேள்வி மாவட்ட தொழில் மையங்களை வட்டங்களில் ஏற்படுத்துகிற செயற்குறிப்பு இருக்கிறதா என்பதாகும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது மாவட்ட தொழில் மையங்களை வட்டங்களில் ஏற்படுத்துவதற்கு பதிலாக, ஒவ்வொரு வட்டாரத்திலும் தொழில் பேட்டைகள் ஏற்படுத்தப்படுமா என்றும், மேலும் அது பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்படுமா என்றும் கேட்டிருக்கிறார்கள் என்று கருதுகிறேன். அதற்கு தனிக்கேள்வி போட்டால் பதில் அளிக்கலாம்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலிலே சொல்லும்போது, அண்ணா மாவட்டம் பின்தங்கியிருக்கிறது என்று சொன்னார்கள். அப்படி இருக்கக் கூடிய பகுதிகளில், அந்தந்த ஜில்லாவினுடைய தலைநகரம் என்று வைத்துக்கொண்டால் கூட, அந்தந்த தாலுக்காவின் தலை நகரங்களில் உள்ளவர்கள், 10, 15 பேர்கள் தொழில் நடத்துவதற்கு முன்வருகிறார்களோ அவர்களுக்கு தொழில் நடத்துவதற்கு இடவசதி செய்து கொடுப்பதற்கு அந்த இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் மூலமாக உதவி செய்வதற்கு, மீண்டும் மறு பரிசீலனை செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.



1986 சனவரி 11]

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு திரு ஆனூர் பு. கோ. ஜகதீசன் : தலைவர் அவர்களே, எந்தெந்த பகுதிகளில் தொழில் தொடங்குவதற்கு முன்னுக்கு வருகிறார்களோ, அப்படிப்பட்ட இடங்களில் தொழிற் பேட்டைகள் அமைக்க அரசாங்கம் திட்டம் வைத்திருக்கிறது. ஆனால் பல்வேறு இடங்களில் தொழில் பேட்டைகளை ஏற்படுத்திய பிறகு, தொழில் முனைவர்கள் வராத காரணத்தால், பல தொழில் பேட்டைகளில் உள்ள தொழில் கூடங்களை மூடிவைத்திருக்கிறார்கள். அந்த நிலை இருக்கக்கூடாது என்பதற்காகத் தான், 10, 15 பேர்கள் தொழில் செய்ய முன்வந்தால், அதற்குரிய ஏற்பாட்டை அரசு நிச்சயமாகச் செய்யும்.

திரு பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, தாலுக்கா மட்டத்தில் தொழில் மையங்கள் அமைக்க இயலாது என்று அறிவித்துவிட்டார்கள். நான் கேட்டுக் கொள்வதெல்லாம் மாவட்ட அளவில் தொழில் மையங்கள் இருந்தாலும், தஞ்சை போன்ற மாவட்டங்களில் உள்ள மன்னார்குடி நகரம் பெரிய நகரமாக காட்சியளிக்கிறது. எதிர்காலத்திலேயாவது அப்படிப்பட்ட நகரங்களில் இந்தத் தொழில் மையத்தை உருவாக்குவதற்கு அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஆனூர் பு. கோ. ஜகதீசன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களிலும், மைய அரசால் உருவாக்கப்பட்ட அமைப்பிலேதான் மாவட்ட தொழில் மையங்கள் இப்போது இயங்கி வருகின்றன. ஆகவே இது மைய அரசைப் பொறுத்த விஷயம். அதுமட்டுமல்லாமல், ஒவ்வொரு மாவட்டத் தொழில் மையத்திற்கும் செலவழிப்பதற்கு உச்ச வரம்பு விதித்து, அதற்கு 4 லட்ச ருபாய் என்று ஒதுக்கியிருக்கிறது. இதிலே 50 சதவீதம் மாநில அரசும் 50 சதவீதம் மைய அரசும் ஏற்றுக்கொள்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இன்னும் மாவட்டங்களில் பல இடங்களில் ஏற்படுத்தப்பட வில்லை. சென்னையில், அதுபோல், நீலகிரி மாவட்டத்தில், புதிதாகத் தொடங்கப்பட்ட காமராஜர் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம், அண்ணா மாவட்டம் போன்ற மாவட்டங்களில் அமைக்காதபோது, தனித்தனியாக வட்டங்கள் தோறும் ஏற்படுத்துவதற்கு இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு எ. எஸ். ஏ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, காமராஜர் மாவட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடம் ஆகிறது. ஆனால் மாவட்டத் தொழில் மையம் அங்கே வரவில்லை. அமைச்சர் அவர்கள் வரும் என்று சொன்னார்கள். வரவேற்கிறேன். அதேநேரத்தில், இந்த அமைப்புகள் சிபாரிசு செய்தாலும் கடன்கள் கொடுக்கின்றபோது, 3 ஆயிரம் ருபாய், 5 ஆயிரம் ருபாய் வேண்டும் என்று கேட்கிறபோது, பாங்குகளிலே யிருந்து தரப்படுவதில்லை. பல பேர்களுடைய விண்ணப்பங்கள்

திருப்பி அனுப்பி விடுகிறார்கள். கொடுக்க முடியாது என்று சொல்லிவிடுகிறார்கள். எனவே இதைத் தடுப்பதற்கும், ஏழைகள் கேட்கின்ற பணத்தைக் கொடுப்பதற்கும், அரசு வழி வகை செய்யுமா என அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு ஆனூர் பு. கோ. ஜகநீசன் : நிச்சயம் பரிசீலிக்கப்படும்

திரு த. புஷ்பராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை போன்ற பின்தங்கிய மாவட்டங்களில் உள்ள தொழில் மையங்களில், அந்த மாவட்டத்தில் இருக்கின்றவர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்காமல் பிற மாவட்டங்களில் இருக்கின்றவர்களுக்குக் கொடுக்கிறார்கள் எனவே அரசு இதை மனதிலே கொண்டு, பின்தங்கிய மாவட்டங்களில் இருக்கின்ற தொழில் மையங்களில், அந்தந்த மாவட்டங்களில் இருப்பவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு ஆனூர் பு. கோ. ஜகநீசன் : நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

திரு. செ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, மாவட்ட அளவிலே இருக்கின்ற தொழில் மையங்களை, கோட்ட அளவிலே அமைப்பதற்கு அரசு பரிசீலிக்க வேண்டும் என்றும், அந்தத் தொழில் மையங்களில் அந்தந்தப் பகுதிச் சட்டமன்ற உறுப்பினர்களை ஆலோசனைக் குழு உறுப்பினர்களாக அரசு அமைத்தால், அந்தத் தொழில்களை முறையாக நடத்த அரசுக்கு வசதியாக இருக்கும். எனவே இதை அரசு உத்தேசிக்க வழி உண்டா? என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஆனூர் பு. கோ. ஜகநீசன் : அரசு நிச்சயம் பரிசீலிக்கும்.

### நீலகிரியில் மாவட்டத் தொழில் மையம்

38—(*வினா எண் 3596 திரு கே. உச்சி : மாண்புமிகு ஊரகத் தொழிற்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்திற்கென்று தனியாக ஒரு மாவட்ட தொழில் மையம் அமைக்கும் உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு ஆனூர் பு. கோ. ஜகநீசன் : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடம் இல்லை.

திரு கே. உச்சி : தலைவர் அவர்களே, ஏற்கனவே நீலகிரி மாவட்டம், தொழிலில் பின்தங்கிய மாவட்டமாக விளங்குகிறது. அதற்குத் தனியாக தொழில் மையம் வேண்டும் என்ற எண்ணத்தை விரைவில் நிறைவேற்ற, பல நேரங்களில் நாங்கள் கோரிக்கை விட்டுள்ளோம். எனவே அங்கே விரைவில் தொழில் மையம் ஏற்படுத்த அரசு முன்வருமா? என அறிய விரும்புகிறேன்.



(முற்பகல் 10-20)

மாண்புமிகு திரு ஆனூர் பு. கோ. ஜகநீசன் : பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து மத்திய அரசை வலியுறுத்தி வருகிறோம். அனுமதி கிடைத்ததும் தொடங்க ஏற்பாடு செய்யப்படும்.

திரு கே. கல்லன் : பேரவைத் தலைவர் அவர்களே, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் கடன் கொடுக்கமுன்வந்தும் இந்த மையம் இல்லாத காரணத்தால் பலர் கடன்களைப் பெற்று தொழில் துறையில் முன்னேறுவதற்கான வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. பின்தங்கிய நீலகிரி மாவட்டத்தில் இந்த மையத்தை அமைக்க அரசு உடனடி நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஆனூர். பு. கோ. ஜகநீசன் : பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் 39 மற்றும் 40 மாண்புமிகு அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்படுகின்றன.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

### 3. தகவல் கோரல்.

(அ) கரும்பு விலையை உயர்த்திக் கொடுப்பது.

திரு என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தற்போது எழுந்துள்ள மிக முக்கியமான பிரச்சினை ஒன்றை தங்கள் மூலமாக இந்த அரசின் கவனத்திற்கும் குறிப்பாக வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் நான் கொண்டு வர விரும்புகிறேன். விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற கரும்புக்குக் கொள்முதல் விலையாக சென்ற ஆண்டு மத்திய அரசு டன் ஒன்றுக்கு 140 ரூபாய் என்று நிர்ணயம் செய்து இருந்த போதிலும், மாநில அரசு மேலும் 45 ரூபாய் அதிகமாகக் கொடுத்து 185 ரூபாய் என்று நிர்ணயம் செய்து கொடுத்தார்கள். இந்த ஆண்டு......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு மத்திய அரசு டன் ஒன்றுக்கு 165 ரூபாய் என்று நிர்ணயித்து இருக்கின்ற அதே நேரத்தில் மாநில அரசு மட்டும் சென்ற ஆண்டு கொடுத்த அதே 185 ரூபாய் கொடுத்து இருப்பது விவசாயிகள் மத்தியில் இன்றைக்கு பெருத்த

கொந்தளிப்பையும், கலக்கத்தையும், கவலையையும் ஏற்படுத்தியிருக்கிறது. நான் உங்கள் மூலமாக வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது, சென்ற ஆண்டு கொடுத்த கணக்கைப் பார்த்தால் டன் ஒன்றுக்கு 210 ரூபாய்க்கு மேல் கொடுக்க வேண்டும். லெவி சர்க்கரை விலையை மத்திய அரசு கூட்டியிருக்கிற காரணத்தால் சர்க்கரை ஆலைகள் எல்லாம் கொழுத்த லாபத்தைப் பெறுகிற வாய்ப்பு இருக்கிற காரணத்தால் விவசாயிகள் கடனிலே பிறந்து கடனிலே வாழ்கிறவர்கள் வயிற்றில் பாலை ஊற்றுகின்ற முறையில் கரும்புக்கு விலையை உயர்த்திக் கொடுப்பதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா விலையை மறுபரிசீலனை செய்யுமா ? என்பதை உங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஆண்டிலும் மத்திய அரசு கரும்புக்கு நிர்ணயிக்கிற விலையைவிட அதிகமான அளவுக்கு மாநில அரசு விலையைக் கொடுத்துக் கொண்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை ஒப்புக்கொண்டு, கூறியதைப்போல் கடந்த ஆண்டு மத்திய அரசு நிர்ணயித்ததைவிட 45 ரூபாய் அதிகமாக நாம் கொடுத்தோம். அவர்கள் இந்த ஆண்டு கடந்த ஆண்டு நிர்ணயித்ததைவிட 25 ரூபாய் அதிகமாக நிர்ணயித்து இருக்கிறார்கள். நாம் விவசாயிகளுக்கு நன்மை செய்வதாகக் கருதி அவர்களைச் சிக்கலில் மாட்டிவிடக்கூடாது என்பதில் அதிகமான அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். ஏன் என்றால், சில நேரங்களில் நாம் அறிவிக்கின்ற விலை தனியார் ஆலைகள் கொடுக்க முடியாத அளவுக்கு நிலைமைகள் ஏற்பட்டு அவர்கள் மாநில அரசுக்கு எதிராக வழக்குமன்றம் செல்லக்கூடிய அளவுக்கு சூழ்நிலைகள் உருவாகிவிடுகிறது. நம்முடைய கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளினுடைய நிதிநிலைமையைக் கணக்கில் எடுத்துக் கொண்டுதான் இந்த விலை பற்றிய முடிவினை எடுக்கிறோம். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த கருத்தினுடைய உணர்வின் அடிப்படையில் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) குமரி மாவட்டம் பெருஞ்சிரக்கோணம் பகுதியில்
நடைபெற்ற கலவரம் குறித்து.

டாக்டர் தே. குமாரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்டத்தில் பெருஞ்சிரக் கோணம் என்ற பகுதியில் ஒரு கலவரம் நடந்தது. அங்கே கலவரம் செய்தவர்கள் மீது வழக்குபோடுவது பற்றியோ அவர்களைத் தண்டிப்பது பற்றியோ எந்தவிதமான தவறும், ஆட்சேபணையும் இல்லை. ஆனால் அதை விட்டுவிட்டு அந்தப் பகுதியில் சுமார் 10 கிலோ மீட்டர் சுற்றளவில் போலீஸ் மிகக் காட்டுமிராண்டித் தனமாக அடித்து துன்புறுத்துகின்ற சூழ்நிலையில் அதை நாங்கள் தவறு என்று கண்டித்தும் அப்படி கண்டித்ததன் அடிப்படையில் அன்று 15-12-85 இரவு காவல்துறை எஸ்.ஐ. அவர்கள் அவருடைய வியிமிகைத் தாண்டி.... ... ... ...





மாண்புமிகு பேரவைத் தலைவர் : எழுதி அமைச்சரிடம் கொடுத்தால், அவர் பதில் கொடுப்பார். (குறுக்கீடு)

திரு என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மிக முக்கியமான பிரச்சினை........ (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தகவல் கோரலில் மிகவும் டீடெயில்ட் ஆகப் போனால், எப்படிப் பதில் சொல்ல முடியும்? எதற்கும் ஒரு பரசீசர் வேண்டும். விதிமுறைப்படி கொண்டு வாருங்கள். (குறுக்கீடு).

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு நடைபெற்ற தகராறில், போலீஸ் எஸ். ஐ. அவர்கள்........

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது விவாதத்தின் போது இந்தக் கருத்துக்களைத் தெளிவாகவும் திட்டமாகவும் சொல்லலாம். விரிவாகவும், விளக்கமாகவும் சொல்லலாம். அப்போது பதில் சொல்வதற்கு வாய்ப்பு ஏற்படும். தகவல் கோரல் என்பதாக முன்னறிவிப்பின்றி எடுத்த எடுப்பிலேயே கன்னியாகுமரி மாவட்டத்திலே போலீஸ்துறையினர் காட்டுமிராண்டித்தனமாக நடந்து கொள்கிறார்கள் என்றால் அது காடா, நாடா, எப்படி என்பதை எல்லாம் எனக்கும் விவரங்கள் கொடுக்க வேண்டும் அப்படி எனக்கு விவரங்கள் கொடுத்து, பதில் சொல்வதற்கு வாய்ப்பு ஏற்படுகின்ற அளவிற்கு எழுப்பினால் நல்லது. கவன ஈர்ப்புத் தீர்மானம் மூலமாகக்கொண்டு வந்தால் விரைவிலே ஒருசில நாட்களிலே, இருக்கிற நிலைமைகளை எடுத்துச் சொல்லலாம். அல்லது சாதாரண, அன்றாட நடைமுறையிலே ஏற்படுகிற கோளாறுகள், குளறுபடிகள் இருக்குமேயானால், உரிய அமைச்சர் அவர்களிடம் விண்ணப்பம் செய்வார்களானால், அதுபற்றி விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்க அரசு ஆயத்தமாக இருக்க முடியும் (குறுக்கீடு)

டாக்டர் தே. குமாரதாஸ் : கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்போது அதை எடுத்துக் கொள்ளும்போது பேசலாம்.

டாக்டர் தே. குமாரதாஸ் : என்ன விஷயம் என்று கேட்கக் கூடாதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திடீரென்று கேட்டால் எப்படி பதில் கிடைக்கும் ?

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் கேட்கவில்லையா ? நான் கேட்கக் கூடாதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சித்தன் பொதுப்படையான ஒரு விஷயம் குறித்துக் கேட்டார். பதில் வந்திருக்கிறது. நீங்கள் குறிப்பிட்ட ஒரு பகுதியில் நடைபெற்றது குறித்து கேட்கிறீர்கள். விவரம் சேகரித்துத் தர முன்னறிவிப்பு வேண்டாமா ?

(இ) திரு. பால்ராஜ் மீது நடவடிக்கை எடுப்பது குறித்து

திரு அ. ரகுமான்கான் : மன்றத்தினுடைய தலைவர் அவர்களே நான் எழுப்புகின்ற இந்தப் பிரச்சினை இந்த அவையினுடைய தலைவராகிய தாங்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் சம்பந்தப்பட்ட, இந்தச் சட்ட மன்றம் சம்பந்தப்பட்ட பிரச்சினை. உங்களுக்குத் தெரியும்—இன்றைக்குச் சுப்ரீம் கோர்ட்டிலே ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. இதே சட்டப் பேரவையில் உரிமை மீறல் குற்றத்திற்காக இரண்டு வார சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட பால்ராஜ் அவர்கள் கைது செய்யப்பட்டு சிறையிலே வைக்கப்படவில்லை. இடையிலே அவர் சென்னை உயர்நீதி மன்றத்திலே வழக்குத் தொடுத்தார். தடை விதிக்கப்பட்டது. எனவே, கைது செய்யப்படாத நிலை. அதற்குப் பிறகு, மெட்ராஸ் ஹைக்கோர்ட்டிலே அவருடைய வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. அதற்குப் பிறகு அவர் கைது செய்யப்பட்டு, இந்தப் பேரவையினுடைய தீர்ப்பை அமல் நடத்துகின்ற விதத்திலே போலீஸ் அவரை சிறையிலே வைத்து இருக்க வேண்டும். ஆனால், டெல்லிக்கு போக போலிஸ் அனுமதிக்கிறது. டெல்லி சுப்ரீம் கோர்ட்டிலே அவர் வழக்குப் போட அனுமதிக்கிறது. தீர்ப்பு வருகின்ற வரைக்கும் அவர் டெல்லியிலே இருக்கிற வரைக்கும் போலிஸ் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லையென்று சொன்னால், இந்தச் சபையை, போலிஸ் துறையும், கமிஷனரும் அவமதித்த குற்றம் என்று உரிமை மீறல் பிரச்சினையைக்கொண்டு

(முற்பகல் 10–30)

வரவேண்டும். அந்த அளவிற்கு இந்தச் சபையினுடைய உரிமையை பாதுகாக்கப்படாத அளவிற்கு, இந்தச் சபையின் உரிமையை நடைமுறைப்படுத்த முடியாத அளவிற்கு, நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

இன்னொன்றையும் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் ஒரு வாசகம் வருகின்றது. ''The Legislature is a..'' (மணி அடிக்கப்பெற்றது)

''The Legislature is a continuing institution established under Article 168.''....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த விவரங்கள் வேண்டாம்.

திரு அ. ரகுமான்கான் : அந்தத் தீர்ப்பைப் நீங்கள் படித்திருப்பீர்கள். நானும் படித்துப் பார்த்தேன். அதிலே ஒரு வாசகம் வருகிறது:



''The Legislature is a continuing Institution established under Article 168.''

அரசியல் சட்டத்தினுடைய 168-ஆவது பிரிவின்படி, இந்தச் சட்டமன்றம் என்பது ஒரு நிரந்தரமான அமைப்பு. இடையிலே கலைக்கப்பட்டாலும் அல்லது முடிவடைந்தாலும், எந்தச் சட்டமன்றக்கூட்டத் தொடர் பிரச்சினையாக இருந்தாலும், இந்த எட்டாவது சட்டமன்றக் கூட்டத் தொடருக்கு சீர் செய்கின்ற நிலைமை இருக்கிறது. என்ற தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது. எனவே முன்னாள் அமைச்சர் குழந்தைவேலு, முதலமைச்சர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் மீதும் உரிமைப் பிரச்சினைகள் முன்பு கொண்டு வந்திருக்கிறோம். (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது வேறு. இது வேறு. இது பாய்ண்ட் ஆப் ஆர்டரில் வராது. வெளியிலே பேச வேண்டிய பிரச்சினை, அல்லது என்னுடைய அறையிலே பேச வேண்டிய பிரச்சினை. என்னை இந்த மாதிரி ஒரு இடத்தில் நிற்க வைத்து கேள்விகளைக் கேட்டு, பதில் சொல்லுங்கள் என்று சொன்னால், எல்லாவற்றிற்கும் பதில் சொல்வதற்கு என்னால் முடியாது. டாக்டர் குமாரதாஸ் கேட்டார், நீங்கள் கேட்டீர்கள். இப்படி மாறி மாறி கேள்வி கேட்டால் என்னால் பதில் சொல்ல முடியாது.

Why should I be unnecessarily subjected to cross-examination?

(குறுக்கீடுகள்) அந்தப் பிரச்சினைகள் எல்லாம் வேறு. அதையெல்லாம் அலுவல் ஆய்வுக் குழுவில் கேட்கவேண்டும். இங்கே கேட்கக் கூடாது. உரிமை பிரச்சினைகளுக்கெல்லாம் குழு வேறு தனியாக இருக்கிறது. அந்தக் குழுவில் நீங்கள் கூட இருக்கிறீர்கள். அங்கே நீங்கள் கேட்டுக்கொள்ளலாம், இங்கே கேட்கக் கூடாது.

திரு அ. ரகுமான்கான் : குழுவில் மட்டுமல்ல, சபையில் கூடக் கேட்கலாம்.

திரு க. அன்பழகன் : தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் இரண்டு முக்கியமான பிரச்சினைகளை சட்டமன்ற உரிமைகளை பாதுகாக்கின்ற பிரச்சினைகளை இங்கே எழுப்பியிருக்கிறார். அதன் ஒரு பகுதி வரை நிதானமாக, மகிழ்ச்சியாக கேட்டுக்கொண்டிருந்தீர்கள்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்கு என்ன நிம்மதி? என்னை நீங்கள் நிம்மதியாக இருக்கவிட்டால் சரி. (சிரிப்பு)

திரு க. அன்பழகன் : தலைவர் அவர்களே, சட்ட மன்றத்தில் அனைவருக்கும் சம்பந்தப்பட்ட பிரச்சினையை தாங்கள் தான் முன் நின்று நிறைவேற்றக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். அந்த கடமையைத் தங்களுக்குக் நினைவுறுத்துவதற்காகப் பல சட்டமன்ற உறுப்பினர்கள் பல பிரச்சினைகளை இங்கே எழுப்புகிறார்கள். அந்த வகையிலேதான், திரு. ரகுமான்கான் அவர்களும் எடுத்துவைத்திருக்கிறார்கள்.

[திரு. க. அன்பழகன்] [1986 சனவரி 11

அதன் முதல் பகுதியில் சொல்லப்பட்ட கருத்துக்கள் பற்றி தாங்கள் ஒரு கருத்தைத் தெரிவிக்க வேண்டிய அவசியத்தில் இருக்கிறீர்கள் அதற்கு என்ன செய்யப் போகிறீர்கள், என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதைத் தெரிவிக்க வேண்டும். அதே போன்று எட்டாவது சட்டமன்றம் புதிதாக தொடங்கப் பட்டது போன்று தோன்றினாலும், முன்னால் நடைபெற்ற நிகழ்ச்சிகளின் தொடர்புக்கு உரியவை என்ற கருத்து இருக் கின்ற காரணத்தால், அது குறித்து தங்களுடைய கருத்து என்ன என்பதைத் தெரிந்து கொண்டால் தான், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வசதியாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முன்னாள் அமைச்சர் திரு குழந்தைவேலு இப்போது லோக்சபயில் பாராளுமன்ற உறுப்பினராக இருக்கிறார். அது வேறு. நம்முடைய அலுவல் ஆய்வுக் குழுவில் சர்வ கட்சித் தலைவர்களை அழைத்து இது பற்றி பேசி முடிவு எடுக்கலாம்.

திரு அ. ரகுமான்கான் : இன்னும் கூட பால்ராஜ் கைது செய்யப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எக்சிகியூட் ஆகவில்லை. அதில் நீங்கள் என்ன பண்ணுவீர்கள், நான் தான் என்ன செய்யமுடியும்? 'இட் இஸ் நாட் எக்ஸிக்யூட்டட் அட் ஆல்'. இந்த அவைதான் சுப்ரீம் என்று நான் அன்றைக்கு சொன்னேன். அது இன்றைக்கு நிலைநாட்டப்பட்டிருக்கிறது. அதாவது ஒளிந்தால் எப்படி? போலீஸ்தான் தேடி பிடிக்கவேண்டும். ஒரேயொரு பத்திரிகை ஆசிரியர்தான் நேரடியாக சரண்டர் அடைந்தார்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பால்ராஜ் வழக்கைப் பொறுத்தவரைக்கும் உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்பும், உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பும் மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போன்று வந்து விட்டன. ஆகவே இந்த அவை எடுத்த நடவடிக்கை முழுக்க முழுக்க செல்லும் என்ற நிலை வந்திருக்கிறது. அந்தத் தீர்ப்புகள் வந்துவிட்டதன் காரணமாக அதன் மீது உரிய நட வடிக்கையை இந்த அரசு எடுத்துக் கொள்ளும். இரண்டு வார சிறைத்தண்டனை அவருக்குக் கொடுக்க வேண்டுமென்று இந்த அவை எடுத்த முடிவு நிறைவேற்றப்படும். அதற்கான முயற்சி களை இந்த அரசும் காவல் துறையும் எடுத்துக் கொள்ளும்.

## 4. கவன ஈர்ப்புகள்.

### (அ) மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் மூடப்பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் செ. செம்மலை, பொ. உத்திராபதி, டாக்டர் தே. குமாரதாஸ் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு தொழி லாளர் நலத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டுவருவார்.



1986 சனவரி 11]

திரு செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே "மேட்டூரிலுள்ள மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் ஆலை மூடப்பட்டுள்ளதால் அதில் பணிபுரியும் தொழிலாளர்கள் வேலை இழந்துள்ள நிலையில் அவர்தம் குடும்பங்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

சுமார் 2,800 தொழிலாளர்கள் பணிபுரியும் மேட்டூர் பியர்ட்செல் லிமிடெட் என்னும் பஞ்சாலை 1–3–83 முதல் மதுரை ருக்மணி மில்ஸ் நிறுவனத்தினரால் ஏற்றுக் கொள்ளப் பட்டதிலிருந்து இவ்வாலையின் பெயர் 'மேட்டூர் டெக்ஸ்டைல்ஸ் இண்டஸ்டீரிஸ் லிமிடெட்' என பெயர் மாற்றம் செய்யப் பட்டது. இதில் பல தொழிற்சங்கங்கள் உள்ளன. புதிய நிறுவனத்தினர் இவ்வாலையை ஏற்றுக் கொண்டதிலிருந்து ஆலையில் உள்ள இயந்திரங்களை முழுமையாக ஓட்டாமல் அதனால் அனைத்துத் தொழிலாளர்களுக்கும் வேலை சரிவர கொடுக்கப்படவில்லை என்றும் பெரும்பான்மையான தொழி லாளர்களுக்கு லே-ஆப் அளிக்கப்பட்டதென்றும் புகார்கள் கூறப்பட்டன.

2. இதுகுறித்து தொழிலாளர் துறை தனி துணை ஆணையர் இருதரப்பினரிடமும் பேச்சு வார்த்தை நடத்திய தால் 11–10–84 அன்று 1947-ம் ஆண்டு தொழிற் தகராறு சட்டப்பிரிவு 12 (3)-ன் கீழ் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்த ஒப்பந்தத்தில் இயந்திரங்களை முழுமையாக உபயோகிப்பதில் படிப்படியாக முன்னேற்றம் காண வேண்டும் என்றும் சிக்கன சீரமைப்பு, சம்பளம் போன்ற பிரச்சினைகளில் நேரடி பேச்சு வார்த்தை மூலம் முடிவு காண வேண்டும் என ஒப்புக் கொள்ளப்பட்டது. இந்த உடன்பாட்டிற்குப் பிறகும் நிலை மையில் முன்னேற்றம் இல்லை என்றும் இந்த ஆலையை அரசே ஏற்று நடத்தவேண்டும் என்றும் முறையீடு வந்தது. தொழி லாளர்களுக்கு மாதத்தில் சுமார் 12 தினங்களுக்கு மட்டுமே வேலை அளிக்கப்பட்டது என்றும் நிர்வாகம் தொழிலாளர் களுக்கு அளிக்க வேண்டிய பணிக்கொடை அளிக்கவில்லை என்றும் தொழிலாளர் ஈட்டுறுதிக்கழகம், தொழிலாளர் சேம நல நிதி, ஆயுள் இன்ஸூரன்ஸ் கார்ப்பரேஷன் ஆகியவற்றிற்கு செலுத்த வேண்டிய தொகைகளைச் செலுத்தவில்லை என்றும் அவ்வாறு கட்டவேண்டிய பாக்கித் தொகை சுமார் ரூ. 60 லட்சமாகும் என்றும் கூறப்படுகிறது. ஆனால் அத் தொகை களை செலுத்துவதற்கு நிர்வாகம் தமது இயலாமையை தெரி வித்தது. தமிழ்நாட்டிலுள்ள பஞ்சாலைத் தொழிலாளர்களின் பொது வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து 16–7–85 முதல் இவ்வாலை கதவடைப்பு செய்யப்பட்டு உள்ளது.

[திரு கே. ஏ. கிருஷ்ணசாமி] [1986 சனவரி 11

3. இவ்வாலையின் பிரச்சினை குறித்து தொழிலாளர் துறை அலுவலர்களும் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களும் நிர்வாகத்தின் பிரதிநிதிகளுடனும் பல்வேறு தொழிற் சங்கப் பிரதிநிதிகளுடனும் பல நாட்களாக தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தினர்.

4. ஆலையை உடனடியாகத் திறப்பதற்கு தொழிலாளர்களின் வேலைப்பளுவை சிறிது கூடுதலாக்குவதற்கும் ஆலையை மீண்டும் திறந்த பின் ஓர் இறுதி உடன்பாட்டை அடைவதற்கும் சென்னை, தனி தொழிலாளர் துறைதுணை ஆணையர் கூறிய யோசனையை நிர்வாகம் ஏற்றுக் கொண்ட போதிலும் தொழிற்சங்கங்கள் இதை ஏற்கவில்லை.

5. எனவே மேற்குறிப்பிட்ட ஆலை தற்போது ஒரு நலிவுற்ற ஆலையாகும். அதை மீண்டும் உருப்படியாக நடத்தவேண்டிய வழிமுறைகளைக் காண வேண்டும். இவ்வாலையை உருப்படியாக நடத்துவதற்கு இவ்வாலையின் பிரச்சினைகள் குறித்து ஆழ்ந்து ஆய்வு செய்து பரிந்துரைகள் வழங்கும் பணியை தன் சார்பான நிலையில் (Independa t Body) இயங்கும் இன்டஸ்ட்ரியல் அண்ட் டெக்னிகல் கன்சல்டன்ஸி ஆர்கனைசேசன் ஆப் தமிழ்நாடு என்ற நிறுவனத்திடம் ஒப்படைத்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதன்படி இந்நிறுவனம் இப்பணியை ஏற்று தனது ஆய்வைத் தொடங்கியுள்ளது. அதன் பரிந்துரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

6. மேலும் தமிழ்நாட்டிலுள்ள நலிவுற்ற ஏழு ஆலைகளை மீண்டும் திறப்பதற்கு வழி வகைகள் காணும் பொருட்டு ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. அந்த ஏழு ஆலைகளுள் மேட்டூர் டெக்ஸ்டைல் லிமிடெட் ஆலையும் ஒன்றாகும். அக்குழு கீழ்க்காணும் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

1. ஆணையர் மற்றும் செயலர், நிதித்துறை.
2. ஆணையர் மற்றும் செயலர், தொழில் துறை.
3. ஆணையர் மற்றும் செயலர், கைத்தறி மில் மற்றும் கதர் துறை.
4. ஆணையர் மற்றும் செயலர், தொழிலாளர் துறை.

அக்குழு ஒரு மாத காலத்திற்குள் தனது பரிந்துரைகளை அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

**திரு செ. செம்மலை ;** தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் கண்டுள்ளபடி இந்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு முயற்சிகளுக்கு தொழிலாளர்கள் சார்பிலே நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன், அதைவிட வேலையிழந்து இருக்கும் அந்த தொழிலாளர்களுக்கு இடைக்கால நிவாரணமாக அமைச்சர் அவர்களும் பாராளுமன்ற துணைத் தலைவர் திரு தம்பிதுரை அவர்களும் முயன்று ஸ்பெஷல் டெபாசிட்டிலே இருந்து 27 லட்ச ரூபாய் நிதியைப் பெற்று தொழிலாளர் குடும்பத்திற்கு தலா ரூ. 1000 அளித்ததற்காக தொழிலாளர்கள் நன்றியுணர்வோடு இந்த அரசைப் பாராட்டிக் கொண்



1986 சனவரி 11] [திரு செ. செம்மலை]

டிருக்கிறார்கள். இருந்தாலும் 6 மாத காலம் அந்த ஆலை மூடப் பட்டிருக்கிறது. தொழிலாளர்களின் வாழ்வில் 6 மாதம் என்பது ஒரு நீண்ட இடைவெளி. ஆகவே அந்தத் தொழிலாளர்கள் மறு வாழ்வு பெறக்கூடிய முறையிலே உடனடியாக என்ன நடவடிக்கையை இந்த அரசு எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். அதோடு அந்த ஆலையை மீண்டும் திறப்பதற்கு வழிவகை காணும்பொருட்டு ஒரு குழு அமைக்கப்பட்டு உள்ளதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அந்த ஆலை ஒரு நலிவுற்ற ஆலை என்பதனை ஏற்றுக்கொள்ள முடியாது. மிஸ்மேனேஜ்மெண்ட் என்ற முறையிலே நிர்வாகம் நல்ல முறையில் நடைபெறாததால் ஏற்பட்டுள்ள நிலை இது என்று தொழிலாளர்கள் சொல்கிறார்கள். ஆகவே அதை அரசே எடுத்துக்கொள்வதற்கு உள்ள வழிமுறையையும் அந்தக் குழு ஆராய அறிவுறுத்தப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு ஆ. நடராசன் :** கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே இப்படி அவர் பேசிக் கொண்டிருக்கிறாரே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் அனுமதித்தால் அப்படிப் பேசலாம்.

**திரு வி. பி. சிந்தன் :** நாங்களும் அதுபற்றிக் கொடுத்திருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இருந்தால் சேர்க்கப்படும்.

(முற்பகல் 10–40)

**மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. செம்மலை அவர்கள் தெளிவாக இந்த மன்றத்திலே தெரிவித்ததுபோல் கடந்த 6 மாதமாக லாக் அவுட் செய்யப்பட்டு இருக்கின்ற அந்த மேட்டூர் ஆலையைத் துரிதமாகத் திறந்து ஏற்கெனவே செயல்பட்டதுபோல் செயலாக்குவதற்காக இரண்டு முயற்சிகளை இந்த அரசு மேற்கொண்டு இருக்கிறது. 6 மாத காலத்தில் ஏறத்தாழ 100 முறையாவது அந்த ஆலைத் தொழிலாளர் சங்கத்தையும் நிர்வாகத்தையும் அழைத்து சுமுகமாக பேச்சுவார்த்தை மூலமாகத் தீர்வுகாணவேண்டுமென்ற முறையிலே பல ஆலோசனைகளை இரண்டு தரப்பினருக்கும் எடுத்துச் சொல்லியும் இன்னும் ஒரு நல்ல முடிவு ஏற்படாத காரணத்தினால் துரிதமாக முடிவு காணவேண்டுமென்ற வகையில் குறிப்பாக அண்மையில் சில நல்ல மாறுதல்களை மத்திய அரசு மேற்கொண்டு வருகிறபோது— குஜராத் மாநிலத்திலே அதைப் பயன்படுத்தி ஒரு முயற்சியை மேற்கொண்டிருக்கிறார்கள். பாண்டிச்சேரியிலேயும் ஒரு முயற்சியை எடுத்திருக்கிறார்கள். அதுபோன்ற ஒரு முயற்சியைத் தமிழ்நாட்டிலே எடுத்து, மூடப்பட்ட இந்த ஆலைகளையெல்லாம் திறப்பதற்குத் துரிதமாக இந்த அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது.

குறிப்பாக அந்த ஆலைகளை அரசே எடுப்பதாக இருந்தாலும் சரி அல்லது நிர்வாகத்தை மாற்றி புதிய நிர்வாகத்தை அமைப்பதாக இருந்தாலும் சரி அல்லது வேறு எந்த மாற்று ஏற்பாட்டைச் செய்வதாக இருந்தாலும் சரி இந்த ஆலை இன்றைக்கு நலிந்திருப்பதற்கு அல்லது மூடப்பட்டிருப்பதற்கு அல்லது லாக் அவுட் செய்யப்பட்டிருப்பதற்கு என்ன அடிப்படைக்காரணம் என்பதை அறிந்த பிறகு அதற்கு ஒரு பரிகாரத்தை எடுக்கவேண்டுமென்ற அந்தப் பொறுப்புணர்ச்சியோடு இரண்டு குழுக்களை இன்றைக்குத் தமிழ்நாட்டில் Industrial Technical Consultarcy Organisation of Tamil Nadu. என்ற ஒரு அமைப்பு இருக்கிறது. இதுபோன்ற நலிந்த ஆலைகளை திறப்பதற்கு முன்னால், தொடர்ந்து நடத்துவதற்கு முன்னால், இந்த ஆலை என்ன காரணத்தால் நலிந்தது, அதற்கு என்ன பரிகாரத்தைத் தேடலாம் என்று அவர்களிடத்திலே ஆலோசனை கேட்பது மரபு, வாடிக்கை. அந்த வகையில் கடந்த 19 ஆம் தேதி, மூன்று வாரங்களுக்குள்ளாக அறிக்கை சமர்ப்பிக்க அரசு இட்காட்டிலே கேட்டிருக்கிறது.

அது மட்டுமல்லாமல், இன்றைக்கு நிதித் துறை செயலாளர், தொழில் துறை செயலாளர், தொழிலாளர் நலத் துறை செயலாளர், பஞ்சாலைத் துறை செயலாளர் ஆகிய 4 பேர்கள் கொண்ட-அதிகாரிகள் கொண்ட ஒரு குழுவை அமைத்து, குஜராத்தில் எப்படி எடுத்திருக்கிறார்கள், அங்கே உள்ள நிலவரம் என்ன, இன்றைக்கு பாண்டிச்சேரியிலே எப்படி எடுத்திருக்கிறார்கள். அங்கே உள்ள நிலவரம் என்ன, எந்த வகையிலே மத்திய அரசாங்கத்தை நாடலாம், அதற்கான விவரங்களைக் கொடுங்கள் என்று குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

திரு. செங்காளியப்பன் அவர்கள் குறிப்பைச் சொன்னார்கள். சென்ற மாதம் டெல்லிக்கு அவர்கள் சென்றிருந்த நேரத்தில், அங்கேயுள்ள மத்திய அமைச்சரைப் பார்த்து, குஜராத்தைப் போல இங்கேயும் மீண்டும் திறக்க மத்திய அரசு போதுமான நிதி வசதிகளையெல்லாம் தமிழக அரசுக்கு நல்க வேண்டும், உதவ வேண்டும் என்று கேட்டுக்கொண்ட நேரத்தில் தமிழக அரசு எழுதினால், கேட்டுக்கொண்டால், நாடினால் மத்திய அரசு எல்லாவிதமான உதவிகளையும் செய்யத் தயாராக இருப்பதாக அவர்களிடத்திலே உறுதி அளித்திருக்கிறார்கள், எங்களிடத்திலேயும் சொல்லியிருக்கிறார்கள்.

ஆகவே, மத்திய அரசாங்கத்திற்கு நாம் நிலவரங்களைச் சொல்லி, எந்த உதவி தேவை, எந்த அளவுக்கு நிதி தேவை, வேறுவகையான உதவிகள் என்ன என்பதையெல்லாம் தெளிவாகச் சொல்வதற்காகத்தான் இட்காட்-இடம் வயபில் ரிப்போர்ட்டைக் கேட்டிருக்கிறோம்.

அரசு அதிகாரிகள் கொண்ட குழுவினிடத்தில், என்ன காரணத்தால் நலிந்தது, இந்த நலிவு மேலும் வராமல் இருப்பதற்கு செய்யவேண்டியது என்ன, திறக்கப்படுவதற்கு என்ன நடவடிக்கை





எடுக்கவேண்டுமென்று தெரிந்து கொள்வதற்காக நாங்கள் அதை அமைத்து, விரைவிலே-சில நாட்களுக்குள்ளாக அந்த அறிக்கையை எதிர்பார்க்கிறோம்.

இந்த இரண்டும் வந்தபிறகு மத்திய அரசாங்கத்திற்குத் தமிழக அரசு எழுதி, இன்றைக்கு குஜராத்தைப் போலவே போதுமான நிதி மற்ற வசதிகளையெல்லாம் நல்க வேண்டுமென்று கேட்கலாம்.

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு செங்காளியப்பன் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். நிதி காரணமாக மட்டும் இந்த ஆலை இன்றைக்கு நலியவில்லை. மாண்புமிகு செங்காளியப்பன் அவர்களுக்கும் தெரியும். அவரிடத்தில் ஏறத்தாழ 10, 15 முறை அங்கே அவர் தொழிற்சங்கத் தலைவர் என்ற முறையிலேயும். நான் தொழிலாளர் நல அமைச்சர் என்ற முறையிலேயும் நீண்ட நேரம் பல பிரச்னைகளைப்பற்றி, மேட்டூர் ஆலையிலே உள்ள சிக்கல்களைப்பற்றி நாங்கள் விவாதித்திருக்கிறோம்,

நிதிப் பற்றாக்குறை அல்லது நிதியின் நெருக்கடி என்பது பல காரணங்களிலே ஒன்று. அந்த ஆலையில் உள்ள இயந்திரங்கள் போதுமான அளவிற்கு யுடிலைசேஷனில் இல்லை என்பது தொழிலாளர்களின் வாதம். அதே நேரத்தில் ஆலையிலே உள்ள தொழிலாளர்கள் சற்று கூடுதலாக இருக்கிறார்கள் என்பது நிர்வாகத்தின் வாதம். இரண்டு பரிகாரங்கள் அதாவது ஒன்று, ரேஷனலைசேஷன், இரண்டாவது மாடர்னைசேஷன். நவீனப்படுத்த வேண்டும், சீரமைக்க வேண்டும். சீரமைக்கும் நேரத்தில் தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டு விடக் கூடாது, நவீனப்படுத்தும் நேரத்தில் நிதி தேவைப்படுகிறது.

இன்றைக்கு ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் இருந்தால்தான் அந்த ஆலையைத் திறக்க முடியும். ஆனால் அந்த ஒரு கோடி ரூபாயை நிர்வாகம் கொண்டு போடுமா என்றால் அதிலேதான் சங்கடங்கள் இருக்கின்றன. ஆகவே இந்த ஒரு கோடி ரூபாயை எப்படிப் பெறுவது என்பதிலே அரசாங்கம் மிகுந்த கவனம் செலுத்துகிறது. அப்படி ஒரு கோடி ரூபாய் பெறப்பட்ட பிறகு, பழைய நிர்வாகத்தையே அமைப்பதா என்பது இரண்டாவது பிரச்சனை. அப்படி நிர்வாகத்தை மாற்றினால் வேறு எந்த அமைப்பின் மூலம்— கோவை ஜோதி மில்ஸ்ஸையெல்லாம் நலிந்த ஆலைகளை வெற்றிகரமாக தமிழக அரசு நடத்திக்கொண்டு இருக்கிறதே அப்படிப்பட்ட பார்முலாவை இதிலும் கையாளலாமா என்பது ஆராயப்படவேண்டும். இவைகளை எல்லாம் ஆய்ந்து சொல்வதற்காக, இன்றைக்கு அதிகாரிகள் அடங்கிய அந்தக் குழுவை அமைத்திருக்கிறோம். அந்தக் குழு இந்த பிராபபிலிட்டீஸ் எல்லாம் ஆராய்ந்து, தெளிவாக திட்டவட்டமாக ஒரு அறிக்கையை அளிக்கவேண்டுமென்று நா

வற்புறுத்தி இருக்கிறோம். அந்த அறிக்கை வந்ததற்குப் பிறகு,
மத்திய அரசாங்கத்திற்கு எழுதி, உரிய வகையிலே, நடவடிக்கை
எடுத்து, இன்றைக்கு வேலை வாய்ப்பு இழந்திருக்கிற 2,500
தொழிலாளர்களுக்கு ஒரு புதிய வாழ்க்கையை விரைவிலே
கொடுக்க மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் முயற்சிகள்
எடுத்துக் கொண்டிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

திரு பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவா
அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கிறபொழுது, இது
வரையிலும் 100 தடவைகள் பேசி இருப்பதாகவும் மேலும்
விரைவில் பேசித் தீர்ப்போம் என்றும் சொல்லியிருக்கிறார்கள்.
மேலும் என்று சொல்கிறபொழுது, இன்னும் 100 தடவையா,
200 தடவையா என்று சொல்ல முடியவில்லை. இதை ரப்பர்
போல் இழுத்துக் கொண்டு போவது எந்த அளவுக்கு நியாயம்
என்பதை உணரவேண்டும்.

இப்பொழுதே, தமிழகத்தில் தனியார்கள் தொழில் உற்பத்தி
பண்ணக் கூடியவர்களுக்கு உடனடியாக சலுகை அளித்து
உற்பத்தியைப் பெருக்குவோம் என்று அரசு சொல்கிற நேரத்தில்.
இப்படி செயல்பட்டு வந்த ஆலையின் 2,800 தொழிலாளர்கள்
6 மாத காலமாகப் பட்டினி கிடக்கிறார்கள். அதே போல,
அவர்களுக்கு ரூ. 1,000 உதவித்தொகை கொடுத்திருந்தாலுங்கூட
எந்த அளவுக்கு அது அவர்கள் குடும்பத்தை ப்பாதுகாக்கமுடியும்
என்பதை அமைச்சர் அவர்கள் யோசிக்க வேண்டும். கவன
ஈர்ப்புத் தீர்மானத்தில் 13 ஆலைகள் மூடப்பட்டிருப்பதாக
சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் 7 ஆலைகள் மூடப்பட்டிருப்ப
தாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான்
கேட்பதெல்லாம், இன்றைக்கு எங்கு பார்த்தாலும் தொழிலாளர்
கள் போராடுகிற நிலை இருக்கிறது. சமீபத்திலே கூட
அங்கே ஒரு பெரிய பந்த் நடந்தது. இந்த பந்த் போராட்டம்
முற்றுமானால், லா அண்ட் ஆர்டர் பிரச்னை ஏற்பட்டு, ஒரு
துப்பாக்கிச் சூட்டுக்கு ஆளாகி, தொழிலாளர்கள் இறந்ததற்குப்
பிறகு பேசிப்பயன் இல்லை. அது தொடர்ச்சியாகத் தமிழகத்தில்
வந்து கொண்டிருக்கிறது. நான் அமைச்சர் அவர்களைக்கேட்டுக்
கொள்வதெல்லாம் இதற்கெல்லாம் இடம் கொடுக்காமல் இருக்க
வேண்டும். இப்படி முதலாளிகள் இஷ்டம்போல் கதவடைப்பு
செய்வதும், தொழிலாளர்கள் பட்டினி கிடப்பதும், இப்பொழு
திருக்கக்கூடிய சட்டங்களை, ஓட்டைகளை, வைத்து நடக்கின்றன
முதலாளிகள் தப்பித்துக் கொண்டிருக்கிறார்கள். நான்
அமைச்சரைக் கேட்டுக்கொள்வது, இப்படித் தொழிலாளிகளைப்
பட்டினி போடக்கூடிய முதலாளிகள் மீது நட வடிக்கை எடுப்பதற்கு
சட்டத்தைக் கடுமையாகத் திருத்தி, இப்பேர்ப்பட்டவர்களுக்குத்
தண்டனை கொடுத்து, தொழிலாளர்களது வாழ்க்கையைப்
பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய
விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, நான் கடந்த 6 மாத காலத்தில்
ஏறத்தாழ 100 முறையாக, இரண்டு தரப்பாரையும் அழைத்து,
கன்சிலியேஷன்—சமரச முயற்சியை மேற்கொண்டேன் என்று
எடுத்துச் சொன்னதற்குக் காரணமே இந்த அரசு இந்தப்
பிரச்னையை, துரிதமாக, வேகமாக தீர்க்கவேண்டுமென்பதற்காக
எந்த அளவுக்கு அக்கறை காட்டியிருக்கிறது என்பதற்காகத்
தானே தவிர, அதை இழுப்பதற்காக அல்ல. மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் எர்ரிங் மானேஜ்மெண்ட் மேல் நடவடிக்கை
எடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். அப்படிப்பட்ட கருத்து
தான் டெல்லியிலும் இருக்கிறது. அண்மையில், இண்டஸ்ட்ரியல்
கம்பெனீஸ் ஸ்பெஷல் ப்ரவிஷன் பில் என்ற ஒரு மசோதாவைக்
கொண்டு வந்து, சட்டமாக்கியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு
சட்டம் நடைமுறைக்கு வருகின்றபொழுது முறையாக இருக்கிற
நிர்வாகம், நிச்சயமாக, அவர்கள் பிடியிலிருந்து தப்ப முடியாது,
இந்த அரசு அந்தகைய நடவடிக்கையை எடுக்கும் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு கே. பி. நாச்சிமுத்து : தலைவர் அவர்களே........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அறிவிப்பு கொடுக்காத
உறுப்பினர் இதில் கேள்வி கேட்க முடியாது.

திரு கே. பி. நாச்சிமுத்து : நான் அந்தத் தொகுதி உறுப்
பினர். நானும் விளக்கம் சொல்ல வேண்டும் அல்லவா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தொகுதி உறுப்பினர்
என்றால், நீங்கள் எழுதிக் கொடுத்திருக்க வேண்டும்.

டாக்டர் தே. குமாரதாஸ் : அமைச்சர் அவர்கள் இங்கே
விளக்கமாகப் பதில் அளித்தார்கள். இந்த மேட்டூர் மில்
தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய இந்த நிலையில்,
அவர்களுடைய சம்பளத்திலே இருந்து பிடித்தம் செய்த
வருங்கால பி.எப்., இ.எஸ்.ஐ., எல்.ஐ.சி. போன்ற தொகையினை
அரசுக்குச் செலுத்தாமல், கையாடல் செய்திருக்கிறார்கள். அது
கிட்டத்தட்ட ரூ. 60 இலட்சம் என்று சொன்னார்கள். அந்த
நிர்வாகம், அந்தப் பணத்தை எங்களால் கட்ட முடியாது,
இயலாது என்று கூறிவிட்டார்கள் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்
கள். இப்படி தொழிலாளர்களுடைய பணத்தை, சுமார்
ரூ. 60 இலட்சம் கையாடல் செய்து, கட்ட இயலாது என்று
கூறி விட்டவர்களை விட்டுவிட இந்த அரசு தயாராக இருக்கிறதா?
அல்லது அவர்கள்மேல் என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறீர்கள்
என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, சட்டபூர்வமான நடவடிக்கைகள்
எடுக்கப்படும்.

[1986 சனவரி 11

(முற்பகல் 10-50)

(ஆ) திண்டுக்கல் மாவட்ட மருத்துவமனை அறுவைச் சிகிச்சைக்கூடம் செயல்படாது உள்ள நிலை குறித்து.

மாண்புமிகு திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' திண்டுக்கல்லிலுள்ள மாவட்ட மருத்துவமனையின் பிரதான அறுவை சிகிச்சைக் கூடத்தின் மேற்கூரை பழுதடைந்துள்ளதால் கடந்த நான்கு மாத காலமாக நோயாளிகளுக்கு அறுவை சிகிச்சை செய்ய முடியாத நிலை உள்ளதால் அண்ணா மாவட்டத்தைச் சேர்ந்த நோயாளிகளுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்கள் '' குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

சமீபத்தில் பெய்த மழையின் காரணத்தால் திண்டுக்கல்லில் உள்ள அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையின் பிரதான அறுவை சிகிச்சைக் கூடத்தின் சுவர்களில் அரிப்பும் மேற்கூரையில் பலத்த ஒழுக்கலினால் தரையில் தண்ணீர் தேக்கமும் ஏற்பட்டது. இதனால் அறுவை சிகிச்சை செய்ய மிகவும் சிரமமாக இருந்தது. இவ்வறுவைச் சிகிச்சைக் கூடத்தை பழுது பார்ப்பதற்காக திண்டுக்கல்லிலுள்ள பொதுப்பணித்துறையினரை மாவட்ட மருத்துவ அலுவலர் கேட்டுக் கொண்டுள்ளார். பொதுப் பணித்துறையினரால் இவ் வேலை எடுத்துக் கொள்ளப் பட்டு 1986 ஆம் ஆண்டு ஜனவரித் திங்களின் இடையிலேயே முடித்துத் தருவதாக உறுதியளித்துள்ளனர். பிரதான அறுவைச் சிகிச்சைக்கூடம் சரி செய்யப்பட்டு பொதுப் பணித் துறையினரால் இத்துறைக்கு ஒப்படைக்கப்பட்டவுடன் '' சுவாப்ஸ் '' (Swabs) எடுத்து '' கிங் இன்ஸ்டிடியூட் '' கிண்டியில் நுண்மலியலுக்கு (Bactiriological) ஆய்வு செய்து அங்கிருந்து அறிக்கை பெற்ற பின் செயல்படும்.

இம் மருந்தகத்திலுள்ள வெளி நோயாளிகளுக்காக இணைக்கப் பட்டுள்ள மகப்பேறுக்குப்பின் அறுவை சிகிச்சையளிக்கும் கூடத்திலும் (post partum Operation Theatre) மற்றும் அறுவை சிகிச்சைக் கூடத்திலும் எல்லா விதமான அவசர அறுவை சிகிச்சைகளும் செய்ய பயன்படுத்தப்பட்டு வருகின்றது. அவசர சிகிச்சைப் பிரிவுடன் இணைக்கப்பட்ட அறுவை சிகிச்சைக்





கூடமும் தயாராகிக் கொண்டு வருகின்றது. நோயாளிகளுக்கு அறுவை சிகிச்சை தேவைகள் மேற்படி ஏற்பாடுகளுடன் முழுமையாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இதன காரணமாக திண்டுக்கல்லில் உள்ள மாவட்டத் தலைமை மருத்துவமனையிலுள்ள பிரதான அறுவை சிகிச்சைக்கூடம் தற்காலிகமாக இயங்காதிருப்பதனால் நோயாளிகளுக்கு அதிக சிரமம் ஏற்படவில்லை.

மாண்புமிகு திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) : தலைவரவர்களே, இந்த விவர அறிக்கையிலே கூட அந்த அறுவை சிகிச்சைக்கூடம் ஒழுகுகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. எங்களைவிடக் கூடுதலாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பலமுறை அந்த மருத்துவ மனையைப் பார்த்திருக்கிறார்கள். பிரதான அறுவை சிகிச்சைக் கூடம் இருக்கிற கட்டிடம் ஏறத்தாழ 50, 60 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டது. மழைக் காலத்தில் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 4 மாதங்கள் அந்த அறுவை சிகிச்சைக் கூடத்தில் அறுவை சிகிச்சை செய்ய முடியவில்லை. அந்த அளவிற்குச் சிக்கல் ஏற்படுகிறது. அதன் காரணமாக அங்கே பணியாற்றுகிற தனிப்பட்ட டாக்டர்கள் சாதாரண ஆப்பரேஷனுக்குக்கூட 2,000 ரூபாய், 3,000 ரூபாய், 5,000 ரூபாய் வாங்குகிறார்கள். அண்ணா மாவட்டத்தில் தலைநகரம் திண்டுக்கல் என்பதைக் கருத்திற் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக, ஒரு வார காலத்திற்குள் நிவாரணம் அளித்து, அந்த அறுவை சிகிச்சைக் கூடத்தைப் பயன்படுத்தும் வகையில் நடவடிக்கை எடுக்க, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் மாண்புமிகு நாவலர் அவர்களையும் கலந்துகொண்டு, தகுந்த ஏற்பாடு செய்வார்களா? சுமார் மூன்று இலட்சம் ரூபாய் ஒதுக்கினால் அதை ஒரு சிறந்த அறுவை சிகிச்சைக் கூடமாகக் கட்ட முடியும். ஆண்டு தோறும் இப்படிப்பட்ட பிரச்சினை எழுகின்ற காரணத்தால் உடனடியாக தகுந்த நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவரவர்களே, இந்தப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் அங்கே இருக்கக்கூடிய மாவட்ட மருத்துவ அதிகாரி அவர்கள் பொதுப்பணித் துறையோடு தொடர்பு கொண்டு, ரிப்பேர் செய்து கொடுக்க நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்கள். பொதுப்பணித்துறை இந்த மாதம் இறுதிக்குள் ரிப்பேர் செய்து கொடுப்போம் என்று உத்திரவாதம் தந்திருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் ஒவ்வொரு ஆண்டும் இப்படி மற்படுகிறது என்று சொல்கிறார்கள். அது மாவட்ட மருத்துவ ஏனையாகயிருக்கிற காரணத்தால் 'லோட் ஆஃப் ஒர்க்' கூடுதலாக

இருக்கும். இதையும் கருத்திற்கொண்டு, இன்னொரு எக்ஸ்ட்ரா ஆப்பரேஷன் தியேட்டர் கட்டுவதற்கும் ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): தலைவரவர்களே, அவசர சிகிச்சைப் பிரிவு பகுதியில் ஒரு அறுவை சிகிச்சைக் கூடம் கட்டப்பட்டு, அது போக்குவரத்துச் சாலை ஓரத்தில் இருக்கிற காரணத்தால் கிண்டியில் இருக்கிற அதிகாரிகள் அங்கே அறுவை சிகிச்சை நடத்த 'க்ளீயரன்ஸ்' கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். அதையும் பரிசீலனை செய்து, கட்டப்பட்டிருக்கிற அறுவை சிகிச்சைக் கூடத்தை செயல்படவைக்க என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவரவர்களே, அந்த அறுவைச் சிகிச்சை அரங்கத்தையும் (Operation Theatre) செயல்படுத்த ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''1986 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''.

திரு வி. பி. சிந்தன்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியினுடைய தேர்தலைக் காலவரையறையின்றி ஒத்தி வைப்பதை நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன். 11 ஆண்டுகளுக்கு முன்பு தேர்தல் நடைபெற்றது. அதற்குப் பிறகு தேர்தலே நடக்கவில்லை. சென்னை மாநகரத்தின் அவல நிலைமைகள் பற்றி நீண்ட நேரம் நான் இங்கு பேச விரும்பவில்லை. நேரம் இல்லாத காரணத்தால், தெரு விளக்குகள் முறையாக எரியவில்லை; குடிக்க தண்ணீர் பல இடங்களில் கிடைக்கவில்லை; சாலைகள் படு மோசமான நிலைமையில் இருக்கின்றன; கழிப்பிடங்களுக்குப் போதுமான வசதிகள் செய்யப் படவில்லை; இவ்வளவு அலங்கோலமான நிலைமை இருக்கின்றது என்றால் அதைத் தட்டிக் கேட்க தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி இல்லாத காரணத்தால்தான் மேலும் மேலும் இந்தக் குறைபாடுகள் பெருகிக் கொண்டே இருக்கின்ற நிலைமை ஏற்படுகிறது.



நான் மாநகராட்சிக் கட்டிடத்தைக் குறிப்பிடுகிறேன். அந்தக் கட்டிடத்திற்குள்ளே நுழைந்தால் லஞ்சம் கொடுக்காமல் எந்த ஒரு காகிதமும் ஒரு மேஜையிலே இருந்து மற்றொரு மேஜைக்குச் செல்லாது. இவ்வளவு அவல நிலைமை ஏற்பட்டதற்குப் பிறகும் அவசரச் சட்டத்தைக் கொண்டு வந்து தேர்தலை மீண்டும் ஒத்தி வைப்பது என்பது சரியல்ல. அதிலே கொடுக்கப்படுகின்ற விளக்கம் என்னவென்றால் தேர்தல் பஞ்சாயத்துக்களுக்கும், நகரசபைகளுக்கும் நடக்கின்ற காரணத்தால் நாம் இந்தத் தேர்தலை நடத்த முடியாது என்றும் அதன் காரணத்தால் மேலும் 6 மாத காலத்திற்கு ஒத்தி வைப்பது என்பதும் நியாயமல்ல. பஞ்சாயத்துத் தேர்தலை நடத்துகின்ற காரணத்தால் நகரசபைத் தேர்தலை நடத்த முடியாது என்று சொல்வது சரியல்ல. பாராளுமன்றத்திற்குத் தேர்தல் நடத்துகிறோம், சட்டமன்றத்திற்குத் தேர்தல் நடத்துகிறோம், மற்ற மாநிலங்களிலே எல்லாம் தேர்தல்கள் முறையாக நடக்கின்றன. ஆனால் இந்த மாநிலத்தில் மட்டும் ஜனநாயகத்தை, ஆளுகிற கட்சி மதிக்கவில்லை என்ற ஒரே காரணத்தைத் தவிர மாநகராட்சித் தேர்தலைத் தள்ளிப் போடுவதற்கு வேறு எந்தக் காரணமும் இல்லை. தோல்வி வந்துவிடும் என்ற அச்சம் கூட இந்த அரசுக்கு இருக்குமோ என்று நான் கருதவில்லை. எனவே இவ்வாறு மேலும், மேலும் ஒத்திவைப்பதை நான் வன்மையாக ஆட்சேபிக்கிறேன். இந்தச் சட்டமுன்வடிவில் எப்போது தேர்தல் நடக்கும் என்று குறிப்பிடப்பட வேண்டும் என்றும் நான் வலியுறுத்தி அமர்கிறேன்.

திரு ப. பொன்னுரங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னரால் போடப்பட்ட அவசரச் சட்டத்திற்குப் பதிலாக இந்தச் சட்ட முன்வடிவு இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. நான் பல்வேறு வாய்ப்புக்களில் அவசரச் சட்டங்களைச் சட்ட முன்வடிவாக சட்டமன்றத்திலே கொண்டுவந்தபோதெல்லாம் பலவேறு காரணங்களைச் சொல்லி எதிர்த்து இருக்கிறேன். ஆனால் இப்போது சில புதிய காரணங்களும் சேர்ந்து கொண்டிருக்கின்றன. அது என்னவென்றால் இதுவரையில் அரசாங்கத்தால் ஆப்ஜக்ட்ஸ் ஆண்ட் ரீசன்ஸ்லே சொல்லப்படுகின்ற காரணங்கள் எல்லாம் போலியாக, ஏதோ ஒன்று சொல்லவேண்டும் என்பதற்காகச் சொல்லப்பட்ட காரணங்களே தவிர வேறு உண்மையில்லை.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் இன்னொரு 6 மாதகாலம் டிசம்பரிலே இருந்து கேட்பதற்காகத்தான் இந்தச் சட்டம் வந்திருக்கிறது. இங்கே சென்னை மாநகரத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. சிந்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஒரு எக்ஸிபிஷன் கூட நடத்தலாம் இண்டியன் எக்ஸ்ப்ரஸ் பத்திரிகையிலே வருகின்ற போட்டோ படங்களை வைத்து. குண்டு குழிகள் குப்பைக் கூளங்கள் நிறைந்திருக்கின்ற அந்தக் கோரக் காட்சியை

வைத்து எக்ஸிபிஷன் நடத்தலாம். அதை எல்லாம் நாம் பார்த்தாலும் கூட மக்கள் பிரதிநிதிகள் வருவதை மறுக்கிறோம். அதன் காரணமாக இதுபோன்ற சட்டங்களைக் கொண்டுவந்து டெமாக்ரட்டிக் செட்-அப்பையே நொறுக்குகிறீர்கள். அவ்வாறு நொறுக்குவதற்குப் பல்வேறு முறைகள் கையாளப்பட்டு கடைசியில் ஒரு முறை வந்து சேர்ந்து இருக்கின்றது.

சென்னை மாநகராட்சியில் நடத்தப்படுகின்ற விழாவில் மக்கள் பிரதிநிதிகள் கலந்து கொள்ள முடியவில்லை என்றால், மக்கள் பிரதிநிதிகளைப் போட நீங்கள் மறுக்கிறீர்கள் என்பதுதான் காரணம். ஆக அந்த உரிமை பறிக்கப்படக் கூடாது என்பதற்காக உண்ணாவிரதம் இருந்தால் சிறையில் அடைக்கிறீர்கள். இதெல்லாம் எதனால் ஏற்படுகிறது ? மக்கள் பிரதிநிதி இருந்தால் மேயர் இருப்பார், டெபுட்டி மேயர் இருப்பார், அவர்கள் எல்லாம் உங்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டு நடக்க மாட்டார்கள். உங்கள் பேச்சைக் கேட்க வேண்டிய அவசியம் அவர்களுக்கு இல்லை. எனவே நடந்தப்பட்ட அந்த விழாவில் மக்கள் பிரதிநிதிகள் கலந்துகொள்ள முடியாததற்கு முக்கிய காரணம், மெய்ன்ரீசன் அங்கே எலக்டட் பாடி இல்லை என்பதுதான். அப்படி இல்லாததன் காரணந்தான் அரசாங்கம் எப்படிக் சொல்கிறதோ அமைச்சர்கள் எப்படிச் சொல்கிறார்களோ அதன்படி நடக்கிறார்கள். அவர்கள் எல்லாம் யாரைச் சொல்கிறார்களோ அவர்கள் பெயரைத்தான் போடுகிறார்கள். ஆனால் மாநகராட்சியில் மக்கள் பிரதிநிதிகள் இருந்திருந்தால், எலக்டட் பாடி இருந்திருந்தால் நிச்சயம் அந்த விழாவில் திரு. சோ.மா. இராமச்சந்திரன் அவர்களுடைய பெயரும் இடம் பெற்றிருக்கும். மக்கள் பிரதிநிதிகள் இருந்தால் உங்களால் அதைத் தடுத்து நிறுத்தி இருக்க முடியாது; அதிகாரிகளால் அதைத் தடுத்து நிறுத்தி இருக்க முடியாது. அவர்கள் இருந்தால் நிச்சயம் போட்டிருப்பார்கள். எனவே இதுவும் ஒரு காரணமாக இப்போது கூடுதலாக வந்திருக்கின்றது இந்த நேரத்தில். ஆகையினாலே மக்கள் பிரதிநிதிகளை மதிக்கவாவது செய்யுங்கள். இதுவரையில் இல்லையென்றாலும் இனிமேலாவது மதிக்கச் செய்யுங்கள். உங்களைப் போலத்தான் நாங்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்திருக்கிறோம். எங்களுக்கு மரியாதை கிடைக்கவாவது மக்கள் பிரதிநிதிகளை அங்கே வையுங்கள். தேர்தலை நடத்துங்கள் என்று கூறி, இந்தச் சட்ட முன்வடிவை நான் எதிர்த்து அமர்கிறேன்.

(முற்பகல் 11–00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்த ஒரு பில்லிலே மட்டும் தான் பேசுவதற்கு அனுமதி உண்டு. இதேபோன்று உள்ள மற்ற பில்களுக்கு கிடையாது. அது என்னுடைய டிஸ்கிரிஷன்.



Rule (130)I of the Tamil Nadu Legislative Assembly Rules : " If a motion for leave to introduce a Bill is opposed, the Speaker, after permitting, if he thinks fit, a brief statement from the Member who moves and from a member who opposes the motion, may without further debate, put the question thereon."
அந்தச் சட்ட முன்வடிவுகள் ஆய்வுக்கு வரும்போது நீங்கள் நிறைய பேசலாம். இப்போது எதிர்ப்பு தெரிவிப்பது, இதற்கு மட்டும் தான்.

**திரு எஸ். வேணுகோபால் :** பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியை இன்னும் 6 மாத காலம் தேர்தல் நடத்தாமல், தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டித்து இந்தச் சட்ட முன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். சென்னை மாநகராட்சியில் பல ஆண்டுக் காலமாகவே தேர்தல் நடைபெறாமல் இருக்கிறது. அப்படியே தேர்தல் நடந்தாலும் கூட சென்னை மாநகராட்சிக்கு நடக்குமா என்பதே எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. ஏனென்று சொன்னால் சென்னை மாநகராட்சியின் சீர்கேடு—சீர்கேடு என்று சொன்னால் கொஞ்ச நஞ்சமல்ல, அப்படி சீர்கெட்டு கிடக்கிறது.

சாலைகள் எல்லாம் எப்படி இருக்கின்றன என்றால், பெரியவர்கள், வசதி படைத்தவர்கள், அரசியல் அமைப்பிலே இருக்கின்ற முக்கியமானவர்கள் போன்றவர்கள் செல்லும் சாலைகளை மட்டும் நன்றாக பழுது பார்த்து நல்ல நிலையில் வைத்துக் கொண்டு மற்றபடி ஏழை எளியவர்கள் இருக்கும் சாலைகளை பழுது பார்ப்பதே இல்லை. கார்ப்பரேஷன் போட்டிருக்கும் தெரு விளக்குகள் எரிவதே இல்லை. சாக்கடை நீரின் தேக்கம் அதிகமாகிப் போய்க் கொண்டே இருக்கிறது. கொசுத் தொல்லையை சொல்ல முடியவில்லை. அது அண்ணா நகராக இருந்தாலும் சரி, ஏழைகள் வாழும் குடிசைப் பகுதியில் உள்ள அண்ணா நகராக இருந்தாலும் சரி, இரண்டு பகுதிகளிலேயும் இந்தக் கொசுத் தொல்லை மட்டும் குறைவதே இல்லை.

நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேம்பாட்டுக் குழு என்று ஆரம்பத்திலே ஒன்று போட்டார்கள். அதிலே எல்லோரையும் அழைத்து வைத்து பேசினார்கள், மாநகராட்சியில் சீர்திருத்தங்களை என்னென்ன செய்யலாம் என்று விவாதித்தார்கள். நாங்கள் கூட மிகவும் மகிழ்ந்தோம். முதலமைச்சரே தலைமை தாங்கி இந்தக் கூட்டத்தை நடத்துகிறாரே; முதலமைச்சரே இதில் அக்கறை செலுத்துகிறாரே ; அதனால் சென்னைக்கு இனி நல்ல காலம் விடிவு காலம் வந்து விட்டது என்று எண்ணினோம். ஆனால் விடிவு காலம் என்று நினைத்தோமே தவிர அது விடியவே இல்லை. இன்னும் மோசமாக சென்னையின் சுகாதார நிலைமை போய்க் கொண்டிருக்கிறது.

[திரு. எஸ், வேணுகோபால்] [1986 சனவரி 11

இப்போது 6 மாத காலம் கால நீடிப்பு வேண்டும் என்று சொல்லுகிறீர்கள். தயவுசெய்து அந்தக் காலத்திற்குள்ளாவது கட்டாயமாக தேர்தலை நடத்துங்கள். யார் வெற்றி பெறுகிறார்கள். யார் தோல்வி அடைகிறார்கள் என்பது பிரச்னை அல்ல. சென்னை நகர மக்களின் நலம் காக்கப்பட வேண்டும், வளம் காக்கப்பட வேண்டும், அவர்களின் சுகாதாரம் காக்கப்பட வேண்டும் என்பதுதான் பிரச்னையே தவிர, எந்தக் கட்சி வெற்றி பெறுகிறது, தோழமை கட்சி ஜெயிக்குமா என்பதெல்லாம் பிரச்னையே அல்ல.

ஏனென்று சொன்னால் சட்ட மன்ற உறுப்பினர்களாக இருக்கிற நாங்கள் காலையிலே எழுந்த உடனேயே, எங்களைப் பார்க்க வந்திருக்கும் மக்கள் தண்ணீர் சரியாக வருவதில்லை, கொசுத் தொல்லை அதிகமாக இருக்கிறது, சாக்கடை தேங்கி இருக்கிறது, சரியாக வேலை செய்யவில்லை, விளக்குகள் இல்லை, சாலை வசதி இல்லை என்று இப்படிப்பட்ட கோரிக்கைகளைத்தான் சொல்லுகிறார்கள். எனவே நாங்கள் நகராட்சிமன்ற உறுப்பினர்களின் பணியைதான் பார்க்கவேண்டிருக்கிறதே தவிர யாருக்கும் சட்டமன்ற உறுப்பினரின் பணியைப் பார்ப்பதற்கு நேரம் இல்லை. அப்படி இந்தப் பணிகளைப் பார்ப்பதே எங்களுக்கு அரிதாக இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்டிக் கொண்டு, இப்படிப்பட்ட பிரச்னையைத் தீர்க்க வேண்டும் என்றால், அதாவது இந்த 6 மாத காலத்திற்குள் ஓரளவாவது தீர்க்க வேண்டும் என்றால், இங்கே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களையெல்லாம் சேர்த்து ஒரு கமிட்டி போட்டு, சென்னை நகரத்தைச் சீராக்குவது எப்படி என்று விவாதித்து செய்தால்தான் அது சரியாக இருக்கும் என்று கூறி, 6 மாத காலம் கழித்தாவது கட்டாயம் தேர்தலை வையுங்கள் என்று கேட்டுக் கொண்டு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட திருத்த முன்வடிவை மேதகு ஆளுநர் அவர்கள் பிறப்பித்த அவசரச் சட்டத்தை ஒட்டி, சட்ட வடிவமாக ஆக்க வேண்டும் என்பதற்காக கொண்டு வரப்பட்டிருக்கிறது. 30—11—1985 முதல் 6 மாத காலத்திற்கு தனி அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என்பதற்காக சட்ட முன்வடிவாக இங்கே அறிமுகப்படுத்தப்படுகின்றது.

ஆகவே இந்தச் சட்டம் நிறைவேற்றப்படவில்லை என்றால், மாநகராட்சியை அறவே யார் கவனிப்பது என்ற நிலைதான் ஏற்பட்டுவிடும். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும் இருக்கமாட்டார்கள், தனி அதிகாரிகளும் இருக்க மாட்டார்கள். எனவே அது தனிக்காட்டு ராஜா என்ற நிலைமையில் போய்விடும். ஆகவேதான் 6 மாத காலத்திற்குள் தேர்தல் கொண்டு வரவேண்டும் என்ற கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்களும் எடுத்துதெரிவித்திருக்கிறார்கள்.



1986 சனவரி 11] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இப்போது முதலில் ஊராட்சி தேர்தல்கள், ஊராட்சி ஒன்றியத் தேர்தல்கள், நகராட்சி தேர்தல்கள் நடப்பதற்கு பிப்ரவரி திங்கள் 23 ஆம் தேதியை திட்டவட்டமாகவும் தெளிவாகவும் அறிவித்திருக்கிறார்கள். அது நடந்து முடிந்த உடனே நடைபெற வேண்டிய தேர்தல் மாநகராட்சி தேர்தல்களாகத்தான் இருக்கும். ஆகவே சென்னை மாநகராட்சி மன்றம், கோவை மாநகராட்சி மன்றம், மதுரை மாநகராட்சி மன்றம் ஆகியவற்றின் தேர்தல்கள் முறைப்படி நடைபெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதுபற்றிய அறிவிப்புகள் பின்னால் முறைப்படி அறிவிக்கப்படும் என்பதை எடுத்துச் சொல்லி இந்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி; "1986 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

### (ஆ) கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"1986-ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்". (குறுக்கீடுகள்)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் ஆய்வு நிலையில் தங்கள் கருத்துக்களை விரிவாகச் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே இதனுடைய தன்மையை ஏற்பது அல்லது மறுப்பது என்பதோடு உறுப்பினர்கள் நிறுத்தி விடுவது நல்லது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் தேவையென்று கருதி னால் அனுமதி வழங்கலாமென்று இருக்கிறது. இன்றைக்கு ஏழு பில்கள் இருக்கின்றன. ஆகவே இப்போது விரிவாகப் பேசுவது தேவையில்லை. கன்சிடரேஷனுக்கு வருகிறபோது விரிவாகப் பேசலாம். (குறுக்கீடு). உங்களுடைய அப்ஜெக்ஷனை ரெக்கார்ட் பண்ணிவிடலாம். நான்திரும்பவும் விதியைப் படிக்கிறேன்.

''விதி 130 (1)— ஒரு சட்ட முன்வடிவை அறிமுகப்படுத்த அனுமதி கோரும் தீர்மானம் எதிர்க்கப் பெற்றால், பேரவைத் தலைவர், தாம் தேவையெனக் கருதினால், அத் தீர்மானத்தை மொழியும் உறுப்பினரையும், எதிர்க்கும் உறுப்பினரையும் அவரவர் களது கருத்தைச் சுருக்கமாகக் கூற......'' என்று இருக்கிறது. ஆகவே நான் தேவையென்று கருதினால் தான். ஏழு பில்கள் இருப்பதால் தேவையில்லை, உட்காருங்கள்.

திரு ப. பொன்னுரங்கம் ; தேவையில்லையென்றால் பிறகு எதையும் பேச முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது ஆர்டினன்சை ரீப்ளேஸ் பண்ணுவது தான். (குறுக்கீடு) நீங்கள் சொல்லும் வழக்கம் என்பது வேறு. நான் விதியை பாலோ பண்ணுகிறேன்.

திரு ப. பொன்னுரங்கம் : அப்படியென்றால் அந்த ரூலை மாற்றிவிடுவோம்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாற்றுவோம். அதற்கு ரூல்ஸ் கமிட்டியில் எழுதிக் கொடுங்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர் களே, விதியில் தாங்கள் குறிப்பிட்டிருக்கிறபடி விவாதத்தில் ஈடுபடா காமல் மாண்புமிகு உறுப்பினர்கள் இருக்கிற சூழ்நிலையையும், நேரத்தையும் கருதி சுருக்கமாக தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்து விட்டு அமர்வது நல்லது. கன்சிடரேஷன் போது விரிவாகப் பேச லாம்.

(முற்பகல் 11–10)

திரு கு. ரமணி : தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் சென்னை மாநகராட்சிக்கு வந்ததைப் பற்றி மதிப்பிற்குரிய அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். கோவை மாநகராட்சி யின் நிலைமை மிகவும் மோசமானது. அதனுடைய கண்டிஷன் பற்றிச் சொல்லவில்லை. இந்த மாநகராட்சி உண்டான பிறகு, தேர்தலே நடக்காத இடம் அது. தமிழ்நாட்டிலே இருக்கிற சென்னை மாநகராட்சிக்கோ, அல்லது மதுரை மாநகராட்சிக்கோ அப்படி இல்லை. ஏற்கனவே 10 வருடங்கள் கவுன்சில் இல்லா மல் இருந்த முனிசிபாலிட்டி, 1981-லே சட்டம் கொண்டு வந்து.





அது 1985 டிசம்பரிலே காலாவதி ஆகிவிட்டது. 5 வருட கால மாக தனி அதிகாரிகளுடைய ஆட்சிதான் அங்கே நடந்து கொண்டு இருக்கிறது. மறுபடியும் அதை மேலும் 6 மாத காலத் திற்குத் தள்ளி வைப்பது என்பது உண்மையாகவே, நாம் ஜனநாய கத்திற்குச் செய்யக்கூடிய சர்வீஸ் அல்ல. நேற்றைய தினம் நாம் சட்டங்களை பாஸ் செய்தோம். 3 வருட அவகாசம் போதும் என்று சொன்னோம். துரிதமாக, நல்ல முறையில் செயல்படுவ தற்குக் குறுகிய காலம் தான் சரியானது என்று சொன்னோம். உண்மையிலே அந்த வாதத்தை ஏற்றுக்கொள்ளவில்லை நாம். ஆகையினாலே அப்படிச் சொன்ன அந்தக் காரணத்தாலே நான் கேட்க விரும்புகிறேன். 5 வருட காலம் முடிந்த பிறகும் தேர்தலை வைக்காமல், இந்தத் தனி அதிகாரிகளுடைய காலத்தை மேலும் நீட்டித்துக்கொண்டே போவது என்பதற்கு, ஜனநாயக முறை யிலே என்ன விளக்கத்தை நீங்கள் கொடுக்க முடியும்? எந்த விளக் கமும் கொடுக்க முடியாது. அதனால்தான் எங்களைப் பொறுத்த வரையிலும் சொல்கிறோம், இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து மேலும் 6 மாத காலத்திற்கு தனி அதிகாரிகளுடைய பதவியை நீட்டிப்பது சரியல்ல. தேர்தல் நடத்துவதற்கு அவர்கள் தயாரிப்பு வேலைகளைச் செய்யவேண்டும் என்றுதான் முன்பு கொடுக்கப் பட்டது. அந்தக் கடமையை, இன்றைக்கு வரையிலும் அவர்கள் நிறைவேற்றவில்லை. அந்த மக்களுக்கும் சேவை செய்ய முடிய வில்லை. இன்றைக்குச் சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற நாங்கள்தான் கவுன்சிலர்களைப் போல, முனிசிபாலிட்டி கவுன்சிலர்களைப் போல, வேலை செய்யவேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. சட்டமன்றப் பணியையும், அந்தப் பணியையும் எப்படி எங்களால் சேர்ந்து செய்ய முடியும்? இப்படி இருந்தால் அரசாங்கத்திற்கு எப்படித் திருப்தி ஏற்படும். எனவே தேர்ந்தெடுக் கப்பட்ட கவுன்சிலர்கள் இருந்தால் அங்குள்ள மக்களுக்கு திருப்தி ஏற்படும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதைத் தான் நாம் பார்க்க வேண்டும். எனவே இப்படிச் செய் வது ஜனநாயகத்திற்கு நியாயம் அல்ல, முறையல்ல, சரியானது அல்ல என்ற இந்த ஆட்சேபணையைக் கிளப்பி, இந்தச் சட்டத்தை அறிமுகப்படுத்தாமல், நீங்கள் தேர்தலுக்குத் தேதியை அறிவிக்க வேண்டும் என்று கேட்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1986-ஆம் ஆண்டு கோயம்புத்தூர் மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று; நிறைவேற் றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

**(இ) மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு, 1986.**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

*"1986-ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".*

**திரு எ. தெய்வநாயகம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்று மதுரை மாநகராட்சி தனி அதிகாரிகளுடைய பதவிக் காலத்தை நீட்டிப்பதை நான் ஆட்சேபனை செய்கிறேன். காரணம் என்னவென்றால், இன்று மதுரை மாநகராட்சியிலே பலதரப்பட்ட சாலை வசதி, மின்சார வசதி, குடிநீர் வசதி போன்றவைகள் எல்லாம் செய்யப்படாமல் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அறிமுக நிலையிலே பேசும்போது சுருக்கமாகப் பேச வேண்டும். ஆய்வு நிலையிலே நீங்கள் விரிவாகப் பேசலாம்.

**திரு எ. தெய்வநாயகம் ;** எனவே இப்படிப்பட்ட பிரச்சனையில் கவனம் செலுத்துவதற்கு அதிகாரிகள் சுணக்கம் காட்டுகிறார்கள். இன்று பலதரப்பட்ட அதிகாரிகள் அங்கே தனி அதிகாரிகளாக நியமிக்கப்பட்டு இவர்களின்கீழ் பல வருடங்களாக பணி புரிந்துகொண்டு, அந்தப் பதவிகளை ஆக்கிரமித்துக் கொண்டு, 3 வருட காலம் தானே பதவி வகிக்கவேண்டும் என்ற ஒரு இக்கட்டான சூழ்நிலையை அவர்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, அதிகார துஷ்பிரயோகம் செய்துகொண்டு இருக்கிறார்கள். மக்களுடைய எண்ணங்களை அவர்கள் பிரதிபலிப்பதாகத் தெரியவில்லை. எனவே உண்மையாக மக்களுக்குச் சேவை செய்வதற்கும், நல்ல செயல்திறனை வெளிக்காட்டுவதற்கும், நீங்கள் தேர்தலைச் சந்திக்க ஒரு நல்ல சந்தர்ப்பத்தை விரைவிலே ஏற்படுத்தித் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை நீட்டித்துக் கொடுத்து, அவர்களை ஊக்குவிக்கவேண்டாம் என்ற கோரிக்கையை விடுத்து, இந்தச் சட்ட முன்வடிவை நான் எதிர்க்கிறேன்.





**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்
களே, மதுரை மாநகராட்சி தனி அதிகாரிகள் நியமனம் செய்வதற்கு
உள்ள சட்ட முன்வடிவை ஏற்கனவே சென்ற சட்டமன்றக்
கூட்டத்திலே கொண்டுவரப்பட்ட நேரத்திலே, அது சரியல்ல,
தேர்தலை உடனடியாக நடத்துவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்,
காரணம் மக்களுடைய பல பிரச்சனைகள் தீர்க்கப்படாமல்
இருக்கின்றன என்று சொல்லி, அதற்கு ஒரு சில எடுத்துக் காட்டு
களைக் கூட அந்த நேரத்திலே சுட்டிக் காட்டினோம். அந்த ஒரு
வருட காலம் கடந்த பிறகும் அந்த பிரச்சினைகள் தீர்க்கப்படாமல்
இன்றும் அப்படியே இருக்கின்றன. இப்படிப்பட்ட நிலை ஏன் ஏற்
படுகிறது என்றால் தனி அதிகாரிகளைப் பொறுத்தவரையில் மக்க
ளுடைய பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும் என்றோ அவர்களுக்கு
மரியாதை கொடுக்கவேண்டும் என்றோ அந்த எண்ணம் இல்லா
மல் இருக்கிறார்கள். என்ன என்ன முறையில் நடவடிக்கை
எடுக்கவேண்டுமோ அந்த முறையில் நடவடிக்கை எடுக்கப்படாமல்
இருந்து கொண்டு இருக்கிறது. இப்படி மக்களுடைய பிரச்
சினையைத் தீர்க்காமல் இருக்கிற போக்கை நிச்சயமாக அனுமதிப்
பது ஜனநாயக மரபு அல்ல. ஆகவே, எவ்வளவு விரைவில்
தேர்தலை நடத்த முடியுமோ அதற்கான நடவடிக்கைகளை
தாங்கள் எடுத்துக்கொள்ளவேண்டும். ஆனால் இந்தச் சட்டம்
அதற்கான வழியைச் செய்யவில்லை என்ற காரணத்தால் இந்தச்
சட்டத்தை இன்று அறிமுகப்படுத்தி அதை நிறைவேற்றுவதற்கு
அரசு எடுத்துக்கொள்ளக் கூடிய நடவடிக்கை சரியல்ல. ஆகவே
அதை வாபஸ் பெற்று தேர்தலை நடத்துவதற்கு நடவடிக்கை
எடுக்கவேண்டும் என்று கேட்டு இந்தச் சட்டத்தை அறிமுக
நிலையிலேயே எதிர்க்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி :

*"1986-ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".*

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** இச் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

**(ஈ) நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்த சட்ட முன்வடிவு, 1986.**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1986 சனவரி 11

"தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(உ) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்."

திரு ப. பொன்னுரங்கம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2 ஆர்டினன்ஸ் வருகிற ஆக்ட். இது. பஞ்சாயத்து யூனியன், பஞ்சாயத்து போர்டு ஆக 2 ஆர்டினன்ஸ் கள் வந்து இருக்கின்றன. ஒரு ஆர்டினன்ஸுக்கு இன்னொரு ஆர்டினன்ஸ் வருகிறது. ஏற்கனவே முதல் ஆர்டினன்ஸுக்கு நான் டிஸ் அப்ரூவல் நோட்டீஸ் கொடுத்து அது லிஸ்டில் வந்து இருக் கிறது. நான் 2-வது ஆர்டினன்ஸீக்கும் டிஸ் அப்ரூவல் கொடுத்து இருக்கிறேன். அது இன்னும் வரவில்லை. அப்படி வராமல் மூவ் ஆகிறது. இது என்ன முறை? அப்படி மூவ் செய்யலாமா? அது சரியா? 2 ஆர்டினன்ஸ் மேலே டிஸ் அப்ரூவல் கொடுத்து இருக்கிறேன். ஒன்று தான் எடுத்து இருக்கிறார்கள். இன்னும் ஒன்று என்ன ஆனது?

திரு அ. ரகுமான்கான் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பில் பற்றி நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள் சொல்லவில்லை. அவர் 2 ஆர்டி னன்ஸுக்கும் டிஸ் அப்ரூவல் நோட்டீஸ் கொடுத்து இருக்கிறார். முதலாவது டிஸ் அப்ரூவல் நோட்டீஸ் லிஸ்ட்டில் வருகிறபோது அடுத்ததற்கு தான் கொடுத்த இன்னொரு டிஸ் அப்ரூவல் நோட்டீஸ் அவருக்கு வரவில்லை. அதைப் போடாமல் விட்டு விட்டார்கள் அதைத்தான் அவர் தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறார்.



1986 சனவரி 11]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(ஊ) ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (தனி அதிகாரிகள் நியமித்தல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

(முற்பகல் 11-20)

(எ) ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

[1986 சனவரி 11

(ஏ) மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1986.

மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

திரு ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இது மார்க்கட்டிங் கார்ப்பரேஷனுக்கு, ஆக்ஷன், ஏலம் விட்டதை மூன்று மாதம் அடிஷனலாக டைம் தந்து வந்திருக்கக் கூடியது. அதில் பல முறைகேடுகள் நடந்திருக்கின்றன. ஏற்கனவே ஏலம் எடுத்தவர்களே அதை நடத்தினார்களா, இல்லை......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதையெல்லாம் கன்சிடரேசன் ஸ்டேஜிலே பேசுங்கள்.

திரு ப. பொன்னுரங்கம் : எதற்கு அப்போஸ் பண்ணுகிறேன் என்பதற்காகச் சொல்கிறேன்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இன்ட்ரொடக்ஷன் ஆப் தி பில்-இல் இது வேண்டாம். கன்சிடரேஷனிலே, டிடெயிலாக, விரிவான விவாதமாக வைத்துக்கொள்ளலாம்.

திரு ப. பொன்னுரங்கம் : கன்சிடரேஷனுக்கே போகவில்லை, ஏற்கனவே இருந்த சட்டத்திற்கு இது விரோதமானது. ஏற்கனவே இருந்த சட்டம் என்ன? நாம் போட்ட சட்டம் என்ன? ஒரு குறிப்பிட்ட நாளிலிருந்து லைசென்ஸ். அப்படி குறிப் பிட்ட நாளிலிருந்து லைசென்சு என்று சொல்லிவிட்டு, அதற்கு மாறாக, ஆக்ஷனையே ஏலத்தையே கன்டினியூ பண்ணுகிறோம் என்றால் அது முறைகேடு. தங்கள் இஷ்டப்படி நடந்துகொள்வது, அதற்கு ஒரு ஆர்டினன்ஸ் போட்டு, அதற்கு பிறகு பில்லைக் கொண்டுவருவது என்பது சட்டத்திற்கு விரோதமானது, முரணானது. அதனால் எதிர்க் கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"1986 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.



1986 சனவரி 11]

மாண்புமிகு திரு வி. வி. சுவாமிநாதன் : இச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்—(தொடர்ச்சி).

* திரு தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரைக்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. சின்னராசு அவர்கள் கொண்டுவந்திருக்கிற நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

ஆளுநர் உரையில் தமிழக அரசினுடைய சாதனைகளை வெளியிட்டும், அரசினுடைய புதிய திட்டங்களும், அறிவிப்பு களும் எடுத்துரைக்கப்பட்டும் இருக்கின்றன. தமிழக அரசின் முன்னோடித் திட்டங்கள், தேசிய முன் மாதிரித் திட்டங்களாகப் போற்றப்படுகிற வகையில் அறிவிக்கப்பட்டு, மக்கள் நலனிலே அக்கறை கொண்ட அரசு இது என்று சொல்கிற அளவுக்கு உரை அமைந்திருக்கிறது.

அடித்தளத்திலே இருக்கின்ற ஏழை எளிய மக்களின் வாழ் வினை உயர்த்துகின்ற வகையில் ஆளுநர் உரையில் பல அருமை யான திட்டங்கள் கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கின்றன. திட்டப் பணிகளை ஆக்கபூர்வமாகவும், செம்மையாகவும் நிறைவேற்றி எல்லா இலக்குகளையும் எய்தி வருகிறது என்பதையும், பெருமையோடு தமிழ்நாட்டுக்கு இந்த மதிப்பை அளித்த பெருமை இந்த அரசுக்கு உண்டு என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இருபது அம்ச திட்டத்தைச் சிறப்பாக செயல்படுத்துகின்ற மாநிலங்களில் இந்தியாவிலேயே தமிழகமும், மகாராஷ்டிரமும் தான் இருக்கின்றன என்பதை எடுத்துச் சொல்லி இருப்பதைப் பார்க்கும்போதும், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை இந்தியா விலேயே சிறப்பாகவும், செம்மையாகவும் செயல்படுத்துகின்ற அரசு தமிழக அரசு என்பதற்கு தேசிய விருதாக 2.5 கோடி ரூபாயைப் பெற இருக்கின்றது என்பதைப் பார்க்கும்போதும் இந்த நற்சான்றுகளே போதும், இந்த அரசு மிகச் சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதற்கு.

புரட்சித் தலைவர் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு பல புரட்சிகரமான திட்டங்களை அறிவித்து இன்றைக்குச் செயல் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவைகள் எல்லாம் தமிழகத் திலே வாழ்கின்ற அடித்தள மக்களுக்கு வாழ்க்கைப் பிரச்சினைக்கு வழிகாட்டுகின்ற வகையில் அமைந்து இருக்கின்றன என்பதை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

அந்த வகையிலே தான் இன்றைக்கும் நலிந்த பிரிவினருக்கு வீட்டு வசதி செய்து தருகின்ற திட்டமும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. வீடில்லாதவர்களுக்கு வீடுகளை அளிக்கின்ற புரட்சிகரமான திட்டத்தை இந்த அரசு அறிமுகப்படுத்தி இருக்கின்றது.

மூன்றாண்டுக் காலத்தில் 30 இலட்சம் மக்கள் வீட்டு வசதி பெறுகின்ற நல் வாய்ப்பினை இந்த அரசு செய்திருக்கின்றது.

நேற்றைய தினம் பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் சகோதரர் பொன். முத்துராமலிங்கம் அவர்கள் கூடச் சொன்னார்கள். இது மக்களை ஏமாற்றுகின்ற ஒரு கவர்ச்சியான திட்டம் என்று சொன்னார்கள். நான் அவருக்குப் பணிவோடு தெரிவிக்க விரும்புகிறேன். இது ஏமாற்றுகின்ற திட்டம் அல்ல. ஏழை மக்களுடைய வாழ்வுக்கு ஏற்றம் அளிக்கின்ற திட்டம். கவர்ச்சியான திட்டம் என்று சொன்னார்கள். ஆமாம், கவர்ச்சியான திட்டம் தான்.

இன்றைக்கு வீடில்லாமல் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிற அந்த ஏழை எளியவர்களுடைய மனங்களைக் கவருகின்ற திட்டம் தான் இந்தத் திட்டம். இது கவர்ச்சியான திட்டம் தான். புரட்சித் தலைவர் அவர்கள் செயல்படுத்துகின்ற எந்தத் திட்டமானாலும், அவர்கள் அதை முழுமையாக ஏற்றுக்கொள்வதில்லை என்பதை நாம் அறிவோம்.

புரட்சித் தலைவர் அவர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் அறிவித்த திட்டங்கள், எவ்வளவு கவர்ச்சிகரமான திட்டங்களாக அறிவித்திருந்தாலும்கூட, அவை புரட்சிகரமாக செயலாற்றுகின்ற திட்டங்களாக இருக்கின்றன என்பதை நீங்கள் தயவு செய்து மறந்துவிடக் கூடாது.

தன்னிறைவுத் திட்டத்தை முதன் முதலாக புரட்சித் தலைவர் அவர்கள் அறிவித்தபோது, தமிழகத்திலே மக்களுடைய அடிப்படைத் தேவைகளை மூன்று ஆண்டுகாலத்திற்குள்ளாகச் செய்வோம் என்று சொன்னார்கள். அப்போது அவர்கள் கேலி பேசினார்கள். மூன்று ஆண்டுகளுக்குள்ளாக அடிப்படைத் தேவைகளை எப்படி நிறைவேற்றமுடியும் என்று கேலி பேசினார்கள்.

இன்றைக்கு நிரந்தரமான வேலைவாய்ப்பு, சாலை வசதி, கட்டிட வசதிகளைச் சிறப்பாக இந்த அரசு செய்து முடித்திருக்கிறது.

தமிழகம் முழுவதும் நியாய விலைக் கடைகளைத் திறப்பது என்று சொன்னபோது, அது எப்படி முடியுமென்று கேட்டார்கள். தமிழகம் முழுவதும் 18,000-க்கும் அதிகமான





நியாய விலைக் கடைகளைத் திறந்து, தமிழகத்தில் வறட்சி ஏற்பட்டாலும், அல்லது வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டாலும் நாட்டில் விலைவாசிகளை கட்டுப்படுத்துகின்ற சக்தி இந்த நியாய விலைக் கடைகளுக்கு உண்டு என்ற வகையில், மக்களுக்கு மலிவு விலையிலே உணவுப் பண்டங்களை அளிக்கும் இந்தத் திட்டத்தை அவர்கள் எப்படி ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள் என்பது எனக்குப் புரியவில்லை.

அத்தோடு, இந்த அரசு ஏழை விவசாயிகளின் கடனைத் தள்ளுபடி செய்வோம் என்று சொன்னபோது கேலி பேசினார்கள்.

சத்துணவுத் திட்டத்தைப் பொறுத்தவரையில், இன்றைக்கு இந்தியாவிலே வேறு எந்த மாநிலமும் நிறைவேற்றாத திட்டத்தை இந்த அரசு செய்து வருகிறது என்று பார்க்கிறபோது, ஏழைகளுக்கு வீடு கட்டிக் கொடுக்கின்ற திட்டத்தையும், அவர்கள் ஏற்றுக்கொள்கிறார்களோ, இல்லையோ நாட்டு மக்கள் வரவேற்கிறார்கள் என்பதை அவர்களுக்கு நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில், இந்த அரசு நகராட்சி, ஊராட்சிமன்றத் தேர்தலைப் பார்த்து பயப்படுகின்றது, தேர்தலுக்கு அஞ்சுகின்றது, அதனால் தான் தேர்தலை நடத்துவதற்கு இந்த அரசு பின்வாங்கி தாமதப்படுத்துகிறது என்றெல்லாம் சொன்னார்கள். அவர்களுக்கு நான் ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன், அண்ணாவின் லட்சியங்களைக் கட்டிக் காப்பதற்காக, தமிழகத்திலே வாழ்கின்ற மக்கள், இது ஒரு சிறப்பான ஆட்சி என்று போற்றுகின்ற அளவுக்கு, இந்த ஆட்சி அந்த பெருமைகளை நிலைநாட்டுகிற அளவுக்கு, குறிப்பிட்டுக் காட்டுகின்ற அளவுக்கு, நடந்து முடிந்தது தான் சமீபத்து செய்யாறு இடைத் தேர்தலாகும். இந்த அரசைப் பொறுத்தவரையில், பொதுத் தேர்தலாக இருந்தாலும், இடைத் தேர்தலாக இருந்தாலும் வெற்றி ஒன்று தான் என்பதை ஞாபகப்படுத்த கடமைப் பட்டிருக்கிறேன்.

இந்த அரசைப் பார்த்து, தேர்தலுக்கு அஞ்சுகிறார்கள் என்று சொன்னால், அதில் ஏதாவது அர்த்தம் இருக்கவேண்டாமா என்று எதிர்க் கட்சிகளைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அரசு ஒரு காரியத்தைச் செய்கின்றபோது தயவு செய்து, அதற்குத் தடையாக இருக்காதீர்கள். இந்த அரசினுடைய சாதனைக்கு சிறப்பான எடுத்துக் காட்டு தான் இந்தத் தேர்தல்.

எந்தத் திட்டமாக இருந்தாலும், சொல்லியதைச் செய்கின்ற புரட்சித் தலைவர் அரசு சிறப்பாக செய்து முடிக்கும் என்பதை நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். எதிர்க்

கட்சிகள் ஆயிரம் பிரச்சினைகளை உருவாக்கினாலும், வல்முறைகளைத் தூண்டிவிட்டு மக்களை பலியாக்கினாலும், அரசு இயந்திரங்களை இயங்கவிடாமல் நிறுத்தி வைப்பதற்கு முயற்சிகளை எடுத்துக்கொண்டாலும், மாணவர்களின் படிப்பு கெடுவதற்கு உறுதுணையாக இருந்தாலும், மக்கள் நிலைமைகளை நன்கு புரிந்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆட்சியில் இருப்பவர்களில் சிறப்பாக யார் இருக்கிறார்கள், யாருடைய அரசு நல்ல அரசு என்பதைப் புரிந்து வைத்திருக்கிற காரணத்தால், தேர்தலில் புரட்சித் தலைவருக்குப் பக்க பலமாக, சிறப்பாக இருந்து, இந்த அரசினுடைய உழைப்புக்கும், அதனுடைய சாதனைகளுக்கும் சான்றிதழ் தந்திருக்கிறார்கள்.

என்னைப் பொறுத்தவரையில், ஆசிரியர்கள் பிரச்சினை, மாணவர்கள் பிரச்சினை, தலைமைச் செயலக ஊழியர்கள் பிரச்சினை, இந்த அரசின் மீது பழி போடுகின்ற வழக்குகள் என்று இப்படிப்பட்ட பிரச்சினைகள் ஏற்பட்டாலும் இந்த அரசு வெற்றிகளைப் பெற்றிருக்கிறது என்று சொன்னால், 'நீதியின் வாழ்வுதனை சூது கவ்வும், ஆனால் இறுதியில் நீதியே வெல்லும்' என்பதற்கிணங்க, தேர்தல்களில் புரட்சித் தலைவர் அரசு வெற்றி பெற்றுக்கொண்டிருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆளுநர் உரையிலே மின் உற்பத்தி பற்றி மிகச் சிறப்பாக எடுத்து வைக்கப்பட்டிருக்கிறது. தொழிற்சாலைகளிலே உற்பத்தியை அதிகரிப்பதாக இருந்தாலும், விவசாய உற்பத்தியை அதிகரிப்பதாக இருந்தாலும், அவைகளுக்கெல்லாம் அடிப்படைத் தேவை மின் சக்தி.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், மொத்தத் திட்டச் செலவான ரூ. 5,750 கோடியில், மின்சக்தி வளர்ச்சிக்கு மட்டும் ரூ. 2,000 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

சென்ற ஆண்டு அனல் மின் உற்பத்தி நிலையங்களில் உற்பத்தித் திறனை அதிகப்படுத்தி இருப்பது ஒரு சாதனையாகும்.

(முற்பகல் 11-30)

இன்றைக்கு தமிழகம் மின் உற்பத்தியிலே தன்னிறைவு பெற்ற மாநிலமாக விளங்கவேண்டுமென்றால், அனல் மின் நிலையங்களைப் புதிதாக உருவாக்குவதற்காக மைய அரசிடம் அனுமதி கேட்டிருப்பதை அவர்கள் துரிதமாக வழங்க ஏற்பாடு செய்து அந்தத் திட்டங்களை விரைவாகச் செயல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





கல்வித் துறையைப் பொறுத்தவரையில், அரசு சிறப்பான அக்கறை எடுத்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. தொழில் கல்வியைப் பொறுத்தவரையில் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து தொழில்கல்வியை உயர்த்துகின்ற முறையிலே நடவடிக்கை எடுத்து வருகிறது. எடுத்துக்காட்டாகச் சொல்ல வேண்டுமானால், 1983–84ஆம் ஆண்டிலே வாழ்க்கைக் கல்வி நிலையங்கள், அதாவது பாதிக்குமேலாக தமிழ்நாட்டிலே இருந்தன என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதைப் போலவே 1985–86 ஆம் ஆண்டிலே பள்ளிக் கட்டடங்களைக் கட்டுவதற்காக 1½ கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. நான் இந்த நேரத்திலே அரசைப் பணிவோடு கேட்டுக்கொள்வது, தன்னிறைவுத் திட்டத்தின் மூலமாக அரசு தொடக்கப் பள்ளிக் கட்டடங்களை நாடு முழுவதும் கட்டி முடித்திருக்கிறது. அதைப் போல உயர்நிலைப் பள்ளிகள், மேல் நிலைப் பள்ளிகளுக்கான கட்டடங்களையும் கட்ட நடவடிக்கை எடுத்தால் அந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வித் துறையை மாநிலப் பட்டியலிலிருந்து மைய அரசினுடைய பொதுப் பட்டியலுக்கு கொண்டு சென்று இருக்கிறார்கள். அது மாநில அரசின் உரிமையைப் பாதிக்கின்ற அளவுக்கு இருக்கிறது. அது மாநில அரசின் கொள்கைக்கேற்ப, கோட்பாட்டிற்கேற்ப இயங்காமல் தடை செய்வதாக இருக்கிறது. கல்வித் துறையில் மைய அரசு மாநிலங்களிலே முன்மாதிரிப் பள்ளிகளை உருவாக்குவதன் மூலமாக இந்த அரசின் இருமொழிக் கொள்கையைப் பாதிக்கும் நிலைமை உருவாகுமானால், பல விபரீதமான நிலைமைகள் உருவாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஊரக வளர்ச்சித் திட்டத்திற்கு ஆண்டுக்காண்டு அதிகமான நிதியை ஒதுக்கி இந்த அரசு செயல்பட்டு வருகிறது. ஆனால் தேசிய வேலைவாய்ப்புத் திட்டம், தேசிய ஊரக வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றிற்கு மைய அரசு ஒதுக்குகின்ற நிதியை ஆண்டுக்காண்டு குறைத்துக் கொண்டே வருகிறது. மைய அரசின் திட்டங்களையெல்லாம் சிறப்பாகச் செயல்படுத்துகின்ற இந்த அரசுக்கு அதிகமான நிதியை மைய அரசு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கிராமப்புறங்களிலே குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக 1985-86 ஆம் ஆண்டிலே 24 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. 7-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 10 ஆயிரம் குடியிருப்புகளுக்கு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டும் சிறப்பான பணி பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. கிராமப்புறங்களிலே குடிநீர் கேட்டகரி வஸ் கொடுக்கும்முறை பின்பற்றப்பட்டது. அந்த முறை பின்பற்றப்பட்ட

தால் பல கிராமங்களிலே பல காரணங்களால் பின்தள்ளப்பட் டுள்ள நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அந்த கேட்டகரி முறையை மாற்றி கிராமங்களுக்கு குடிநீர் வழங்குகின்ற முறையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து விவசாயிகளின் பிரச்சினை. பல சிறப்பான நடவடிக் கைகளை எடுத்து நம்முடைய அரசு செயல்பட்டுக் கொண்டிருக் கிறது. விவசாய உற்பத்தியை அதிகப்படுத்தவேண்டுமென்பதில் தனி அக்கறை எடுத்துக்கொள்ளப்பட்டு இருக்கிறது. விவசாயி களுக்குப் பல நன்மைகளை இந்த அரசு செய்திருக்கிறது என்பதை யாரும் மறந்துவிட முடியாது. 200 கோடி ரூபாய்க்கு மேலாக அவர்களுடைய கடன்களுக்காக வட்டியையும், அபராத வட்டி யையும் தள்ளுபடி செய்திருக்கிறது. இலவசமாக அவர்களுக்கு மின்சாரம் அளித்திருக்கிறது. இருந்தாலும்கூட விவசாயப் பெருங்குடி மக்கள் இந்த அரசிடம் மேலும் சலுகைகளை எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். உழைப்பையே மூலதனமாக வைத்து வருடத்திற்கு 365 நாட்களும் அவர்கள் பாடுபட்டு வரு றொர்கள். வருடத்திற்கு 200 நாட்கள் கூட ஒழுங்காக வேலை செய்யாதவர்களுக்கு ஆண்டுக்காண்டு ஊதிய உயர்வும் அக விலைப்படி உயர்வும் பெறுகிறபோது வருடத்திற்கு 365 நாட் களும் உழைக்கிற அவர்கள் இன்னும் சலுகைகளை எதிர்பார்ப்ப கிலே தவறில்லை. அவர்கள் உற்பத்தி செய்கிற நெல்லுக்கும், கரும்புக்கும் விலையை உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த ஆண்டு கரும்புக்கு 190 ரூபாய் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நம்முடைய மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சரவர்கள் கூட காலையிலே சொன்னார்கள், மறு பரிசீலனை செய்வேன் என்று. நான் பணிவோடு அவர்களிடத்திலே கேட்டுக்கொள் கிறேன், இன்றைக்கு விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு இரட்டிப்பு மடங்கு செலவு அதிகரித்திருக்கிறது. உதாரணத் திற்குச் சொல்ல வேண்டுமென்றால், ஒரு டன் வெட்டுவதற்குக் கூலி சென்ற ஆண்டு 15 ரூபாய்; ஆனால் இந்த ஆண்டு 27 ரூபா யாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இப்படி விவசாய உற்பத்திக்கு இரட்டிப்புச் செலவு ஏற்படுகின்றபொழுது, உற்பத்தி செய்யும் பொருட்களுக்கான விலையை உயர்த்திக் கொடுப்பதில் எந்தவித மான தவறும் இல்லை. இன்றைக்கு விவசாயப் பெருங்குடி மக்கள் இந்த அரசை நம்பியிருப்பவர்கள், அவர்கள் இந்த அரசுக்கு நன்றிக் கடன் பட்டிருக்கும் நேரத்தில், கரும்புக்கு அதிக விலையைத் தரவேண்டுமென்று மிகவும் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அரசினுடைய நிர்வாகத்தைச் சிறப்பாகச் செய்யும் வகையில் பெரிய மாவட்டங்களை இரண்டாகப் பிரிக்கின்ற நல்ல காரியத் தைத் தமிழக அரசு தொடர்ந்து செய்து வருகிறது. நடப்பாண்





டில் வட ஆர்க்காடு மாவட்டதை இரண்டாகப் பிரிக்கக் கருதப் பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. வட ஆர்க்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்றால், தற் போது நிர்வாக வசதிக்காக வட வேலூர், தென் வேலூர் என்ற முறையில் செயல்பட்டுக்கொண்டிருப்பது போல பிரிக்கப்பட வேண்டும். இல்லையென்றால் இராமநாதபுரம் மாவட்டம் எப்படி மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டதோ அதைப் போல பெரிய மாவட்டமாகிய வடார்க்காடு மாவட்டத்தை, திருப்பத் தூரைத் தலைமையிடமாகக் கொண்ட இன்னொரு பகுதியாகப் பிரிக்க வேண்டுமென்று அரசைப் பணிவோடு கேட்டுக்கொள் கிறேன்.

ஆளுநர் அவர்களின் உரை மிகச் சிறப்பாக, ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துகின்ற அளவிற்கு இந்த அரசின் சாதனைகளை எடுத்துச் சொல்லும் வகையில் அமைந் திருக்கிறது என்று சொல்லி, அதற்காக என்னுடைய பாராட்டை யும், நன்றியையும் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

*திரு டி. தீர்த்தகிரி கவுண்டர்: மாண்புமிகு சட்டப்பேரவை யின் துணைச் சபாநாயகரவர்களே, இன்றைக்கு மேன்மை மிக்க தமிழக ஆளுநர் அவர்களின் உரையின்மீது நான் சார்ந்திருக்கக் கூடிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். ஆளுநர் அவர்களின் உரையிலே, நடப்பாண்டுக்கான பல திட்ட வேலைகளையும், கொள்கை களையும் அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். தமிழ் நாட்டிலே 5 இலட்சம் வீடுகள் ஆதி திராவிடர்கள், பழங்குடி மக்கள், நரிக்குறவர் ஆகியோருக்கும், 5 இலட்சம் வீடுகள் வறுமைக் கோட்டிற்குக் கீழே அவதியுறும் ஏனைய குடும்பங் களுக்கும் அடுத்த நிதியாண்டிலே கட்டி முடிப்பதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்ற நல்ல அறிவிப்பை நாங்கள் உண்மையிலேயே வரவேற்கிறோம்.

அதைப்போல, கல்விக்கும் மற்ற வளர்ச்சித் திட்டங்களுக்கும் அவர்கள் தெரிவித்திருக்கின்ற கருத்துக்களைப் பொறுத்த வரையில் நாங்கள் அப்படிப்பட்ட நிலைகளை வரவேற்கிறோம். ஆனாலும் தமிழ்நாட்டிலே இன்றைக்கு உணவு உற்பத்தி எவ்வளவுதான் பெருகியிருக்கிறது என்று சொன்னாலும், மத்திய சர்க்காரிடத்திலேயிருந்து நவம்பர், டிசம்பர் மாதங்களில் 50,000 டன் அரிசியை ஒதுக்க வேண்டுமென்று நம்முடைய மாநில சர்க்கார் கேட்டு, அதற்கு மத்திய சர்க்காரும் ஒதுக்கி கொடுத்துக்கொண்டிருக்கிறது.

இன்றைக்கு ஆளுங்கட்சியைச் சேர்ந்த நண்பர்களெல்லாம் மத்திய சர்க்காரின் மீது, சென்ற இரண்டு மூன்று நாட்களாக நடைபெற்ற கருத்துரையிலே, மத்திய சர்க்கார் ஏதோ நிதி

வழங்குவதிலே பாதிப்பு ஏற்பட்டிருப்பதாகவும், நிதி வழங்குவதில் தங்களுக்குக் குறைந்த நிதிதான் கிடைப்பதாகவும், அபிவிருத்தித் திட்டங்களுக்கெல்லாம் நிதி ஒதுக்கீடு குறைந்திருப்பதாகவும் கூறினார்கள்—குறிப்பாக ஆளுங்கட்சியைச் சார்ந்த திரு. சின்னராசு அவர்கள் குறிப்பிட்டார்கள்.

(முற்பகல் 11-40)

இன்றைக்கு மத்திய சர்க்கார் பல திட்டங்களுக்கு, ஏராளமாக நிதி ஒதுக்கிக் கொடுக்கிறது என்பது, ஊரக வளர்ச்சித் திட்டம், ஐ.ஆர்.டி.பி., என்.ஆர்.டி.பி., ஆர்.எல்.இ.ஜி.பி., போன்ற திட்டங்களுக்கெல்லாம் மத்திய சர்க்கார் 75 சதவீதத்தை — பல கோடிக்கணக்கான ரூபாய்களை ஒதுக்கிக் கொடுத்து, இந்த மாகாண சர்க்காருக்குத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான பொறுப்பைக் கொடுத்திருக்கிறார்கள். ஆளுங்கட்சி நண்பர்களெல்லாம் — தற்பொழுது பேசிய நண்பர் அன்பழகன் அவர்கள்கூட ஊரக வளர்ச்சித் திட்டத்தை மாநில சர்க்கார் நிறைவேற்றுவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இது மாநில மத்திய சர்க்கார்களின் கூட்டமைப்பாக இருக்கிறது என்பதையும், குறிப்பாக மத்திய அரசின் திட்டங்கள் அகில இந்திய ரீதியிலே நிறைவேற்றப்படுகின்ற பொழுது ஒவ்வொரு மாநிலத்திற்கும் அதற்காக எந்த அளவுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் இந்த மன்றம் உணர்ந்திருக்கும், மன்ற அங்கத்தினர்கள் உணர்ந்திருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். ஏனென்றால் நிதி ஒதுக்கீடு என்பதில் மத்திய மாநில அரசாங்கத்திற்கு என்ன, என்ன அதிகார வரம்புகள் இருக்கின்றன என்பது நம்முடைய அரசியல் சட்டத்தில் வரையறுக்கப்பட்டிருக்கிறது. நிதியைப் பெருக்கக் கூடிய அதிகாரங்கள், நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்கு வரி விதிக்கக்கூடிய அதிகாரங்கள் எல்லாம் மாநில சர்க்காருக்கே இருக்கின்றது என்பதை கனம் மாண்புமிகு அங்கத்தினர்கள் உணர்ந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். அதே போன்று உணவு வழங்கு துறையிலே மத்திய மாநில சர்க்கார்களுக்குக் கூட்டாக அதிகாரம் இருக்கிறது என்பதையும் ஆளுங்கட்சியைச் சேர்ந்த நண்பர்கள் உணர்ந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். ஆக, மத்திய மாநில சர்க்கார்களுக்குக் சில கூட்டு அதிகாரங்களும், மாநில சர்க்கார்களுக்குச் சில சுயேச்சை அதிகாரங்களும், ஒழுங்கைப் பாதுகாக்கக்கூடிய அதிகாரங்களும், சட்டம் கூடிய அதிகாரங்களும் அளிக்க, அரசியல் சட்டதிட்டத்தில் வழி வகுக்கப்பட்டிருக்கிறது என்பது நாம் அறிந்த ஒன்றாகும்.

ஆளுநர் அவர்கள் தமது உரையிலே, மாநிலத்திலே ஆண்டுக் காண்டு, வெள்ளம், புயல் காரணமாக, பெருத்த சேதங்கள் ஏற்படுகின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள், ஒவ்வொரு





ஆண்டும் மத்திய சர்க்கார் அந்தச் சேதங்களைக் கண்டறிந்து தக்க உதவிகளைச் செய்து வருகிறார்கள். இந்த ஆண்டு கூட ரூ. 67 கோடிக்கு மேல் வழங்கியிருக்கிறார்கள் என்பதை ஆளுநர் அவர்களே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆக, மத்திய சர்க்கார், மாநில சர்க்கார்களுக்குத் தேவையான நிதி உதவிகளை வழங்குவதில் தாராளம் காட்டுகிறார்கள் என்பதில் சந்தேகம் இல்லை; தயக்கம் காட்டவில்லை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதிலே நான் ஒன்றைச் சொல்கிறேன். ஊரக வளர்ச்சித் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு இந்த ஆண்டு குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை நாங்களும் உணர்கிறோம். ஏனென்றால், நடப்பாண்டிலே ஏராளமாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த நிதிகள் எல்லாம் முறையாகச் செலவழிக்கப்படவில்லையென்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே நான் இந்த மன்றத்திலே குறிப்பிட விரும்புகிறேன். அப்படிச் செலவழிக்கும்போது பல ஊதாரித்தனமான செலவுகள், முறைகேடான செலவுகள் எல்லாம் நடைபெற்றிருக்கின்றன என்பதை என்னால் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியவில்லை. காரணம் பல திட்டவேலைகள் முறையாக நடைபெறவில்லை. உதாரணமாக, ஊராட்சி ஒன்றியங்களில் சமுதாயக் கிணறுகள் தோண்டப்படுகின்றன. அப்படித் தோண்டப்படுகின்ற கிணறுகள் இருக்கின்ற இடத்திற்கும் கிராமத்திற்கும் சம்பந்தமில்லாத இடங்களாக இருக்கின்றன. சில கிராமங்களில் குளியலறைகள் கழிப்பறைகள் எல்லாம் கட்டப்படுகின்றன. கிராமங்களுக்குத் தேவையான இடங்களில் அவற்றை வைக்காமல், வேறிடங்களில் கட்டுகிறார்கள். பல இடங்களில் சத்துணவுக் கூடம், சமுதாய நலக் கூடம், பள்ளிக் கூடம் போன்றவை கிராம மக்களுக்கும் அந்த இடங்களுக்கும் தொடர்பில்லாமலிருக்கின்றன. நிறைய கட்டிடங்கள் கட்டப்பட்டு, திறப்பு விழா நடத்தப்படாமல் சும்மா கிடக்கின்றன. ஊராட்சி மன்றங்கள் அல்லது ஊராட்சிகள் அல்லது ஒன்றியங்கள் இல்லாத காரணத்தால், வளர்ச்சி அதிகாரிகளும், கிராம சேவக்குகளும், அந்த ஆணையர்களும், யூனியன் இன்ஜினியர்களும் அவர்களுக்குள்ளாகவே தேர்ந்தெடுத்து, ஒரு கிராமத்திற்கு என்ன தேவை, எந்த இடத்தில் தேவை என்று இல்லாமல், தேவையில்லாத இடங்களில் செலவு செய்து, பணத்தை வீணடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பல ஆதாரங்களோடு நான் விளக்கிக் காட்ட முடியும். ஏனென்றால், நான் ஊராட்சி ஒன்றியத்தில் 3 முறை ஒன்றியத் தலைவராக இருந்திருக்கிறேன். வீண் செலவுகள், ஊதாரித்தனமான செலவுகள் எல்லாம் செய்யப்படுகின்றன என்பதை மத்திய சர்க்கார் குழுக்களின் மூலமாகக் கண்டறிந்து, அதன் காரணமாக, இந்த ஆண்டு, என்.ஆர்.இ.பி., ஐ.ஆர்.டி.பி., ஆர்.இ.எல்.ஜி.பி திட்டங்களுக்குக் கொடுத்த தொகையைக் குறைத்திருக்கிறார்கள்' காரணம், அவை முறையாக செலவு செய்யப்படவில்லை'

[திரு டி. தீர்த்தகிரி கவுண்டர் [1986 சனவரி 11

தவறான முறையிலே செலவு செய்யப்படுவதன் காரணமாகப்
பல வகைகளிலே ஊதாரித்தனமாக போகின்ற காரணத்தாலே
குறைக்கப்பட்டிருக்கிறது என்பதை நானும் இந்தச் சந்தர்ப்பத்திலே
எடுத்து உணர்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போன்று, இன்றைக்கு விவசாயிகள் இந்த நாட்டின்
முதுகெலும்பு என்று சொல்கிறார்கள். எல்லோரும் அதை
ஒப்புக்கொள்கிறோம். விவசாயத்தில் முக்கியத்துவத்தை
வலியுறுத்தும்பொருட்டு திருவள்ளுவரும்,

> ''உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
> தொழுதுண்டு பின்செல் பவர்''

என்று கூறியுள்ளார். ஆனால் இன்றைக்கு அந்த நிலை மாறி,

> ''உழுதுண்டு வாழ்வாரே வீழ்வார் மற்றெல்லாம்
> தொழுது உண்டுவாழ் வார்''

என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. காரணம் என்னவென்றால்.
ஒருபக்கம் வெள்ளம் ஏற்பட்டு அவர்களுக்குச் சேதம் ஏற்படுகிறது,
இன்னொரு பக்கம் வறட்சி ஏற்பட்டு, அதனாலும் பெருத்த
இழப்பு ஏற்படுகிறது. எங்களுடைய தர்மபுரி மாவட்டத்தை
எடுத்துக்கொண்டால் பருவமழை பொய்த்து, வறட்சி ஏற்பட்டு,
நிலம் பாழ்பட்டுகிடக்கிறது. அப்படி பல மாவட்டங்களில்
வறட்சி ஏற்பட்டிருக்கிறது. வறட்சியால் ஒருபக்கம் கஷ்டம்
ஏற்பட்டாலும் கடும் மழையினாலும் சேதம் ஏற்படுகிறது.
இப்படிப்பட்ட நிலையில் விவசாயிகளுடைய வாழ்க்கைத்தரம்
சீர்குலைந்து போய்விட்டது.

இன்றைக்கு விவசாயிகளுக்கு ஓரளவுக்கு வாழ்க்கைச் செலவுக்கு
உதவிகரமாக இருப்பது கரும்பு சாகுபடி. அதிலே ஓரளவு
வருமானம் கிடைக்கின்ற காரணத்தால் ஆங்காங்கே 10 ஏக்கர்,
5 ஏக்கர், 3 ஏக்கர், 2 ஏக்கர் வைத்திருக்கிற சிறு சிறு விவசாயிகள்
கூட கரும்பு சாகுபடி செய்கிறார்கள். விவசாயிகளுக்கு ஏதாவது
ஒருவகையில் உதவி செய்யவேண்டுமென்று கருதி, மத்திய
அரசாங்கம் கரும்புக்கு நல்ல விலை கொடுக்கிறது. கரும்பு ஒரு
வருஷப் பயிராக இருப்பதால் அதிலும் பல கஷ்டங்கள்
ஏற்படுகின்றன. பருவமழை தவறிவிடுவதால் ஏக்கருக்கு 50 டன்
மகசூல் கிடைக்க வேண்டுமென்றால் கிட்டத்தட்ட 20 டன்,
15 டன்தான் கிடைக்கிறது. வறட்சியின் காரணமாக பாதி
விளைச்சல்தான் கிடைக்கிறது. அதனால் கரும்பு விவசாயத்
திலும் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள்.

குறிப்பாக, இந்த ஆண்டு மத்திய சர்க்கார் கரும்புக்கு நல்ல
விலை கொடுத்து, அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற
பெருந்தன்மையோடு கூடிய எண்ணத்தாலே மாநில சர்க்காருக்குச்
சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு டன்னுக்கு



1986 சனவரி 11] [திரு டி. தீர்த்தகிரிகவுண்டர்]

25 ரூபாய் கூடுதல் கொடுக்க வேண்டுமென்று விலை நிர்ணயித்து
அறிவித்திருக்கிறார்கள். நம்முடைய மாநில சர்க்கார் சென்ற
ஆண்டு டன்னுக்கு 160 ரூபாய் கொடுத்தது. இந்த ஆண்டு 25
ரூபாய் சேர்த்து, டன்னுக்கு 185 ரூபாய் கொடுப்பதாக
அறிவித்திருக்கிறது. கரும்பு உற்பத்தி செய்கிற விவசாயிகள் 8.5
சதவீதம் சர்க்கரை சத்துவரக்கூடிய கரும்புக்கு டன் ஒன்றுக்கு 250
ரூபாய் கொடுக்கவேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.
ஆனால் மாநில சர்க்கார் 185 ரூபாய்தான் கொடுக்க முடியும் என்று
சொல்லியிருக்கிறது. அதன் காரணமாக இன்றைக்கு விவசாயிகள்
தங்களுடைய கோரிக்கையை வலியுறுத்தி, சென்ற 4-ந் தேதியி
லிருந்து 8-ந் தேதி வரையில் தங்களுடைய அதிருப்தியைத்
தெரிவிக்கின்ற வகையில் கரும்பு ஆலைகளுக்குக் கரும்பு சப்ளை
செய்வதில்லை என்று முடிவு செய்து அந்த வகையிலே வேலை
நிறுத்தம் செய்திருக்கிறார்கள். அவர்களுடைய இந்த
அதிருப்தியை போக்கக் கரும்பு உற்பத்தி செய்கின்ற விவசாயி
களுக்கு ஓரளவு நியாயம் கிடைக்கின்ற வகையில் விலை கொடுக்க
வேண்டும்.

சர்க்கரை ஆலைகளுக்கு இன்றைக்குப் பல கோடி ரூபாய்
இலாபம் வந்திருக்கிறது. எங்கள் பகுதியில் இருக்கிற பாலக்
கோடு கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு இந்த ஆண்டு மட்டும் 50
இலட்சம் ரூபாய் இலாபம் வந்திருக்கிறது. இது கரும்பு உற்
பத்தி செய்கிற விவசாயிகளின் மூலதனம். ஏற்கெனவே ஒரு
கோடி ரூபாய் பங்கு தொகை இருக்கிறது. பாலக்கோடு கூட்டுறவு
சர்க்கரை ஆலைக்கு இரண்டுகோடி ரூபாய் இலாபம் வந்திருக்கும்.
சரியான நிர்வாகம் இல்லாத காரணத்தால் இலாபம் குறைந்திருக்
கிறது. அங்கே இருக்கின்ற தனி அதிகாரிகள் அவர்கள் இஷ்டம்
போல் செயல்படுகிறார்கள். அந்தச் சர்க்கரை ஆலைக்கு இருக்கிற
மூலதனத்திலிருந்து விருத்தாசலம் மோகனூர் மில்லுக்கும் வேறுபல
நிறுவனங்களுக்கும் கடன் கொடுத்திருக்கிறார்கள். கடன்
கொடுத்த பணம் எப்படி திரும்பும் என்று தெரியவில்லை. அந்தப்
பணம் முழுவதும் விவசாயிகளுடைய பணம். ஆலை நிர்வாகம்
தனி அதிகாரிகள் கையில் இருப்பதால் இப்படிச் செயல்படு
கிறார்கள். அவர்கள் இஷ்டம்போல் செய்கிறார்கள். விவசாயி
களைத் தவிர மற்றவர்களுக்கு தாராளமாக உதவி செய்கிறார்கள்.
அவர்களுடைய குழந்தைகள் படிக்க, அவர்களுடைய குழந்தைகள்
விளையாட, இப்படிப்பட்ட காரியங்களுக்கு தாராளமாகச் செலவு
செய்கிறார்கள். அவர்கள் குடியிருக்க குவார்ட்டர்ஸ் வசதி
எல்லாம் தாராளமாகச் செய்து கொள்கிறார்கள். அவர்களுக்குக்
கூடுதல் சம்பளம் எல்லாம் தாராளமாக எடுத்துக் கொள்கிறார்கள்
போனசும் எடுத்துக்கொள்கிறார்கள். ஆனால் அந்த விவசாயி
களுக்கு உதவி செய்ய, விலையைக் கூட்டிக்கொடுக்க மறுக்கிறார்
கள். கரும்பு உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு, பாடுபடக்
கூடிய விவசாயிகளுக்கு சரியான விலை கொடுப்பதில்லை.

சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு திரு. அன்பழகன் அவர்கள் கூறியதைப்போல கூலி அதிகமாகி இருக்கிறது. ஒரு டன் கரும்பு வெட்டுவதற்கு கூலி 30 ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது. அது மட்டுமல்ல, உழவு ஓட்டுவதற்கு, கொத்துவதற்கு ஏக்கருக்கு 150 ரூபாய், 200 ரூபாய் கொடுக்க வேண்டும். முட்டுவழி செலவு எல்லாம் சென்ற ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு ஒன்றுக்கு இரண்டாக உயர்ந்திருக்கிறது.

(முற்பகல் 11-50)

நிர்வாகச் செலவும், முட்டுப்படிச் செலவும் கரும்புச் சாகுபடி செய்கிறவர்களுக்கு ரொம்பவும் பெருகி இருக்கின்ற காரணத்தால் அரசாங்கம் கரும்புக்குக் கூடுதல் விலை கொடுப்பதில் எந்தவிதமான நஷ்டமும் வந்துவிடப்போவதில்லை. இன்றைக்கு மாநில அரசுக்குக் கரும்பாலை மூலமாக வரியாகக் கிடைப்பது சுமார் ஒரு டன் கரும்புக்கு 350 ரூபாய் ஆகும். இவ்வளவு இலாபம் மாநில சர்க்காருக்கு வரக்கூடிய நேரத்தில் ஒரு டன்னிற்கு 25 ரூபாய் அல்லது 30 ரூபாய் அதிகப்படுத்தி கொடுப்பதால் அரசுக்கு நஷ்டம் ஏற்பட்டுவிடாது. அரசாங்கத்திற்குக் கிடைக்கின்ற இலாபம் 350 ரூபாயில் 75 ரூபாய் விவசாயிக்குக் கிடைக்கின்ற வகையில் ஏற்பாடு செய்தால்கூட அரசாங்கத்திற்கு 275 ரூபாய் இலாபம் கிடைக்கத்தான் செய்யும். அப்போதும்கூட மாநில சர்க்காருக்கு எந்தவிதமான நஷ்டமும் இல்லை.

லாரி வாடகையில் ஒரு டன்னுக்கு 10 ரூபாய் என்று மானியம் கொடுத்தார்கள். அதை இந்த ஆண்டு நிறுத்திவிட்டார்கள். சென்ற ஆண்டும், அதற்கு முந்திய ஆண்டும் அரசாங்கத்தால் ஒரு டன்னுக்கு 22 ரூபாய், 12 ரூபாய் சப்சிடி என்றும், போனஸ் என்றும் அறிவிப்பு கொடுத்திருந்தார்கள். இந்த ஆண்டு அதைக் கொடுக்கவில்லை. சென்ற ஆண்டும் அதைக் கொடுக்கவில்லை. எனவே சப்சிடி போன்றவைகளை எல்லாம் சென்ற ஆண்டில் அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிப்படி விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் என்று இந்தச் சமயத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

கரும்பு விவசாயிகள் இன்றைக்குத் தமிழகத்தில் ரொம்பவும் நொந்துபோய் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கருணையோடு இந்த அரசு வேண்டிய உதவிகளைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நமது மாநிலத்திலே நடைபெற்று வருகின்ற சத்துணவுத் திட்டம் ஓரளவுக்கு நல்ல உதவியான திட்டமாக நடந்துகொண்டிருந்தாலும், மதுவிலக்கை கண்டிப்பாக அமல் நடத்தவேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். ஏனென்றால் இன்றைக்கு மதுவின் காரணத்தால் தமிழகத்தில் பல்வேறு கொடுமைகளும், கொலைகளும், திருட்டுபுரட்டுக்களும் ஏராளமாக ஏற்பட்டுக்



கொண்டிருக்கின்றன. இப்படி சமுதாயத்தில் ஏற்படக்கூடிய நலிவுகள் காரணமாகவும், தீமைகள் காரணமாகவும் எதிர்கால சந்ததியினர் என்ன நிலைமைக்குப் போவார்கள் என்றே வியப்படைய வேண்டிய நிலைமை இருக்கின்றது. கல்லூரி மாணவர்கள், மாணவிகள் எல்லாம் கூட இன்றைக்குக் குடிப்பழக்கத்திற்கு ஆளாகின்ற நிலைமையில் சீர்கேடாகப் போய்க்கொண்டு இருக்கிறார்கள். இது அன்றாடம் நிகழ்ச்சியாக ஆகிவிட்டது. மதுவினால் இவ்வளவு பெரிய கொடுமைகள் ஏற்பட்டிருக்கின்றன.

அண்ணாவின் வழியைப் பின்பற்றக்கூடிய அரசு இது. மதுவிலக்கைக் கண்டிப்பாகத் தமிழகத்தில் அமலாக்குவோம் என்று அண்ணா அவர்கள் சொன்னார்கள். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட என் அன்னையின் மீது ஆணையாக மதுவிலக்கைக் கண்டிப்பாக அமல் நடத்துவேன் என்று சொன்னார்கள். அதன்படி அமல்படுத்த வேண்டும்.

அடுத்து சினிமாத் துறை. இது ரொம்பவும் சீர்கேடான துறை, சமுதாயத்தையே சீரழிக்கக்கூடிய துறையாக சினிமாத் துறை இருக்கின்றது. பெரியார் சொல்கையைப் பின்பற்றக்கூடிய அரசு இது என்று சொல்கிறோம். தந்தை பெரியார் அவர்கள் சொன்னார்கள் தமிழ்நாட்டிலே சினிமா துறையை ஒழிக்க வேண்டும் என்று. சினிமாவால் பல சீர்கேடுகளும், ஒழுங்கீனங்களும் ஏற்படுகின்றன. ஆகவே அதை ஒழிக்க வேண்டும் என்று அவர்கள் கூறினார்கள். ஆனால் இன்றைக்கு சினிமா துறைக்கு அதிகமான ஊக்கமும், ஆக்கமும் இந்த அரசு கொடுத்துக்கொண்டிருக்கிறது. சினிமா துறையில் இருக்கின்ற கலைஞர்களுக்கும், நடிசர்களுக்கும் பரிசு வழங்குவது, போனஸ் கொடுப்பது போன்ற நிலைமைகள் எல்லாம் இருக்கின்றன. அவ்வாறு அவர்களை ஊக்குவிப்பது சரியானதாக இல்லை என்பதை இந்தச் சமயத்தில் நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எனவே அதைக் கட்டுப்படுத்த வேண்டும். எதிர்காலக் சந்ததியினரே இந்த சினிமாவால் கெட்டுக்கொண்டு இருக்கிறார்கள்.

நெக்கடாக நடிப்பதே இன்றைக்கு பேஷன் ஆகப்போய் விட்டது. சினிமாவிலே ஆடை இல்லாமல் நடிப்பது என்பதே ஒரு கலையாகப் போற்றக்கூடிய அளவுக்கு அந்தத் துறை போய்க் கொண்டிருக்கிறது. இதை எல்லாம் கட்டுப்படுத்தியாக வேண்டும் பெரியார், அண்ணா அவர்கள் வழியிலே போகக்கூடிய இந்த அரசு அதற்கெல்லாம் நல்ல கட்டுதிட்டத்தை ஏற்படுத்தி சீர்படுத்தி ஒழுங்குக்குக் கொண்டுவரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஆளும் கட்சியைச் சேர்ந்த நண்பர்களின் கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். மத்திய சர்க்கார் இன்றைக்கு மாநில சர்க்கார் மீது ஒரு நல்ல எண்ணத்தை வைத்துக் கொண்டிருக்கிறது. நல்ல உறவான எண்ணத்தை அவர்கள்

வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் நம்முடைய ஆளும் கட்சி நண்பர்கள் பேசக்கூடிய பேச்செல்லாம் மத்திய அரசின் மீது, ஏதோ ' அவர்கள் நிதி வழங்குவதிலே சில குறைபாடுகள் இருப்பதுபோல், உள்நோக்கம் கற்பிக்கின்ற வகையில் பேசுவதுபோல் எங்களுக்குத் தென்படுகிறது. மத்திய சர்க்காரைப் பற்றி இன்றைக்கு ஆளும் கட்சியைச்சேர்ந்த நண்பர்கள் பேசினார்கள். மேட்டூர் மில் ஏறத்தாழ 1 ஆண்டுக்கு மேலாக மூடிக்கிடக்கின்ற நிலைமையையும் குறிப் பிட்டு, அந்த மில் தொழிலாளர்களுக்கு அரசு மானியமாக உதவியாக ஒரு குடும்பத்திற்கு ஆயிரம் ரூபாய் வழங்கிய தாகவும் இன்றைக்கு மன்றத்திலே சுட்டிக் காட்டிப் பேசி னார்கள். அதற்கு மத்திய அரசு நிதி உதவி தந்துள்ளது என்று சுட்டிக்காட்டி பேசியுள்ளார்கள். ஆனால் பல கோரிக்கை களுக்கு அவர்கள் நிதி உதவி தந்திருக்கிறார்கள். வெள்ள நிவாரணத்திற்கு நாம் கேட்கின்ற நிதியை தாராளமாக கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். எடுத்ததற்கெல்லாம் மத்திய சர்க்கார் மீது குறை கூறி, நிதி உதவி தரவில்லை என்று சொல்வது சரியல்ல. லைப்ரரிக்கு மானியம் கொடுக்க வில்லை என்று கூட கேட்கிறார்கள். எந்த எந்த இனங்களுக்கு கொடுக்க வேண்டுமோ அவைகளுக்கு தாராளமாக வழங்க வழி வகை செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். இப்படிப்பட்ட போக்கு சரியானது அல்ல. அவர்கள் எந்தவிதமான பாகுபாடும் காட்டுவதில்லை.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மத்திய சர்க்கார்மீது நல்ல அன்பு காட்டிக் கொண்டிருக்கிறார்கள். மத்திய சர்க்காரிலே இருக்கக் கூடிய பிரதம அமைச்சர் மீது நல்ல நட்பை கொண்டிருக்கிறார்கள், அந்த நட்பின் பயனாக, அன்பின் காரணமாக இந்த சர்க்காருக்கு மத்திய சர்க்கார் தாராளமாகவே உதவி செய்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அதைப் பாராட்டி பேசுவதை விட்டு விட்டு மத்திய சர்க்காரின் மீது குற்றத்தை சுட்டிக் காட்டி, ஏதோ மத்திய சர்க்கார் உதவியே செய்வதில்லை என்பது போலவும் உதவி செய்வதில் பாரபட்சம் காட்டுவது போலவும் பொது மக்கள் மத்தியிலே உள்நோக்கம் கற்பித்து ஆளும் கட்சியினர் பேசுவது முறையாக இல்லை என்பதை இந்த சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏனென்றால் நாங்கள் எதிர் கட்சியாக இருநதாலும் கூட நட்பு கட்சியாக இருக்கிறோம். ஆக நாங்கள் இந்த சர்க்காருக்கு எதற்கும் பாதுகாப்பாக உறுதுணையாக இருக்கிறோமே ஒழிய இடைஞ்சலாக இருக்க மாட்டோம். ஆனால் இந்த நல்லெண்ணம் ஆளும் கட்சியைச் சேர்ந்த உங்களுக்கும் இருக்க வேண்டும். அப்படி அந்த



நல்லெண்ணம் இல்லை என்றால், தற்போது நிலவும் நிலைமை தவறாகப் போய்விடும். ஆகவே அப்படிப்பட்ட போக்குகளை எல்லாம் நீங்கள் நிச்சயமாக தவிர்க்க வேண்டும்.

மத்திய சர்க்கார் பாகுபாடு இல்லாமல் உதவிகளைச் செய்கிறது என்பதற்கு உதாரணம் கூட ஒன்றைச் சொல்ல முடியும். குடும்பநலத் திட்டத்திலே தமிழகம் முன் உரிமை பெற்று, முன்னணியிலே நிற்கிறது என்பதற்காக 2 கோடியே 50 லட்சம் ரூபாய் பாராட்டு நிதியாகக் கொடுத்திருக்கிறார்கள், இவையெல்லாம் எதைக் காட்டுகிறது. நல்லெண்ணத்தை, நட்பைக் காட்டுகிறது.

என்னுடைய தொகுதியான பெரம்பூர் பகுதியிலே பாஸ்கோ ஸ்டீல் தொழிற்சாலை 2½ ஆண்டுகாலமாக மூடிக் கிடக்கிறது. ஏறத்தாழ 650-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். அதை நம்முடைய தொழில் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்து, அதை மீண்டும் திறப்பது குறித்து முதலமைச்சரிடத்தில் பேச வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன். மேட்டூர் மில்லைப் போன்றே பாஸ்கோ தொழிற்சாலையும் திறக்கப்பட வேண்டும். இல்லையென்றால் அங்குள்ள தொழிலாளர்கள் மிகவும் மோசமாகப் பாதிக்கப் படுவார்கள் என்பதை இந்த சந்தர்ப்பத்திலே சுட்டிக் காட்டி, இந்த அரசு செய்யக்கூடிய நல்ல காரியங்களுக்கு உண்மை யிலேயே நாங்கள் உறுதுணையாக இருப்போம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

எங்காவது சில இடங்களில் தவறுகள் நடைபெற்றால், அதையும் சுட்டிக் காட்டத் தவறமாட்டோம். உதாரணமாக மதுவிலக்குக் கொள்கையை சீக்கிரமாக அமல்படுத்தவேண்டும் என்பது நாங்கள் நெடு நாட்களாக கேட்டுக்கொண்டிருக்கக் கூடிய பிரச்சனை. அதைப்பற்றிக் கேட்டால், நீங்கள் சொல்வீர்கள், மற்ற மாநிலங்களில் எல்லாம் மதுவிலக்கு இல்லாத நிலைமையில் தமிழகத்தில் மாத்திரம் எப்படி அமல் படுத்தமுடியும். அண்டை யிலே இருக்கக் கூடிய பாண்டிச்சேரி, ஆந்திரா போன்ற மாநிலங் களில் மதுவிலக்கு இல்லாத போது, நாம் மட்டும் எப்படி அமல் நடத்துவது என்று சொல்வீர்கள். ஆனால் மதுவிலக்கை அமல் படுத்தி முதன் முதலில் இந்தியாவிலேயே நமது மாநிலத்தில் தான் மூதறிஞர் இராஜாஜி அவர்கள் அமலுக்கு கொண்டு வந்தார். இடையிலே எப்படியோ அது தடைபட்டு விட்டது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சர்க்காரின் முதலமைச்சர் கூட இதிலே ஆரம்பத்திலே மிக கடுமையாக உறுதியாக இருந் தார்கள். ஆனால் இப்போது அந்த தாராளமாக தளர்த்தி மதுவிலக்கின் மூலமாக 150 கோடி வருமானம் வருவதாக அறிவித்திருக்கிறார்கள்.

ஆனால் நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த அரசின் இந்த மதுக் கொள்கையினால் எதிர்காலத்தில் ஒரு பெரிய சோதனையை அதுவே அவர்களுக்கு உருவாக்கும், ஒரு பெரிய சோதனைக் கட்டம் ஏற்படும் என்பதை இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். காரணம் கள்ளுக் கடைகளை ஏலம் விடுவது என்றும், சாராயக் கடைகளை எல்லாம் நியமனம் முறையில் அப்பாயின்ட்மென்ட் செய்து நடத்துவது என்றும் நீங்கள் எடுத்திருக்கிற முடிவு, உங்களுடைய எதிர்காலத்தையே பாதிக்கக் கூடியதாக இருக்கும். அதைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். உங்களுடைய கட்சிக்கு உள்ளேயே கூட அதனால் சோதனைக் காலம் ஏற்படக் கூடும். (மணியடிக்கப்பெற்றது).

என்னுடைய கட்சியின் சார்பாக நான்தான் பேசுகிறேன் சீக்கிரமாக முடித்து விடுகிறேன்.

(நண்பகல் 12-00)

ஆகவே இவையெல்லாம் சோதனையாக உருவெடுக்காமல் இருக்க வேண்டும் என்றால், அந்தக் கொள்கையில் நீங்கள் நல்ல பல மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும் என்று செல்லிக் கொள்கிறேன். இல்லையென்றால் அது உங்களுக்கு சோதனையாகவே முடியும். நீங்கள் இன்னும் பல ஆண்டு காலம் சிறப்பாக ஆட்சி பண்ணவேண்டும் என்பதுதான் எங்கள் விருப்பம். நல்லதை எல்லாம் பண்ணும்போது ஆதரவு காட்ட நாங்கள் இருக்கிறோம். ஆனால் இந்த சாராயக் கடைகளை நடத்துவதிலே மேல் மட்டத்திலே இருப்பவர்களுக்கு தெரிகிறதோ இல்லையோ, கீழ் மட்டத்திலே இருப்பவர்களுக்கு நன்றாகத் தெரியும். இது பின்னாடி பெரிய சோதனையை உருவாக்கும் என்று. பொது மக்கள் மத்தியிலும் இது பெரிய பரபரப்பை உருவாக்கியிருக்கிறது. கட்சியை கட்சியினரை வளர்ப்பதற்காகவே இப்படிச் செய்கிறார்கள் என்பது மக்கள் மத்தியிலே பரவியிருக்கக்கூடிய பெரிய பீதியான எண்ணமாக இருக்கிறது. ஆளும் கட்சி, ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களை வளர்ப்பதற்கும், அவர்களுக்கு உதவி செய்வதற்காகவும் இப்படிப் பட்ட திட்டங்களை போடுகிறார்கள் என்று பொதுமக்கள் மத்தியில் பரவலாக அதிருப்தி தெரிவித்து பேசப்படுகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே சாராயக் கடைகளை கொண்டு வருவது போன்ற இப்படிப்பட்ட திட்டங்கள் நிச்சயமாக ஒரு நல்ல சர்க்காருக்கு தீங்கை விளைவிக்கும் காரியமாகத் தான் நடைமுறையில் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இதனை மறுபரிசிலனை செய்து மது விலக்கை அமலாக்க வேண்டும். காரணம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்லே நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். எத்தனை கோடி ரூபாய் இதனால் இழப்பு ஏற்பட்டாலும் மாநில சர்க்காருக்கு அதனை ஈடுசெய்வதற்கு பல வழிகள் இருக்கின்றன. சர்க்கரை ஆலைகள் மூலமாக கோடிக்கணக்கான ரூபாய் சர்க்காருக்கு கிடைக்கிறது.



அரசின் வருவாயை பெருக்குகிற தகுதியுடைய நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள். ஆகவே மதுவிலக்கை அமலாக்க வேண்டுமென்று கேட்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு துரை அன்பரசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்கள் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது என்னுடைய கருத்துக்களை இங்கே தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். ஆளுநர் அவர்கள் உரையில் தமிழகத்தின் வளர்ச்சித் திட்டங்கள் ஏராளமாக அளவிலே இருக்கின்றன என்பதை எண்ணிப் பார்க்கிறபோது இந்த அரசு ஏழை மக்கள் மீதும் பாட்டாளி வர்க்கத்தின் மீதும் எந்தளவிற்கு பாசம் கொண்டிருக்கிறது என்பதை புரிந்து கொள்ள முடிகிறது. இதனை எண்ணிப் பூரிப்பு அடைகிற போது இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தமிழகத்தின் வளர்ச்சியிலே எந்தளவிற்கு அக்கறை கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிய முடிகிறது. இதற்கு ஆளுநர் அவர்களின் உரையே சான்றாக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன்.

ஆளுநர் உரையில் 20 அம்ச திட்டம் தமிழகத்தில் குறிப்பாக இந்திய துணைக் கண்டத்திலிருக்கிற இரண்டு மாநிலங்களில் எவ்வளவு சீராகவும், சிறப்பாகவும் செயல்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருப்பதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல ஆளுநர் உரையில் இலங்கையில் மண்ணிழந்து நம் நாட்டிற்கு அகதிகளாக வந்துள்ள நம்முடைய சகோதரர்களின் நிவாரணப் பணிகளுக்காக செலவிட்டிருக்கிற பணம் ஏறத்தாழ 45 கோடி ரூபாய் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதனை எண்ணிப் பார்க்கிறபோது நம்முடைய ரத்தங்களான நம்முடைய உடன்பிறப்புகளுக்காக புரட்சித் தலைவர் மாண்புமிகு எம். ஜி. ஆர். அவர்கள் எந்தளவிற்கு நல்ல பல திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள் என்பதையும் பார்க்க முடிகிறது.

அதேபோல மின் சக்தி உற்பத்திக்காக தமிழக அரசு 2,000 கோடி ரூபாய் செலவிட இருக்கிறது. நடப்பாண்டில் என்பதை அறிகிற போதும், 1,416 மெகாவாட் கூடுதல் திறனுள்ள மின் உற்பத்தி நிலையங்களை அமைக்கவிருக்கிறோம் என்ற இனிப்பான செய்தியை பார்க்கிற போதும், புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு எந்தளவிற்கு மின் சக்தியை தமிழகத்தில் இயங்குகிற தொழில் நிறுவனங்களுக்கும், விவசாயிகளுக்கும், மக்களுக்கும் வழங்குவதில் அக்கறை கொண்டிருக்கிறது என்பதை பார்க்க முடிகிறது. இந்த இனிப்பான செய்தி நம்முடைய உள்ளங்களில் பெருமளவில் பூரிப்பை உருவாக்குகிறது.

அதேபோல குடிநீருக்காக 24 கோடி ரூபாய் செலவிட
இருப்பதாக ஆளுநர் அவர்கள் உரையில் குறிப்பிட்டிருக்
கிறார்கள். 24 கோடி ரூபாய் குடிநீருக்காக செலவு செய்ய
விருக்கிற புரட்சித் தலைவர் அவர்களின் அரசை நான் இந்த
நேரத்தில் நன்றியுணர்வோடு பாராட்ட கடமைப்பட்டிருக்
கிறேன். 24 கோடி ரூபாய் குடிநீருக்காக செலவிடுகிறார்கள்
என்றால் எந்தளவிற்கு ஏழை மக்கள் மீதும், எளியவர்கள்
மீதும் பாசம் கொண்டவராக உத்தமத் தலைவர் புரட்சித்
தலைவர் இருந்து கொண்டிருக்கிறார் என்பதை இந்த
நேரத்தில் எண்ணைப்பார்க்க முடிகிறது. அவர்களுக்கு மீண்டும்
நாம் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறோம்.

அதேபோல் 40 ஆயிரம் தையல் பிரிவுகளை ஏற்று
மகளிருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தருகின்ற திட்டம்
தமிழக அரசினுடைய கவனத்திலே இருக்கிறது என்றும், அது
நடப்பு ஆண்டிலே செயல்படுத்தப்படும் என்பதை ஆளுநர்
உரையிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். நான் இதையெல்லாம்
சொல்வதற்குக் காரணம், இந்த அரசு ஏழை எளியவர்களுக்கு
எந்த அளவிற்கு நல்ல பல திட்டங்களை உருவாக்கிக்கொண்டு
இருக்கிறது என்பதை எதிர்க்கட்சி வரிசையிலே உள்ள நண்பர்கள்
உணர்ந்து பார்க்க வேண்டும் என்பதற்காகத்தான் நான்
இதைச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோல் என்னுடைய தென் ஆற்காடு மாவட்டம் கடந்த
வருடம் டிசம்பர் மாதம் கடுமையாக வீசிய புயலின் காரணமாக
எந்த அளவிற்கு பாதிக்கப்பட்டு இருக்கிறது. எத்தனை பேர்
களுடைய உயிர் பலியாகி இருக்கிறது என்பதை எண்ணிப்
பார்க்கும்போது, நான் வேதனைப்படுகிறேன். அந்த
நேரத்திலே, புரட்சித் தலைவர் அரசு, மனித உள்ளத்தோடு,
நியாய உள்ளத்தோடு, தாய்மை உள்ளத்தோடு, அந்தப்
பகுதிகளில் நிவாரணப் பணிகளை எவ்வளவு வேகமாகச் செய்ய
வேண்டுமோ, அந்த அளவிற்குச் செய்து, தென் ஆற்காடு
மாவட்டத்திலே இருக்கின்ற மக்களுக்கு நல்ல பல பணிகளை
ஆற்றியிருக்கிறது. எனவேதான் எங்கள் மாவட்டத்தைச்
சேர்ந்த மக்கள் புரட்சித் தலைவர் அவர்களுடைய பற்றையும்,
பாசத்தையும் பாராட்டி, அவர்கள் எடுத்த நிவாரண நடவடிக்
கைகளை இன்று வரையிலும் நன்றி உணர்வோடு பாராட்டி,
அந்த மக்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். எண்ணிப்
பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

அதேபோல் எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்
பினர்கள் அன்பழகன் அவர்களும், தீர்த்தகிரி கவுண்டர் அவர்
களும் பேசுகின்றபோது கரும்பைப் பற்றிச் சொன்னார்கள்.
அதனால் விவசாயிகள் எந்த அளவிற்கு இன்றையதினம் பாதிக்
கப்பட்டிருக்கிறார்கள் என்பதைப் பற்றிச் சொன்னார்கள்.
நானும் ஒருசில கருத்துக்களை இந்த நேரத்திலே சொல்



கடமைப்பட்டு இருக்கிறேன். குறிப்பாக தென் ஆற்காடு
மாவட்டம், 5 சர்க்கரை ஆலைகளைக் கொண்ட மாவட்டம்
என்பதை இந்த நேரத்திலே, மாமன்றத்திலே நான் தெரிவித்துக்
கொள்கிறேன். அப்படிப்பட்ட 5 சர்க்கரை ஆலைகளைக்
கொண்ட அந்த மாவட்டத்தில் இன்றையதினம் கரும்பை
வெட்டி ஆலைக்குக் கொண்டு வந்து அரவை ஆரம்பித்த இரண்
டொரு நாட்களில், அங்கேயிருக்கின்ற விவசாயப் பெருமக்கள்
கரும்பை வெட்டி அனுப்பமாட்டோம் என்று சொல்லி
இன்றையதினம் நிறுத்தியிருக்கிறார்கள். எனவே, விவசாயப்
பெருமக்கள் வேதனைக்கு உள்ளான ஒரு இனம் என்பதை நமது
பெருமைக்குரிய இதய தெய்வம் அவர்களுக்கும், மாண்புமிகு
டாக்டர் நாவலர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே சொல்லக்
கடமைப்பட்டு இருக்கிறேன்.

விவசாயப் பெருமக்கள் கரும்பு பயிரிடுகின்ற காரணத்தாலே
அவர்களுக்கு பெருவாரியான அளவில் லாபங்கள் வருவது
கிடையாது. இது உண்மை. மாண்புமிகு உறுப்பினர்
தீர்த்தகிரி கவுண்டர் அவர்கள் குறிப்பிடும்போது சொன்
னார்கள். இன்றையதினம் ஏக்கருக்கு 20 டன் கரும்பு வெட்டு
கின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம் என்று சொன்னார்கள்,
அவர்கள் சொல்வது உண்மை. என்னுடைய பகுதியிலே,
அதற்கு முன்னாலே ஒரு ஏக்கருக்கு 60 டன், 70 டன், அல்லது
80 டன் கரும்பை வெட்டினார்கள். ஆனால் இன்றையதினம்
ஏறியிருக்கிற உரத்தினுடைய விலைவாசிக் கொடுமையின்
காரணத்தால் இன்னொரு பக்கத்திலே ஏற்படுகின்ற கடுமையான
வறட்சியின் காரணத்தாலும், அங்கே கரும்பைச் சரியானபடி
பயிரிட முடியாத நிலைமையிருக்கிறது. அவர்கள் சொல்லும்
போது மேலும் ஒன்றைச் சொன்னார்கள். கரும்பை வெட்டு
கின்ற கூலி உயர்ந்திருக்கிறது. ஏற்றிச் செல்லுகின்ற வாகனங்
களுடைய வாடகை உயர்ந்திருக்கிறது என்று எல்லாம் சொன்
னார்கள். இது முற்றிலும் உண்மை. நான் இந்த நேரத்திலே
இந்த மன்றத்தின் மூலமாக மாண்புமிகு டாக்டர் புரட்சித்
தலைவர் அவர்களைப் பார்த்துக் கேட்டுக் கொள்வதெல்லாம்.
அங்கே கரும்பு பயிரிடப்பட்டு, உரிய காலத்திலே வெட்டப்
பட்டால்தான் எடை கூடிவரும். ஆனால் இன்றையதினம்
பூப்பூத்துவிட்ட காரணத்தால், பின்னாலே அதை
வெட்டுகின்ற காரணத்தால் கரும்பினுடைய தரமும்
குறைந்துவிடுகிறது. எடையும் குறைந்துவிடுகிறது. மேலும்
அதிலுள்ள சர்க்கரைத் தன்மையின் தரமும் குறைந்துவிடுகிறது.
ஆலையினாலே, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள்
மூலமாக நான் சொல்லிக்கொள்வதெல்லாம், உரிய காலத்திலே
அந்தக் கரும்புகளை வெட்டுவதற்கு அரசு நடவடிக்கை மேற்
கொள்ளவேண்டும் என்பதையும், இந்த நேரத்திலே நான்
சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு துரை அன்பரசன்] [1986 சனவரி 11

சென்ற ஆண்டு அறிவித்திருக்கின்ற விலைக்கும், இப்போது இருக்கின்ற விலைக்கும் ஒட்டிப் பார்க்கின்ற போது, ஏறத்தாழ விலையிலே 35 ரூபாய் குறைவாக இருக்கிறது. சென்ற ஆண்டு விலையோடு, இந்த ஆண்டு விலையை நாங்கள் ஒட்டிப் பார்க்கின்றபோது, 35 ரூபாய் குறைவாக இருக்கிறது என்று விவசாயப் பெருமக்கள் சொல்கிறார்கள். எனவே நாங்கள் கரும்பை வெட்டமாட்டோம் என்று சொல்கிறார்கள். கரும்பை பயிரிடுகின்ற விவசாயிகளுக்கு பாதுகாப்புத் தருகின்ற வகையிலே, குறிப்பாக தென் ஆற்காடு மாவட்டத்தில் நிறைய அளவிலே கரும்பு பயிரிடுகின்ற காரணத்தாலே, அரசு உடனடியாகத் தலையிட்டு கரும்பினை வெட்டி ஆலைகளுக்கு அனுப்புவதற்கான சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்து ஒன்றை மட்டும் சொல்லி நான் முடிக்க விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் பெண்ணையாற்றின் கரையும், கெடிலம் கரையும் இருபுறத்திலே இருக்கின்ற காரணத்தாலே, வெள்ளப் பெருக்கு வருகின்ற போது, அந்த ஆற்றின் கரைகளில் அரிப்பு எடுத்து, வெள்ளங்கள் ஊருக்குள்ளே புகுந்துவிடுகின்ற காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் என்னுடைய தொகுதியின் மீது கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

அந்த கடிலம் ஆற்றின் ஓரமாக குறிப்பாக ஊர்கள் இருக்கும் பகுதியில் தென் பெண்ணை ஆற்று கரை ஓரமாக தடுப்புக் சுவர் அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதியின் தென் புறத்தில் மலைப் பகுதிகளாக இருப்பதால் குடிநீர் பற்றாக்குறை நிறைய இருக்கிறது, அந்த குடிநீர் பற்றாக்குறையை போக்குவதற்கு தாங்கள் முன்வர வேண்டும் என்ற கோரிக்கையை இந்த நேரத்தில் வைத்து மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சியின் சார்பில் வைக்கப்பட்டுள்ள ஆளுநர் உரை மிகவும் சிறப்பாகவும், செம்மையாகவும் ஏழை மக்கள் வாழ்க்கைத் தரத்தையும் அடிப்படை உரிமையையும் உயர்த்துகின்ற அளவில் அமைந்து இருக்கிறது என்பதை தெரிவித்து வரவேற்று அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் மேதகு ஆளுநர் அவர்கள் உரை பற்றி சில முக்கியமான கருத்துக்களை மட்டும் நான் சொல்ல விழைகிறேன். நாங்கள் அவர் உரை



1986 சனவரி 11] [திரு கு. ரமணி]

நிகழ்த்துவதற்கு முன்பாகவே இந்த அவையை விட்டு வெளியேறி விட்டோம். அதற்கான பேச்சுகள் எல்லாம் கூட இங்கே கிளப்பப்பட்டன. அதற்குள் இப்போது நான் செல்லவில்லை. நாங்கள் ஏன் அப்படி வெளிநடப்பு செய்தோம் என்றால் ஒரு மரபை கெடுப்பதற்காகவோ நியாயத்தை மறுப்பதற்காகவோ அல்ல. அதற்கு சில முக்கியமான காரணங்கள் இருக்கின்றன.

உதாரணமாக மீனவர்கள் மீது நடந்து இருக்கும் தாக்குதல் சாதாரணமானது அல்ல. இந்த அரசினுடைய சரித்திரத்திலும் அதற்கு முன்னாலும் இப்படிப்பட்ட சம்பவத்தை நாம் பார்த்தது கிடையாது. துப்பாக்கிச் சூட்டினால் 7 பேர் பலியாகி, ஏராளமான பேர்கள் காயம் அடைந்தும், வீடுகள் போலீசாரால் கொளுத்தப்பட்டும் தகராறில் ஈடுபடாத தாய்மார்களை அடித்து அவமானப்படுத்தியும், பல வீடுகளில் பொருட்களை சூறையாடியும் இருக்கிறார்கள். சென்னையில் உள்ள வக்கீல் சங்கம் இது பற்றிய ஒரு விசாரணையை அவர்களே நடத்தினார்கள். அதில் ஏராளமான விவரங்களை அவர்கள் கொண்டு வந்து இருக்கிறார்கள்.

இதை எல்லாம் நாங்கள் சொல்லும்போது எப்படியாவது இந்த அரசின் பெயரில் ஏதோ குற்றச்சாட்டைப் போட வேண்டும் என்ற ஒரு நோக்கத்தோடு அல்ல. இவை எல்லாம் ஜனநாயகத்தின் அஸ்திவாரத்திற்கு வேட்டு வைக்கும் என்பதை இந்த அரசு புரிந்து கொள்ளவேண்டும். போலீஸ் இஷ்டப்படி தங்களுடைய காரியத்தை செய்ய ஆரம்பித்தால் எப்படி இந்த நாட்டில் நியாயம் வழங்க முடியும்? எப்படி நீதி நிலைக்க முடியும் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். அதற்காகத் தான் இவைகளையெல்லாம் நாங்கள் சொல்கிறோம். அந்த வக்கீல்கள் விசாரணையில் அவர்கள் அனேகமான விவரங்களை கொண்டு வந்து இருக்கிறார்கள். அவர்கள் நேராக அந்த குப்பங்களுக்கு எல்லாம் சென்று இந்த விவகாரத்தில் சம்பந்தப்படாத சாதாரண தாய்மார்களை அடிப்பட்டவர்களை, முதுகில் குண்டு பட்டவர்களை சொத்து இழந்தவர்களை, வீடு கொளுத்தப் பட்டவர்களை, கூடகளை இழந்தவர்களை எல்லாம் விசாரித்து வைத்து இருக்கக்கூடிய டாகுமெண்டுகளை தயவுசெய்து இந்த அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு ஒரு நீதி விசாரணையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எது நியாயம், எங்கே தப்பு நடந்து இருக்கிறது என்பதை உலகத்திற்கு அப்போது எடுத்து வைக்க முடியும். அப்படி தப்பு செய்யவில்லை, போலீசார் சுடக்கூடிய சூழ்நிலை அதனால் ஏற்பட்டதா? இல்லையா? என்பதை கூட விசாரணையில் வரட்டும். அப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அப்படிப்பட்ட நடவடிக்கை இல்லை. அது மட்டும் அல்ல, அப்படிப்பட்ட ஒரு ரெப்பரன்ஸ் கூட இந்த ஆளுநர் அவர்களுடைய உரையில் இல்லை என்பது வருந்தத் தக்க விஷயம்.

[திரு கு. ரமணி] [1986 சனவரி 11

இரண்டாவது இந்த ஆசிரியர்கள் போராட்டம். உண்மையில் இந்த ஆசிரியர்கள் போராட்டம் என்பது இந்த அரசு ஆனாலும் சரி, எந்த அரசு ஆனாலும் சரி தமிழ்நாட்டினுடைய சரித்திரத் திலேயே இதுவரைக்கும் போதிய அளவுக்கு ஒரு இயக்கத்திற்கு கொண்டு வந்து அந்த மக்கள் முழுவதும் பல ஆயிரக்கணக்கான தாய்மார்கள் உள்பட அந்த இயக்கத்தில் ஈடுபட்டு 3½ லட்சம் ஆசிரியர்கள் 44 சங்கங்கள் ஒன்று சேர்ந்து அவர்கள் நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள்.

நேற்றைய தினம் இந்த ஆளுநர் உரையில் நன்றி தெரிவித்து எனது மதிப்பிற்குரிய சகோதரர் தோழர் திரு. சின்னராஜ் அவர்கள் பேசியதை கேட்டு நான் உண்மை யிலேயே வருத்தப்பட்டேன். ஆசிரியர்களுக்கு சம்பளம் குறைவு என்று யாரும் சொல்ல முடியாது என்று சொன்னார்கள். எப்படி அவர் அந்த முடிவுக்கு வந்தார். ஒரு பஞ்சாலைத் தொழிலில் சரியாக 26 நாட்கள் வேலை செய்தால் அந்த தொழிலாளி 1200 ரூபாயிலிருந்து 1500 ரூபாய் வரை சம்பளம் வாங்குகிறான். ஒரு பட்டதாரி ஆசிரியருக்கு அப்படி கிடைக்க வில்லை. அந்த விவரங்களுக்குள் நான் போகவில்லை. ஆகவே அவர்கள் தரம் தாழ்ந்தப்பட்டு இருக்கிறார்கள்.

சரித்திரம் தானாக, அவர்களுக்கு ஊடையிலே ஒற்றுமையை உருவாக்கியதற்கு இதுதான் காரணம். யாரும் அவர்களைத் தூண்டிவிடவில்லை. தூண்டிவிட்டு அவர்கள் அதைச் செய்ய வில்லை, தூண்டிவிட்டதாகச் சொல்லப்பட்டது. அவர்கள் தூண்டிவிடப்பட்டார்கள் என்று நேற்றைக்குக்கூடப் பேசும்போது கடைசியிலே ஒரு ரெப்பரன்ஸ் வந்தது.

என்ன சொன்னார்கள் என்றால், அவர்களை முன் நிறுத்தி இங்கே வெளிநடப்புச் செய்தவர்கள், இன்றைக்கு அந்தப் பிரச்சினையில் தீர்வு காண்பதை விரும்பவில்லை போல் இருக் கிறது என்று சொன்னார்கள். நாங்கள் வெளிநடப்புச் செய்தோம். பிரச்னை தீர வேண்டும் என்றுதான் செய்தோம். இந்த அரசு தலையிட்டு தீர்க்கவேண்டும் என்று அக்கறை காட்டுகிறவர்கள் நாங்கள். எனவே, அப்படிப்பட்ட ஒருவெண்ணம், ஒரு மிஸ்அன்டர்ஸ்டேன்டிங் ஏற்படுவது என்பது உண்மையிலேயே நியாயம் அல்ல. அது பிரயோசனப்படாது. அவர்களுடைய உணர்வுதான் அது.

அதை உணராமல், சம்பளம் குறைவு என்று யாரும் கூற முடியாது என்றும், அவர்களைக் காட்டி வெளிநடப்புச் செய்பவர்கள் பிரச்சினையைத் தீர்க்க விரும்பவில்லை என்றும் சொல்வது.... நான் அதற்கு நேர் மாறுபட்டுச் சொல்ல விரும்பு கிறேன். அது உண்மை அல்ல. மற்றவர்களுடைய சொல்லுக்கு ஆசிரியர்கள் ஆடுகிறார்கள் என்பது அவர்களை நாமே இழிவு படுத்துவது ஆகும். அது நியாயம் அல்ல. அந்தக் கண்ணோட்



1986 சனவரி 11] [திரு. கு. ரமணி]

டத்தை ஆளுவோர் கைவிடவேண்டும் என்பது தான் என் கோரிக்கை. அப்படியானால், உங்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இப்படிப்பட்ட போராட்டங்கள், மோதல்கள் ஏற்படவேண்டிய அவசியம் இல்லை,

அவர்கள் ஆரம்பத்திலேயே சொன்னார்கள். மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களிடத்திலே நாங்கள் பேசித் தீர்க்கவேண்டும் என்று ஏன் அப்படிச் சொன்னார்கள் என்றால், அவர்களுடைய பிரச்சினையிலே பணத்தினுடைய பிரச்சினை, பணம் செலவிட வேண்டிய பிரச்சினை இருக்கிறது. அதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளிக்கவேண்டுமானால், அந்த செலவுக்கு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தலையிடாமல், நிச்சயமாக அந்தக் காரியங் களைச் செய்யமுடியாது. அதனால்தான் அவர்கள் சொன் னார்கள்.

கடைசியிலே அந்த இடத்திற்குத் தான் அப்பிரச்னை போய்ச்சேரவேண்டி இருந்தது. அப்படித்தான் முடிந்தது. அவர்கள் சொன்னது உண்மை என்பதற்கு இதுதான் அர்த்தம். எனவே, இப்படிப்பட்ட கண்ணோட்டத்தை ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும், ஆளும்கட்சியும் கைவிடுவது நல்லது. அவர்கள் அரசுக்கு விரோதிகள் அல்ல. ஆசிரியர்கள் நமது எதிர்கால சந்ததியினரை, மாணவர்களை வளர்க்கக்கூடியவர்கள் என்பது உங்களுக்கே தெரியும்.

அது மட்டுமல்ல. அவர்கள் போராட்டத்திலே நீங்கள் பார்த்திருக்க முடியும். 17 பேர்களுடைய உயிர்களை அவர்கள் பலியிட்டார்கள். போலீஸ் தாக்கி அல்ல. அடித்து அல்ல. இன்னல்படுத்தி அல்ல. நிலைமையைக் கண்டு கவலைப்பட்டே இருக்கிறார்கள். என்றைக்காவது அவர்கள் உயிர்விட்டு சிறைக்குப்போய் வந்த சரித்திரத்திலே பார்த்தது உண்டா? உயிர்விட்டார்கள். ரேடியோ வர்கள், வீட்டிலேயே கேட்டுக்கொண்டிருக்கும்போது உயிர்போய் விலே செய்தியைக் விட்டது என்று எல்லாம் செய்திகள் வந்தன.

ஆகவே, அப்படிப்பட்ட எண்ணத்தைக் கைவிடவேண்டும் என்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன். இப்போது அவர்கள் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது. பிப்ரவரி 15ஆம் தேதிக்கு முன் அந்தக் கோரிக்கையின் மீதான 'ஒன்-மேன்-கமிஷன்' முடிவு வந்து, அரசு நியாயமான முடிவைச் செய்து, அவர்களுக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய நிலைமைகளை மாற்ற வேண்டும். அவர்களைத் தரம்தாழ்த்துவதை நிறுத்தி, அவர் களுக்கு நியாயமான அந்தஸ்து கொடுக்கவேண்டும். அவர் களுடைய உள்ளப் பொறுமல்களைத் தீர்க்க வழி செய்ய வேண்டும்.

[திரு. கு. ரமணி] [1986 சனவரி 11

அதே மாதிரி, அரசு ஊழியர்களுடைய நிலைமை. அரசு ஊழியர்கள் ஆரம்பத்திலே அந்த போராட்டத்திற்குப் போக வில்லை. தங்களுடைய சொந்தப் பிரச்சினையை முன் வைத்துத் தான் கிளர்ச்சி செய்துகொண்டிருந்தார்கள். ஆசிரியர்களுக்கு ஏற்படும்படியான கொடுமையான நிலைமையைக் கண்டு ஒரு சகோதர இயக்கமாக, அவர்களுக்கு இருக்கும் தொழிற்சங்க ஜனநாயக உலமையை ரிஉரிமையை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் அதைப் பயன்படுத்தினார்கள். அவர்களுடைய ஆதரவு ஆசிரியர்களுடைய கோரிக்கைக்கு சேர்ந்தது. அவர்கள் தங்க ளுடைய கிளர்ச்சியை, மிக சமாதானமாக, அமைதியாக உண்ணா விரதம் போன்ற முயற்சியில் ஈடுபட்டுச் செய்தார்கள்.

ஆனால், அரசு என்ன செய்தது? கோபத்தோடு அவர்களைத் தாக்கியது. சாதாரணமான தாக்குதல் இல்லை. அவர்களுடைய சங்கத்தின் அங்கீகாரத்தை ரத்துசெய்தது. 23 முக்கிய ஊழியர்கள் சஸ்பெண்டு செய்யப்பட்டு இருக்கிறார்கள்.

ஆனால், அவர்கள் தங்கள் போராட்டத்தை தொடர்ந்து கொண்டுபோகவில்லை. அந்தப் போராட்டத்தை அவாகள் கைவிட்டார்கள். ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் கிளர்ச்சி இன்றைக்கு நடக்கவில்லை. அது தீர்ந்துபோய்விட்டது. அப்படி இருந்தும், சஸ்பெண்டு செய்யப்பட்டதும், சங்க அங்கீகாரம் பிடுங்கப்பட்டதும் பாக்கி நிற்கிறது. அப்படியானால் அர்த்தம் என்ன? மழை விட்டும் தூவானம் விடவில்லை.

ஒரு போராட்டம் நடந்து முடிந்தால், மிகப் பெரிய கிரிமினல் குற்றங்களைச் செய்து இருந்தால், அது அல்லாது. பாக்கி இருக்கக்கூடிய சாதாரணப் பிரச்சினைகளை நீக்குப்போக்குடன் அரசு கவனிப்பதும், நியாயமான முறையிலே நடவடிக்கை எடுப்பதும் வழக்கம். இது சாதாரண தொழிற்சங்க, விவசாயச் சங்க, மாணவர்கள் மற்றும் மற்றவர்கள் விஷயத்திலே கையாளப் படுகிற ஒருகொள்கை. ஏன், அதை அரசு ஊழியர்கள் மத்தியிலே கையாள மறுக்கிறீர்கள்?

அவர்கள் மீது உங்களுடைய கோபம் தாள முடியவில்லை, அவர்களும் ஆசிரியர்களுக்கு ஆதரவாக நிற்கிறார்களே என்று. அப்படி கோபப்படுவது சரியல்ல. அந்த 7 இலட்சம் அரசு ஊழியர்கள் மக்களுக்காக செயல்பட்டுக் கொண்டிருக்கிறவர்கள். இப்படிப்பட்ட நிலைமைகள், இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் எல்லாம் நம்முடைய மதிப்பிற்குரிய ஆளுநர் உரையிலே இடம் பெறவில்லை.

(பிற்பகல் 12-20)

அதுதான் வருந்தத்தக்க விஷயம். அதனால் தான் நாங்கள் வெளிநடப்பு செய்கிறோம் என்ற நிலையில் ஒரு நியாயத்திற்கு மீறியும், ஜனநாயகத்திற்கு விரோதமாகவும், நாங்கள் செய்யக் கூடியவர்கள் அல்ல. ஆக நியாயத்திற்கு நாங்கள் கடைசி



1986 சனவரி 11] [திரு கு. ரமணி]

வரையில் போராடக்கூடியவர்கள். அந்த முறையிலே நாங்கள் வெளிநடப்பு செய்தோம். அது நியாயம் என்பது என்னுடைய கருத்து. அப்படிப்பட்ட மரபுகளை நாங்கள் பரிபூரணமாக கடைபிடித்து வருகிறோம்.

அடுத்து வாழ்க்கைத் தொழில் கல்வி. 969 மேல்நிலைப் பள்ளிகளில் வாழ்க்கைத் தொழில் பாடமுறைகள் கொண்டு வரப்பட்டுள்ளன. வாழ்க்கைத் தொழில் கல்வி பாடமுறையை அதிக அளவில் செயலாக்குவது மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் என்று நம்புகிறோம் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் கேட்கிறேன். பாதிக்கும் மேற்பட்ட வாழ்க்கைத் தொழில் கல்வி நிலையங்களில், அந்தக் கல்வியை மட்டும் இரண்டு வருஷத்திற்குக் கற்று, வெளியிலே வந்தால், எந்த ஒரு பேக்டரி யாவது வேலை கொடுக்குமா? எந்தத் தொழில் நிறுவனமாவது அவர்களை நேரடியாக நியமித்து, வேலையில் சேர்த்துக் கொள்ளுமா? அப்படிப்பட்ட அளவிற்கு அந்தக் கல்வியின் தரம், குறிப்பாக முழு அளவிற்கு, அந்த நிலையை அடைய வில்லை. அதற்கு காரணம் என்னவென்றால். அந்தப் பள்ளியிலே தொழிற் கல்வி கற்பதற்கான நவீன கருவிகளும், இயந்திரங் களும் இல்லை. எனவே அவைகள் உருவாக்கப்படவேண்டும். ஒரு சில பள்ளிகளை ஒன்றாகச்சேர்த்து சிறிய எஞ்ஜினியரிங் ஒர்க்ஷாப் போன்றவற்றை ஏற்படுத்தி அவர்களுக்கு முழுவதுமாக, ப்ராக்டிகல் ட்ரைனிங் நடைமுறைப்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும். அது இல்லையென்று சொன்னால், நீங்கள் 969-க்கும் மேல் பள்ளிகளின் தேவைகளை நிறைவு செய்துவிட்டோம் என்று சொல்லலாமே தவிர, உண்மையிலேயே அது ஒரு பெரிய சாதனையாக இருக்காது என்பதையும், வாயாலே சொல்லலாமே தவிர, நடைமுறையில் வாழ்க்கையில் அந்த நிலைமை சரியாக வராது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

மத்திய அரசாங்கத்தினுடைய புதிய கல்விக் கொள்கையின் அம்சங்களை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. நாடு முழுவதும் அது விவாதிக்கப்பட வேண்டிய விஷயம். 2001-ஆம் வருஷத் திற்கு நாம் போவதற்குள் உலகத்தின் எந்த மூலை முடுக்கு களிலே, எங்கெங்கே மிகப் பெரிய விஞ்ஞான அபிவிருத்தி ஏற் பட்டிருந்தாலும், அதை இந்தியாவிற்குக் கொண்டு வந்து, கம்ப் யூட்டராக, எலக்டரானிக் டிவைசாக கொண்டு வந்து, செயல் பட வேண்டும். அது தான் நோக்கம். கோடிக்கணக்கான மக்கள் வேலையற்று நிற்பவர்களுக்கு வேலை கொடுக்கும் காரியத்திற்கு அந்தக் கொள்கை எப்படி பயன்படும்? விவசாயி களுக்கு நிலங்களைப் பங்கிட்டுக் கொடுக்காமல், அந்த வேலை யில்லா பிரச்சினை எப்படி தீரும்? சிறு தொழில்களை அபிவிருத்தி செய்யாமல், அந்தப் பிரச்சினை எப்படி தீரும்? இன்றைக்கு இருக்கின்ற தொழில்களை மூடிக் கிடக்கின்ற

தொழில்களை திரும்பவும் நடத்த நடவடிக்கை எடுக்காமல்,
அந்தப் பிரச்சினை எப்படி தீரும்? அந்த உயர்ந்த தன்மையில்
இருக்கக்கூடிய டெக்னிக்கல் டெவலப்மெண்டிற்கு பயிற்சி பெற
ஒரு சிறு கூட்டம் தேவை. அந்த நிலைமை இன்றைக்கு
உருவாகியிருக்கிறது.

கோடிக்கணக்கான ஏழை, எளிய மக்களின் குழந்தைகளுக்கு
கொடுக்கப்பட வேண்டிய கல்வி வசதி கிடையாது. அதை
எதிர்த்து, கடுமையான எதிர்ப்பு. உருவாகிக் கொண்டு
வருகின்றது. ஆகவே அப்படிப்பட்ட சுய நிதிக் கல்வி என்று
கொண்டு வரக் கூடாது. அவர்கள் பணம் போடுகிறார்கள்.
நிலத்தைக் கொடுக்கிறார்கள். ஆக இதையெல்லாம் செய்கிறார்
கள். ரூ. 60, 70 இலட்சம் பணம் செலவு செய்கிறார்கள்
என்று மட்டும் இந்த அரசு பார்த்து, ஏராளமான கல்லூரிகளை
நடத்த ஆரம்பித்து விட்டால், உண்மையிலேயே கல்வித் தரத்தில்
கட்டுப்பாடும், முறையும் சீர் குலைந்து போகும். சாதாரண
மக்களுக்கு கல்வி கிடையாது. ஏழை மக்களாக இருப்பவர்
களுக்கு, உயர்ந்த கல்வி பெற முடியாத நிலைமை ஏற்படும்.
பெரும் பணக்காரர் கூட்டத்திற்கு மட்டும் உதவி செய்யக்கூடிய
நிலைமை போய்ச் சேரும். ஆகவே அப்படிப்பட்ட கண்
ணோட்டத்தோடு பார்க்காமல், ஏழை எளிய மக்களின் கண்
ணோட்டத்தோடு இதை அணுக வேண்டும், என்பது எங்களுடைய
வாதம். இதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

மத்திய அரசு அறிவித்துள்ள துணிக் கொள்கை, கைத்தறித்
துறைக்குப் போதுமான ஆதரவு அளிக்காது என்று நாம்
ஏற்கெனவே மத்திய அரசுக்குத் தெரிவித்துள்ளோம், என்று
குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் கேட்கிறேன், மத்திய அரசி
னுடைய துணிக் கொள்கை. இந்தக் கொள்கையைப் பற்றி
இந்த சர்க்காருடைய அண்டர்ஸ்டாண்டிங் என்ன? இந்த
சர்க்கார் இது குறித்து என்ன முடிவிற்கு வந்திருக்கிறது? துணிக்
கொள்கை என்று சொன்னால், கைத்தறி மட்டும் அல்ல,

It is the Integrated Policy of the Central Government.

அதிலே மூன்று பிரிவுகள் இருக்கின்றன. மில்கள் இருக்கின்றன.
விசைத் தறி இருக்கிறது, கைத்தறி இருக்கிறது. இந்த மூன்றும்
சேர்ந்தது தான் டெக்ஸ்டைல். அதிலே என்னென்ன வருகிறது?
அதிலே பஞ்சாலை உற்பத்திக் துணிக்கு 30 சதவீதம். இதிலே
13 இலட்சம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். விசைத்தறி
என்பது 40 சதவீதம் உற்பத்தி; 38 லட்சம் தொழிலாளர்கள்
அதிலே இருக்கிறார்கள். அதைப் போலவே கைத்தறியிலே 30
சதவீதம் உற்பத்தி; அதிலே 75 லட்சம் தொழிலாளர்கள்
இருக்கிறார்கள். இப்படி மொத்தம் 1 கோடியே 20 லட்சம்
தொழிலாளர்கள் 6 கோடி குடும்ப உறுப்பினர்கள் அதிலே
உள்ளார்கள். மிகப் பெரிய வேலை வாய்ப்புக்களை அளித்துக்
[illegible]. இன்றைக்கு அதற்கு ஆபத்து ஏற்பட்டிருக்



கிறது. அந்த ஆபத்தைப் பற்றி ஆளுங் கட்சியைச் சேர்ந்த
மெம்பர்களே பாராளுமன்றத்திலே சொல்லி அதை எதிர்த்
தார்கள். அவர்கள் சர்க்கார் கொண்டு வருவதால் விரோத
மாகுமே என்று நினைத்தார்களா இல்லை. இன்றைக்கு மில்
முதலாளிகள் எந்த அனுமதியும் இல்லாமல் உள்ளே வருவதற்கு
கதவு திறந்து விடப்பட்டிருக்கிறது. 30 சதவீதம் துணி உற்பத்தி
செய்யக்கூடிய முதலாளிகள் இன்றைக்குப் பலன் பெற்றுக்
கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எந்த மாறுதலையும் அபி
விருத்தியையும் செய்ய வேண்டுமென்றால் ரேஷனலைஸ் செய்ய
வேண்டுமென்றால் அதற்காக ஆட் குறைப்பு, புதிய இயந்திரங்
கள் வாங்குதல் போன்றவற்றிக்காக இன்றைக்கு மத்திய அரசு
அவர்களுக்காக 581 கோடி ரூபாய் குறைந்த வட்டியில் 4
சதவீதம் வட்டியில் கொடுத்திருக்கிறது. என்ன நிலைமை
பாருங்கள். இங்கே ஒரு மேட்டூர் மில்லைத் திறப்பதற்கு வழி
யில்லை. கோயம்புத்தூரிலே மூடப்பட்டுக் கிடக்கிற 6 ஆலை
களைத் திறப்பதற்கு வழியில்லை. ஆனால் மில் முதலாளிகளுக்குத்
தான் மத்திய அரசு உதவி செய்கிறது. அந்த முதலாளிகளுக்கு
எப்படி பணம் சேருகிறது, பாருங்கள். மில் முதலாளிகள் ஆட்சி
தான் என்று சொல்லக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அப்படிப்
பட்ட நிலைமை தொடர்ந்து வந்தால் இன்றைக்கு விஸ்கோஸ்
கூட மூடப்பட்டுவிடும், பன்னாட்டு மூலதனம் என்ற பெயரால்
பிற நாடுகளிலிருந்து இங்கே தொடங்க ஆரம்பித்தார்கள்
என்றால் மகாராட்டிர மாநிலத்திலே பிவாண்டி என்ற இடத்திலே
2 இலட்சம் தொழிலாளர்கள் வேலை செய்யும் தொழிற்சாலை
மூடப்பட்டுக் கிடக்கிறது. தமிழ்நாட்டிலேயும் மூடப்படும் அபா
யம் வந்து கொண்டிருக்கிறது. உங்களுடைய உறவு மைய அர
சோடு எப்படி வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள் ஆனால்
இந்த ஆபத்தை நீங்கள் எடுத்துச் சொல்ல வேண்டாமா? அவர்
களின் துணிக் கொள்கை இந்த நாட்டிற்கு உகந்தது அல்ல
என்று எடுத்துச் சொல்ல வேண்டாமா? சொல்லா விட்டால்
என்ன பிரயோசனம்? ஏதோ கைத்தறிக்கென்று எங்களுக்குக்
கொஞ்சம் கொடுத்தால் போதும் என்று நீங்கள் சொல்லக்கூடிய
நிலைமை இருக்கிறது. அவர்கள் நல்ல முறையிலே உங்களோடு
சிநேகம் பேசலாம், அதனாலே உங்களுக்குப் பணம் கிடைக்காது.

அதே மாதிரி தொழில் வளர்ச்சி. இன்றைக்கு அதுபற்றி
விரிவாகப் பேசுவதற்கு எனக்கு நேரம் இல்லை. 1985ஆம்
ஆண்டு மார்ச் மாதம் 8ஆம் தேதியன்று இதே மன்றத்திலே
ஆளுநர் உரையை நீங்கள் திருப்பிப் பாருங்கள். இன்றைக்கு
என்ன உரையாற்றினார் என்பதையும் பார்க்க வேண்டும்.
அன்றைக்கு ஆற்றிய உரையிலே தொழில் துறையிலே தமிழ்நாடு
சீராக முன்னேறி வருகிறது என்று சொன்னார்கள். இந்த
உரையிலே அப்படிச் சொல்ல முடியுமா? முடியாது. இன்றைக்கு
தொழில் துறை சீராக முன்னேறி வருகிறது என்று சொல்ல
முடியுமா? முடியாது. மேலும் அன்றைக்கு ஆளுநர் ஆற்றிய

[திரு கு. ரமணி] [1986 சனவரி 11

உரையிலே இன்னொன்றைச் சொன்னார். தொழில்கள் இல்லாத
மாவட்டங்கள் என்று பிரகடனப்படுத்தாதது குறையாக இருக்
கிறது, ஆகவே தொழிற்சாலைகள் இல்லாத மாவட்டங்களை
அறிவித்தாக வேண்டும் என்று நீங்கள் கேட்ட அந்தக் கொள்
கையை மத்திய அரசு ஒத்துக் கொண்டு பிரகடனப்படுத்தியதா
என்றால் இல்லை. அதைப் போலவே தொழில் வளர்ச்சி
இல்லாத வட்டாரத்தை ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்கப்
பட்டது. அப்படி நீங்கள் கேட்டது ஏற்றுக் கொள்ளப்பட்டதா?
அதைச் செய்தார்களா ? இல்லை. அப்படிச் செய்தார்களா
இல்லையா என்பதை இந்த அறிக்கையிலே சொல்லியிருக்க
வேண்டுமா இல்லையா ? சொல்லவில்லை. அப்படி சொல்லா
விட்டால் என்ன பிரயோசனம்? இப்படி ஒவ்வொரு தரமும்
ஒவ்வொரு அறிக்கையை படித்துக் கொண்டிருப்பதால் என்ன
பயன்? அதனால் தான் இது ஒரு வாடிக்கையாகிப் போய்
விட்டது என்று சொல்வதற்கு அது காரணமாக அமைந்திருக்
கிறது.

அதைப் போலவே திருச்சியிலே இரண்டாவது இரயில்
பெட்டித் தொழிற்சாலையை ஆரம்பிக்க மாநில அரசு நிலத்தை
ஒதுக்கியிருக்கிறது, மத்திய அரசு உத்திரவு வந்துவிடும் என்று
சொன்னார்கள். மத்திய அரசு உத்தரவு வந்ததா ?
இனிமேல் வரப் போகிறதா ? வரவில்லை,
அதைப் போலவே மணலியில்
ரசாயன உரம் தயாரிக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்க மத்திய
அரசிடமிருந்து உத்திரவை எதிர் பார்க்கிறோம் என்று சொல்லப்
பட்டது. எதிர்பார்த்து எத்தனை வருடங்கள் ஆகின்றன ?
உத்தரவு கிடைத்ததா ? கிடைக்கவில்லை. அதைப் போலவே
உதக மண்டலத்திலே இந்துஸ்தான் போட்டோஸ் பிலிம்ஸ்
தொழிற்சாலை விரிவாக்கம் பற்றிச் சொல்லப் பட்டது.
அந்த ஆலையை விரிவுபடுத்த வேண்டுமென்று எத்தனை வருடங்
களாக இதே மன்றத்திலே எத்தனை முறை பேசியிருக்கிறோம்,
பதில் கிடைத்ததா ? இல்லை. இன்றைக்கு என்ன கேட்டிருக்
கிறோம் என்று சொன்னால், அங்கே கலர் திரைப்படச் சுருள்
உற்பத்தி செய்யும் தொழிற்சாலைக்கு 200 கோடியும், எக்ஸ்ரே
தொழிற்சாலைக்கு 100 கோடி ரூபாய்க்கு மேலும் பணம்
வேண்டும் என்று. அது கிடைக்குமா ? கேட்டுக் கொண்டிருக்
கிறோம். ஆனால் கிடைக்காது. அப்படிக் கிடைக்கவில்லை
என்பதும் சொல்லப்பட மாட்டாது.

(பிற்பகல் 12-30)

சேலம் உருக்காலை முழு அளவு உருக்காலையாக ஆக்கப்
படும் என்று எதிர் பார்க்கிறோம். ஆனால் எதிர் பார்ப்பிற்கும்
நடப்பதற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது. எதிர்பார்த்து
எதிர்பார்த்து ஏமாந்து போய்க் கொண்டிருக்கிறோம், இலவு
காத்த கிளியாக இருக்கிறோம்.



1986 சனவரி 11] [திரு கு. ரமணி]

தமிழ்நாட்டில் மத்திய அரசாங்கம் செய்யக்கூடிய முதலீடு மிகவும் குறைவாக உள்ளது. இவையெல்லாம் முன்பு உரையிலே சொல்லப்பட்ட விஷயங்களாகும். ஆனால் மிக அதிகமான முதலீடு என்ன செய்யப்பட்டிருக்கிறது ? எவ்வளவு முதலீடு செய்வதற்கு மத்திய அரசாங்கம் முன் வந்திருக்கிறது ? இங்கு மட்டுமல்லாமல், மாநிலங்கள் தாங்கள் சுய வளர்ச்சி அடைவதற்குத் தடையாக நிற்கக்கூடிய பல்வேறு நடவடிக்கைகளை மத்திய அரசாங்கம் எடுத்து வருகிறது என்பது தொடர்ந்து சொல்லி வரப்பட்டுள்ளது. ஆகவே, தமிழ்நாட்டை மட்டும் சொர்க்க பூமியாக ஆக்கிவிடக் கூடிய காரியத்தை அவர்கள் செய்வார்கள் என்று நினைப்பது தவறு. இந்தியா என்பது எல்லா மாநிலங்களுக்கும் சேர்ந்த ஒரு நாடு. இங்கே பல்வேறு மாநிலங்களும் இருக்கின்றனவா இல்லையா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்.

இங்கே எட்டு பஞ்சாலைகள் மூடிக் கிடக்கின்றன. அவைகளை அரசாங்கமே எடுக்க முடிந்ததா ? 130 சிறு ஃபவுண்டரீஸ் கரி இருப்பு இல்லாமல் இருக்கின்றன. சென்னையில் பல தொழிற்சாலைகளும், மேட்டூரில் தொழிற்சாலையும் மூடிக் கிடக்கின்றன. இவைகளின் நிர்வாகத்தை அரசாங்கம் எடுத்து நடத்த முன்வருமா ? இவற்றையெல்லாம் மத்திய அரசாங்கத்திலேயிருந்து எதிர்பார்ப்பது டிங் டாங் ஃபேஷனாக இருக்கிறது. இங்கேயிருக்கின்ற அதற்கான சட்டங்களின்படி செய்வீர்களா ? நீங்களே செய்ய மாட்டீர்கள். அதைத்தான் டிங்டாங் ஃபேஷன் என்று சொல்கிறேன். அப்படித்தான் நடக்கிறது. இதுதான் எங்கள் குறையாக உள்ளது.

மத்திய ஆட்சியில் உள்ள காங்கிரஸ் கட்சியோடு உங்களுக்கு இருக்கின்ற உறவுதான் உங்களைப் பாதிக்கிறது. அதனால்தான் நீங்களே இந்த விஷயத்தில் நேரடியாகத் தலையிட்டு, ஒரு மாநிலத்தின், தமிழகத்தின், தமிழக மக்களினுடைய தேவைகளை ஒன்றுப்பட்ட இந்தியாவில் உள்ள இந்தத் தமிழக மாகாணத்திற்கு தேவையான காரியங்களைச் செய்து மக்களுக்கு நியாயமாகக் கிடைக்கக்கூடிய நன்மைகள் கிடைப்பதற்கான நிலை இல்லாமல் இருக்கிறது.

அடுத்து, இலங்கைப் பிரச்சனை மிகவும் முக்கியமான பிரச்னையாகும். இந்திய நாடு முழுவதும் உள்ள அனைத்து மாநிலங்களில் உள்ள அனைத்து மக்களும் ஒன்று சேர்ந்து கிளர்ச்சி செய்ய வேண்டிய காரியம் இது. இப்படிச் செய்து, ஜெயவர்த்தனாவைக் கீழே இழுத்துக் கொண்டு வரச்செய்ய வேண்டிய காரியம். இலங்கையில் உள்ள ஜனநாயக சக்திகளும், கம்யூனிட் கட்சியும் அங்கு நடக்கின்ற நிலைமைகளுக்குக் கடுமையான எதிர்ப்பைக் கொடுத்திருக்கிறார்கள். நாம் இப்படிச் செய்தால்தான், ஜனநாயக வளர்ச்சிக்கு எதிராக இருந்துகொண்டு, அமெரிக்காவின் கையாளாக இருந்து செயல்

படும் பல நாடுகளுக்குப் பதில் கொடுக்கின்ற விதத்தில் நிலைமையை ஏற்படுத்தும். அந்த நிலையை இந்திய நாடு முழுவதும் எடுக்கவேண்டும். தமிழ் மக்களின் அவல நிலை அப்போதுதான் நீங்கும். தமிழ் மக்களை இராணுவத்தை விட்டுக் கொலை செய்வதும், ஒன்றேகால் இலட்சம் பேர்கள் இங்கே வந்து தமிழக அரசின் பொருளாதாரத்தைக் சீர்குலைப்பதும் நிற்கும். அவர்களெல்லாம் திரும்பவும் மரியாதையோடு தாயகத்திற்குச் செல்ல வேண்டும் என்று கேட்கிறோம். அவர்கள் அப்படி அங்கே செல்வதற்கான வழியைச் செய்யாமல், இந்தியப் பிரதமர் திரு. சாஸ்திரி அவர்களுக்கும் முன்பிருந்த இலங்கைப் பிரதமருக்கும் ஏற்பட்ட ஒப்பந்தப்படி நான்கு பேர்களுக்குக் குடியுரிமை கொடுத்தால், ஏழு பேர்களை நாம் எடுக்க வேண்டுமென்பது, அதை நாம் ஏற்க மாட்டோம் என்று இந்திய சர்க்கார் உறுதியான நிலையை எடுத்திருக்கிறது.

ஆனால், அது மட்டும் போதாது. பெரும் இயக்கம் நடத்தியாக வேண்டும். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் 15 இலட்சம் மக்கள் கலந்து கொண்ட அந்த மாநாட்டில், இந்திய நாடு முழுவதும் இந்த இயக்கம் நடத்தப்படவேண்டுமென்ற கருத்து சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட நடவடிக்கையை நாம் கையாள வேண்டியிருக்கிறது.

சத்துணவுத் திட்டத்தைப் பற்றிப் பலரும் பலமுறை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதைப்பற்றி பட்ஜெட்டிலே பேசிக்கொள்ளலாம். ஆனால் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். 1,80,000 ஊழியர்கள் அதில் இருக்கிறார்கள். அவர்களுக்கு 150 ரூபாயும், 100 ரூபாயும் என்றும், நாளொன்றுக்கு 2 ரூபாய் 1 ரூபாய் என்று கூலி கொடுத்து, அவர்களை அரைநேர ஊழியர்கள் என்றும் சொல்லி அவர்கள் வாழ முடியாமல் செய்யாதீர்கள். பிறகு அவர்கள் சங்கம் வைத்துக்கொண்டு போராடினால், ஓ! இவர்கள் எங்களை எதிர்த்துப் போராடுவதா? இவர்களை யாரோ தூண்டிவிட்டார்கள் என்று சொல்வீர்கள். நீங்கள் அவர்களுடைய பசியைத் தூண்டிவிடுகிறீர்கள். அந்தத் தூண்டுதலுக்கு இரையாகி நியாயத்திற்காகப் போராடுகின்றபொழுது மற்றவர்கள்மீது அந்தப் பொறுப்பைச் சுமத்தக்கூடாது. எனவே, அவர்களுடைய சம்பளத்தையும், போக்குவரத்து வசதிகளையும் அதிகப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, போலீஸ் அடக்குமுறைகளுக்கு ஒரு முடிவு கட்டியாக வேண்டும். அடுத்து, எங்கும் வளர்ந்து வருகிற லஞ்ச ஊழல். நாம் அதைக் கொண்டுபோய் மூடி வைக்கமுடியாது. பெட்டிக்குள் போட்டு பூட்டுகிற சமாச்சாரம் நடக்காது. அந்த அளவுக்கு நிலை வந்தாயிற்று. கீழிருந்து மேல் வரையில் அந்த அளவுக்கு நிலைமை ஏற்படுகிறது. அதற்கு நீங்கள்



விளக்கம் அளிக்கவேண்டும். உங்களுடைய தகுதிக்கேற்ற நடவடிக்கைகளை நீங்கள் எடுக்க முன் வரவில்லையென்றால் நம்முடைய தீர்த்தகிரி கவுண்டர் அவர்கள்கூட சொன்னார். சாராயக்கடை, கள்ளுக்கடையில் என்ன நிலைமை என்று. அது ஊருக்கு ஊர் தெரியுமே. அது கட்சிக்குள் நிற்குமா? நீங்கள் அனுப்புகிற சுற்றறிக்கையினால் நிற்குமா? நாடு முழுவதும் இருக்கிறது. ஆகவே, இலஞ்சத்திற்கும் ஊழலுக்கும் முடிவு கட்டவும், நடவடிக்கை எடுக்கவும் ஆவன செய்ய வேண்டும். போலீஸ் அடக்குமுறை சர்க்கார் கட்டுப்பாட்டை மீறி, கட்டவிழ்கிற நிலையில் இருக்கக்கூடாது. அதற்கு நடவடிக்கை எடுங்கள் என்று கூறி முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

திரு. ஏ. தங்கராசு: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையை ஒட்டி மாண்புமிகு உறுப்பினர் சின்னராசு அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தின்மீது என்னுடைய கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். மாண்புமிகு ஆளுநர் உரைமீது இங்கே பேசிய உறுப்பினர்கள் அத்தனை பேரும் தன்னுடைய கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையில் சற்றுமுன் பேசிய காங்கிரஸ் உறுப்பினரும் மற்றவர்களும், ஆளுங்கட்சியைச். சேர்ந்தவர்கள் எதற்கெடுத்தாலும் மத்திய சர்க்கார், மத்திய சர்க்கார் என்றும், இங்கே ஆளுகிற சர்க்கார் ஏதோ தவறு செய்வதைப் போலவும், அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஆகவே, அரசாங்கம் என்றால், மத்திய அரசாங்கமானாலும், மாநில அரசாங்கமானாலும் சில இடங்களில் சில தவறுகள் செய்வார்கள், தவறுகள் நடைபெறுகின்றன, உண்மைதான். ஆகவே. எதற்கெடுத்தாலும் மத்திய அரசாங்கம் என்று ஆளுங்கட்சி வரிசையில் பேசுகிறார்கள் என்று அவர்கள் குறைபட்டுக்கொண்டாலும் மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கம் தனிப்பட்ட முறையிலே இருப்பதாக அவர்கள் தெளிவுபட கூறினார்கள். மாநிலத்திலே இருக்கிற அரசுகளை அந்த மாநில மக்களே தேர்ந்தெடுக்கிறார்கள். ஆகவே அந்த வகையில்தான் நமக்குக் கிடைக்கக்கூடிய காரியங்களில் உரிமைக்குக் குரல் கொடுக்கிறோம், உறவுக்குக் கைகொடுக்கிறோம். மாநில அரசாங்க நிர்வாகத்திலும் தவறு ஏற்படுகிறது, மத்திய அரசாங்க நிர்வாகத்திலும் தவறு ஏற்படத்தான் செய்கிறது. ஆகவே, நம்முடைய நிர்வாகத்தில் என்.ஆர்.இ.பி. வேலையில் தவறு நடந்து விட்டது. அதற்காக மத்திய அரசாங்கம் தொகையைக் குறைத்துவிட்டதாக, அந்தப் பொருள்பட இங்கே சொன்னார்கள். எந்த அரசாங்கம் செய்தாலும் தவறுகள் ஏற்படத்தான் செய்கின்றன. நாங்கள் செய்யவேண்டிய காரியங்களில் உரிமைக்குக் குரல் கொடுக்கிறோம். அதுதான் இந்த அரசாங்கத்தின் நோக்கம் என்பதை நான் எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ஏ. தங்கராசு] [1986 சனவரி 11

அதற்குப் பின்னர் இந்த ஆளுநர் உரையில் ஒன்றுமே இல்லை என்று அவர்கள் தெளிவுட எடுத்துக் கூறி இருக்கிறார்கள். இந்த மாநில அரசு, கவர்னர் உரையில், இந்த நாட்டு மக்களுக்குத் தேவைப்படுகிற, ஏழை எளிய மக்களுக்குத் தேவைப் படுகிற காரியங்களையெல்லாம் சுட்டிக்காட்டியிருக்கிறது. மருத்துவ வசதியானாலும், கல்வி வசதியானாலும் தொழில் வளர்ச்சியாக இருந்தாலும், ஊரக வளர்ச்சியாக இருந்தாலும், உணவுப்பொருள் வழங்குகின்ற திட்டமாக இருந்தாலும், கூட்டுறவு ஆலை, உற்பத்தி ஆலைகளாக இருந்தாலும், நெசவாளர்களுக்கு ஏற்பட்டிருக்கிற இன்னல்களை மத்திய அரசக்கு வலியுறுத்துவ தானாலும் இப்படி பல்வேறு வகைகளில் எல்லாவற்றையும் வலியுறுத்தும் வகையில் இந்த ஆளுநர் உரை அமைந்திருக்கிறது. இந்த மாநிலத்தில் சிறு தொழிலானாலும் பெருந்தொழிலானாலும் மின்சாரம் தான் அடிப்படையாக அமைகிறது. அந்த அடிப்படை யில்தான் ஆளுநர் உரையில் மின்சாரத்திற்கு ரூ. 2,000 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் பெருமையோடு குறிப்பிட விரும்புகிறேன்.

(பிற்பகல் 12–40)

அதற்குப் பின்னாலே, 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்ற முறையிலே, விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டுமென்ற முறையிலே ஆளுநர் உரை அமைந்திருக்கிறது. அதனால் விவசாயிகள் பாராட்டுகிறார்கள். விவசாயப் பெரு மக்களுக்கு ஊக்க போனஸ் அதிகமாக்கப்பட்டிருக்கிறது. ஊக்கப் போனஸ் 15 ரூபாயாக இருந்தது 20 ரூபாயாக ஆக்கப்பட்டு, அதற்குப் பின்னாலே 20 ரூபாயிலிருந்து 30 ரூபாயாக விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. ஆகவே ஆளுநர் உரை விவசாயிகள் மத்தியிலே எவ்வளவு அக்கரையோடு வரவேற்கப்படுகிறது என்பதை அறிந்துகொள்ளலாம். நானும் ஒரு விவசாயி என்ற முறையிலே ஆளுநர் உரைக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்படி பல்வேறு கோணங்களில் ஆளுநர் உரை அமைந்திருக் கிறது. அதற்குப் பின்னாலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய சத்துணவுத் திட்டத்தின் மூலம் 86.88 இலட்சம் பேர் பயனடைகிறார்கள். சீருடை வழங்குவதற்காக, அந்த உடைகளைத் தைத்துக்கொடுக்கின்ற வகையிலே தையல் வேலையின் மூலம் 40,000 தாய்மார்கள் வேலைவாய்ப்பு பெறுகின்றார்கள், கிராமங்களில் ஒரு பழமொழி சொல்வார்கள், ''ஒரே கல்லில் இரண்டு மாங்காய்'' என்று. சத்துணவும், சீருடையும் வழங்குவதால் 40,000 பெண்கள் வேலைவாய்ப்பு பெறுகிறார்கள் என்பதை ஆளுநர் உரையில் சுட்டிக்காட்டி யிருக்கிறார்கள். இதைப்போன்று பல்வேறு கோணங்களில் ஆளுநர் உரை சிறப்பாக அமைந்திருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.



1986 சனவரி 11] [திரு. ஏ. தங்கராசு]

அதற்குப் பின்னாலே ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு என்று இதுவரை 5 இலட்சம் வீடுகளை அரசு கட்டி வந்திருக் கிறது. இந்த ஆளுநர் உரையில் இதுவரை வீடு இல்லாமல் இருந்த ஏழை எளிய மக்கள், பின்தங்கிய மக்கள், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கிற மக்கள் 5 இலட்சம் பேர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க இந்த அரசு முனைந்திருக்கிறது என்று சொன்னால் இதைவிட வேறு என்ன செய்ய வேண்டுமென்று எண்ணிப்பார்க்க வேண்டும். கிராமப்பகுதி மக்களுக்கு, வாழ்க் கையில் நலிந்த மக்களுக்கு, பாட்டாளி மக்களுக்கு 5 இலட்சம் வீடுகள் கட்டித்தருகிறார்கள் என்றால் அந்த மக்கள் மீது எவ் வளவு அன்பைச் செலுத்தியிருக்கிறார்கள் என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று மின்சார வசதி, உணவு வசதி. பள்ளி வசதி, என்றெல்லாம் இருந்தாலும் வீட்டு வசதியும் ஏற்படுத்தி ஏழை எளிய மக்கள் மீது அன்பைப் பொழிந்திருக்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்ட விரும்புகிறன்.

அடுத்து, வடகிழக்குப் பருவமழை தென்னாற்காடு மாவட் டத்தில் பொய்த்திருக்கிறது என்று எனக்கு முன்னாலே பேசிய அருமை நண்பர் அன்பழகன் அவர்கள் குறிப்பிட்டார்கள். வறட்சியால் தென்னாற்காடு மாவட்டம் மிகவும் பாதிக்கப் பட்டிருக்கிறது என்று எடுத்துச் சொன்னார்கள். தென்னாற் காடு மாவட்டத்தில் கடலோரப் பகுதிகளாக இருக்கிற பகுதி களில், குறிஞ்சிப்பாடியாக இருந்தாலும், புவனகிரியாக இருந் தாலும், நெல்லிக்குப்பமாக இருந்தாலும், சிதம்பரமாக இருந் தாலும் பெரும் பாதிப்பு அங்கே எல்லாம் ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் அந்தப் பகுதியிலே உடனடியாக அரசாங்கம் நிவாரணப் பணிக்கான வேலைகளைத் தொடங்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஆளுநர் உரையிலே மாவட்டங்களை இரண் டாகப் பிரிப்பதுபற்றி கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். குறிப்பாக, திருநெல்வேலி மாவட்டத்தையும் வடாற்காடு மாவட்டத்தையும் பிரிப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் இங்கே இருக்கின்ற காரணத்தால் அவர்களுடைய மேலான கவனத்திற்கு ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். தென்னாற்காடு மாவட்டத்தைப் பிரித்து, வள்ளலார் மாவட்டம் அமைக்கப்படும் என்று புரட்சித் தலைவர் அவர்கள் அறிக்கை வெளியிட்டிருந்தாலும் இன்னும் அதற்கான பணிகள் தொடங்கப்படவில்லை. வருகிற ஆண்டி லேயாவது தென்னாற்காடு மாவட்டத்தை இரண்டாகப்பிரித்து வள்ளலார் மாவட்டத்தை உருவாக்க ஏற்பாடு செய்ய வேண்டு மென்று வலியுறுத்தி, தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஏ. தங்கராசு] [1986 சனவரி 11

மொத்தத்தில் நம்முடைய ஆளுநர் உரையில் ஏழை எளிய மக்கள், பின்தங்கிய மக்கள், நலிந்த மக்கள், வறுமைக்கோட் டிற்குக் கீழே இருக்கிற மக்கள் எல்லாம் வாழ்க்கையில் முன்னேற வேண்டுமென்ற அடிப்படையிலே பல்வேறு நல்ல திட்டங்களை அறிவித்திருக்கிறார்கள். ஆகையால் இந்த ஆளுநர் உரையை நான் வரவேற்று, பாராட்டி, என்னுடைய உரையை முடிக் கிறேன், நன்றி, வணக்கம்.

*திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைமீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

ஆளுநர் உரை நிகழ்த்தியபோது நாங்கள் வெளிநடப்புச் செய்திருக்கிறோம். வெளிநடப்புச் செய்ததற்குக்கூட காங்கிரஸ் கட்சியினர் உரிமைப்பிரச்சனை கொண்டுவந்தார்கள். நாங்கள் ஆளுநரை உதாசினம் செய்ய வேண்டுமென்று வெளிநடப்புச் செய்யவில்லை. ஆளுநர் உரையில் பல்வேறு விஷயங்கள் சுட்டிக் காட்டப்படவில்லை என்பதை ஆளுநருக்கும் அரசுக்கும் தெரி விக்க வேண்டுமென்பதற்காகத்தான் வெளிநடப்புச் செய்தோம்.

இன்றைக்கு அரசு தொடர்ந்து கையாண்டுவருகிற கொள்கை தொழிலாளர்களானாலும் சரி, விவசாயிகளானாலும் சரி, ஊழியர்களானாலும் சரி, இன்னபல பிரிவினரானாலும் சரி, அரசு அவர்கள் போராடுகிறபோது உரிய காலத்திலே அழைத்துப் பேசி, உடனடியாகத் தீர்வு காணக்கூடியதாக இல்லை. இரப்பர் இழுப்பழுபோல் இழுத்துக்கொண்டே போய், கடைசியில் சட்டம், ஒழுங்கு சீர்கெட்டு, துப்பாக்கிச் சூடு நடத்தி, உயிர்பலி வாங்கக்கூடிய அளவுக்கு கொண்டுபோய்விடுகிறது. இந்தப் போக்கை அரசு மாற்றவேண்டும். குறிப்பாக மீனவர்கள் பிரச்சினை. இந்த நகரத்தில் கடற்கரைப் பகுதியை அழகு படுத்த வேண்டும் என்று சொன்னீர்கள் அப்படி என்றால் அந்த மீனவர்களைக் கூப்பிட்டுப் பேசி அதற்கு உரிய வகையில் தீர்வு கண்டிருக்கலாம். ஆனால் யாரோ ஒருவர் தூண்டுகிறார் என்று சொல்லி இன்றைக்கு அந்தப் பிரச்சினை முற்றி அதன் காரணத்தால் 7 மீனவர்களின் உயிர் பறிக்கப்பட்டிருக்கிறது இதைக் கவலையோடு நாம் பார்க்க வேண்டும்.

அடுத்து ஆசிரியர்கள் பிரச்சினை. அவர்கள் 3 இலட்சம் பேர். இன்றைக்கு விலைவாசி எல்லாம் ஏறி இருக்கின்ற நிலை மையில் ஆசிரியர்கள் அதிகச் சம்பளம் வேண்டும் என்று கூற லாம். ஆனால் அவர்கள் அவ்வாறு கோரிக்கை வைக்கிறபோது சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் அழைத்துப் பேசி எந்த அளவுக்கு விரைவாக அந்தப் பிரச்சினையைத் தீர்க்க முடியுமோ அந்த அளவுக்குத் தீர்த்திருக்க முடியும். ஆனால் வெவ்வேறு காரணங்களைச் சொல்லி இழுக்கடித்து 40 ஆயிரம் ஆசிரியை ஆசிரியர்களைக் கைது செய்து தீபாவளி அன்று கூட அவர்



1986 சனவரி 11] [திரு. பொ. உத்திராபதி]

களுக்கு விடுதலை கிடைக்காத நிலைமையில் அவர்கள் சிறையில் அடைக்கப்பட்ட கொடுமை நாம் அனைவரும் அறிந்ததாகும். இந்தப் பிரச்சினையிலே ஆசிரியர்களுக்குக் கொடுத்த வாக்குறுதிப் படி, ஒரு நபர் கமிஷனுக்கு சம்பந்தப்பட்ட அறிக்கைப்படி பிப்ரவரி மாதம் 15-ஆம் தேதிக்குள் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். பொங்கல் பரிசு கொடுப்பதாகச் சொல்லி யிருக்கிறீர்கள். ஆனால் 150 ரூபாய் பணமும், 150 ரூபாய்க்குக் கைத்தறித் துணியும் வழங்கப் போவதாக அறிவித்திருக்கிறீர்கள். இப்பேர்ப்பட்ட போக்கை மாற்றி உடனடியாக அவர்கள் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும்.

அடுத்து தலைமைச் செயலக ஊழியர்கள் இங்கே பணி யாற்றக் கூடியவர்கள். அவர்கள் சில கோரிக்கைகளை வைத்து போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். அவர்களைத் தலைமைச் செயலாளர் அவர்களே கூப்பிட்டுப் பேசி பிரச்சினையைத் தீர்த் திருக்கலாம். அதையும் இழுக்கடித்துவிட்டு, பிறகு 33 ஊழியர் கள் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மீண்டும் வேலை கொடுத்து அவர்களுடைய சங்கத்தை அங்கீ கரித்து அவர்களுடைய பிரச்சினையை உடனடியாகத் தீர்க்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வளர்ச்சிப் பணிகள் தொடர்ந்து தடைப்படுகின்றன. அதற்குக் காரணம் இயற்கைச் சீற்றம் என்று சொல்லப்பட்டிருக் கிறது நீங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு தொடர்ச்சியாக 1977–ஆம் ஆண்டு முதல் 1985-ஆம் ஆண்டு வரையிலும் புயல், வறட்சி, வெள்ளம் ஏற்பட்டது. இந்த ஆண்டு கூட கடுமை யான மழை. வெள்ளம் ஏற்பட்டது. ஆக இப்படி எல்லாம் வருகிறபோது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் காலத்தோடு உரிய நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டும். மதுராந்தகம் போன்ற ஏரிகள் எல்லாம் உடைப்பெடுத்து பெருத்த சேதம் ஏற்பட்டிருக்கிறது. சென்னை, தென்னாற்காடு, வடாற்காடு, தஞ்சாவூர் போன்ற மாவட்டங்களில் எல்லாம் 200 கோடிக்கு மேல் சேதம் ஏற்பட்டிருக்கின்றது. ஆறுகள், ஏரிகள், மின்சாரம், பள்ளிக்கூடம், சாலைகள், குறிப்பாகப் பேருந்துகள் போன்றவைகள் எல்லாம் சேர்ந்து கிட்டத்தட்ட 200 கோடிக்கு மேல் தமிழகத்தினுடைய பொருளாதாரம் பாதிக்கப்பட்டிருக் கின்றது.

மத்திய குழு வந்தபோதுகூட நாங்கள் தஞ்சை மாவட்டத்தில் என் தொகுதியிலிருந்து மனு கொடுத்தோம். தஞ்சை மாவட்டத்தில் 50 கோடிக்கு மேல் சேதம் ஆகி இருக்கிறது. தமிழகம் முழுவதும் 200 கோடிக்கு மேல் சேதம் ஆகி இருக்கின்றது. எனவே நிவாரணத் தொகையான 200 கோடி ரூபாய் தமிழக அரசுக்குக் கொடுக்கவேண்டும் என்று கேட்டிருந் தோம். ஆனால் மத்திய அரசு தருவதாக அறிவித்திருப்பது 66 கோடியே 81 இலட்சம்தான். ஆனால் நான் ஒன்று

கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மத்திய அரசு ஏதாவது
ஒன்றை அறிவித்துவிட்டால் உடனே பாராட்டு தெரிவிக்
கிறீர்கள். நன்றி தெரிவிக்கிறீர்கள். அவ்வாறு செய்வதை நான்
வரவேற்கிறேன். ஆனால் தமிழகத்தில் 200 கோடி ரூபாய்க்கு
மேல் சேதம் ஏற்பட்டிருக்கின்ற நிலைமையில் 66 கோடிதான்
தருவது என்பது பற்றாக்குறையாகும். மாநில அரசு 26.26 கோடி
ரூபாய்க்கு ஏற்கெனவே அனுமதி வழங்கி இருக்கிறது என்று
சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் வெள்ள நிவாரணப் பணியில்
ஊழல்கள் அரசியல் தலையீடுகள். அதிகாரிகள் அதைக்
தவறாகப் பயன்படுத்துகிறார்கள். எனவே இந்த நிலைமைகளை
எல்லாம் போக்க வேண்டும். மத்திய சர்க்கார் 200 கோடி
ரூபாய் கொடுக்க வேண்டும்.

வளர்ச்சிப் பணி என்கிறபோது மின்சாரம் மிக முக்கியத்துவம்
வாய்ந்ததாக இருக்கிறது. மின்சார உற்பத்தி வளர்ச்சிபெற
வேண்டும். மின்சாரம்தான் ஒரு நாட்டினுடைய தொழிற்
சாலைகள் மற்றும் பல்வேறு காரியங்களுக்கு அடிப்படையான
தாகும். போன சட்டமன்றக் கூட்டத் தொடரின்போது
அவினாசித் தொகுதி தொழில்துறையில் பின்தங்கிய தொகுதி
யாக அறிவிக்கப்பட்டது. அதன்படி 120 சிறு தொழில்கள்
தொடங்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் அந்த 120 சிறு
தொழில்களுக்கு இன்னும் மின்சாரம் வழங்கவில்லை என்று
எனக்குத் தகவல் வந்திருக்கிறது. ஒரு பக்கம் உற்பத்தியைப்
பெருக்கவேண்டும் என்று சொல்கிறீர்கள். இன்னொரு பக்கம்
உற்பத்தியைத் தடுக்கிறீர்கள். அப்படி என்றால் எப்படி உற்பத்தி
யைப் பெருக்கமுடியும்?

(பிற்பகல் 12-50)

ஆகவே, அமைச்சர் அவர்கள் அதை கவனத்தில் எடுத்துக்
கொள்ளவேண்டும். அதேபோல 1985-86 ஆம் ஆண்டில்
ஆதித்திராவிடர்களுக்கு பொருளாதார மேம்பாட்டிற்காக 126
கோடியே 16 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால்
திராவிடர்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய பணம் முழுவதும்
செலவு பண்ணப்படுகிறதா, அந்தப்பணம் உண்மையாக அவர்
களுக்குப் போய்ச் சேருகிறதா என்று பார்த்தால், உண்மை
யிலேயே வேதனையோடு சொல்லவிரும்புகிறேன் 100 ரூபாய்
என்று சொன்னால் அதில் 15 ரூபாய் கூட செலவுசெய்யப்படுவது
கிடையாது. ஒரு பக்கம் ஊழல். ஆனால் அப்படிச் செலவு செய்யப்
படாமலேயே ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் பொது நிதிக்கு
அந்தப்பணம் திருப்பி அனுப்பப்படுகிறது. இதற்கு என்ன
காரணம்?

சுடுகாட்டுக்கு பாதைபோடவேண்டும் என்றால் அதை
எதிர்த்து ஸ்டே வாங்கிவிடுகிறார்கள். அவர்களுக்கு வீடு கட்டிக்
கொடுப்பதற்கு நிலத்தை கையகப்படுத்தினாலும், அதை



எதிர்த்து ஸ்டே வாங்கிவிடுகிறார்கள். ஆகவே, எந்தக்காரணத்
தைக்கொண்டும், அந்த ஏழை அரிசன மக்களுக்கு, இத்தகைய
சட்டங்களின் பெயரால், அந்தப்பணம் கிடைப்பதில்லை.
ஆகவே எதிர்காலத்தில் அதைப்போக்கி. ஒதுக்கக்கூடிய பணம்
அந்தப்பகுதி மக்களுக்கு நிரந்தரமாகக் கிடைப்பதற்கு அரசு
நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதேபோல பெரும் தொழில்கள் தொடங்குவதுபற்றி
குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான் கேட்டுக்கொள்வது எல்லாம்
தொழில்கள் வளரவேண்டும். அதை நீங்கள் கவனித்துச் செய்ய
வேண்டும். குறிப்பாக தஞ்சை மாவட்டத்தை எடுத்துக்கொண்
டால் விவசாயத்தையே நம்பி வாழ்ந்து, சோலை வனமாக
எப்போதும் காட்சியளிக்கும் தஞ்சை மாவட்டம் இப்போது
பாலைவனமாக மாறிவருகிறது. அனைவருக்கும் தெரியும்.
ஆனால் தஞ்சையைப் பொறுத்தவரையில் பெரும் தொழில்கள்
இதுவரையில் இரண்டு மூன்று சர்க்கரை ஆலைகள் உள்ளன.
ஒன்றிரண்டு சிறு தொழில்கள் இருக்கின்றன. மேலும் பெரும்
தொழில்கள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

ஆனால் ஒரு பக்கம் தொழிற்சாலைகளை துவங்க வேண்டும்
என்று மத்திய சர்க்காரை கேட்கிறோம். அதற்கு எந்த
அளவிற்கு அவர்கள் அனுமதியை வழங்கியிருக்கிறார்கள் என்பது
குறித்து அமைச்சர் அவர்கள் தான் பதில் சொல்ல வேண்டும்.
ஆனால் இன்னொரு பக்கம் இந்த நாட்டு முதலாளிகள்
உற்பத்தியை முடமாக்குவதற்கும், தொழிலாளர்களைப் பட்டினி
போடுவதற்கும், தொழிற்சாலைகளை ஒரு பக்கம் மூடி
வருகிறார்கள். ஆக ஒரு பக்கம் தொழிற்சாலையை மூடுவதும்
இன்னொரு பக்கம் தொழிற்சாலையை பெருக்கப் போகிறோம்
என்று சொல்வதும் எந்த அளவிற்கு தமிழகத்தை தொழில்
வளத்தில் முன்னேற்ற முடியும். முன்னேற்றவே முடியாது.
ஆகவே மத்திய சர்க்காரை இந்த விஷயத்தில் வற்புறுத்தி
தமிழகத்தினுடைய தொழில் வளத்தைப் பெருக்குவதற்கு அரசு
துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்
பத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல ஏற்றத்தாழ்வு இன்றி சாதாரண மனிதனுக்கும்
கிடைக்கும் வகையில் தொழில் வளத்தில் வழி வகுக்கப்படுவது
அவசியமாகும் என்று ஆளுநர் உரையிலே குறிப்பிடப்
பட்டிருக்கிறது. சிறு தொழில்களைப் பற்றியா,
கைத்தறித் தொழில்களைப் பற்றியா? இன்றைக்கு கைத்தறி
யிலே ஒரு பக்கம் 10 கோடிக்கு மேல் துணிகளின் தேக்கம்
இருக்கிறது. ஆகவே சிறு தொழில்களை கவனிக்கிறோம் என்று
தமிழகத்திலே உள்ள பெரிய தொழில்களையெல்லாம்
முடமாக்கி விடாமல் பார்த்துக் கொள்வதோடு, மேலும் பெரும்
தொழில்களைக் கொண்டு வருவதற்கு அரசு நடவடிக்கை
எடுத்துக் கொள்ள வேண்டும்.

[திரு. பொ. உத்திராபதி] [1986 சனவரி 11

தஞ்சை மாவட்டத்தில் நேரடி கொள்முதல், நிலையத்தில் நெல் 18 சதவீதம் இருந்தால்தான் கொள்முதல். இதனால் விவசாயிகள் அறுவடை செய்த நெல்லை விற்க முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். பொங்கல் திருநாளைக் கொண்டாடக் கூட அவர்களால் முடியவில்லை. ஆகவே 20 சதவீதம் வரையில் கொள்முதல் செய்ய அனுமதி வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல எல்லா தரப்பு மக்களுக்கும் இன்றைக்கு விலைவாசி உயர்விற்கு ஏற்ப கூலி நிர்ணயம் வேண்டும் என்று போராடி வருகிறார்கள். ஆனால் விவசாயத் தொழிலாளர்களுக்கு அந்த வாய்ப்பு இல்லை. தஞ்சை மாவட்டத்தில் மட்டும் 8 லட்சம் விவசாயத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். மொத்த தமிழகத்திலும் ஒரு கோடிக்கு மேல் விவசாயத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். 1983 செப்டம்பரில் தான் கூலி நிர்ணயம் செய்யப்பட்டு சட்டம் அறிவிக்கப்பட்டது. விவசாய தொழிலாளர்கள் கூலி நிர்ணயச் சட்டம் என்று அதன் பெயர். ஆனால் இன்றைக்கு 86-வது ஆண்டு வந்து விட்டது. இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை விவசாயத் தொழிலாளர்களுக்கு இந்த கூலி நிர்ணயம் திருத்தி நிர்ணயிக்கப்பட வேண்டும். ஆனால் 3 ஆண்டுகள் காலமாகியும் அது அமுல் செய்யப்படவில்லை. நமது நிதியமைச்சர் அவர்கள் தஞ்சை மாவட்டத்தில், 9 ரூபாய் வாங்கிக் கொண்டிருந்த தாய்மார்களுக்கு கூலி 8 ரூபாய் தான் என்று அறிவித்து விட்டார்கள். நாங்கள் கேட்கக் கூடியது எல்லாம் மற்ற பகுதி மக்கள் போராடுகிற போது, நீங்கள் அவர்களிடம் வறுமை கோட்டிற்குக் கீழே கோடிக்கணக்கான மக்கள் இருக்கிறார்களே, அவர்களைப் பார்க்காமல், அவர்களை பற்றி உணராமல், உங்களுக்கு அதிகமாக வேண்டும் என்று கேட்கிறீர்களே என்று அவர்களைப் பார்த்து நீங்கள் கேட்கிறீர்கள். அதைப்போல நான் உங்களைக் கேட்கிறேன். கோடிக்கணக்கான மக்கள், வறுமைக் கோட்டிற்கு கீழே வாழக் கூடிய விவசாயத் தொழிலாளர்களுக்கு இதுவரையில் கூலி அறிவிப்பு செய்யவில்லை, அது ஏன்? ஆகவே உடனடியாக அவர்களுக்கு விவசாயத் தொழிலாளர்கள் கூலி நிர்ணயக் கமிஷன் ஒன்று அமைத்து, அந்தக் கமிஷன் தமிழகம் முழுவதும் தஞ்சை மாவட்டத்திற்கும் சென்று தற்போதைய விலைவாசி ஏற்றத்திற்குத் தகுந்தாற்போல் அமையுமாறு கூலி நிர்ணயச் சட்டம் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல் 1 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை படிக்கின்ற பள்ளிக் குழந்தைகளுக்கு பாட புஸ்தகங்கள் வழங்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். ஆனால் உண்மையிலேயே சென்ற ஆண்டு கடைசி வரையில் புத்தகங்கள்



1986 சனவரி 11] [திரு. பொ. உத்திராபதி]

கிடைக்காமல் மாணவர்கள் பெரும் அவதிக்கு ஆளாக்கப்பட்டார்கள். இந்த ஆண்டாவது முழுவதுமாவது முன்னதாகவே கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல ஆதிதிராவிடர்களுக்கு வீடுகள் கட்டித் தருவது குறித்து வறுமை கோட்டிற்கு கீழே இருப்பவர்களுக்கு 10 லட்சம் வீடுகள் கிடைக்கும் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் வரவேற்கிறேன். ஆனால் இது வரைக்கும் கட்டப்பட்ட வீடுகள் எப்படி இருக்கின்றன. உண்மையிலேயே சொல்கிறேன் ஒரு குடைப்பு போல தான் கட்டிய வீடுகள் இருக்கின்றன. திண்ணையும் கிடையாது, கொல்லைப்புறமும் கிடையாது. ஆனால் அப்படிக் கட்டப்பட்ட வீடுகளில் கூட இந்த மழைக் காலத்தில் யாரும் குடியிருந்து குடும்பம் நடத்துவது கிடையாது. காரணம் வீடுகள் கட்டுவதை கான்டிராக்டில் விடுகிறார்கள். அவர்கள் சிமென்டை விற்று விடுகிறார்கள். நல்ல மரங்களாக போடுவது கிடையாது. ஆகவே அந்த நிலைமையைப் போக்க இனிமேலாவது கட்டப்படக்கூடிய வீடுகளை உண்மையிலேயே அவர்கள் தங்கியிருந்து குடும்பம் நடத்துவதற்கு தகுதியான வீடுகளாக கட்டிக் கொடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து வீட்டுமனைப்பட்டா வழங்குவது. இது பெயரளவிற்குத்தான் இருக்கிறதே தவிர கோடிக்கணக்கான பேர்களுக்கு வீட்டுமனைப்பட்டா இன்னும் வழங்கப்படவில்லை. இதனால் அரசாங்கம் வழங்கும் சலுகைகள் பட்டா இல்லாததால் அவர்களுக்கு கிடைக்காமல் போய் விடுகிறது. ஆகவே ஏதோ பெயரளவிற்கு கொடுப்பது என்று இல்லாமல் ஆறுமாதக் காலத்தில் தமிழகத்தில் கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களில் வாழக்கூடிய அனைத்து மக்களுக்கு பட்டா கிடைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்,

காவிரி நீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் இன்றைக்கு ஐந்து டி. எம். சி. கொடுத்திருப்பதாக உரையில் காண்பிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஐந்து டி. எம். சி. தண்ணீரை மூன்று முறையில் ஒரு லட்சம் ஏக்கர் நிலத்திற்கு தான் பாய்ச்ச முடியும். இன்றைக்கு தஞ்சை மாவட்டத்தில் 14 லட்சம் ஏக்கர் நிலம் இருக்கிறது. தஞ்சை மாவட்ட விவசாயத்தை பாதுகாக்க முடியுமா? அல்லது அந்த மாவட்டம் பாலைவனமாக மாறி விடுமா என்று கருதுகிற அபாயம் இன்றைக்கு இருக்கிறது. காவிரி நதி நீர்ப் பிரச்னையில் 1924 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஒப்பந்தம் இன்று வரையில் புதுப்பிக்கப்படவில்லை. ஆனால் காங்கிரஸ் கட்சி நண்பர்கள் கர்நாடகா மாநில முதலமைச்சரைப் பார்த்து தண்ணீர் கொடுக்கக் கூடாது என்று சொல்கிறார்கள். தமிழக முதலமைச்சரைப் பார்த்து நீங்கள் உடனடியாக

[திரு. பொ. உத்திராபதி] [1986 சனவரி 11

கர்நாடகாவிலிருந்து தண்ணீர் பெற்று தஞ்சை மாவட்ட
விவசாயிகளை பாதுகாக்க வேண்டுமென்று சொல்கிறார்கள்.
பாரதப் பிரதமர் அவர்கள் தேசிய ஒருமைப்பாட்டை பாதுகாக்க
வேண்டுமென்று சொல்கிறார்கள். நான் கேட்டுக்கொள்ள
விரும்புவது, தேசிய ஒருமைப் பாட்டை பாதுகாப்பது உண்மை
யானால் அந்தக் கொள்கையை காங்கிரஸ் கட்சி ஏற்றுக்
கொண்டிருப்பது உண்மையானால் நதிநீர் பங்கீடு
என்பது இந்த நாட்டு மக்களுக்குச் சொந்தமாக
வேண்டும். காவிரி நதிநீர்ப் பிரச்னையில் கர்நாடக
மாநில மக்களுக்கும், தமிழக மக்களுக்கும் எந்தவித பாதகமும்
இல்லாமல் தீர்த்து வைத்திருக்க வேண்டும். இதிலே காங்கிரஸ்
கட்சி தவறிவிட்டது என்று சொல்லவிரும்புகிறேன்.
அமைச்சர் அவர்கள் உடனடியாக மத்திய அரசை அணுகி
ஒவ்வொரு தடவையும் 5 டி. எம். சி. தண்ணீர் வாங்குவது
என்ற முறையை மாற்றி, நிரந்தரமாக காவிரி நதிநீர்
பிரச்னையை இரு மாநிலங்களுக்கிடையே தீர்த்து வைக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கரும்பு விவசாயிகளுக்கு சென்ற ஆண்டு மத்திய
அரசு 140 ரூபாய் கொடுத்தது, நம்முடைய அரசு 45 ரூபாய்
கொடுத்தது. போனசாக 10 ரூபாய் கிடைத்தது. ஆக
மொத்தம் 195 ரூபாய் அவர்களுக்கு கிடைத்தது. இந்த ஆண்டு
185 ரூபாய் என்று அறிவிக்கப்பட்டு 10 ரூபாய் குறைக்கப்
பட்டிருக்கிறது. இந்த ஆண்டு மத்திய அரசு 25 ரூபாய்
அறிவித்திருக்கிறது. அப்படியானால் அவர்களுக்கு 220 ரூபாய்
கொடுக்க வேண்டும். அதே நேரத்தில் சர்க்கரை முதலாளி
களுக்கு ஒரு மூட்டைக்கு 40 ரூபாய் உயர்த்தப்பட்டிருக்கிறது.
முதலாளிகள் கரும்பு விவசாயிகள் உற்பத்தி செய்கிற கரும்பைப்
பெற்று கோடி கோடியாக கொள்ளையடிப்பதற்கு வாய்ப்பு
அளிக்கிறதே தவிர, விவசாயிகளுக்கு உதவுவதற்கு முன்வருவ
தில்லை. கரும்பு உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு விலையை
குறைப்பது சரியல்ல. இதனால் கரும்பு வெட்டுவதை அவர்கள்
நிறுத்திவிட்டு போராடி வருகிறார்கள். அந்த விவசாயிகளைப்
பாதுகாக்கிற முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டும். குறைந்த
பட்சம் 300 ரூபாய் அவர்கள் கேட்கிறார்கள். 250 ரூபாய்
அளவிலாவது அவர்களுக்கு கிடைக்க தமிழக அரசு நடவடிக்கை
எடுக்க வேண்டும். கடைசியாக நான் சொல்லிக்கொள்வது,
முன்னாள் ஆட்சியாளர்கள் மீது ஊழல், லஞ்சம் என்று சொல்லி
நீங்கள் வந்தீர்கள். உங்களுடைய ஆட்சியில் கீழேயிருந்து மேலே
வரைக்கும் ஊழல் பெருகி இருக்கிறது. லஞ்சமும் பெருகி
விட்டது. இன்றைக்கு சாராயமும் பெருக்கெடுத்து ஓடுகிறது.
இதனால் தமிழகம் பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளது.
(மணியடிக்கப் பெற்றது)

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவர் அவர்களே, ஆளுநர்
உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நான் சார்ந்
துள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்
துக்களை வைக்க விரும்புகிறேன்.



1986 சனவரி 11] [திரு. ப. பொன்னுரங்கம்]

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கிற போது மதிப்பிற்குரிய
சின்னராசு அவர்கள் அடிக்கடி கோடிட்டு காட்டினார்கள். எதிர்க்
கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் போராட்டத்திற்கு தலைமை
யேற்க அலைகிறார்கள், அங்கலாய்கிறார்கள் என்றெல்லாம் கூட
சொன்னார்கள். அதற்கு உதாரணமாக மீனவர் பிரச்னை,
ஆசிரியர் போராட்டம் இதையெல்லாம் அவர்கள் சுட்டிக் காட்டி
னார்கள். அவற்றிற்கு நான் பதில் சொல்ல கடமைப் பட்டிருக்
கிறேன். ஆசிரியர்கள் போராட்டம் ஆரம்பித்தது லோக்கல்
அட்மினிஸ்ட்ரேஷனில் பணியாற்றுகிற ஆசிரியர்கள் அரசாங்க
ஊழியர்களாக மாற்றப்பட்டு, பிறகு மீண்டும் அவர்கள் பழைய
நிலைக்கே அனுப்பப்பட்ட காரணத்தால் ஜூலை மாதமே இந்தக்
கோட்டையின் முன்னாலே ஆசிரியர்கள் போராட்டத்தை ஆரம்
பித்திருக்கிறார்கள். தொடர்ச்சியாக உண்ணாவிரதம், ஊர்வலம்,
ஆர்ப்பாட்டம் போன்றவைகள் செய்து, பிறகு மறியல் செய்து
40 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் கைது செய்யப்
பட்டார்கள். அதில் பலர் இறந்தார்கள். கருப்பன் என்ற
ஆசிரியர் சிறையிலே இறந்தார். அப்படிப்பட்ட கோர சம்பவங்
கள் நடந்து கொண்டிருக்கிறபோது எந்த பத்து அம்சங்களுக்காக
போராடினார்களோ அந்த பத்து அம்சங்களை விட்டுவிட்டார்கள்.
அவற்றிற்கு பதிலாக ஆசிரியர்கள் ஒரே ஒரு அம்சத்திலே நின்
றார்கள். என்ன ஒரு அம்சம் என்றால், முதலமைச்சரிடம் பேச
வேண்டும். அதுதான் அவர்கள் இறுதியாக வைத்த கோரிக்கை.
பிரச்னை முற்றிக் கொண்டே போனது. அதற்கு கூட இந்தச்
சர்க்கார் இடமளிக்கவில்லை. முதலமைச்சரிடம் பேச முடியாது,
அதிகாரிகளிடம் தான் பேச முடியும் என்று அதிகாரிகளை பேச
வைத்தார்கள். அடுத்து சம்பந்தப்பட்ட அமைச்சரைப் பேச
வைத்தார்கள்.

(பிற்பகல் 1—00)

அடுத்து, முதலமைச்சர் அவர்கள், இரவோடு இரவாக ஆளை
அனுப்புகிறார்கள். 44 சங்கத்தைச் சேர்ந்த 13 போராட்டத்
தலைவர்களுக்கு ஆளை அனுப்புகிறார்கள். இது எப்போது
அனுப்புகிறார்கள் என்றால், பிற அரசியல் கட்சியைச் சேர்ந்த
தலைவர்கள் எல்லாம் ஜூலை மாதம் புகுந்து விடவில்லை.
நவம்பர் மாதம் வரையில், ஏன் டிசம்பர் மாதம் வரையில் அவர்
களை நசுக்கிய காரணத்தால், மனம் வெந்து வேறு வழியில்லை,
சர்க்காரை எதிர்பார்த்தோம், பயன் இல்லை, சர்க்காரை மட்டும்
எதிர்பார்த்துப் பயன் இல்லை, எதிர்க்கட்சித் தலைவர்களைப்
போய் பார்ப்போம் என்று அவர்களை அணுகினார்கள். அவர்களை
அணுகிய காரணத்தாலேதான், அனைத்துக் கட்சியைச் சேர்ந்த
தலைவர்கள் எல்லாம், உங்களுடைய போராட்டத்திற்கு ஆதரவு
தெரிவிக்கிறோம் என்ற முறையிலே தான் மறியல் போராட்டம்
அறிவிக்கப்பட்டது. அனைத்து எதிர்க்கட்சியைச் சேர்ந்த
சட்டமன்ற உறுப்பினர்கள், கோட்டை முன்னாலே மறியல்
செய்வார்கள் என்று அறிவித்த பிறகுதான், இந்த ஆட்சி

முதலமைச்சர் அவர்கள், இரவோடு இரவாக ஆசிரியர்களுடைய
பிரதிநிதிகளை அழைத்து பேச முயற்சிக்கிறார். கட்சித் தலை
வர்களை அல்ல. ஆசிரியர்கள் சங்கப் பிரதிநிதிகள் கேட்டுக்
கொண்ட காரணத்தால்தான்.

அதே போன்று மீனவர்கள் போராட்டம். நவம்பர் மாதம்
4-ஆம் தேதி போராட்டம் ஆரம்பமாகியது. ஆரம்பமாயிற்று
என்று கூட நான் சொல்ல மாட்டேன். ஆரம்பித்து வைக்கப்
பட்டது இந்த அரசாங்கத்தால், சுத்தப் படுத்துகிறோம், அழகு
படுத்துகிறோம் என்ற பெயரால் அவர்களுடைய தொழில்
உரிமையை பறிக்கின்ற அந்தக் கொடுமையான செயலை இந்தச்
சர்க்கார் செய்த காரணத்தால்தான், அந்த போராட்டமே
நவம்பர் மாதம் 4-ஆம் தேதி ஆரம்பமாகியது. அதுவரையிலும்
எந்த அரசியல் கட்சியும் அதிலே புகவில்லை. எந்த அரசியல்
கட்சித் தலைவரும் அதற்கு ஆதரவு தெரிவிக்கிறோம் என்று
சொல்லவில்லை. அவர்களாகவே போராடி, அவர்களாகவே,
உண்ணா விரதம் இருந்து, அவர்களாகவே, ஊர்வலம் வந்து,
அவர்களாகவே ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். அவர்கள் நடத்திய
அந்த உண்ணாவிரதத்திலேதான் ஒரு மூதாட்டி இறந்து
போனார். எதனால்? இந்த அரசாங்கத்தினுடைய அணுகு முறை
யால், அவர்கள் வெந்து, வெதும்பி, இதே கோட்டை முன்னாலே
ஒரு தோழர் தீக்குளித்து செத்ததற்குப் பிறகு, இந்தப் போரட்டம்
பயங்கரமாக வெடிக்கும் போல தெரிகிறது என்ற சூழ்நிலை
உருவாகியபோது, அந்த மூன்று குப்பங்களைச் சேர்ந்த பிரதிநிதி
கள், அனைத்துக் கட்சித் தலைவர்களை அணுகினார்கள். அப்படி
அணுகிய காரணத்தால்,—இது ஒரு நாதியற்ற சமுதாயம்—இந்த
நாதியற்ற சமுதாயத்திற்கு கை கொடுத்து உதவ வேண்டும்
என்ற தூய நோக்கத்தோடு, எங்களுடைய தலைவர் கலைஞர்
அவர்களும், மற்றத் தலைவர்களும் கூடிப் பேசி, நவம்பர் மாதம்
19-ஆம் தேதி இது சம்பந்தமாக கூட்டம் கூட்டி, 20-ஆம் தேதி,
பக்கத்திலே இருக்கின்ற மரியாதைக்குரிய அண்ணன் செல்வராசன்
அவர்கள் தலைமையிலே முதல் போராட்டம், மறியல் போராட்
டம், சட்டமன்றத்திற்கு முன்னாலே நடத்தப்படும், தொடர்ந்து
பல எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களுடைய
தலைமையிலே போராட்டம் நடைபெறும் என்று அறிவித்த பிறகு
தான், 19-ஆம் தேதி கூட்டம், 20 ஆம் தேதி போராட்டம் என்று
அறிவிப்பு வந்த பிறகுதான்—இந்த ஆட்சியாளர்கள், பணிந்து,
இரவோடு இரவாக ஏ.சி.யை அனுப்பி, டி.சி.யை அனுப்பி,
சம்பந்தப்பட்ட தலைவர்களை அழைத்துப் பேசினார்கள். அதற்கு
பின்னால் துப்பாக்கிச் சூடு நடந்தது. ஆக எதிர்க் கட்சியிலே
இருக்கிற தலைவர்கள், வலிய சென்று, ஏதோ ஆதாயம் தேட
நினைக்கிறார்கள். அதற்காகத்தான் போராட்டத்திற்கு தூண்டு
கோலாக இருக்கிறார்கள் என்று சொல்வது தவறு. நவம்பர்
மாதம் 4-ஆம் தேதி நடைபெற்ற நிகழ்ச்சி. எதிர்க்கட்சியைச்
சேர்ந்தவர்கள் டிசம்பர் மாதம் இரண்டாவது வாரம் வரையிலும்



காத்திருக்கிறார்கள். ஆகவே, அது வரையிலும் இந்தச் சர்க்கார்,
இந்தப் பிரச்னையைத் தீர்க்க முயற்சி செய்யாத காரணத்தால்,
அந்த மனவளம் இந்தச் சர்க்காருக்கு இல்லாத காரணத்தால்,
எதிர்க்கட்சிகள் நிர்பந்திக்கப் படுகின்றன. ஏழைகளுக்கு,
பாட்டாளிகளுக்கு, தொழிலாளர்களுக்கு உதவி செய்யாமல், அவர்
கள் இன்னல் படுகின்ற நேரத்தில் அவர்களுக்கு உறு துணையாக
இல்லாமல், கட்சி நடத்தி என்ன பிரயோஜனம்? அதைவிட
சாராயக் கடை நடத்தலாம். ஆக, எதிர்க்கட்சியிலே இருக்கிற
தலைவர்கள் எல்லாம், இது போன்ற பிரச்னையை வைத்துத்
தான் ஆதாயம் தேட வேண்டும் என்ற நிலை இல்லை. ஆகவே
தான் இதை நான் முதலிலே சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

அடுத்து, இங்கே இயற்கையின் சீற்றத்தாலே மறைந்த அனை
வருக்கும் அனுதாபத் தீர்மானம் போட்டார்கள். ஆனால் நான்
கேட்டுக்கொள்வது, ஆசிரியர்கள் என்ன பாவம் பண்ணினார்கள்?
மீனவர்கள் சுட்டுத் தள்ளப்பட்டார்களே, அவர்கள் என்ன
பாவம் பண்ணினார்கள்? ஏன் அவர்களையும் சேர்த்து ஒரு
அனுதாபத் தீர்மானம் போட்டிருக்கக் கூடாதா? இந்தச் சபை
யிலே சொல்லியிருக்கக் கூடாதா? சொல்லவில்லை. ஏன்
சொல்லவில்லை? உங்கள் மனதே உறுத்துது. நம்மாலேதான்
செத்தார்கள் அவர்கள் எல்லாம். இயற்கையாகவா செத்தார்கள்,
நம்மாலேதான் செத்தார்கள், அதனாலே எப்படிப் போடுவது?
அப்படிப் போட்டால் அது நமக்கு எதிராகத் தீர்மானம் போடுவ
தாக இருக்குமே என்ற எண்ணத்தினாலோ என்னவோ, இந்தச்
சர்க்கார் அதிலே தவறி விட்டது. நான் இன்னும் சொல்வேன்.
துப்பாக்கிச் சூட்டிலே இறந்த மீனவர்களுக்கு 15 ஆயிரம் ரூபாய்
முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். எப்போது? செய்யாறு
தேர்தல் நடைபெறுவதற்கு, 4, 5 நாட்களுக்கு முன்னாலே அறி
வித்ததை பத்திரிகையிலே பார்த்தேன். நான் கேட்கிறேன்.
இது துப்பாக்கிச் சூடு நடந்து, அதிலே இறந்தவர்களுக்கு மட்டும்
தானா? அந்த இனத்தைச் சேர்ந்த ஒரு மூதாட்டி, உண்ணா
விரதம் இருந்தபோது குளிரிலே நடுங்கி, மழையிலே செத்தார்
களே, அது எதனால்? தானாகவா செத்தார்கள்? அரசின்
அணுகு முறையால் செத்தார்கள். அரசினுடைய அணுகு முறை
யால், வெந்து, வெதும்பி, மனம் நொந்து, இந்த மன்றத்தின்
எதிரே ஒருவன் தீக்குளித்துச் செத்தானே? அவன் தானாக
செத்தானா? உங்களுடைய அணுகு முறையால் அல்லவா
செத்தார்கள். ஆக அந்த 2 பேருக்கு கூட நிதி உதவி செய்ய
வேண்டும் என்ற தாராள எண்ணம் இந்த அரசுக்கு இல்லை
என்பதை என்னால் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

ஆசிரியர்களுக்கு ஆதரவு தெரிவித்து செகரட்டேரியட் ஊழியர்
கள் ஏதோ போராட்டம் என்ற பெயரிலே அற வழியிலே,
அமைதியான வழியிலே நடந்து கொண்டார்கள். அதிலே 23
பேர்கள் சஸ்பண்டு செய்தார்கள் என்று எல்லாம் எனக்கு

முன்னால் பேசிய திரு. ரமணி அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த அரசு, அரசாங்க ஊழியர்களை எந்த அளவுக்கு நடத்துகிறது என்பதற்கு இது மட்டும் அல்ல இன்னும் ஏராளமான விஷயங்கள் இருக்கின்றன. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்று சொல்வார்கள். ஆகவே நான் குறிப்பைச் சொல்ல விரும்புகி றேன்.

இங்கே டெண்டல் ஆஸ்பத்திரியில் டாக்டர் J. G. கண்ணப்பன், Vice-Principal was transferred to Madurai for the benefit of the public. அவர் மதுரைக்கு மாற்றப்படுகிறார். அவருக்கு உரிய போஸ்ட், அவர் செய்த பிராக்டிஸ், அவர் படித்த படிப்புக்கு உரிய இடமாக அந்த மதுரை இல்லை. ஆகவே அது சம்பந்தப் பட்ட அந்த டாக்டர் உடனே அரசை அணுகி கேட்கிறார். அரசு பிடிவாதமாக இருந்து விடுகிறது. அதனால் அவர் கோர்ட்டுக்கு செல்கிறார். கோர்ட்டுக்கு சென்ற உடன் நீதிபதி அவர்கள் தீர்ப்பு அளிக்கிறார். என்ன என்றால் அவர் படித்த படிப்புக்கு ஏற்ற இடமாக, பணியாற்றக்கூடிய இடமாக தன்னுடைய அனுபவங்களையும் அறிவையும் செலுத்துகின்ற இடமாக மதுரை இல்லை. ஆகவே, நீங்கள் அவரை சென்னைக்கு மாற்ற வேண்டும் என்றும் வேகன்சி இருப்பதாகக்கூட கேள்வி படுகிறேன், மாற்ற லாம் என்றும் அரசுக்கு உத்தரவு இடுகிறார். அந்த உத்திரவை வாங்கிக் கொண்டே அரசு என்ன செய்கிறது தெரியுமா? திரும் பவும் அந்த டாக்டருக்கு எழுதுகிறது.

"For the benefit of the public, your transfer cannot be complied with. Again he goes to the Court.

என்ன பப்ளிக் பர்ப்பஸ் என்று தெரியவில்லை.

Again he goes to the Court.

இன்னொரு நீதிபதி நான் நினைக்கிறேன் திரு. நடராசன் என்று. அவர் தீர்ப்பு வழங்குகிறார். இது முறைகேடானது, உடனே சென்னையில் உள்ள டெண்டல் ஆஸ்பத்திரியில் அவரை போட வேண்டும் என்றும் அது தான் சிறந்தது என்றும் ஆகவே அந்த டாக்டரை சென்னையில் வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் உத்திரவு போடுகிறார், ஆனால் அந்த உத்தரவுக்கு பணிந்தார்களா என்றால் அதுவும் இல்லை. அப்பீல் என்று போகிறார்கள். சரி போகட்டும். சரி நீங்கள் தான் அவரை சென்னைக்கு மாற்ற வில்லை. அந்த டாக்டருக்கு நல்ல சான்ஸ் மிலிட்டரியில் மத்திய அரசில் அவருக்கு அப்பாயின்டுமெண்டு கிடைத்து இருக்கிறது. அவரை ரிலிவ் செய்யாமல் வைத்து இருக்கிறார்கள். இது அரசு ஊழியர்களை எந்த அளவுக்கு பழி வாங்குகிறார்கள் என்பதற்காக இதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதேபோல் தான் இந்த 23 பேரையும் .... (மணியடிக்கப் பெற்றது) நான் எங்கள் கட்சியில் ஒரு ஆள் தான் பேசுகிறேன். பேச வேண்டாம் என்று சொன்னால் நிறுத்தி விடுகிறேன்.





மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு சைதை சா. துரைசாமி): $1\frac{1}{2}$ மணிக்குள் சபை நடவடிக்கைகளை முடிக்க வேண்டும். இன்னும் 3 பேர் பேச வேண்டியிருக்கிறது. சீக்கிரம் பேசி முடித்து விடுங்கள்.

திரு ப. பொன்னுரங்கம் : அது மட்டும் அல்ல, இல்றைய இந்த ஆளுநர் உரையில் ஆளுநர் மிகவும் அருமையாக சொல்லியிருக் கிறார். 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 146 கோடியே 61 லட்சம் ரூபாய் செலவு செய்தார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். Upto 1985 அப்படி செலவு செய்ததில் 16 லட்சம் பேர்கள் பலன் அடைந்து இருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் கணக்குப் போட்டுப் பார்த்தேன். 16 லட்சம் பேர் இந்த 5 வருடத்தில்—1 வருடம், 2 வருடம் அல்ல,—ஒரு மாதம், 2 மாதம் அல்ல, ஒரு வாரம், இரண்டு வாரம் அல்ல ஒரு நபர் எவ்வளவு பயன் அடைந்து இருக்கிறார் தெரியுமா? 17 ரூபாய், பயன் அடைந்து இருக்கிறார் இந்த 5 ஆண்டுகளில். ஆக இது ஒரு உரையா? என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, கவர்னர் சொல்வதை இந்த அரசு செய்ய மாட்டேன் என்கிறது. ஏன் என்றால் இந்த ஆண்டு கவர்னர் உரையில் சொல்லும் போது ஊராட்சி, முனிசிபாலிட்டி, பஞ்சாயத்து மற்றும் பஞ்சாயத்து போர்டுகளுக்கு அரசு நிர்ணயித்த தேதி பிரகாரம் தேர்தல் நடக்கும் என்று சொல்லியிருக்கிறார். ஏன் என்றால் அவருக்கே ஒரு பயம். 1984-ஆம் ஆண்டு ஒரு தேதியை சொல்லிவிட்டு அவர் மாட்டிக்கொண்டு இருக்கிறார். இந்த அரசில் நாம் இனிமேல் தேதியை சொல்லக்கூடாது, அப்படி சொன்னால் நிறைவேறாது, நாம் ஏன் வம்பில் மாட்டிக்கொள்ள வேண்டும் என்று இருக்கிறார். நாம் 1984—ல் சொன்னதையே இந்த அரசு நிறைவேற்றவில்லை. ஆகவே தேவை இல்லாத ஒன்று என்று நினைத்து அரசு என்று நிர்ணயிக் கிறதோ அந்த தேதியில் தேர்தல் நடக்கும் என்று சொல்லியிருக் கிறார். நீங்கள் செய்ய மாட்டீர்கள் என்று அவருக்கு நன்றாகத் தெரியும். கவர்னர் அறிவித்த அறிவிப்புகளை நீங்கள் நடை முறைப்படுத்தியிருக்கிறீர்களா? என்று நான் கேட்க விரும்பு கிறேன்.

நான் ஒரு குறிப்பைச் சொல்ல விரும்புகிறேன், ஸ்ரீலங்கா தமிழர்களின் இடருதவிக்காக வசூலிக்கப்படும் நிதியைப் பெறவும் அவற்றைச் செவ்வையான முறையில் வழிப்படுத்தவும் சட்ட மன்ற உறுப்பினர்கள், முக்கியமான அரசியல் கட்சித் தலைவர்கள் அடங்கிய மாநில அளவிலான குழு ஒன்றைத் தமிழக அரசு ஏற்படுத்தியுள்ளது.

[திரு. ப. பொன்னுரங்கம்] [1986 சனவரி 11

(பிற்பகல் 1—10)

இப்படி 1984-இல் கவர்னர் சொல்கிறார். அப்படி ஒரு குழு உண்டா? அரசியல் கட்சியைச் சேர்ந்த எந்த சட்டமன்ற உறுப்பினராவது அப்படி ஒரு குழுவில் இடம் பெற்று இருக்கிறார்களா? குறைந்தது, எதிர்க்கட்சித் தலைவராவது இடம் பெற்று இருக்கிறாரா? கவர்னர் சொல்வதை நீங்கள் செய்கிறீர்களா? நான் அதைத் தான் கேட்கிறேன். 1984-லே கவர்னர் தன் உரையிலே அப்படிச் சொல்லியிருக்கிறார். இப்போது அல்ல.

அது மட்டும் அல்ல. கவர்னர் ஒரு உத்தரவாதத்தைத் தந்து இருக்கிறார், '1984இல். அந்த உத்தரவாதம் கூட ஆளுங் கட்சியைச் சேர்ந்த நண்பர் கூடச் சொன்னார் 24 கோடி ரூபாய் குடி தண்ணீருக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது, இது சாதனை இல்லையா என்று சொல்கிறார். குடிநீர்ப் பஞ்சம் இருக்கிறது என்பதை ஒப்புக் கொள்கிறார். '1984இல் கவர்னர் சொல்கிறார்.

'Provision of protected drinking-water to the rural population has been given high priority by the Government. According to the survey conducted in 1976–77 out of 47,273 habitations in the State. 18,167 were categorised as problem habitation. Due to adverse seasonal conditions in the recent past, there has been further additions to this number. These habitations are expected to be covered by the end of March 1985.'

'1985 மார்ச் இறுதியிலே குடிதண்ணீர்ப் பஞ்சமே இருக்காது என்று கவர்னர் தன் உரையிலே சொல்கிறார். எனவே, இல்லாததற்கு ஏன் இந்த உரையிலே பணம் கேட்கிறார்? இப்போது அவரே 24 கோடி ஒதுக்க வேண்டும் என்று சொல்கிறார், மார்ச் இறுதியிலேயே முடித்து இருக்க வேண்டும். இல்லை. எனவே, கவர்னர் உரையை இம்பிளிமென்ட் பண்ணுகிற சர்க்காராக இந்த சர்க்கார் இல்லை என்பதை தாழ்மையாகத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னொன்று. இந்தத் தண்ணீர்ப் பஞ்சம் வருவதற்கே என்ன காரணம் என்றால், தண்ணீர் சப்ளை பண்ணுகிற வாட்டர் போர்டு எந்த லட்சணத்திலே இயங்குகிறது என்பதற்கு அழகான கட்டுரை இரண்டு, மூன்றை 'இந்தியன் எக்ஸ்பிரஸ்லே' நான் படித்தேன். அது சம்பந்தமாக நான் ஒன்றை சொல்ல விரும்புகிறேன்.

அங்கே மூன்று ஒப் இன்ஜினியர்கள் இருந்து இருக்கிறார்கள். அதை எல்லாம் மாற்றி 4 ரீஜனல் இன்ஜினியர்கள் ஆபீஸ் ஓப்பன் பண்ணுவதாகச் சொல்லி முடிவு எடுக்கப்பட்டதாகக்



1986 சனவரி 11] [திரு. ப. பொன்னுரங்கம்]

கூறப்பட்டது. ஆனால் ஒன்றே ஒன்று தான் திறக்கப்பட்டிருக்கிறது. அண்ணா விழா கொண்டாடியதனாலே, அண்ணா மாவட்டம் திண்டுக்கல்லிலே அதைத் திறந்து இருக்கிறார்கள். மீதி மூன்று திறக்கவில்லை, அது உங்களுக்கே தெரியவில்லை. இன்ஜினியர்கள் அந்த ரீஜனிலே வந்து ஒர்க் பண்ணுவதற்கு போதிய வசதி இல்லை.

6-வது ஐந்தாண்டுத் திட்டத்திலே ஒதுக்கப்பட்ட தொகையிலே அதாவது, 200 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். [illegible] கோடி ரூபாய் அதில் பயன்படுத்தப்படவில்லை. (மணியடிக்கப் பெற்றது)

*திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு சட்டமன்றப் பேரவையினுடைய மாற்றுத் தலைநாயகர் அவர்களே, நம்முடைய தமிழக அரசின் மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் முகந்தான் இங்கே நடைபெறுகின்ற விவாதத்தில் பேச வாய்ப்பினை உருவாக்கித் தந்த என்னுடைய அகில இந்திய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவரும், இந்தியப் பேரரசினுடைய தலைமை அமைச்சருமாக இருக்கின்ற ராஜீவ் காந்தி அவர்களுக்கு நன்றி தெரிவித்து, ஆளுநர் உரை மீது கருத்துக்களைச் சொல்லலாம் என்று கருதுகிறேன்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், ஆளுநர் உரை 'வாழையடி வாழை என வந்த திருக்கூட்ட மரபினில் யான் ஒருவன்' என்று வள்ளல் பெருமான் சொன்னதைப் போல, வாழையடி வாழையாக, பழமையும், புதுமையும் கலந்த ஒரு நிலையில் ஆளுநர் உரை இருக்கின்றது. அந்த உரை ஒரு அழகான மெழுகுப் பூவாகத்தான் இருக்கிறதே தவிர, மணம் உடையதாக இல்லை. பார்க்கின்றபோது மணம் வீசுகின்ற மலராக தோற்றம் அளிக்கிறது. மணம் இருக்கிறதா என்றால், மணம் இல்லை, என்று நான் தனிப்பட்ட முறையிலே சொல்லவில்லை. நான் சார்ந்து இருக்கிற இயக்கத்தின் சார்பாகச் சொல்கிறேன்.

பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கவேண்டும் என்று, 10 ஆயிரம் குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்கின்ற நிலையில் 24 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளது மிகவும் குறைவானதாக நான் எண்ணுகின்றேன். காரணம் என்னவென்றால், என்னுடைய திருவொற்றியூர் தொகுதியைச் சார்ந்திருக்கிற தீயம்பாக்கம் என்ற கிராமம் இருக்கிறது. நான் அங்கே பலமுறை சென்றிருக்கிறேன். அந்த ஊர் மக்கள் எல்லாம் பாராட்டுகிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள் வருவதில்லை, நீங்கள் அடிக்கடி வருகிறீர்கள், ஆனால் பிரச்சினை தீரவில்லை என்று சொல்கிறார்கள். விடுதலை பெற்று 37 ஆண்டுகள் ஆகியும்கூட குடிநீர் இல்லாமல் இருக்கிறோம் என்று

சொல்கிறார்கள். அங்கே அவர்கள் எப்படி தண்ணீர் எடுக்கிறார்கள் என்றால், சாதாரணக் குட்டையைக் கலக்கி, அந்த நீரை சற்றுத் தெளியவிட்டு பிறகு தெளிந்த நீரை மெள்ள எடுத்து குடிக்கிற அவல நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட நிலைமை மேலும் சடையன் குப்பம், தியம்பாக்கம், ஆண்டார் குப்பம், அரியலூர், கடப்பாக்கம். வடகரை கல்வியம்மை குப்பம், குசப்பூர், ஈச்சங்கரைப்பட்டு, விளாங்காடு, காட்டுப்பாக்கம், கத்திவாக்கம் நகரியம், திருவொற்றியூர் ஆகிய இடங்களில் குடிப்பதற்கு நல்ல குடிநீர் இல்லை. மணலி போன்ற பகுதிகளில் எல்லாம் இரசாயனத் தொழிற்சாலைகளில் இருந்து நீர்பாய்ந்து மண்வளம் கெட்டுவிடுகிறது. அது மட்டுமல்ல, ஏர் பொல்லுயூஷன் அதாவது காற்று அசுத்தமடைந்துவிடுகிறது. கடந்த முறையே கூட நான் இதுபற்றிக் குறிப்பிட்டேன். இங்கே நல்ல குடிநீர் கொடுப்பதற்காக 24 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதை 50 கோடியாக ஆக்கியிருக்கவேண்டும். சென்னைக்கு 98 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சென்னைக்குப் பக்கத்திலே இருக்கிற தொகுதிக்கு தண்ணீர் கிடைக்கவில்லை என்றால் மிக வருத்தமாக இருக்கிறது. ஆகவே சென்னைக்குப் பக்கத்திலே உள்ள பகுதிகளுக்கு அதிகமான நிதியை ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்னையைச் சார்ந்த புதிய நகரங்கள் மூலக்கடை, கொடுங்கையூர், ஜம்புலி, திரு. வி. க. நகர், எர். வி. நகர் போன்ற இடங்களிலே நல்ல குடிநீர் இல்லை. அந்தப் பகுதிகளுக்கும் நல்ல குடிநீர் வழங்குகின்ற முறையிலே அந்த 98 கோடியிலிருந்தாவது கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இயற்கைச் சீற்றங்கள், மழையினால் என்னுடைய தொகுதி அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக சென்னை மாவட்டம் அதிகமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதிலும் என்னுடைய திருவொற்றியூர் தொகுதி மிகவும் அதிகமாக பாதிக்கப்பட்டிருக்கிறது. அங்கே அதிசயமாக நிவாரணம் அளிக்கப்படவில்லை. நடுவண் அரசு 66.81 கோடி ரூபாய் மாநில அரசுக்கு நிதி வழங்கியிருப்பதற்காக நாங்கள் பெருமைப்படுகிறோம். நடுவண் அரசினுடைய தலைமை அமைச்சர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள் சிறப்பான முறையிலே வருகை தந்து நல்ல முறையில் குழுவை அனுப்பி பரிந்துரைகளைப் பெற்று தமிழக அரசுக்கு சிறப்பான அன்பை, உணர்வை உதவியைச் செய்வதற்காக பேரவையின் சார்பாக நாங்கள் பெருமைப்படுகிறோம். இயற்கைச் சீற்றங்களினால் பாதிக்கப்பட்டபகுதிகளைப் பார்த்து மீண்டும் சரியான புள்ளிவிவரங்களைப் பெற்று கரை ஓரங்களிலே வாழுகின்ற குப்பங்களில் இருக்கின்றவர்கள் பாதிக்கப்பட்ட நிலைமையை உணர்ந்து மேலும் 500 குடிசைகள் கடலிலே கரைந்துவிட்டன. அவர்களுக்கும் அதற்காக நிவாரணம் கொடுக்கப்படவேண்டும். நானும் அங்கே நேரடியாகச் சென்று பார்த்திருக்கிறேன். நல்ல நிவாரணம் அவர்களுக்கு அளிக்கப்படவில்லை. என்னுடைய திருவொற்றியூர்





தொகுதியிலே 19 குப்பங்கள் இருக்கின்றன. அங்கே கட்டுமரங்களில் மீனவர்கள் சென்று வலைவீசி மீன்பிடிக்கிறார்கள். ஆனால் லாஞ்ச் ஓனர்ஸ், வசதியான மீனவர்கள் இயந்திரப் படகுகளை வைத்திருப்பவர்கள். பல்வேறு இடங்களிலே கட்டுமர மீனவர்களின் வலைகளை அறுத்திருக்கிறார்கள். கத்திவாக்கம் பகுதியிலே 100 வலைகளுக்கு மேலாக அறுக்கப்பட்டிருக்கின்றன. கடல் எல்லை 5 கி.மீ. என்று முன்பே தமிழக அரசின் தலைமை அமைச்சர் அவர்கள் வகுத்து அவர்கள் மிகுந்த கருணையும் பரிவும் அந்த இனத்தின்மீது கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அந்த எல்லையை 3 கிலோ மீட்டர் அல்லது 5 கிலோ மீட்டர் என்று வகுத்து கட்டுமர மீனவர்களைப் பாதுகாத்து அவர்களுக்கு வாழ்வும் வளமும் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்வி முறையில் வாழ்க்கைக் கல்வி அதிகமாக ஏற்பட்டு இருக்கிறது என்பதை நான் பாராட்டினாலும் கட்டடங்களைக் கட்டுவதற்காக வழங்கப்பட்டிருக்கிற 1½ கோடி ரூபாய் நிதி போதாது. அது கல்விக்கு அழகானது அல்ல. 1½ கோடி ரூபாய் என்பது ஒரு மாவட்டத்திற்கு ஒரு கட்டடம் கட்டக்கூட போதாது. ஆகவே அதை 5 கோடியாக ஒதுக்கவேண்டும். பள்ளிக் கட்டடங்கள் மிகவும் சிரழிந்து கிடக்கின்றன. சில இடங்களிலே மரத்தடியில் பள்ளிகள் நடக்கின்றன. மாதவரத்திலே உயர்நிலைப்பள்ளிக் கட்டடத்திற்காக சென்ற ஆண்டு போடப்பட்ட 6 கொட்டகைகள் இந்த ஆண்டு புயலில் விழுந்து கிடக்கின்றன. இப்படிப் பல்வேறு சூழ்நிலைகள் இருப்பதால் கட்டடங்களைச் செம்மைப்படுத்துவதற்கான நிதியை அதிகமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1.20)

அடுத்து ஆசிரியர்கள் பிரச்சினை. பேராசிரியர் பெருந்தகை எல்லாம் இங்கே அமைச்சர்களாக இருக்கிறார்கள்.

குறிப்பாக ஆசிரிய இனத்தைச் சேர்ந்தவரே அமைச்சராக வந்திருப்பது சாலப் பொருத்தமானதாகும். புறநானூற்றில்

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்து
பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்புவோர் அன்ன உடன் உயிற்றுள்ளும்
சிறப்பின் பாலார் தாயும் மனம் திரியும்
பல்குடிப் பிறந்த அறிவுடையோன் ஆறு
அரசும் செல்லும்"

ஆகவே, அறிவும் ஆற்றலும் பொருந்தியிருக்கின்ற இந்த அமைச்சரவையில் உள்ள அமைச்சர் பெருமக்கள் ஆசிரியர்கள் பிரச்னையை நல்ல முறையில் அணுக வேண்டும். அவர்களை

வாட்டி வதைத்து இன்னல்களுக்கு ஆளாக்குவதைவிட, வருங்கால சமுதாயத்தை உருவாக்குகின்ற அவர்களின்மீது கனிவும், பாசமும் காட்டி, சற்று அதிகக் கருணையோடு இருக்கவேண்டும் என்று பணிவோடு சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

தொழிற்கல்விக் கூடங்களை உருவாக்குகின்றபொழுது அது பயனுள்ள கல்வியாக இருக்கும் விதத்தில் அமையவேண்டும்.

''வயிற்றுக்குச் சோறிட வேண்டும்
இங்கு வாழும் மக்களுக்கெல்லாம்
பயிற்சி பல கல்வி தந்து இந்தப்
பாரை உயர்த்திடல் வேண்டும்''

என்று பாரதி கண்ட கனவினை நனவாக்கும் விதத்தில், பயனுள்ள பயிற்சிக் கல்வி பல தந்து, அவன் பள்ளி இறுதியாண்டு படித்து முடித்தவுடன் அவன் செழுமையுடையவனாகச் செல்ல வேண்டுமென்கின்ற முறையில் கல்வித் திட்டம் அமைய வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்து மின்சாரத்தைப் பொறுத்தவரை எடுத்துக் கொண்டால் தமிழகம் முழுவதும் சரியாக இயங்கவில்லை. எங்கு பார்த்தாலும் மின் விளக்குகள் இருக்கின்றன, ஆனால் அவ்விளக்குகள் எரியவில்லை. லோ வால்டேஜ் என்று சொல்லு கின்ற மின் அழுத்தக் குறைவின் காரணமாக அந்த பகுதிகளில் சிறப்பான சூழ்நிலையில் இயங்க முடியாமல் இருப்பதைப் பார்த்து நாங்கள் வேதனைப்படுகிறோம். பல்வேறு முறைகளிலே இந்த மின்சார நிலைமைகளைப் பற்றி அதிகாரிகளிடத்திலே சொன் னாலும் அவர்கள் அதைப் பற்றிச் சட்டை செய்வதாக இல்லை. நாட்டிற்கு மின்சாரம் அவசியம், மின்சாரம் முதுகெலும்பாக இருக்கிறது என்பதையும் ஏற்கிறோம். நம்முடைய ஆளுநர் உரையில் இரண்டாயிரம் கோடி ரூபாயை மின்சாரத் துறைக்காக ஒதுக்கியிருக்கிறார்கள். ஆனால் எந்த அடிப்படையில் அதனை ஒதுக்கியிருக்கிறார்கள் என்கின்ற நிலையைச் சொல்லவில்லை. சயன்ஸ் அண்ட் டெக்னாலஜீ என்று சொல்வார்களே, விஞ்ஞான அறிவு பூர்வமான சூழ்நிலையில் உருவாக்கியிருக்கிறார்களா என்று கூடச் சொல்லவில்லை. ஆனால் மின்சாரம் பல்வேறு பஞ்சாயத்துக்கள், பேரூராட்சிகளிளெல்லாம் துண்டிக்கப்பட்டிருக் கின்றன. அதற்குக் காரணம் என்னவென்று கேட்டால், கட்டணம் கட்டவில்லை என்று சொல்கிறார்கள். மியர் லெட்ஜர் அட்ஜஸ்ட்மென்ட் செய்ய வேண்டிய வேலைதான். மின்சாரத் துறையும் அரசாங்க சம்பந்தமுடையது. பேரூராட்சியும் அரசாங்க சம்பந்தமுடையது, பஞ்சாயத்துக்களும் அரசாங்க சம்பந்த முடையது. ஆனால் பணம் கட்டவில்லை என்ற ஒரே காரணத்





திற்காக 3 மாதங்கள். 6 மாதங்கள் என்று—ஏன் கட்டினாலும் கூட சிலயிடங்களில் மின்சார இணைப்பு வழங்கப்படாமல் இருப்பதைக் கண்டு வேதனையாக இருக்கிறது.

குறிப்பாக புழல் பேரூராட்சி முழுவதும் உள்ள கிராமங் களிலே சரியாக மின்சாரம் இயங்கவில்லை. காரணம், மிகச் சிறிய பஞ்சாயத்துகள் பணம் இல்லாமல் இருப்பவைகள், அதிகப் பணம் உள்ள பஞ்சாயத்துக்களில் இருக்கின்ற உபரி நிதியை எடுத்துக் கையாள்வதற்கான வழிவகைகளை நம்முடைய சட்டம் மூலம் உருவாக்க வேண்டுமென்று மிக்க பணிவோடு நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய திருவொற்றியூர் தொகுதியைப் பொறுத்த வரையில், கிட்டதட்ட நான் சட்டமன்ற உறுப்பினராகப் பொறுப்பேற்றதற்குப் பிறகு, 15 கொலைகள் நடந்திருக்கின்றன. 15 கொலைகள் நடந்திருக்கின்ற அந்தக் கொலைக்கூடத்தில் எங்கெல்லாமோ இருக்கின்ற ரௌடிகள், கொலைகாரர்களுக் கெல்லாம்—எப்படி பறவைகளுக்குச் சரணாலயம், விலங்குகளுக்கு சரணாலயம் என்று இருக்கிறதோ அப்படி கொலைகாரர்களுடைய சரணாலயமாக திருவொற்றியூர் காட்சியளிக்கிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கூட ஒரு மீனவனுடைய பெண்ணை ஒரு கயவாளி கலாட்டா செய்த காரணத்திற்காக, அந்த மைத் துனன் ஓடிச் சென்று தடுக்கிறான். அதனால் அங்கே முத்து என்ற ஒரு மீனவன் கொலை செய்யப்படுகிறான். இதை மிக்க வேதனையோடு நான் சொல்கிறேன். காவல் துறையைச் சேர்ந்த வர்களுக்கு நன்றாகத் தெரியும். இருந்தும் கூட அவர்களைச் சிறைப் பிடிப்பதில் என்ன தயக்கம் என்பதை நான் மிக்க பணி வோடு கேட்க விரும்புகிறேன்.

நம்முடைய அவை முன்னவர் அவர்கள் இங்கே இருக்கி றார்கள். அவர்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். என் னுடைய திருவொற்றியூரை சென்னை போலீஸ் நிர்வாகத்தோடு சேர்த்துவிட வேண்டும். அப்படிச் சேர்த்தால் அதிகமான போலீஸ் வேன்கள் சுற்றிச் சுற்றி வரும்; மேலும் காவலர்கள் அதிகமாக ஆக்கப்படுவார்கள். அந்தச் சூழ்நிலையை ஏற்படுத்தி, திருவொற்றியூர் கொலைகாரர்கள் ஊர் என்று இருக்கின்ற அச் சப்பாட்டை மாற்றி, நல்ல சிறப்புடைய பட்டினத்தார் வாழ்ந்த அழகான ஊர், அந்த ஊரில் செம்மை பொருந்திய காவல் துறையை உருவாக்க வேண்டுமென்று மிக்க பணிவோடு நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

எல்லா மாவட்டங்களையும் பிரிக்கிறீர்கள், அதுபோல் எங்கள் செங்கை மாவட்டத்தையும் இரண்டாகப் பிரிக்க வேண்டும். அப்படி இரண்டாகப் பிரித்து, ஒன்றிற்கு பல்லவன் மாவட்டம் என்றும், மற்றொன்றிற்கு சேக்கிழார் மாவட்டம் என்றும், அழகான பைந்தமிழை விதைத்தவர்; அழகான பெயரிடவேண்டும்.

புராண ஆசிரியர் மட்டுமல்ல, வரலாற்று ஆசிரியருமாவார்;
அனபாய சோழனுடைய காலத்திலே முதன்முதலாக முதலமைச்ச
ராக இருந்தவர்; ஆகவே அவருடைய பெயரிலே சிறப்பான
வகையிலே சேக்கிழார் மாவட்டமாகவும், மேலும் பல்லவன்
மாவட்டமாகவும் மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்
கிறேன்.

இந்த சென்னை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், இதை
யும் இரண்டாகப் பிரிக்கலாம். 'மெட்ராஸ்' என்பது பழமையான
சொல்லாக இருந்தாலும், சென்னை மாவட்டம் என்றும், இன்
னொரு பகுதிக்கு திருவள்ளுவர் மாவட்டம் என்றும் வைக்க
வேண்டுமென்று மிகப் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன். காரணம் என்னவென்றால் நம்முடைய அழ
கான மயிலையில்தான் நம்முடைய வள்ளுவர் பெருந்தகை வாழ்ந்
தார். வள்ளுவர் வழியிலே செல்கின்ற பேரரசு, வள்ளுவருடைய
உணர்வினைப் பிரதிபலிக்கின்ற வகையில், வள்ளுவருடைய சிந்த
னையைச் செம்மைப்படுத்துகின்ற வகையில், வள்ளுவர் பெயரால்
அழகான மாவட்டமாக மாற்றிக் காட்டவேண்டும்.

நான் பல்லவ மாவட்டம் என்று சொல்வதறகுக் காரணம்,
அங்கே மகேந்திர வர்மனும், நரசிம்ம பல்லவனும் அழகான
கல்லை எல்லாம், அழகான சிலையாக்கி, கனிவான வரலாற்றை
உருவாக்கி—7 பகடாஸ் ஆப் மாமல்லபுரம்—என்று சொல்லப்படு
கிற 7 கோபுர சிற்பங்களை அழகாக உருவாக்கிக் காட்டியுள்
ளார்கள். அவற்றைப் பார்க்கும்போது பல்லவனுடைய வரலாறு
நிழலாடுகிறது. அந்த நிழலாடுகிற வரலாற்றுச் சிறப்பை, வெளிப்
படுத்திய அந்த பல்லவனுடைய பெயரிலே ஒரு மாவட்டம்
அமைய வேண்டுமென்று மிக்க பணிவன்போடு நான் கேட்டுக்
கொள்கிறேன்.

காவிரி நீர் பிரச்சினையைப் பற்றி நம்முடைய மாண்புமிகு
திரு. உத்திராபதி அவர்கள் பேசினார்கள். அவர்கள் பேசும்
போது, நடுவன் அரசை சாடினார்கள். அவர்களுக்கு நாஷனல்
இன்டகிரேஷன் உண்டா, இல்லையா என்று கேட்டார்கள். தேசிய
ஒருமைப்பாட்டிலே நம்பிக்கை உடைய கட்சிதான் எங்கள்
காங்கிரஸ் கட்சி என்பதை மாண்புமிகு உறுப்பினருக்கு எடுத்துக்
காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

ஹெக்டே என்று சொல்கின்ற கர்நாடக முதல் அமைச்சர்
அவர்களுடன் முறையாக, காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்த
மாண்புமிகு உறுப்பினர்கள் பலமுறை விண்ணப்பம் கொடுத்திருக்
கிறோம். ஆனால், ஒன்றை நினைவுபடுத்த விரும்புகிறேன்.
இந்தக் காவிரி நீர் பிரச்னையில், 5 டி. எம். சி. தண்ணீரைப்
பெறுவதற்கு மின்சாரம் தந்தாலும் அதை முறையாகப் பெற
வேண்டுமானால், ஒரு சர்வ கட்சி குழு போட்டு, காங்கிரஸ் கட்சி
யைச் சேர்ந்தவரையோ, அல்லது ஆளுங்கட்சியைச் சேர்ந்த
வரையோ தலைவராகப் போட்டு, அந்தக் குழு நம்முடைய





ராஜிவ் காந்தி அவர்களைச் சந்தித்து, தேசிய ஒருமைப்பாட்டுப்
பிரச்னைகளிலே ஆற்று நீர் பிரச்னைகளிலே சுமுகமாக வருகின்ற
அளவுக்கு, நம்முடைய தமிழக முதல்வர் மாண்புமிகு எம்.ஜி.ஆர்.
அவர்கள் சுமுகமான சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டுமென்ற
கோரிக்கையினை நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இலங்கைப் பிரச்னையைப் பார்க்கின்றபொழுது நம்முடைய
தமிழக அரசு மிகுந்த கவலை அடைகின்ற சூழ்நிலையைப் பார்க்
கிறோம். அங்கே நம்முடைய தமிழ்ப் பெருமக்கள், தமிழ் இனத்
தைச் சேர்ந்த தமிழச்சி பெண்கள் கற்பு சூறையாடப்படுகின்ற,
இனப் படுகொலைகளுக்கு ஆளாக்கப்படுகின்ற சூழ்நிலையை எல்
லாம் பார்த்து வேதனையையும், வருத்தத்தையும தமிழக அரசு
அடைந்திருக்கிறது. அந்த வருத்தத்தினை நான் சார்ந்திருக்கிற
காங்கிரஸ் கட்சியின் சார்பாகவும் அவ்வியக்கத்தின் அருமைத்
தலைவர் ராஜீவ் காந்தி அவர்களின் எழுச்சி பொருந்திய சிந்தனை
சார்பாகவும் சொல்லிக் கொள்கிறேன். எவ்வளவு கருணையும்,
அன்பும், பாசமும் தமிழக அரசு மீதும் இலங்கை மக்கள் மீதும்
அருமைத் தலைவர் ராஜீவ் காந்தி அவர்கள் வைத்திருக்கிறார்கள்
என்பதற்கு எடுத்துக் காட்டாக ஒன்றைச் சொல்கிறார்கள்.
இலங்கையிலே உள்ள மக்கள் அந்த நாட்டுக் குடியுரிமைத் தகுதி
பெறாமல் இருக்கிற வரையில், நான் அவர்களை இந்தியாவில்
ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று மிகச் சிறப்பாக, உத்தரவாத
மாக அவர்கள் தட்டிக் கேட்கின்ற வகையில் சொல்லியிருப்பதைப்
பாராட்டி, நான் மெய் சிலிர்த்துப் போனேன்.

பம்பாயில் நடைபெற்ற காங்கிரஸ் 100-வது ஆண்டு நிறைவு
விழாவில் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். நான் பம்பாயைப்
பற்றிச் சொல்லும்பொழுது ஒன்றைச் சொல்ல வேண்டும். நம்
முடைய சென்னையில் கொசுப் பண்ணைகள் இருப்பதைப் போல்
கொசுக்கள் இஷ்டம்போல் உலவுகின்றன என்று சொன்னார்கள்.
இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் கூட அதைப்பற்றி குறிப்
பிட்டார்கள். பம்பாயிலே கொசுக்களே இல்லை, கொசுக்களை
ஒழித்து விட்டார்கள். ஒரு பெரிய வித்தியாசமான சூழ்நிலை.
அந்தச் சூழ்நிலையை நாம் உற்று நோக்கவேண்டும். சென்னை
மாநகராட்சியினுடைய அதிகாரத்திற்கு உட்பட்ட பகுதி
களிலுள்ள கொசுக்களை ஒழிக்கவேண்டும். இலட்சக்கணக்கான
மக்கள் கூடிய அந்தக் கூட்டத்தில் ஒரு கொசு
கடித்ததாகக் கூட யாரும் சொல்லவில்லை. அந்த
நூற்றாண்டு விழாவிலே ராஜீவ் காந்தி அவர்கள் பேசும்
போது, இலங்கைப் பிரச்னையைப் பற்றி தெளிவுபட
சொல்லியிருக்கிறார்கள். அதை ஒரு தனி மனிதனுடைய பிரச்
னையாக எண்ணாமல், இந்திய நாட்டினுடைய வம்சாவளி
மக்கள் பிரச்னையாக, இந்திய மக்களுடைய பிரச்னையாக
எண்ணி, அதைத் தட்டிக் கேட்கின்ற ஆட்களில் நான் முதலாவ
தாக இருப்பேன் என்ற உணர்வோடு சொல்லி, அவர்கள் சிறப்
பித்த பெருமையை நான் உளப்பூர்வமாகப் பாராட்டக் கடமைப்

பட்டிருக்கிறேன் என்று சொல்லி, இந்தப் பேரவையில் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் பேசுகின்ற வாய்ப்பை தந்தமைக்காக நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.

(பிற்பகல் 1-30)

7. அரசினர் தீர்மானம்.

பேரவை ஒத்திவைக்கப் பெறுதல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"பேரவையின் நிகழ்ச்சிகளை இன்று (11—1—1986) முடித்துக் கொள்ளலாம் என்றும், மீண்டும் பேரவை 20—1—1986ஆம் தேதியன்று வழக்கம்போல் காலை 9.00 மணிக்குக் கூட்டப் பெறலாம் என்றும் அலுவல் ஆய்வுக் குழுவில் தீர்மானிக்கப் பெற்றது.

பேரவை விதி 25(1)-ன் கீழ், பேரவை இன்று ஒத்திவைக்கப் பெற்று, மீண்டும் சனவரித் திங்கள் 20-ம் நாள் திங்கட்கிழமை காலை 9 மணிக்குக் கூடலாம்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 20-1-1986, திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.31 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

82. தமிழ்நாடு 1954ஆம் ஆண்டு அரசு தேர்வாணைக் குழு ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்துபணியாளர்மற்றும் நிர்வாகச் சீர்த்திருத்தத் துறையின் 21-11-1985–ஆம் நாளிட்ட 1109–ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].





83. தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு அரசு தேர்வாணைக் குழு ஒழுங்குமுறை விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் 21–11–1985 ஆம் நாளிட்ட 1110–ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 320 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

84. வட ஆற்காடு மாவட்டத்தைச் சார்ந்த 'குட்சமாரிடன்' ஊரக வளர்ச்சித் திட்டத்திற்கு சொந்தமான இழுவை எண் டி. டி. ஜே. 8297–க்கு செலுத்தக் கூடிய வரியினை குறைப்பது குறித்து உள் துறையின் 1–10–1985-ஆம் நாளிட்ட 2451–ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974–ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

85. தமிழ்நாடு 1974–ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்பு விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து உள் துறையின் 1–10–1985-ஆம் நாளிட்ட 2452-ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

86. மதுரை மாவட்டம், நத்தம் மற்றும் வேடசந்தூர் தாலுக்காக்களை சேர்ந்த சில கிராமங்களை தானமாக கொடுக்கப்பட்ட கிராமங்களாக அறிவிப்பது குறித்து ஊரக வளர்ச்சித் துறையின் 10–7–1985-ஆம் நாளிட்ட 553–ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1958–ஆம் ஆண்டு பூதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28 (4) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

87. தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தின் 1982-83–ஆம் ஆண்டிற்கான இரண்டாவது ஆண்டறிக்கை 1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்).

88. தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தின் 1983–84–ஆம் ஆண்டிற்கான பதினைந்தாவது ஆண்டறிக்கை [1956–ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

89. தமிழ்நாடு கைத்தறித் தொழில் வளர்ச்சிக் கழகத்தின் 1981–82-ஆம் ஆண்டிற்கான ஒன்பதாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

90. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 1982–83-ஆம் ஆண்டிற்கான பன்னிரண்டாவது ஆண்டறிக்கை [தமிழ்நாடு 1971–ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 49 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ்).

91. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 1982–83-ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை [தமிழ்நாடு 1971–ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (ஆங்கிலம்).

92. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் 1982–83-ஆம் ஆண்டிற்கான வருடாந்திர கணக்குகள் [தமிழ் நாடு 1971–ஆம் ஆண்டு வேளாண்மைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 8/1971) 33 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (ஆங்கிலம்).

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்
ஏதுவுமில்லை.

**LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATION.**

**IN MADRAS CITY.**

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 P. Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1 Ponniamman Koil Street, Egmore, Madras-8.

**IN MOFUSSIL OF TAMIL NADU.**

1 A Venkatasubban & Company, Vellore (North Arcot District).
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V.Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-rappalli-4.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore 10.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavillas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

**IN OTHER STATES.**

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bagohi & Company, 286, R. B. Gandhi Street, Calcutta-11.

Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.

904/86

வெளியீடு 7-6-1986 Issued 7-6 1986

2892

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஜனவரி 20, 1986-தொகுதி XV எண் 4
Monday the 20th January 1986-Volume XV No. 4

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600009
Legislative Assembly' Secretariat, Fort St. George, Madras-600009

விலை ரு 3-00 காசுகள்] [Price Rs 3-00 paise

உள்ளடக்கம்:

20–1–1986.


| | | பக்கங்கள்: |
|---|---|---|
| 1. இரங்கல் குறிப்புகள்— | | |
| முன்னாள் சட்ட மன்றப் பேரவை கூறும் பினர்கள் மறைவு குறித்து. | .. | 311—312 |
| 2. வினாக்கள்–விடைகள்— | | |
| உடுக்குறிபிட்ட வினாக்கள் | .. | 312—350 |
| 3. அறிவிப்பு— | | |
| அரசினர் சட்ட முன்வடிவுகள் (மே. சே;) | | 351 |
| 4. கவன ஈர்ப்பு — | | |
| அடையாறு ஆற்றோரப் பகுதி வாழ் மக்கள், மழை காலங்களில் பெரிதும் பாதிப்புக்குள்ளாவது குறித்து. | .. | 351— 354 |
| 5. அறிக்கைகள் அளித்தல்— | | |
| பொது நிறுவனங்கல் | .. | 355 |
| 6. தொழில் துறை அமைச்சர்கள் அறிக்கை— | | |
| மின்னணுவியல் தொகை பேசிகனை உற்பத்தி செய்தல்— | .. | 355—357 |
| 7. அரசினர் சட்ட முன்வடிவு— | | |
| கூலி வழங்கல் (தமிழ் நாடு திருத்த) சட்ட முன்வடிவு 1986 | .. | 357 |
| 8. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம் விவாதம்—(தொடர்ச்சி) | .. | 357—438 |
| திரு. மு. பாண்டுரங்கன் | .. | 357—363 |
| திரு. எஸ். வேணுகோபால் | .. | 363—375 |
| மாண்புமிகு திரு. தா. வீராசாமி | .. | 370 |
| டாக்டர் கே. பி. இராமலிங்கம் | .. | 378—388 |
| திரு. மா. மீனாட்சி சுந்தரம் | .. | 389—396 |
| டாக்டர் தே. குமாரதாஸ் | .. | 396—403 |
| டாக்டர் கே. சமரசம் | .. | 403—415 |
| திரு. மா. சுந்தரதாஸ் | .. | 415—424 |
| திரு. கே. பாலாஜி | .. | 425—430 |
| டாக்டர் ந. மாசிலாமணி | .. | 435—438 |
| 6. ஒழுங்குப் பிரச்சை— | | |
| அதிகாரிகள் அவை மாடத்திற்கு வராதது குறித்து | .. | 358 |
| 10. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள் | .. | 438 |

2892

# தமிழ்நாடு சட்ட மன்றப் பேரவை.

**1986, சனவரி 20, திங்கட்கிழமை.**

**தை 7, குரோதன, திருவள்ளுவர் ஆண்டு 2017**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்."

சொற்களில் பயன் உடைய சொற்களை மட்டும் சொல்ல வேண்டும்; பயன் இல்லாதவைகளாகிய சொற்களைச் சொல்லவே கூடாது.

## 1. இரங்கல் குறிப்புகள்.

### முன்னாள் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் மறைவு குறித்து.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திரு. பி. வெங்கடாசலம் பிள்ளை 13-1-1986 ஆம் தேதியன்றும், திரு. பெ. கலியமூர்த்தி, 17-1-1986 ஆம் தேதி அன்றும், திரு. கே. ரங்கநாதன், 18-1-1986 ஆம் தேதியன்றும் மறைந்தமை குறித்து இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. வெங்கடாசலம் பிள்ளை அவர்கள் 1937 ஆம் ஆண்டிலிருந்து 1939 ஆம் ஆண்டு வரையும் மற்றும் 1946 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரையும் இருமுறை திருச்சிராப்பள்ளி மாவட்டம், அரியலூர் பொது கிராமப்புறத் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்று நல்ல முறையில் பணியாற்றியுள்ளார். திரு. பிரகாசம் அமைச்சரவையில் பொதுப் பணித்துறை அமைச்சரின் பேரவைச் செயலராகவும் (பார்லிமெண்டரி செக்ரட்டரி) சீரிய முறையில் பணியாற்றியுள்ளார். மேலும் திருச்சிராப்பள்ளி மாவட்டக் கழகத்தின் (டிஸ்ட்ரிக்ட் போர்ட்) உறுப்பினராகவும், அதன் தலைவராகவும் மற்றும் சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழு (செனட்) உறுப்பினராகவும் சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. பெ. கலியமூர்த்தி அவர்கள் 1980 ஆம் ஆண்டிலிருந்து 1984 ஆம் ஆண்டு வரை தென்னாற்காடு மாவட்டம் மங்களூர் (செ.வ) தொகுதியிலிருந்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்று, நல்ல முறையில் பணிமாற்றியுள்ளார்.

திரு. கே. ரங்கநாதன் அவர்கள் 1971 ஆம் ஆண்டிலிருந்து 1976 ஆம் ஆண்டு வரை கோயமுத்தூர் மாவட்டம் கோயம் புத்தூர் கிழக்குத் தொகுதியிலிருந்து, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப் பெற்று, நல்ல முறையில் பணி யாற்றியுள்ளார்.

அன்னாரின் மறைவு குறித்து அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினர்களுக்கு ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்தியவர்களுக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்.

2. வினாக்கள் —விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்

சிறு சேமிப்புச் சிறப்புத் திட்டம்.

41—(*வினா எண். 1885.) திரு. செ. செம்மலை: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறு சேமிப்பில் மக்களை ஈர்க்கத்தக்க வகையில் அரசு சிறப்புத் திட்டங்கள் எதையேனும் வகுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(ஆ) அரசு ஆணை 213 நிதி (சிறு சேமிப்பு) துறை, 15-3-85-ன் படி 15-3.85 முதல் பொருட்காட்சிகளில் அமைந்து இருக்கும் சிறு சேமிப்பு அரங்குகளில் தேசிய சேமிப்பு பத்திரங்கள் வாங்குவோருக்கு ஒரு விழுக்காடு ஊக்கத்தொகை அரசினால் வழங்கப்படுகிறது.

சிறு சேமிப்பில் முதலீடு செய்வதால் கிடைக்கும் பலன்கள், வட்டி விகிதங்கள், வருமானவரிச் சலுகைகள் ஆகியவைகளை விளக்கி, கவர்ச்சிகரமான பல வண்ணப் பிரசுரங்கள் ஆகியவைகள் வெளியிடப்படுகின்றன.

பிரபலமான ஆங்கில, தமிழ்நாள் வார மாத இதழ் களில் மக்களை கவரத்தக்க வகையில் பல விளம்பரங்கள் வெளி யிடப்படுகின்றன.



ஒவ்வொரு மாநகராட்சி, நகராட்சி, பஞ்சாயத்து யூனியன் பகுதிகளிலும் வீடுவீடாகச் சென்று விளம்பரம் செய்து வீட்டுக்கொரு வளரும் மாத சேமிப்புக் கணக்கு ஆரம்பிக்கும் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட உள்ளது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கிகளில் தற்போது நடைமுறையில் இருந்து வரும் சில கவர்ச்சிகரமான திட்டங்களால் தான் இந்தச் சிறு சேமிப்புத் திட்டம் எதிர்பார்த்த பலனைத் தருவதில்லை என்ற ஒரு குறைபாடு இருந்து வருவதாகச் சொல்லப்படுகிறது. இதற்கு நல்ல விளம்பரம் இல்லை என்ற ஒரு குறையும் இருந்து வருகிறது. எனவே, அப்படிப்பட்ட குறைபாடுகளை எல்லாம் போக்குவதற்குரிய வகையில் மக்கள் மத்தியிலே நல்ல விளம்பரம் செய்கின்ற வகையில், நல்லதொரு சாதனமாக விளங்குகின்ற திரைப்படத் துறையின் மூலம் ஏதேனும் விளம்பரங்களைச் செய்ய அல்லது விளம்பரப் பாடங்களை எடுக்க அரசு முயற்சித்து இருக்கின்றதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலே கூறியபடி சிறு சேமிப்புத் துறையின் மூலமாக நல்லபல விளம்பரங்கள் செய்து பொதுமக்களின் கவனத்தை ஈர்க்கக்கூடிய அளவுக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதை மேலும் ஊக்குவிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறோம். வங்கிகளை விட தனிச் சலுகைகள் பலவற்றை சிறு சேமிப்பு தருகின்றது. இந்த சிறு சேமிப்புத் துறையிலே முதலீடு செய்வதன் மூலமாக அவர்களுக்கு வருமான வரிச் சலுகைகள் தரப்படுகின்றன. ஓரிரு திட்டங்களைப் பொறுத்தவரையில். அவர்கள் இடையிலே இறந்துவிடுவார்களானாலும் கூட அந்தக் காலம் முழுவதும் கொடுப்பதற்கான வகையில் ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் நடவடிக்கைகள் கூட சில வகைகளில் செய்யப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் சொல்வது போன்று திரைப்படத்தின் மூலமாக இந்த விளம்பரத்தைச் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு சேமிப்புத் திட்டத்தின்மூலம் சேமிப்பவர் களுக்கும் நன்மை பயப்பதாக இருக்கிறது. அதே சமயத்தில் நாட்டு மக்களுக்கும் நன்மை பயக்கக்கூடிய திட்டமாக அமைந்திருக்கிறது. இன்றைக்கு இருக்கக் கூடிய சூழ்நிலையில் எதையும் சாதிக்க வேண்டும் என்று சொன்னால், சட்டத்தின் மூலமாகவோ அல்லது கட்டாயத்தின் மூலமாகவோ தான் செய்யப்பட்டாக வேண்டும் என்ற நிலையில், நன்மை பயக்கக் கூடிய இந்த திட்டத்தை கட்டாயத் திட்டமாக அறிவிக்கக் கூடாதா? அப்படிப்பட்ட திட்டம் அல்லது எண்ணம் அரசுக்கு ஏதேனும் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டம் நல்ல திட்டமாக இருந்தாலும் கூட கட்டாயப்படுத்துகிற போது பல்வேறு சங்கடங்கள் ஏற்படக் கூடும். பொது மக்கள் மத்தியி லிருந்தும் கூட எதிர்ப்புகள் கிளம்பக் கூடும். ஆகவே பொது மக்கள் தாமே விரும்பி எடுக்கின்ற வகையிலேதான் சிறு சேமிப்புத் திட்டம் அமைய வேண்டும் என்ற நோக்கத்தை அடிப்படையாக வைத்துத்தான் சிறு சேமிப்பை பெருக்குவதிலே ஆண்டுக்காண்டு நாம் முன்னேற்றம் கண்டு வருகிறோம்.

அந்த வகையிலே சென்ற ஆண்டு கூட 165 கோடிக்கு மேற்பட்ட அளவிலே சிறு சேமிப்பு தொகையாக நம்முடைய மாநிலத்திற்கு கிடைத்திருக்கிறது. இந்த ஆண்டு கூடுதலாக கிடைக்கும் என்ற எண்ணமும் இருந்து வருகிறது. ஊக்கத் தொகை கொடுப்பதிலும், பரிசுகள் வழங்குவதிலும் நாம் பலவித நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். ஆனால் கட்டாயப் படுத்தப்படுவதால் அது அவ்வளவு சிறப்பாக அமையாது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் தலைவர் அவர்களே, சிறு சேமிப்பு பழக்கத்தை ஏழை எளிய பொது மக்களிடம் கொண்டு வந்தால்தான் நன்றாக இருக்கும். ஆனால் அதிகாரிகள் டார்கெட்டை பில் அப் பண்ண வேண்டும் என்பதற்காக வியாபாரிகளிடமும், ஆங்காங்கே செக்போஸ்டில் இருப்பவர்களிடமும் சிறு சேமிப்பை போடுவதற்கான முறையில் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். இப்படிப்பட்ட போக்கை தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா? ஏழை எளிய பொது மக்களிடம் இந்தச் சிறு சேமிப்புத் திட்டத்தை பழக்கத்தில் கொண்டு வருவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயத்தில் உள்ள எல்லா தரப்பினரையும் ஓரளவுக்கு சிறு சேமிப்பில் ஈடுபடுத்த வேண்டும் என்ற நோக்கத்தை அடிப்படையாக வைத்துதான் இந்த திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே வசதி படைத்தவர்களிட மிருந்தும் சிறு சேமிப்புத் தொகையை வாங்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆகவே இன்றியமையாத சில இடங்களில் கட்டாயப்படுத்தி எடுத்துச் சொல்லி, இந்த திட்டத்தின் சிறப்புகளை உணர்த்தி சிறு சேமிப்புத் தொகையை வாங்க வேண்டியிருக்கிறது. ஏழை எளியவர்கள் தாமாகவே தர முன் வருவார்களேயானால் மிக்க மகிழ்ச்சி. மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் அப்படிப்பட்ட நல்ல எண்ணத்தை ஏழை எளிய மக்களிடத்தில் பரப்பி, அவர்களுக்கு ஊக்கமும் முயற்சியும் தருவார்களேயானால், அவர்களுடைய நல்ல எண்ணம் நிறைவேற வழி ஏற்படும்.



### அரசு ஊழியர்களுக்கான ஓய்வூதியம்.

42— (*வினா எண். 3466) திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு ஊழியர்கள் எந்த தேதியில் ஓய்வு பெற்றிருந்தாலும் எல்லோருக்கும் தாராள பென்ஷன் திட்டத்தின் கீழ் பென்ஷன் வழங்குவதென அரசு முடிவு செய்துள்ளது உண்மை தானா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(ஆ) 14-6-1984-ம் நாளிட்ட நிதித்துறையின் அரசாணை எண். 397-ல் இதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1984-லிருந்துதான் இந்தத் திட்டம் அமலில் வருகிறது என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். அதையே சற்று தாராளமான மனது வைத்து, 1980-லிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கும் கிடைக்கக் கூடிய நிலைமையை உருவாக்குவதற்கு வழி வகை செய்ய முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதி மன்றத்திலே வழக்குத் தொடரப்பட்டு ஒரு தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. தீர்ப்பு அளிக்கப்பட்டபோது, ஓய்வு பெற்றவர்கள் எந்தக் காலத்தில் ஓய்வுப் பெற்றவர்கள் என்று கணக்கில் எடுக்காமல் தரவேண்டும் என்று தீர்ப்பு அளித்திருக்கிறார்கள். அந்தத் தீர்ப்புக்கு பிறகு மத்திய அரசு சிலபல தன்மைகளை ஒழுங்குமுறைப்படுத்தியது. மத்திய அரசு ஒழுங்குமுறைப்படுத்தியிருக்கிற அதே முறையில் தான் நாமும் கடைபிடிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே அவர்களுக்கு வழங்குகின்ற நிலைமையில், நாம் வழங்குகின்ற எந்த நேரத்திலும், அவர்கள் ஓய்வு பெறுகின்ற காலம் எதுவாக இருந்தாலும் எப்போது ஓய்வு பெற்றிருந்தாலும் தரவேண்டும் என்ற அடிப்படையில்தான் இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

### திண்டுக்கல் கோபால சமுத்திரம் குளம்.

43 (*வினா எண். 871) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி.பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) மற்றும் திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) திண்டுக்கல் நகரின்நடுவில் சுகாதாரக் கேடுகள் விளைவிக்கும் கோபால சமுத்திரம் குளத்தை மூடிவிட அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நட வடிக்கை என்ன?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கோபாலசமுத்திரம் குளம் திண்டுக்கல் நகரத்தில் மைய பகுதியில் இருக்கிறது. அதுவும் அல்லாமல் அது மாவட்ட மருத்துவ மனையையும் ஒட்டியிருக்கிறது. அது அங்கே அமைந்திருப்பதால் கொசுக்களை உற்பத்தி செய்யும் கேந்திரப் பிரதேசமாகவும் இருக்கிறது. ஆகவே, அது மருத்துவமனையின் அருகிலே இருக்கிறது என்ற காரணத்திற்காகவும், நகரத்தின் மையமான இடத்தில் இருக்கிறது என்ற காரணத்தினாலும், சுகாதாரக்கேட்டை விளைவிக்கும் அதை மூடுவதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அத்தகைய நிலைமை களை அரசு அறியும். அது ஒரே மாவட்டமாக மதுரை மாவட்டமாக இருந்தபோது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அந்தக் குளத்தை விளையாட்டு அரங்கமாக அமைக்க லாம் என்று ஒரு செயற்குறிப்பினை அனுப்பி இருக்கிறார்கள். அதுபற்றி அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 44 மற்றும் 45 ஒன்றாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

ஒன்றியங்களின் வருவாயைப் பெருக்கும் திட்டம்.

44—(*வினா எண். 2213) திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) ஊராட்சி ஒன்றியங்களின் வருவாயைப் பெருக்க தென்னை, மா, புளி போன்ற மரங்களைப் பயிரிடும் செயற் குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) ஆம்.

(ஆ) தேசிய ஊரக வேலை வாய்ப்புத்திட்டம் மற்றும் ஊரக நிலமற்றோர் வேலை உறுதியளிப்புத்திட்டங்களில் 1985-86 ஆம் ஆண்டிலிருந்து இச் செயற்குறிப்பு செயல்படுகிறது.



ஊராட்சிகளில் அத்தியாவசிய வேலைகள்.

45—(*வினா எண். 2288) திரு. க. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) போதுமான நிதி வசதி இல்லாத ஊராட்சிகளில் அத்தியாவசியமான வேலைகள் செய்வதில் தாமதம் ஏற்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள மாற்று நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இல்லை

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக ஊராட்சிகளில் தென்னை மரம், புளிய மரம், மாமரம் போன்ற மரங்களை வைத்து வளர்ப்பதினால் அந்த ஊராட்சிகளுக்கு அதிகமாக வரு மானம் கிடைத்து வருகிறது. பத்து ஆண்டுகளுக்கு முன்பு நடப் பட்ட தென்னை மரங்களிலிருந்து இப்போது வருமானம் கிடைக் கிறது. இப்போதும் அது போன்று செய்யப்படுகிறது. ஆரம் பத்தில் அதற்கு வேலி போட்டு ஆள் எல்லாம் போடுகிறார்கள். ஆனால் ஊராட்சிகளில் பணம் இல்லாததால் அதோடு அதன் பராமரிப்பு நின்று விடுகிறது. அந்த ஆட்களுக்கு சம்பளம் கொடுக்க முடிவதில்லை. அந்த மரங்களின் மூலமாக கிடைக்கிற வருமானம் ஊராட்சிகளுக்கு பயனளிக்கும் என்பதால் எதிர் காலத்திலாவது வருமானம் இல்லாத பஞ்சாயத்துகளுக்கு விசேஷ மான திட்டங்களின் மூலமாக நிதி வழங்கப்படுமா? தென்னை, மா, புளி போன்ற மரங்களை பயிரிடுவதற்கு தனியாக நிதி ஒதுக்கி விஷேச திட்டத்தின் மூலமாக அளிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ப.உ. சண்முகம்: தலைவர் அவர்களே, தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழும், ஊரக நிலமற்றோர் ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழும் கொடுக்கப்படுகிற வேலைவாய்ப்பு திட்டங்கள் இவை. ஊராட்சி ஒன்றியங்களுக்கோ, ஊராட்சி களுக்கோ நிதி கொடுப்பதற்காக இந்தத் திட்டங்கள் இல்லை. இவைகள் கிராமப்புறங்களில் வாழ்கிற மக்களுக்கு வேலைவாய்ப் பினை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக கொண்டு வரப்பட்ட நல்ல திட்டங்களாகும். ஆங்காங்கு ஒன்றியங்களில் நாம் நர்சரிகளை வைத்து செடிகளை வளர்க்கிறோம். அதன்பிறகு அந்தச் செடி களைப் பாதுகாப்பதற்காக, புறம்போக்கு இடங்களிலும் மற்றும் கிடைத்த இடங்களிலும் செடிகளை நடுவதற்கு ஆட்களுக்கு கூலி கொடுத்து அவைகளை நடச் செய்கிறோம். வேலை செய்கின்ற

வர்களுக்கு எட்டு ரூபாய் அதாவது எட்டு ரூபாய் பெறுமான முள்ள அரிசி, கோதுமை மற்றும் பணம் என்று இவைகள் சேர்த்து கொடுக்கிறோம். இதுதான் திட்டமாகும். இவைகள் வளர்ந்து பலன் தருகிற போது அந்தப் பலன் ஊராட்சி மன்றங்களுக்கு அளிக்கப்படும். தனியார் நிலங்களில் எங்காவது வைக்கப்படு மானால், ஆதிதிராவிடர்களுக்கு அரசு சலுகை அளித்திருக்கிறது. அப்படி வைக்கப்படுமானால் அது அவர்களுக்கே சொந்தமாக ஆக்கப்படும்.

திரு. க. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, நிதிவசதி இல்லாத காரணத்தால் ஊராட்சிகளில் சிறிய வேலைகளைக் கூட செய்ய முடிவதில்லை. கை பம்ப் போடுவதாக இருந்தாலும், சாலை ஓரங்களில் சரிந்து விட்ட மண்ணை எடுத்துப் போடு வதாக இருந்தாலும், பணம் இல்லாத காரணத்தால் செய்ய முடியவில்லையென்று ஒன்றிய ஆணையர்கள் தெரிவிக் கின்றார்கள். ஆகவே இப்படிப்பட்ட சிறு வேலைகளைச் செய் வதற்கு கூட பணம் இல்லாத ஊராட்சிகளுக்கு வேறு நிதி யாதாரங்களிலிருந்து பணத்தை ஒதுக்கி, மக்களுக்கு இது போன்ற அத்தியாவசியமான பணிகளைச் செய்வதற்குரிய வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதாவது ஏற்பாட்டினைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, குடி தண்ணீரைப் பொறுத்த வரையில் ஊராட்சிகளுக்கெல்லாம் இலவசமாக வழங்கப்படுகிறதே தவிர, ஊராட்சி நிதியைப் பொறுத்து அது கொடுக்கப்படுவதல்ல. மற்ற வேலைகளுக்கு ஊராட்சியில் நிதி இல்லையென்றால் அரசு கொடுக்கின்ற மானியத்தை வைத்துக் கொண்டுதான் அவை நிறைவேற்றப் படுகின்றன. எந்த வேலையும் தடங்கல் இல்லாமல் செய்யப் படுகிறது என்பது தான் எனக்கு அளிக்கப்பட்டிருக்கிற தகவல். எங்காவது அப்படி நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் அரசு அதை கவனிக்கும்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : (பேரவைத் துணைத் தலைவர்): தலைவர் அவர்களே, புளிய மரம் தென்னை மரம் போன்ற மரங்களை ஊராட்சிகள் வளர்ப்பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வளர்ந் திருக்கிற மரங்கள் ஒரு சாதாரண ஊராட்சியில் கூட 100 மரங் களுக்கு மேற்பட்டு இருக்கின்றன. ஒருசில இடங்களில் ஆயிரத்திற்கு மேற்பட்ட மரங்கள் தனியார்களுக்கு மேல் மகசூலாக 2-சி பட்டா என்று பல ஆண்டுகளுக்கு முன்பு போடப்பட்டிருக்கிறது. இவைகளை எல்லாம் ரத்து செய்து ஊராட்சி ஒன்றியத்திற்கு வருமானால் மாநிலம் முழுவதும் பலகோடி ரூபாய் வருமானம் வருகிற வாய்ப்பு உள்ளது. எனவே இப்படி தனியார்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற 2-சி பட்டாக்களை ரத்து செய்து ஊராட்சிகளிடம் ஒப்படைப்பதற்கு உள்ளாட்சித் துறையில் ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்பு கிறேன்.



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர் களே, இப்போது என். ஆர். இ. பி. மற்றும் ஆர். எல். இ. ஜி. பி. போன்ற திட்டங்களின்கீழ் வளர்க்கப்படுகின்ற செடிகள் மரங்கள் ஆனதற்குப் பிறகு, அவைகளுக்கு 2—சி பட்டா கொடுத்து, தனியார்களிடம் அவைகளை ஒப்படைக்கவேண்டும் என்று மத்திய அரசு சொல்லியிருக்கிறது. நாமும் அதை ஏற்றுக் கொண்டு இருக்கிறோமே தவிர, ஏற்கனவே 2—சி பட்டா பெற்று இருப்பவர்களை நாம் ரத்து செய்வதாக இப்போது அரசுக்கு எந்தவிதமான யோசனையும் இல்லை.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர் களே, நம் அரசு ரோடுகளிலே மரங்களை வளர்ப்பதிலே மிகவும் அக்கறை காட்டுவதை நான் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். ஆனால் ஏற்கனவே இருக்கின்ற மரங்கள், பலன் தரக்கூடிய அந்த மரங்களை மொட்டையாக, அப்படியே வெட்டிக் கொண்டு செல்கிறார்களே, அதைத் தடுக்க என்ன நடவடிக்கையை எடுக்க அரசு உத்தேசித்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இது போன்று எங்காவது நடந்தால், மாவட்ட ஆட்சி மன்றத் தலைவரிடம் தகவல் தெரிவித்தால், அவர் தக்க நடவடிக்கைகளை உடனடியாக எடுப்பார்.

திரு. தி. அப்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, நிதிப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்ட ஊராட்சி மன்றங் களுக்கு, பொது நிதியிலிருந்து நிதி எப்படி பயன்படுத்தப்படுகிறது? அப்படிக் குறைவாக உள்ள ஊராட்சி மன்றங்களுக்கு பொது நிதி யிலிருந்து அதிகமான நிதியை ஒதுக்க ஆவன செய்யப்படுமா? அதுபோல், குறைந்த வருமானம் உள்ள ஊராட்சி ஒன்றியங் களுக்கு, அதிக வருமானம் உள்ள ஊராட்சி ஒன்றியங்களிட மிருந்து கடன் பெற்று செயல்படுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர் களே, ஊராட்சி ஒன்றிய பொது நிதியிலிருந்து செலவு செய்த பின், அதை ஈடு செய்வதற்கு அரசு ஆணை பிறப்பித்து இருக்கிறது.

திரு. டி.எம். வெங்கடாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர்ப் பிரச்சனையைப் பொறுத்தவரையில், அரசு முழுமை யாக, இலவசமாக செய்வதாக அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் குடிநீருக்காக அந்த இடங்களைத் தேர்வு செய்வதற்கு ஊராட்சிகளிலேயிருந்து 500 ரூபாய் பணம் கட்ட வேண்டும் என்று சொல்கிறார்கள். இதைக் கட்டாத பல இடங் களை தேர்வு செய்யாத நிலைமையிருக்கிறது. இது அரசுக்குத் தெரியுமா? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அப்படி ஏதேனும் ஊராட்சி மன்றங்கள் பணம் கட்டுவதற்கு வசதி இல்லை என்றால், ஊராட்சி ஒன்றியத்தில் பொது நிதியிலிருந்து அதைக் கட்டும். அதற்கு எந்தத் தடங்கலும் இருக்காது. இது அரசின் கவனத்திற்கு வந்தால், எங்கே நிறுத்தப்படுகிறது என்ற தகவல் அரசுக்கு வந்தால், அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு வே. இரா. ஜெயராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி பொது நிதியைப் பொறுத்தவரையில், ஆங்காங்கே நடைபெறுகின்ற குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கும், கண்ணொளி வழங்குகின்ற திட்டத்திற்கும், அங்கே இருக்கின்ற ஊராட்சி பொது நிதியிலிருந்து பணத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் எடுத்துவிடுவதால், அந்தப் பணம் குறைந்து விடுகிறது. எனவே அந்த ஊராட்சி பொது நிதியிலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் பணம் எடுப்பதற்கு, ஊரக வளர்ச்சித் துறை இயக்குநரிடமிருந்து அனுமதி பெறுவதற்கு அரசு அறிவுறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற காரியங்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் நிதியைப் பயன் படுத்துகிறார்கள் என்ற புகார் அரசுக்குக் கிடைத்திருக்கிறது. அரசு அதைப்பற்றி பரிசீலித்துக் கொண்டு இருக்கிறது.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்களுக்கு குடிநீர் அரசாங்கம் இலவசமாக வழங்குவதாக சொல்கிறார்கள். இந்த குடிநீர் வழங்கும் திட்டத்தைப் பொறுத்தவரையில், ஒரு ஊராட்சி ஒன்றியத்திலே 350 பைப்புகள் இருந்தால், ஒரு பிட்டர்தான் இருக்கிறார். இதனால் அவைகள் ரிப்பேராக இருக்கும்போது, சரி செய்ய முடியாமல், மக்களுக்கு குடிநீர் சரியாக வழங்க முடியவில்லை. எனவே இதைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் என்ன மாற்றுத் திட்டத்தை வைத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, எந்த ஊராட்சி ஒன்றியத்திலும் 100-க்கும் அதிகமான கைப் பம்புகளுக்கும் ஒரு பிட்டரை அதிகமாக நியமித்துக்கொள்ளலாம் என்று அரசு ஏற்கனவே ஆணை பிறப்பித்து இருக்கிறது. 100 கை இறைப்பான் இருந்தால் மேற்கொண்டு ஒவ்வொரு 100 கை இறைப்பான்களுக்கு ஒருவர் என்ற விகிதத்தில், 200-க்கு மேலாக இருந்தால் இருவர் என்றும், 300-க்கு மேலாக இருந்தால், மூவர் என்றும் பிட்டர்களை நியமித்துக்கொள்ளலாம் என்று அரசு ஆணை பிறப்பித்து இருக்கிறது.

திரு. த. புஷ்பராகு : பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிகளில், இந்தக் குடிநீர் திட்டத்தை அமல்படுத்துகிற போது, போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால், அந்த பேரூராட்சி கட்ட வேண்டிய பங்குத் தொகையை கட்ட முடியாத



நிலையிலே, அந்தத் திட்டம் செயல்படுத்தப்படாமல் இருக்கிறது. எனவே, இதை மாற்றி, நிதியில்லாத பேரூராட்சிகளுக்கும் இந்தத் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்துவதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, பேரூராட்சிகளைப் பொறுத்தவரையில், இந்த ஊராட்சி, மன்றங்களுக்குக் கொடுக்கப்படுகின்ற கட்டண வசதி அவர்களுக்கு இல்லை என்பது உண்மைதான். கிராமப்புற பேரூராட்சி, நகர்ப்புற பேரூராட்சி என்று இரண்டு வகையாகப் பிரித்து நகர்ப்புற பேரூராட்சிகளுக்கு அளிக்கப்படுகின்ற எல்லா வசதிகளையும் கிராமப்புற பேரூராட்சிகளுக்கு அளிப்பதற்கு அரசு பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறது.

டாக்டர் அ. பொன்னுசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, போதுமான நிதி வசதி இல்லாத ஊராட்சிகளில், அத்தியாவசியமாக இருப்பது குடிநீர்ப் பிரச்சனைதான். இது என்னுடைய பெருந்துறை பகுதியிலே அதிகமாக இருக்கிறது. எனவே இது போன்று இருக்கின்ற ஊராட்சிகளுக்கு, மக்கள் கான்ட்ரிபியூசன் என்று சொல்வார்களே, அப்படி ஆகும் செலவில் நான்கில் ஒரு பங்கைக் கொடுத்தால் உடனடியாக, 7 நாட்களுக்குள்ளாகவோ, அல்லது 10 நாட்களுக்குள்ளாகவோ அந்த ஊராட்சியிலே போர் வெல் அமைப்பதற்கு அரசு உடனடியாக உத்தரவு பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9–20)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கெங்கு போர் வெல் ஆழ் குழாய் தேவைப்படுகிறதோ அங்கு எல்லாம் அரசு போடும். அதற்காக மக்களிடமிருந்து கான்டிரிபுஷன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை.

திரு. வே. கு. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி வசதி இல்லாத காரணத்தால் பேரூராட்சிகளை கிராம பேரூராட்சி என்றும், நகர பேரூராட்சி என்றும் இரண்டு வகையாகப் பிரிக்க இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இது எந்த அடிப்படையில் பிரிக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் தொகை, வருமானம் இவைகளை அடிப்படையாக வைத்து பிரிக்கப்படும்.

[1986 சனவரி 20

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள பெரும்பகுதியான ஊராட்சி ஒன்றியங்களில் பொது நல நிதி இல்லாத காரணத்தால் கிராமத் திற்குத் தேவையான அடிப்படை வேலைகள் செய்ய முடியாமல் இருக்கிறது. ஆகவே கிராமத்திற்குத் தேவையான அடிப்படை வேலைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையில் பழையபடி தன்னிறைவுத் திட்டத்தை ஊராட்சி ஒன்றியங்களில் கொண்டுவர அரசு ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதைக்கு அந்த யோசனை இல்லை.

கிராம நலத் திட்டப் பணிகள் கண்காணிப்பு.

46—(*வினா எண்: 2796) திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தன்னிறைவுத் திட்டம், N. R. E. P. திட்டம் R. L. E. G. . போன்ற அரசின் நலத்திட்டப் பணிகள் செம்மையாக நடை பெற்றுள்ளனவா என்று ஆராய மாவட்ட அளவில் விசாரணைக் குழு அமைக்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 3 ஆண்டுகளாக நிறைவேற்றப்பட்ட தன்னிறைவுத்திட்டம் மற்றும் மத்திய, மாநில அரசுகளால் நிறைவேற்றப்படும் என்.ஆர்.இ.பி. மற்றும் ஆர்.எல்.இ.ஜி.பி. போன்ற பல திட்டங்கள் பல கோடி ரூபாய் செலவில் கிராமப்புற மக்களுக்கு நல் வாழ்வு கிடைக்கும் வகையில் செயல்பட்டு வருகின்றன. இந்தத் திட்டங்களை மேலும் நல்ல முறையில் செயலாக்க இனிமேலாவது மாவட்ட அளவில் விசாரணைக் குழுக்களை அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தைப் பொறுத்த வரையில், ஏற்கனவே இந்த அவையில் அறிவித்ததற்கு ஏற்ப மாவட்ட ஆட்சி மன்ற தலைவர்களுக்கு தாக்கீது அனுப்பியிருக் கிறோம். அவைகளைப்பற்றி முழு விசாரணை செய்யச் சொல்லி யிருக்கிறோம். விசாரணை அறிக்கை இன்னும் என் கைக்கு வரவில்லை. என்.ஆர்.இ.பி. மற்றும் ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டங் களைப் பொறுத்தவரையில் மாநில அளவில் தலைமைச் செயலர் அவர்கள் தலைமையில் ஒரு குழு இருக்கிறது. அந்தக் குழு அடிக்கடி கூடி அதைப்பற்றி ஆராயும் என்ற காரணத்தால் தனி யாக ஒரு கமிட்டி இதற்காக தேவையில்லை என்று அரசு கருதுகிறது.



1986 சனவரி 20]

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தன்னிறைவுத் திட்டம், தேசிய வேலை வாய்ப்புத் திட்டம். ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்புத் திட்டம் போன்ற திட்டங்களின் பணிகள் செம்மையாக நடைபெறுகிறதா என்பதை ஆராய மாவட்ட அளவில் விசாரணைக் குழுக்கள் அமைக்கும் எண்ணம் அரசின் பரி சீலனையில் இருக்கிறதா என்று ஆளும் கட்சி உறுப்பினர் கேட்டு இருக்கிற காரணத்தாலும், இனிமேலாவது அந்த மாதிரி குழுக்கள் அமைக்கப்படுமா என்று அவர் மேலும் கேட்டு இருக்கிற காரணத் தாலும், இந்த மாதிரி நிறைய தவறுகள் நடைபெறுகின்றன என்று எல்லாத் தரப்பிலிருந்தும் செய்திகள் வந்து கொண்டு இருக் கின்றன. நான் உங்கள் மூலமாக அரசைக் கேட்டுக் கொள்ளுவது எல்லாம் ஒரு பரீட்சார்த்தமாக ஒரு மாவட்டத்தில் ஒரு ஊராட்சி ஒன்றியத்தையோ ஒரு தொகுதியையோ எடுத்துக்கொண்டு இப்பணிகள் செம்மையாக செயல்பட்டு இருக்கிறதா என்பதை ஆராய அரசு தயாராக இருக்கிறதா? மத்திய அரசு ஒதுக்குகின்ற எல்லா பணத்தையும் விரைவாக செலவழித்து விட்டு மேலும் நிதி கேட்கின்ற நிலை எப்போதாவது இந்த அரசுக்கு ஏற்பட்டு இருக்கிறதா? இந்த தன்னிறைவுத் திட்டம் மற்றும் ஏனைய திட்டங்களில் எடுக்கின்ற பால வேலைகளுக்கு 90 ஆயிரம் ரூபாய் அல்லது 1 லட்ச ரூபாய் வரை தான் செலவு செய்யவேண்டும் என்று வரையறை வைத்து இருக்கிறார்கள். தன்னிறைவுத் திட்டம், தேசிய வேலை வாய்ப்புத் திட்டம் இவைகளின் மூலம் ஒரு பாலம் கட்ட வேண்டும் என்றால் 1 லட்ச ரூபாய் அல்லது 90 ஆயிரம் ரூபாய்தான் செலவு செய்து கட்ட வேண்டும் என்று ஒரு தடை இருக்கிறது. இதனால் பல முக்கியமான பணிகள் எடுத்துக்கொள்ளப்படாமல் இருக்கிறது, ஆகவே அந்தத் தடையை இனிமேலாவது நீக்கி எடுத்துக் கொள்கின்ற அந்தப் பணியின் முக்கியத்துவத்தைக் கருதி எவ்வளவு செலவு ஆனாலும் எடுத்துக் கொள்ளலாம் என்று இந்த அரசு அறிவிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன்னிறைவுத் திட்டத்தை நிறைவேற்றுவது பற்றி நான் ஏற்கனவே தெரிவித்தேன். மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் தன்னிறைவுத் திட்டம் செம்மையாக நடை பெற்று இருக்கிறதா என்று பரிசீலனை செய்து அறிக்கை கொடுக்கச் சொல்லியிருக்கிறோம். அந்த அறிக்கை இன்னும் என் கைக்கு வரவில்லை, மற்ற திட்டங்களைப் பற்றி எங்கே புகார்கள் இருந்தாலும் அந்தப் புகார்களை அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும். மாண்புமிகு உறுப்பினர்கள் அந்தப் புகார்கள் பற்றி எழுதி அனுப்பினால் நிச்சயமாக அதைக் கவனித்து எங்கு தவறு இருந்தாலும் யார் தவறு செய்தாலும் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் உறுதியாக அளிக்கிறேன். 1 லட்ச ரூபாய் 90 ஆயிரம் ரூபாய்க்கு குறைவாகத்தான் பாலம் எடுக்க வேண்டும் என்று சொல்லி மாண்புமிகு உறுப்பினர் கேட்டார்கள். பாலம் 90 ஆயிரம் ரூபாய் அல்லது 1 லட்ச

ரூபாய்க்கு கீழ் இருக்கவேண்டும் என்பது அல்ல. 90 ஆயிரம் ரூபாய் அல்லது 1 லட்ச ரூபாய்க்குள் அடங்கிய ஒரு பாலத்தை இந்த திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லப் பட்டு இருக்கிறதே தவிர வேறு அல்ல. எடுத்துக்கொள்ளக்கூடிய பாலம் 3 லட்ச ரூபாய் அல்லது 4 லட்ச ரூபாய் என்று இருக்கு மானால் இவைகளை எல்லாம் நெடுஞ்சாலைத் துறையோ அல்லது மற்றத் துறைகளோ எடுத்துக்கொள்ளலாம். இந்தத் துறையில் எடுத்துச் செய்வதற்கு ஒரு வரம்பை வைப்பதற்காக இவ்வாறு வைக்கப்பட்டு இருக்கிறதே தவிர பாலத்தின் அளவைக் குறைத்து விடவேண்டும் என்பது அரசின் நோக்கம் அல்ல. இதற்குண்டான நிதி 90 ஆயிரம் ரூபாய்க்குள் எடுத்துக் கொள்வது என்றால் இந்தப் பாலங்களைத் தான் எடுத்துக்கொள்ளவேண்டும்.

திரு. கே. பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, இந்த என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டங்களின் கீழ் பல்வேறு தவறுகள் நடப்பதற்குக் காரணம் ஒன்றியத்தில் பணி யாற்றுகிற அந்தப் பணியாளர்கள் அளவில் இந்தத் திட்டங்கள் எல்லாம் முன்னால் நடத்தப்பட்டு வந்த காரணத்தால் இப்போது இதை மாற்றியமைத்து அந்தப் பகுதியில இருக்கிற மக்களே இந்தப் பணிகளைச் செய்யவேண்டுமென்று சொன்னாலும் அந்த ஒன்றியத்திலே பணியாற்றுகிற அலுவலர்கள் ஒப்புதல் பெற்றால் தான் இந்தத் திட்டங்கள் நல்லமுறையில் செயல்படும். அப்போது தான் அங்கே வேலை செய்கிறவர்களுக்கு ஒழுங்காக பணம் வழங்கப்படும். ஆனால் அப்படி வழங்கப்படவில்லை. அந்தத் தவறுகள், ஒரே வேலையை இரண்டு திட்டங்களிலும் செய்துவிட்டு பணத்தைப் பெறுகிற தவறுகள் இப்போதும் நடைபெறுகின்றன. ஆகவே ஒன்றிய அளவிலாவது ஒரு அனைத்துக் கட்சிக் குழுவை உடனடியாக அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஒன்றியத்திலே அப்படி நடைபெற்றி ருக்கிறது என்ற தகவலைத் தெரிவித்தால் நிச்சயமாக நடவடிக் கைகள் எடுக்கப்படும் என்று நான் உறுதியளிக்கிறேன். என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி. போன்ற திட்டங்கள் எல்லாம் மாவட்ட ஆட்சிமன்றத் தலைவர் தலைமையில் கூடி எந்தெந்த கிராமங்களில் எந்தெந்தத் திட்டங்களை எடுத்துக்கொள்வது என்பது பற்றி முன்பே ஆண்டுத் திட்டம் வரையறுக்கப்பட்டு அந்தத் திட்டங்களை எடுத்துக்கொள்கிறோமே தவிர தன்னிச்சை யாக திட்டங்களை எடுத்துக்கொள்ள முடியாது. இரண்டு வேலை களை ஒன்றாக எடுத்து செய்து இரண்டு பில்கள் போட்டிருப்ப தாக புகார் சொல்லப்பட்டது. அப்படி எந்த ஊரில் நடைபெற் றிருக்கிறது என்று தெரிவித்தால் நிச்சயமாக, உடனடியாக நடவடிக்கை எடுக்கிறேன் என்று உறுதி அளிக்கிறேன்.

திரு. மா. மணிமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆர்.எல்.இ.ஜி.பிக்கு 1985-86-ல் மத்திய அரசு தமிழகத்திற்கு ஒதுக்கிய நிதி எவ்வளவு? தருவதாக வாக்குறுதி அளித்த நிதி எவ்வளவு? அளிக்கப்பட்ட நிதி எவ்வளவு? அப்படி நிதியை





குறைப்பதற்கான காரணம் என்ன சொல்கிறார்கள்? அப்படிக் குறைத்த நிதியைப் பெறுவதற்கு அரசு என்ன முயற்சிகளை மேற் கொண்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவர் அவர் களே, தனிக் கேள்வி போட்டால் விவரங்களைச் சேகரித்துத் தருகிறேன்.

திரு. கே. குப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, இந்த என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி. ஆகிய திட்டங் களைச் செயல்படுத்துவதற்கு 1985-86-ம் ஆண்டுக்கு மைய அரசின் உதவி முழுவதும் வந்திருக்கிறதா அல்லது முழுத் தொகையும் வரவில்லையா என்ற விவரங்களை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி வேண்டும்.

திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்: தலைவர் அவர்களே, இந்த என்.ஆர்.இ.பி., ஐ.ஆர்.டி.பி., ஆர்.எல்.இ.ஜி.பி. ஆகிய திட்டங்களின்கீழ் ஒன்றியத்தின் மூலம் செலவழிக்கக்கூடிய தொகையின் விவரம் பற்றி சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியவில்லை. எந்தெந்த திட்ட வேலைகளை எப்படி எப்படி எடுக்கிறார்கள், எந்தெந்த இடங்களுக்கு, எந்தெந்த வேலை களுக்கு எந்தெந்த அளவில் ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றன என்ற விவரங்கள் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தெரியவில்லை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் அமைச்சர் களுடைய பணியாளர்கள் உள்ளே வருவதைத் தவிர்ப்பது நல்லது

திரு டி. தீர்த்தகிரி கவுண்டர்: மாவட்ட ஆட்சித் தலைவ ரிடமோ அல்லது வட்டார வளர்ச்சி அதிகாரியிடத்திலோ திட்ட வேலைகள் பற்றி அவர்களை அணுகி என்னென்ன திட்டங்களுக்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது, எந்தெந்த முறையில் செய்யப்படுகிறது என்று கேட்டாலும் நீங்கள் உங்கள் திட்ட வேலைகளை எழுத்து மூலமாகக் கொடுத்துவிடுங்கள், நாங்கள் ஒதுக்கீடு செய்து கொடுக்கிறோம் என்று சொல்கிறார்கள். ஒன்றியங்களில் தலைவர்கள் இல்லாத நிலையில்—விரைவில் தேர்தல்கள் நடத்தப்படும் என்று அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதை விரைவில் அவசியம் நடத்துவார்கள். அதற்கிடையில் சட்டமன்ற உறுப்பினர்கள் அதை எல்லாம் கவனிக்கவேண்டியிருப்பதால் எந்தெந்தத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படுகின்றன, எந்தெந்த திட்டங்களுக்கு எவ்வளவு எவ்வளவு நிதி ஒதுக்கப்படுகிறது என்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அறிவித்து அந்த வேலைகள் எங்கெங்கே நடைபெறும் என்பதையும் உறுப்பினர் களுக்கு அறிவிப்பது நலமாகயிருக்கும். அதை அமைச்சர் அவர்கள் கவனித்து தக்க ஆணை பிறப்பிப்பார்களா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்மிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த என் ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி., திட்டங்கள் எல்லாம் மாநில அரசினால் ஐ.ஆர்.டி.பி., தயாரிக்கப்படுகிற திட்டங்கள் மட்டும் அல்ல. மாநில அரசு இந்தத் திட்டங்களை தயாரித்து மத்திய அரசுக்கு அனுப்பி மத்திய அரசு திட்டங்களை ஏற்றதற்குப் பிறகுதான் அந்தத் திட்டங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குப் போய் பிறகு இராம அளவிற்குப் போகிறது. நான் புது டெல்லியில் நடைபெற்ற மாநாட்டில் கூடச் சொன்னேன், இதை ஏன் மாநிலத்திற்கே விடக்கூடாது என்று. ஒவ்வொரு பாதை அமைக்கவும், ஒவ்வொரு கிணறு தோண்டவும், ஒவ்வொரு பாலம் அமைக்கவும் இப்படி எல்லாவற்றிற்கும், எந்தக் கிராமத்தில் எந்தப் பாலம் போடவேண்டும், எந்தெந்த கிராமங்களில் சாலைகள் போட வேண்டும் என்ற விவரங்களுக்கு எல்லாம் நாங்கள் புது டெல்லி வந்து அனுமதி வாங்கவேண்டும் என்பது சரியல்ல. மாநில அரசிடமே அந்தப் பொறுப்பை ஒப்படைக்கலாம் என்று சொன்னேன். இருந்தாலும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. இப்போது திட்டங்கள் எல்லாம் அங்கீகரிக்கப்பட்டு வந்திருக்கின்றன. வந்திருக்கிற திட்டங்களை அந்தந்தத் தொகுதியைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு அந்தந்த ஒன்றிய ஆணையாளர்கள் கொடுக்கும் படி விரைவில் அரசு ஆணை பிறப்பிக்கும். கொடுக்கும்படி ஏற்பாடு செய்கிறோம்.

(முற்பகல் 9—30.)

திரு. மா. சின்னராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டங்களுக்காக ஒதுக்கப்படுகின்ற தொகை ஒன்றியத்தின் தேவையின் அடிப் படையில் ஒதுக்கப்படுகின்றதா ? மக்கள் தொகையின் அடிப் படையில் ஒதுக்கப்படுகின்றதா ? அல்லது எல்லா ஒன்றியங் களுக்கும் ஒரே சீராகத் தொகை ஒதுக்கப்படுகின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் இதற்காக ஒரு வரையறை கொடுத்திருக்கிறார்கள். அங்கே விவசாய மக்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள், ஆதி திராவிட மக்கள் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்பதைக் கணக்கெடுத்து, நிதி ஒதுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அதை வைத்து நிதி ஒதுக்கப்பட்டு, மாவட்டத்திலுள்ள எல்லா ஒன்றியங்களுக்கும் சமமாகப் பிரித்துக் கொடுக்கிறார்கள்.

திரு. கு. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்.ஆர்.இ.பி., ஆர்.எல்.இ.ஜி.பி. ஆகிய திட்டங் களுக்காக ஒதுக்கப்படுகின்ற நிதி உரிய துறைகளால், உரிய வடிவில் செலவழிக்கப்படவில்லை என்று மத்திய அரசு மாநில அரசின்மீது அதிருப்தி தெரிவித்திருப்பதாக செய்தி வந்திருக்கிறதே, அது உண்மையா? அப்படியானால் அதன்மீது மாநில அரசின் கருத்து என்ன என்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இந்தக் கேள்வியைக் கேட்டதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். தமிழக அரசைப் பொறுத்தமட்டில் மத்திய அரசு பாராட்டுதல் தெரிவித்திருக்கிறது.

**அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தேர்வுக்கு அனுமதிக்கப்படாதவர்கள்.**

47—(*வினா எண். 1402) திரு. சி. பழனிமுத்து: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 1985 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் நடைபெறும் செமஸ்டர் தேர்வுக்கு B.E. மாணவர்கள் அனுமதிக்கப்படவில்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) மூன்று மாணவர்கள் தவிர மற்றவர்கள் அனுமதிக்கப்பட்டார்கள்.

(ஆ) இவர்கள் போதுமான நாட்கள் வகுப்புகளுக்கு வருகை தரவில்லை.

திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற் கல்வி பயிலும் மாணவர்கள், பி.இ., போன்ற படிப்பைப் படிக்கும் மாணவர்கள் வருகை நாட்கள் குறைவாக இருந்தாலும், அந்த வருகை நாட்களை கணக்கில் எடுக்காமல், இதற்கு முன்பு தேர்வு எழுத அனுமதிக்கப் பட்டுள்ளார்கள். ஆனால் கடந்த ஆண்டு மட்டும் அவ்வாறான செயலைச் செய்யவில்லை. அவ்வாறு ஏன் செய்யவில்லை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகை நாட்கள் கணக்கை வைத்து, பரிசீலித்து தேர்வுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. இது அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு மட்டும் இருப்பதல்ல, எல்லாப் பல்கலைக் கழகங்களுக்கும், கல்லூரிகளுக்கும் இருக்கக் கூடிய ஒன்று. ஆனால், பொதுவாக மிகவும் குறைந்த வருகை நாட்கள் வந்துள்ள மாணவரை தேர்வுக்கு அனுப்புவது என்பது மிகவும் தவறான ஒரு போக்கு.

திரு. சி. பழனிமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களைச் சேர்ப்பதிலே பல பல்கலைக் கழகங்களிலே தாமதமேற்பட்டு, நீண்ட நாட்களாகி டிசம்பர், ஜனவரி மாதங்களில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். இது எந்த விகிதாசாரத்தின் அடிப்படையில் கணக்கெடுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி சேருகின்றவர்கள், அதற்கேற்ப வழிவகை செய்யப்பட வேண்டுமே தவிர, மொத்த வருகை நாட்கள் மிகவும் குறைவாக இருந்து; அதுவும் குறிப்பாக பி.ஈ. போன்ற பட்டப் படிப்பில் அனுபவ வாய்ப்பு அதிகமாக இருக்கவேண்டும் என்ற பட்டப் படிப்பில் மிகவும் குறைந்த நாட்கள், அதுவும் இப்போது நிறுத்தப்பட்டுள்ள இந்த மூன்று மாணவர்களில் ஒருவர் 52%, மற்றவர் 20%, இன்னொருவர் 33% என்று இருக்கிறது—இவ்வளவு குறைவான வருகை நாட்கள் இருக்கின்றவர்களைத் தேர்வுக்கு அனுப்ப வேண்டுமென்று நாம் எதிர்பார்ப்பதே தப்பாகும்.

டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக் கழகங்களிலே அட்மிஷன் நடக்கின்றபோது, கல்லூரிகளில் அட்மிஷன் நடக்கின்றபோது, கல்வி ஆண்டு துவக்கப்பட்டு, ஒரு மாத காலத்திற்குள் அமைச்சர் அவர்கள் தெரிவித்ததுபோல் அட்மிஷன் நடப்பது முறையான ஒன்று. ஆனால் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே, உதாரணத்திற்காக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன்—நடப்பு கல்வியாண்டில் பி.பார்மசி கோர்ஸ்க்கு நவம்பர் மாதம்வரை அட்மிஷன் செய்யப் பட்டிருக்கிறது. இது மாணவர்கள் தவறல்ல. நிர்வாகத்தின் தவறு. எனவே, இப்படிப்பட்ட முறைகேடுகளைத் தவிர்க்க, அந்தப் பல்கலைக் கழகத்திற்கு அரசு ஏதாவது ஆணைகளைப் பிறப்பித்து, இத்தகைய தவறுகளைத் திருத்துவதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக்கழகம் செய்யக்கூடிய தவறினால் மாணவர்கள் பாதிக்கப்படக் கூடாது என்ற முறையில் நாம் அறிவுரை தரலாம்.

வடபாதி மங்கலம் சோமசுந்தர ஆண்கள் மேல்நிலைப் பள்ளி.

48—(*வினா எண் 1449) திரு. ஜே. ஹேமச்சந்திரன், திரு. எம். செல்லமுத்து : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூரிலுள்ள வடபாதி மங்கலம் சோமசுந்தர ஆண்கள் மேல்நிலைப் பள்ளியை அரசே ஏற்று நடத்தக் கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு அதன்மீது மேற்கொண்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.





மொழிப் போராட்ட வீரர்களுக்கு உதவி.

49—(*வினா எண் 2854) திரு. மா. மணிமாறன், திரு. ஆ. நடராசன், திரு. சைதை சா. துரைசாமி, திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மொழிப் போராட்ட வீரர்களுக்கு அரசு உதவிடும் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(ஆ) புதிய திட்டத்தின் கீழ் விதிமுறைகள் அமைக்கப் பட்டு 'தமிழ் மொழி காக்கப் போராடிய தியாகிகளுக்கு தமிழ்க் காவலர் நிதியுதவித் திட்டம்' என்ற பெயரில் ரூ. 150 மாத ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது. அப்போராட்டத்தில் உயிரிழந்த தியாகிகள் குடும்பத்திற்கு ரூ. 10,000-க்கு மேற்படாத மானியத் தொகையும் வழங்கப்படவுள்ளது. மேலும் இத்திட்டத்தின் கீழ் தமிழ் மொழியில் புலமையைப் புலப்படுத்தும் மாணவர்கள், ஆசிரியர்கள் எழுத்தாளர்கள், கவிஞர்கள் ஆகியவர்களுக்கு 5,000 ரூபாய்க்கு மேற்படாத புலமைப் பரிசிலும் வழங்கப்படவுள்ளது.

திரு. மா. மணிமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, மொழிப் போராட்டத்திலே ஈடுபட்டுச் சிறை சென்ற பல மொழிப் போராட்ட வீரர்கள் ஓய்வூதியம் கேட்டு விண்ணப்பித்து ஆண்டுக் கணக்கில் ஆகியும், பைசல் செய்யப்படாமல் உள்ளது. அதை அரசு விரைவாகப் பைசல் செய்து, மொழிப் போராட்ட வீரர்களுக்கு உடனடியாக மானியங்கள் கிடைக்கச் செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இது சம்பந்தமான ஆணைகள் இப்போது மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன. அவர்கள் அந்த அறிக்கையின் அடிப்படையில் விசாரணை நடத்தி பரிந் துரைகளை செய்து அனுப்ப வேண்டும். அதன் பிறகு தகுதி யுள்ளவர்களுக்கு அந்த ஓய்வூதியம் வழங்கப்படும்.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொழிப் போராட்ட வீரர்கள் எத்தனை பேர்களுக்கு இந்த உதவித் தொகை வழங்கப்படுகிறது ? மொழிப் போராட்ட வீரர்கள் என்று தேர்வு செய்வது என்பது எந்த அடிப்படையில் ? இப்போது தியாகிகள் சுதந்திரப் போராட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் குழந்தைகளுக்குத் தொழிற் கல்வி, மருத்துவக் கல்வி, பொறியியல் கல்வியில் முன்னுரிமை வழங்கப் படுவதைப் போல, மொழிப் போராட்ட வீரர்களுடைய குடும்பங் களைச் சார்ந்த குழந்தைகளுக்கும் இந்தமுன்னுரிமை வழங்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் விண்ணப் பிக்க வேண்டும். அந்த விண்ணப்பங்கள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பி, சரிபார்க்கப்பட்டு, விசாரிக்கப்பட்டு, அதற்குப் பிறகு அந்த அறிக்கைகளை உயர்மட்ட நிலையில் பரிசீலனை செய்து, அந்தப் போராட்ட வீரர்களுக்கு, தியாகி களுக்கு நாம் ஒய்வூதியத்தைத் தர இருக்கின்றோம். வேறு பல சலுகைகளை, நாம் அவ்வப்போது பரிசீலித்து அதற்கான நடவடிக்கைகளை எடுக்கலாம்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, கன்னியாகுமரி பகுதி மக்கள் திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் இருந்தபோது, தமிழ் மொழி பாதிக்கப்பட்டதால் அம்மக்கள் தம் மொழியைப் பாதுகாக்கவும், தமிழ் நாட்டோடு இணையவும் பெரிய போராட்டத்தை நடத்தினார்கள். அந்த மொழிப் போராட்ட வீரர்களுக்கு மானியம் கொடுக்கின்ற உத்தரவு பிறப்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ் மொழிக்காக யார் பாடுபட்டு இருந்தாலும், அவர்கள் விண்ணப்பிக்கலாம். அவை பரிசீலனை, விசாரணை செய்யப்பட்டு உரிய நிதி வழங்க, நிதி உதவி செய்ய அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே கழக அரசில், மொழிப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறை சென்றவர்கள், சிறையிலே இருந்து சான்றிதழ் பெற்று, முறையான சான்றிதழ்களை அரசுக்குக் கொடுத்து, அவர் களுக்கு மானியம் கொடுக்கப்பட்டு வந்தது. நெருக்கடி நிலைக் காலத்திலே அந்த மானியம் நிறுத்தப்பட்டு விட்டது. ஆகவே, தங்கள் மூலமாக நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது, முறையான சான்றிதழ் அரசுக்குக் கொடுத்து, மானியம் பெற்றுக் கொண்டு வந்தவர்களுடைய பட்டியலை மீண்டும் அரசு பரிசீலனைக்கு எடுத்து அவர்களுக்கு, மொழிப் போராட்ட வீரர்கள் என்ற அடிப்படையில் அரசு அளிக்கின்ற சலுகையை, 'ரெட்ராஸ்பெக்டிவ் எஃபெக்ட்' என்ற முறையில், நின்று போன காலத்திலேயிருந்து, முழுமையான தொகை கிடைப் பதற்கு அரசு உத்தரவு பிறப்பிக்குமா? மீண்டும் அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது, இந்தி எதிர்ப்பு போராட்ட வீரர்கள். இப்போது நாம் கொடுக்க இருப்பது, தமிழ் மொழிப் பாதுகாப்புக்காக போராடியவர்களுக்கு





திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் சுதந்திரத் திருநாட்டிலே வாழ்கி றோம். சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட தியாகிகளுக்கு இப்போது மாதம் ரூபாய் 150 பென்ஷன் தமிழ்நாட்டிலே வழங்கப்படுகிறது. மற்ற மாநிலங்களிலே ரூபாய் 300 வழங்கப் பட்டுக் கொண்டு வருகிறது. ஆகவே இந்த அரசு பரிசீலித்து, அந்தத் தியாகிகளுக்கு ரூபாய் 300 கொடுக்க ஏற்பாடு செய் வார்களா? மற்ற மாநிலங்களிலே தியாகிகள் பேருந்துகளிலே இலவசமாகச் சென்று வர அனுமதிக்கப்படுகிறார்கள். அந்தத் தியாகிகள் கொஞ்ச நாட்கள் தான் வாழப் போகிறார்கள். எனவே, அவர்கள் இலவசமாகப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளிலே செல்ல அனுமதிக்கப்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் . மாண்புமிகு தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

திரு. இரா. முத்தையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொழிப் போராட்டத்திலே ஈடுபட்ட தியாகிகளுக்கு முன்னர் அரசு மானியம் வழங்குகிறபோது, போலீஸ் துறையிலே இருந்த புத்திரசிகாமணி போன்று அரசுத் துறையிலே இருந்து மொழிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு, கடமையிலே தவறியவர்கள் என்ற ஒரு காரணத்தைக் காட்டி, அதைப் போன்ற மானியம் தர மறுத்தார்கள். அதைப் போன்ற நிலைமை இல்லாது, மொழிப் போராட்டத்திலே ஈடுபட்ட அனை வருக்கும் அத்தகைய மானியம் வழங்குவதற்கு இந்த அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தப்பட்ட எல்லோரும் விண்ணப்பம் செய்யலாம். இதைப் பரிசீலித்து செயல்படத்தக்க அளவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

(முற்பகல் 9-40)

மதுரை மாவட்டத்தில் நெடுஞ்சாலைப் பணிகள்.

50 — (* வினா எண் 2009) திரு. இரா. முத்தையா: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் நெடுஞ்சாலைத்துறை ஏற்றுக் கொண்டுள்ள சாலைகளில் எத்தனை சாலை, எத்தனை கிலோ மீட்டர் தொலைவு இன்னும் தார் போடப்படாமல் உள்ளன?

(ஆ) அவற்றை எல்லாம் விரைவில் தார் சாலை ஆக்கும் வகையில் எத்தகைய பரிசீலனை அரசிடம் உள்ளது?

[1986 சனவரி 20

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) 3 மாவட்டப் பெருஞ்
சாலைகள் மற்றும் 38 இதர மாவட்ட சாலைகளில் முறையே
45 கி.மீ. நீளமும் மற்றும் 135.6 கி.மீ. நீளமும் கொண்ட
சாலைப் பகுதிகள் இன்னும் தார் போடப்படாமல் உள்ளன.

(ஆ) அவற்றை எல்லாம் தார் சாலையாக மாற்றுவதற்கு
உத்தேசமாக ரூ.3.62 கோடி தேவைப்படும். மேற்கண்ட
பணிகளை ஒரே சமயத்தில் மேற்கொள்ள இயலாது. அரசின்
நிதி நிலைமை மற்றும் சாலையின் முக்கியத்துவம் ஆகியவற்றைக்
கருத்தில் கொண்டு வரும் ஆண்டுகளில் மாநில சாலைகள்
திட்டத்தின்கீழ் படிப்படியாக மேற்கொள்வது சம்பந்தமாகப்
பரிசீலிக்கப்படும்.

திரு. இரா. முத்தையா: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்திருக்கிற
சாலைகளில் பெரும்பகுதி என்னுடைய தொகுதிக்குப் பக்கத்திலே
இருக்கிற திருமங்கலம், உசிலம்பட்டியைச் சார்ந்தவையாக
இருக்கின்றன. ஒரு குறிப்பிட்ட பகுதியில் இதுபோன்று நெடுஞ்
சாலைத் துறையால் எடுத்துக்கொள்ளப்பட்டும் தார் போடப்
படாத காரணத்தால், பெரும்பாலும் போக்குவரத்திற்குப்
பாதகமான சூழ்நிலை இருக்கிறது. எனவே இதைக் கருதி,
அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய நெடுஞ்சாலைத்துறை ஏற்றுக்
கொண்டிருக்கிற சாலைகளுக்காவது விரைவில் தார் போடுவதற்கு
ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே,
ஏற்கனவே அதைத்தான் நானும் சொன்னேன். இருக்கிற நிதி
நிலைக்கு ஏற்ப வருகின்ற ஆண்டில் அதைச் செய்து முடிக்க
நடவடிக்கை எடுக்கப்படும். நெடுஞ்சாலைத் துறை எடுத்துக்
கொண்டிருந்தாலும், பல இடங்களில் பேருந்துகள் அந்தப்
பாதையில் இயங்கிக் கொண்டிருந்தாலும், நிதிநிலையின் காரண
மாகத்தான் அவை தள்ளிப் போடப்படுகின்ற நிலைமை ஏற்படு
கிறது. ஏறத்தாழ 120 கிலோமீட்டருக்கு மேல் தார் சாலைகள்
அமைக்கப்பட வேண்டுமென்ற நிர்பந்தம் இருக்கிறது. இதற்காக
ரூ. 3 கோடிக்கு மேல் செலவாகுமென்று கணக்குப் போட்டு
சொன்னேன். படிப்படியாக அவையெல்லாம் எடுக்கப்பட்டு
தார் போடுவதற்கு, இந்தத் துறை நடவடிக்கை எடுத்துக்
கொள்ளும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, பல பாதைகள் நெடுஞ்சாலைத் துறையால் எடுத்துக்
கொள்ளப்படாமல், அவை கிராம ஆர். ஆர். ரோட்ஸ் என்ற
அடிப்படையில் மீண்டும் நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றப்
படாத காரணத்தால் அவை எல்லாம் பழுதடைந்து, பழுது
பார்க்க முடியாமல் இருக்கின்றன. சேலம் மாவட்டத்தில்
கிட்டத்தட்ட 100 கிலோ மீட்டர் கிராமப்புறச் சாலைகள்
எல்லாம் நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றப்படாமல்,



1986 சனவரி 20]

அவற்றை யார் சீரமைப்பது என்ற சூழ்நிலை ஏற்பட்டு,
இப்போது மிகவும் பழுதடைந்துள்ளன. மாண்புமிகு
அமைச்சரவர்கள் அவற்றை ஒட்டுமொத்தமாக எடுத்து, ஓர்
ஆண்டுக் காலத்திற்குள்ளாக, அல்லது இரண்டு ஆண்டுக் காலத்
திற்குள்ளாக, கிராமப்புறத்தில் உள்ள எல்லா சாலைகளையும்
அமைத்துக் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, 9,000
கிலோ மீட்டர் அப்படி இருக்கின்றன. 9,000 கிலோ மீட்டரை
நெடுஞ்சாலைத் துறை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று
ஏற்கனவே ஒரு பரிசீலனை செய்யப்பட்டு, சில தினங்களுக்கு
முன்பு நடந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தில்கூட,
முதல்வர் அவர்கள் சொன்னார்கள். அதற்குப் பிறகு நானும்
உள்ளாட்சித் துறை அமைச்சரும் பேசி, அதில் குறிப்பிட்ட
பகுதியை நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றுவது, மற்ற
பகுதிகளை உள்ளாட்சித் துறையே கவனித்து, எடுத்துக்
கொள்வது என்ற முடிவு எடுக்கப்பட்டது. விரைவில் இதற்கான
ஆணைகள் வெளியிடப்படும்.

திரு. கூடலூர் இ. வி. வேலு: தலைவர் அவர்களே, போன
சட்டமன்றத்தில் ஒரு வழிச் சாலை திண்டிவனத்திற்கும்
சென்னைக்குமிடையே வர இருக்கிறது என்று மாண்புமிகு
போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.
அந்தத் திட்டம் இன்னும் துவக்கப்படவில்லை. இந்த
ஆண்டிலாவது துவக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, இது
போக ரோடு என்ற காரணத்தால் எல்லாப் பகுதிகளுக்கும்
பதில் சொல்ல முடியாது. எல்லாவற்றுக்கும் முடியாது.
ஏற்கனவே உள்ள மூலக் கேள்விக்கு சம்பந்தப்பட்டு
கேட்டால்தான் பதில் சொல்லமுடியும். இதைப் பொறுத்தவரை
தனியாகக் கேள்வி போட்டால்தான் விடை கொடுக்கப்படும்.

திரு. சு. சோலைராசு: தலைவர் அவர்களே, இன்றைக்குச்
சில சாலைகள் உள்ளாட்சித் துறையின் மூலமாகவும், நெடுஞ்
சாலைத் துறையின் மூலமாகவும் என்ற வகையில் இரண்டுங்
கெட்டானாகக் கிடக்கின்றன. அப்படி இருக்கிற சாலைகள்
எல்லாவற்றையும் நெடுஞ்சாலைத் துறை எடுத்துக்கொள்வதற்கு
ஆலோசிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: ஏற்கெனவே, மாண்புமிகு
உறுப்பினர் திரு. இராமலிங்கம் கேட்ட கேள்விக்குப் பதில்
சொல்லி இருக்கிறேன். அந்தப் பதிலை வாங்கிக்கொள்ளுமாறு
கேட்டுக் கொள்கிறேன்.

மதுரை—அருப்புக்கோட்டை சாலையில் மேம்பாலம்.

51—(*வினா எண். 2815) திரு. என். எஸ். வி. சித்தன் மற்றும் திரு. எ. தெய்வநாயகம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரையில் அருப்புக்கோட்டை ரோட்டின் குறுக்காக ரயில் மேம்பாலம் கட்டும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மதுரை அருப்புக் கோட்டை சாலையில் கி.மீ. 1/6-ல் மேம்பாலம் கட்டும் பணிக்கு ரூ. 125,00 இலட்சத்திற்கு திருத்திய மதிப்பீட்டிற்கு ஒப்பளிப்பு அளிக்கப்பட்டு, இதற்கான ஒப்பந்தப் புள்ளிகளுக்கு அரசால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே மதுரை இரண்டாவது பெரிய நகரம். ஏற்கெனவே மதுரை—போடி வழித்தடத்திலும், மதுரை—விருதுநகர் வழித்தடத்திலும், மதுரை—மானாமதுரை வழித்தடத்திலும் மேம்பாலங்கள் கட்டப்பட்டு இருக்கின்றன. ஆனால் அகலம் குறைவாக உள்ள, விமான நிலையம் இருக்கின்ற சாலையிலே இந்த மேம்பாலம் கட்டப்படாததால் போக்கு வரத்து நெரிசல் எற்பட்டு, அதன் காரணமாக காலதாமதம் ஏற்பட்டு, அதன் மூலமாக விபத்துக்கள் அடிக்கடி ஏற்படுகின்ற காரணத்தினால் 125 லட்சம்ருபாய் ஒப்புதல் இதற்காக அளிக்சப் பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அது எப்போது துவக்கப்படும். எப்போது நிறை வேற்றப்படும் என்பதை அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பணியை விரைவாகத் துவங்கு வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இப்போதுதான் அங்கீகாரம் கொடுத்திருக்கிறோம். இந்த வேலையை எவ்வளவு விரைவாக எடுத்துக் கொள்ளவேண்டுமோ அவ்வளவு விரைவாக எடுத்துக் கொண்டு நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எ. தெய்வநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 125 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் இதைக் கட்டுவதாகச் சொன்னார்கள். அவர்களுக்கு நன்றி. இப்படிச் சாலைகள், பாலங்கள் அமைக்கும்போது குடிசைவாழ் மக்கள், சிறுதொழில்கள் செய்வோர்கள் எல்லாம் பாதிக்கப் படுகிறார்கள். அவர்களுக்கு இழப்புத் தொகை ஏதாவது அளிக்கப்படுமா?





மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஏற்கெனவே இருக்கிற சட்ட முறைப்படி என்ன என்ன செய்யவேண்டுமோ அதை அரசு செய்யும்.

பக்கிங்காம் கால்வாய் சீரமைப்பு திட்டம்

52 (*வினா எண் 3344) மாண்புமிகு திரு.வேடசந்தூர் வி. பி. பால சுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) மற்றும் டாக்டர் அ. பொன்னுசாமி: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பயணிகள்—சரக்கு போக்குவரத்துக்காக பக்கிங்காம் கால்வாயைச் சீரமைக்க மத்திய அரசிடம் வலியுறுத்தப் பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், மத்திய அரசிடமிருந்து அதற்கு பதில் பெறப் பட்டதா?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: (அ) சரக்குப் போக்குவரத்துக் காக பக்கிங்காம் கால்வாயை மேம்பாடு செய்ய ஏழாவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் எடுத்துக்கொள்ள ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டு உள்ளது. மேலும் சென்னை சென்டிரல் ரயில் நிலையத்திற்கும், எண்ணூருக்கும் இடையே படகு போக்குவரத்து விட பக்கிங்காம் கால்வாயைச் சீரமைக்கும் திட்டத்திற்கும் நிதி உதவி அளிக்கக் கோரி மத்திய அரசிடம் கேட்கப்பட்டுள்ளது.

(ஆ) ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எவ்வளவு, பணம் ஒதுக்கீடு செய்யப்படும் என்பது குறித்து இன்னும் அதிகாரப் பூர்வமாகத் தெரியவில்லை.

மாண்புமிகு திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கால்வாயை எந்த எந்த வகையில் பயன் படுத்தலாம் என்பது பற்றி மாநில அரசு அளவில் எத்தகைய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன? இந்த ஆய்வுக்கு வெளி நாட்டு நிபுணர்கள் உதவி ஏதாவது பெறப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரக்குப் போக்குவரத்துக்கும் மற்ற எல்லாப் போக்கு வரத்துக்கும் இந்தக் கால்வாயினைப் பயன்படுத்தலாம் என்று மாநில அரசால் முடிவு செய்யப்பட்டு ஆய்வுக்காக 1 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அந்தப்

பணியைத் துவக்குவதற்காக 1985-86 ஆம் ஆண்டிலே பார்ட் 2 ஸ்கீமிலே 25 லட்சம் ரூபாய் ஒதுக்கி அரசு தயார் நிலையில் இருக்கிறது. மத்திய அரசும் இதிலே பங்கு தரவேண்டுமென்று மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம். ஜெர்மன் நாட்டிலிருந்து நிபுணர்கள் வந்து பார்வையிட்டுச் சென்றிருக்கிறார்கள். அவர்கள் அறிக்கை கொடுப்பதற்குள்ளாக மீண்டும் ஒரு முறை வந்து பார்க்க இருக்கிறார்கள். மத்தியஅரசிடமிருந்து 7-வதுஐந்தாண்டுத் திட்டத்திலே அதற்காகப் பணம் ஒதுக்கவேண்டுமென்று நாம் கேட்டிருந்தாலும் அதுபற்றி அதிகாரப்பூர்வமாக இன்னும் நமக்குத் தகவல்வரவில்லை. அன்அபிஷியல் ஆக நமக்குக் கிடைத்த தகவல் படி நாம் 7 கோடி ரூபாய்க்குத் திட்டம் தீட்டியிருக்கிறோம், இரண்டு கோடி ரூபாய்க்கு அவர்கள் ஒப்புதல் தந்திருக்கிறார்கள் என்று தெரிய வந்துள்ளது. ஆனால் அதிகாரப்பூர்வமான உத்திரவு நமக்கு வரவில்லை. எனவே அதற்குப் பிறகுதான் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

டாக்டர் அ. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கால்வாயைச் சீரமைப்பதற்காக ஐ.ஐ.டி., கிண்டி இஞ்சினியரிங் காலேஜ் புரபசர் ஒருவர் திட்டம் தயாரித்து வைத்திருந்ததாக பேப்பரிலே பார்த்தோம். அந்தத் திட்டம் அரசிற்கு வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு க. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குக் கொடுத்துள்ள தகவல்படி அப்படிப்பட்ட திட்டம் வந்ததாகத் தெரியவில்லை. பின்னாலே வேண்டுமானால் கேட்டு பதில் சொல்கிறேன்.

### சென்னைக்கு சர்குலர் ரயில்வே திட்டம்

53 *(வினா எண். 3073): திரு இரா. தாமரைக்கனி மற்றும் திரு மு. இராமநாதன்: மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையைச் சுற்றி சர்குலர் ரயில்வே திட்டம் ஏற்படுத்தும் பணியின் தற்போதைய நிலை குறித்து தகவல் ஏதும் வந்துள்ளதா?

(ஆ) எப்போது இதற்கான பணிகள் முடிவுறும்?

மாண்புமிகு திரு என். நல்லுசாமி: (அ) சென்னை நகரைச் சுற்றி அமையவிருக்கும் சர்குலர் இரயில்வே மத்திய இரயில்வே அமைச்சகத்தின் பரிசீலனையில் உள்ளது என்றும் கூடிய விரைவில் மத்திய திட்டக் குழுவின் ஒப்புதலுக்கு அனுப்பப்படும்





என்றும் முன்னாள் மத்திய இரயில்வே அமைச்சர் முதலமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். மேலும் இத்திட்டத்தை ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ப்பது குறித்து கவனிக்கப்படும் என்று முன்னாள் மத்திய அமைச்சர் முதலமைச்சருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

(ஆ) மத்திய இரயில்வே மற்றும் திட்டக் குழுவின் ஒப்புதல் பெற்ற பின்புதான் இத்திட்டம் எப்போது ஆரம்பிக்கப்பட்டு முடிவுறும் என்று கூற முடியும்.

(முற்பகல் 9-50)

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையைச்சுற்றி சர்குலர் இரயில்வே எந்த எந்த முக்கிய ஊர்களின் வழியாகச் செல்கிறது? அது பிராட்கேஜா அல்லது மீட்டர்கேஜா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு என். நல்லுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம், வேளச்சேரி, பரங்கிமலை, கிண்டி தொழிற்பேட்டை மேற்குப் பகுதி விருகம்பாக்கம், கோயம்பேடு, வில்லிவாக்கம், மாதவரம், மணலி, திருவொற்றியூர் ஆகிய இடங்கள்வழியாகச் செல்லவிருக்கிறது. இது பிராட்கேஜ் லைன் அமைக்கும் திட்டம்.

திரு மு. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையைச் சுற்றி வட்ட இரயில் பாதைத் திட்டம் என்னும் இந்தத் திட்டம் 1983 ஆம் ஆண்டிலே மத்திய அரசினால் ஒப்புக்கொள்ளப்பட்டு இன்றைக்கு 53 கோடி ரூபாய் மதிப்பீடு என்றும், 1983-84-ஆம் ஆண்டிலே இதற்கு 4 கோடி ரூபாய் ஆரம்பத் தொகையாக ஒதுக்கீடு செய்யப்பட்டு தற்போது நடைமுறை ஆண்டில் 1986-87-ஆம் ஆண்டுக்கு 2 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்ற கருத்து நாடாளுமன்றத்திலே டாக்டர் கலாநிதி எம்.பி., அவர்களுக்கு மத்திய அமைச்சர் கொடுத்த பதிலிலே குறிப்பு இருக்கிறது. அது 1990-ஆம் ஆண்டில் நிறைவேறும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அண்மையிலே சென்னைக்கு வந்த மத்திய இரயில்வே அமைச்சர் திரு. பன்சிலால் அவர்கள் 20 கோடி ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு ஒதுக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். அமைச்சர் அவர்கள் சொன்ன மத்திய அரசினுடைய கடிதம் மாண்புமிகு முதலமைச்சருக்கு வந்திருப்பதில் தெளிவாக இந்த ஆண்டுதான் நிறைவேறும், இந்த ஆண்டுதான் தொடங்கப்படும் என்று குறிப்பு இல்லாமல்

இருக்கிறது. ஆனால் எனக்குக் கிடைத்த நாடாளுமன்ற உறுப்பினருக்குத் தந்த குறிப்பிலே இந்த விவரம் இருக்கிறது. ஆகவே, இந்தத் திட்டத்தினுடைய முழுமதிப்பீட்டையும், அதற்கு மத்திய அரசு ஒதுக்கியிருக்கும் தொகை போதாது என்பதையும் மனதில் கொண்டும் நடவடிக்கை எடுக்க விரைவுபடுத்துமா அரசு என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு என். நல்லுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சமீபத்தில் சென்னையில் மத்திய இரயில்வே துறை அமைச்சர் வந்தபொழுது அவரிடம் கேட்டது 'மாஸ் ரேபிட் டிரான்ஸ் போர்ட் சிஸ்டம்'. இது ஏற்கெனவே ஒப்புக் கொள்ளப் பட்ட திட்டம், அதிலே ஏற்பட்ட பிரச்னையைத்தான் மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்கிறார்கள். இன்றைக்கு எடுத்திருக்கும் சுற்றி வரும் திட்டத்தின் அடிப்படையில் 3-10-1985 அன்று மைய அரசு ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படு என்று சொல்லியிருக்கிறது. இக்கோரிக்கை அனுப்பப்பட்டிருக் கிறது.

திரு இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவரவர்களே, சென்னையில் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆரம்பிக்க இருப்பதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். சென்னையைப் போல, இந்தியாவில் வேறு எந்த முக்கியமான நகரங்களில் மேற்படி இந்த சர்குலர் இரயில் ஓடிக் கொண்டிருக் கிறது என்பதையும், சென்னையைப் போன்று கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, நெல்லை போன்ற முக்கிய நகரங்களிலேயும் சர்குலர் இரயில் விட வேண்டிய திட்டத்தினை மத்திய அரசுக்கு மாநில அரசு கொடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னையைத் தவிர, வங்காளத்திலே கல்கத்தாவில் இப்பொழுது இப்படிப்பட்டதொரு திட்டத்திற்கான ஒப்புதலை மத்திய அரசு தந்திருக்கிறது. பம்பாய் நகரத்திலேயும் இப்பொழுது சமீபத்திலே நடந்த காங்கிரஸ் பேரியக்க மாநாட்டு நேரத்திலே, நம்முடைய இந்தியத் துணைக் கண்டத்தின் பிரதமர் அவர்கள் அங்கேயும் இப்படிப்பட்டதொரு திட்டத்தைப்பற்றி சொல்லியிருக்கிறார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரையில், இப்பொழுது கேட்டிருக்கின்ற இந்தத் திட்டத்தை ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்ற நேரத்தில், வேறு ஏதாவது ஒரு நகரத்திற்கும் இந்தத் திட்டத்தை விரிவாக்குவதுபற்றி அரசு பரிசீலனை செய்யும்.



திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த சர்குலர் ரயில்வே திட்டத்தினுடைய அமைப்பின் தூரம் எவ்வளவு? இந்தப் பாதை—செல்லுகின்ற வழியிலே—எந்தெந்தப் பாதை வழியாகச் செல்லுகிறதோ அந்த இடங்களை ஆர்ஜிதம் செய்யும் பணியும் நடைபெற்று முடிந்து விட்டதா என்பதையும், இந்தத் திட்டப் பணிக்காக எவ்வளவு தொகை மதிப்பிடப்பட்டு ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழக அரசு கோரியுள்ளது என்ற விவரத்தையும் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தத் திட்டத்தின் அடிப்படையில் திருவொற்றியூரிலிருந்து திருவான்மியூர் வரையில் செல்லும் இந்த உள்வட்ட இருப்புப்பாதையின் தூரம் 45 கிலோமீட்டர். இடையிலே இப்பொழுது தமிழக அரசைப் பொறுத்தவரையில், இந்தத் திட்டத்தின் ஆரம்பக் கட்டமாக இது இருந்தாலும், ஓரளவிற்கு எந்தெந்தப் பகுதியாகச் செல்லுகின்றது என்ற குறிப்பு இருக்கின்ற ஒரு காரணத்தினால் அந்தப் பகுதியிலே நில எடுப்பு சம்பந்தமாக, நடவடிக்கைகள், இப்பொழுது எடுப்பதற்கான முடிவுகள் எடுக்கப் பட்டிருக்கின்றன. அடுத்து, இதற்கு நிதியைப் பொறுத்தவரையில் இப்பொழுது மைய அரசிலிருந்து இன்னும் அதிகாரப் பூர்வமாக தகவல் வரவில்லை.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையிலே இந்த சர்குலர் இரயில் பாதைத் திட்டம் என்ற வட்ட இரயில் பாதைத் திட்டம் என்று உத்தேசிக்கப் பட்டிருக்கின்ற' திட்டத்தைப்போல கல்கத்தாவிலேயும் ஒரு திட்டத்தை அமல்படுத்த அரசு முனைந்திருக்கிறது என்று அமைச்சரவர்கள் பதிலில் குறிப்பிட்டார்கள். நான் தங்கள் மூலமாக அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது, 100 கோடி ரூபாய் என்று மதிப்பீட்டிலே கல்கத்தாவில் அந்த வட்ட இரயில் பாதை போடும் திட்டத்திற்கு மைய அரசு ஒப்புதல் அளித்து, உரிய தொகையை உரிய காலத்தில் மைய அரசு கொடுக்காத காரணத்தால் அதன் மதிப்பீடு 500 கோடி ரூபாய்க்கு மேல் உயர்ந்து இப்பொழுது 1,000 கோடி ரூபாய் ஆகும் என்ற நிலை இருக்கிறது. சென்னை மாநகரத்திலேயும் இந்த வட்ட இரயில் திட்டம் என்பது 53 கோடி ரூபாயில் உத்தேசிக்கப்பட்டு, உரிய தொகையை ஒதுக்காமல், வெறும் 2 கோடி ரூபாய் நடப்பாண்டிலே......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாக கேளுங்கள்.

திரு. மு. இராமநாதன் : ரூ. 2 கோடி ஒதுக்கியிருப்பது, இந்தத் திட்டத்தை நிறைவு செய்வதற்குப் போதாது. மேலும் இங்கே இருக்கக்கூடிய ரெயில்வே மானேஜர் அவர்கள், புதிய ஆள் எடுப்பதற்கு மத்திய அரசு போட்டிருக்கிற தடை உத்தரவை மையப்படுத்தி, அந்தத் திட்டத்திற்குக் கூட பூர்வாங்க பணிகளுக்கு ஆள் எடுப்பதைத் தடை செய்திருக்கிற காரணத்தால், முழுமையாகச் சென்னை வட்ட ரயில் பாதைத் திட்டம் என்பது ஏட்டளவில் தான் இருக்கும் போல் தெரிகிறது. ஆகவே, உரிய தொகையை மத்திய அரசு ஒதுக்கவும், அந்தத் திட்டத்தை விரைவுபடுத்தவும் நம்முடைய அரசின் சார்பிலே முறையான நடவடிக்கை எடுப்பதற்கு இனியாவது அரசு செயல்படுமா? விரைந்து நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியிலிருந்து இரண்டு திட்டங்கள் தமிழகத்திற்கு வந்திருக்கின்றன. ஏற்கனவே ஒப்புதல் அளிக்கப் பட்ட திட்டம் மாஸ் ராப்பிட் டிரான்சிட் சிஸ்டம்—அதாவது துரித ரயில் போக்குவரத்துத் திட்டம். அதுபற்றி ஏற்கனவே முடிவு செய்யப்பட்டு, அந்தத் திட்டத்தின் நிதி நிலையைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். இப்பொழுது சொல்வது சர்குலர் ரெயில்வே—சுற்று வட்ட இருப்புப் பாதை. இந்த இரண்டுக்கும் வேறுபாடு இருக்கிறது. ராப்பிட் டிரான்சிட் சிஸ்டம் பொறுத்த வரையிலேதான், கல்கத்தா நகரத்தைப் பொறுத்த அளவில், மத்திய அரசு ஆரம்பத்திலே ரூ. 100 கோடி என்று சொல்லி, இப்பொழுது ரூ. 900 கோடி என்ற முடிவுக்கு வந்து, இப்பொழுது ரூ. 90 கோடி ஒதுக்கி இருக்கிறார்கள். அந்தத் திட்டம் வேறு. இப்பொழுது, தமிழகத்தைப் பொறுத்தவரையில், ராப்பிட் டிரான்சிட் சிஸ்டத்தைப் பொறுத்த அளவில், இறுதி முடிவு எடுக்கப்பட்டு, அதற்கான நிதியும் பெறப்பட்டு, வேலைகளும் தொடங்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது, இன்றைக்குக் கேட்கப்படுகிற திட்டம் சுற்று வட்ட இருப்புப் பாதை. அது இப்பொழுது ஆரம்பகட்டத்தில் இருக்கிறது. ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படும் என்ற நல்ல செய்தி, முடிவு மத்திய அரசிடம் இருந்து வந்திருக்கிறது. அதற்கான இடத்தைப் பொறுத்தவரை ஏற்கனவே முடிவு செய்யப்பட்டு, நான் முன்னமே மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் கேட்ட பொழுது சொன்னதைப் போல், எந்த, எந்த ஊருக்கு அந்தத் திட்டம் போகும் என்ற அடிப்படையில், அதைச் சொல்லியிருக்கிற காரணத்தினால், காலதாமதம் ஆகிற குறைபாடு இல்லை. ஏற்கனவே முடிவான திட்டம் வேறு. இப்பொழுது எடுக்கப்பட இருக்கிற திட்டம் பற்றியது இது.





தாம்பரத்தில் வீட்டு வசதி வாரியப் பணிகள்.

54—(*வினா எண் 1808)—திரு. எஸ்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் பகுதியில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் இரண்டாயிரம் வீடுகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : (அ) மற்றும் (ஆ) தாம்பரம் பகுதியில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் 87.68 ஏக்கர் நிலத்தை அபிவிருத்தி செய்யவும், 150 குறைந்த வருவாய்ப் பிரிவினர் வீடுகளும், 436 நடுத்தர வருவாய்ப் பிரிவினர் வீடுகளும் மற்றும் 90 உயர் வருவாய்ப்பிரிவினர் வீடுகளும் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

திரு. எஸ்ல. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, அது எவ்வளவு விரைவில் ஆரம்பிக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, எடுக்கவிருக்கிற மொத்த நிலங்களைப் பொறுத்த வரையில், இப்பொழுது சில இடங்களிலே நீதிமன்றத்திலே வழக்குகள் இருக்கின்றன. இருந்தாலும் இந்தத் திட்டத்தை விரைவாக எடுக்கின்ற எண்ணத்தோடு, ஹட்கோ நிறுவனத்திடமிருந்து ரூ. 92.20 இலட்சம் கடன் கேட்டிருக்கிறோம். இப்பொழுது எடுக்கப்பட இருக்கிற இடத்திலே சிப்காட்டுக்குச் சொந்தமான இடம் இருக்கிறது. அந்த இடத்தைப் பொறுத்தவரையில், இப்பொழுது 12.36 ஏக்கர் வாங்கப்பட்டிருக்கிறது. அதற்கான நிதியையும் தந்திருக்கிற காரணத்தினால், நீதிமன்ற ஆணை, மற்றும் இதர விவரங்கள் வந்த பிறகு விரைவாக அந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.

திரு. எஸ்ல. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையை அடுத்த புறநகர் பகுதியான தாம்பரம், வீடுகளுக்கு மிகவும் கிராக்கி உள்ள ஒரு இடம். சேலையூர், கிழக்கு தாம்பரம் பகுதியில் நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் பல இடங்கள் காலியாக இருக்கின்றன. அந்த இடத்தை கையகப்படுத்தி, விரைவிலே குறைந்த வருவாய் மற்றும் மத்திய தர வகுப்பினர்களுக்கும் வீடு கட்டித்தர அரசு ஆய்வு உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன இடத்தைப் பற்றி எங்களுக்குத் தகவல் தந்தார்களானால் அரசு முறைப்படி நடவடிக்கை எடுக்கும். வீட்டுவசதி வாரியத்தைப்

பொறுத்தவரையில், திட்டங்களை நிறைவேற்றுவதற்கு அரசு தயாராக இருக்கிறது. நாங்கள் நிலங்கள் எடுக்கப்போகிற நேரங்களில், நீதிமன்றத்திற்குச் செல்கின்ற வாய்ப்பிருக்கிற காரணத்தால், சில இடங்களிலே திட்டங்கள் வருவதற்குக் கால தாமதம் ஆகிறது. ஆகவே, விவரங்களை விரைவாகத் தந்தார் களானால், அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பரிதி இளம்வழுதி: தலைவரவர்களே, குடிசைமாற்று வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகள் பழுதுபட்டு மக்கள் வாழ ஏதுவாக இல்லை. அவற்றை உடனடியாகப் பழுது பார்க்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்ற ஆண்டே சொன்னார்கள். ஆனால் இதுவரையில் பழுது பார்க்கப்படவில்லை. அதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? ஆம் எனில், அது சம்பந்தமாக எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: தலைவர் அவர்களே, கடந்தமுறை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் பற்றி ஆராய்ந்து ஏற்கெனவே 15 தினங்களுக்கு முன்னால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஒரு மடல் எழுதியிருக் கிறேன். எந்த இடத்தில் குறைபாடு இருந்தாலும் அதனைப் போக்க இந்த அரசு தயாராக இருக்கிறது.

(முற்பகல் 10.00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

பழனி நகர அபிவிருத்தி பெருந் திட்டம்.

55—(*வினா எண் 3471) திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி நகரின் "மாஸ்டர் பிளான்" தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: (அ) ஆம்.

(ஆ) நகர மற்றும் ஊரமைப்புச் சட்டத்தின்கீழ், பழனி உள்ளூர் திட்டக் குழுமத்திற்கு, முழுமைத் திட்டத்தை தயாரித்து வெளியிடுவதற்கான அறிவிப்பை செய்து, அதன் மீது பொதுமக்கள் மற்றும் நிறுவனங்களின் கருத்துக் களைக் கோர அரசின் இசைவு அளிக்கப்பட்டுள்ளது.



திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவரவர்களே, இந்த மாஸ்டர் பிளான் வந்துவிட்டதாக அமைச்சர் அவர்கள் ஒத்துக் கொண்டார்கள். இருந்தாலும் இந்த மாஸ்டர்பிளானை அமுல் படுத்துவதற்கு முன்னால், பணம் ஒதுக்குவதற்கு முன்னால் அங்கே மக்களுடைய கருத்தை அறிய வேண்டும் என்று சொல்வ தனால் இன்னும் காலம் கடந்துவிடும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? பழனி நகரைப் பொறுத்த வரையில் அங்கே அந்த கோவில் ஒன்று தான் பழனி என்பதைக் காட்டிக் கொண்டிருக்கிறது. மற்றபடி அங்கே சுகாதார வசதி இல்லை, சாக்கடை வசதி இல்லை, ரோடு வசதி இல்லை. இப்படிப்பட்ட நிலையில் சீர் கெட்டிருக்கிறது. இந்த மாஸ்டர் பிளானில் இப்படிப்பட்ட பணிகள் இடம் பெற்றிருக்கின்றனவா?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: தலைவரவர்களே, 1986 ஜூன் மாத இறுதிக்குள் ஒப்புதல் அளிக்கப்படும். எந்த எந்த திட்டங்கள் தேவை என்பதை அறிந்து, அதற்கேற்ப மாஸ்டர் பிளான் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: தலைவரவர்களே, இந்த மாஸ்டர் பிளானை நிறைவேற்ற பணம் எவ்வளவு ஒதுக்கப் பட்டிருக்கிறது? ஏற்கெனவே பாதாளச் சாக்கடைத் திட்டம். 'சாங்ஷன்' செய்யப்பட்டு, வேலை ஆரம்பிக்கப்பட்டு, பாதியில் நிறுத்தப்பட்டிருக்கிறது. அந்தப் பணி எப்போது முடியும்? அதோடு, அந்தப் பகுதியில் வையாபுரி கண்மாய் மிகவும் புனிதமானது. அந்த கண்மாய் இன்றைக்கு சீர்கெட்டிருக்கிறது. அதனைச் சீர்படுத்த இந்தத் திட்டத்தில் இடம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி: தலைவரவர்களே' மாண்புமிகு உறுப்பினர் சொன்ன கருத்தைப் பொறுத்த வரையில், மாஸ்டர் பிளான் என்பது நிதி ஒதுக்கும் திட்டம் அல்ல. இந்தத் துறையின் மூலம் 20 ஆண்டுகளுக்கு பின்னால் எத்தகைய வளர்ச்சியைப் பெறும் வாய்ப்பு இருக்கிறது, மக்கள் தொகை பெருக்கம் எப்படி இருக்கும். அதற்கு ஏற்ப என்னென்ன வசதிகள் தேவைப்படும் என்பதை ஆராய்ந்து திட்டமிட்டு, அதற்குப் பின்னாலே அது உள்ளாட்சித் துறையின் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. நிதியைப் பொறுத்த வரையில் பிரச்சனை இல்லை. இருந்தாலும் மாஸ்டர் பிளானைப் பொறுத்த வரையில் எதிர்காலத்தில் நிறைவெற்றப் பட வேண்டிய பல்வேறு பணிகள் குறித்த முடிவினை இந்தத் துறை எடுக்கிறது.

திரு. கே. குப்புசாமி: தலைவரவர்களே, வளர்ந்து வருகிற பழனி நகருக்கு இந்த மாஸ்டர் பிளான் மூலம் என்னென்ன நன்மைகள் கிடைக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். நல்லுசாமி : தலைவரவர்களே, இந்த மாஸ்டர் பிளானில் பழனி நகருக்கு என்னென்ன வசதிகள் தேவை என்பதை உணர்ந்து, அவை நிறைவேற்றப்பட வேண்டு மென்று சொல்லியிருக்கிறோம். குறிப்பாக, திண்டுக்கல்—பழனி, பழனி—தாராபுரம், திண்டுக்கல் தென்பகுதி அபிவிருத்திக்கு ஏற்ற சாலை வசதி போன்ற போக்குவரத்துப் பணிகள் நல்ல முறையில் செயல்படுத்தப்படும். அதைப்போன்று பழனி நகரின் வடக்குப் பகுதி தொழிற்சாலை பகுதியாக அமைக்கப் படும். வீட்டுவசதித் துறை மூலமாக தேவையான இடங் களில் வீடுகள் கட்டப்படும். அதைப் போன்று இணைப்புச் சாலைகள் தேவையான இடங்களில் அமைக்கப்படும், 5 சமுதாய நிலையங்கள் அமைக்கப்படும், குடிநீர் வசதிக்கு தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படும். பழனிக்கு அதிகமாக மக்கள் வருவதைக் கருத்தில் கொண்டு, இப்படிப்பட்ட பல்வேறு பணிகள் நிறைவேற்றப் படுவதற்கு மாஸ்டர் பிளானில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நகராட்சிப் பகுதிகளில் ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்ட மானியம்

56—(* வினா எண். 2088)—திரு. டி. ஆர். வேங்கடரமணன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நகராட்சிப் பகுதிகளில் ஆதி திராவிடர்களுக்கு இலவசமாக வீட்டுமனை வழங்கும்போது, வீடு கட்ட அவர் களுக்கு மானியம் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத் திட்டம் எப்போது செயலுக்கு வரும்?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் தலைவரவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

கொல்லிமலை வாழ் மக்கள் கூட்டுறவுச் சங்கம்.

57—(*வினா எண். 2793) திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் கொல்லிமலை Lamp சங்கம் மூலம் N. C. D. C. உதவியுடன் அன்னாசிப் பழத்திலிருந்து பழரசம் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : (அ) ஆம்

(ஆ) தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மற்றும் மாநில அரசின் நிதி உதவியுடன் இவ்வாலையை நிறுவ ரூ. 9.50 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதில் சங்கத்தின் பங்காக ரூ. 0.475 இலட்சம் போக மீதி ரூ. 9.025 இலட்சத்தை தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகமும் அரசும் வழங்கும். இதில் கொல்லிமலை மலைவாழ் மக்கள் பெரும்பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு முதல் தவணையாக ரூ. 5,10,625 வழங்கப்பட்டுள்ளது. மீதித் தொகை இந்த நிதி ஆண்டில் மேற்படி சங்கத்திற்கு வழங்கப் படும்.

இவ்வாலையை நிறுவுவதற்கு மேற்படி சங்கம் 1.37 ஏக்கர் நிலத்தை பெற்றுள்ளது. கட்டுமானப் பணிகளுக்குத் தேவையான வரைபடம் மற்றும் மதிப்பீடுகள் தயார் செய்ய சங்கம் ஏற்பாடு செய்துள்ளது. இந்த ஆலையை நிறுவ தேவையான இயந்திர சாதனங்களைப் பெறவும் சங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. சி. சிவப்பிரகாசம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லிமலையில் அன்னாசிப் பழத்திலிருந்து பழரசம் தயாரிக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்க இரண்டாண்டுகளுக்கு முன்பே மத்திய அரசும் மாநில அரசும் அனுமதி வழங்கிவிட்டன. அதற்காக இப்போது மேலும் 7 இலட்சம் ரூபாய் அதிகமாகத் தேவைப்படுவதால் அதற்கு விரைவாக அங்கீகாரம் அளித்து இந்தப் பழத் தொழிற்சாலையை அங்கே விரைவாக நிறுவுவதற்கு அரசு முயலுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : தலைவரவர்களே, ஒதுக்கப்பட்ட நிதி மொத்தம் 9.50 இலட்சம் ரூபாய். ஆனால் இன்று கொடுக்கப்பட்டிருக்கின்ற நிதி 5,10,625 ரூபாய். நிதி பற்றவில்லை என்றால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

நெல்லிக்குப்பம் வள்ளுவர் குடியிருப்பு தாழ்த்தப்பட்ட மக்கள்.

58— (* வினா எண். 3765)—திரு. துரை அன்பரசன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் நெல்லிக்குப்பம் தொகுதிக்கு உட்பட்ட 'வள்ளுவர் காலனி'யில் வசிக்கும் ஏறத்தாழ 40 தாழ்த்தப்பட்ட குடும்பங்கள் அப்பகுதியில் வாழ் கின்ற மிராசுதாரர்களிடம் (பெருநிலக்கிழார்கள்) கொத்தடிமை களாக வாழ்கிறார்களென்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், இது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

திரு. துரை அன்பரசன் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இதுவரை எத்தனை கொத்தடிமைகள் மீட்கப் பட்டுள்ளனர்? அவர்களில் தென்னாற்காடு மாவட்டத்தில் மட்டும் எத்தனை பேர்கள் என்ற விவரத்தை அறிய விரும்புகிறேன். தாட்கோ மூலமாக இதுவரையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எவ்வளவு வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் கொத்தடிமை களாக இருந்து மீட்கப்பட்டவர்கள் கிட்டத்தட்ட 33,158 பேர்கள். அதிலே தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் கல்ராயன் மலைப் பகுதியில் மட்டும் 24,945 பேர்கள் மீட்கப்பட்டு இருக் கிறார்கள். இதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொத் தடிமை பற்றி மட்டும் மூலக்கேள்வி கேட்டுள்ளதால் வீடு பற்றிய கேள்வியைத் தனியாகப் போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

சென்னைப் பல்கலைக் கழக பிற்பட்ட மாணவர்களுக்கு படிப்புதவி.

59— (* வினா எண். 72)—திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை பல்கலைக் கழகத்திலுள்ள எம். ஏ., எம்.எஸ்.சி., எம்.எல்., எம்.ஈ., எம்.எஸ்., எம்.டி. ஆகிய பட்ட மேற்படிப்பில் பயிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு வழங்கப்பட்ட படிப்புதவித் தொகை எவ்வளவு?

(ஆ) அவர்களுக்கு மாணவர் இல்ல வசதி இலவசமாக அளிக்கப்படுகிறதா?

(இ) அந்த மாணவர்கள் தேர்வுக் கட்டணம் செலுத்து கிறார்களா ?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : (அ) எம். இ. பட்டப்படிப்பு தவிர எம்.ஏ., எம்.எஸ்ஸி., எம்.எல்., எம்.எஸ்., எம்.டி., போன்ற பட்டப் படிப்புகளுக்கு பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு அவர்கள் பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ. 5,000 வரை இருக்குமானால் கீழ்க்கண்டவாறு பிற்படுத்தப் பட்டோர் நலத்துறையால் படிப்புதவித் தொகை வழங்கப்படு கிறது.



| வ.எண். | பட்ட மேற்படிப்பின் பெயர். | முதலாவது ஆண்டு வழங்கப்படும் உதவித் தொகை. ரூ. | இரண்டாவது ஆண்டு வழங்கப்படும் உதவித் தொகை. ரூ. |
|---|---|---|---|
| 1 | எம்.ஏ. | 299—00 | 261—00 |
| 2 | எம். எஸ்ஸி (விஞ்ஞானம்) | | |
| | அ) இரசாயனம் நீங்கலாக | 362—00 | 323—00 |
| | ஆ) இரசாயனம் | 377—00 | 338—00 |
| | இ) விஞ்ஞானம் அல்லாதது | 302—00 | 263—00 |
| 3 | எம். காம். | 258—00 | 125—00 |
| 4 | எம்.எல். (கல்லூரி நூல் நிலைய கட்டணம்) | 60—00 | 60—00 |
| 5 | எம். எஸ். (மூன்று வருடங்கள்) | 360—00 | (ஒவ்வொரு வருடத்திற்கும்) |
| 6 | எம்.டி. (மூன்று வருடங்கள்) | 360—00 | (ஒவ்வொரு வருடத்திற்கும்) |

எம்.ஈ-(M.E.) பட்டப்படிப்புக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையால் உதவித் தொகை ஏதும் வழங்கப்படவில்லை.

(ஆ) மற்றும் (இ) பட்ட மேற்படிப்பு பயிலும் பிற்படுத்தப் பட்ட வகுப்பு மாணவர்களின் பெற்றோர் ஆண்டு வருமானம் ரூ. 5,000 வரை இருக்குமானால் அவர்களுக்கு பிற்படுத்தப் பட்டோர் நலத் துறையால் நடத்தப்படும் விடுதிகளில் தங்கும் வசதி அளிப்பதுடன் உணவும் இலவசமாக வழங்கப்படுகிறது. உதவித்தொகை பெறும் பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு தேர்வுக் கட்டணமும் அரசால் வழங்கப்படுகிறது.

மீனவர்களுக்கான திட்டங்கள்.

60— (* வினா எண். 1228)—திரு. சைதை சா. துரைசாமி, திரு. இரா. தாமரைக்கனி மற்றும் திரு. செ. செம்மலை : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீன்வளத்துறையின் மூலம் மீனவர்களுக்கு என்னென்ன திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன?

(ஆ) தஞ்சை, நெல்லை என்ற இரு மீன்பிடி கப்பல்களின் மூலமாக மீன் பிடிக்கப்படுகிறதா?

(இ) இதன் மூலம் அரசுக்கு கிடைத்த வருவாய் என்ன?

(ஈ) விசைப்படகுகள் மூலம் மீன் பிடிக்கப்படுகிறதா?

(உ) எத்தனை படகுகள் மூலம் மீன் பிடிக்கப்படுகிறது?

(ஊ) கிடைத்த வருவாய் என்ன?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : (அ—ஊ) விவர அறிக்கை † ஒன்று தனியாக அவைமுன் வைக்கப்பெற்றுள்ளது.

திரு. சைதை சா. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் பல்வேறு குறிப்புகளை அமைச்சர் அவர்கள் வழங்கி இருக்கிறார்கள். அதிலே நைலான் வலைகளையும், மீன் பிடிக்கும் இயந்திரங்களும் கண்ணாடி இழையிலான படகுகளும் எத்தனை பேர்களுக்கு வழங்கப்பட்டு இருக்கின்றன என்ற குறிப்பும், எத்தனை கூட்டுறவு சொசைட்டிகளுக்கு இவைகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்ற விவரமும் இல்லை. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த விவரத்தைத் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10--10)

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடல் மீன் வளத்தைப் பெருக்குவதற்கு மீன் பிடிப் படகுகளை நிறைய அளிப்பதும், புதியதாக பல முறைகளை அறிமுகப்படுத்துவதும் அவசியமாகும் என்ற வகையில் 3-வது 4-வது 5-வது திட்டக் காலத்திலே மீனவர்களுக்கு படகுகள் நிறைய அளிக்கப்பட்டு வந்தன. துறையின் மூலம் 1021 படகுகளும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலம் 1002 படகுகளும் மீனவர்களுக்குக் கொடுக்கப்பட்டன. படகுகளின் விலை ஏறியதாலும், டீசல் போன்றவற்றின் விலை ஏறியதாலும், பராமரிப்புச் செலவு அதிகரித்ததாலும், மீனவர்கள் மரத்தினால் ஆன படகுகளை வாங்க அதிக ஆர்வம் காட்டவில்லை. எனவே 6-வது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் கண்ணாடி இழையிலான படகுகளை வழங்கும் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. மற்றும் கூட்டுறவு சொசைட்டியின் மூலமாக சில விவரங்களைக் கேட்டார்கள். அது பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்கள் இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தில் சேர்ந்துள்ளனரா? இதுவரையில் எத்தனை பேர்கள் சேர்ந்துள்ளனர்? இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தில் சேர்ந்தவர்களுக்கு, இறந்தவர்கள் குடும்பத்திற்கு எவ்வளவு கிடைக்கிறது, உடல் ஊனம் உற்றவர்ளுக்கு எவ்வளவு கிடைக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

† 439 ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.





மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்கள் விபத்து காப்புறுதித் திட்டத்தின் கீழ் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாக இருந்தவர்கள் இறந்துவிட்டார்களேயானால், அவர்களுக்கு கூட்டுறவுத் துறை மூலமாக காப்புறுதித் தொகையாக 15 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்படுகிறது. உடல் ஊனம் உற்றவர்களுக்கு ரூ. 7,500 வழங்கப்படுகிறது. இதற்காக மீனவர்கள் கொடுக்க வேண்டிய ஆண்டுத் தொகையான 12 ரூபாயை, மத்திய அரசும் மாநில அரசும் பகிர்ந்து கொண்டு தலா 6, 6 ரூபாய் வீதமாகக் கொடுக்கிறார்கள். இத்திட்டத்தில் இதுவரையில் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாக சேர்ந்திருக்கிற மீனவர்கள் 1 லட்சத்து 16 ஆயிரத்து 264 பேர்களாவர்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கடல் மீனவர்களுக்கு அமல் படுத்தப்பட்டு வரும் வீடு கட்டும் திட்டத்தை விரிவுபடுத்தி, உள்நாட்டு மீனவர்களுக்கும் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற வகையில் ஒரு ஏற்பாட்டை அரசு செய்ய முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடல் ஓரத்தில் உள்ளவர்களின் வீடுகள் தாம் அடிக்கடி புயலால் பாதிக்கப்பட்டு வருகின்றன; கடல் அலைகளின் அபாயமும் இருக்கிறது. ஆகவே அங்கே தான் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டியது அவசியமாகும். அங்கேயே ஒரு லட்சம் வீடுகள் கட்ட வேண்டிய நிலையில் 16 ஆயிரம் வீடுகள் தாம் கட்டி முடிக்கப்பட்டிருக்கின்றன. எனவே உள் நாட்டு மீனவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் திட்டத்தை அரசு இன்னும் பரிசீலிக்கவில்லை.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் கண்ணாடி இழைகளாலான படகுகள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். நான் தெரிந்து கொள்ள விரும்புவது 6-வது ஐந்தாண்டுத் திட்டம் இன்னும் இருக்கிறதா? 6-வது ஐந்தாண்டுத் திட்டம் போன ஆண்டே சென்று விடவில்லையா? அதோடு மாநில அரசும், மத்திய அரசும் தலா 6 ரூபாய் போட்டு இன்ஷ்யூரன்ஸ் கட்டி, அதன்மூலம் விபத்தில் இறந்த மீனவர்களின் குடும்பத்திற்கு 15 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுவதாக ஏற்கெனவே அறிவித்தார்கள், அமைச்சர் அவர்கள் இப்போதும் சொன்னார்கள். ஆனால் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராக இருந்தால்தான் அந்த உதவித் தொகை கிடைக்கும் என்ற நிபந்தனையை அதற்கு விதித்திருக்கிறார்களே, அதனால் பாதிக்கப்பட்டவர்களில் பல பேர்களுக்கு அந்த உதவி கிடைக்காமல் அவதியுறுகிறார்கள். எனவே அந்த நிபந்தனையை நீக்க அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணாடி இழைகளினால் ஆன படகுகளை கொடுக்கும் திட்டம் 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொடங்கி, இந்த ஆண்டும் வளர்ந்து வருகிறது. இந்த ஆண்டும் அந்த திட்டத்தை அமல் நடத்துவது குறித்து பரிசீலித்துக் கொண்டுதான் இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல உறுப்பினர்களாக சேர்ந்தால் தான் அவர்களுக்கு இந்த காப்புறுதித் திட்டத்திலே நாம் தொகையை வழங்க முடியும். அதற்காகவாவது அவர்கள் அனைவரையும் உறுப்பினர்களாக ஆக்க வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்கள் போன்றவர்கள், மீனவர்களின் மத்தியில் போய் எடுத்துச் சொல்லி, அத்தனை மீனவர்களையும் இந்த காப்புறுதித் திட்டத்திலே சேர்க்கின்ற முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கு அவர்களும் உறுதுணையாக இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக் கூடிய விளக்கத்தில், கீழ்த் தஞ்சை மாவட்டத்தில் தொண்டியக் காடு என்ற இடத்தில் 29 இலட்சம் செலவில் 50 ஹெக்டேர் நிலப்பரப்பில் உவர்மீன் பண்ணை அமைக்கப்படும் என்று குறிப் பிடப்பட்டிருக்கிறது. அது என்னுடைய தொகுதியாக இருக்கிற காரணத்தால் எனக்குத் தெரியும். அங்கே வேலைகள் பெரும்பகுதி நடைபெற்றிருக்கின்றன. அங்கே இறால் மீன் குஞ்சுகளும் விடப் பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறதே; இப்போது அந்த வேலைகள் நடைபெறுகின்றனவா? எந்த அளவிற்கு அந்த வேலை இருக்கிறது? எப்போது வேலை முடிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும். அதோடு இப்போது நாட்டுப் படகு உற்பத்தி செய்யப்படுகிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தப் படகுகளை தனியார்கள் கட்டி குறைந்த விலையில் கொடுக்கிறார்கள். அரசு மூலமாக கட்டப்படுகிற படகுகள் அதிக விலைக்கு கொடுக்கப்படுவதால், அவைகள் விற்காமல், அந்தத் தொழிற்சாலைகளை மூடிவிடுவதால் தொழிலாளர்கள் பாதிக்கப் படுவதாக சொல்லப்படுகிறது. எனவே அரசு மூலமாக கட்டப் படுகிற படகுகளை குறைந்த விலையில் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் : தலைவரவர்களே, தனிக் கேள்வி போட்டால் விவரமாகப் பதில் அளிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும் ]



## 3. அறிவிப்பு.

### அரசினர் சட்ட முன்வடிவுகள் (மே.செ).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவுகள் திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப் பெற்றதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

*(1) தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 1/1986).*

*(2) தமிழ்நாடு 1986 ஆம் ஆண்டு ஊராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 2/1986).*

## 4. கவன ஈர்ப்பு.

### அடையாறு ஆற்றோரப் பகுதிவாழ் மக்கள், மழைக் காலங்களில் பெரிதும் பாதிப்புக்குள்ளாவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சைதை சா. துரைசாமி மற்றும் திருமதி பா. வளர்மதி ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டுவருவார்.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''அடையாறு ஆற்றில் மழைக்காலங்களில் வெள்ள அபாயம் ஏற்படுவதையொட்டி கோட்டூர்புரம் தண்டாயுதபாணி நகர், சூரியா நகர், ஆற்றுமா நகர், திடீர் நகர், கோதாமேடு, செட்டித்தோட்டம், விநாயகபுரம், சாரதி நகர், முத்துராமலிங்கம் பிளாக் மற்றும் மல்லிகைப்பூ நகர் போன்ற ஆற்றோரப் பகுதி வாழ்மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)*

* மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சைதாப்பேட்டையிலிருந்து அடையாறு வரை அடையாறு ஆற்றுக்கு வெள்ளப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக ரூபாய் இரண்டு கோடி மத்திய அரசிடமிருந்து பெறப்பட்டது. அடையாறு ஆற்றின் அருகிலுள்ள குடியிருப்புப் பகுதிகளைப் பாதுகாக்க தேவையான இடங்களில் வெள்ளத் தடுப்புச் சுவர் கட்டுவது குறித்த வரைபடங்களும் மற்றும் மதிப்பீடும் தயாரிக்கப்படவிருக்கிறது.

இது தவிர ஜாபர்கான்பேட்டை தாம்பாலம் முதல் மறை மலை அடிகள் பாலம் வரை அடையாற்றை மேம்பாடு செய்ய அரசு ரூபாய் 84 லட்சத்தில் ஒரு திட்டத்தை உருவாக்கி அதற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது. மிகுந்த நில ஆக்கிரமிப்பு காரணமாக இத்திட்டத்தை ஏற்கனவே திட்டமிட்டபடி செயல்படுத்த முடிய வில்லை என்று தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்கள் தெரிவித்துள்ளார்கள். நான் அடையாறு ஆற்றினைப் பார்வை யிட்டபின் இப்பணியை நடப்பு ஆண்டில் செயலாக்கத்திற்குக் கொண்டு வருவதற்காக தலைமைப் பொறியாளரால் அனுப்பிய திருத்திய கருத்துருவிற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. வீராணம் குடிநீர்த் திட்டக் குழாய்கள் குறுக்கிடும் இடத்திற்கும் திரு.வி.க. பாலத்திற்கும் இடையில் உள்ள அடையாற்றில் தூர் வாருதலும் இத்திட்டத்தில் அடங்கும். இப்பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்கனவே கோரப்பட்டுள்ளன. பணி விரைந்து செயல்பட பொதுப் பணித்துறை கவனம் செலுத்துகிறது.

திரு. சைதை சா. துரைசாமி: துணைத் தலைவர் அவர்களே, அடையாற்றில் வெள்ளம் ஏற்படுவதைத் தடுக்க இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். நான் எனது மகிழ்ச்சியை தொகுதி மக்களின் சார்பாக அடைகிறேன். வெள்ள அபாயம் ஏற்படுகிறபோதெல்லாம் இந்திய துணைக் கண்டத்தையே கவர்ந்திருக்கிற அளவிற்கு பாதிக்கப் படுகிற கோட்டூர்புரம் தண்டாயுதபாணி நகர், சூர்யா நகர், ரெங்கராஜபுரம் போன்ற பகுதிகள் எல்லாம் ஆண்டுதோறும் இந்த வெள்ள அபாயத்திற்கு ஆளாக்கப்படுவதால், இப்போது எடுக்கப்படுகிற இந்தப் பணியானது, தொடர்ந்து எந்த வெள்ள அபாயம் ஏற்பட்டாலும் அந்தப் பகுதிகளை பாதிக்காத வகையில் நிறைவேற்றப்பட வேண்டும் அந்தவகையில் மறை மலைப் பாலத்திலிருந்து திரு.வி.க. பாலம் வரையில் கரையோரப் பகுதிகளில் வெள்ள அபாயம் ஏற்படாத வகையில் அதன் திரைகள் அமைக்கப்படுமா? கோட்டூர்புரம், திரு.வி.க. பாலத் தற்கு இடைப்பட்ட பகுதியில் மட்டும் 'டீசில்ட்' செய்யப்படு மென்றும் அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் அடையாறு ஆற்றில் ஜாபர்கான்பேட்டைப் பகுதியில் எந்தக் காலத்திலும் 'டீசில்ட்' செய்யப்படாததால் அது மேடாக இருக்கிறது. ஆகவே அந்தப் பகுதியை 'டீசில்ட்' செய்ய, தூர் வார மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தத் திட்டத்தோடு இணைத்து அந்தப் பணியைச் செய்ய முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20.)

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வெள்ள அபாயத்திலிருந்து குடியிருப்பு களைப் பாதுகாக்கும் நோக்கத்தில்தான் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட்டு இருக்கிறது. அந்த முறையில் கடந்தகால அனுபவங்களைக் கருத்தில் கொண்டு, இந்த அடையாற்றின்



இருமருங்கிலும் இருக்கக்கூடிய குடியிருப்புகளில், எந்தப் பகுதிகள் எல்லாம் பாதிப்புக்கு ஆட்படுத்தப்பட்டு இருக்கிறதோ, அந்தப் பகுதிகளில் எல்லாம் வருங்காலத்தில், வெள்ளத்தால் பாதிக்கப் படாத அளவிற்கு வெள்ளத்திலிருந்து பாதுகாக்கக்கூடிய அள விற்கு திட்டம் தீட்டப்பட்டு இருக்கிறது என்பதை நான் தெரியப்படுத்த விரும்புகிறேன்.

அதுபோல், தூர் வாருவதைப் பொறுத்தமட்டில், தற் போது ஏற்கனவே அறிவித்தபடி, தூர் வாரக்கூடிய பணியை அரசு மேற்கொள்ள விரும்புவதற்குக் காரணமே, முகத்து வாரத்தில் தண்ணீர் தேங்கக்கூடாது என்பதுதான். தாராள மாகத் தண்ணீர் கடலுக்கு செல்லக்கூடிய அளவிற்கும், கடல் தண்ணீர் உள்ளே நுழைந்து, இருக்கக்கூடிய தண்ணீரைக் கொண்டு செல்லக்கூடிய அளவிற்கும் நிலைமைகளை உருவாக்குவதற்காகத் தான், இத்தகைய வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டு இருக் கின்றன. எனினும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை, ஏற்கனவே நீண்டகாலமாகத் தூர் வாரப்படாத, மேல்பகுதி' அடையாற்றின் மேல்பகுதியில் தூர் வாரப்படவேண்டும் என்பது தான். அந்தக் கோரிக்கையைப் பற்றி, தனியாக அரசு பரிசீலித்து, தனியாக நடவடிக்கையை மேற்கொள்ளும். தனி யாக இதுகுறித்து, அறிக்கை வரப்பெற்று, உரிய நடவடிக்கைகள் உரிய முறையில் மேற்கொள்ளப்படும்.

திருமதி பா. வளர்மதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு புறத்திற்கு மட்டும் தடுப்புச் சுவர் கட்டுகின்ற பணிக்காக, இரண்டு கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதாகச் சொன்னார்கள். இருந் தாலும், இன்னொரு புறத்தில், கேசவபெருமாள்புரம் நந்தனம் பாலத்திற்கு அருகே உள்ள குடிசைப் பகுதிகள், மேலும் கேசவ பெருமாள்புரம் பாதிக்கப்படுவது என்பது மட்டுமல்லாமல், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் இருக்கக்கூடிய குடியிருப்புப் பகுதிகள், அந்த அடையாற்றின் வெள்ளத்தினால், கடுமையாகப் பாதிக்கப்படுகிறது என்பதையும் கருத்தில் கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தடுப்புச் சுவர் கட்டுகின்ற பணியை இன் னொரு புறத்திற்கும் நீட்டிப்பதற்கு; அந்தப் பணியைத் துவங்கு கிறபோது, நிதியை ஒதுக்கீடு செய்து, அந்தப் பணியையும் மேற்கொள்வதற்கு முயற்சி செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே நான் அறிவித்தபடி, எங் கெல்லாம் பாதிப்பு ஏற்படுகிறதோ அந்தப் பகுதிகளுக்கு உரிய நிவாரணம் தருவது என்பதுதான் இந்தத் திட்டத்தின் நோக்க மாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வெள்ள அபாயத்தில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கூடச் சிக்குகிறார்கள் என்று சொன்னார்கள். மாண்புமிகு அமைச்சர் பெருமக்களைவிட மோசமான அளவிற்கு, தாழ்வான பகுதியிலே வாழக்கூடிய

மக்கள் அவதிப்படுகிறார்கள் என்ற உண்மையை அறிந்து தான் இந்த அரசு, அமைச்சர்கள் இருக்கின்ற அந்தப் பகுதிக்கு அக் கறை செலுத்தாமல், தாழ்வான பகுதியில் இருக்கக்கூடிய பாமர மக்கள் வாழுகின்ற அந்தப் பகுதிக்கு அக்கறை செலுத்தி, அந்தப் பகுதியிலே திட்டத்தை மேற்கொள்ள, உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, அந்த வகையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களால், சுட்டிக்காட்டப்பட்ட பகுதிகள் அத் தனையும், ஏழை எளிய மக்கள் வாழ்கின்ற பகுதிகள் என்பதால், அரசு நிச்சயமாக அதில் கவனம் செலுத்தும்.

திரு. வைகை சா. துரைசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மறைமலை அடிகள் பாலத்திலிருந்து, ஜாபர்கான் பேட்டை, தரைப்பாலம் வரை, நடப்பு ஆண்டிலே போடப் பட்ட அந்தத் திட்ட மதிப்பீடு 84 லட்சம் என்பதை மாற்றி அமைத்து இப்போது ஏற்பட்டு இருக்கிற வெள்ள அபாயத் திற்கு ஏற்றாற்போல், 2 அடி உயர்த்துவதற்காக, இந்தத் திட்டத்தின் மதிப்பீட்டையும் உயர்த்துவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? அதேபோல், அந்த அடையாற்றின் நடுவிலே தனியாருக்குச் சொந்தமான இடம் இருக்கிறது. இது இருக்கின்ற காரணத்தால், அந்த ஆற்றினுடைய இரண்டு பக்கமும் ஆற்றுத் தண்ணீர் போகிறது. நடுவிலே தனியாருடைய இடம் இருக்கிறது. எனவே, இதனால், ஆஸ்பத்திரி சாலை, செட்டித்தோட்டம், கஸ்டம்ஸ் காலனி போன்ற பகுதிகள் எல்லாம் இதனால் பாதிக்கப்படுகின்றன. எனவே அந்த ஆற்றின் நடுவிலே இருக்கின்ற தனியார் நிலத்தைக் கையகப்படுத்தி, அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே, இந்தத் திட்டம் தீட் ப்பக் கிற நேரத்தில், அடையாற்றிலே வரக்கூடிய தண்ணீரின் அள வினைக் கருத்தில் கொண்டுதான் திட்டம் தீட்டப்பட்டு இருக் கிறது என்ற முறையிலே, ஏற்கனவே இந்தத் திட்டத்தின்படி கரைகள் உயர்த்தப்படுமானால், வலுப்படுத்தப்படுமானால், அதுவே நிலைமைகளைச் சீராக்க ஏதுவானதாக இருக்கும் என்று அரசு கருதுகிறது. இது நீங்கலாக, ஒருசில பகுதிகளில், தனியார் கைவசம் அந்த நிலங்கள் இருக்கின்ற காரணத்தால், அந்த நிலங்களிலே பொதுப்பணித்துறை உள்ளே நுழைந்து பணிகளை மேற்கொள்ள முடியாத அளவிற்கு, அது தடையாக இருக்கிறது என்ற காரணத்தால் திட்டம் காலதாமதப்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். இந்தத் திட்டத்திற்கு இடையூறாக தனியார் நிலங்கள் இருக்கு மானால் அந்த நிலங்களைக் கையகப்படுத்த, ஏற்கனவே இருக்கக்கூடிய தற்போதைய விதிமுறைகளின்படி அரசு நட வடிக்கை எடுக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.



5. அறிக்கைகள் அளித்தல்.

பொது நிறுவனங்கள் குழு.

திரு. பி. முசிறிபுத்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கையை அளிக்கிறேன்:

(1) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1980–81 ஆம் ஆண்டிற்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கையில் ஆதி திராவிடர் வீட்டு வசதி–வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகம் தொடர்பான பத்திகள் மீதான மேற்படி குழுவின் பதினைந்தாவது அறிக்கை.

(2) இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1974-75 மற்றும் 1975–76 ஆம் ஆண்டுகளுக்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கைகளில் போக்குவரத்துத் துறை குறித்த பத்திகளின் மீதான பொது நிறு வனங்கள் குழுவின் (1983–84) முப்பத்தி ஆறாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் பதினாறாவது அறிக்கை.

6. தொழில் துறை அமைச்சரின் அறிக்கை.

மின்னணுவியல் தொலை பேசிகளை உற்பத்தி செய்தல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சட்டமன்ற விதி 111-ன் கீழ் தொழில் துறை அமைச்சர் பேரவைக்கு ஒரு அறிக்கையை அளிப்பார்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இவ்வரசின் ''தமிழ்நாடு மின்னணு வியல் நிறுவனத்தின்'' கூட்டுத்துறை நிறுவனமாகிய ''டெலி மாட்டிக்ஸ் சிஸ்டம்ஸ் லிமிடெட்'' ஆனது பொத்தான்களை அழுத்தி பேசக்கூடிய மின்னணுவியல் நுணுக்கம் வாய்ந்த தொலைபேசிகளை (Electronic Push button Telephones)...... மேற்கு ஜெர்மனி நிறுவனமான SIEMENS உடன் இணைந்து, உற்பத்தி செய்வதற்கான திட்டத்திற்கு மைய அரசின் ஒப்புதல் கோரப்பட்டு இருந்தது. இப்பொழுது மைய அரசு இதற்கான ஒப்புதலை அளித்துள்ளது. 1986 செப்டம்பர்-அக்டோபருக்குள் இத்தொலைபேசிகள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. SIEMENS நிறுவனத்துடன் இணைந்து தொழில் உற்பத்தியில் ஈடுபட கெல்ட்ரான் (Keltron) டெலிமேட்டிக்ஸ் சிஸ்டம்ஸ் லிமிடெட் (Telematics Systems Limited) குஜராத் தகவல் தொடர்பு நிறுவனம் (Gujarat Communications, Division), ஆகிய மூன்று அமைப்புகளுக்கு மட்டுமே இதுவரை மைய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

(திரு. க. இராசாராம்) [1986 ஜனவரி 20

1. சென்னையை அடுத்த நந்தம்பாக்கத்தில் SIEMENS நிறுவனத்தின் தொழில் நுட்ப ஒத்துழைப்புடன் மேற்சொன்ன நவீன எலக்ட்ரானிக் தொலைபேசிகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை அமைக்கப்படவிருக்கிறது. அத்தொழிற்சாலை ஆண்டு தோறும் ஐந்து இலட்சம் தொலைபேசிகளை (Decadic மற்றும் DTMF ஆகிய இரண்டு மாதிரி தொலைபேசிகளும் உற்பத்தி செய்ய இயலும். பின்னர் வேறு மாதிரியான தொலைபேசிகளின் உற்பத்தியும் மேற்கொள்ளப்படும். இந்தத் தொழிற் திட்டத்தின் மொத்தச் செலவு ரூ. 4.65 கோடியாக இருக்கும். தமிழ்நாடு அரசு எல்காட் மூலமாக முதற்கண் செய்யும் முதலீடு ரூ. 37.70 இலட்சமாக இருக்கும். சுமார் 300 பேர்களுக்கு நேரிடையாகவும் மற்றும் 600 பேர்களுக்கு மறைமுகமாகவும் இத்தொழிற்சாலை வேலை வாய்ப்புகளைத் தரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்து இவ்வரசின் "தமிழ் நாடு மின்னணுவியல் நிறுவனத்தின்" கூட்டுத்துறை நிறுவனமாகிய "இன்போடெக் நிறுவனம்" அமெரிக்க நிறுவனமான ஸ்டிரைட் மைக்ரோ (M/s. Stride Micro) உடன் இணைந்து மின்கணிப்புப் பொறி பாகங்களையும் மற்றும் கம்ப்யூட்டர்கள் பயன்படுத்துவதற்கான திட்டங்களையும் (Computer Hardware & Software)...... உற்பத்தி செய்வதற்காக திட்டம் வகுக்கப்பட்டு அதற்கு 1985 செப்டம்பரில் மைய அரசின் அனுமதியைக் கோரப்பட்டு இருந்தது. இப்பொழுது மைய அரசு இதற்கான ஒப்புதலை அளித்துள்ளது. விரைவில் ஸ்டிரைக் மைக்ரோ நிறுவனத்துடன் இணைந்து செயல்படுவதற்கான ஒப்பந்தத்தை இன்போடெக் செய்யவிருக்கிறது. 1986 ஆம் ஆண்டு முடிவதற்குள் இத்திட்டத்தின்கீழ் (Computer Hardware & Softward) உற்பத்தி தொடங்கிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2. வங்கி மற்றும் ஆயுள் காப்பீட்டு நிறுவனங்கள், பொதுத் துறை நிறுவனங்கள், அரசுத் துறைகள் ஆகிய அனைத்துமே வரும் ஐந்து ஆண்டுகளில் மின்கணிப்பு பொறிகளைப் பெருமளவில் பயன்படுத்தும் என்று கருதப்படுவதால் அவை அனைத்தும் 'இன்போடெக' உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு முக்கிய வாடிக்கையாளர்களாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இன்போடெக் மின்கணிப்புப் பொறிகளை விற்பனை செய்வது மட்டுமின்றி அவற்றை அமைத்தல் பயிற்சி அளித்தல் மற்றும் அவற்றை பயன்படுத்துவதற்கான திட்டங்களை வகுத்தளித்தல் (Software) ஆகிய பணிகளையும் மேற்கொண்டு தனது வாடிக்கையாளர்களுக்கு முழுமையான மின்கணிப்புப் பொறி அமைப்புகளைத் தருவதாக இருக்கும்.

3. இன்போடெக் அமைப்பானது மோட்டோரோலா (Motorola) 68,000 மற்றும் 68,020 மின்கணிப்பான்களையும் (Micro Processor). VME bus based அதிநுண் மின்கணிப்புப் பொறிகளையும் (Super Micro Computers) உற்பத்தி செய்யவிருக்கிறது. அதன் தலைமையிடம் சென்னையில் அமையும். நாடெங்கிலும் கிளைகள் அமைக்கப்படும். பொருட்கள் உற்பத்தி கும்மிடிப்பூண்டியில் உள்ள சிப்காட் தொழில்மையத்தில் நடைபெறும்.



1986 ஜனவரி 20] [திரு. க. இராசாராம்]

4. இத்திட்டத்திற்கு மூலதனம் முதலில் ரூ. 2 கோடி அளவில் இருக்கும். இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் பயிற்சி பெற்ற மின்கணிப்புப் பொறி தொழில் வல்லுநர்களும், பொறியாளர்களுமாக சுமார் 300 பேர்கள் பணியில் எடுத்துக் கொள்ளப்படுவர்.

(முற்பகல் 10-30)

7. அரசினர் சட்ட முன்வடிவு.

கூலி வழங்கல் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு, 1986

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

"1986 ஆம் ஆண்டு கூலி வழங்கல் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

8. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி).

திரு. மு. பாண்டுரங்கன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது தொடர்ந்து நடைபெறுகிற விவாதத்தில் கலந்து கொள்ள வாய்ப்பு அளித்தமைக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேதகு ஆளுநர் அவர்களின் உரையில் மூன்றாவது பாராவின் இறுதியில், 1984–85ஆம் ஆண்டில் குடும்ப நலத் திட்டத்தைச் செம்மையுற செயல்படுத்தியதற்கான தேசிய விருதாக தமிழ்நாடு ரூபாய் 2.5 கோடி பெறும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது நம்முடைய சிந்தையைக் கிளறுவதாக அமைந்துள்ளது. அகில இந்தியாவிலும் குடும்ப நலத் திட்டத்தைப் பேணிக் காத்தால் தான் இந்தியா வளம் உள்ள நாடாக மாறும் என்பதில் இரண்டு விதக் கருத்துக்கள் இருக்க முடியாது.

மால்தூசியன் என்ற அறிஞர், Population increases in a geometric l w y and the food products increase in an arithmatical way-- என்றும் தெளிவாகக் கூறியுள்ளார்.

அதனுடைய விளக்கம் என்னவென்றால், ஈரிரண்டு நாலு, நாலிரண்டு எட்டு, எட்டிரண்டு பதினாறு என்ற முறையில் மக்கள் தொகை அதிகமாகப் பெருகி வருகிறது என்றும், அதே நேரத்தில் உணவுப்பெருக்கம் என்பது, ஒன்றும், ஒன்றும் இரண்டு, இரண்டும் ஒன்றும் மூன்று, மூன்றும், ஒன்றும் நான்கு என்று கூட்டல் தொகையில் பெருகி வருகிறது என்றும் மிக விளக்கமாகச் சொல்லியுள்ளார்கள்.

மக்கள் தொகை இந்த அளவில் பெருகிக்கொண்டேபோனால், அவர்களுக்கு உணவு அளிக்க இயலாது என்பதைச் சுட்டிக்காட்டி மால்தூசியன் என்ற அறிஞர் மிக விளக்கமாக எடுத்துக் காட்டியுள்ளார்கள். மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த இந்தியாவில் உள்ள ஒவ்வொரு குடிமகனும் முயலவேண்டும். மதத்தின் பெயரால், இனத்தின் பெயரால் தப்பித்துக் கொள்ள முயலக் கூடாது. உதாரணமாக, ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முகம்மதிய சட்டப்படி ஒரு முஸ்லீம் நண்பர் 4 மனைவிகளைத் திருமணம் செய்து கொள்ளலாம். அந்த நண்பர் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ள மறுத்தால், அவ்வாறு ஒவ்வொரு முஸ்லீம் நண்பர்களும் மறுத்துவிட்டால், ஏறக்குறைய 500 அல்லது 1000 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த நாடு ஏன் ஒரு முஸ்லீம் நாடாக..............

## 9. ஒழுங்குப் பிரச்சினை

### அதிகாரிகள் அவை மாடத்திற்கு வராதது குறித்து.

திரு. குமரி அனந்தன்: பாயிண்ட் அப் ஆர்டர் சார். துணைத் தலைவர் அவர்களே. அமைச்சர் பெருமக்கள் சொல்கிற குறிப்புகளையும், சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே வெளியிடுகின்ற எண்ணங்களையும் குறிப்பெடுத்துச் செயல்படவேண்டிய அதிகாரிகள் யாருமே இங்கே இல்லாமல் இருப்பது முறைதானா? அவர்கள் இங்கே வரவேண்டுமா, வேண்டாமா என்பது பற்றி துணைச் சபாநாயகர் அவர்கள் தீர்ப்பளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

திரு. மு. பாண்டுரங்கன்: 500 அல்லது 1000 ஆண்டுகளுக்குப் பிறகு இந்த நாடு ஏன் ஒரு முஸ்லீம் நாடாக மாறாது........

THIRU KUMARI ANANDAN: What is the answer for my question?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் உங்கள் கருத்தை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள்.

THIRU KUMARI ANANDAN: There is no control over the Officials.





மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே, அரசுக்கு அதிகாரிகள்மீது கட்டுப்படுத்துகிற
அதிகாரம் இல்லை என்றோ, கட்டுப்படுத்தாமல் விட்டிருக்கிறோம்
என்றோ சொல்வது தவறு. அதிகாரிகள், செயலாளர்கள் அறை
களில் ஒலி பெருக்கிகள் உள்ளன. அங்கிருந்து செயலாளர்கள்
கேட்டுக்கொண்டுதான் இருக்கிறார்கள். எனவே, எது
அவசியமோ, எந்த அதிகாரி அவசியமோ, அந்த அதிகாரி குறிப்பு
எடுக்கிற நேரத்தில் வந்து விளக்கம் கேட்டுக்கொண்டு போவார்
கள். எல்லோரும் வந்திருக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்
தவும் முடியாது. சொல்லவும் கூடாது. தேவைப்பட்டால்,
தேவையான நேரத்தில் அதிகாரிகள் வருவார்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேலரியில் இருக்கிற
ஆபீசர்களைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் ரெஃபர் பண்ண
முடியாது. அவர்கள் அமைச்சருடைய உதவிக்காக வந்திருக்
கிறார்கள். அவர்கள் இங்கு இருக்கவேண்டுமென்ற அவசிய
மில்லை. அமைச்சர்களே குறிப்பு எடுத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே,
மாண்புமிகு உறுப்பினருடைய உணர்ச்சியை நான் மதிக்கிறேன்.
பேசப்படுகின்ற பேச்சுக்கள், குறிப்புகள் எல்லாம் அந்தந்த
இலாகாவிற்கு போகிறது. அந்தந்த இலாகாவிற்குப் போய்,
அதன்மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்
துக்கொள்கிறேன்.

8. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி)—

திரு. மு. பாண்டுரங்கன்: ஆகவே ஒரு இந்து சட்டப்படி ஒரு
மனைவியைத்தான் திருமணம் செய்து கொள்ளலாம் என்ற விதி
யிருக்கிறது. ஆனால் அதே நேரத்தில், ஒரு முகம்மதியர் நான்கு
மனைவிகளை மணந்து கொள்ளலாம் என்ற சட்டம் இருக்கிறது.
ஒரு முகம்மது இந்தக் குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தில் ஈடு
படாமல், நான்கு மனைவிகளைத் திருமணம் செய்துகொண்டு,
நான்கு மனைவிகளின் மூலமாக பல குழந்தைகளைப் பெறுகின்ற
வாய்ப்பிருக்கிறது. நாம் அதே நேரத்தில் ஒரே மனைவியை
கல்யாணம் செய்துகொண்டு. இரண்டு பிள்ளைகளை அல்லது
ஒரே பிள்ளையைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற நியதி வகுக்கப்
பட்டிருக்கிறது. அவ்வாறு இந்த நியதியை நாம் பின்பற்றிக்
கொண்டேபோனால், ஒரு முகம்மதிய நண்பர் நான்கு மனைவி
களின் மூலமாக பல குழந்தைகளைப் பெறும் வாய்ப்பும், ஒரு
இந்து நண்பர் ஒரு மனைவியின் மூலமாக ஒன்று, இரண்டு
குழந்தைகளைப் பெறும் வாய்ப்பும் இருக்கிறது. சற்று சிந்தித்துப்
பாருங்கள். 500 அல்லது 1000 ஆண்டுகளுக்குப்பிறகு, இந்தத்
தாய்த் திருநாடே, இந்தியத் திருமண்ணே, ஏன் ஒரு முஸ்லீம்
நாடாக மாறாதா? அப்படி மாறும் வாய்ப்பில்லையா என்பதை
இந்த மாமன்றத்தின் மூலமாக சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.
ஆகவே நாம் நம்முடைய இனத்தவர்களுக்கு, இந்திய நண்பர்

களுக்காக, ஒவ்வொரு குடும்பமும் ஒரு நியதியைத்தான் பின்பற்ற வேண்டுமென்ற விதியை வகுத்துக்கொள்ள, ஒரு சட்டம் இயற்ற வேண்டியது தமிழக மக்களுக்கு அவசியம் என்று இந்த மாமன்றத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

ஆளுநர் உரையில், 14-வது பாராவில். அண்மையில், நம் மாநில அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க, கர்நாடக அரசு மின் சக்திக்கு ஈடாக 5 டி.எம்.சி. நீர் வழங்க ஒப்புக்கொண்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்காக தமிழக அரசு உண்மையிலேயே கர்நாடக அரசுக்கு நன்றிக் கடன்பட்டிருக்கிறார்கள் என்று தெளிவாக எடுத்துக் கூறும் வகையில்,

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்ற திருக்குறளை தமிழக மக்கள் நன்கு அறிந்து வைத்துள்ளார்கள், நன்றி மறந்துவிட மாட்டார்கள் என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

தவிர கர்நாடக மாநிலத்திற்கும், மன நிறைவு ஏற்படுகின்ற வகையில், இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காண தமிழக முதல்வர் அவர்கள் பேச்சு வார்த்தைகளை ஏற்கெனவே தொடங்கியுள்ளார் என்பது தமிழக மக்களுக்கு இனிமையைச் சேர்க்கிற விதத்தில் அமைந்துள்ளது.

தவிர 7-1-1986 அன்று நம்முடைய பாரதப் பிரதமர் சென்னை வந்தபோது தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவர் அவர்கள், காவிரியிலிருந்து கர்நாடக அரசு இன்னும் கொஞ்சம் அதிகமாகத் தண்ணீர் விட்டு பயிர்களைக் காக்கவேண்டுமென்றும், அதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்றும் மனு கொடுத்த போது, அதற்கு நம்முடைய பாரதப் பிரதமர் அவர்கள் பரிவாக, உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு உறுதிமொழி அளித்தது, தமிழக மக்களின் வயிற்றிலே, குறிப்பாக தஞ்சை மாவட்ட மக்கள் வயிற்றிலே பால் வார்த்தது போல உள்ளது. அதற்காக பாரதப் பிரதமருக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் நாம் நன்றிக் கடன் ஆற்றவேண்டியுள்ளோம்.

அதுபோல தற்போது பெய்துள்ள மழைக்கும் சிலப்பதிகாரத்தில் சொல்வது போல, மாமழை போற்றுதும், மாமழை போற்றுதும் என்று அந்த மழைக்கும் நாம் நன்றி தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறோம்.

மேதகு ஆளுநர் உரையின் 20-வது பாராவில், இவ்வரசு, மக்கள் நலத்தில் அக்கறை கொண்ட அரசு என்ற நற்பெயரை ஈட்டியுள்ளது. இவ்வரசு தொடங்கியுள்ள பல முன்னோடித் திட்டங்கள், தேசிய அளவில் முன்மாதிரிகளாக விளங்குவதோடு உலக அரங்கில் பாராட்டுதல்களையும் பெற்றுள்ளன என்று குறிப்பிடப்பட்டிருப்பது குறித்து இந்த மாமன்றத்தின் மூலமாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.



அடுத்து குழந்தைகளுக்கு இலவசச் சீருடைகள் வழங்கும் திட்டத்தின்கீழ், பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த சுமார், 10,000 மகளிர் வேலைவாய்ப்புகள் பெறுவர் என்பதற்காகவும், மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசுக்கு மேலும் நன்றி தெரிவித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது.

அடுத்து ஆளுநர் உரையின் 25—வது பாராவில், அரசுப் பணியாளர்களுக்குக் கொடுக்கப்படும் குடும்ப நல நிதியை ரூ. 10,000-லிருந்து ரூ. 20,000-ஆக உயர்த்தி, 1-10-1984 லிருந்தே செயலுக்குக் கொண்டு வந்துள்ளது என்பதையும், இந்த ஆணைகளினால் ஏற்படக்கூடிய செலவு ஆண்டொன்றுக்கு ரூ.90 கோடி ஆகிறது என்பதற்காகவும், இந்த அரசை தமிழக மக்கள் குறிப்பாக அரசு ஊழியர்கள் பாராட்டாமல் இருக்க முடியாது.

(முற்பகல் 10-40)

அடுத்து மேதகு கவர்னர் அவர்கள் தன்னுடைய உரையிலே 33-வது பாராவில் 6வது பிரிவில் அடுத்த நிதியாண்டில் ஆதிதிராவிடர்கள், பழங்குடிமக்கள், நரிக்குறவர்கள் ஆகியோருக்கு ஐந்து லட்சம் வீடுகளையும் வறுமைக் கோட்டிற்குக் கீழே அவதியுறும் ஏனைய குடும்பங்களுக்கு ஐந்து லட்சம் வீடுகளையும் கட்டிக்கொடுக்கப் போகிறார்கள் என்றும் அதே போல் 3 ஆண்டுகளில் முப்பது லட்சம் மக்களுக்கு குடியிருப்புகள் கட்டிமுடித்துவிட வேண்டும் என்பதுதான் திட்டத்தின் நோக்கம் என்றும் குறிப்பிட்டுள்ளதிலிருந்தே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஏழை எளிய மக்கள் பால் எவ்வளவு அன்பு வைத்துள்ளார்கள் என்றும் வள்ளுவர் அறத்தின் வழியே நின்று பொருளை ஈட்டி இன்பத்தைத் துய்த்தால் வீடு தானாகக் கிடைக்கும் என்று வீட்டைப்பற்றிச் சொல்லாமல் விட்டுவிட்ட வீடு இந்த வீடுகள் தானே என்பதை நான் நன்றியோடு கூறவேண்டியுள்ளது. இந்தியாவிலேயே இது முன்னோடியான திட்டம். தமிழக மக்கள் எல்லாம் புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றிக் கடன் பட்டிருக்கிறார்கள். புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றி நன்றி என்று சொல்ல நாம் எல்லாம் கடமைப்பட்டிருக்கிறோம். வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லாத திட்டம். இந்தத் திட்டத்தை முதன்முதலாக அமல்படுத்திய அரசு புரட்சித் தலைவர் அரசு தான், இந்தியாவிலே வேறு எந்த அரசும் இதை அமலாக்கவில்லை என்பதைக் குறிப்பாக நாம் சொல்லமுடியும்.

அடுத்து வட ஆற்காடு, திருநெல்வேலி மாவட்டங்களை அடுத்த கட்டமாக இரண்டாகப் பிரிக்கக் கருதப்பட்டுள்ளதற்கும் மனமார்ந்த நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

கடைசியாகப்பேசிய திருவண்ணாமலைத் தொகுதி மாண்புமிகு உறுப்பினர் திரு. ரவீந்திரன் அவர்கள் தொகுதிக்கு நன்மைகள் கிடைக்குமானால் பை-எலக்ஷன் வந்தாலும் பரவாயில்லை என்று சொன்னார்கள். பை-எலக்ஷன் வர அவர் முயற்சி செய்ய வேண்டாம் என இந்த மாமன்றத்தின் மூலமாகக் கேட்டுக்

கொள்கிறேன். தொகுதி மக்களுக்கு அவர் நீண்டகாலம் தொண்டாற்ற வேண்டும் என்று நான் அவரை வாயார வாழ்த்துகிறேன். நாம் எல்லாம் அவரோடு சேர்ந்து பை எலக்ஷன் கொண்டுவர வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர் அதற்காக எந்த முயற்சியையும் செய்ய வேண்டாமென்றும் கேட்டுக் கொள்கிறேன். ராஜிநாமா செய்வதன் மூலமாகவோ அல்லது வேறு முறையிலோ அந்தத் தொகுதிக்கு பை-எலக்ஷன் கொண்டுவர வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன். தொகுதிக்கு நன்றிக் கடனுடன் சேவை செய்யவேண்டுமென்று அவரை இந்த மாமன்றத்தின் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன். அடுத்து அவர் பேசியபோது அவர் பெயரை வாழ்த்தில் போடவில்லை என்று சொன்னார். நான் போய்ப் பார்த்தேன். அதிலே என் பெயர் போடப்பட்டிருக்கிறது. எனக்கு வந்த நோட்டீசைப் பார்த்தபோது அவர் பெயரைப் போட்டு சட்டமன்ற உறுப்பினர் என்றே போடப்பட்டு இருக்கிறது. உரிய முறையில் அவர் சிறப் படைவதை யாரும் தடுக்கவும் இல்லை, தடுக்கவும் மாட்டோம் என்ற உறுதியினையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே தவறாகத் திரித்து இந்த மாமன்றத்திலே கூறவேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக ஒன்றைக் கூறி நான் முடிக்கிறேன். மலைவளம் காணச்சென்ற செங்குட்டுவனிடம் மலைவாழ் மக்கள்

''யானைவெண் கோடும் அகிலின் குப்பையும்
மான்மயிர்க் கவரியும் மதுவின் குடங்களும்
சந்தனக்குறையும் சிந்துரக் கட்டியும்
அஞ்சனத் திரளும் அணியரி தாரமும்
ஏல வல்லியும் இருங்கறி வல்லியும்
கூவை நூறும் கொழுங்கொடிக் கவலையும்
தெங்கின் பழனும் மோங் கனியும்
பைங்கொடிப் படலையும் பலவின் பழங்களும்
காயமும் கரும்பும் பூமலி கொடியும்
கொழுந்தாட் கமுகின் செழுங்குலைத் தாறும்
பெருங்குலை வாழையின் இருங்கனித் தாறும்
ஆளியி னணங்கும் அரியின் குருளையும்
வாள்வரிப் பறழும் மதகரிக் களபமும்
குரங்கின் கட்டியும் குடாவடி உளியமும்
வரையாடு வருடையும் மடமான் மறியும்
காசறைக் கருவும் மாசறு நகுலமும்
பீலி மஞ்ஞையும் நாவியின் பிள்ளையும்
கானக் கோழியும் தேன்மொழிக் கிள்ளையும்
மலைமிசை மாக்கள் தலைமிசைக் கொண்டாங்கு
ஏழ்பிறப் படியேம் வாழ்க நின் கொற்றம்.''

என்று பாடினார்களாம்.

அந்த வரிசையிலே நின்று தமிழக மக்களும் நம்முடைய முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் ஏழை எளிய மக்களுக்கு சத்துணவு அளித்தமைக்காகவும், இலவசப் பாட புத்தகப்



சீருடைகளை வழங்கியமைக்காகவும், ஏழை எளிய மக்களுக்கு 30 லட்ச வீடுகளைக் கட்டிக்கொடுக்க முயற்சிகளை எடுத்துள்ளமைக்காகவும் ''ஏழ் பிறப்படியேம், ஏழ் பிறப்படியேம்'' என்று தமிழக மக்கள் சொல்லும் வார்த்தைகளை நினைவுகூர்ந்து அமர்கிறேன். நன்றி வணக்கம்.

திரு. எஸ். வேணுகோபால்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் நம்முடைய ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின்மீது இங்கே நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். ஆளுநர் உரையிலே, எந்தவிதமான நன்மைகளையாவது இந்த அரசு செய்திருக்கிறதா என்று பார்த்தால் அதிலே ஒன்றும் புதுமையானதாக இல்லை. ஆழமானதாக அந்த உரையிலே ஏதாவது இருக்கிறதா என்றால் அப்படி ஆழமானதாகவும் எதுவும் இல்லை என்றுதான் நான் நினைக்கிறேன்.

தமிழகத்திலே மட்டுமல்லாமல், இந்த அளவிலே கல்வி முறையைப் பற்றி நாம் பேசிக்கொண்டிருக்கின்ற நேரத்திலே, இந்த ஆளுநர் உரையிலே அந்தப் புதிய கல்வி முறையைப்பற்றி ஒன்றுமே குறிப்பிடப்படவில்லையே என்பது குறித்து நான் மிகவும் வருத்தப்படுகிறேன். நேற்றையதினம், தமிழகத்தில் உள்ள நீதிபதி அவர்கள் இன்றைய கல்விமுறையைப் பற்றி மிகவும் தெளிவாக ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அது என்னவென்றால், கல்வி என்பது வாங்குகின்ற ஒரு பொருளாக ஆக்கப்பட்டுவிட்டது; டாக்டர் படிப்பிற்கு என்றால் இரண்டரை லட்சம் ரூபாய், தொழில் கல்விக்கு என்றால் ஒரு இலட்சம் ரூபாய் என்று அது வியாபாரக் கூடமாக ஆக்கப் பட்டிருக்கிறது என்று மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். கல்வி முறை வளர்கிறதா என்று பார்த்தால், புள்ளி விவரங்களை கொடுக்கின்ற அமைச்சரவர்கள் அது வளருகிறது என்று சொல் கிறார்கள். ஆனால் வளரும் பொருட்களைப் பார்த்தால் அங்கே வளர்ச்சி என்பது இருப்பதாகத் தெரியவில்லை. எந்தப் பள்ளிக் கூடத்திலேயாவது ஒழுங்கான முறையில் தனிக் கழிப்பிடம் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் வளர்ச்சியே இல்லாமல் இருக்கின்றன. கடந்த காலத்திலேயும் சரி, இப்பொழுதும் சரி, டெல்லியிலே உள்ள ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் பற்றிய புள்ளிவிவரங்களைப் பார்த்தால், பெருந் தலைவர் காமராஜ் அவர்களுக்குப் பிறகு வந்த இந்த இருபது ஆண்டுகளுக்குப் பிறகு, அவர்களுடைய நிலை தாழ்ந்துதான் வந்திருக்கிறதே தவிர, தமிழகத்திலேயிருந்து போகின்றவர்கள் மேலே வந்திருக்கின்றார்களா என்பது தெரியவில்லை. இன்னொரு குறிப்பையும் சொல்கிறார்கள். இன்னும் இரண்டு மூன்று ஆண்டுகளில் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளாக இருப்பவர்கள் தமிழகத்திலேயிருந்து சென்றவர்களாக இருக்க மாட்டார்கள், ஏனென்றால் தமிழகத்தில் உள்ள கல்வித் தரம் கீழே தாழ்ந்து விட்டது என்று நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

அடுத்து. இந்த கவர்னர் உரையிலே யார் யாருக்கோ
இறந்தவர்களுக்கெல்லாம் அனுதாபம் என்று தெரிவித்தார்கள்.
ஆனால், சென்னையிலே மிகக் கொடூரமான காட்சியாக
கடற்கரையில் நடந்த சம்பவம், துப்பாக்கிச் சூட்டில் இறந்து
விட்டவர்களுக்கு இங்கே அனுதாபத் தீர்மானம் கொண்டு வரப்
படவில்லை, ஆறுதல் கூட அவர்களுக்காகச் சொல்லப்படவில்லை.
அது மட்டுமா? இறந்த பிறகாவது அவர்களுக்கு ஆறுதல் சொன்
னார்களா என்றால் அப்படியும் சொல்லாமல் இருந்து
விட்டார்கள்.

சென்னையிலே சமீபத்திலே மிக அதிகமாகக் கண்டிராத
அளவிற்கு வெள்ளம் வந்தது. அந்த வெள்ளத்திற்காக மத்திய
அரசாங்கம் 65 கோடி ரூபாய் கொடுத்தது. ஆனால் வெள்ளத்
திலே பாதிக்கப்பட்ட ஏழை எளிய மக்களின் குடிசைகளுக்குப்
பணம் சரியாக, முறையாகக் கொடுக்கப்பட்டதா என்றால்
கொடுக்கப்படவில்லை. இடைத்தரகர்கள் இடையிலே நின்று
கொண்டு சாரியமாற்றினார்கள். அதிகாரிகளைக் கேட்டால்
அரசாங்கத்தின் சுற்றறிக்கை அல்லது ஜி. ஓ. வின்படிதான்
நடப்போம் என்று சொல்கிறார்கள். அந்த ஜி.ஓ.வின்படி என்ன
இருக்கிறது என்றால், வீடு இடிந்தவர்களுக்குத்தான் என்று
சொல்லப்படுகிறது. அப்படியாவது அவர்களுக்குக் கொடுக்கப்படு
கின்ற பணம் 600 ரூபாய், 700 ரூபாய் அல்லது ஆயிரம் ரூபாய்
என்ற அளவிலா இருக்கிறது என்று கேட்டால், அப்படியும்
இல்லை. அது விந்தையான காசாக, 15 ரூபாய் 60 காசு; 18
ரூபாய் 25 காசு; 19 ரூபாய் 55 காசு என்று கொடுக்கிறார்கள்.
இதிலே வீட்டைக் கட்ட முடியுமா என்றால் முடியாது; வீட்டைச்
சீர் செய்ய முடியுமா என்றால் முடியாது. ஆனால் இன்றைய
தினம் இருக்கின்ற நிலைமைகள் என்ன? வெள்ளத்தால்
பாதிக்கப்பட்டவர்கள் பாத்திரங்கள், பண்டங்கள், புடவைகள்,
சேலைகள் ஆகியவைகள் வெள்ளத்திலே மிதந்து போனதற்குப்
பிறகுகூட இந்த அரசு கொடுக்க மறுத்தது என்பதை நான்
சுட்டிக்காட்ட விரும்புகிறேன். ஏழைகளின் காவலன், ஏழைகளின்
தர்மத் தலைவர் என்று சொல்லப்படும் மாண்புமிகு முதல
மைச்சரின் ஆட்சியிலே ஏழைகள் பாதிக்கப்பட்டுவிடக்கூடாது.
யார் யார் பாதிக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்கெல்லாம்
உதவியை அதிகமாகத் தந்தாக வேண்டும் என்று கேட்டுக் கொள்
கிறேன்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பிறகு சென்னை மாநகரம்
எப்படிச் சீரழிந்து போயிருக்கிறது என்பதை நாம் எண்ணிப்
பார்க்க வேண்டும். ஏனென்றால், சாலைகள் சரியாக இல்லை.
சாலைகளை வேகமாகப் போட்டார்கள். அமைச்சர்கள் செல்லக்
கூடிய சாலைகளை வேகமாசப் போட்டார்கள். ஆனால் ஏழை
எளிய, சாதாரண மக்கள், வறுமைக்கோட்டிற்கும் கீழே வாழ்
கின்ற மக்கள், குடிசைகளிலே வாழ்கின்ற மக்கள், சேரிகள்,
குப்பங்கள், நகர்கள்போன்ற இப்படிப்பட்ட இடங்களிலே வாழ்



கின்ற மக்களுக்குப் பயன்படக்கூடிய சாலைகளைப் போட இந்த
அரசு மறுக்கிறது. ஏன் அவைகளைப் போடவில்லை என்பதைக்
கேட்க ஆசைப்படுகிறேன்.

என்னுடைய தொகுதியிலே பல நகர்கள் இருக்கின்றன.
ஆனால் அங்கே இருக்கின்ற பல பேர்களுக்குப் பட்டா கொடுக்கப்
படவில்லை. இன்னொரு அதிசயமான சம்பவமும் அங்கே நடக்
கிறது. கடந்த இரண்டாண்டுகளுக்கு முன்பு, 1981 ஆம் ஆண்டி
லிருந்து ஜி.கே. மூப்பனார் நகர் என்ற பெயரில் இருக்கின்ற ஒரு
நகரை எம்.எம்.டி.ஏ. எடுக்கமாட்டார்கள் என்று கூறுகிறார்கள்.
நேரடியாக கேட்ட பிறகுகூட அந்த அதிகாரிகள் எடுக்க முடி
யாது என்று சொல்கிறார்கள். என்ன காரணம் என்று கேட்டால்
சிரிக்கிறார்கள். காரணம் என்ன என்பது எனக்குத் தெரிந்தாக
வேண்டும். ஜி.கே. மூப்பனார் நகர் என்று வைத்திருக்கின்ற
காரணத்தால் அங்கே வாழ்பவர்களில் காங்கிரஸ்காரர்கள் மட்டும்
தானா இருக்கிறார்கள் என்று கேட்டால் இல்லை. அனைத்
திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினரும் எங்கள்
தோழமைக் கட்சியினரும் அங்கே வாழ்கிறார்கள். திராவிட முன்
னேற்றக் கழகத்தினர் வாழ்கிறார்கள். இப்படி எல்லாக் கட்சிக்
காரர்களும் இருக்கின்ற அந்த இடத்தில் 500 குடிசைகள் இருக்
கின்றன. 52,000 குடிசைகளை எம்.எம்.டி.ஏ. எடுக்கின்ற
நேரத்தில் இந்த 500 குடிசைகளை எடுப்பதற்கு ஏன் அரசு மறுக்
கிறது, ஏன் அதிகாரிகள் மறுக்கிறார்கள் என்று புரியவில்லை.
அதிகாரிகள் அப்படிப்பட்ட கருத்து எதையாவது அரசுக்குத் தெரி
வித்து இருக்கிறார்களா அல்லது இவர்களே அப்படி இல்லை என்று
சொல்கிறார்களா? அது பள்ளமான பகுதி என்றால, ஏழைகள்
மேட்டிலேயா வீட்டைக் கட்டிக் கொண்டிருப்பார்கள் என்பதை
எண்ணிப்பார்க்க வேண்டும்.

(முற்பகல் 10-50)

இப்படிப்பட்ட காரியங்கள் மட்டுமல்ல, கடற்கரை ஓரமாக
அண்ணா நகர் என்ற ஒரு பகுதி இருக்கிறது. குடிசை மாற்று
வாரியத்திலே கொடுத்த கூப்பனை கையிலே வைத்திருக்
கிறார்கள். படம் பிடித்து, கார்டுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.
இதுவரையில் பட்டா கொடுக்கப்படவில்லை. அடுத்து திலகர்
நகர், அம்பேத்கார் நகர், ஜோதி நகர், டி. என். அனந்தநாயகி
நகர், இப்படி பல்வேறு பகுதிகளில் உள்ள குடிசைகளுக்குப்
பட்டா வழங்காமல் இருக்கிற கொடுமைகள் இருக்கின்றன.

நகரமன்றங்களை எடுத்துக்கொண்டால் சென்னையைச்
சிங்காரச் சென்னை என்று சொல்வார்கள். இது சென்னையா
என்று எங்களுக்கு சந்தேகமாக இருக்கிறது. ஏனென்றால் சீர்
குலைந்து கிடக்கிறது. குப்பைகள் மலை, மலையாகக் குவிந்து
கிடக்கின்றன. சாக்கடை நீர், எங்கு பார்த்தாலும் ஓடிக்கொண்
டிருக்கிறது. இதுபற்றி கடந்த ஆண்டும் சொன்னோம். இந்த

ஆண்டும் சொல்கிறோம். ஆனால், இடையிலே ஏதாவது மாறுபட்டிருக்கிறதா என்றால், இல்லை. ஆனால் சொல்கிறார்கள், சிங்காரமாகச் சென்னையை வைத்துக்கொள்ள வேண்டுமென்று, மேம்பாட்டுக் குழு போட்டார்கள். நாங்களும் வரவேற்றோம், பாராட்டினோம். இன்றைக்கும் பாராட்டுகிறோம். ஆனால், சாலைகளிலே எந்த விளக்குகளும் எரிவதில்லை. நகரங்களில் மட்டும் விளக்குகள் எரிவதில்லை என்பதல்ல. குடிசைப் பகுதிகளிலும் விளக்குகள் எரிவதில்லை. என் தொகுதியிலே விளக்கு எரிவது என்பது அரிதானதாக இருக்கிறது. விளக்குகளே எரிவதில்லை. காரணம் கேட்டால் ஒரே ஒரு குற்றச்சாட்டைச் சொல்வார்கள். 'கேபில் ஃபால்ட்' என்று ஒன்றுதான் சொல்லத் தெரியும். அந்தக் காரணத்தாலே, விளக்குகள் எரிவதில்லை என்று சர்வ சாதாரணமாகச் சொல்கிறார்கள்.

தொழில் கொள்கையைப் பற்றி இந்த அறிக்கையிலே பார்த்தால் ஒன்றுமே இல்லை. 20 ஆண்டுக் காலத்திற்கு முன்னாலே தொழில் எவ்வளவு வேகமாக வளர்ந்தது? எங்களுடைய பெருந்தலைவர் காமராஜர் முதல் அமைச்சராக இருந்த காலத்திலே, தொழில் மந்திரியாக இருந்த திரு. வெங்கட்டராமன் அவர்கள் ஒரு நாளைக்கு ஒரு தொழிற்சாலையை உற்பத்தி செய்தார்கள். ஆனால் இன்றைக்குத் தொழில் கொள்கை எப்படி இருக்கிறது? விவரம் தெரிந்த அமைச்சர் இருக்கிறார், மத்திய அமைச்சரும் நல்ல உடன்பாடு கொள்ளக்கூடிய அமைச்சராக இருக்கிறார். ஆனால், மந்திரிகள் மாறுகிறார்களே தவிர, கொள்கைகள் மாறவில்லை. கொள்கை அப்படியே இருக்கிறது. இங்கே படிப்புக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறார்களே தவிர, தொழில் வளத்தைக் கற்றுக்கொள்கின்ற ஆற்றலோ, தொழிற்கூடங்களோ உருவாக்கப்படவில்லை என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

திரு. மா. சின்னராசு: ஒரு சின்ன விளக்கம் கேட்க விரும்புகிறேன். மத்திய அரசாங்கத்தில் ஆளுங்கட்சிப் பொறுப்பில் இருக்கிற கட்சியைச் சேர்ந்த உறுப்பினர் அவர்களிடம் நான் கேட்டுக்கொள்வது, தொழில்வளம் தமிழகத்தில் பெருகாமல் இருப்பதற்கு காரணம், மத்திய அரசாங்கத்தினுடைய மூலதனத்தோடு துவக்கப்படுகிற பெருந்தொழில்கள், கடந்த 15 ஆண்டுகளாக இங்கே வரவில்லை என்கிற உண்மையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்று கருதுகிறேன். மத்திய அரசாங்கத்தினுடைய பெரிய தொழில் ஒன்று வந்தால், அதைச் சுற்றி, 100 சிறிய தொழில்கள் வருவதற்கான வாய்ப்பு இருக்கிறது. அந்த நாங்கள் வற்புறுத்தி வருகிறோம், அவர்களும் வற்புறுத்துவார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

திரு. எஸ். வேணுகோபால்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் இன்றைக்கு எம்.எஃப்.எல். என்ற ஒரு தொழிற்சாலையிலே, மிக அதிகமாக, ரூ. 20 கோடிக்கு மேலே கொடுத்து, விஸ்தரிப்புச் செய்திருக்கிறார்கள். கல்பாக்கத்திலே



உலகத்திலே இருக்கிற விஞ்ஞானிகள் அத்தனை பேரும் மூக்கிலே விரல் வைப்பதைப் போல், சிந்திக்கும் ஆற்றல் படைத்த, தொழிற்சாலை உருவாக்கப்பட்டிருக்கிறது. நெய்வேலியிலே இரண்டாவது அகழ் திட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இராணிப்பேட்டையிலே பெல் தொழிற்சாலை உருவாக்கப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்கார் இவ்வளவு செய்துங்கூட இன்றைக்கு மத்திய சர்க்கார் ஒன்றும் செய்யவில்லை என்று உங்கள் பகுதியிலே இருந்து வருகின்ற அத்தனை பேரும் கேட்பது விந்தையாக இருக்கிறது. இத்தனை செய்துங்கூட உங்களுடைய கவர்னர் உரையிலே, அதற்கு நன்றி கூட தெரிவிக்காத தமிழக அரசைப் பார்க்கும்போது, நான் விந்தையான அரசு, வேடிக்கையான அரசு என்று சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மத்திய சர்க்கார் தொழிற்சாலைகளை உருவாக்கவில்லையென்றால் திட்டங்களைத் தாருங்கள். ஆந்திராவிலே இருக்கிற முதல் அமைச்சர் வெளிநாட்டுக்குச் சென்று, அங்கே இருக்கிற பெரு முதலாளிகளை கூப்பிட்டு, இங்கே உற்பத்தி செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கிறார். ஆனால் இன்றைக்கு வெளிநாட்டிலே இருக்கிற பணக்காரர்கள் யாரும் தமிழகத்திலே தொழில் செய்ய முடியாது என்று சொல்வதற்கு காரணம், இங்கிருக்கிற மின்சாரப் பற்றாக்குறை. 20 ஆண்டுக் காலத்திற்கு முன்னாலேயிருந்த மின்சாரம் அப்படியே இருக்கிறது. இன்றைக்கு உற்பத்தித் திறனை உருவாக்குகிறோம் என்று சொல்லி போடுகின்ற திட்டங்கள் 100 சதவீதம் உற்பத்தி செய்யும் என்று சொல்கிறார்கள். ஆனால் உற்பத்தியானது 10%, 15%, 25% இப்படியிருந்தால் எப்படி தொழிற்சாலைகளை உருவாக்க முடியுமென்று எண்ணிப்பாருங்கள். மத்திய சர்க்கார் மேலே குற்றங்களைச் சாட்டிக்கொண்டிருக்கிறீர்கள். இந்த அரசு ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்னாலே அல்லது திராவிட பாரம்பரியத்திலே உள்ளவர்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வருவதற்கு முன்னாலே என்ன சொன்னார்கள்? வெட்டினால் வெள்ளி, வெடித்தால் இரும்பு, தட்டினால் தங்கம் என்று சொன்ன திராவிட பரம்பரையினர் ஆட்சிக்கு வந்தீர்கள். இன்றைக்கும் வெள்ளி இருக்கிறது, தங்கம் இருக்கிறது; அத்தனையும் இருந்துங்கூட, தமிழகத்திலே தொழில் வளம் பெருகவில்லை.

எங்களுடைய பெரும் தலைவர் இருந்த காலத்தில்தான் பல்வேறு தொழிற்சாலைகள் உருவாக்கப்பட்டன; அணைக்கட்டுகள் கட்டப்பட்டன. அதைப்போன்று பல பெரும் திட்டங்கள் உருவாக்கப்பட்டன என்பதை இதயம்உள்ள யாரும் மறுக்க முடியாது. அடுத்தபடியாக சென்னை மீனவர் பிரச்சனைக்கு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உணர்ச்சி வசத்தோடு தன்னுடைய கருத்துக்களை, நிலைமைகளை வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசு எதையும் செய்யவில்லையென்று நாங்கள் சொல்லவில்லை. பீகார் மாநிலத்தில் நாலாயிரத்துச் சில்லரை கோடி ரூபாய்க்கு மத்திய அரசு முதலீடு

செய்திருக்கிறது. உத்தரப்பிரதேசத்தில் செய்யப்பட்ட முதலீடுகள் பற்றி அடிக்கடி நான் சொல்லியிருக்கிறேன். ஆனால் நம்முடைய மாநிலத்தில் பீகார் மாநிலத்தில் செய்ததைப்போன்ற முதலீடு எதுவும் செய்யப்படவில்லை. பீகார் மாநிலத்தில் நாலாயிரத்துச் சில்லரை கோடி ரூபாய்க்கு முதலீடு செய்திருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்தில் தொள்ளாயிரத்துச் சில்லறை கோடி ரூபாய்க்குத் தான் முதலீடு செய்திருக்கிறார்கள். இதுபற்றிய புள்ளிவிவரங்களை எல்லாம் பின்னால் வாய்ப்பு ஏற்படும்போது சொல்கிறேன். இப்போதும் நாம் தொழில் துறையில் மூன்றாவது இடத்தில் இருக்கிறோம். சில இனங்களில் மராட்டியம் முதல் இடத்தில், குஜராத் இரண்டாவது இடத்தில், மேற்கு வங்கம் மூன்றாவது இடத்தில், தமிழ்நாடு நான்காவது இடத்தில் இருக்கிறது. இப்படி இரண்டாவது, மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது இடத்தில் இருக்கிறோமே தவிர ஐந்துக்கு மேல் இல்லை.

தொழிற்சாலைகள் பற்றிய புள்ளிவிவரங்கள் அகில இந்தியாவில் எப்படி இருக்கிறது, தமிழ்நாட்டில் எப்படி இருக்கிறது என்பதை பின்னால் வாய்ப்பு வரும்போது எடுத்துச் சொல்கிறேன். ஆனால் தமிழ்நாட்டிற்கு மத்திய அரசு ஒட்டுமொத்தமாக ஒன்றுமே செய்யவில்லை என்று சொல்லவில்லை. வெட்ட வேண்டிய இடத்தில் வெட்டினால் வெள்ளி கிடைக்கும். தட்ட வேண்டிய இடத்தில் தட்டினால் தங்கம் கிடைக்கும். ஆகையால் இருக்கிற வாய்ப்பு வசதிகளை எல்லாம் பெறவேண்டுமென்பதுதான் எங்களுடைய நோக்கம்.

அகில இந்திய அளவிலே ஒரு தொழிற்சாலையும் இல்லாத மாவட்டத்தில் தொழில் தொடங்கினால் 25 சதவீதம் சப்சிடி தருகிறோம் என்று சொன்னார்கள். அந்த அடிப்படையில் சென்ற ஆண்டில் தேர்வு செய்யப்பட்ட 87 மாவட்டங்களில் ஒன்றுகூட தமிழ்நாட்டில் இல்லை. தமிழ்நாட்டில் ஒரு தொழிலும் இல்லாத மாவட்டம் ஒன்றுகூட இல்லை என்ற அளவில் சிறப்பாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஒரு மாவட்டம்கூட தொழில் இல்லாத மாவட்டமாக இல்லை என்று நம்மை ஒதுக்கிவிட்டார்கள். இந்த ஆண்டு 94 மாவட்டங்களை அறிவித்தார்கள். அதிலும் தமிழ்நாடு சேரவில்லை. ஆக, தமிழ்நாட்டின் முன்னேற்றத்திற்கு எங்களோடு சேர்ந்து நீங்களும் பாடுபட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம். இங்கே எல்லாம் சரியாக இருக்கிறது. அந்தக் காலத்திலே மத்திய அரசு சரியாகச் செய்தது என்று நீங்கள் சொல்லும்போது நமக்கு வருகிறதுகூட வராமல் போய்விடக் கூடாது; ஆகவே நீங்களும் சேர்ந்து கேளுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. என். எஸ். வி. சித்தன் : துணைத் தலைவரவர்களே ஆளும் கட்சி உறுப்பினர் திரு. சின்னராஜ் அவர்கள் கடந்த 10, 15 ஆண்டுகளாக தமிழ்நாட்டில் தொழில் தொடங்க மத்திய சர்க்கார் ஒத்துழைக்கவில்லை, தொழில் தொடங்கவில்லை என்று



சொன்னதற்கு திரு. வேணுகோபால் அவர்கள் விளக்கம் அளித்தார்கள். மத்திய சர்க்காரைப் பொறுத்தவரையில் தமிழ்நாடு வஞ்சிக்கப்படவில்லை, மாற்றான் தாய் மனப் பான்மையில் நடத்தப்படவில்லை. எல்லா மாநிலங்களையும் ஒன்றுபோல்தான் மத்திய சர்க்கார் நடத்துகிறது. ஆனால் நம்முடைய சர்க்காரின் அணுகுமுறை சரியாக இல்லை. ஒரு தொழில் தொடங்க வேண்டுமென்று எழுதி போட்டுவிட்டால் மட்டும் தொழில் வந்துவிடாது. தகுந்த அதிகாரிகளைப் பார்த்து, தொடர்ந்து முயற்சி செய்ய வேண்டும்; அப்படிச் செய்தால்தான் அனுமதி கொடுக்கிறோம். இதே அணுகு முறையை மத்திய சர்க்காரிடத்தில் நாம் மேற்கொள்ள வேண்டும். இந்த நடைமுறையை நாம் பின்பற்றவேண்டும். இங்கே இருந்துகொண்டு எழுதிபோட்டுவிட்டால் வந்துவிடாது. தமிழ்நாட்டிற்கு நிறைய தொழில்கள் வர வேண்டும்; தொழிற் சாலைகள் உருவாக வேண்டும்; மத்திய அரசின் உதவி தாராளமாக கிடைக்க வேண்டும். பிற மாநிலங்களை ஒப்பு நோக்கும்போது, நம்முடைய மாநிலத்திலும் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் ஈடுபாடு கொண்டு, வெளிநாடுகளில் உள்ளவர்கள், பிற மாநிலங் களில் உள்ளவர்கள் இங்கே வந்து தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு ஏற்ற ஆக்கமும் ஊக்கமும் அளிக்க வேண்டும் என்று தன்னுடைய கருத்தைத்தான் திரு. வேணுகோபால் அவர்கள் சொல்லிக்கொண்டு வருகிறார்கள்.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் சொல்லுகிறபோது அரசின் அணுகுமுறை சரியாக இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசைப் பொறுத்தவரையில் அணுகு முறை சரியாகத்தான் இருக்கிறது. ஆனால் மத்திய அரசு விதிக்கிற நிபந்தனைகள், விதிமுறைகள் தான் சரியாக இல்லை. ஆகவே அந்த நிபந்தனைகளை, விதிமுறைகளை தளர்த்தி, தகுந்த வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென்பதில் திரு. சித்தன் அவர்களைப் போன்றவர்கள் உறுதுணையாக இருக்க வேண்டும் என்பது எங்களுடைய கோரிக்கை.

*திரு. என். எஸ். வி. சித்தன் : துணைத் தலைவரவர்களே, விதிமுறைகளைப் பொறுத்தவரையில் நிபந்தனைகளைப் பொறுத்தவரையில் எல்லா மாநிலங்களுக்கும் ஒன்றுதான். தமிழ் நாட்டிற்கு என்று தனியாக ஒன்றும் இல்லை. பிற மாநிலங்களில் செய்யப்படுவதைப்போன்று நாமும் முயற்சி செய்ய வேண்டும். மத்திய சர்க்கார் தமிழ்நாட்டிற்கு என்று எந்தத் தடையையும் போடவில்லை. ஆகவே, முயற்சி செய்யுங்கள்.

திரு. எஸ். வேணுகோபால் : துணைத் தலைவரவர்களே, இன்றையதினம் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் சிறந்த கருத்தை எடுத்துச் சொன்னார்கள்; சேர்ந்து ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். நாங்கள் உண்மையிலேயே ஒத்துழைக்கிறோம். கடந்த ஐந்தாண்டுத் திட்டத்தின்

போது பாரதப் பிரதமர் மாண்புமிகு ராஜீவ் காந்தி அவர்களை பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் சேர்ந்து தமிழ்நாட்டுக்கு அதிகமான நிதியை ஒதுக்க வேண்டுமென்று வலியுறுத்திக் கூறியிருக்கிறோம். தட்டினால் தங்கம் கிடைக்கும் என்றால் தட்டுங்கள், வேண்டாம் என்று சொல்லவில்லை. தமிழ்நாடு எல்லா மாநிலங்களுக்கும் முன்னோடியாக இருக்க வேண்டும், சிறப்பாக இருக்க வேண்டும், முன்னேற்றம் அடைய வேண்டும். அதற்குவேண்டிய ஒத்துழைப்புத் தர நாங்கள் தயாராக இருக்கிறோம்.

(முற்பகல் 11-00)

*மாண்புமிகு திரு. தா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைப் பொறுத்தவரையில் நாம் போராடித் தான் பல திட்டங்களையும், தொழிற்சாலைகளையும பெற்றிருக் கிறோம். பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள், தென்னகத்தைப் பொறுத்தவரையில் தட்டினால் தங்கம், வெட்டினால் வெள்ளி, காவிரி படுகையிலே நல்ல எண்ணெய் வளம் இருக்கிறது என்றெல்லாம் சொன்னார்கள் அண்ணா அவர்கள். ஆனால் அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் 1967 ஆம் ஆண்டு இந்த நாட்டின் முதலமைச்சரான பிறகு எழுச்சி நாள் கொண்டாடித்தான் நெய்வேலி, சேலம் போன்ற தொழிற்சாலைகளைக் கொண்டு வந்தோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் நன்கு அறிவார்கள். இப்போது கூட தஞ்சையிலிருந்து தரமான எண்ணெய் சென்னைக்கு வர இருக்கின்றது என்ற நல்ல செய்தி யினை நாமெல்லாம் பத்திரிக்கையிலே படித்துக் கொண்டிருக் கிறோம். இதை அண்ணா அவர்கள் சொன்னார்கள். ஆனால் மத்திய அரசு ஏற்றுக்கொள்ளவில்லை.. காலம் கடந்து செய் கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்கு அறிவார்கள் என்பதை மட்டும் இந்த நேரத்தில் நான் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. எஸ். வேணுகோபால்: தயவு செய்து அமைச்சர் அவர்கள் கடைசியாக பதில் சொன்னால் நல்லது.

மீனவர்கள் பிரச்சினை சென்னை நகரத்திலே எப்படி முடிந்தது என்பது உங்களுக்குத் தெரியும். 1950 ஆம் ஆண்டு முதல் மீனவர்கள் அங்கே கடற்கரை ஓரமாக வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். ஆனால் திடீரென்று அரசு என்ன நினைத்ததோ? ஒரு நாட்டின் மீது மற்றொரு நாடு படை எடுத்தால் எப்படி துப்பாக்கி ஏந்திச் செல்வார்களோ அதேபோல் போலீசார் சென்றார்கள். அப்படிப்பட்ட கோரச் சம்பவத்தை தமிழகத்தில் 4-11-1985 அன்று அரசு ஆரம்பித்தது. சென்னையிலே கடற் கரைக்கு காற்று வாங்க வந்தார்களா அல்லது போலீசார் படை எடுத்தார்களா என்றே தெரியவில்லை. திடீரென்று படை எடுத்தார்கள். அதுபற்றி உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரி





களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டபோது அதாவது ஃபிஷரிஸ் செக்கரட்டரி சொல்கிறார் எனக்கு ஒன்றும் தெரியாது; அமைச்சரைக் கேளுங்கள் என்று.

அமைச்சரைக் கேட்டால் அவரும் எனக்குத் தெரியாது என்று சொல்கிறார். என்ன இது விந்தை? மீனவர்கள் சமுதாயத்திலே ஏற்படுத்துகின்ற கொடுமைகளைப் பற்றி எண்ணிப் பார்த்து அதுபற்றிப் பேசுவதற்கு அதிகாரத்தைக் கையிலே வைத்திருக் கின்ற அரசின் அமைச்சர்கள் முன் வருகிறார்களா என்றால் அந்தச் சம்பவம் குறித்து அமைச்சருக்கே தெரியாது என்று சொல்கிறார். அவரும் ஒரு அமைச்சராக மீனளத்துறை அமைச்சராக இருக்கிறார் இங்கே என்று சொல்லிக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து என்ன நடந்தது என்றால் அங்கே இருக்கின்ற கட்டுமரங்களை எல்லாம் இரவோடு இரவாக எடுக்கின்ற வகையிலே அதிகாரிகளை எல்லாம் கூப்பிட்டு நடவடிக்கை எடுத்தார்கள். ஏன் அப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும்? இந்த நாட்டிலே ஏதாவது கலவரம் வருகிறதா? அல்லது இந்த நாட்டை மாற்றான் பிடித்துக்கொள்ளப்போகிறானா? இப்படி பேசித் தீர்க்க வேண்டிய பிரச்சினையை துப்பாக்கி முனையிலே கொண்டுபோய்விட்டார்கள். சென்னையிலே குப்பை எடுப்பதற்கு லாரிகள் இல்லாத நிலைமையில் இதற்காக மட்டும் சென்னை கடற்கரைக்கு 500, 600 லாரிகளைக் கொண்டு வந்து கட்டுமரங் களை எடுத்தார்கள். மீனவர்கள் என்றால் இந்த நாட்டின் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்பவர்கள் மீனவர்கள் என்று சொல்கிற நிலைமையிலே அவர்கள் மிகச் சாதாரணமானவர்கள். அப்படிப்பட்டவர்களின் கட்டுமரங்களை எல்லாம் உடைத்து நொறுக்கி தூள், தூளாக ஆக்கினார்கள். வெறும் நாட்டுப் படகுகளை அடித்து நொறுக்கி பீஸ், பீஸாக ஆக்கி, பலகை, பலகைகளாக ஆக்கினார்கள்.

இதை எல்லாம் எதிர்க்க லாயக்கற்றவர்கள், வக்கற்றவர்கள், வசதியற்றவர்கள், அரசினிடத்திலே செல்வாக்கு இல்லாத காரணத்தால் சட்டமன்ற உறுப்பினர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் அவர்கள் சார்பில் அதிகம் இல்லாத காரணத் தால், அரசை அச்சுறுத்துவதற்குரிய அதிகாரம் இல்லாத காரணத்தால் வாயடைத்து ஒரு மாத காலம் இருந்தார்கள், இடையிலே உண்ணாவிரதம் இருந்தபோது—அதாவது வெள்ளையனை வெளியேற்றுவதற்காக உண்ணாவிரதம் இருந்த காந்தியார் அவர்கள் முன்னாலே உண்ணாவிரதம் இருந்தார்கள்—உண்ணாவிரதம் இருந்த அந்தத் தாய் கொட்டும் மழையிலே இறந்துவிட்டார்கள். அந்தத் தாய் அன்னம்மாள் என்ற தாய். பெயரோ அன்னம்மாள் ஆனால் அன்றைக்கு அன்னம் இல்லாமல் இறந்து விட்டார்கள்.

அடுத்து தீயிட்டு கொளுத்திக் கொண்டார் கோதண்டபாணி
ஆனால் அரசு செவி சாய்க்கவில்லை. பேச்சுவார்த்தைக்கு
அழைத்தார்கள். அதிலே ஒரு கொடுமை என்ன என்பதைப்
பார்த்தால் தெரியும். இந்தச் சமுதாயத்திலே இரண்டு சட்ட
மன்ற உறுப்பினர்கள் இருக்கிறோம். இந்த அரசு சமுதாயப்
பிரச்சினை என்று சொல்லி, பேசலாம் என்று அழைக்கிறார்கள்.
யாரை அழைக்கிறார்கள்? பொன்னுரங்கத்தையும், வேணு
கோபாலையும் அழைக்கக்கூடாது: அப்படி அழைத்தால் அது
அரசியல் ரீதியாகப் போய்விடும் என்று எண்ணி அனைத்திந்திய
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கின்ற அரசியல்
வாதிகளை மட்டும் அழைத்துப் பேசலாம் என்று சொன்னார்கள்.
அப்படிபேசி முடிந்தபிறகு பிரச்சினை தீர்ந்ததா என்றால்பிரச்சினை
தீரவில்லை. ஒரு மாதத்திற்குப் பின்னால் எப்படி குடிசைகளை
இடிக்கலாம் என்று எண்ணிப்பார்த்து. குடிசை மாற்று வாரியப்
பிரச்சினையை உருவாக்கி, அதன் மூலம் துப்பாக்கிப்
பிரயோகத்தை உருவாக்கி அதன்மூலம் சாகடிக்கப்பட்டவர்கள்
5 பேர்கள். மிகக் கொடுமையான சமபவம் இது.

சென்னைக்கு புதிதாக வந்திருந்த போலீஸ் அதிகாரி
அவருடைய திறமையாலே வந்திருக்கிறார் என்ற வகையில்
ஆரம்ப விழாவாக இதை ஆரம்பித்து வைத்திருக்கிறார்கள்.
அந்த விழாதான் அன்றைக்குப் போலீசார் கையிலே வைத்திருந்த
துப்பாக்கியின் குண்டுகள் 5 பேர்களைச் சாகடித்ததற்கு காரண
மாக அமைந்தது மட்டுமல்ல; ஏழை மக்கள் சாதாரண மக்கள்
கையொடிந்து, காலொடிந்து போனார்கள்.

இன்னொரு கொடுமை. இந்த நாட்டிலே துப்பாக்கிப் பிர
யோகம் நடைபெறுகின்றது என்றால் மீனவர்களுக்கு எதிராக
சண்டை நடக்கின்றது என்பது ஒரு புறம். இன்னொரு பகத்திலே
மீனவர்களின் குடிசைகளை எல்லாம் தீயிட்டுக் கொளுத்தினார்கள்
போலீசார் என்று சொன்னால் இது நாடா அல்லது காடா
என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். மேலும் அங்கே
மீனவ சமுநாயத்தைக் சேர்ந்த பெண்கள் எல்லாம் மானபங்கப்
படுத்த பட்டிருக்கிறார்கள். இருக்கின்ற டி.வி.களை வெளியே
கொண்டு வந்து அடித்து நொறுக்கியிருக்கிறார்கள். அங்கே
இருக்கிற பொருள்கள் எல்லாம் வெளியிலே கொண்டு வரப்பட்டு
அழிக்கப்பட்டிருக்கின்றன. போலீஸ்காரர்கள் பெண்களுடைய
சேலைகளை உரிந்து, கையிலே துப்பாக்கி ஏந்தி அடித்திருக்கிறார்
கள். ஆக இப்படிப்பட்ட கொடுமைகளுக்குப் பின்னாலே இந்த
அரசு எடுத்திருக்கிற நடவடிக்கைகள் என்ன? மறுபடியும் உச்ச
நீதிமன்றத்திற்கு போய் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருக்
கிறது. அந்த தீர்ப்புக்கு பின்னாலே கூட பெரியமான பங்கமான
பெரிய அவமரியாதைக்குரிய செயலாகத்தான் இன்னும் நடந்துக்
கொண்டிருக்கிறது. எத்தனை நாளைக்கு இதை தாங்க முடியும்,
இதை ஒரு முடிவிற்கு கொண்டு வந்து தீர்த்தாக வேண்டும்
என்று மீனவர்கள் கூறிக் கொண்டிருக்கிறார்கள்.



இந்த அரசுக்கு நான் சொல்வேன்; இங்கே இருக்கிற
அதிகாரிகளுக்கு நான் சொல்வேன், எங்களுடைய மீனவ
சமுதாயம் இன்னும் பழைய நிலைமையில் 1650-வது ஆண்டு
காலத்தில்தான் வாழ்ந்துக் கொண்டிருக்கிறது. கரை
எங்கே இருக்கிறதோ அங்கே மீனவர்கள் இருப்பார்கள்
எப்பொழுது மீன் வருகிறது என்று அவர்களுக்குத் தான்தெரியும்
மீன் பிடித்து பழக்கப்பட்டவர்கள் என்று சொல்வார்கள். அது
உண்மைதான்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மீனவ
சமுதாயத்தை என்னிடத்திலேயிருந்து யாராலும் பிரிக்க முடியாது
என்று சொன்னார்கள். உண்மையிலேயே பிரிக்க முடியாதுதான்.
மீனவசமுதாயம் அத்தனையும் இந்த முதலமைச்சரை தங்களுடைய
இதயங்களிலே வைத்திருக்கிறார்கள். நாங்கள் இல்லை என்று
சொல்லவிலலை, அதே மீனவர்கள் தான் இன்றைக்கு அடிக்கப்
பட்டிருக்கிறார்கள். பிரிக்க முடியாதவர்கள் என்று சொன்னவர்
களையும் கூட அடித்திருக்கிறார்கள். இந்தச் சம்பவம் கூட
சரித்திரத்திலேயிருந்து பிரிக்க முடியாது. இந்தச் சம்பவம் மீனவ
சமுதாயத்தை அழிக்க வேண்டும் என்றே நடந்த சம்பவம். இந்த
அரசு வந்த காலத்திலேயிருந்து மீனவ சமுதாயத்திற்கு ஒன்றுமே
செய்தது இல்லை. ஆனால் மீனவ சமுதாயத்தில் இருக்கிற
அத்தனை பேரும் இன்றைக்கு இருக்கிற முதலமைச்சர் அவர்
களின் பின்னாலே தான் நின்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆனால்
இந்த அரசு வந்த காலத்திலேயிருந்து படகுகளுக்கும் கட்டுமரங்
களுக்கும் சண்டையை உண்டாக்கினார்கள். மீனவர்களுக்கு
பொருளாதார ரீதியிலே படகு கொடுப்பதையே நிறுத்தி
விட்டார்கள். ஏன் கட்டுமரங்களை வத்திருப்பவர்கள் படகு
களை வைத்திருப்பவர்கள், கோவணாண்டிகளாக இருக்கவேண்டும்.
ஏன் தெரியுமா, அவர்கள் புரட்சித் தலைவர் அவர்களின்
பின்னாலே நின்றுக்கொண்டிருக்கிறார்கள் என்ற காரணத்தினாலே
ஆகவே இந்தக் கொடுமையான சம்ப ம் நடைபெற்றிருப்பதற்கு
ஒரு நீதி விசாரணை வைத்தாக வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

எவ்வளவோ கொடுமைகள். ஒரு சிறுவனை இரண்டு காலும்
உடைந்து போகும் அளவிற்கு ஜீப்பை சுற்றி சுற்றி ஓட்டியிருக்
கிறார்கள். அப்படிப்பட்ட பாதகங்கள் எல்லாம் நடைபெற்றிருக்
கிறது. ஆகவே இறந்தவர்களுக்கு மட்டும் அல்ல அடிப்பட்டவர்
களுக்கும் பணம் கொடுத்தாக வேண்டும். இறந்தவர்களின்
குடும்பங்களுக்கும் பணம் கொடுத்தாக வேண்டும் நஷ்டஈடு
கொடுத்தாக வேண்டும். கடலுக்கு வேலைக்குச் செல்லாத
காலத்திலே அவர்களுக்கு நஷ்டஈடு கொடுத்தாக வேண்டும்
என்பதை இந்த மாமன்றத்தின் மூலமாக சொல்லிக் கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன். மறுபடியும் இப்படிப்பட்ட ஒரு சம்பவம்
அரசின் சார்பாக நடத்தப்படுமானால் இந்தப் பேரவைக்கு
சொல்லிக் கொள்வேன், ஒரு மீனவன் உயிரோடு இருக்கும் வரை
யில் அந்தக் கடற்கரையை நாங்கள் விட்டுவிடமாட்டோம் என்று
வரையறுத்துச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. எஸ். வேணுகோபால்] [1986 சனவரி 20

ஆகவே பேரவைத் தலைவர் அவர்களின் மூலமாக, அமைச்சர் பெருமக்களையும், இந்த அரசையும் கேட்டுக் கொள்வேன், மீனவர் களை வாழ விடுங்கள் என்று

இன்றைக்கு நகராட்சி மன்றத்திலே இருக்கிற பிரச்னைகளைப் பார்த்தால் கொஞ்ச நஞ்சமல்ல. தேர்தல்கள் நடத்தப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. பாராட்டுகிறோம். வரவேற்கிறோம். ஆனால் பின்னாலே செய்தி வருகிறது. யாரோ ஒரு தனிப்பட்ட நண்பர் தன்னுடைய சுற்றறிக்கையை அரசாங்க முத்திரையிட்ட கவரினாலே எல்லாப் பத்திரிகைகளுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது என்று. என்ன விந்தை எப்படி அரசாங்க முத்திரையிடப்பட்ட கவரிலே அவருடைய தனிப்பட்ட அறிக்கை சொருகப்பட்டு போகப்பட்டது என்று தெரியவில்லை? இந்தப் பஞ்சாயத்து எலக்ஷன், ஊராட்சி ஒன்றிய தேர்தல்கள் நடக்கும் என்று. மக்கள் பேசுகிறார்களா என்று சொன்னால் இல்லை. அரசே அதை நடத்த விரும்பவில்லை என்று நினைக்கிறார்கள். ஏனென்று சொன்னால் அரசு கவர்களிலே அந்த அறிக்கை போயிருக்கிறது. இதற்கு பின்னாலே யார் இருக்கிறார்கள்? ஏன் நிறுத்த விரும்பு கிறார்கள் என்பதை என்னாலே புரிந்துக் கொள்ள முடியவில்லை.

அடுத்தாற்போல இதற்கு ஏதாவது நடவடிக்கை எடுத்திருப் பார்கள் என்று எண்ணுகிறேன். எடுக்கவில்லையோ என்னவோ தெரியாது. ஆனால் அவர்களுடைய நடவடிக்கை எங்கே வருகிறது தலைமைச் செயலகத்திலே செயல்படுகிற பணியாளர்களில் சிலரை, — ஆசிரியர்களுக்காக தங்களுடைய அனுதாபத்தைக் காட்டுகின்ற வகையில் வேலை நிறுத்தம் செய்தார்களே, அவர் களில் சிலரின் மீது — நடவடிக்கை எடுத்தார்களே தவிர இப்படிப் பட்ட செயலை செய்கிற, அரசாங்க முத்திரையிடப்பட்ட கவரிலே தனிப்பட்டவரின் அறிக்கை போகிறதே அதற்கு நடவடிக்கை எடுத் தார்களா என்று தெரியவில்லை. நடவடிக்கை எடுத்தாக வேண்டும் என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். பெருந்தலைவர் காமராசர் சிலை விளக்கு இல்லாமல் இருக்கிறது. பெருந்தலைவ வரின் சமாதியும் விளக்கு இல்லாமல் இருக்கிறது. பெருந் தலை காமராசருக்கு பின்னாலே வந்த அறிஞர் அண்ணா அவர்களின் சமாதிக்கு அலங்கார விளக்குகள் போடப்பட்டிருக்கின்றன. நான் வேண்டாம் என்று சொல்லவில்லை மறுக்கவில்லை. அவர் பெரிய வர் தான், பேரறிஞர் தான். ஆனால் அது போல எங்களுடைய பெருந் தலைவர் காமராசரின் சிலைக்கும் சமாதிக்கும் கூட அலங் கார விளக்குகளை எரியச் செய்ய வேண்டும் என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

இப்படிப்பட்ட பணிகளைச் செய்ய வேண்டிய நகராட்சி மன்றம் வேலை செய்யாமல் இருக்கிறது. நகராட்சிகளிலே இருக் கிற அதிகாரிகள் 3 மாதத்திற்கு ஒரு முறை 4 மாதத்திற்கு ஒரு



1986 சனவரி 20] [திரு. எஸ். வேணுகோபால்]

முறை மாற்றப்படுகிறார்கள், ஆகவே அதிகாரிஎப்போதுமாறுவார் என்று பணியாளர்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்களே தவிர ஒரு வேலையும் செய்வதில்லை. என்னுடைய தொகுதியிலே நீர் தொட்டியிலே தண்ணீரே இல்லாமல் இருக்கிறது. மக்கள் கஷ்டப்படுக் கொண்டிருக்கிறார்கள். சென்னையில் தண்ணீர் இல்லையென்று சொல்கிறோம். தண்ணீருக்கு திட்டம் போடு கிறோம். 98 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறது என்று சொல் கிறோம். ஆனால் தண்ணீர் வருமா என்றால் தெரியாது. கிருஷ்ணா நதி நீர்த்திட்டம் நின்று இருக்கிறதா, வருகிறதா என்று தெரியவில்லை. பல கோடி ரூபாயில் கிருஷ்ணா நதி நீர்த் திட்டத்தைப் போட்டிருக்கிறார்கள். அதற்கு முன்னாலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் ஒரு திட்டத்தை உரு வாக்கினார்கள். அந்தத் திட்டமும் நின்று விட்டது. என்னுடைய தொகுதியிலே ஒரு நீர்த் தொட்டி ஒன்று கட்ட ஆரம்பித்தார்கள். அதற்கு கான்ட்ராக்ட் விட்டும் அந்த வேலை நடக்கவில்லை. இப்படிப்பட்ட நிலைமைகள் இருந்தால் தொகுதி மக்கள் எப்படி வாழ்வார்கள்? நாங்கள் தோழமைக்கட்சி என்ற பெயராலே மிகுந்த அவஸ்தைப்படுகிறோம். எங்களுக்கு இரண்டு பக்கமும் அடியாக இருக்கிறது. ஆளும் கட்சியை விமர்சனம் செய்ய முடிய வில்லை எதிர்கட்சி முகாமிலும் நிற்க முடியவில்லை. நாம் இரண்டு பேரும் சேர்ந்து தான் ஓட்டு வாங்கினோம். அங்கே சாக்கடை நீர் ஓடவில்லை பார்த்தாயா என்கிறார் ஒருவர். விளக்கு எரிய வில்லை பார்த்தாயா என்கிறார் இன்னொருவர். ஆகவே தோழமைக் கட்சி என்ற பெயராலே மிகுந்த துன்பத்திற்கு நாங்கள் ஆளாக்கப் பட்டிருக்கிறோம். ஆகவே அரசு அதிகாரிகள், மந்திரிகள் எங்களுக்கு உதவி செய்யவேண்டும். உங்களுடைய நல்வாழ்விற்கும் எங்களுடைய நல்வாழ்விற்கும் சேர்த்து இந்தச் சென்னை மாநகரத்தை சிங்காரமாக்குங்கள், ஆங்காங்கே விளக்குகளை எரியச் செய்யுங்கள். சாக்கடை நீர்த்தேக்கங்களை அகற்றுங்கள். எங்களுடைய பிரதமர் அவர்கள் சாக்கடை நீர்த்திட்டத்திற்காக தனியாக பணம் தருகிறேன் என்று சொன்னார்கள். அதையும் பயன்படுத்தி திட்டங்கள் வரவில்லை. கவர்னர் உரையில் அது குறித்து ஒன்றுமில்லை. ஆகவே அப்படிப்பட்ட நிலைமைகள் வளருமானால் அதை எடுத்துச் சொல்கிற உரிமை எங்களுக்கு இருக்கிறது. ஆகவே இந்த அரசு நல்ல பல திட்டங்களை உருவாக்கவேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன்.

(முற்பகல் 11.10)

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு இந்திரா காங்கிரஸ் சட்டமன்ற உறுப் பினர் அவர்கள் பேசுகின்றபோது அவர்களுடைய பேச்சிலே அரசாங்கத்தினுடைய முத்திரை ஒரு தனி நபரால் தவறாக பயன்படுத்தப்பட்டிருக்கிறது. அரசாங்கம் அதுகுறித்து நட வடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த சபையிலே குறிப்பிட் டிருக்கிறார்கள். அவர்கள் சொல்லியபடி அரசாங்க முத்திரை யை தனி நபர் பயன்படுத்தினால் அது சட்டப்படி மிகப்பெரிய குற்றம் என்பதைத் தாங்கள் அறிவீர்கள். ஆகவே, அவையில் இருக்கிற உறுப்பினர்கள் இதுபற்றி தெரிந்துகொள்ள விரும்பு

கிறோம். அந்த அரசாங்க முத்திரையை தவறாக பயன்படுத்திய தனி நபர் யார்? அவர் ஆளும்கட்சியைச் சார்ந்தவரா? ஆதரவாளரா? அல்லது மற்றக்கட்சியைச் சார்ந்தவரா? எந்தப் பிரச்னை சம்பந்தமாக தவறாகப் பயன்படுத்தினார்கள்? அது குறித்து அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு ஏற்கெனவே வந்திருக்கிறதா? அந்த விவரங்களை எல்லாம் இந்தச் சபையில் வைத்தால்தான் முறையாக இருக்கும். ஒரு குற்றச்சாட்டை உறுப்பினர் சொல்லிவிட்டார். அரசாங்க முத்திரை பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்று குற்றசாட்டு சொல்லியதற்கு பிறகு சட்டப்படி அந்த மிகப்பெரிய குற்றத்தை செய்திருக்கிற நபர் தண்டிக்கப்பட வேண்டும். ஆகவே, அவர் யார்? எப்படி பயன்படுத்தப்பட்டது? எந்த விஷயமாக பயன்படுத்தப்பட்டது என்பதை உறுப்பினர் சபைக்குத் தெரிவிக்க வேண்டுமென்று நீங்கள் கேட்க வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேணுகோபால் அவர்கள் பேசுகிறபோது இதுபற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுபற்றிய தகவல் எங்களுக்கு இல்லை. அவரிடம் ஆதாரம் இருப்பதாக சொல்கிறார்கள். அதுபற்றி அவர்கள் எங்களுக்குத் தரட்டும். அவர்கள் சொல்வதை வைத்துக் கொண்டு நானும் விசாரிக்கிறேன். அரசாங்கத்தின் முத்திரை என்பது சட்டமன்ற பேரவை, மேலவை உறுப்பினர்களின் லெட்டர் பேடுகளில் கூட இருக்கிறது. அப்படிப்பட்ட வகையில் பயன்படுத்தப்பட்டதா? அல்லது அரசாங்க முத்திரை என்றால் எப்படி வந்தது என்பதை விசாரித்து தான் எடுத்துச் சொல்ல இயலும். ஆகவே, அரசு அதுபற்றி விசாரிக்கும், உறுப்பினர் அவர்கள் தங்களிடம் ஆதாரம் இருந்தால் கொடுக்கலாம். ஆகவே எப்படி, எந்த நிலையில் பயன்படுத்தப்பட்டது என்று கேட்ட உடனே பதில் சொல்ல இயலாது. என்னுடைய பதிலுரையில் தான் அதனுடைய முழு விவரத்தையும் எடுத்துத் தெரிவிக்கலாம்.

திரு. அ. ரகுமான்கான்: துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லி விட்டார்கள் என்பதால் பிரச்னை முடிந்துவிட்டது என்பதில்லை. இது சபை சம்பந்தப்பட்ட விஷயம். தனியாக எதுவும் இல்லை. உறுப்பினரை இதுபற்றி தாங்கள் கேட்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கமாக எடுத்துச் சொல்லி விட்டார்கள். உட்காருங்கள்.

*திரு. என்.எஸ்.வி. சித்தன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சி உறுப்பினர் திரு. வேணுகோபால் அவர்கள் அரசாங்கத்தின் சார்பிலேயிருந்து செய்திப் பத்திரிகைகளுக்குப் போகிற செய்திகளோடு தனியார் கொடுக்கிற அறிக்கைகளும் அதோடு இணைந்து அரசாங்க கவர்களில்



இருந்தது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அரசாங்க முத்திரையை பயன்படுத்தினார்கள் என்று அவர்கள் சொல்லவில்லை. பத்திரிகைக்கு வந்திருப்பதை அவர்கள் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருந்தால் எப்படி? உறுப்பினர் சொல்லிவிட்டார். அதற்கு அமைச்சர் அவர்களும் பதில் சொல்லி விட்டார்கள். (குறுக்கீடு.)

திரு. அ. ரகுமான்கான்: நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். என்னை ஏன் தடுக்கிறீர்கள்? (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உறுப்பினர் திரு. வேணுகோபால ஏதோ சொல்ல விரும்புகிறார். கொஞ்சம் அவரைப் பேசவிடுங்கள்.

திரு. எஸ். வேணுகோபால்: துணைத்தலைவர் அவர்களே, நான் சொன்னதை மறுபடியும் சொல்கிறேன். இங்கே அதை எழுதியும் இருக்கிறார்கள். அரசு முத்திரையிட்ட கவர்களிலே அந்த அறிக்கை போனது எப்படி? என்றுதான் சொன்னேனே தவிர, முத்திரையிட்ட தாளிலே போனதாகச் சொல்லவில்லை, (குறுக்கீடு.)

திரு. செ. ஆறுமுகம்: அரசு முத்திரையிட்ட கவரில் அந்த அறிக்கை எப்படி போனது என்றுதான் கேட்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வேணுகோபால் அவர்கள் ஒரு செய்தியை, குற்றத்தைச் சாட்டியிருக்கிறார்கள். அந்தக் குற்றச்சாட்டின் மீது அரசு ஆராய்ந்து அறிந்து, அது உண்மைதானா, உண்மைதான் என்றால் அதற்கான காரணம் என்ன? என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும், அரசு என்ன நடவடிக்கை எடுக்கும் என்ற விவரங்களை எல்லாம் இந்த அவைக்கு அரசு அளிக்கும் (குறுக்கீடு.) இப்போது இதைப்பற்றி விவாதிக்க முடியாது.

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, உங்களுக்கே தெரியும். சபையிலே, அரசாங்க முத்திரை பயன்படுத்தப்பட்டு இருக்கிறது ஒரு தனி நபரால் என்று சொல்லியதற்குப் பிறகு, நான் கேட்க விரும்புகிறேன், அந்த தனி நபர் யார்? அவர் பெயரை ஏன் சொல்லக்கூடாது? இது என்ன காதல் விவகாரமா? தனி அறையில் பேசுவதற்கு; சபையில் சொல்லிவிட்ட பிறகு, இதன் மீது அரசு என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்போகிறது என்பதைத் தெரிவிக்க வேண்டும். (குறுக்கீடு.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதைப் பற்றி உரிய விசாரணை நடத்தி, அவைக்கு அறிவிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மேற்கொண்டு இதைப் பற்றிய பிரச்சனை வேண்டாம். (குறுக்கீடு.) திரு. இராமலிங்கம் அவர்கள்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1986 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட ஆளுநர் உரையின் மீது நன்றி தெரிவிக்கின்ற தீர்மானத்தின் மீது என்னுடைய கருத்துக்களை இந்த மன்றத்திலே சொல்ல விழைகிறேன். (குறுக்கீடு.)

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிப்பது என்பது சம்பிரதாய மாக இருந்தாலும், 38 ஆண்டுக்கால சுதந்திர இந்திய வரலாற்றில், கோரிக்கைகளை எழுப்புவதற்கு வழியில்லாமல், கோரிக் கைகளைச் சொல்வதற்கு வாய்ப்பு இல்லாமல் .... (குறுக்கீடு.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு உறுப் பினர் வேணுகோபால்அவர்கள் சொன்ன அந்தக் குற்றச்சாட்டின் மீது, அரசு ஆராய்ந்து அறிந்து உரிய நடவடிக்கை எடுக்கும் என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்லி யிருக்கிறார்கள். இப்படித்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமைச்சர் அவர்களை கட்டாயப்படுத்த முடியாது.... (குறுக்கீடு). விவரம் கேட்டு இருக்கிறார்கள். அவர் விவரம் கொடுத்தால் அதன் மீது நடவடிக்கை எடிக்கப்படும்.

(முற்பகல் 11-20)

திரு. அ. ரகுமான்கான்: எனக்கு அது தான் வேண்டும்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை மீது நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது என்னுடைய கருத்துக்களை வைக்க விழைகிறேன். ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் என்று இந்த தீர்மானம் கொண்டுவரப்பட்டு இருந் தாலும் உண்மையிலேயே 38 ஆண்டுக்கால சுதந்திர இந்திய வரலாற்றில் கோரிக்கை வைப்பதற்கு வழி இல்லாமலோ, கோரிக்கை வைத்து போராடுவதற்கு அவர்களுக்கு தெரியாத காரணத்தாலோ அல்லது கோரிக்கைகளை சொல்வதற்கு அவர் களுக்கு வாய்ப்பு இல்லாமலோ ஏழைகளாக பஞ்சைகளாக நாட் டில் வறுமைக்கோட்டிற்கு கீழே வாழ்கின்ற மக்களுக்கு எவ்வளவு தான் இந்த நாட்டிற்காக அவர்கள் உழைத்தாலும் அவர்கள் குடியிருப்பதற்கு தேவையான வீடுகள் இல்லாத நிலையில் லட்சக்கணக்கான ஏழைகள் தமிழகத்தில் இந்திய துணைக்கண் டத்தில் வாழ்கிறார்கள். ஆனால், அவர்களைப்பற்றி பேசுவதற்கு அதைப்பற்றி எண்ணுவதற்கு இந்த 38 ஆண்டு கால இந்திய சுதந்திர வரலாற்றில் எந்த அரசியல் தலைவருக்கும், எந்த



முதலமைச்சருக்கும் எண்ணம் இல்லாத இந்த நிலையில் தமிழ் நாட்டு முதலமைச்சர் அவர்களுக்கு ஏழைகளின் தோழனாக இருக்கின்ற ஏழை மக்களின் இதயத்தில் குடியிருக்கின்ற தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் தான் இன்றைக்கு ஆண்டுக்கு 10 லட்சம் வீடுகள் என்ற அளவில் நலிந்த பிரிவினருக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு கட்டித் தரப்படும் என்றும், 3 ஆண்டுகளில் 30 லட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்படும் என்றும் அதற்கு எவ்வளவு கோடி ரூபாய் செலவா னாலும் அதைப்பற்றி கவலை இல்லை என்றும் சொல்லியிருக் கிறார்கள். ஏழை மக்கள் குடியிருப்பதற்கு வீடுகள் இல்லாமல் இருக்கிறார்கள் என்றும், அப்படியே வீடுகள் இருந்தாலும் காளான் குடியிருக்கின்ற குடிசைகளில் வாழ்கிறார்கள். அவர்களும் இந்த நாட்டில் பிறந்த சுதந்திர மனிதர்கள் தான். ஜனநாயக முறைப்படி மற்ற மக்களுக்கு என்ன உரிமைகள் வசதிகள் கொடுக் கப்பட்டு இருக்கிறதோ அந்த அளவு வசதியுடன் இந்த ஏழை எளிய மக்கள் வாழ வேண்டும் என்ற முறையில் இந்த திட்டங் களை ஏழை எளிய மக்கள் பக்கம் நோக்கி திருப்பி விட்டு இருக் கிறார்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள். இதை ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் என்பதைவிட நாட்டில் வாழ்கின்ற ஏழை எளிய மக்கள் தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் என்று வைத்துக் கொள்ளலாம்.

இந்த ஆளுநர் உரையை அறிவித்த நேரத்தில் பல பேர் இதைப்பற்றி கேலியும் கிண்டலும் பேசினார்கள். ஏற்கனவே அறிவிக்கப்பட்ட திட்டங்கள் தானே என்று சிலபேர் இன்னும் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். ஆண்டுக்கு 10 லட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு விடுமா என்றும், 3 ஆண்டுகளில் 30 லட்சம் வீடுகள் கட்ட முடியுமா என்றும் கேள்விகளை வைத்து இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் நான் ஒன்றை சொல்லிக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன். இந்த நாட்டில் ஆட்சிப் பொறுப்புக்கு 1977 ஆம் ஆண்டு மக்கள் தலைவராக மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இன்று வரை அவர்கள் கொண்டு வந்த ஒவ்வொரு திட்டத்தையும்பற்றி கேலியும் கிண்டலுமாக பேசியிருக்கிறார்கள்.

சத்துணவுத் திட்டம் கொண்டு வந்த நேரத்தில் பல பேர் கேள்விக் கணைகளை எழுப்பினார்கள் இது முடியுமா என்று தமிழ்நாட்டில் உள்ள பல்லாயிரக்கணக்கான குழந்தைகளுக்கு சோறு போட்டு விட முடியுமா என்று கேட்டார்கள். அது முழுமையாக நிறைவேற்றப்பட்ட பிறகு நிரந்தரமாக இந்த நாட்டில் வாழ்கின்ற அத்தனை குழந்தைகளுக்கும் தொடர்ந்து உணவு அளிக்கப்படுமா என்று அவர்கள் கேட்டார்கள். அது தொடர்ந்து செயல்பட்டதற்குப் பின்னால் தமிழக முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு 8-வது வரை படிக்கின்ற மாணவர்களுக்கு இலவச பாட புத்தகம் வழங்கி வருகிறார்கள். அதற்கு பிறகு 94 லட்சம் இளம் மாணவர்களுக்கு இலவச சீருடை வழங்கிக் கொண்டு இருக்கிறார்கள். எப்படி சத்துணவுத் திட்டம் கொண்டு

வந்த நேரத்திலும் மற்றும் பல திட்டங்கள் கொண்டு வந்த நேரத்திலும் இவைகளை எல்லாம் செயல்படுத்த முடியுமா என்று மற்றவர்கள் கேட்ட நேரத்திலும், பொருளாதார நிபுணர்கள் முடியாது என்று சொன்ன நேரத்திலும் இது முடியும் நாட்டு மக்களுக்கு வருங்கால தமிழக மக்களுக்கு செய்கிற திட்டங்கள். நான் நிறைவேற்றியே தீருவேன் என்று ஆணித்தரமான எண்ணத்தைக் கொண்டு சிறப்பாக தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்தத் திட்டங்களை எல்லாம் நடைமுறையில் செயல்படுத்த முடியும் என்று சொல்லி அவைகளை செயல்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, இவைகளை எல்லாம் நிச்சயம் நிறைவேற்றியே தீருவார்கள் என்பதை மற்ற மன்ற உறுப்பினர்களுக்கு, கேள்விகளை எழுப்பிய உறுப்பினர்களுக்கு நான் பதிலாக சொல்லிக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

ஆனால் அதேநேரத்தில், குடும்ப நலத் திட்டத்தைப் பொறுத்தவரை, நம்முடைய தமிழக அரசு மிக அழகாக, மிக நேர்மையாக, இந்தியத் துணைக் கண்டத்திலேயே தலைசிறந்த மாநிலமாக செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் எல்லாம் இதைப் பாராட்டுகிறார்கள். ஆனால், பாராட்டி என்ன பயன்? தனி நபர் வருமானத்தின் அடிப்படையிலேதான் மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கப்படுகிறது.

குடும்ப நலத் திட்டத்தில் அதிக அக்கறையைக் காட்டி, கடந்த 4,5 ஆண்டுக்காலமாக மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களும், தமிழக அரசும், தீவிர முயற்சி எடுத்து, குடும்ப நலத் திட்டத்தை தீவிரப்படுத்திக் கொண்டிருந்ததனால், தமிழ்நாட்டின் மக்கள் தொகை குறைந்து கொண்டிருக்கிறது. அது குறைவதனால் என்ன ஏற்படுகிறது என்றால், தனி நபர் வருமானம் அதிகரிக்கிறது. மத்திய அரசு நிதியை ஒதுக்கும்போது தனி நபர் வருமானத்தின் அடிப்படையிலே ஒதுக்குகிறார்கள். அதனாலே தமிழ்நாட்டுக்கு இழப்பு ஏற்படுகிறது. பல்வேறு இழப்புக்களை மத்திய அரசு, மாநில அரசுக்கு, தமிழக அரசுக்கு செய்தாலும், இதுவும் ஒரு இழப்பாகச் செய்து கொண்டிருக்கிறது.

அப்படிச் செய்வதனால், இந்தக் குடும்ப நலத் திட்டத்தைக் கைவிட்டு விடவேண்டிய நிலை ஏற்பட்டு விடுமோ என்று அஞ்சுகிற நிலை உள்ளது. ஆக, மத்திய அரசு என்ன செய்ய வேண்டும் என்றால், தனி நபர் வருமானத்தின் அடிப்படையில் நிதியை ஒதுக்கக்கூடாது.

ஒவ்வொரு மாநிலத்திற்கும் இவ்வளவு என்ற அடிப்படையில் நிதியை அவர்கள் ஒதுக்க வேண்டும். அனைத்து மாநிலங்களுக்கும் சமமாக நிதியைத் தர வேண்டும். உலக வங்கியில் நிதி தரும்போது கூட என்ன செய்கிறார்கள் என்றால்,—இங்கே பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர் மதிப்பிற்குரிய வேணுகோபால் அவர்கள் கூடச் சொன்னார்கள். உங்களைவிட எங்களுக்கு, மாநிலத்திற்கு அதிகமாகக் கொண்டு வந்து சேர்ப்பதில், மத்திய அரசிடமிருந்து



தமிழக மக்களைக் காப்பதில் அதிக அக்கறை கொண்டிருக்கிறோம் என்று சொன்னார்கள். வரவேற்கிறேன், வாழ்த்துகிறேன், தலை வணங்குகிறேன். ஆனால், என்ன செய்கிறார்கள் என்றால், தமிழகத்திற்கு நிதி தரும்போது அந்த உலக வங்கியினுடைய நிதியை அப்படியே, என்ன வட்டிக்கு இந்தியத் துணைக் கண்டத்திற்குத் தருகிறதோ, அதற்கு அல்லவா தரவேண்டும்? மத்திய அரசு, மாநில அரசை நண்பனாகத்தானே வைத்து இருக்க வேண்டும்? நண்பனாக வைத்து இருக்கவில்லையே! மத்திய அரசு உலக வங்கியிலிருந்து பெறுகிற நிதியை 2 சதவிகித வட்டிக்குப் பெறுகிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இராமலிங்கம் அவர்கள், ஒவ்வொரு மாநிலத்திற்கும் நிதி ஒதுக்குகிற நேரத்தில் தனி நபர் வருமானத்தின் அடிப்படையிலே நிதி ஒதுக்குவதன் மூலமாக, குடும்ப நல இலாகாவிலே நல்ல பணி செய்தால், அது பாதிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். நாம் அண்மையிலே மத்திய அரசாங்கத்திடத்திலே கேட்டுக்கொண்டு இருக்கிறோம். தனி நபருடைய சராசரி வருமானத்தின் அடிப்படையிலே நிர்ணயிக்காமல், 71 ஆம் ஆண்டு, "As per the population of 1971" என்கிற வகையிலே, அந்த ஆண்டு என்ன ஜனத்தொகை இருந்ததோ, அந்த அடிப்படையிலே ஒதுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். அவர்களும் அதைப் பரிசீலிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், குடும்ப நல இலாகா நல்ல வகையிலே பணியாற்றி, அந்தத் திட்டம் வெற்றி பெற வேண்டும் என்றால், அப்படி மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொண்டால்தான் அது முடியுமே தவிர, வேறல்ல. ஜனத்தொகையைக் கட்டுப்படுத்தி, நாம் ஒட்டு மொத்தமாக கிடைக்ககூடிய நம்முடைய வருமானத்தை வகுத்தால், தனி நபர் வருமானம் ஜாஸ்தி ஆகும். ஆகவே, பிற்படுத்தப்பட்ட அந்தப் பகுதியிலே வராது. அதாவது 'பேக்வேர்டு ஸ்டேட்' ஆக கருதப்பட மாட்டாது. அதனாலே, ஏறத்தாழ 20 சதவிகிதம் நமக்கு ஒதுக்கக்கூடிய பணத்திலே நஷ்டம் ஏற்படுகிறது. இப்படி இழப்பு ஏற்படுகிறது என்றெல்லாம் நாம் விளக்கிச் சொல்லியிருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதற்கும், நாம் கேட்டதற்கும் சற்று வேறுபாடு இருக்கிறது என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நானும் அதைத்தான் வலியுறுத்துகிறேன். குடும்ப நலத் திட்டத்தின்மீது அதிக அக்கறை எடுக்கிற காரணத்தினால் நமக்கு மக்கள் தொகை குறைகிறது. அதனாலே நான் குடும்ப நலத் திட்டத்தைக் குறை சொல்லவில்லை. மத்திய அரசு, அந்தத் திட்டத்தை அதிகமாக அமல்படுத்துகிற மாநிலத்திற்கு அதிக ஊக்கத்தைத் தர வேண்டுமே தவிர, அது பாதிக்கின்ற சூழ்நிலையை

உருவாக்குகிற அளவுக்கு சட்டதிட்டங்களைத்தான் அவர்கள் வைத்து இருக்கிறார்கள். நிதி ஆதாரங்களைத் தரும்போது, எப்படி, எப்படி தமிழகத்திற்கு குறைக்க முடியுமோ அதற்கு எல்லாம் தகுந்த அளவுக்கு சட்டங்களைப் போடுகிறார்கள் என்று சுட்டிக்காட்ட உதாரணமாகச் சொல்கிறேன்.

ஆக, இந்த ஆண்டு, நமக்கு ஒதுக்கக்கூடிய நிதியில் 20 சதவிகிதம் குறைந்து இருக்கிறது. இனி வரும் ஆண்டுக்கு கேட்டு இருக்கிறோம். இந்த ஆண்டு ஒதுக்கீட்டில் போதுமான அளவுக்கு ஒதுக்கீடு இல்லை என்பது தான் என்னுடைய நியாயமான குற்றச்சாட்டு. ஆக, மத்திய அரசு இனி வருகிற ஆண்டிலாவது— போனது போகட்டும்—வருகிற ஆண்டிலாவது, தனி நபர் வருமானத்தின் அடிப்படையிலே நிர்ணயிக்காமல், மாநிலத்திற்கு இவ்வளவு என்று நிர்ணயித்து கடந்த காலங்களிலே எந்த அளவுக்கு ஒதுக்கப்பட்டதோ, அந்த அளவுக்கு ஒதுக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள் ஆகும்.

அதோடு மட்டும் அல்ல. உலக வங்கி, இந்தியத் துணைக் கண்டத்திற்கு வழங்குகிற நிதியிலிருந்து மாநிலங்களுக்குக் கடன் தருகிறார்கள். உலக வங்கி 2 சதவிகித வட்டிக்கு அந்தக் கடனை இந்திய அரசுக்குத் தருகிறார்கள். ஆனால், மாநிலத்திற்கு அது வழங்கும்போது, அதை 12 சதவிகித வட்டிக்குத் தருகிறார்கள். இது நியாயம்தானா? நண்பனாக மத்திய அரசு இருக்க வேண்டுமே தவிர, வட்டிக் கடை வைக்கக் கூடாது என்பதற்காகச் சொல்கிறேன்.

(முற்பகல் 11-30)

மத்திய அரசு மாநில அரசுக்குக் கடன் வழங்கும்போது ஏதோ மத்திய அரசின் நிதி ஆதாரங்க்ள் மூலம் வழங்கினால்கூட ஒரு வேளை வட்டியைக் கூட்டியிருக்கலாம், ஆனால் இன்னொருவரிடமிருந்து பெற்ற பணத்தைக் கடனாக வழங்கும்போது மாநில அரசுக்கு வழங்கும்போது வட்டியைக் கூட்டினால் அது எப்படி சரியாக இருக்கும். தமிழ்நாட்டு மக்கள்கூட இந்த தேசத்திலே தான் வாழ்கிறார்கள். தேசம் என்பது ஒரு குறிப்பிட்ட மாநிலம் என்பதல்ல, தேசம் என்பது இந்திய நாடு முழுவதும்தான். எனவே உரிமைக்கே கேடு வருகிற நேரத்திலே ஒற்றுமை பற்றிப் பேச முடியுமா என்பதைத்தான் என் உள்ளம் கேட்கிறது

திருமதி டி. யசோதா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உலக வங்கியிலிருந்து மத்திய அரசு கடன்பெற்று மாநில அரசுக்குக் கொடுக்கிறபோது 10 சதவீதம் அதிகப்படுத்திக் கொடுக்கிறார்கள் என்று நம்முடைய உறுப்பினர் மாண்புமிகு இராமலிங்கம் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். ஆனால் அதைப் பெற்ற மாநில அரசாங்கம் தமிழகத்திலே கொடுக்கிறபோது அதே ரீதியிலேதான் கொடுக்கிறார்களா? ஏதேனும் அதிகமாக வைத்துக்கொடுக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



டாக்டர் கே. பி. இராமலிங்கம் : மாநில அரசு தன்னுடைய நிர்வாகத்தில் நடத்துகிற திட்டங்கள் என்பது வேறு. நீங்கள் சொல்வது தனி நிறுவனங்கள், பொது நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிற கடன்கள்பற்றி. நான் சொல்வது தமிழ்நாட்டில் நிறைவேற்றப்படுகிற பல்வேறு திட்டங்கள், குடிநீர் வடிகால் வாரியத் திட்டங்களுக்கு 100 கோடி என்றும் 30 கோடி என்றும் செலவிடப்படுகிற திட்டங்கள், அணை கட்டுகிற திட்டங்கள் போன்றவற்றிற்கு நாட்டு மக்களுக்குப் பயன்படுகிற திட்டங்களைப் போடுகிறபோதுகூட மத்திய அரசு உலக வங்கியிலிருந்து பெறுகிற கடனை மாநில அரசுக்குக் கொடுக்கிறபோது கூடுதல் வட்டிக்கு கூட்டு வட்டிக்கு ** ** வாங்குகிற வட்டியை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள்,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அந்தப் பெயர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

*திரு. எம். எஸ். வி. சித்தன் : திரு இராமலிங்கம் அவர்களுக்கு யார் மீதோ கோபம் அதை எங்கள்மீது திருப்புகிறார்கள். மத்திய அரசு குறைந்த வட்டிக்குக் கடனாக, இனாமாக, வெளி நாடுகளிலிருந்து பெறுகிற பணத்தை இந்தியாவிலிருக்கிற மாநிலங்களுக்கு எல்லாம் கொடுக்கிறார்கள். மத்திய அரசுக்குப் பல்வேறு செலவுகள் உள்ளன. மத்திய அரசாங்கமும் நம்முடைய அரசாங்கம்தான். அதை ஏன் வேறு அரசாங்கம் என்று நினைக்கிறீர்கள். அதுவும் நம் அரசாங்கம்தான். ஆகவே வட்டிக்கடை என்று அவர் சொன்ன வாதம் சரியல்ல. மத்திய அரசுக்குப் பல்வேறு பொறுப்புகள் இருக்கின்றன. பல்வேறு செலவுகள் இருக்கின்றன. அதை எண்ணிப் பார்த்து வட்டியை நிர்ணயிக்கிறார்கள். தமிழகத்திற்கு மட்டும் கூடுதலாக தனியாக வட்டி விதிக்கவில்லை. எல்லா மாநிலங்களுக்கும்தான் அது பொருந்தும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

THE HON. Dr. H. V. HANDE : I think Thiru Chithan is very much on the right side. எல்லா மாநிலங்களும் பல ஆண்டுகளாகச் சொல்கிறார்கள். உலக வங்கியிலிருந்து மத்திய அரசாங்கம் கடன் வாங்கி எல்லா மாநிலங்களுக்கும் கொடுக்கிறபோது எந்த அளவுக்கு அவர்கள் வாங்குகிறார்களோ அந்த வட்டியை விட கூடுதலாக எங்களிடம் வாங்காதீர்கள் என்று தான் காங்கிரஸ் கட்சி ஆளுகிற மாநிலம் உள்பட கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

All the State Governments made a plea to the Central Government not to charge exhorbitant interest. It should be comparable to the interest they are giving to the World Bank Organisation. ஆகவே உலகவங்கி என்ன இண்டரஸ்ட்டிற்குக் கொடுக்கிறதோ அதைவிட ஜாஸ்தியாக வாங்காதீர்கள் என்று எல்லா மாநிலங்களும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. என். எஸ். வி. சித்தன் : மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு நான் நன்றியைக் கூறிக்கொள்கிறேன். காரணம் என் கட்சிக்கு அவர்கள் சொன்னது வலுவூட்டுகிறது. எல்லா மாநிலங்களுக்கும்தான் அப்படிக் கொடுக்கிறார்கள். தமிழகத்திற்கு மட்டும் அதிகமான வட்டிக்குக் கொடுக்கவில்லை. மத்திய அரசாங்கம் அதற்கு என்ன பதில் சொல்கிறார்கள் என்பதை கேட்கவேண்டிய இடத்தில் கேட்டால் பதில் வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

THE HON. Dr. H. V. HANDE : Therefore, I am only adding strength to the argument of Hon. Member, Dr. Ramalingam.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : டாக்டர் கே. பி. இராமலிங்கம் தொடர்ந்து பேசட்டும். அவரும் அதைத்தான் சொல்கிறார்

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : நான் தமிழ்நாட்டிற்கு மட்டும் சொல்லவில்லை. நீங்கள் சொன்ன அதே கருத்தைத் திரும்பச் சொல்கிறேன். மாநிலத்திற்கு வழங்கப்படும் கடன்களில் ஏன் வட்டியையும் சேர்த்து வாங்குகிறீர்கள் என்பதுதான் கேள்வியே தவிர வேறொன்றுமில்லை. இனிமேலாவது இதுபற்றி சிபாரிசு செய்தால் சரி.

தேசிய மயமாக்கும் கொள்கையில் ரொம்பவும் தீவிரம் காட்டுகிறார்கள். எதையெதைத் தேசியமயம க்க வேண்டுமோ அதையெல்லாம் விட்டுவிட்டு, எதையெல்லாம் தேசியமயமாக்க வேண்டிய தேவையில்லையோ அதற்குப் போய் நிற்கிறார்கள். தேசிய மயமாக்குகின்ற கொள்கைக்கு மொழியைக் கொண்டு போய் வைத்திருக்கிறார்கள். இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் இந்தியை எப்படியெப்படிப் பரப்பலாம் என்று அவர்கள் ஆலோசித்து, கடைசியிலே தொலைக்காட்சியைப் பிடித்திருக்கிறார்கள். தொலைக்காட்சி மூலமாக இன்றைக்கு எந்தெந்த வகையிலே திணிக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களுக்கு ஒரேயொரு சின்ன கருத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். இந்தியா என்ற துணைக்கண்டம் மட்டும்தான் இந்திக்காரர்களுக்குத் தெரிந்து கொண்டிருக்கிறது. ஆனால், இந்தியால் இந்தியாவிற்குக் கண்டம் என்பது அவர்களுக்குப் புரியவில்லை என்ற கருத்தைத் தான் நான் வெளியிட விரும்புகிறேன். காரணம், இன்றைக்குத் தேசிய அளவில் தேசிய மொழியாக தமிழ் மொழியை அங்கீகரிப் பதில் என்ன தவறு? எத்தனையோ முறைகள் கோரிக்கைகளை வெளியிட்டும் இன்றும் அது ஏற்கப்படவில்லை. இந்தியை எப்படியாவது நுழைத்து விடலாம் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். திட்டவட்டமாக நேருவின் கொள்கையை, நேரு அறிவித்த அறிவிப்பை சட்டமாக்குவதில் என்ன தயக்கம்? இந்தக் கேள்விக் கணைதான் இன்றைக்கும் இளைஞர்கள் மத்தியிலே எழுந்துகொண்டிருக்கின்றது. இது மறைந்துவிட்டதாக யாரும் எண்ணிவிட வேண்டாம். இது





தமிழகத்தின் அரசியலிலே மட்டுமல்ல, திராவிட நாட்டிலே இருக்கின்ற, விந்திய மலைக்குத் தென்புறம் உள்ள அனைத்து மாநிலங்களிலேயும் இந்தக் கேள்விக் கணை ஒலித்துக்கொண்டு இருக்கின்றது என்ற உணர்வைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால் அதே நேரத்தில் நதி நீர்ப் பங்கீட்டில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் பிரச்னை இருக்கிறது. அதிகமாக, உபரியாகப் போகின்ற நதி நீர் கேரள மாநிலத்தில் கடலில் போய்க் கலக்கிறது. கர்நாடகத்திலேயிருந்து தமிழகத்திற்கு வர வேண்டிய தண்ணீர் வருவதற்கு வழியில்லாமல் ஒவ்வொரு காலகட்டத்திலேயும் பேச்சுவார்த்தைகள் மூலமாகப் பெற்று வருகின்ற சூழ்நிலைதான் இருக்கிறது. இதற்கெல்லாம் தீர்வு ஏற்பட வேண்டுமென்றால் நதிகளைத் தேசிய மயமாக்க வேண்டும். நதிகளைத் தேசிய மயமாக்க வேண்டுமென்ற கொள்கையை இந்திய அரசு மேற்கொள்ள வேண்டும். இப்படி நதிகளைத் தேசிய மயமாக்குவதை விட்டுவிட்டு மொழியைத் தேசிய மயமாக்கப் போய் அது எங்கேயோ கொண்டு போய் விடும் சூழ்நிலையை உருவாக்கிவிடக் கூடாது. உரிமைக்கு நாங்கள் குரல் கொடுக்கிறோம், நீங்கள் ஒற்றுமையைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள் என்ற நிலைதான் ஏற்படுகிறது.

மதிப்பிற்குரிய வேணுகோபால் போன்றவர்களும், அல்லது சித்தன் போன்றவர்களும் இந்தப் பிரச்னையைப்பற்றி மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். நதிகளைத் தேசிய மயமாக்கினால், அதனால் காவேரிப் படுகையிலே இருக்கின்ற விவசாயிகள் பலன் பெற முடியும்; அவர்கள் நெற்பயிர்களை விளைவிக்க முடியும் என்று சொல்ல விரும்புகிறேன்.

அதேநேரத்திலே, கல்வி நிலையங்களை எடுத்துக்கொள்ளும் பொழுதுகூட, இன்றைக்கு சென்ட்ரலி எய்டெட் ஸ்கூல்ஸ் என்று மத்திய அரசு தானாக நடத்தும் பள்ளிகளில்கூட கட்டாயமாக இந்தியைப் பாடமாக்குகிறார்கள். அது ஏற்புடையது அல்ல. நிச்சயமாக அதை ஏற்றுக் கொள்ளக்கூடிய கொள்கையாக எடுத்துக் கொள்ளக்கூடாது. காரணம், அதன் மூலமாக இன்றைக்கு இந்தியைத் திணிப்பதற்கு வழிவகை செய்து கொண்டிருக்கிறார்கள். அதையும் அவர்கள் திரும்பப் பெற வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

மேல்நிலைப் பள்ளிகளில் தமிழகத்திலே இன்றைக்கு ஆசிரிய பயிற்சிகளைக் கொண்டு வந்து ஏழைகளுக்கும், கிராமப் புறங்களில் வாழ்பவர்களுக்கும் உறுதுணையாக இருக்கும் வகையிலே தமிழக அரசு செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. அதற்காகத் தமிழக அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக் கிறேன்.

விவசாயிகளுக்கு நெல்லுக்கு ஒரு குவிண்டாலுக்கு 30 ரூபாய் ஊக்க ஊதியமாகத் தமிழக அரசு அறிவித்திருக்கிறது. இது மேலும் அதிகமாக ஆக்கப்பட வேண்டும். அதேநேரத்தில்

மைய அரசு தனிச் சலுகை மூலம் நெல்லுக்கு விவசாயிகளுக்குத் தனியாக ஊக்க போனஸ் வழங்க வேண்டும். சிறு விவசாயிகள் பயன்படுத்தும் உரம் போன்ற பிற பொருட்களின் விலையைக் குறைக்க வேண்டும். மைய அரசு மாநில அரசுக்குக் கொடுக்கும் பொழுது மானியமாகவும் அதைத் தந்தாக வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இலங்கைப் பிரச்னையைப் பொறுத்தவரையில் தமிழக அரசும், மைய அரசும் இதுவரையில் எடுத்திருக்கின்ற அனைத்து நடவடிக்கைகளும் மிக அருமையாக இருக்கின்றன. இந்த நாட்டிலே ஒற்றுமையையும், வெளிநாட்டிலே இருக்கின்ற வெளி நாட்டு உறவு முறைகளையும் பாதுகாக்கின்ற முறையில் நட வடிக்கைகள் எடுத்து வரப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு இந்தியாவின் பிரதமர் இராஜீவ் காந்தி அவர்கள் அறிவித்திருக் கின்ற இந்த அறிவிப்பு, "இங்கே வந்திருக்கின்ற அகதிகளைத் திரும்பப் பெறாவிட்டால் அங்கேயிருந்து வரக்கூடியவர்களை ஏற்கனவே உள்ள ஒப்பந்தப்படி வரக் கூடியவர்களை நாம் ஏற்றுக்கொள்ள மாட்டோம்" என்ற திட்டவட்டமான அறிவிப்பு தமிழக மக்களுக்கு, தமிழர்களுக்குப் பெரிய நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது. அதற்காக மத்திய அரசை நான் பாராட்டுகிறேன். இப்படி மத்திய அரசைப் பாராட்ட வேண்டிய இடத்தில் பாராட்டுவதற்கு நாங்கள் என்றைக்கும் கடமைப்பட்டிருக்கிறோம். அந்த உணர்வோடுதான் இதிலே நான் பாராட்டுகிறேன்.

(முற்பகல் 11-40)

ஆனால் அதேநேரத்திலே இன்றைக்குப் புதிய தொழிற் சாலைகளை உருவாக்க வேண்டும் என்றும், கிராமப்புற பொருளாதாரத்தை வளர்க்க வேண்டும் என்றும் சொல்கிறோம். விவசாயிகள் நினைத்தால்தான் தமிழகத்திலே கிராமப்புற பொருளாதாரம் வளரும். அந்த உணர்வோடு இருக்கிற தமிழ்நாடு முதல் அமைச்சர் அவர்களும் தமிழக அரசும் புதிதாக சர்க்கரை ஆலைகளை உருவாக்க வேண்டுமென்று, இன்றைக்குத் திட்டமிட்டு ஏறத்தாழ 30 சர்க்கரை ஆலைகளுக்கு உரிமம் கேட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஆனால் மத்திய அரசு இன்னும் உரிமம் வழங்கவில்லை. அதற்கு விரைவாக உரிமம் வழங்க வேண்டும். தமிழகத்தில் இத்தனை சர்க்கரை ஆலைகளை உருவாக்க வேண்டுமென்று முயற்சி எடுத்த, தமிழக முதல் அமைச்சருக்கும் தமிழக அரசுக்குமி என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக் கிறேன். காரணம் அப்பொழுதுதான் விவசாயிகள் பணப் பயிரை ருவாக்கி, வணிகத் துறையின் மூலமாக அவர்கள் பொருளை ஈட்டமுடியும் காரணம், நெல்லை மட்டும் வளர்த்துக் கொண்டிருந் தால் அவர்களால் பொருள் ஈட்ட முடியவில்லையென்ற நிலை



ஏற்பட்டிருக்கிறது. கரும்பு அதிகமாக விலை விற்கும்போது, சர்க்கரை ஆலைகள் அவர்களுக்குப் பக்கமாக இருக்க வேண்டும். அந்த உணர்வோடு இன்றைக்குப் புதிய சர்க்கரை ஆலைகளைத் தொடங்க ஏற்பாடு செய்திருக்கிற இந்த அரசுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயக் கூலிகளுக்கென்று தமிழ்நாட்டினுடைய அரசு தான் இன்றைக்குப் புதிதாக பாதுகாப்புத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. இந்தப் பாதுகாப்புத் திட்டத்தின் மூலம் தான் பல ஆயிரக்கணக்கான விவசாயிகள் பயன் பெறலாம். ஒரு விவசாயி, இடையிலே இறக்கும்போது, பணத்தைத் திரும்பப் பெற அரசிடம் வர வேண்டி யிருக்கிறது. மாநில அரசிடம் வந்து, சென்னைக்கு வந்து, அதற்குப் பின்னால் அவனுடைய கோப்புகள் எல்லாம் போய், அவன் பணம் பெறுகிற நிலை இருக்கிறது. அது மிகப் பெரிய பாதக சூழ்நிலையை ஏற்படுத்துகிறது. மாவட்ட ஆட்சித் தலைவர் மாவட்டத்திலேயே, அந்த பயன் பெற வேண்டிய விவசாயி குடும்பத்துக்கு காப்புறுதித் திட்டத்தின் மூலம், பணம் தரக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மதிப்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. வேணுகோபால் அவர்கள், தமிழகத்திலே தொழில் வளர்ச்சி இல்லை என்று சொன்னார்கள். தொழில் வளர்ச்சி இல்லாமல் போனதற்குக் காரணம், 1967-க்குப் பின்னால் விந்திய மலைக்கு இந்தப் பக்கம் இருக்கிற தென் மாநிலங்களில் எந்தப் புதிய தொழிலும் தொடங்குவதற்கான முயற்சியை மத்திய அரசு மேற் கொள்ளாதது மட்டுமல்ல, இந்த ஆண்டு வரை தமிழ்நாட்டிலே ஸீரோ இண்டஸ்ட்ரீஸ் டிஸ்ட்ரிக்ட் என்று ஒரு மாவட்டத்தைக் கூட அறிவிக்கவில்லை. கடந்த 3 சட்டமன்றக் கூட்டங்களில் நான் ஒவ்வொரு முறையும் தொழில் மானியக் கோரிக்கைகளில் அதை வலியுறுத்திக் கொண்டுதானிருக்கிறேன். அந்த நேரங் களிலே கூட, இதே போல்தான் திரு. சித்தன் அவர்கள் மத்திய அரசுக்கு வக்காலத்து வாங்கி, மத்திய அரசினுடைய பிரதி நிதியாகப் பேசினார்கள். எப்படி மாநில அரசுக்கு டெல்லியில் பிரதிநிதியாக ஒருவரை வைத்திருக்கிறோமோ அதைப் போல மத்திய அரசின் பிரதிநிதியாக, அவர் இந்த மன்றத்திலே இருந்து பதில் சொன்னார். உங்களுக்கு என்ன தேவையோ அதை வலியுறுத்துகிறோம் என்று. நாங்கள் அன்றைக்குச் சொன்னோம், ஸீரோ இண்டஸ்ட்ரீஸ் டாலுக் என்று அறிவிக்க வேண்டும். அப்பொழுதுதான், மாநிலத்தில் உள்ள பல தாலுகாக்கள் ஸீரோ இண்டஸ்ட்ரீஸ் தாலுகாக்களாக வரும் என்று வலியுறுத்தினோம். 4 ஆண்டுகள் ஆகின்றன. இது வரையில் அதற்கான மாற்று ஏற்பாடுகள் செய்யவில்லை. எப்படிச் செய்வார்கள்? அறிவித்து விட்டால், தமிழகம் வளர்ந்து விடுமே, தென்புலம் வளருமே; வட புலத்திலே இருக்கிற உத்தரப் பிரதேசத்திற்கும், பீகாருக்கும்,

இராஜஸ்தானுக்கும் என்ன, என்ன தேவையோ, அந்தச் சட்டங்களைப் போடுவதுதானே மத்திய அரசிலே ஆளுகிறவர்களுடைய வழக்கமாக இருக்கிறது. அதைத்தான் நாங்கள் குறிப்பிடுகிறோம். ஆகவே, நம்மிடம் இருக்கிற கோரிக்கைகளையும், நம்மிடம் இருக்கிற பிரச்னைகளையும் தெரிந்து கொள்ளாமல், நாம் ஒரு இயக்கத்திலே இருக்கிறோம் என்பதற்காக மட்டும் நாம் பேசி விடக் கூடாது. என்பதைப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். காரணம் ஊட்டியிலே இருக்கிற இந்துஸ்தான் போட்டோ பிலிம்ஸ் தொழிற்சாலையை விரிவாக்க வேண்டுமென்று கேட்டதற்குக் கூட அன்றைக்கு நீங்களும் சேர்ந்து வாதாடினீர்கள். தீர்மானம் போடுவதாகச் சொன்னீர்கள். இன்றைய தினம்வரை விரிவாக்க ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. சேலம் உருக்காலைத் திட்டத்திற்குக் கூட, உருட்டாலை திட்டமாக இருக்கிறது. அது உருக்காலைத் திட்டமாக மாற்ற வேண்டும் என்று இதே மன்றத்திலே வாதாடினோம். இன்று வரை அதற்கான தீர்வு இல்லை. இது போன்ற பல்வேறு கோரிக்கைகளை நான் வரிசையாக அடுக்கிக் கொண்டு போக முடியும்.

இன்றைக்கு மீனவர்களைப் பற்றி பேசுகிறார்கள். உண்மையிலே தமிழகத்து முதல் அமைச்சர் எம். ஜி. ஆர். அவர்கள் மீனவராகத்தான் வாழ்கிறார். மீனவர்களைத்தான் இதயத்திலே தாங்கியிருக்கிறார் என்று சொன்னதையே ஒரு குறையாகச் சொன்னார்கள். அரசியல் ஆக்க வேண்டாம். அரசியல் ஆக்குவதற்காக ஒரு சமுதாயத்தை இழிவு படுத்த வேண்டாம். அரசியலாக்கி, வீண் சவால்களைச் சட்ட மன்றத்திலே எழுப்பி. ஒரு சமுதாயத்திற்கு ஒரு பிரச்னையை உருவாக்கி விட வேண்டாம். பேசித் தீர்க்க வேண்டிய பிரச்னைகளைப் பேசித் தீர்க்க வேண்டுமே தவிர, அநாவசியமாக பிரச்னைகளை உருவாக்கி, அதனாலே நிர்பந்தங்களை அரசுக்கு உருவாக்கிவிட வேண்டாமென்று, சட்ட மன்ற உறுப்பினர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். அவர்களே இருந்து தீர்க்க வேண்டிய பிரச்னைகளை, அவர்களே புதிதாக உருவாக்கிட வேண்டாம் என்று இந்தச் சட்டமன்றத்தின் வாயிலாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மதிப்பிற்குரிய திரு. ரகுமான்கான் அவர்கள் ஒரு பிரச்னையில் ஆதாரத்தைக் கேட்டார்கள். இங்கே பேசுவதற்கு எல்லாம் ஆதாரம் வேண்டும். ஆதாரம் வேண்டும் என்று சொன்னார்கள். ஒரு கருத்தைச் சொன்னதற்காகத் திடீரென்று ஆதாரம் கேட்டார்கள். இதே மன்றத்திலே திரு. ரகுமான்கான் அவர்கள் பிரேமா கொலை வழக்கைப் பற்றி பேசினார்கள். இதுவரை ஆதாரம் வரவில்லை. நீண்டகாலமாகியும் இதுவரை ஏன் ஆதாரம் தரவில்லை என்ற கேள்வியைக் கேட்டு, இந்த மன்றத்தின் வாயிலாக கவர்னர் உரைக்கு நன்றி கூறி, விடை பெறுகிறேன். நன்றி.



*திரு. மா. மீனாட்சி சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களுடைய உரையை மையமாக வைத்து, இங்கே என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டத்தின் வேதாரண்யம், தலைஞாயிறு பகுதிகள் மழைக் காலத்தில் பெருமளவுக்கு சேதம் அடைந்திருக்கின்றன. அங்கு பெய்த மழை அளவு இந்தியாவில் முதலாவது மட்டுமல்லாமல், தமிழ்நாட்டிலும் அதிகமான அளவு மழை பெய்து, அந்தப் பகுதிகளில் வெள்ளச் சேதம் நிறைய ஏற்பட்டு, அதிகாரிகள் எல்லாம் வந்து பார்வையிட்டார்கள் திரு. ஹரி பாஸ்கர் தலைமையில் வந்த பார்வையிட்ட குழுவிடம் நான் அந்தப் பகுதியில் எவ்வளவு சேதம் ஏற்பட்டிருக்கிறது என்னென்ன செய்ய வேண்டுமென்று ஒரு அறிக்கை கொடுத்திருக்கிறேன். வெள்ளத்தினால் அவ்வளவு சேதம் ஏற்பட்டிருந்தும் வெள்ள நிவாரணப்பணிகள் ஒன்றும் இது வரையில் நடைபெறவில்லை.

வேதாரண்யம், தலைஞாயிறு மட்டுமல்லாமல் கீழ்த்தஞ்சை மாவட்டமே பாழ்பட்டு விட்டது, இன்றைய தினம் வரையில் அங்கே போக்குவரத்து சரியாக அமையவில்லை. கிராமச் சாலைகள் சீர்கெட்டு, பாழ்பட்டு, பழுதடைந்து இருக்கின்றன. இப்படிப்பட்ட நிலையில் உடனடியாக இந்தச் சர்க்கார் நிவாரணப் பணிகளில் ஈடுபடவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, வருஷா வருஷம் வெள்ளம் வந்து அந்தக் கடலோரப் பகுதிகளை அழித்துக் கொண்டிருக்கிறது. அதற்கு முக்கிய காரணம் அங்கே வடிகால், வாய்க்கால், குளங்கள், புறம்போக்கு நிலங்கள் ஆகிய இடங்களில் மக்களுடைய ஆக்கிரமிப்பு அதிகமாக இருக்கிறது. ஆக்கிரமிப்பின் காரணமாக வடிகால், வாய்க்கால்கள் சீர்கெட்டு, தண்ணீர் வடிய வசதி இல்லை என்பதால் தண்ணீர் தேங்கி, கிராமப் பொருளாதாரம், விவசாயம் பாழ்பட்டிருக்கிறது. அதை சீர் செய்ய இந்த அரசு உடனடியாக தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,

அது மட்டுமல்ல. கடலோரப் பகுதிகளாக இருப்பதால் அங்கே வடிகால்கள் போதிய அளவுக்கு இல்லை. பல வடிகால்களை வெட்ட வேண்டும். இருக்கிற வடிகால்களை உடனடியாக சீர் செய்ய வேண்டும் என்று மனு கொடுத்திருக்கிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் முள்ளியாறு வடிகால், மணங்கொண்டான் வடிகால், செல்லக்கோன் ஏரி வடிகால், புது ஆறு வடிகால் போன்ற வடிகால்களை சுத்தப்படுத்தி ஆழப்படுத்த வேண்டும். அதைப் போன்று சக்கிலியான் வடிகால், வெட்டாறு வடிகால், வெளிமாரியம்மன் வடிகால் போன்றவற்றை நல்ல முறையில் சீர்செய்தால் மழையினால் பெருவெள்ளம் வந்தால் கூட அந்தப் பகுதிகளைக் காப்பாற்ற முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல. வேதாரண்யத்தை அடுத்து கடலோரப் பகுதியில் பெரிய குத்தகை கிராமம் இருக்கிறது. அங்கே நூற்றுக்கணக்கான ஏக்கர் கடலரிப்பால் பாழ்பட்டிருக்கிறது. அதற்கு உடனடியாக தடுப்பு நடவடிக்கை எடுக்கா விட்டால், பெருமளவுக்கு கடலரிப்பு ஏற்பட்டு, அந்தக் கிராமத்திற்குப் பக்கத்தில் இருக்கிற கிராமங்கள் கூட அழிந்து விடும் பேரபாயம் இருக்கிறது அதிகாரிகள் வந்து அந்த இடத்தைப் பார்வையிட்டு, உடனடியாக நடவடிக்கை எடுக்கிறோம் என்று சொன்னார்கள். இதுவரையில் நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டதாகத் தெரிய வில்லை.

அடுத்தபடியாக, தொழில் வளர்ச்சியைப் பற்றி ஆளுநர் உரையில் சொல்லியிருக்கிறார்கள். இங்கே இருக்கின்ற மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் இதிலே மிகுந்த அக்கறையோடு இருக்கிறார்கள் என்பதிலே எந்தவிதமான மாறு பட்ட கருத்தும் இல்லை, ஆகையால் இருக்கிற மூலப் பொருள்களைப் பயன்படுத்தி தஞ்சை மாவட்டத்தில் தொழில் களைத் தொடங்க அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டும். குறிப்பாக வேதாரண்யத்தில் கிடைக்கிற மூலப்பொருளை வைத்து, சோடா ஆஷ், காஸ்டிக் சோடா தயாரிப்பதற்கு தேவையான ஆயிரக்கணக்கான ஏக்கர் சதுப்பு நிலமும் இருக்கிறது. திராவிட முன்னேற்றக் கழக அரசு காலத்தில் அங்கே ஆய்வு நடத்தி, நூறு கோடி ரூபாய் திட்டம் என்ற அளவுக்கு ஒரு திட்டத்தை வகுத்துத் தந்து, அதைச் செயல் படுத்துகின்ற நிலையில் இருந்தன. அனால் அந்தத் திட்டம் என்னவாயிற்று என்று தெரியவில்லை. உடனடியாக அந்த சதுப்பு நிலத்தில். உப்பளமாக இருக்கிற காரணத்தினால் அந்தத் தொழிற்சாலையை ஆரம்பிக்க இந்த அரசு முயற்சி எடுத்தால் நிச்சயமாக ஆயிரக்கணக்கான ஏழை எளிய மக்கள் வேலை வாய்ப்பு பெறுவார்கள், அதற்கான வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

அடுத்து, கல்வி என்ற தலைப்பில் பார்த்தால் பள்ளிக்கூடம் நிறைய கட்டப்படும் என்ற குறிப்பு ஆளுநர் உரையில் இருக்கிறதே தவிர இருக்கிற பள்ளிக்கூடங்களுக்கு ஒழுங் ன கட்டிடம் இருக்கிறதா, அதற்கு என்ன ஏற்பாடு என்று எதுவும் இல்லை. இருக்கிற பள்ளிக்கூடம் ஒழுங்காக இருக்கிறதா, கீற்றுக் கொட்டகை ஒழுங்காக இருக்கிறதா? மழைக் காலத்தில் அவை எப்படி இருக்கின்றன, என்ன செய்ய வேண்டும் என்று குறிப்புகள் இல்லை, அதைப் பற்றி கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

நாங்கள் எல்லாம் கிராமங்களுக்குச் சென்றால், உடனடியாக அந்தப் பள்ளிக்கூடங்களைப் பார்க்க வேண்டுமென்று சொல்லி, மக்கள் அழைத்துச் செல்கிறார்கள். அங்கே போய்ப் பார்த்தால் கீற்றுக்கொட்டகை கூட ஒழுங்காக இல்லை: கீற





போடாமல் பாழடைந்திருக்கிறது. உரிய அதிகாரிகளிடம் நாங்கள் அதை எடுத்துச் சொன்னால், நாங்கள் என்ன செய்வது, பணம் இல்லை என்று சொல்கிறார்கள். கலெக்டரோ அல்லது அரசோ போதுமான அளவுக்கு பணம் ஒதுக்கித் தந்தால்தான் அதைச் செய்ய முடியும் என்று சொல்லி தட்டிக்கழிக்கின்ற நிலைமைதான் இருக்கிறது.

(முற்பகல் 11-50)

அடுத்து விவசாயத்தை எடுத்துக்கொண்டால் மிகவும் நம்பிக்கை இல்லாத நிலைமை விவசாயிகளிடத்தில் இருக் கின்றது. நெல்லுக்குச் சரியான விலை இல்லை என்பது உங்களுக்குத் தெரியும். ஊக்கத் தொகை தருகிறேன் என்று சொன்னார்கள். ஆனால் ஊக்கத்தொகை சரியானபடி கிடைக் கின்றதா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும் இரண்டு, மூன்று ஆண்டுகளாக சாகுபடி செய்வதற்கு மிகவும் சிரமம் ஏற்பட்டு வருவதோடு, அந்தச் செலவுகளும் ஏற்பட்டுக்கொண்டிருப்பது பற்றி அனைவருக்கும் தெரியும். கவர்னர் உரையிலே கூட தொடர்ந்து மழை காரணமாகவும், வறட்சி காரணமாகவும் விவசாயிகள் பாதிக்கப்பட்டு இருப்பதாகக் கூறப்பட்டிருக்கின்றது. இப்படி ஆளுநர் உரையிலேயே சொல்லியும் கூட அந்த விவசாயி களுக்குத் துயர் துடைப்புப் பணிகள் ஏதாவது நடைபெற்று இருக்கிறதா என்றால் இல்லை.

விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்வதற்கு இந்த அரசு ஏதாவது சொல்லி இருக்கின்றதா என்றால் இந்த ஆளுநர் உரையிலே இல்லை. எனவே உடனடியாக விவசாயிகளுக்கு நம்பிக்கையூட்டுகிற அளவுக்கு, அவர்களுக்கு ஏதாவது ஒரு நிவாரணம் வழங்கவேண்டும் என்று கேட்டுக்சொள்கிறேன்.

வெள்ளச் சேதத்தால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பூச்சிமருந்து, உரம் தருவதாகப் பத்திரிகையிலேயும் ரேடியோ விலும் சொல்கிறார்களே தவிர முறையாக அவை விவசாயிகள் அனைவருக்கும் கிடைக்கிறதா என்றால் கிடைக்கவில்லை. அதுவும் சிறு விவசாயிகள் என்று சொன்னால் சிறு விவசாயிகள் எவ்வளவு பேர் என்று மொத்தமாகக் கணக்கிட்டு அந்தக் கணக்கு அரசுக்கு வந்தும் கூட அந்த விவசாயிகள் அவ்வளவு பேருக்கும் கிடைக்கின்ற அளவுக்கு பணத்தை அரசு ஒதுக்கவில்லை. ஆனால் எல்லா விவசாயிகளும் உரம், பூச்சி மருந்து இனாமாகத் தருகிறார்கள் என்ற எண்ணத்திலே அதிகாரிகளிடத்திலே வந்து கேட்டால் அவர்கள், பணம் குறைவாகத்தான் சர்க்கார் ஒதுக்கி இருக்கின்றது; எனவே இருக்கின்ற பணத்தை வைத்துதான் தருவோம என்று சொன்னதால் அங்கே அடிதடி ரகளை எல்லாம் நடந்து அதிகாரிகள் எல்லாம் அலுவலகங்களைப் பூட்டிவிட்டு ஓடுகின்ற நிலைமையை நாம் கண்கூடாகப் பார்த்தோம். அப்படிப் பட்ட நிலைமைகளைப் பல இடங்களில் பார்க்கிறோம். எனவே அறிவிக்கின்ற திட்டங்களைச் சரியாகச் செய்யவேண்டும் என்று பணிவோடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த வாரம் கூட வேதாரண்யத்தில் அதிக மழை பெய்து கடலை, புகையிலை மல்லிகை நெல் போன்றவற்றை மூன்றாவது முறையாகச் சாகுபடி செய்தும் கூட பலன் இல்லாமல் இன்றைக்கு விவசாயிகள் மிகவும் சிரமப்பட்டுக்கொண்டிருக்கின்ற நிலை மையில் இருக்கிறார்கள். விவசாயிகளுக்குப் பூச்சி மருந்து ருவதில் கூட நான் முன்பு சொன்னதுபோல் பெருத்த ஊழல் நடைபெற்று இருக்கின்றது. காரணம் போதிய அளவுக்கு பணமும், பூச்சி மருந்தும் வழங்காததால் அதிகாரிகள் அதை நல்ல முறையில் வழங்காமல் அவர்களுக்குச் சாதகமாகப் பயன் படுத்தி, ஊழல்கள் செய்வதற்கு வழிவகுத்துத் தருகின்ற ஒரு நிலைமைக்குத்தான் இந்தச் சர்க்கார் இடம் தருகின்றது. எனவே அது முறையாகப் பயன்படுத்தப்படவில்லை.

விவசாயிகளுக்குப் பயிர்ப் பாதுகாப்புத் திட்டம் என்ற ஒரு திட்டத்தை அறிவித்து பல கூட்டுறவுச் சங்கங்களில் அந்தத் தொகையைப் பிடித்திருக்கிறார்கள். ஆனால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அந்த பயிர்ப்பாதுகாப்பு ஈட்டுத் தொகை கிடைக் கிறதா என்றால் கிடைக்கவில்லை. காரணம் கேட்டால் அந்தத் தொகையை முறையாக மத்திய கூட்டுறவு வங்கி இன்சூரன்ஸ் கம்பெனிக்குக் கட்டாததால் திருப்பித் தருவதற்கு அவர்கள் தயங்குகிறார்கள். இப்படி ஒரு திட்டத்தைச் செயல்படுத்துகிற போது முறையாக, சரியாகச் செயல்படுத்துவதில்லை.

வேதாரண்யம் பகுதி மருத்துவ வசதி பற்றி இரண்டு மூன்று முறை சட்டமன்றத்தில் எடுத்துச் சொல்லியும் கூட, அங்கே தாலுகா தலைமை மருத்துவமனை ஒன்று அமைப்பதாக அரசின் கொள்கை இருந்தும்கூட அந்த வேதாரண்யத்திலே ஆரம்ப சுகாதார நிலையம் மட்டும்தான் இருக்கின்றது. அங்கே அரசு மருத்துவமனை கிடையாது. அங்கே படுக்கை வசதியில்லை; ஆப்பரேஷன் தியேட்டர் கிடையாது; இன்னும் பல தரமான மருந்துகள் கிடைக்கவில்லை. இந்த அவல நிலையைப் போக்க மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து, அந்தப் பகுதி பிற்பட்ட பகுதியாக இருப்பதால், கடலோரப் பகுதியாக இருப்பதால் அந்த வேதரண்யத்திலிருக்கின்ற சுகாதார நிலையத்தை அரசு மருத்துவமனையாக மாற்றித் தர வேண்டும் ன்று பணிவோடு நான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதிதிராவிடர் நலத்தைப் பற்றி இங்கே ஆளுநர் உரையிலே சொல்லி இருக்கிறார்கள். அப்படி சொல்லி ருக்கிறார்களே, தவிர முதலிலே அவர்களுக்கு ஏதாவது அடிப்படை வசதிகளை செய்து இருக்கிறதா இந்த அரசு என்றால் உண்மையிலேயே இல்லை. அவர்களுடைய தெருக்களில் வீடுகளுக்குப் போவதற்குக் கூட சரியான நடைபாதை இல்லை. வண்டிப்பாதை இல்லா விட்டாலும், நடைபாதை கூட இல்லாத நிலைமையில் பல தெருக்கள் ஆதி திராவிடர்கள் பகுதிகளில் இருக்கின்றன.



ஒரு பிணத்தைச் சுடுகாட்டிற்குத் தூக்கிக் கொண்டு செல்வ தற்குக் கூட அவர்களுக்கு வழியில்லை. அங்கே ஜாதி இந்துக் களால் அவர்களுக்கு இடையூறுகள் பல ஏற்பட்டுக்கொண்டிருக் கின்றன. ஆகவே தயவுசெய்து முதலிலே இந்த இடர்பாடுகளை எல்லாம் களைந்து, அவர்களுக்குக் குடிதண்ணீர் வசதி, ரோடு வாதி, சுடுகாட்டுக்குச் செல்ல வசதி போன்றவற்றை எல்லாம் தந்துவிட்டு அதற்குப் பிறகு இந்த வீடுகட்டுகின்ற திட்டத்தை அறிவித்தால் அது உண்மையிலேயே நல்லதாக அமையும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். வீடுகட்டுகிறேன் என்று சொன்னால் கூட வீடு கட்டத் தேவையான சாமான்களைக் கொண்டு செல் தற்குக்கூட வழி இல்லாத நிலைமையில் அங்கே சாலைகள் இருக்கின்றன. அப்படி இருக்கும்போது அந்த வீடு கட்டுகின்ற திட்டத்தை எப்படி நிறைவேற்றப் போகிறீர்கள் என்று எனக்குச் சந்தேகமாக இருக்கின்றது அத்தோடு அந்த வீடு கட்டுகின்ற திட்டத்தை நல்ல முறையில் நீங்கள் நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டு, அதுவும் முக்கியமாக கடல் ஓரப் பகுதியில் வாழ்பவர்களுக்கும், புயலால் பாதிக்கப்படுகின்ற பகுதியில் இருப்பவர்களுக்கும் முன் உரிமை தந்து அந்த வீடுகளை ஏழை எளிய அரிசன மக்களுக்குக் கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

போக்குவரத்தை எடுத்துக் கொண்டால், உங்களுக்கே நன்றாகத் தெரியும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூட காலையிலே பேசுகின்ற போது அதைப்பற்றி குறிப்பிட்டார்கள். எவ்வளவு சங்கடமான நிலையில் அவைகள் இருக்கின்றன என்பது அனைவருக்கும் தெரியும். தற்போது ஏற்பட்ட வெள்ளச் சேதத்தைப் பார்வையிட வந்த அமைச்சர்கள் கூட அதைப் பற்றி என்ன பேசினார்கள் என்பது எனக்குத் தெரியும். சாலை போக்குவரத்து அடியோடு சீர்கெட்டு போயிருக்கிறது, 7, 8 ஆண்டுகளாக சாலை பராமரிப்பே சரியாக நடைபெறவில்லை என்பதும் என்னுடைய குற்றச்சாட்டு. இதற்கு காரணம் என்ன வென்றால் இந்தச் சாலை பராமரிப்புக்கு போதிய பணம் ஒதுக்கப்படுவது கிடையாது. சரியான முறையில் பாதுகாக்கப் டுவதும் கிடையாது.

அங்கே வேலை செய்கின்ற ஊழியர்களும் போதிய அளவில் கிடையாது. எவ்வளவு இடங்கள் காலியாயிருந்தாலும், அந்தக் காலி அடங்கள் நிரப்படாமல் உள்ளதால் சாலை பராமரிப்பை அவர்களால் கூட சரியாக கவனிக்கப்பட முடியாமல் இருக் கிறது. அதனால் அங்கே பஸ் போக்குவரத்தும், லாரி போக்கு வரத்தும் எவ்வளவோ சங்கடங்கள் அடைய ஏதுவாகிறது. சாலை பராமரிப்புக் குறைவினால் பஸ் போக்குவரத்திலே நட் டத்தைக் காட்டுகின்ற அளவுக்கு இருக்கிறது. இதை எண்ணிப் பார்த்து, போக்குவரத்திற்கு தகுதியான வகையில் சாலைகளை சரி செய்து தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

ஊராட்சி நிலைமைகளைப் பற்றிச் சொல்ல வேண்டியதே இல்லை. இங்கே ஊராட்சி தேர்தல்கள் நடைபெறும் என்று அறிவித்திருக்கிறார்கள். ஆனால் கிராமப்புறங்களிலேயும், மக் களிடத்திலேயும் நிலவும் நிலைமைகளைப் பார்த்தால், ஊராட்சி தேர்தல் வருவதாகவே மக்கள் நினைப்பதே இல்லை. ஏதோ தேர்தலுக்கு வேட்பாளர்களை நியமிப்பதற்காக, நிற்க வைப் பதற்காக கொடுக்கும் பட்டியல் மாத்திரம் பத்திரிக்கையில் வந் கிறதே தவிர, மக்கள் மத்தியிலே தேர்தல் வரும் என்ற நம் பிக்கை இன்றையதினம் கூட இருப்பதாகத் தெரியவில்லை.

இதனுடைய நிலைமைகளை எண்ணிப் பார்க்கவேண்டும். நாங்கள் எல்லாம் மக்களிடத்திலே சொல்கிறபோது, மக்களு டைய குறைகள் என்னவென்றால், ரோடு இல்லை, தண்ணீர் இல்லை, லைட் வசதி இல்லை, குடிதண்ணீர் கிடைக்கவில்லை, சாக்கடை வசதி இல்லை என்றுதான் பெரும்பாலும் சொல் கிறார்கள். இதற்காக பயந்து கூட சில ஊர்களுக்கு போக முடியாத நிலைமை இருக்கிறது. ஊராட்சிகள் சரியாக இயங் காததினால்தான் இப்படிப்பட்ட சீர்கேடான நிலைமையிலே கிராமங்கள் இருக்கின்றன.

அத்தோடு குடிமராமத்து என்ற வேலை எப்பொழுதுமே கிராமங்களில் நடைபெறும் ஒரு வேலை. அதனால் பாசனத் திற்கு தேவையான பணிகள், வாய்க்கால்கள், குளங்கள், கால் வாய்கள் முதலியவை சீர் செய்து அமைத்துக் கொடுக்கப்படும். இது குடிமராமத்து என்ற பணியில் தனியாகவே நடைபெறும் வேலை. ஆனால் இப்போது இந்த குடிமராமத்து வேலைகள் கூட சரிவர நடைபெறாமல். வாய்க்கால்களும், கால்வாய்களும் சீர்கெட்டு கிடக்கின்றன. ஆகவே உடனடியாக பஞ்சாயத்து தேர்தலை வைத்து அவைகளை சரி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து எந்தப் பஞ்சாயத்திலேயும் பணம் இல்லை என்பது நமக்குத் தெரியும். வெள்ள நிவாரணப் பணியிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிற நேரத்திலே மாவட்ட ஆட்சி தலைவர்களிடத் தில, கிராமச் சாலைகள், குடிதண்ணீர் பிரச்னை இவைகளைப் பற்றி பேசுகிறபோது அவர்கள், அந்தந்த ஊராட்சிகளுடைய பணத்தை செலவு செய்யலாம் என்று சொன்னார்கள். ஆனால் கணக்கை பார்க்கிறபோது எந்தப் பஞ்சாயத்திலேயும் பணமே கிடையாது. காரணம் அந்தப் பணம் எங்கே போகிறது என்று எங்களுக்கே தெரியவில்லை. அங்கே இருக்கிற கிராம நல ஊழியர்கள் அதிகாரிகள் எல்லாம் ஏதோ வேலை செய்வதாக. சொல்லி பணத்தை எடுத்து செலவழிக்கின்ற நிலைமை தான் இருக்கிறதே தவிர, உண்மையிலேயே ஊராட்சிகளுடைய பணத்தை எடுத்து, முறையாக குளங்கள் வெட்டுவது, ரோடு போடுவது, லைட் வசதி ஏற்படுத்தித் தருவது போன்ற பணி களுக்கு பயன்படுத்துவதாகத் தெரியவில்லை. ஏனென்றால் அங்கே ஜனநாயக அமைப்பு இல்லை. ஜனநாயக அமைப்பு





இல்லாததினால் என்ன வேலை நடக்கிறது: என்ன வருமானம் வருகிறது என்று கூட அறிகின்ற நிலைமை இல்லை. இப்படிப் பட்ட அவலநிலைமை கிராமங்களிலே இருக்கிறது. அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்தோடு வேதாரணியம் பகுதியிலே ஒரு முக்கியமான பிரச்னை இருக்கிறது. அந்தப் பகுதியிலே குடிகாணி நிலம் என்னும் ஒரு வகையின் கீழ் விவசாயிகள் நிலத்தை வைத்துக் கொண்டு பயிர் செய்து வருகிறார்கள். இந்த குடிகாணி நிலம் என்பதன் கீழ், கோவில் அரசுக்கு செலுத்த வேண்டிய கிஸ்தியை விட குறைவான கிஸ்தியை வசூல் செய்கிறார்கள். காரணம் ராஜாக்கள் காலத்தில், அந்த நிலங்களை சாகுபடி செய்து, அந்த கிஸ்தியை கோவிலுக்கு கொடுக்க வேண்டும் என்று பட்டயம் எழுதி வைத்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். அதன் அடிப்படையில்தான் இன்றும் அந்த குடிகாணி மிரட்வாரிகள் முறை அங்கே இருக்கிறது.

அது குறித்து பல முறை நாங்கள் எல்லாம் முயற்சி செய் தோம். திராவிட முன்னேற்ற கழக அரசு காலத்திலே கூட முயற்சி செய்தோம், அந்தச் சட்டத்தை திருத்தி, அந்த விவ சாயிகளுக்கே அந்த நிலத்தை பட்டா செய்துக் கொடுக்க வேண்டும் என்று, மாண்புமிகு மாதவன் அவர்கள் அமைச் சராக இருந்த போதிலிருந்தே சொன்னோம். அவர் அப்படியே சட்டத்தை திருத்தி பட்டாவாக்க ஏற்பாடு செய்யலாம் என்று சொன்னார். ஆனால் அதற்குப் பிறகு, வெகு நாட்களாகியும் அந்த வேலை நடைபெறாமல் அப்படியே இருக்கிறது. ஆகவே அந்த குடிகாணி மிரயட்டுகள் எனப்படும் சாகுபடியாளர்களுக்கு, அந்த நிலத்தையே குறைந்த விலைக்கு பட்டா போட்டுக் கொடுத்து, வருவாய்த் துறையும், அறநிலையத் துறையும் இணைந்து முடிவு செய்து அந்த நிலத்தை விவசாயிகளுக்கு கொடுத்தால், கோவிலுக்கும் வருமானம் கிடைக்கும், விவசாயி களுக்கும் லாபம் கிடைக்கும். அந்தப் பிரச்சனையை இந்த அரசு கவனத்தில் எடுத்து விவசாயிகளுக்கு பட்டா கொடுப்பதற்கான வழிவகைகளை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்

(நண்பகல் 12—00)

அடுத்து ஈழத்தமிழர்கள் பிரச்சனை குறித்து ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஈழத்தமிழர் பிரச்சனை குறித்து ஆளுநர் உரையிலும், மேடைகளிலும் ஏதோ கண்துடைப்பாக அறிக் கையை வெளியிட்டால் மட்டும் பிரச்சனை தீர்ந்துவிடும் என்று நாங்கள் நினைக்கவில்லை. தினம் தினம் நூற்றுக்கணக்கான ஈழத்தமிழர்கள் செத்து மடிவதை பத்திரிகையில் படிக்கிறோம் இந்த சர்க்கார் இந்தப் பிரச்னையில் உரிய நடவடிக்கை எடுத்து மத்திய சர்க்காரிடம் எடுத்துச் சொல்வார்களா என்றால், ஏதோ தமிழகத்து மக்களை ஏமாற்றுகிற வகையிலே, சரியான காரணத்தைச் சொல்லாமல் மழுப்புகிற வகையிலே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஈழத் தமிழர் பிரச்சனையிலே சரியான கவனத்தைச் செலுத்தி மத்திய சர்க்காரை இந்தச் சர்க்கார் வலியுறுத்தவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து அவர்களுடைய நிலைமையை பார்த்தால், தினம் தினம் ஈழத்தமிழர்கள் அகதிகளாக வந்து கொண்டிருக்கிறார்கள் அவர்களை அகதி முகாம்களில் சேர்ப்பது என்றால் அரசு சில விதிமுறைகளை வைத்திருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனை கவனத்தில் எடுத்துக் சொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்கள் ஈழத்திலிருந்து வந்தால் கடற்கரை ஓரத்தில் இறங்குகிற படகோடு சேர்ந்து வந்தால் தான் அகதிகளாக அனுமதிக்க முடியும் என்று விதிமுறை இருப்பதாக அதிகாரிகள் சொல்கிறார்கள். ஆனால் அங்கிருந்து வரும் அகதிகளுக்கு போட்டோடு வரவேண்டுமென்பது தெரிவதில்லை. அவர்களுக்கென்று சொந்தமாக போட்டுகள் கிடையாது. ஆயிரம், இரண்டாயிரம் கொடுத்து வாடகை போட்டில் வருகிறார்கள். போட்டு சொந்தக்காரர்கள் கரைக்கு போட்டை கொண்டு வருவது கிடையாது. ஆகவே, அங்கே அகதிகளாக வரும் ஈழத்தமிழர்கள் அகதி முகாம்களில் சேரமுடியாமல் பிச்சையெடுக்கிற நிலை என்னுடைய பகுதியில் நிறைய இருக்கிறது. அமைச்சர் அவர்கள் உரிய நடவடிக்கை எடுத்துவிசாரணை செய்து அவர்களை அகதிமுகாம்களில் சேர்க்க ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது) ஆகவே திட்டங்களை நிறைவேற்றுகிற அளவில் சொல்ல வேண்டும். சொல்கிற திட்டங்களை நல்ல முறையில் நிறைவேற்ற வேண்டும். மக்களை ஏமாற்றுகிற திட்டங்களை சொல்ல தேவையில்லை, இப்படிப்பட்ட நம்பிக்கையில்லாத முறையில் அறிவிக்கிற திட்டங்களை அரசு சொல்ல வேண்டாம் என்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு த இராமசாமி: மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இலங்கையிலிருந்து வருகிற அகதிகளை முகாம்களில் சேர்ப்பதில் கொஞ்சம் சிரமம் இருக்கிறதென்று குறிப்பிட்டார்கள். அகதிகள் வந்தவுடன் எந்தளவிற்கு விதிகளுக்கு உட்பட்டு அவர்களை சேர்க்க முடியுமோ அந்த அளவிற்கு அவர்களை துறை முகாம்களில் சேர்த்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய உறுப்பினர் அவர்கள் சொன்ன சங்கடங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. அப்படிப்பட்ட நிலைமை இருக்குமானால் அவற்றை நிவர்த்தி செய்வதற்கு இந்த அரசு பாடுபடும்.

டாக்டர் தே. குமாரதாஸ்; மாற்றுத் தலைவர் அவர்களே, கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது என்னுடைய கருத்துக்களை தெரிவிக்க வாய்ப்பளித்தமைக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முதலாவதாக என்னுடைய மாவட்டத்திலுள்ள ஒருசில முக்கியமான நிகழ்ச்சிகளைப் பற்றி அவையின் கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். குமரி மாவட்டத்தில் ஜனதா கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த வி.டி.எஸ். மணி



என்பவரை குமரி மாவட்டத்தின் காவல்துறையினர் அத்துமீறி அவர் இல்லத்தில் புகுந்து 15–12–1985 அன்று அவரை அடித்து உதைத்து, காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று மறுநாள் ஒரு மணிக்கு விடுதலை செய்திருக்கிறார்கள். அவர் மீது எந்த விதமான வழக்கும் போடவில்லை. அவரை கைது செய்ததற்கான காரணம், குமரி மாவட்டத்தின் சில பகுதிகளில் விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடக்கின்றன. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்த நிகழ்ச்சிகள் நடைபெறுகிற பகுதிகளில் மக்கள் யாரும் வழிநடந்து செல்லமுடியாத சுழ்நிலை இருந்தது. காவல்துறையினர் அவர்களை அடிப்பதும். உதைப்பதுமாக இருந்தது. அதைக் கண்டித்து ஜனதாக் கட்சி சார்பிலே ஒரு கூட்டத்தைப் போட்டு, தவறு செய்தவர்களை கண்டியுங்கள், அதிலே எங்களுக்கு ஆட்சேபணை இல்லை; ஆனால் ஏழை எளிய மக்களை கண்டிக்காதீர்கள் என்று சொன்ன காரணத்தினால். போலீசை கண்டித்து விட்டார் என்று சொல்லி அவரை இரவு 9½ மணியளவில் திருவட்டார் லிமிட்டிலே இருக்கிற சப்இன்ஸ்பெக்டர் தக்களை லிமிட்டிற்குச்சென்று, அவருடை ஜூரிஸ்டிக்ஷனைத் தாண்டிச் சென்று அவரை கைது செய்து அடித்து உதைத்து துன்புறுத்தி இருக்கிறார.

அந்த மாவட்டத்தில் உள்ள அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களும் அதைக் கண்டித்து, ஆர்ப்பாட்டங்களும், பல போராட்டங்களும் நடத்திய பிறகும், எந்தவிதமான பயனும் ஏற்படாமல், தற்போது மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், ஆர்.டி.ஓ. விசாரணை நடத்துவதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை.

நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அவரை அடித்த எஸ்.ஐ.யை நீங்கள் சஸ்பென்ட் செய்துவிட்டு, விசாரணை முடிந்த பிறகு, அவர் தவறு செய்யவில்லை என்று தீர்ப்பு வருமானால், அப்போது அவருக்கு பதவி கொடுப்பதில் எங்களுக்கு எந்த விதமான ஆட்சேபனையும் இல்லை. அடித்தவரை அங்கே வைத்துக் கொண்டு நீங்கள் மீண்டும் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்கக்கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

உதாரணமாகச் சொல்லவேண்டும் என்று சொன்னால், தமிழக முதலமைச்சர் அவர்கள், 1972 ல், மதுரை மாநாட்டில் பேசுகின்ற போது, மாநில சுயாட்சிக்காக, ராணுவத்தைச் சந்திப்பேன் என்று பேசியதை நான் இங்கே சுட்டிக்காட்டி அவருடைய பிரஜையாக இருக்கின்ற நாங்கள் இந்த போலிஸ் அத்துமீறலை எதிர்த்து, போலிசை சந்திக்க வேண்டிய சூழ்நிலை வந்துவிடுமோ என்று நாங்கள் நினைக்கிறோம். ஆனால் நாங்கள் காந்தியத்தில் நம்பிக்கை உள்ளவர்கள், காந்தியத்தை வலிமையாகப் பின்பற்றுபவர்கள், அதே நேரத்தில் சுபாஸ் சந்திரபோஸ் அவர்களைப் பற்றி படித்தவர்கள், தெரிந்தவர்கள். நாங்கள் காந்திய வழியில் செல்ல வேண்டும் என்ற விருப்பத்தில் இருக்கிறோம். எனவே எங்களை சுபாஷ் சந்திரபோஸ் மாதிரி உள்ள கீழ்நிலைக்கு போகவிடாமல் பார்த்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் இன்னும் சொல்லவேண்டும் என்று சொன்னால், காவல்துறையினர் போராட்டங்கள் நடத்தியபோது, தமிழக முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள், மக்களை மக்களே பார்த்துக்கொள்வார்கள் என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலையை, எங்களை நாங்களே பார்த்துக் கொள்ளவேண்டிய சூழ்நிலையை இந்த அரசு எங்களுக்கு உருவாக்கித் தரக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் அரிசி விநியோகத்தைப் பற்றிச் சொல்லுகின்ற நேரத்தில், ரேசன் கடைகளில், அரிசியின் அளவு, குடும்ப கார்டு ஒன்றுக்கு 20 கிலோ என்று இருப்பதை 12 கிலோவாக குறைத்து இருப்பதாக அமைச்சர் அவர்கள் பத்திரிகையிலே சொன்னார்கள். பல பகுதிகளிலே அது இப்போது 6 கிலோவாக மாறி, பிறகு 3 கிலோவாக மாறி இருக்கிறது. அது போல தனியார் சொசைட்டிகளில் ஸ்பெசல் ஆபிசர்களை நியமித்த பிறகும்கூட, அந்த ஸ்பெசல் ஆபிசர்கள் அந்த சொசைட்டிகளை ஏற்று நடத்த பயந்த நிலையில், அவர்கள் அந்த அதிகாரத்தை கையில் எடுக்காத காரணத்தால், அரிசி சரியாகக் கிடைப்பதில்லை. கிளத்தூரில் தனியார் சொசைட்டி ஒன்று இயங்கி வருகிறது. அதைச் சேர்ந்த 4 டெப்போக்களில், 4 கிராமங்களில், இருக்கின்ற டெப்போக்களில் கடந்த மாதம் அரிசி கொடுக்கப்பட்டது. பொங்கல் முதற் கொண்டு, ஒரு கிலோ அரிசி கூட கொடுக்காத நிலைமையிருக்கிறது தனி அதிகாரிகள் பொறுப்பில் அது இருக்குமானால், மக்கள் பாதிக்கப்படுவதை தவிர்த்து இருக்கலாம். எனவே அப்படிப்பட்ட சொசைட்டிகளை அதிகாரிகள் எடுத்து, பொதுமக்களுக்குத் தேவையான அரிசியை விநியோகிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக அதிகமான ஆசிரியர்கள், தனியார் பள்ளிகளி லிருந்து, அரசுப் பணியில் நியமித்து இருக்கிறார்கள். நியமிக்கப்பட்ட ஆசிரியப் பெருமக்களுக்கு, அப்படி சலுகைகள், உதவித் தொகைகள் அவர்களுக்கு வரவேண்டிய கின்றன. அதுமாத்திரம் அல்ல. அந்தப் பணிக்கு வந்தபிறகு, ரிடையர் ஆனவர்களுக்குக் கூட சிக்கல் இருக்கின்ற காரணத்தால், அவர்கள் பெறவேண்டிய சலுகைகளைப் பெறுவதில் காலதாமதம் ஆகிறது. எனவே இதைக் கருத்தில் கொண்டு, அப்படிப்பட்டவர் களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து, குமரி மாவட்டத்தை எடுத்துக் கொண்டால், மாவட்ட வாரியாக தமிழகத்தை எடுத்துக் கொண்டால், அதிகமாகப் படித்தவர்கள் இருப்பது எங்களுடைய குமரிமாவட்டம் தான். இப்படிப்பட்ட மாவட்டத்தில் ஒரு புரபசனல் கல்லூரி கூட கிடையாது. ஒரு சித்த மருத்துவக் கல்லூரியோ, ஆங்கில மருத்துவக் கல்லூரியோ, சட்டக் கல்லூரியோ, அல்லது எஞ்சினி யரிங் கல்லூரியோ, எந்தவிதமான கல்லூரியும் கிடையாது. ஆனால் பக்கத்து மாவட்டங்களை எடுத்துக் கொண்டால், எல்லா



விதமான புரபசனல் கல்லூரிகளும் அங்கே இருக்கின்றன. எனவே நீங்கள் குமரி மாவட்டத்தை ஒட்டுமொத்தமாக புறக்கணிக்கிற சூழ்நிலை இருக்கிறது. எனவே இந்த ஆண்டிலாவது ஏதாவது ஒரு புரபசனல் கோர்ஸ் கொண்ட ஒரு கல்லூரியை அமைத்துத் தருவதற்கு ஏற்பாடுகளைச் செய்வீர்கள் என்று நம்புகிறேன்.

அதைபோல் குமரி மாவட்டத்தில் பலவிதமான இயற்கை வளங்கள் அமைந்துள்ளன, என்பது உங்களுக்குத் தெரியும், அங்கே 100 பேர்கள் வேலை செய்கிற தொழிற்சாலை என்று ஒரு தொழிற் சாலையும் கிடையாது. அங்கே குறிப்பாக ரப்பர் தொழிற்சாலை, கயறு தொழிற்சாலை, முந்திரி தொழிற்சாலை போன்ற தொழிற் சாலைகளை அமைப்பதற்கான நல்ல வாய்ப்புகள் உள்ளன. கச்சாப் பொருளும் அதிகமாகக் கிடைக்கின்றன. எனவே இவற்றை கருத்தில் கெண்டு, அங்கே தொழிற்சாலைகளை அமைக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்று, கர்நாடக மாநிலத்தில் உடல் ஊனமுற்றவர் களுக்கு, சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கு, அரசு உதவிகளைப் பெறுகின்ற ஏழை எளிய மக்களுக்கு இலவசமாக பேருந்துகளிலே பயணம் செய்வதற்கு ஆன ஒரு உத்தரவை, கர்நாடக மாநிலத்திலே அதனுடைய முதல்வர் மாண்புமிகு ஹெக்டே அவர்கள் பிறப்பித்து இருக்கிறார்கள், அதுபோன்று தமிழகத்திலேயும், உடல் ஊன முற்றவர்களுக்கும், சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கும், அரசு உதவி பெறுகின்ற ஏழை எளிய மக்களுக்கும், இலவசமாக பஸ்ஸில் பயணம் செய்வதற்கு வாய்ப்பை உருவாக்கித்தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-10)

அதேபோல் தமிழ்நாடு தேர்வாணைக் குழுவால் பலதரப் பட்ட இலாக்காக்களுக்கு தேர்வு செய்யப்பட்டு இன்னும் போஸ்ட்டிங் இல்லாமல் ஆயிரக்கணக்கான பேர்கள் இருக்கிறார்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்படியே வைக்கப்பட்டு இருக்கிறார்கள். உதாரணமாக சொல்லவேண்டும் என்றால் 112 சித்த மருத்துவ டாக்டர்கள் பதவிகள் தேர்வு செய்யப்பட்டு 1 ஆண்டு காலம் ஆகியும் இன்னும் அமர்த்தப்படாமல் இருக்கிறார்கள். இப்படிப் பட்ட கால தாமதத்தை தவிர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கனிமபொருட்களான கல், மணல் இவைகளை எடுப்பதற்கு உரிமைகளை குமரி மாவட்டத்தில் பல நிறுவனங்கள் பெற்று இருக்கின்றன. அவர்களுக்கு உரிமைகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. அதே நேரத்தில் அவர்கள் அங்கிருந்து கனிமங்களை எடுக்கின்றபோது தடுக்கப்படுகிறார்கள். நான் கேட்டுக் கொள்ளுவது எல்லாம், அவர்களுக்கு நீங்கள் ஒரு குறிப்பிட்டப் பகுதியை ஒதுக்கி—பொது மக்களுக்கு அல்லது யாருக்கும் எந்த

விதமான பாதிப்பும் இல்லாத ஒரு பகுதியை—கொடுத்தால் அது பயன் உள்ளதாக இருக்கும். ஏன் என்றால் இப்போது ஒரு பகுதியில் மணல் எடுப்பதால் ஒரு லோடு 200 ரூபாய் என்று வைத்துக்கொண்டால் அப்படி எடுப்பதை தடுப்பதால் இன்னொரு பகுதியில் போய் எடுக்கும்போது 200 ரூபாய் என்பது 500 ரூபாய் 600 ரூபாய் என்று அதிகமாக போய்விடுகிற சூழ்நிலை ஏற்படுகிறது இதனால் பொது மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். எனவே அனுமதிக்கப்பட்டவர்களுக்கு அந்த லைசன்ஸ் அடிப்படையில் ஏதாவது ஒரு குறிப்பிட்ட பகுதியை ஒதுக்கி அந்தப் பகுதியில் அந்த மணலை எடுப்பதற்கு உத்திரவை அவர்களுக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில்— மின்சாரத்தை பற்றி இங்கே ஆளுநர் உரையில் சொல்லியிருக்கிறார்கள் தமிழகம் மின் தங்கிய மாநிலம் என்று, ஒத்துக்கொள்கிறேன்— மின்சாரம் அங்கே இருப்பதாகவே சொல்ல முடியாது. அவ்வளவு தூரம் மிக மிக மோசமான நிலையில் மின்சாரம் இருக்கிறது. அங்கே இரும்புத் தூண்கள் போடப்பட்டு இருக்கின்றன. பொதுவாக கடல் ஓரப் பகுதியாக அது இருப்பதால் அந்த இரும்புத் தூண் களின் அடிப்பகுதி எல்லாம் கெட்டு எந்த நேரத்தில் சாய்ந்து விடுமோ என்ற ஆபத்தான சூழ்நிலையில் இருக்கிறது. அப்படிப் பட்ட இரும்புத் தூண்களை மாற்றவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மாலை 6 மணிக்கு பிறகு அங்கே பெருவாரியான பகுதியில் டியூப் லைட்டே எரிவது இல்லை. 110 வாட்ஸ் பல்பை போட்டால் அது 40 வாட்ஸ் பல்ப் மாதிரி வெளிச்சம் வருகிறது. அந்த அளவுக்கு வோல்டேஜ் குறைவாக இருக்கிறது. இவைகளை கருத்தில் கொண்டு அந்த பகுதிகளுக்கு மின்சாரத்தை தேவையான அளவுக்கு தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பள்ளிக்கூடங்களை எடுத்துக் கொண்டால் பெரும் தலைவர் காமராஜ் அவர்கள் காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட அந்த பள்ளிகளில் ஓலைகள் கூட இல்லாத சூழ்நிலையில் பல பள்ளிகள் இருக்கின்றன. நடத்த முடியாத சூழ்நிலையில் இருக்கின்றன என்று பொதுப்பணித் துறை சர்டிபிகேட் கூட கொடுத்து இருக் கிறார்கள். அந்த அளவுக்கு மிகவும் மோசமாக இருக்கிறது. அப்படிப்பட்ட பள்ளிகளை உடனடியாக நல்ல முறையில் மாற்றித் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆரம்பச் சுகாதார நிலையங்களை எடுத்துக் கொண்டால் பெருவாரியான சுகாதார நிலையங்களில் 500, 600 வெளி நோயாளிகள் வந்து மருத்துவம் பெற்று செல்கிறார்கள். ஆகவே குறைந்தபட்சம் 20 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக மாற்றித் தருவதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் குமரி மாவட்டத்தில் அரசு ரப்பர் தோட்டம் ஒன்று இருக்கிறது. அங்கே நிறைய தொழிலாளர்கள் வேலை செய்து வருகிறார்கள். இன்னும் ஆயிரக்கணக்கான ஏக்கர்களில்



ரப்பர் பயிரிடக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இவைகளிலும் பயிர் செய்தால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வேலை கிடைப் பதற்கான வாய்ப்பு இருக்கிறது. அங்கே 20 ஆண்டுகளாக சி.எல். ஆகவே பணி செய்து கொண்டு இருக்கிறார்கள். சி.எல். தொழிலா ளர்களைப் பொறுத்தவரையில் மற்ற இடங்களுக்கும் இந்த இடத் திற்கும் வித்தியாசம் உண்டு. இங்கே வேலை செய்யக்கூடியவர்கள் வெளியிடங்களில் இருந்து வந்து வேலை செய்கிறார்கள். அவர்கள் வருவதற்கு 3 ரூபாய் 4 ரூபாய் செலவு செய்து வரக்கூடியவர்கள். அப்படி செலவு செய்து வந்தவர்களுக்கு வேலை இல்லை என்று சொன்னால் வேலையும் இல்லாமல் 3 ரூபாய் 4 ரூபாய் செலவும் ஆகக்கூடிய நிலைமை இங்கே இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ் நிலையில் அவர்களை அங்கே நிரந்தரமாக ஆக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல் கழிந்த ஆண்டு சட்டமன்ற கூட்டத் தொடரில் கிள்ளியாறு தொகுதிக்கு உட்பட்டது 4½ கோடி ரூபாய்க்கு குடிநீர் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு உத்தேசித்து அதற்கு எல்.ஐ.சி. லோனும் ரூபாய் 87 லட்சம் சேங்ஷன் ஆகி ஓராண்டு ஆகிவிட்டது இதுவரை எந்தவிதமான ஆக்கபூர்வமான பணியும் எந்த செக்ஷனும் ஆரம்பிக்காத சூழ்நிலையில் இருக்கிறது. எனவே அவற்றை கவனித்து நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள் கிறேன்.

கடல் ஓர சாலை அமைப்புச் சம்பந்தமாக பலவிதமான பால இணைப்புகள் செய்யப்பட்ட சூழ்நிலையில் நான் கேட்டுக்கொண் டதற்கு இணங்க அந்த கணபதியான்புரம் பாலத்திற்கு 1 கோடியே 6 லட்ச ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டு அங்கே எந்தவிதமான பணியும் மேற்கொள்ளப்படவில்லை. கேட்டால், பார்ட்—2 ஸ்கீமில் எடுத்து இருக்கிறோம் என்று சொல்கிறார்கள். நான் இந்த மாமன்றத்தில் கேட்கிறேன்— பார்ட்—2 ஸ்கீம் என்று எடுக்கிற விதத்தில் ஏதாவது ஒரு வேலை, எங்கேயாவது எடுத்திருக்கிறார் களா, யாராவது சொல்ல முடியுமா என்று கேட்க விரும்புகிறேன். பார்ட்-2 ஸ்கீம் என்பது அதோடு முடிந்துவிடுகிற சூழ்நிலை. எனவே, அப்படிப்பட்ட சூழ்நிலை மாறி, அந்தப் பாலத்தை உடனடியாக முடிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மூடிக் கிடக்கின்ற பஞ்சாலைகளை மிக விரைவில் திறந்து வைப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

நீர்ப்பாசனத் துறையைப் பொறுத்தவரைக்கும், விவசாயத் திற்கு முதலாவதாக, இந்த சேனல்-சிற்றாறுப்பட்டணங்கால் சேனல்-இவைகள் எல்லாம் வெட்டுகின்றபோது, சில பகுதிகளில் சேனல் வெட்டமுடியாத சூழ்நிலை ஏற்பட்டதன் காரணமாக, பின்பு வெட்டித் தரலாம் என்று சொன்னார்கள். கடந்த கூட்டத் தொடரில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற

போது, 34 கோடி ரூபாய் குமரி மாவட்டப் பொதுப்பணித் துறைக்கு ஒதுக்கி இருப்பதாகச் சொன்னார்கள். இந்த 34 கோடி ரூபாயில் சில இலட்சங்கள் செலவு செய்து புதிதாக கிளை சேனல்கள் அமைத்தால் பல ஆயிரக்கணக்கான பகுதிகளில் புதிதாக விவசாயம் செய்ய முடியும் என்று சொல்லி, அங்கே உள்ள அதிகாரிகளிடம் சென்று பேசினால், பண வசதி ஒதுக்கீடு செய்து இருக்கிறார்கள். ஆனால் பணம் இன்னும் வந்து சேரவில்லை என்று சொல்கிறார்கள். இவற்றை எல்லாம் கவனத்தில் கொண்டு அதை உடனடியாக செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தேங்காய்ப் பட்டணம் பகுதியில் மூன்று கோடி ரூபாய் அளவில் மீன் பிடித் துறைமுகம் அமைத்துத் தருவதற்கான திட்டம் இருப்பதாகச் சொன்னார்கள். அது எந்தவிதமான முன்னேற்றமும் இல்லாமல் தேங்கிக் கிடக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. எனவே, அதையும் கவனத்தில் கொண்டு, உடனடியாக மூன்று கோடி ரூபாய் அளவில் மீன்பிடித் துறைமுகத்தை அமைத்துத் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல், என் தொகுதிக்குட்பட்ட பகுதிகளான மிடாலம் இணையம், புத்தன் துறை, இராமன் துறை ஆகிய பகுதிகளில் எல்லாம் அடிக்கடி கடல் கொந்தளிப்பு ஏற்பட்டு, அங்கே உள்ள மீனவர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகிற சூழ்நிலை இருக்கிறது. அது மாத்திரம் அல்ல. கடல் தடுப்புச் சுவர் என்று அமைத்து இருக்கிற காரணத்தால், அங்கே இருக்கிற மீனவத் தொழிலாளர்கள் மீன் பிடிக்கச் செல்ல முடியாத சூழ்நிலை இருக்கிறது. எனவே, அவர்களுக்கு மீன் பிடிக்கப் போவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்

என் தொகுதிக்குட்பட்ட பகுதியில், எனக்கு முன்னால் சட்ட மன்ற உறுப்பினராக இருந்த விஜயராகவன் அவர்கள் இந்த மாமன்றத்தில் கேட்டு 1982 ஆம் ஆண்டு, ஒரு கால்நடை மருத்துவமனை தொடங்கிட உத்தரவாதம் அளிக்கப்பட்டிருக்கிறது. இதுவரைக்கும், அந்தப் பகுதியில் ப்ராப்பர் ஜங்ஷன் டவுனைத்தான் பார்க்கிறார்களே தவிர டவுனுக்குட்பட்ட பகுதியைத் தேர்ந்தெடுக்கத் தயாராக இல்லை. எனவே, அப்படிப் பட்ட சூழ்நிலை மாறி, டவுனை விட்டுக் கொஞ்சம் கீழ்ப் பகுதி, டவுன் பஞ்சாயத்துக்குட்பட்ட பகுதியில், இடம் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். அந்தப் பகுதியில் உடனடியாக கால்நடை மருத்துவமனையை அமைத்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இப்படிப்பட்ட குறைகளை எல்லாம்—நிறைய வைத்து இருக்கிறன். நேரம் குறைவாக கொடுத்த காரணத்தால் முடித்துக் கொள்ளலாம் என்று கருதுகிறேன்—பல வட்டாரங்களிலே உள்ள இப்படிப்பட்ட சூழ்நிலைகளைப் பார்க்கிறபோது, பலவிதமான



பிரச்சினைகள் பலவிதத்தில் அமைந்து இருந்தாலும், குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஒட்டுமொத்தமாகப் புறக்கணிக்கப்பட்ட துர்ப்பாக்கியமான சூழ்நிலை இருக்கிறது. இந்த அரசு அதன்பால் அக்கறை கொண்டு, அந்த மாவட்டத்திற்கு விமோசனம் தரவேண்டும் என்று கேட்டு வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி முடிக்கின்றேன். வணக்கம்.

*டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1986 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 8 ஆம் தேதி அன்று இரு அவைகளும் சேர்ந்து சட்டமன்றக் கூட்டு கூட்டத்தில், ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு நன்றி தெரிவிக்கக் கூடிய வகையில், மாண்புமிகு உறுப்பினர் சின்னராசு அவர்கள் முன் மொழிந்த தீர்மானத்தை வழி மொழிந்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் என்னுடைய உணர்வுகளை இந்த மன்றத்திலே வைக்க முன் வருகின்றேன்.

இந்த ஆண்டு ஆளுநர் உரை, மனிதாபிமானத்தின் மறு பதிப்பு என்று சொல்லலாம். நாட்டின் அவல நிலையைப் போக்கக்கூடிய, அவல நிலையிலே இருக்கக்கூடியவர்களுக்கு அடைக்கலம் கொடுக்கக்கூடிய அற்புதத் தயாரிப்பு; நடைபெற்ற ஆளுநர் உரை, நம்மை வாழ வைக்கும் தெய்வத்தின் குரலாக ஆளுநர் அவர்கள் வாயிலாக இந்த மன்றத்திலே பல்வேறு உணர்வுகளை வெளிப்படுத்தி இருக்கிறது என்று நிச்சயமாகச் சொல்லமுடியும்.

பாம்புக்குப் புற்று உண்டு. குருவிக்கு கூடு உண்டு. சிங்கத்திற்கு குகை உண்டு. மனிதனுக்கு வீடு உண்டா என்று பல நாட்களாக, பல்வேறு அரசியல் தரப்பிலும் கேட்டுவந்த கேள்விகளுக்கு முழுமையாக விடை அளிக்கக்கூடிய வகையிலே இந்த ஆளுநர் உரையிலே விடை கிடைத்திருக்கிறது என்று சொன்னால் அது மிகை ஆகாது.

அது மட்டும் அல்ல. மின்சார உற்பத்தி, வீடு கட்டிக் கொடுத்தல், குடும்ப நலத் திட்டம் இப்படிப் பல்வேறு திட்டங்கள் உலக நல்வாழ்வின் உயர்ந்த எண்ணத்தை நிலைநாட்டக்கூடிய வகையிலே அமைந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகை ஆகாது.

இந்தியத் துணைக்கண்டத்திலேயே, தமிழ்நாடு, நாட்டு நலப் பணித்திட்டத்தில் நல்ல முறையில் முன்னேற்றம் பெற்றுஇருக்கிறது என்று சொல்லக்கூடிய வகையில், குடும்ப நலத் திட்டத்திற்கு 2.5 கோடி ரூபாயை பெற இருக்கிறது என்று சொன்னால், மத்திய அரசு என்ன கருதுகிறதோ, மாநில அரசு அதை நிறைவேற்றுகிறது என்பது மட்டும் அல்ல. இந்தியத் துணைக் கண்டம், தமிழ்நாடு என்று பார்க்காமல் உலக அளவில் மனிதனுடைய மேம்பாட்டை இப்படித்தான் நிர்ணயம் செய்யவேண்டும் என்பதற்கு ஒரு முன்னோடியாக, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தமிழக அரசு அதை நிலை நிறுத்துகிறது. அதை நடைமுறைப்படுத்துகிறது என்று சொல்லக்கூடிய வகையிலே ஆளுநர் உரை இங்கே இருக்கிறது. இங்கே ஆட்சிப் பீடத்திலே

(பிற்பகல் 12-20)

இருக்கிற மாண்புமிகு முதலமைச்சரைப் பற்றி உள்ளேயும், வெளியிலேயும், அவர் வெற்றி பெற்று இங்கே மீண்டும் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்து கொண்டிருக்கின்ற இந்த நேரத்திலேகூட; பல்வேறு விதமான விமர்சனங்களைச் சொல்லிக் கொண்டிருப்பது சிலருடைய வாடிக்கையான குணமாகும். உடல் ஊனமுற்றவர் ஆட்சி செய்யக் கூடாது என்று கூட சொன்னார்கள். ஒரு காலத்திலே ஒருவர் இருந்தார். அவர் வெற்றி பெறுவதற்கு போர்களத்தில் ஈடுபட்டபோது அவர் அங்கஹீனம் அடைந்தார். அங்கஹீனம் அடைந்தவர் ஆட்சிப் பீடத்தில் அமர்கிறபோது அர்த்தசாஸ்திரத்தில் இருப்பதைச் சுட்டிக்காட்டி, ஆட்சிப் பீடத்திலே அமரக் கூடாது என்று சொன்னார்கள். அவர் என்ன செய்வது என்று பார்க்கிறபோது ராமானுஜர் அவர்களைப் பார்த்தார்கள். நீங்கள் நாட்டு நலப்பணிகளில் ஈடுபடுங்கள். கோயிலைக் கட்டுங்கள், கோபுரங்களைக் கட்டுங்கள், குளங்களை வெட்டுங்கள், ஆட்சி உங்களிடத்திலே தானேவரும், மன்னவர் உங்களிடம் அடைக்கலம் ஆவார் என்று சொன்னார்கள். ஜெயின் பிட்டித் தேவராக மாறிய அவர், அந்த நாட்டை வளப்படுத்தக் கூடிய திட்டங்களை நிறைவேற்றி, மன்னவருக்கே வழிகாட்டக் கூடிய வகையில் இருந்தார் என்று நமக்கு வரலாற்றில் கூறப் பட்டிருக்கிறது.

விஜயச்சோழன் என்பவன் மிகச் சிறப்பாக ஆண்டிருக்கிறான் அவன் கால்களை இழந்தவன் பிற்கால சோழ சாம்ராஜ்யத்தை உருவாக்கியவன் கி.பி. 8-ஆம் நூற்றாண்டிலே இருந்தவன். 96 விழுப்புண்களைப் படைத்தவன், ஒரு கால் நெருப்பிலே கருகியதால் கரிகால் சோழன் என்ற பெயர் கொண்டு இருந்தவன். அவன்சிறைக் கைதிகளை வைத்து கல்லணையைக் கட்டியவன். அப்படிப்பட்ட நிலையிலே, புரட்சித் தலைவர் அவர்கள் உடல் ஊனமுற்றிருந்தார் என்றவுடன், அவர் ஆளலாமா என்றெல்லாம் எப்படிப்பட்ட வதந்திகளை கிளப்பிவிட முடியுமோ, அப்படியெல்லாம் செய்தார்கள். இதுவரையில் நாம் பெற்ற சரித்திரம் எல்லாம் உடல் ஊனமுற்றவர் ஆளக்கூடாது என்று ஒரு பக்கத்திலேயும், வேறொரு பக்கத்திலே அவர்கள் ஆண்டாலும் ஆளலாம்; ஆண்டாலும் அவர்களை ஒரு நிலையிலேயே வைத்திருந்தார்கள். ஆனால் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் தன்னுடைய மிகப் பெரிய சோதனையைக் கடந்து, தன்னுடைய பயிற்சியினாலே, தன்னுடைய முயற்சியினாலே, மருத்துவ உதவியினாலே, பொதுமக்களின் உணர்ச்சியினாலே மிகப் பெரிய முன்னேற்றம் பெற்று, பழைய நிலையிலேயே தம்மை உருவாக்கி ஆட்சியை அமைத்துக் கொண்டிருக்கக் கூடிய ஒரு பாங்கு, உலக சரித்திரத்திலேயே, ஏன் இதிகாசம், இலக்கியம், வரலாறு இவற்றிலே கூட காணமுடியாது. அந்த வகையில், ஒரு நல்ல ஆட்சியை அவர் இந்த நேரத்தில் நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்றால் அது மிகையாகாது என்பதை நான் இங்கே குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். இங்கே பேசுகின்ற போதுகூட, தோழமைக் கட்சியிலே இருக்கின்ற நண்பர்கள் அடிக்கடி என்ன



காரணத்தாலோ மதுவிலக்கைப்பற்றிச் சொல்லிக் கொண்டிருக் கிறார்கள். தொட்டுக் கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களுக்கு எல்லாம் சொல்வது வரலாற்றிலே, அமெரிக்காவில் தேர்தல் நடந்தபோது, ஆப்ரகாம் லிங்கன் நின்றார். அவரை எதிர்த்து நின்றவன், அவரைப்பற்றி, அதாவது ஆப்ரகாம் லிங்கன் சாராயக் கடையிலே வேலை செய்கிறார் என்று பிரச்சாரம் செய்தாராம். அதற்கு ஆப்ரகாம் லிங்கன், பதில் சொல்கிறார். ''ஆம் நான் சாராயக் கடையில் வேலை செய்யக் கூடியவன். ஆனால் என்னை எதிர்த்து நிற்கக் கூடியவன் என்னிடத்தில் சாரயத்தை வாங்கிக் குடிக்கக் கூடியவன்' என்று சொல்லியிருக்கிறார் அந்த அளவிற்கு சாராயக் கடையைப் பற்றிப் பேசுகிறவர்கள், எங்கள் ஆட்சியைப் பற்றி சொல்லக் கூடியவர்கள் சாராயக் கடை நடத்தாமல் இருக்கிறார்களா? அவர்கள் சாராயத்தை குடிக்காமல் இருக்கிறார் களா? அதுவும் கடை நடத்தவேண்டுமென்று எந்தெந்த வகையில் பரிந்துரைகளை அனுப்பியிருக்கிறார்கள் என்பதை எல்லாம் ஒரு கணம் எண்ணிப் பார்க்கவேண்டும். இப்படிப்பட்ட பிரச்சினை மாநில பிரச்சினை என்று அல்லாமல், உலகப் பிரச்சினையாக நாம் அனைவரும் உட்பட்டு இருக்கிற இந்தியத் துணைக் கண்டத்தின் பிரச்னையாகக் கொண்டுவருவதற்கு அனைவரும் முயற்சித்தால், நாம் முயற்சியில் வெற்றி பெறுவோம் என்பதில் கவலையில்லை. அந்த வகையில் அவர்கள் நடந்துகொள்ள வேண்டும். அப்படிப்பட்ட எண்ணங்கள் உருவாகவேண்டும். அவர் நல்லமுறையில் வெற்றி பெறக்கூடிய வகையில், பேச்சுக்கள் இருக்கவேண்டுமே தவிர, வீண் வேதாந்தங்களைப் பேசுவது எப்படி, 'ஏட்டு சுரைக்காய் கறிக்குதவாது' என்பது போல அல்லாமல் தூய எண்ணத்தோடு இருக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தியத் துணைக் கண்டத்திலே தமிழ்நாடு தன்னாட்சி பெற்றதா தனியாட்சி பெற்றதா என்று பார்க்கிறபோது தனி யாட்சி பெற்றதல்ல தன்னாட்சி பெற்றது. இந்தி ஆட்சி மொழியா, தேசிய மொழியா என்ற விளக்கத்தை தோழமைக் கட்சிகள்தான் சொல்லவேண்டும். இந்தி தேசிய மொழியாக இருந்தால் இந்திக்குத் தனி சலுகைகள் மத்திய அரசு வழங்கு வானேன். மத்திய அரசு இந்தி பேசும் மாநிலங்களிலே அந்தச் சலுகைகளை அளித்தால்கூட பரவாயில்லை. ஆனால் சென்னை யில் இந்தியில் பல பல வெளியீடுகள். அரசுப் பணத்தைச் செலவிட்டு இந்திக்கு விளம்பரமா? இந்தியாவா? இந்தியா? இந்தியா என்றால் இந்தி என்று சொல்கிற போலியான விளம்பரம் எதற்காக? 1893 ஆம் ஆண்டிலே சென்னையிலே ஒரு கல்லூரி ஆங்கிலேயர்களால் ஏற்படுத்தப்பட்டது? அதை ஓல்டு காலேஜ் என்று சொல்வார்கள், என்று கருதுகிறேன். மாநில மொழியைக் கற்றால் நிர்வாகத்திற்கு நல்லது என்று கருதி மாநில மொழியைக் கற்க ஆங்கிலேயன் கல்லூரி ஏற்படுத்தினான். உபகாரச் சம்பளம் கொடுத்தான். வெள்ளைக்காரன் தமிழ்ப் படிப்பதற்காக செங்கற் பட்டு தாண்டவராய முதலியாரை நியமனம் செய்தான். ஆங்காங்கே எந்த எந்த மொழிகள் இருக்கின்றனவோ அந்த

மொழிகளை நாம் புரிந்துகொண்டால்தான் அந்தந்த மக்களின் உணர்வுகளுக்குத் தகுந்த மாதிரி நாம் நடந்து கொள்ள முடியும் என்று வெள்ளைக்காரன் அந்த முறையைக் கையாண்டான். ஆனால் இன்றைக்கு மத்திய அரசு செய்வது என்ன? மாநில மொழியை வளர்ப்பதற்கு தனியாக நடவடிக்கை எடுக்கத் தவறி விட்டு இந்தியை வளர்க்க அரசுப் பணத்தைச் செலவிடுகிறது. சென்னை தொலைக்காட்சி நிலையத்தில் இந்திக்கு தனியாக ஆபீசர். இந்தி படித்தால் எவ்வளவோ சலுகைகள். இந்தியைப் படிப்பவர்களுக்கு உதவிகள், புரமோஷன். இந்தியில் புதுப்புதுப் புத்தகங்கள் வெளியிடப்படுகின்றன. இந்தி படிப்பவர்களுக்கு வசதிகள், தனி சலுகைகள் கொடுக்கப்படுகின்றன. இப்படி இந்தி வளர்க்கப்படுகிறது அரசுப் பணத்தில்.

இன்றைக்கு பஞ்சாப், அரியானா தகராறுக்கு அடிப்படைக் காரணமே இந்தி மொழிதான் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. கணக்கெடுப்பிலே பலவேறு பிரச்சினைகள் அங்கே இருந்து கொண்டிருக்கின்றன. ஆகவே இந்தி ஆட்சி மொழியா, தேசிய மொழியா என்ற பிரச்சினை வந்துவிடும். ஆகவே காங்கிரஸ் நண்பர்கள் சிந்தித்து இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும் அல்லது அவர்கள் தங்கள் உரையிலே பதில் சொல்ல வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்து பாரதப் பிரதமர் அவர்கள் வெளிநாடுகளுக்கு விஜயம் செய்திருக்கிறார். அதைப்பற்றிய ஒரு செய்திப் படத்தை சென்னையிலே உள்ள பைலட் தியேட்டரில் நான் பார்த்தேன். பாரதப் பிரதமர் வியட்நாம் செல்கிறார். அங்கே அவருக்கு இந்தியிலும் ஆங்கிலத்திலும் வரவேற்பு. இந்தியாவில் ஆட்சி மொழி என்ன என்று அவர்கள் கேட்டார்களோ அல்லது அவர் களுக்கு இவர்கள் என்ன பதில் சொன்னார்களோ தெரியவில்லை. இரண்டு மொழிகளிலே இவருக்கு அங்கே வரவேற்பு இருக்கிறது. வேண்டுமானால் நீங்கள் அதைப் போய் பார்த்துவிட்டுப் பேசுங்கள். இந்தியா என்றால் இந்தி என்ற எண்ணம் உலகத்திலே இருக்கிறவர்களுக்கு வருமல்லவா? மாநில மொழிகள் நசுங்கிவிடு மல்லவா? இதை அவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உறவை வைத்து உரிமையை பறிக்க எண்ணக்கூடாது. நமக்கு இருக்கிற உறவு பலப்படவேண்டுமானால் உரிமையைக் கைவிடக் கூடாது. மகளை கல்யாணம் செய்து கொள்ள சொல்லமாட்டேன், ஆனால் காதலிக்க விட்டுவிட்டேன் என்று சொன்னால் காதல் பிறகு என்ன ஆகும் என்று உங்களுக்குத் தெரியும். இதை அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். இந்த நிலையை காங்கிரஸ் நண்பர்கள் சிந்தித்தால் ஒரிய காங்கிரஸ் தன்னுடைய இடத்தை தக்க வைத்துக்கொள்ள முடியாது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.





திரு. டி. கிர்த்தகிரி கவுண்டர்: நண்பர் பேசும்போது காங்கிரஸ் காரர்கள் இந்தியை ஆதரிப்பதாகவும் அவர் மட்டும்தான் தமிழுக்கு ஆதரவாக இருப்பது போலவும் பேசினார்கள். நாங்கள் தமிழுக்கு எதிரானவர்கள் அல்ல. இந்தி தமிழ்நாட்டில் அந்த அடிப்படையில் இருக்காது. இஷ்டபாடமாகத்தான் இருக்கும். கட்டாயப்பாட மாக்கப்பட்டால் திணிக்கப்பட்டால் அதை காங்கிரஸ்காரர்கள் ஆதரிப்பதுபோல அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். அவர்கள் பேசுவது பொருத்தமாக இல்லை. இந்தி தமிழகத்திலே திணிக்க வேண்டும் என்பது கிடையாது. நாங்கள் இந்த சர்க்காரோடு அதில் ஆதரவாக இருப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

(பிற்பகல் 12-30)

டாக்டர் கே. சமரசம்: பெரியவர் அவர்களின் கருத்துக்கு நன்றி. நான் உண்மையிலேயே பெரியவரின் கருத்துக்கு மிகமிக மதிப்பு அளிக்கிறேன். அதனால்தான் நான் முன்பே சொன்னேன், கல்யாணம் செய்து கொடுக்கவில்லை, ஆனால் காதலிக்க விட்டு விட்டேன் என்று சொன்னால், காதல் சாதலில் மோதலிலே போய் விடும். இந்தியை எந்த வகையிலே உள்ளே நுழைக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டுமென்பதற்காகத்தான் தொலைக்காட்சியையும், வியட்நாமில் நடந்த நிகழ்ச்சியையும் நான் தொகுத்துக் கொடுத்தேன்.

அதுமட்டுமல்ல; இந்தியா என்பது கூட இடையிலே வந்தது தான். விக்டோரியா மகாராணியின் அறிக்கைக்குப் பிறகு தான் 56 நாடுகள் ஒன்றாக இணைந்து இந்தியா என்ற நிலை வந்தது. அதற்கு முன்பு காங்கிரசினுடைய வரலாற்றை எடுத்துப் பார்த்தால் பாரத தேசம், பாரதம் என்றுதான் இருக்கிறது. இன்றைக்கிருக் கின்ற சிக்கல் போக வேண்டுமானால், இந்திய நாடு பாரத நாடு, பாரதம் என்று மட்டுமே இருக்க வேண்டும் அல்லது யுனைட்டெட் ஸ்டேட்ஸ் ஆப் இந்தியா என்கின்ற நிலையில், மாநிலங்களுக்கு இருக்கின்ற அதிகாரங்களையும், உரிமைகளையும் முழுமையாகக் கொடுத்து மக்கள் மத்தியிலே நாம் தலைசிறந்து விளங்கக்கூடிய வகையில் இந்தியத் துணைக் கண்டம் இருக்கிறது என்பதை எடுத்துச் சொல்லும் வகையில் இராஜீவ் காந்தி அவர்கள் "யுனைட்டெட் ஸ்டேட்ஸ் ஆப் இந்தியா" என்று அறிவிக்க வேண்டும். அதுதான் சாலச் சிறந்தது; ஜனநாயகத்தின் விழுதுகள் இங்கே பரவியிருப்பதாக உலக அரங்கிலே அதற்கு நல்லதொரு பெயரும் கிடைக்கும், அத்தகைய நேரம் வரும் என்பதை மட்டும் இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

அதுமட்டுமல்ல; மகாத்மா காந்தியடிகள் கூட தமிழ்நாட்டிற்கு வந்தார்கள். தமிழ்நாட்டிற்கு அவர்கள் வருகின்றபொழுதும் சரி, தென்னாப்பிரிக்காவிலே இருக்கின்றபொழுதும் சரி, எட்டய புரத்திலே போய்ப் பார்த்தாலும் சரி, பாரதி மண்டபத்திலே அந்த மகாத்மா காந்தியடிகள் தமிழிலே எழுதி தமிழிலே அவர்

கையெழுத்துப் போட்டு இருக்கிறார்கள் என்பது தெரியும். இவையெல்லாம், ஒரு மாநில மொழியை அழிக்கக்கூடாது: அப்படி அழித்தால் அது பரிபூரண சுதந்திரத்தை நாம் பெற்றதாக இருக்காது என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டாக, சுதந்திரம் பெறுவதற்கு முன்பாகவே, காங்கிரஸ் பேரியக்கம் மக்கள் மத்தியிலே நடந்து கொண்டது. அதை நான் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன். அந்த நிலைக்கு வருவதற்கு நீங்கள் மேலும் முயற்சிக்க வேண்டும் என்று இந்த மன்றத்தின் வாயிலாக நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஆகவே, பிரிட்டிஷ்காரர்கள் கல்லூரியை ஏற்படுத்தினார்கள்; காந்தி தமிழ் கற்றுக் கொண்டார்; நேரு இங்கே பாராளுமன்ற உறுப்பினராக இருந்த தோழர் ஈ.வி.கே. சம்பத், எம்.பி, அவர்களுக்கு எழுத்து மூலமாக பதில் கொடுத்தார்கள். நேரு தான் கொடுத்த உறுதி மொழியைக் கடைசிவரையிலேயும் காப்பாற்றினார்; அவர் மறைந்த பிறகு இந்திராகாந்தி அவர்களிடத்தில் எடுத்துச் சொன்னபொழுது அவர் நேரு சொன்னதை நிறைவேற்றுவேன், எந்தக் காரணத்தை முன்னிட்டும் இந்தி திணிக்கப்படமாட்டாது என்று உறுதி சொல்லும் நிலையிலேயே இருந்தார்கள். ஆனால் இன்றைக்கு இந்த வியட்நாம் நிகழ்ச்சியும், தொலைக்காட்சி நிகழ்ச்சியும், இராஜீவ் காந்தி அவர்கள் பல்வேறு வகைகளிலே மகத்தான புரட்சியைச் செய்து வரக்கூடிய அவர் இந்தியையும் வேகமாகப் புகுத்தி விடுவதற்கு முயற்சிக்கிறாரா என்ற ஐயப்பாடு மாநிலங்களிலே ஏற்பட்டு இருக்கின்றது என்ற காரணத்தால், இதற்கு ஒரு உறுதியைக் கொடுக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அப்படிப் பட்ட நிலைமை ஏற்ப்பட்டாலொழிய இது அடங்காது. இந்தக் குமுறல் நிற்காது என்பதை இந்த நேரத்திலே நான் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அடுத்தபடியாக, நடந்து முடிந்த ஆண்டு இளைஞர் ஆண்டு. பாரதி பாடினான்; பல்வேறு எண்ணங்களையும், உணர்வுகளையும் சுதந்திரம் அடைவதற்கு முன்பாகவே இந்த நாட்டிலே தேசிய கவியாக இருந்த பாரதி பல கருத்துக்களை நமக்கு முன்னோட்டமாக எடுத்து வைத்துவிட்டுச் சென்றிருக்கிறான். ஆனால் பாரத நாடு என்றும், பாரத தேசம் என்றும் சொல்லக்கூடிய நாம் அவர் வழியைப் பின்பற்றுகிறோமா என்று பார்த்தால் இல்லை என்று சொல்லக்கூடிய நிலையிலேதான் இருக்கிறது.

''கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம்''

என்று சொன்னான். அப்படி அவர் சொன்னதன் நோக்கம், தேசிய ஒருமைப்பாட்டை வலியுறுத்துவதற்காக, காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை ஒருங்கிணைந்து இருக்க வேண்டுமென்றால் இது தேவை என்று சொன்னார். அப்படியானால் கங்கை காவே இணைப்பு என்பது மிகமிக தேவையான ஒன்று. இந்திய துணைக் கண்டத்திலே வட நாட்டிலே ஒரு ஆண்டுக்



வெள்ளத்தால் 500 கோடி ரூபாய்களுக்கு மேலாகவும், இந்தியத் துணைக் கண்டத்தில் தென்னாட்டிலே வறட்சியால் ஆண்டுக்கு ஏறக்குறைய 500 கோடி ரூபாய்க்கு மேலாகவும், இந்தியத் துணைக் கண்டத்திலே வறட்சி, வெள்ளம் என்ற காரணங்களுக்காக பணம் ஒதுக்கக்கூடிய சூழ்நிலை மத்திய அரசாங்கத்திற்கு ஏற்படுகிறது. இதனால் எந்த அளவிற்கு இந்தியத் துணைக் கண்டம் வளர்ச்சி பெற வேண்டுமோ அந்த வளர்ச்சியைப் பெறாத நிலையிலேயே இருக்கிறது. ஆகவே, இந்த நிலையில் இதை எண்ணிப் பார்த்து, பாரதி சொன்ன அந்த நிலையை எண்ணிப் பார்த்து, ''கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம் காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம்'' என்ற வகையில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் வறட்சி ஒழியும், வெள்ளமும் குறையும். நாம்—இந்த நாட்டு மக்கள்—இந்திய மக்கள் சிறப்புடன் வாழவும் முடியும். அதற்கேற்ற நடவடிக்கைகளை நடந்து முடிந்த இளைஞர் ஆண்டிலே நமக்கு எடுத்துச் சொல்லக்கூடிய வகையிலே அப்பொழுதே செய்திருக்க வேண்டும். அப்படிச் சொன்ன கருத்துக்களை இன்று 1986 ஆம் ஆண்டிலேயாவது நிறைவேற்ற வேண்டும். ஏனென்றால் இளைஞர்கள் நினைத்தால் எல்லாவற்றையும் முடித்து விட முடியும். நாம் இராணுவத்தைப் பல வகைக்குப் பயன்படுத்துகிறோம். புயல் ஏற்பட்டால், சேதம் ஏற்பட்டால், பிணம் எங்காவது விழுந்தால் அவர்களைப் பயன் படுத்துகிறோம். அப்படிப்பட்ட இராணுவத்தை, இளைஞர்களை, படித்தவர்களை, பல்வேறு வகையிலே வேலையற்றிருக்கக் கூடியவர்களை எல்லாம் பயன்படுத்தி, கங்கை—காவேரி இணைப்பில் நாம் ஈடுபடுத்தினால் இந்திய நாட்டினுடைய பொருளாதாரம் மிகவும் நல்லமுறையிலே சீரடையும் என்பது என்னுடைய துணிவான, திடமான கருத்தாகும்.

ஏற்கனவே, இந்தியப் பிரதமராக இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் இருந்தபொழுது, நம்முடைய தமிழக முதல் அமைச்சர் மூலமாகக் கூட, நாம் அந்தக் கருத்தை எடுத்து வைத்து, திட்டம் அனுப்பி இருக்கிறோம். அதை அவர்கள் நல்ல முறையிலே பரிசீலனை செய்து கொண்டு வரவேண்டும். அப்படிக்கொண்டு வந்தால் இந்த நாட்டின் வளம் பெருகும் என்று இந்த நேரத்திலே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே அரசு ஊழியர்களைப் பற்றிச் சொல்கிறபொழுது, ஆசிரியர்கள் பிரச்னைகளைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன், எந்த வேலையாக இருந்தாலும் சலிப்பு ஏற்படாமல் பார்த்துக் கொள்ளக்கூடிய வகையிலே நிர்வாகம் இருக்கவேண்டும். நிர்வாகம் எந்தத் துறையிலே, அரசு ஊழியர்களையோ, ஆசிரியர்களையோ, அல்லது இன்னும் பல ஊழியர்களையோ, நியமனம் செய்யும்போது; மேநாட்டைப் போல் ஒப்பந்த அடிப்படையிலே மூன்று ஆண்டுக் காலத்திற்கு அந்தப் பணியில் இருக்கலாம் என்கின்ற ஒப்பந்த அடிப்படையில் மொத்த ஊதியம் இவ்வளவு என்று முழுத்தொகை போட்டு, அவர்களுக்கு அப்படிப்பட்ட வேலை வாய்ப்பு

அளித்தால், பல்வேறு வகையிலே மிக முன்னேற்றமான நடவடிக்கை இருக்கும் என்பது எனது துணிவான கருத்தாகும். அது நாட்டிலே மிகப்பெரிய ஒழுங்கையும், இதுபோன்ற பல்வேறுவிதமான பிரச்னைகளுக்கு ஒரு முடிவு கட்டுவதற்குரிய வகையிலேயும் இருக்கும் என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் அவர்கள் பலர், பல வகை படிப்பு படித்தவர்கள், பயனற்றுப் போய்க் கொண்டிருக்கிறார்கள். கப்பல் ஓட்டக் கூடியவரைக் கார் ஓட்டச் செய்வது இந்த நாட்டிற்கு ஏற்படக் கூடிய மிகப் பெரிய தேசிய நட்டமாக இருக்கும். திறமை இருக்கக் கூடியவர்களை, பல்வேறு திறமையற்ற நிலைமையிலே விட்டுவிடக் கூடாது. ஆகவே, அவர்களை எல்லாம் முழுமையாகப் பயன்படுத்த அரசாங்கம், அதற்கு வேண்டிய வழிவகைகளைச் செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக, மிகப் பெரிய திட்டம், தமிழ் மாநிலம் சிறப்புப் பெறுவதற்குரிய ஒரு திட்டம், ஒகேனக்கல் மின் திட்டம். இந்த அரசாங்கம் ஏற்பட்ட உடன் முதன் முதலாக நான் சொன்ன திட்டத்திலே அதுவும் ஒன்று. ஒகேனக்கல் திட்டம் கர்நாடகத்திலேயும் தமிழகத்திலேயும் இருக்கக்கூடிய மாநில பரிவர்த்தனைக்கு ஒரு எடுத்துக் காட்டாகும். இப்பொழுது தண்ணீர் இல்லை தஞ்சையிலே என்று நாம் சொல்கிறோமே, அது நாம் சொல்லாமலேயே கிடைக்கும். காரணம், மின் திட்டம் வெற்றி பெற்றால் தண்ணீர் விடமாட்டேன் என்று சொல்லவே முடியாது. காரணம் அந்த மின்சாரத்திலும் அவர்கள் பங்கு பெறக் கூடிய வாய்ப்பு இருக்கிற காரணத்தினால் இரண்டு மாநிலங்களும் வாழ்ந்து, தொழில் வளமும் பெருகும், விவசாயமும் பெருகும். அப்படிப் பெருகக்கூடிய நிலைக்கு மக்களுக்கு அத்தியாவசியத் தேவை இந்த ஒகேனக்கல் மின் திட்டம். அதைக் கொண்டு வந்தால் மிக நல்ல வாய்ப்புகள் இருக்கும். அந்தத் திட்டத்தை மாநில அரசு மட்டுமல்லாமல், மத்திய அரசும் வற்புறுத்த வேண்டும். மத்திய அரசு எந்த அளவிற்கு, அறிவுரை சொல்கிறதோ அந்த அளவுக்குத்தான் அவைகள் எல்லாம் வெற்றி பெறும். அதைச் செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்ததாக, தர்மபுரி மாவட்டத்திற்குத் தோட்டக் கலை இயக்குநரகம் கொடுத்திருக்கிறார்கள். பல்வேறு திட்டங்களை 1977-லே இருந்து போட்டு, வெற்றிகரமாக நடத்தி முடித்து, நாம் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறோம். ஆனாலுங்கூட, ஜனநாயகத்தில் மக்களின் தேவை பெருகிக்கொண்டே போகிறது. தேவை பெருக, பெருக, நித்தம், நித்தம் புதிய தேவைகள் உருவாகிக் கொண்டிருக்கின்றன. அவைகளை நிறைவேற்றக்கூடிய வகையில், அதற்குக் கட்டிடம் இல்லாமல் இருக்கிறது. அந்த இயக்குநர் அகத்திற்குக் கட்டிடம் தேவை என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



காவேரிப்பட்டினம் என்ற என்னுடைய தொகுதிக்கு வருகின்ற பொழுது, பல்வேறு திட்டங்கள், நாட்டு நலப் பணித் திட்டங்கள், மிக நல்ல முறையில், முதல் வடிவம் பெறக்கூடிய திட்டமாக இருக்கிறது என்ற அடிப்படையில், பொதுமக்களுடைய வேண்டுகோளை நிறைவேற்றக் கூடிய வகையில், அரசாங்கத்தை, அரசு அதிகாரிகளை மட்டுமே அணுகி நிறைவேற்றியிருந்தாலுங்கூட இன்னும் பல திட்டங்களை நிறைவேற்ற அங்கே வாய்ப்பு இருக்கிறது. அங்கே தொழிற்சாலை இல்லை என்கிற நிலை இருக்கிறது. தொகுதிக்கு ஒரு தொழிற்சாலை இருந்தாக வேண்டுமென்ற நிலைக்கு இந்தத் தமிழ்நாடு அரசாங்கம் முன் வர வேண்டும். மாநிலத்தில் தொழிற்சாலை இல்லாத மாவட்டத்திற்கு முன்னுரிமை என்று மத்திய அரசு எப்படிச் சொல்கிறதோ, அதுபோல், வடநாட்டிலே பார்த்தால், இங்கே நம்முடைய தமிழ்நாட்டிலே இருக்கிற ஒரு வட்டமே, அங்கே ஒரு மாவட்டம் ஆகும். அதேபோல், இங்கே ஒரு தொகுதியே அங்கே ஒரு மாவட்டமாக இருக்கிறது. அப்படி வரும்போதுதான் நாம் அடிபட்டுப் போகிறோம். ஆகவே, ஒவ்வொரு தொகுதியிலும் அந்தத் தொகுதியில் தொழிற்சாலை இல்லையா என்பதை ஆய்ந்து, ஆராய்ந்து, நிறுவுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

இப்பொழுது நாம் போட்ட பல்வேறு திட்டங்களால் கிராமம் நகரமாகி இருக்கிறது, நகரம் மாநகரமாகி வருகிறது. இந்த நிலைமையிலே, பல்வேறு பேரூராட்சிகள் பொருளாதாரத்திலே நசிந்து விடுகின்றன.

(பிற்பகல் 12-40)

காரணம் சம்பளத்தை உயர்த்தினோம். ஆனால் வரியைக் கூட்டவில்லை. வசதி வாய்ப்புகளைப் பெருக்கினோம். ஆனால் வரியை அதிகமாக விதிக்கவில்லை. வருமானத்தைப் பெருக்கவில்லை. அதனால் ஊராட்சி மன்றங்களுக்கு பல சங்கடங்கள் இருக்கின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலையில் காவேரிப்பட்டினம் பேரூராட்சியின் பக்கத்தில், சுற்றுப்புறங்களில் சுமார் ஐந்து கிலோ மீட்டர் தூரத்திற்குள் இருக்கிற பகுதிகளை எல்லாம் அந்தப் பேரூராட்சியுடன் இணைத்தால் அங்கே இருக்கிற கலையரங்குகள் மற்றவை எல்லாம் வந்து, அந்தப் பேரூராட்சிக்கு உள்ளே வரும்போது அதனுடைய வருமானம் பெருகும்.

காவேரிப்பட்டணம் பேரூராட்சியில் மூன்று மாதங்களாகச் சம்பளம் கொடுக்க வழியில்லாத நிலைமை ஏற்பட்டு, அதற்குப் பின்னால் கலெக்டரிடம் எடுத்துச் சொல்லி, வேறு ஒரு பேரூராட்சியில் இருந்த நிதியை எடுத்து இந்தப் பேரூராட்சிக்குக் கொடுத்து, சம்பளம் கொடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. இப்படிப்பட்ட நிலைமை ஏற்படாமல் இருக்க, தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[டாக்டர் கே. சமரசம்] [1986 ஜனவரி 20

கிருஷ்ணகிரி வட்டம் தமிழ்நாட்டிலேயே மிகப் பெரிய வட்டம். அதை இரண்டாகப் பிரிக்க வேண்டுமென்று சொல்லியிருந்தோம். அதற்கான பூர்வாங்க வேலைகள் எல்லாம் முடிந்து விட்டன. இந்த ஆண்டு அதை நிறைவேற்ற மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பிக்க வேண்டும்; தேவையான பணத்தை ஒதுக்கித்தர வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

நாங்கள் மத்திய அரசு என்று சொல்லுகிறபோது, மத்திய அரசை குறைசொல்ல வேண்டும் என்பதற்காக எதையும் சொல்லவில்லை. ஆனால் தேவை என்ன என்பதைப்பற்றிச் சொல்லித்தான் ஆகவேண்டும்; சொல்லுகிறோம். நெருப்புத் தேவை. சுவையான உணவு தயாரிக்க. ஆனால் நெருப்பையே உணவாக ஏற்றுக்கொள்ள முடியாது. சுவையான உணவு தயாரிக்கின்ற நெருப்பு யாராக இருந்தாலும் அவர்களைப் பயன் படுத்திக்கொள்ளத் தயங்கமாட்டோம் என்று எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மத்திய அரசு மாநில அரசுக்கு லேவாதேவியாக, பான் புரோக்கராக இருக்கக்கூடாது. உணவுப் பங்கீடாக இருந்தாலும் சரி அல்லது பொருள் பங்கீடாக இருந்தாலும் சரி, எதுவாக இருந்தாலும் மாநில மக்ளின் தேவையை உணர்ந்து செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுதந்திரத்திற்கு முன்பு சொன்ன காங்கிரஸ் கட்சியின் கொள்கையை சிந்தித்துப் பார்க்க காங்கிரஸ் நண்பர்கள் முன்வர வேண்டும். பழைய வரலாற்றைத் திரும்பிப் பார்க்க வேண்டும். இங்கே உள்ளாட்சித் தேர்தல் உண்டா, இல்லையா என்று சில நண்பர்கள் சொன்னார்கள். அவர்களுக்கு இருக்கிற சந்தேகம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு எத்தனை சதவீதம் இட ஒதுக்கீடு இருக்க வேண்டுமோ அது இருக்குமா, இல்லையா என்பதுதான். அதற்காக நேற்றிலிருந்தே எப்படியாவது தடை வாங்க வேண்டு மென்று முயற்சி செய்து கொண்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. பலரும் பேசும்போது இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். இனிமேல் தடை வாங்க இடம் இருப்பதாகத் தெரியவில்லை.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, பழைய முறைப்படி தேர்தல் நடத்தப்படும் என்று நாம் அறிவித் திருக்கிறோம். 18 சதவீதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கீடு என்று இந்தியாவிலே எந்த ஒரு மாநிலத்து முதலமைச்சரும் துணியாத அளவுக்கு நம்முடைய முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் துணிந்து ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அது தடை செய்யப்பட வேண்டுமென்று நீதிமன்றத்திற்கு, சுப்ரீம் கோர்ட்டுக்குப் போனார்கள். அதனால் தேர்தல் தள்ளிக்கொண்டே வந்தது. இப்படி தள்ளிக்கொண்டே போவதைவிட பழைய முறைப்படி



1986 ஜனவரி 20] [திரு. ப. உ. சண்முகம்].

நடத்தப்படலாம் என்று முடிவுசெய்து, சட்டம் கொண்டுவந்து நிறைவேற்றினோம். இன்னும் தெளிவாகச் சொல்கிறேன். இந்த அரசு 18 சதவீதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கவேண்டும் என்ற கொள்கையிலிருந்து கொஞ்சமும் பின் வாங்கவில்லை. சட்டத்தைப் பற்றிப் பேசும்போது சிலர் சொல்லியிருக்கிறார்கள், அரசியல் சட்டத்தில் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்க இருக்கிறோம். அந்தக் கொள்கையி விருந்து நாங்கள் பின்வாங்கவில்லை. அதுதான் எங்கள் இலட்சியம்.

பழைய சட்டத்தின்படி ஏற்கெனவே நகராட்சிகளிலே, ஊராட்சி மன்றங்களிலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் அப்படியே இருக்கின்றன. பெண்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்கள் அப்படியே இருக்கின்றன. அதை யாரும் எடுக்க வில்லை. ஆகவே. எந்த உரிமையையும் நாம் பறிக்கவில்லை. பழைய சட்டத்தின்படி நகராட்சியில் எந்த எந்த வார்டு ரிசர்வ் சீட் என்று தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, பெண்களுக்கு இருக் கிறதோ அதே முறைப்படிதான் தேர்தலை நடத்துகிறோம்.

அதைப்போன்று ஊராட்சி மன்றங்களிலே ஒதுக்கப் பட்டதையும் நாம் எடுக்கவில்லை. ரிசர்வ் சீட்டுகள் எல்லாம் அப்படியே இருக்கும். ஏற்கெனவே இருந்த சட்டத்தில் ஒரு ஒன்றியத்தில் ஊராட்சித் தலைவராக குறைந்தபட்சம் மூன்று தாழ்த்தப்பட்டவர்கள், மூன்று பெண்கள் இடம்பெற வேண்டும். அப்படி இல்லை என்றால் 'கோவாப்ட்' செய்யலாம் என்று இருக் கிறது. அப்படி 'கோவாப்ட்' செய்யும் அதிகாரத்தை இப்போது கொஞ்சம் திருத்தி வைத்திருக்கிறோம், ஆக கோவாப்ஷன் உண்டு. ஊராட்சி மன்றத் தலைவராக தாழ்த்தப் பட்டவர்கள், பெண்கள் குறிப்பிட்ட எண்ணிக்கையில் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்றால், அந்த எண்ணிக்கையில் தாழ்த்தப்பட்டவர்களை, பெண்களை கோவாப்ட் செய்து, சேர்த்துக்கொள்ள இப்போதும் சட்டத்தில் இடம் இருக்கிறது. அந்த முறையில்தான் தேர்தலை நடத்துகிறோம்.

யாருடைய உரிமையும் பாதிக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்னொன்றையும் மிகத் தெளிவாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பத்திரிகைகளிலே நான் பார்த்தேன். சில அரசியல் கட்சித் தலைவர்கள், ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் நீதிமன்றத்திற்குப் போக முயற்சிக் கிறார்கள் என்று பேசியதாக நான் பத்திரிகையிலே பார்த்தேன். எனவே நான் மிகத் தெளிவாகத் தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன். ஆளும் கட்சியைச் சார்ந்தவர்கள் யாரும் நீதிமன்றத் திற்குச் சென்று இந்தத் தேர்தலுக்கு தடை வாங்கவேண்டும் என்ற வகையில் ஈன புத்தி படைத்தவர்கள் ஒருவர் கூட இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே நான் மிகத் தெளிவாகச் சொல்லிக் கொள்கிறேன். எங்களின் நோக்கம் அதுவல்ல. தேர்தல் நடத்த வேண்டும்; நடத்தியே தீரவேண்டும்

என்று இறுதி முடிவுக்கு வந்துதான் தேர்தலை வைத்திருக்
கிறோமே தவிர தள்ளி வைக்கவேண்டும் என்று சொன்னால்
துணிந்து ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து இன்னொரு 6 மாத
காலத்திற்கு தள்ளி வைக்கின்ற வகையில் அந்த சட்டத்தை நிறை
வேற்றுவது ஒன்றும் கடினமான காரியமல்ல; நிறைவேற்றிவிட
முடியும். ஆனால் செய்யாறு தேர்தலுக்குப் பிறகும் எங்களுக்கு
பயம் இருக்கிறது என்று யாராவது நினைத்தால் அது அவ்வாறு
நினைக்கின்றவர்களின் தவறுதானே தவிர இந்த அரசைப்
பொறுத்தமட்டில் துணிந்து தேர்தலை வைத்திருக்கிறோம்.
பொதுமக்களைச் சந்திக்க நாங்கள் எப்போதும் தயாராக இருக்
கிறோம் என்பதை இந்த நேரத்தில் நான், பிரச்சினையை
எழுப்பியதால் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, ஆக நடைபெறுகிற உள்ளாட்சித் தேர்தல்
நடைபெறும் என்பதும் அந்தத் தேர்தலில் ஏதோ காரணத்தால்
தப்பித் தவறி தாழ்த்தப்பட்டவர்கள், தாய்மார்கள் விடுபடுவார்
களானால் அவர்களை நியமனம் செய்து, ஆட்சி நடத்த,
அதிகாரத்தை வழங்குவதற்குரிய வாய்ப்பு இந்த அரசு வைத்திருக்
கின்றது என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பட்ட
வர்த்தனமாக இன்றையதினம் உலகுக்கு அறிவித்திருக்கிறார்கள்.
எனவே இனிமேலாவது அந்தப் பிரச்சினை வராது என்று நான்
நம்புகிறேன்.

அடுத்து ஈழப் பிரச்சினை பற்றிச் சொன்னார்கள். ஈழம்
என்று வருகிறபோது அதிலே எவ்வளவு சிக்கல்கள் இருக்கின்றன
என்பதை ஏற்கெனவே இந்த மாநிலத்தை ஆண்டவர்கள் மிக
நல்ல முறையிலே உணருவார்கள். இருந்தாலும் கூட அந்தச்
சிக்கலை எப்படி எப்படி, மேலும், மேலும் அதிகமாக ஆக்கலாம்
என்ற வகையிலே தான் கேள்விக்கணைகளைத் தொடுக்கிறார்கள்.
எனவே அதில் நியாயம் இல்லை. வாதங்கள் பல செய்கிறார்கள்.
ஆனால் வாதங்கள் எல்லாம் நியாயங்கள் அல்ல. எப்படிப்பட்ட
நியாயங்களையும் வாதத்துக்கு உட்படுத்திவிடலாம் என்ற
தத்துவத்தை உள்ளடக்கி பல்வேறு கருத்துக்களை மன்றத்தின்
உள்ளேயும், வெளியேயும் வைத்திருக்கிறார்கள்.

நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஈழப் போராளிகள்
என்று வருகிறபோது அதில் பல பிரிவினர் உண்டு. அப்படிப்பட்ட
பல பிரிவினரையும் ஒருங்கிணைத்து அவர்களுக்கு என்னென்ன
வகையில் உதவிகளைச் செய்ய முடியுமோ அப்படி செய்யக்கூடிய
அளவுக்கு இந்த மாநில அரசு செய்து வருகின்றது. அங்கேயிருந்து
குடிபெயர்ந்து வருபவர்களுக்கு உணவு, உடை, இருப்பிடம்,
தொழில், உதவி இப்படி பல்வேறு வகைகளில் பல்வேறு வாய்ப்புக்
களைக் கொடுத்து இங்கே பாதுகாப்புக் கொடுத்தது இந்த அரசு
தான். அதுமட்டுமல்ல; உலகுக்கு இந்த விஷயத்தை எடுத்துச்
சொல்லி இது மத்திய அரசோடு சேர்ந்து செய்யவேண்டிய



காரியம் என்பதையும் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். சிலர் சொல்கிறார்கள், மத்திய அரசு உடனடியாக அங்கே ராணுவத்தை அனுப்பக்கூடாதா என்று. அப்படி ராணுவத்தை அனுப்பினால் உடனடியாக சாகக்கூடியவர்கள் தமிழர்கள்தானே அல்லாமல் சிங்களவர்கள் அல்ல. இங்கே இருந்து சுட்டால் அதனால் விழக் கூடியவர்கள் ஆயுதம் இல்லாமல் இருக்கிறாளே அந்தத் தமிழன் தான். அங்கே சிங்களவர்கள், ராணுவத்தில் இருக்கக்கூடியவர்கள் காவல்காரர்கள். அவர்களிடத்தில் இருக்கின்ற ஆயுதங்களை வைத்துக்கொண்டு தற்காப்பு செய்துகொள்ள முடியும். அங்கே நிற்கதியான நிலையில் இருக்கக்கூடியவன் தமிழன்தான். எனவே வீரத்தை விட விவேகம்தான் முக்கியம் என்பதை எண்ணிப் பார்த்துத்தான் அந்த அடிப்படையில் நாம் நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இதிலே தனித் தன்மையைப் பார்க்கவில்லை. அதாவது தமிழ்நாடு என்று சொன்னால், தனித் தன்மையோடு இருக்கவேண்டும்; அதாவது ப்யூரிட்டன் என்று இருக்கவேண்டும் என்று கூறுகிறார்கள். ப்யூரிட்டன் என்று சொன்னாலே உலருக்கு உதவாதவர்கள் என்றுதான் பொருளே தவிர, அவர்கள் தேவையானவர்கள் அல்ல.

மழை பெய்கிறது என்று சொன்னால் அந்த மழை நீர் கூட மண்ணிலே வீழ்ந்தால்தான் சுவை நீராக ஆகும்; உற்பத்தி செய்யக்கூடிய ஒரு நிலையை எட்டுமே தவிர மழை நீரே சுவை நீராக, குடிநீராக, உற்பத்தி செய்யக்கூடியதாக, மரம், செடி வளர்க்கக்கூடிய நீராக ஆகிவிடாது. எனவே இதிலே உறவு முறை தேவை. மத்திய, மாநில அரசுகள் நல்ல உறவு முறை வைத்திருக் கின்ற காரணத்தால்தான் இதுவரையிலும் ஈழத்தினுடைய பல்வேறு நடவடிக்கைகளில் இருந்து தமிழர்களைப் பாதுகாக்கக் கூடிய வகையில் அதாவது எந்தெந்த வகையில் பாதுகாக்க முடியுமோ அந்தந்த வகையில் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு வந்திருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நல்லதொரு ஆட்சி முறை நடந்துகொண்டிருக்கிறது, ஒரு பொற்காலம் நிகழ்ந்துகொண்டிருக்கிறது என்பதற்கு இலக்கணமாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி நடத்துகிறது. இதய தெய்வம் புரட்சித் தலைவர் திரு. எம். ஜி. ஆர். அவர்கள் ஒப்பற்ற தலைவராக இருந்து ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லி இந்த ஆளுநர் உரையை வரவேற்று அமர்கிறேன். வணக்கம்.

(பிற்பகல் 12-50.)

திரு. மா. சுந்தரதாஸ்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தில் எங்களுடைய காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக் களைச் சொல்ல முன் வந்துள்ளேன். அதில் என்னுடைய கருத்துக்களை எடுத்த வைப்பதற்கு முன்னால், மரியாதைக்குரிய டாக்டர் ராமலிங்கம் அவர்கள் நதிகளை தேசியமயமாக்குவது

பற்றி, நேஷனலைசேஷன் ஆப் ரிவர்ஸ் என்பது பற்றிச் சொன்னார்கள். எங்களுடைய தானைத் தளபதி பிரதம மந்திரி அவர்கள் அந்த யோசனையை மனத்திலே ஏற்றுக்கொண்டு, மிகச் சீக்கிரத்தில் அந்த ரிவர் நேஷனலைசேஷன் ஸ்கீமை அறிவிக்க இருக்கிறார்கள்.

இரண்டாவதாக அவர்கள் சொல்லும்போது இந்தி திணிக்கப் படுவதாகவும் அதை நாங்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பது போலவும் பேசியிருக்கிறார்கள். இந்தி இந்த நாட்டில் திணிக்கப்படக் கூடாது என்று போராடி சிறைக்குச் சென்றவர்களில் நானும் ஒருவன். எனக்கு இந்தியே தெரியாது. ஆனால் இந்தியைப் படிக்க வேண்டும் என்று மத்திய அரசினர் ஏன் சொல்லுகிறார்கள் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே விளக்கிச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், இந்தி படிப்பது என்பது ஒரு மனிதன் பிறப்புரிமை. 'Fundamental rights' அதை எந்த அரசும் டினை செய்யக் கூடாது, தடுக்கக் கூடாது என்பதுதான் எங்களுடைய கருத்தே தவிர, இந்தியை இந்த நாட்டுக்குக் கொண்டு வந்து அதை அனைவரும் படிக்க வேண்டும் என்பது அல்ல. நான் இன்னொன்றையும் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன.

நான் எந்தச் சட்டமன்ற உறுப்பினரையோ, பாராளுமன்ற உறுப்பினரையோ அல்லது அமைச்சர் பெருமக்களையோ தாக்குவதற்காகச் சொல்லவில்லை. எல்லாக் கட்சியையும் சேர்த்து சொல்லுகிறேன். இங்கே உள்ள எல்லாக் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களுடைய—காங்கிரஸ் கட்சியையும் சேர்த்து—அமைச்சர் பெருமக்களுடைய செல்வக் குழந்தைகள் எல்லாம் கான்வென்டிலே தான் படிக்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். அங்கே இந்தியும் படிக்கிறார்கள். சமுதாயத்திலே படித்தவர்களின் குழந்தைகள் எல்லாம் எங்கே படிக்கிறார்கள், கான்வெண்டிலே தான். அதையெல்லாம் தெளிவாகச் சொல்ல வேண்டாம், எல்லோருக்கும் தெரியும். ஏதோ அரசியலுக்காக சொல்லிக் கொள்ளலாமே தவிர வேறு அல்ல.

இந்தி படிக்காத மக்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பது கும்முடிப்பூண்டியை தாண்டினால்தான் தெரியும். அதைப் பலரும் உணர்ந்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஆளும் கட்சியிலே இருக்கும் நண்பர்களுக்குத் தெரியும்; திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்கும் அது தெரியும். ஆனால் ஆட்சி மொழியாக இந்தி தமிழ்நாட்டில் திணிக்கப்படுவதை நாங்கள் விரும்பவில்லை. அதற்காக இந்தி படிக்கின்ற உரிமையைத் தடுக்கக் கூடாது என்று பலமுறை நாங்கள் சொல்லியிருக்கிறோம். இந்தி படித்தார்களேயானால், யாரும் அப்படிப்படிப்பதை தடை செய்யக் கூடாது. ஆனால், படிக்கும்படி கம்பெல் செய்யக்கூடாது என்பதுதான் எங்களுடைய கருத்தே தவிர நாங்கள் இந்தி படித்துத்தான் ஆக



வேண்டும் என்று சொல்லவில்லை. இந்திக்கு தமிழை தாரை வார்த்துக் கொடுக்கும் நிலையிலும் காங்கிரஸ் கட்சி இல்லை என்பதை ஆளும் கட்சி உறுப்பினர்களுக்குச் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல டாக்டர் சமரசம் அவர்கள் பேசுகிறபோது ஒன்றைச் சொன்னார்கள். சாராயக் கடைகளை நடத்துவதற்கு பரிந்துரைகளைச் செய்யவில்லையா என்று சொன்னார்கள். சாராயக் கடைகளைப் பொறுத்தவரையில் அந்தக் கடைகளே வைக்கக்கூடாது என்பதுதான் எங்களுடைய கொள்கை உடனே நீங்கள் ஆளுகின்ற இடங்களிலே, . . . (குறுக்கீடு, மணியடிக்கப் பெற்றது.)

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியினுடைய சட்டப் பேரவை உறுப்பினர் அவர்கள் சொல்லிய விளக்கத்திற்காக நன்றி. நாங்களும் இந்தித் திணிப்பை எதிர்க்கிறோம். ஆனால், அதே நேரத்தில் தமிழ்நாட்டைத் தாண்டிப்போனால் அந்தப் பக்கம் இருக்கிற சூழ்நிலையைப் பாருங்கள் என்று அதைப்பற்றி எல்லாம் சொன்னார்கள். அவர்கள் எல்லாம் அடிக்கடி டெல்லிக்குப் போகிறவர்கள். அதனாலே அவர்களுக்கு அதன்மீது அக்கறை இருக்கிறது. நான் ஏற்றுக் கொள்கிறேன்.

ஆனால், அதே நேரத்தில் தமிழ்நாட்டிலே கிராமப்புறங்களிலே இருக்கிற பெரும்பான்மையான மக்களிடம், பெரும்பான்மை என்று சொல்வதை விட முழுக்க முழுக்க, இந்தியைப் பற்றி ஒன்றுமே தெரியாத மக்களிடம், மாலை நேரங்களில் தொலைக்காட்சி மூலமாக டெல்லியிலிருந்து ஒளி பரப்பப்படுகின்ற தேசிய நிகழ்ச்சிகளை மட்டும் தான் பார்க்க வாய்ப்பு ஏற்படுத்தப் பட்டிருக்கிறதே அது ஏன்? அவர்கள் மத்தியில் இந்தியைப்பரப்பவா? அவர்கள் மாநில மொழியின் மூலமாக ஒளி பரப்பப்படுகின்ற நிகழ்ச்சிகளைப் பார்ப்பதற்கு வாய்ப்பே கிடையாது. அது ஏன்? தொலைக்காட்சியை விரிவு படுத்துகின்ற நேரத்திலேயே மாநில மொழிக்குக் கொடுக்க வேண்டிய மரியாதையைக் கொடுப்பதற்கு, துணை நிலையம் உருவாக்கும்போதே மாநில மொழியில் ஒளி பரப்புவதற்கான முறையில் உருவாக்கியிருக்க வேண்டும். ஏன் அப்படிச் செய்யவில்லை.

கேட்டாலும் கூட, ஏதோ காலம் தாழ்த்திக் கொண்டு, தொடர்ந்து பல்வேறு இயற்கை சூழ்நிலைகளைக் காரணம் காட்டுவது போல் காட்டி, பிரதமரின் பவனிகளைக் காட்டுகின்ற சூழ்நிலையில் இந்தியில் மட்டும் ஒளிபரப்பி அதன் மூலம் காங்கிரசின் கொள்கையை இந்த நாட்டுக்கு சொல்ல வேண்டும் என்ற எண்ணமா? (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் பிரச்னையை வளர்க்கக் கூடாது. கேட்க வேண்டிய விவரங்களைச் சுருக்கமாகக் கேளுங்கள்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: சுருக்கமாகத்தான் கேட்கிறேன்.
இந்தி திணிப்பை நாங்களும் எதிர்க்கிறோம் என்று சொல்லிவிட்டு,
மத்திய அரசு சொல்லுகின்ற கொள்கைகளை ஏற்றுக் கொள்வது
போலவும், மாநில அரசு பேசுவது, கொண்டு வருவதை எல்லாம்
எதிர்ப்பது போலவும் பேசுவது நியாயமற்ற செயலாகும். நீங்களும்
தமிழ் மண்ணிலிருந்து தான் தேர்ந்தெடுக்கப்பட்டு இந்த மன்றத்
திலே வந்திருக்கிறீர்கள். தமிழர்களால்தான் உருவாக்கப்
பட்டிருக்கிறீர்கள். எந்தக் காலக் கட்டத்திலும் தமிழ்நாட்டை
யும் தமிழ் மொழியையும் காட்டிக் கொடுக்கக்கூடிய சூழ்நிலையில்
யாரும் இருந்துவிடக் கூடாது. மிக எச்சரிக்கையாக இருக்க
வேண்டும். இன்றைக்கு வேண்டுமானால் அரசியலாக இது
இருக்கலாம். ஆனால் நாளைய சமுதாயம் .(குறுக்கீடு)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய
உணர்வை எடுத்து வைத்திருக்கிறார்கள். தாங்களும் சேர்ந்து
எதிர்க்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை வரவேற்
கிறோம். கடைசியில் வேறு வகையில் திணிப்பதற்கான முறை
களைத் தடுப்பதற்கான முயற்சிகளையும் நாங்கள் செய்வோம்.
மாண்புமிகு உறுப்பினர் இராமலிங்கம் அவர்கள் எழுப்புகின்ற
நியாயமான கோரிக்கைகளுக்கு பதில் சொல்ல வேண்டிய
பொறுப்பு மத்திய அரசுக்குத்தான் இருக்கிறது. இங்கே
இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அதற்கு எந்த பதிலையும்
சொல்லிவிட முடியாது. ஆகவே நம்முடைய பிரச்னைகளை
நாமும் மத்திய அரசிடம் எடுத்து வைப்போம். அவர்களையும்
எடுத்து வைக்கும்படியாக கேட்டுக் கொள்வோம்.

திரு. அ. ரகுமான்கான்: மன்றத்தினுடைய துணைத் தலைவர்
அவர்களே, உங்களிடத்திலேயிருந்து ஒரு தீர்ப்பைத்தெரிய விரும்பு
கிறேன். மத்திய அரசு பதில் சொல்ல வேண்டிய
இங்கே பேசக்கூடாது என்று நிதியமைச்சர் சொல்கிறாரா? மத்திய
அரசு சம்பந்தப்பட்ட பிரச்னைகளுக்கு மத்திய அரசுதான் பதில்
சொல்லவேண்டும், ஆகவே அது குறித்து இங்கே பேசக்கூடாது
என்று சொன்னால். . (குறுக்கீடு) விளக்கம் வேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, நான் சொன்ன குறிப்பு, மத்திய அரசைப்
பற்றி, இந்தி மொழியைப் பற்றி, வேறுபல பிரச்னைகளைப்
பற்றிப் பேசக்கூடாது என்பதல்ல. பேசலாம், பேசத்தான்
வேண்டும். நிதிநிலை அறிக்கை வருகிறபோது நான் பேசத்தான்
போகிறேன். ஆனால் இவர்கள் இப்போது பதில் சொல்கிற
நிலையில் இல்லை, அவர்கள் கேட்கிற கேள்விக்கு என்று தான்
சொல்கிறேன். அந்தக் கேள்விக்கு மத்திய அரசு தான் பதில்
சொல்ல வேண்டியிருக்கும். இங்கே பேசக்கூடாது என்று நான்
சொல்லவில்லை. பிரச்னைகளைப் பற்றி எடுத்துச் சொல்லலாம்
என்றுதான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். ஆனால் பதில்
சொல்கிற நிலையில் உறுப்பினர் இல்லை. அந்தப் பதிலை
அங்கே தான் நாம் எதிர்பார்க்க வேண்டும்.



திரு மா. சுந்தரதாஸ்: அடுத்தபடியாக நான் ஒன்றைக்
குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் சமரசம்
அவர்கள் பேசுகிறபோது சாராயக் கடைகளைப் பற்றிப் பேசி
னார்கள். யார் யாருக்கு கடைகள் கொடுக்கப்பட்டது என்ற
அறிக்கையை இந்த அவையில் வைத்தால் சரியாகத் தெரியும்.
சாராயக் கடைகளை கொடுப்பது எங்கள் கொள்கையல்ல. அதை
எதிர்ப்பது தான் எங்கள் கொள்கை. ஆனால் காங்கிரஸ் ஆளும்
சில மாநிலங்களில் சாராயக் கடைகள் இருக்கின்றன. தமிழகத்
தைப் பொறுத்தவரை, தமிழ்நாடு காங்கிரசைப் பொறுத்தவரை
சாராயக் கடைகள் திறப்பதை நாங்கள் எதிர்க்கிறோம். யார்
யாருக்குக் கடைகளைக் கொடுத்தீர்கள் என்றெல்லாம் பேசத்
தயாராக இல்லை. அது உங்கள் விவகாரம். அந்தப் பிரச்னைக்கு
நான் வரவில்லை. ஒன்றை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன்.
இந்த அரசைப் பொறுத்தவரையில் கடைகளை ஏலத்தில் விட்டிருக்
கலாம். ஆனால் தனியாருக்கும் கொடுத்திருக்கிறார்கள்.
அதற்கு யாரோ பரிந்துரை செய்தார்கள் என்றால், அப்படி
பரிந்துரை செய்தவர்கள் விவரத்தையெல்லாம் இந்த மாமன்றத்
திலே வைத்தால் அதில் நன்றாக விவரங்கள் தெரியவரும்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே யார் யாருக்குக்
கடைகள் கொடுக்கப்பட்டன என்ற லிஸ்டை இந்த அவையில்
வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும்
தீர்மானத்தின் மீது என்னுடைய சில கருத்துக்களைத் தெரிவிக்க
விரும்புகிறேன். இதில் பல்வேறு கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்
கின்றன. அரிசி நமது மாநிலத்தில் பற்றாக்குறையாக இல்லை
யென்று சொல்லப்பட்டிருக்கிறது. பற்றாக்குறை வந்தால் மத்திய
அரசு அரிசி கொடுப்பதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. 1966,
1967-லிருந்து எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில்
அரிசி பற்றாக்குறையாக இருக்கிறது. கடந்த 26-ம் தேதி
யிலிருந்து காங்கிரஸ் தொண்டர்கள் உண்ணாவிரதத்தில்
உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். அரிசி ரேஷன் கடைகளில்
கொடுக்கவேண்டுமென்பதற்காக அவர்கள் இதில் கலந்து கொண்
டிருக்கிறார்கள். அங்கே அரிசியை யாரும் இனாமாகக் கேட்க
வில்லை. காசு கொடுத்தாலும் அரிசி கிடைக்கவில்லை என்ற
நிலைமை அங்கே அந்த மாவட்டத்தில் இருந்து கொண்டிருக்
கிறது.

ஆளுநர் உரையில் ஒரு இடத்தில் தமிழகத்தைப் பொறுத்த
வரையில் அரிசியில் தன்னிறைவாக இருக்கிறது என்று சொல்லப்
பட்டிருக்கிறது, மற்றொரு இடத்தில் மத்திய அரசிடமிருந்து
பெறப்பட்டிருக்கிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. கடந்த
மாதத்தில் மாண்புமிகு பூட்டாசிங் அவர்கள் ஒரு இலட்சம் டன்
அரிசி தமிழ் நாட்டிற்குக் கொடுப்பதாகசொல்லி இருக்கிறார்கள்.
குமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கேரள மாநிலத்தின்
எல்லையில் இருந்து கொண்டிருக்கிறோம். 1967 ஆம் ஆண்டில்
தலைவர் காமராசர் அவர்கள் தலைமையில் ஆயிரக்கணக்

காவலர்கள் சிறைக்குச் சென்று ஒரு நபருக்கு இரண்டு கிலோ அரிசி என்ற உரிமையை வாங்கி இருந்தோம். அதற்குப் பிறகு அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு 20 கிலோ ஒரு குடும்பத்திற்கு என்று செய்தார்கள். கடந்த மாதத்தில் 5 கிலோ என்று ஆகிவிட்டது.

கேரளாவின் பார்டரில் இருக்கும் விளவன்கோடு தொகுதியைப் பொறுத்தவரையில் அரிசி எங்கேயும் கிடைக்காது. அங்கே லெவி செல் போஸ்ட் 22 வைத்திருக்கிறார்கள். அந்த 22 செக் போஸ்ட்களும் எதற்காக இருக்கின்றன என்று யாருக்குமே தெரியாது. அந்த செக்போஸ்ட்கள் இருப்பதால் அரிசி கொண்டு வர முடியாது. அங்கே இருப்பவர்கள் முழுக்க முழுக்க ரேஷன் கடையை நம்பிக் கொண்டிருக்கிறார்கள் அவர்கள் ஒரு நபருக்கு 2 கிலோ அரிசி என்ற அளவில் அரசு கொடுக்காத காரணத்தால் 26-ம் தேதியிலிருந்து அங்கே மக்கள் உண்ணாவிரதம் இருந்து கொண்டிருக்கிறார்கள். இந்த நிலைமை இந்த அரசினால் தான் வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த மக்களுக்கு அரிசி கொடுக்க அரசு முன் வரவேண்டும். அரிசி கொடுக்கவில்லை என்றால், அந்த மக்களைப் பட்டினி போட்டதற்கு அரசு தான் பொறுப்பாகும்.

மத்திய அரசு ஒரு மாதத்திற்கு ஒரு லட்சம் டன் அரிசி தருகிறது என்றால், ஏன் எங்கள் குமரி மாவட்டத்திற்கு, குறிப்பாக விளவன்கோடு தொகுதிக்கு அரிசி வழங்கப்படவில்லை. அந்தத் தொகுதியில் ஏன் அரிசி கிடைக்கவில்லை? பக்கத்தில் இருக்கிற கேரள மாநிலம் அரிசியைப் பொறுத்தவரை பற்றாக் குறை மாநிலம். அந்த மாநிலத்திற்குப் பக்கத்தில் இருப்பது எங்களுடைய குமரி மாவட்டம். ஒரு நபருக்கு 2 கிலோ அரிசி வழங்க முடியவில்லையென்றால் நீங்கள் எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்து பிரயோஜனம் இல்லையென்று மக்கள் பேசுகின்றார்கள். கடற்கரை ஓரமாகச் சென்றால் மீனவர்கள் அடிக்க வருகிறார்கள். காசு கொடுத்தாலும் அரிசி வாங்க முடியவில்லை என்றால் நீங்கள் எல்லாம் ஏன் சட்டமன்ற உறுப் பினர்களாக வருகிறீர்கள் என்று சொல்கிறார்கள். தோழமைக் கட்சியாக இருக்கிற நாங்கள் இருக்கிற நிலைமையைத்தான் சொல்கிறோமே தவிர, குறையாக சொல்லவில்லை. தமிழகத்தினுடைய உணவு அமைச்சர் அவர்களுக்கும் எங்கள் மாவட்ட நிலைமை குறித்து நேரிடையாக எழுதி இருக்கிறேன். குறிப்பாக நான் கேட்டுக் கொள்வது, விளவன்கோடு தாலுக்காவிற்காவது ஒரு நபருக்கு 2 கிலோ அரிசி கொடுத்து அந்த மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மின்சாரத்தை எடுத்துக்கொண்டாலும் மோசமான நிலைமை எங்கள் மாவட்டத்தில் இருந்து வருகிறது கேரளாவிற்குப் பக்கத்தில் இருக்கிற எங்கள் மாவட்டத்தைப் பார்த்தால் ஒரு பக்கம் கேரளம், ஒரு பக்கம் தமிழகம் என்று சொல்வார்கள். காரணம், மின் இணைப்பு இல்லையென்றால் அது தமிழகம்



என்றும், மின் இணைப்பு இருந்தால் அது கேரளம் என்றும் எங்கள் பகுதியில் சொல்வார்கள். மின்சாரத்திற்காக 2,000 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதாக ஆளுநர் அவர்களின் உரையில் சொல்லப் பட்டிருக்கிறது.

(பிற்பகல் 1-00)

இந்த 2 ஆயிரம் கோடி ரூபாய்க்கு உண்டான திட்டத்தையாவது நீங்கள் சொல்லியிருக்கக்கூடாதா? இந்த 2 ஆயிரம் கோடி ரூபாயில் இத்தனை தெர்மல் ஸ்டேசன்களை உருவாக்கப் போகிறோம், இத்தனை, இத்தனை ஹைட்ரோ எலக்ட்ரிசிட்டி புராஜெக்ட்களைக் கொண்டு வரப் போகிறோம் என்று நீங்கள் சொல்லியிருந்தால் நன்றாக இருந்து இருக்கும். ஆனால் ஒன்றும் இல்லாமல், 2 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதாகச் சொல்கிறீர்கள். கடந்த ஆண்டு கூட இப்படித்தான் சொன்னார்கள். எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்த வரையில், மின் இணைப்பு சரிவர இல்லை.

எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில், சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் தொள்ளாயிரம் பேர்கள், சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் 2 ஆயிரம், 3 ஆயிரம் என்று பேங்கிலே கடன் வாங்கியவர்கள் எல்லாம் மின் இணைப்பு கிடைக்காத காரணத்தால், சுயவேலை வாய்ப்பைத் தொடங்க முடியாத நிலைமை இருக்கிறது. 7 ஆண்டுக் காலமாக மின் இணைப்பு வீடுகளுக்கு கொடுக்கப்படவில்லை. என்னுடைய தொகுதியிலே வாக்கு கேட்கப் போனால், மின் இணைப்பு கொடுக்காத உங்களுக்கு வாக்களிக்கமாட்டோம் என்று சொல்கிறார்கள் மக்கள். இது சம்பந்தமாக மின் வாரியத்தின் சேர்மன் அவர்களைச் சந்தித்து, நான் மனுக்கள் கொடுத்திருக்கிறேன். கடந்த வருடம் நடந்த தேர்தலிலே மக்கள் வாக்களிக்கமாட்டோம் என்று சொன்னார்கள். அதுபோல் இப்போது பஞ்சாயத்துத் தேர்தல் வருகின்றபோது மக்கள் சொல்வார்கள். 7 ஆண்டுக் காலமாக மின் இணைப்பு கொடுக்கவில்லை என்றால், எத்தனை அதிகாரிகளை நீங்கள் அனுப்பியிருக்கிறீர்கள்? எனவே, நாங்கள் வாக்களிக்கமாட்டோம் என்று சொன்னார்கள். இனி நீங்கள் ஊருக்குள் வரக்கூடாது என்று சொன்னார்கள். குறிப்பாகச் சொல்லவேண்டும் என்றால், களியக்காவிளை மற்றும் இதுபோன்று என்னுடைய விளவன்கோடு தொகுதியில் உள்ள பல்வேறு இடங்களில் இந்தப் பிரச்சனை இருக்கிறது.

அதுபோன்று, 30 லட்சம் வீடுகளைக் கட்டுகின்ற திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். நிச்சயமாக இந்த அறிக்கையில் வரவேற்கக்கூடிய திட்டம்தான். ஆனால் 1983 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட திட்டம், அதாவது அரிசன மக்களுக்கு வீடுகள் கட்டுகின்ற திட்டம் இன்னும் முடியவில்லை. 1983-லே அரிசன மக்களுக்கு கட்டப்படவேண்டிய வீடுகளை இன்னும் கட்டி முடிக்கப் படவில்லை. அப்படியே அவர்களுக்கு வீடுகள் கட்டியிருந்தாலும்,

அந்த வீடுகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் எதுவும் இல்லை. அந்த வீடுகளைக் கட்ட 6 ஆயிரம் ரூபாய் என்றால், எப்படி அதில் கட்ட முடியும்? ஒரு நாளைக்கு 30 ரூபாய் கூலி கேட்கும் இந்த நேரத்தில், எப்படி இந்த 6 ஆயிரம் ரூபாயில் வீடுகளைக் கட்ட முடியும்? அப்படியே கட்டிய அந்த வீடுகளில், அடிப்படை வசதிகள் கிடையாது. ரோடு வசதி கிடையாது. குடிநீர் வசதி கிடையாது. மின்சார வசதி கிடையாது. நாங்கள் முன்பு இருந்த இடத்திலேயே வசதியாக இருந்தோம். இப்போது எங்களுக்கு வசதி இல்லை என்று அவர்கள் சொல்கிறார்கள். 30 லட்சம் வீடுகள் கட்டுகின்ற திட்டம் நல்ல திட்டம் தான். ஒரு வீட்டுக்கு 10 ஆயிரம் ரூபாய் என்றால் கூட, ஒரு ஆண்டுக்கு 1,000 கோடி ரூபாய் தேவை. இவ்வளவு பணத்தை நம்முடைய நிதி நிலை அறிக்கையிலே கொடுக்க முடியுமா என்பதை நிதி நிலை அறிக்கை வரும்போது பார்த்தால் தெரியும். 1 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கிச் செய்தால் வரவேற்கத்தக்கதுதான்.

அடுத்து இந்த ஆர்.எல்.இ.ஜி.பி. திட்டத்தின் கீழ் பல ஊராட்சி ஒன்றியங்களிலே என்ன நடக்கிறது என்று கேட்டால், குறிப்பிட்ட அந்த வேலை ஏன் நடக்கவில்லை என்று கலெக்டரைக் கேட்டால், கலெக்டர் ஆர்.டி.ஓ.வைப் பார்க்கச் சொல்கிறார்; ஆர்.டி.ஓ. அவர்கள் பி.டி.ஓ.வைப் பார்க்கச் சொல்கிறார்; பி.டி.ஓ. கான்ட்ராக்டரைப் பார்க்கச் சொல்கிறார்கள். கான்ட்ராக்டரைப் போய்ப் பார்த்தால், அவர்கள் இன்னும் எனக்கு ஒர்க் ஆர்டர் வரவில்லை என்று சொல்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் தான் இருக்கின்றன. நாம் நல்ல பல திட்டங்களை மக்களுக்காக அறிவித்திருந்தாலும் கூட, அவைகள் எல்லாம் மக்களுக்குப் போய்ச் சேரவேண்டிய விதத்திலே போய்ச் சேரவில்லை. எனவே இப்படிப்பட்ட திட்டங்களை எல்லாம் நீங்கள் நல்ல முறையிலே செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அரிசனங்களுக்கு வீடுகள் கட்டுகின்றபோது, அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளான, மின்சார வசதி, கழிப்பிட வசதி போன்ற வசதிகளை எல்லாம் செய்து கொடுக்கவேண்டும். இல்லை என்றால், அவர்கள் யாரும் வரமாட்டார்கள். எங்கோ ஒரு காட்டிலே கொண்டு போய் கட்டினால் அவர்கள் யாரும் போகமாட்டார்கள். அப்படிச் செய்தால் நமக்குப் பணம்தான் வீணாகும்.

அதுபோன்று இந்த ஆளுநர் உரையில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குகின்ற அளவிற்கு எந்தவிதமான புதிய திட்டமும் இல்லை. இருப்பவர்களுக்கே வேலையில்லை. பட்டதாரி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், 1976-லே தேர்வாணைக் குழு மூலமாக அவர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றார்கள். அதற்குப் பின்னால், 1982-லே 2 ஆயிரம் பேர்கள்



தேர்வு செய்யப் பெற்றார்கள். 1982-லே தேர்ந்தெடுக்கப் பட்டவர்களுக்கு இதுவரையில் போஸ்டிங் ஆர்டர் கொடுக்கப்பட வில்லை. அதிலே 200 பேர்களுக்குத்தான் போஸ்டிங் கொடுக்கப் பட்டிருக்கிறது என்றால், 1976-லே பாஸ் ஆனவர்களுக்கு இப்போது வயது 35 ஆகிவிட்டது. அவர்களுக்கு வேலையில்லை. பி.எட். படித்தவர்கள் கஷ்டப்படுகிறார்கள். தேர்வு செய்யப் பட்டவர்களுக்கு வேலை இல்லை. போஸ்டிங் ஆர்டர் கொடுக்கப் பட்டவர்களுக்கும் வேலை இல்லை.

அதுபோன்று நீதிமன்றங்களை எடுத்துக்கொண்டால், என்னுடைய சட்டமன்றத் தொகுதியில் உள்ள நீதிமன்றத்தில் மூன்று முன்சீப்புகள் கிடையாது. அதனால் ஆயிரக்கணக்கான கேஸ்கள் தேங்கிக் கிடக்கின்றன. அதனால் மக்கள் பாதிக்கப் படுகிறார்கள். அதைப்போன்று இருக்கின்ற காலி இடங்களை நிரப்பினால் நூற்றுக்கணக்கானவர்களுக்கு பலன் கிடைக்கும். நீதிமன்றங்களிலே, ஊராட்சி ஒன்றியங்களிலே, எந்த இடத்தைப் பார்த்தாலும் பல்வேறு இடங்கள் காலியாக இருக்கின்றன. அந்த இடங்களை நிரப்பத் தயாராக இல்லை. ஆகவே இந்த வேலை யில்லாத் திண்டாட்டத்தைப் போக்க எந்தவிதமான புதுத் திட்டமும் இல்லை. இருக்கின்ற காலி இடங்களைக் கூட இந்தத் தமிழக அரசு பூர்த்தி செய்யவில்லை என்பது என்னுடைய குற்றச்சாட்டு.

அதேபோல் ஹேண்ட்லூம் அமைச்சர் அவர்கள் இருக்கின்ற காரணத்தால் ஹேண்ட்லூம் பொறுத்தவரை ஒருசில காரியங்களை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஹேண்ட்லூம் பொறுத்தவரையில் எங்களுடைய மாவட்டத்தில் Industrial Match Co-operative Society. என்று சொல்லக்கூடிய ஆதி திராவிடர்களுக்காக ஒரு திட்டம் தீட்டினார்கள். 2½ கோடி ரூபாய் ஆதி திராவிடர்களுக்காக கொடுக்கப்பட்டது. அதற்கு மேலும் 3 ஆண்டுகளுக்கு முன்னால் Industrial Weaving Co-operative Society-க்கு 2 லட்ச ரூபாய் கொடுக்கப்பட்டது. மாநில அரசின் மூலம் 50 ஆயிரம் ரூபாய் கொடுக்கப்பட்டது. ஆனால் அங்கே இருக்கின்ற அசிஸ்டெண்ட் டைரக்டர் சம்பளத்தை வாங்கிக்கொண்டு இருக்கிறார்களே தவிர எந்த வேலையும் செய்யவில்லை. அதேபோல் Weaving Co-operative Society Centres என்று சொல்லக்கூடிய 19 சென்டர்களை குமரி மாவட்டத்தில் உருவாக்கினார்கள். அதிலும் முதலீடு 1½ கோடி ரூபாய். ஆனால் அங்கே இன்று ஹேண்ட்லூம் ஆபீசர் இருக்கிறார், 4 நெசவாளர்கள் தான் இருக்கிறார்கள். அவர்களுக்கு 1½ கோடி ரூபாய் செலவானதற்குப் பின்னால் 4 அசிஸ்டெண்ட் டைரக்டர், 4 நெசவாளர்கள் உட்கார்ந்து வேலை செய்கிறார்களே தவிர அங்கே அந்த தொழிலை விரிவாக்க நிறைய பேர்களுக்கு வேலைவாய்ப்பை தருகின்ற முறையில் அவர்கள் வேலை செய்யவில்லை. உண்மையில் வேலை செய்து இருந்தால் 2 ஆயிரம், 3 ஆயிரம் பேர்களுக்கு வேலை கொடுத்து இருக்க முடியும். ஆனால் Industrial Weaving Co-operative Societies என்று

சொல்லக்கூடிய அந்த சொசைட்டிகள் குமரி மாவட்டத்தில் மிகவும் பாழடைந்த நிலையில் இயங்காமல் இருக்கின்றன. ஒரே ஒரு சென்டர் தான் ஒழுங்காக வேலை செய்கிறது. இதை மாண்புமிகு அமைச்சருடைய மேலான கவனத்திற்கு கொண்டு வர விரும்புகிறேன். மத்திய அரசும், மாநில அரசும் 2 கோடி ரூபாய் முதலீடு செய்கின்ற District Industries Centres இன்று இயங்காமல் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. அங்கே அவர்கள் பணத்தை பிக்ஸட் டெப்பாசிட்டிவ் போட்டு 6 மாதத்திற்கு ஒரு முறை அந்தப் பணத்தை ரெனிவல் செய்து அவர்களுடைய சம்பளத்திற்கு எடுத்துக்கொண்டு மறுபடியும் பணத்தை போட்டுவிடுகிறார்கள். அங்கே ஒரு வேலையும் செய்யவில்லை. 2 வீவர்கள், 2 ஆபிசர்கள், 2 கிளார்க்குகள் இவர்களுக்காக 1½ கோடி ரூபாய்க்கு மேலாக செலவு ஆகிக்கொண்டு இருக்கிறது. இதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வரக் கடமைப்பட்டு இருக்கிறேன். இதை நல்ல முறையில் கவனித்து இருந்தால் ஆயிரக்கணக்கான மக்களுக்கு வேலை கொடுத்து இருக்க முடியும். ஆனால் அங்கே இருக்கின்ற அதிகாரிகள் சரியான முறையில் வேலை செய்யவில்லை. கேட்டால் சொல்வார்கள் இங்கே அசிஸ்டெண்ட் டைரக்டர் குமரி மாவட்டத்திற்கு இல்லை, திருநெல்வேலி மாவட்டத்திற்கு இங்கிருந்து 85 கிலோ மீட்டர் தூரத்திற்கு போகவேண்டும். எங்களால் என்ன செய்ய முடியும் என்று கேட்கிறார்கள். ஆகவே குமரி மாவட்டத்திற்கு அசிஸ்டெண்ட் டைரக்டர் ஆப் ஹேண்ட்லூம்ஸ் உடனடியாக போடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்டிரல் கோ-ஆப்பரேட்டிவ் பாங்க் நாகர்கோவிலில் இருக்கிறது. அதற்கு செயலாளர் இருக்கிறார், ஸ்பெசல் ஆபிசர் இருக்கிறார். ஹேண்ட்லூமிலிருந்து எந்த லோன் போனாலும் கொடுக்கமாட்டார்கள். ரிசர்வ் வங்கி அவர்களுக்கு தனியாக பணம் ஒதுக்கியிருக்கிறது. ஆனால் ஸ்பெசல் ஆபிசர் சொன்னால் கூட அங்கே இருக்கின்ற அந்த சென்டரல் பாங்கியில் இருக்கின்ற செயலாளர் கொடுக்க மாட்டார். அவர்களுக்கு வேண்டியவர் வேண்டாதவர்கள் என்று இருக்கிறார்கள். வேண்டியவர்களுக்கு தான் கொடுப்பார். ஆகவே லோன் பணத்திற்காக தனியாக ஒரு வங்கியை உருவாக்கிட வேண்டும். ஹேண்ட்லூமிற்காக ரிசர்வ் வங்கி ஒதுக்குகின்ற பணத்தை அந்த தனியான வங்கியில் போட்டால் நிச்சயமாக குமரி மாவட்ட மக்களுக்கு நன்றாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு எனக்கு பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. பொ. உத்திராபதி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு சமரசம் அவர்கள் பேசுகிற போது நீர் பங்கீடு சம்பந்தமாக பேசினார்கள். அவர்கள் ஆரம்பிக்கும் போதே விரைவில் நீர் பங்கீடு சம்பந்தமாக அறிவிக்கப் போவதாகச் சொன்னார்கள். நான் ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். தேசிய ஒருமைப்பாட்டுக் கொள்கையை ஏற்றுக்





கொண்டு இருக்கிற காங்கிரஸ் கட்சி, கர்நாடகத்தில் இருக்கக்கூடிய காங்கிரஸ் கட்சிக்காரர்கள் தண்ணீர் கொடுக்கக் கூடாது என்று சொல்கிறார்கள். இங்கே இருக்கின்ற காங்கிரஸ் கட்சிக்காரர்கள் இந்த அரசைப் பார்த்து தண்ணீர் கேட்கிறார்கள். அந்த காவேரி பிரச்சினையை, தொடர்ந்து ஆளக்கூடிய காங்கிரஸ் கட்சி தீர்க்காமல் இருக்கிறதே அந்த காங்கிரஸ் கட்சியினுடைய கொள்கை என்ன என்பதை சொல்வார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கம்யூனிஸ்டு கட்சி ஆண்ட போதும் இதே நிலை தான். (குறுக்கீடு).

திரு. கே. பாலாஜி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையை வரவேற்று அ.இ.அ.தி.மு.க. சார்பில் என்னுடைய கருத்துக்களை கூறுவதற்கு வாய்ப்பு அளித்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி என்னுடைய சில கருத்துக்களை இங்கே எடுத்து வைக்க கடமைப்பட்டு இருக்கிறேன். இன்றைக்கு தமிழக அரசு பல்வேறு திட்டங்களை ஆளுநர் உரையில் அவர் வாயிலாக இந்த நாட்டுக்கு அறிவித்து இருக்கிறது.

திரு. கு. சுப்பராயன்; பேரவைத் துணைத் தலைவர் அவர்களே கம்யூனிஸ்ட் ஆட்சியிலே எங்கே நடந்தது என்று விளக்கம் தெரியவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதைப் பற்றி நீங்கள் பேசும்போது சொல்லுங்கள். வார்த்தைக்கு வார்த்தை பதில் சொல்லிக் கொண்டு இருந்தால் நல்லது அல்ல.

திரு. கு. சுப்பராயன்: உங்களுக்குத் தேவையானவர்கள் என்றால் 30 நிமிடம் தருகிறீர்கள். எங்களுக்கு 10 நிமிடம் தரக்கூடாதா? நாங்கள் ஜனநாயகத்தில் எதையும் கேட்க உரிமை கிடையாதா? ஜனநாயகத்தின் குரல்வளையை நெரிக்காதீர்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: யார் பேசுவதற்கும் யார் உரிமைக்கும் சில கட்டுப்பாடுகள் இருக்கின்றன. அதன் படிதான் பேச வேண்டும்.

திரு. கு. சுப்பராயன்: தேவையான உறுப்பினர்களை அனுமதிக்கிறீர்கள். அது நல்ல முன் உதாரணம் அல்ல. வாய்ப்பு இருப்பதால் எதையும் செய்யலாம் என்பது நல்ல முன் உதாரணம் அல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அதேபோல் தான் வாய்ப்பு இருப்பதால் எப்போது வேண்டுமானாலும் எதை வேண்டுமானாலும் பேசலாம் என்று நீங்கள் நினைப்பது நல்ல முன் உதாரணம் அல்ல.

(பிற்பகல் 1–10)

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டபோது கேரளத்தில் காங்கிரஸ் கட்சி ஆளுகிறது. தண்ணீர் கொடுப் பதைத் தடுக்கிறார்கள், மறுக்கிறார்கள், (குறுக்கீடு) அவர் சொன்ன போது, கேரளத்திலும் காங்கிரஸ் கட்சி ஆளுகிறது..

திரு. பொ. உத்திராபதி: கர்நாடகத்திலுள்ள காங்கிரஸ் கட்சி, கர்நாடகத்திலும், தமிழகத்திலும் உள்ள காவிரிப் பிரச்சினை பற்றி....

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: காவிரி பிரச்சினையை எடுத்துக் கொண்டாலும் கூட, கேரளத்திற்கும் அதில் சம்பந்தம் உண்டு. கேரளமும் அதை எதிர்த்துத் தான் வருகிறது.

*திரு. கே. பாலாஜி: மின் உற்பத்திக்காக இந்த அரசாங்கம் 30 சதவிகிதத்திற்கும் கூடுதலாக ஆளுநர் உரையிலே அறிவித்து இருக்கிறார்கள். அது மட்டும் அல்லாமல், இன்றைக்கு 6—வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 3150 கோடி ரூபாய் ஒதுக்கப்பட் டிருக்கையில் 84-85 ஆம் ஆண்டு இறுதியில் இதுவரை நாம் 3675 கோடி ரூபாய் செலவிட்டுள்ளோம் என்று இங்கே ஆளுநர் உரையிலே கோடிட்டுக் காண்பித்து இருக்கிறார்கள்.

இங்கே நான் பத்திரிகையிலே பார்க்கிறேன். ஆளுநர் உரை காகிதத்திலே எழுதப்பட்ட உரை. அது குப்பைத் தொட்டியில் போடவேண்டிய உரை என்று எல்லாம் எதிர்க்கட்சி நண்பர்கள் அதை விமர்சனம் செய்து கொண்டிருந்தார்கள். எந்த உரையாக இருந்தாலும் காகிதத்திலே தான் அதை அச்சிட்டு பேரவை உறுப்பினர்களுக்கு வழங்க முடியும்.

ஆனால், அவர்கள் ஆளுகின்ற காலத்திலே அந்த உரைகளை எல்லாம், ஏதோ தங்கத் தாட்டிலேயும், வெள்ளித் தகட்டிலேயும் எழுதி அவர்கள் கொடுத்ததைப் போல இங்கே பேசுகின்றார்கள். நான் இந்தக் கூட்டத் தொடரிலே பார்த்தேன். ஆளுநர் அவர்களை விமர்சிப்பதையும், ஆளுநர் அவர்கள் உரையாற்ற வருகின்ற நேரத்திலே அவர்களுடைய எதிர்ப்பைத் தெரிவித்து விட்டு வெளியே செல்வது ஜனநாயகத்தில் ஏற்றுக்கொள்ளப்படு கின்றதா, இல்லையா என்பது வேறு விவகாரம்.

ஆனால், அவர்கள் எல்லாம் ஆண்ட காலத்திலேயும், ஆளு கின்ற மாநிலங்களிலேயும், இன்றைக்கும் ஆளுநர் வாயிலாகத் தான் அந்த அரசாங்கத்தினுடைய கொள்கைகளை எடுத்து வைக்கின்றார்கள். இது கடந்த காலத்திலே கூட நடைமுறை யிலே இருந்த ஒன்றுதான். எதிர்க்கட்சி என்பதற்காகவே எதையும் எதிர்க்க வேண்டும் என்கிற நோக்கத்தோடு அவர்கள் ஆட்சியிலேயே இருந்திராதவர்கள் போலவும், நாங்கள் தான் ஆட்சியிலே இன்றைக்கு வந்திருப்பவர்கள் போலவும், ஆண்டவர் கள் எதிர்ப்பதைப் பார்க்கின்ற நேரத்தில், பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்ன அந்த வாசகம் தான் என்னுடைய நினைவுக்கு வருகின்றது.



பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். எதிர்க்கட்சி என்பது அங்குசமாக இருக்க வேண்டும். ஆளுகின்ற கட்சி, அது யானையாக இருக்குமேயானால், அதற்கு அங்குசமாக இருக்க வேண்டும். அந்த ஆளும் கட்சிக்கு திமிர் பிடிக்கின்ற நேரத்திலே, யானைக்கு எப்படி அங்குசத்தைப் பயன்படுத்துகிறார்களோ, அப்படி ஆளும் கட்சியினர் தவறாகச் செயல்படுகின்ற நேரத்தில் அதைக் கண்டிக்கின்ற வகையிலே, எதிர்க்கட்சியாக இருக்க வேண்டுமே ஒழிய, அதைக் கண்டிக்கின்ற வகையிலே எதிரிக் கட்சியாக இருக்கக் கூடாது என்பதற்கான பல்வேறு உதாரணங் களை என்னால் இங்கே எடுத்துச் சொல்ல முடியும்.

நடந்து முடிந்த ஆசிரியர்கள் பிரச்சினை. நடந்து முடிந்த மீனவர் பிரச்சினை. இவை எல்லாம் இன்றைக்கு எடுத்துச் சொல்லி, நாட்டு மக்களிடத்திலே இந்த அரசுக்கு இருக்கின்ற நல்ல உணர்வுகளை அதைக் காட்டி கெடுத்துவிட முடியும் என்று நம்பினார்கள். ஆனால் மூன்றாவது முறையாகக் கூட, நாட்டு மக்கள் எங்களுடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களை முதலமைச்சராக இங்கே ஆக்கியிருக்கிறார்கள். 10,000 மைலுக்கு அப்பால் படுத்து இருக்கின்ற நேரத்திலேயும், அவர் பெயரைச் சொன்னாலே வாக்குகளைப் போடுகின்ற அளவுக்கு இன்றைக்கு பல்வேறு திட்டங்களை நாட்டிலே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் கொண்டு வந்து இருக்கிறார்கள்.

நான் கூட காலையிலே இருந்து பார்க்கின்றேன். இங்கே 30 லட்சம் வீடுகளைக் கட்டுவதைக் கேலி பேசுகிறார்கள். நாங்கள் சத்துணவுத் திட்டம் கொண்டு வருகிற நேரத்திலேயும் கேலி பேசியவர்கள் தான். ஒரு மாதம் போட முடியும். மூன்று மாதம் போட முடியும். ஓராண்டு தான் போடமுடியும் என்று கேலி பேசியவர்களை எல்லாம் இன்றைக்கு எப்படி அதைப் போடுகிறார்கள் என்பதைச் சிந்திக்க வைக்கின்ற நிலையிலே தான் புரட்சித் தலைவர் அவர்களுடைய திட்டம் இருக்கும்.

ஏதோ, ஆளுநர் உரையிலே தான் இதற்கு இவ்வளவு ரூபாய் இப்படி, இப்படி ஒதுக்க வேண்டும் என்று எந்தச் சட்டத்திலே சொல்லப்படுகின்றது? ஆளுநர் உரையிலே இந்த அரசினுடைய கொள்கைகளை, திட்டங்களை எடுத்து வைப்போம். அது செயல் படுகின்ற நேரத்தில், எந்தெந்த வகையில் அது செயல்படும் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள இருக்கிறீர்கள். எந்த ஒரு நாட்டிலேயும், ஏன் உலகத்திலேயுங்கூட, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, மலைவாழ் மக்களுக்கு, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் மக்களுக்கு, ஆண்டிற்கு 10 இலட்சம் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் என்பதை நினைக்க முடியுமா, உங்களால்? இதைச் செய்துவிட்டால் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருக்கின்றவரை அவர் தான் ஆட்சிக்கு வருவார் என்ற பயத்தின் விளைவாகத்தான் இந்தத் திட்டத்தை நீங்கள் எதிர்க்கிறீர்கள். எந்தத் திட்டத்தை நாங்கள் அறிவித்து, அந்தத் திட்டத்தை செயலாக்கவில்லை என்பதை தயவு செய்து நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ரூ. 1000 கோடியை வருடத்திற்கு ஒதுக்க முடியுமா என்று

கேட்டீர்கள். ரூ. 3,000 கோடிக்கும் அதிகமாகக்கூட, ஆண்டிற்கு வரவு-செலவு செய்கிற இந்த அரசாங்கம், இந்த அடிப்படைத் தேவைகளை, அதுவும் எல்லாக் கட்சிகளும் பேசுகின்றார்களே இருக்க இடம், உடுக்க உடை, உண்ண உணவு, அதைக் கொடுப்பதற்கு ஒதுக்க முடியுமா? இந்த அடிப்படை உரிமையை, இந்த வீடு கட்டிக்கொடுக்கின்ற திட்டத்தை ஏழைகளுக்காக வாழ்கின்ற எங்களுடைய இதய தெய்வம் கொண்டுவருகின்றார்கள். அது விமர்சிக்கப்படலாம். விவாதிக்கவும் படலாம். ஆனால் அதை கேலி பேசுவதைத் தான் எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை.

ஏதோ கண்ணாடித் திட்டத்தை கொண்டுவந்தோம் என்றெல்லாம் சொல்லி வந்தீர்கள். காது கேளாதவர்களுக்கு காது கேட்கும் கருவி கொடுக்கின்ற திட்டத்தை அறிவித்தோம் என்றெல்லாம் சொன்னீர்களே, உங்களால் 30 இலட்சம் வீடுகளை எண்ணிப்பார்க்க முடியுமா? இவ்வளவு பெரிய திட்டம் அறிவிக்கப்பட்டதை நீங்கள் பாராட்ட வேண்டாம். வரவேற்க வேண்டாம். ஆனால் கேலி பேசாமல் இருக்க வேண்டும். அதைக்கூட நீங்கள் பொறுத்துக்கொள்ளவில்லை. பேரறிஞர் அண்ணா அவர்களின் அடிப்படைக் கொள்கை இது என்பதை நண்பர்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

நான் குறிப்பாக கைத்தறி நெசவாளர்கள் அதிகமாக வாழ்கின்ற காஞ்சிபுரத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவன். பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நகரமான காஞ்சிபுரத்திலிருந்து வந்திருக்கிறேன். அது நெசவாளர்கள் அதிகமாக இருக்கிற பூமி. ஆனால் அங்கே தொழிற்சாலைகள் இல்லை. அது வளர்ச்சி அடையாத நகரமாக இருக்கிறது. பல்லவர்கள் எல்லாம் ஆண்டு பெருமை பெற்று, ஏன் பல்கலைக் கழகத்தை எல்லாம் உருவாக்கிய அந்த நகரம். இன்றைக்கு பின் தங்கியிருக்கிறது என்ற உணர்வின் காரணமாக செங்கற்பட்டிலிருந்த மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை காஞ்சிபுரத்திற்கு அவர்கள் கொண்டு வந்தார்கள். அப்படியிருந்தும், அண்ணா தொழிற்சாலைகள் வந்திருக்கின்றனவா என்றால் இல்லை. அங்கே ஆகவே எங்களுடைய தாலுக்காவை நீங்கள் பின்தங்கிய தாலுக்காவாக, பேரறிஞர் அண்ணா அவர்கள் எண்ணியபடி கனவு கண்டபடி, இந்தப் புண்ணிய பூமியை, தாய் உள்ளம் கொண்ட புரட்சித் தலைவர் அவர்கள் பின்தங்கிய தாலுக்காவாக, இந்தக் கூட்டத் தொடரிலே அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதை என்னுடைய தொகுதி மக்களின் சார்பாக எடுத்து வைக்கவேண்டியது என்னுடைய கடமையாகும் என்று கருதுகிறேன்.

அடுத்து நெசவாளர்களுக்காக மத்திய அரசாங்கம் ஒரு கொள்கையை அறிவித்திருக்கிறது. அதை நீங்கள் ஆளுநர் உரையிலே மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று எடுத்துச் சொல்லியிருக்கிறீர்கள். ஏன் அதைச் சொல்கிறோம் என்று சொன்னால், நாம் தொன்றுதொட்ட காலத்திலேயிருந்து கைத்தறியிலே, அதுவும் பட்டிலே, சைனாவோடு போட்டி போடுகின்ற அளவிற்கு இருந்து வந்திருக்கிறோம். ஆனால்,



அது மட்டுமல்லாமல், நகராட்சியின் வாயிலாக, 15 ஆண்டுகளுக்கு முன்னால், அங்கே பாதாள சாக்கடை திட்டம் கொண்டு வரப்பட்டது. ரூ. 75 இலட்சத்திலே கொண்டு வரப்பட்ட அந்தத் திட்டம், இன்றைக்கு வட்டியோடு சேர்த்து, ரூ. 1 கோடியே 30 இலட்சத்துக்கு ஆகியிருக்கிறது. ஆனால், அதை நாம் திருப்பிச் செலுத்தவில்லை. தாயுள்ளம் கொண்ட இந்த அரசாங்கம் அந்தக் கடனைத் தாங்களே ஏற்றுக்கொண்டு, எங்களுடைய நகராட்சிக்கு அதைத் தள்ளிக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு அரசாங்கம் பல்வேறு காலகட்டங்களில் அங்கே பணியாற்றுபவர்களுக்கு ஊதிய உயர்வைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், 13 ஆண்டுகாலமாக நகராட்சியிலே வரியை உயர்த்தாமல் வருமானத்தைப் பெருக்க முடியாத காரணத்தால், எங்களுடைய காஞ்சிபுரம் நகராட்சியில் வருடத்திற்கு ரூ. 1 கோடியே 40 இலட்சம் வருமானம் என்றால், அதிலே சம்பளம் கொடுப்பதற்கே ரூ. 1 கோடியே 38 இலட்சம் செலவாகிறது. ஆகவே, சுகாதார வசதி, குடிநீர் வசதி சாலை வசதி, பள்ளிக் கட்டிடங்கள் போன்ற வசதிகள் எல்லாம் அங்கே தடைப்படுகிற காரணத்தால், சம்பளம் உயர்த்தப்படுகிற நேரத்தில், அந்தச் சம்பளத்தை உயர்த்துகின்ற அளவுக்கு, நகராட்சிக்கு நீங்கள் அந்தப் பணத்தை மானியமாகவோ, அல்லது அரசு உதவியாகவோ கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

தனிப்பட்ட முதலாளிகளிடம் நெய்கின்ற நெசவாளர்களுக்குப் பாதுகாப்புக் கொடுப்பதைப் போல், கூட்டுறவு சங்கங்களிலே நெய்கின்ற நெசவாளர்களுக்கும் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கங்களிலே ஆனாலும் சரி, தனிப்பட்ட முதலாளிகளிடம் நெய்கின்ற நெசவாளர்களுக்கு மற்ற துறையில் உள்ளவர்களுக்குக் கொடுப்பதைப் போல், ஈ.எஸ்.ஐ. ஆஸ்பிட்டல் வசதியைக் கொடுக்க வேண்டும். அங்கே காஞ்சிபுரத்திலே அந்த வசதி இல்லை. என்றாலும் அரசு பொது மருத்துவ மனையில் நெசவாளர்களுக்கு ஒரு தனி மருத்துவரை நியமித்து அவர்களுக்கு வைத்திய வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்து விடை பெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

டாக்டர் ந. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையிலே உப்பும் இல்லை, உறைப்பும் இல்லை, இனிப்பும் இல்லை, கசப்பும் இல்லை, சப்பென்று இருக்கிற சந்துணவாகத்தான் இருக்கிறது. இதை நாங்கள் அரசினுடைய கொள்கை விளக்கமாக ஏற்றுக் கொண்டிருக்கிற காரணத்தால், இந்த ஆளுநர் உரை மிகுந்த ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும்.

இன்றைக்கு விசைத்தறி என்ற வகையில் 3,000 தறிகளுக்கு நாம் அனுமதி கொடுத்திருந்தாலும், நாட்டிலே 6 இலட்சம் தறிகள் அனுமதி இல்லாமல் இயங்கிக் கொண்டிருக்கின்றன. அந்த விசைத் தறிகள் கைத்தறிக்காக ஒதுக்கப்பட்ட அந்த ரகங்களை இன்றைக்கு நெய்துகொண்டு வருகிறார்கள். ஆகவே விசைத்தறிக்கு கொடுக்கப்படுகின்ற அந்த அனுமதியை மத்திய அரசாங்கம் மாநில அரசாங்கத்திற்குக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம், அதைக் கண்காணிப்பதற்கும். அந்த விசைத் தறிகளை அனுமதி இல்லாமல் நெய்பவர்களுக்கும், அதன் மீது நடவடிக்கை எடுப்பதற்கும், மாநிலங்களுக்கு இந்த காரியங்களைச் செய்து முடிக்க அனுமதி வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்வது என்னுடைய கடமையாகும் என்று கருதுகிறேன்.

அதுமட்டுமல்லாமல், இன்றைக்கு காஞ்சி மாநகரத்தில் ஓடுகின்ற வேகவதி என்னும் ஆற்றை அழகுபடுத்தி, அதன் இரு கரைகளிலும் பூங்காக்களை அமைத்து, அங்கே மாலை நேரங்களிலே நெசவாளர்கள் ஓய்வு எடுத்துக் கொள்வதற்கான நல்ல முறைகளிலே செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நெசவாளர்கள் நல்ல சுகாதாரத்தோடு வாழ வேண்டுமென்பது பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கொள்கையாகும். இந்தத் திட்டம் 1979-80-ல் ஆய்வு செய்யப்பட்டு, தயாரிக்கப் பட்டது. ஆனால் இன்றுவரை செயல்படுத்தப்படாமல் இருக்கிறது அதைச் செய்து காடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-20)

அடுத்து எங்கள் ஊரில் பாலாறு ஓடுகின்றது. அந்தப் பாலாற்றுக்கு மேல்நிலைப் பாலம் கட்ட வேண்டுமென்று 1979-80-லே திட்டம் தீட்டப்பட்டு, ரூ. 1 கோடியே 5 இலட்சம் அனுமதிக்கப்பட்டு, அந்தத் திட்டமும் நின்று விட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் காஞ்சிபுரத்திலே, பச்சையப்பன் ஆடவர்—மகளிர் கல்லூரி இருக்கிறது. அங்கே பி.காம். வரை இருக்கிறது. எம்.காம். படிக்க வேண்டுமென்றால், அங்கே இருக்கிற மாணவர்கள் எல்லாம் அருகிலே இருக்கிற செய்யாறுக்கு அல்லது சென்னைக்கு வர வேண்டும். நெசவாளர் குடும்பத்தைச் சேர்ந்த அவர்கள் இங்கே எல்லாம் வரமுடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே, அங்கேயே, எம்.காம். வகுப்புகளை, மகளிர் கல்லூரியிலேயும், ஆண்கள் கல்லூரியிலேயும் திறக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.



மதுவிலக்குக் கொள்கையைப் பொறுத்த வரையில் ராஜாஜி, காலம் தொட்டு, பெருந்தலைவர் காமராஜர், அதற்குப் பின்னால் பேரறிஞர் அண்ணா காலம் வரையில், அதில் எந்த விதமான மாற்றமும் இல்லை. அதற்குப் பின்னாலே, அன்றைய தமிழக முதல்வர், அப்போதைய சூழ்நிலையில், அப்போதைக்கு இடம் இல்லை என்று அப்பொழுதே அதை நீக்கிவிட்டார்கள். ஆனால், அதற்குப் பின்னால் வந்த இன்றைய தமிழக முதல்வர் அவர்கள் 3 முறை ஆட்சிக்கு வந்துங்கூட, அன்றையதினம் இந்த நாட்டைவிட்டு நாடு கடத்தும் சட்டம் வரை போட்டுவிட்டு, அதற்குப் பின்னாலே, தாய்மீது ஆணையிட்டுவிட்டு, இன்றைய தினம் மதுவிலக்குக் கொள்கையைப் பற்றி ஏதும் பேசாமல் இருப்பது எங்களுக்கெல்லாம் மிகுந்த வருத்தம் தருகிறது என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். எனவே வருங்காலத்திலாவது, அடுத்த ஆண்டாவது, மதுவிலக்குக் கொள்கையைப் பற்றி, ஏதாவது குறிப்பிடுவார்கள், சாதகமான நிலைமைகளை உருவாக்குவார்கள் என்ற நம்பிக்கையோடு நான் இதைக் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

வேளாண்மைத் துறையை எடுத்துக் கொண்டாலும் சரி' இந்த நாட்டுக்கு அடிப்படை வசதிகள், இந்த நாட்டுக்குத் தேவையான குடிநீர் வசதி என்று எடுத்துக் கொண்டாலும், சரி வேளாண்மைத் துறையிலே ஏதாவது நஷ்டம் ஏற்பட்டால், உடனே மத்திய அரசு ஏதாவது நிதி உதவி கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள். அதைப்போல், குடிநீர் வசதி செய்து தர வேண்டுமென்று கேட்டால், உடனே உலக வங்கியிலிருந்து ஏதாவது உதவி வராதா என்று கேட்கிறார்கள். அதை நினைத்துப் பார்க்கும்போது, நமக்கு இன்றைய தமிழக முதல்வர் அன்றைய தினம் பாடிய பாடல்தான் நினைவிற்கு வருகிறது.

என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்
ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்

என்று பாடிய பாடல்தான் என் நினைவுக்கு வருகிறது. எல்லா வசதிகளும் இருந்துங்கூட, நாம் மற்றவர்களை எதிர்பார்க்கின்ற நிலை இந்த இடத்திலே ஏன் ஏற்படுகிறது என்பதை இந்த அவைக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற்குப் பிறகு குடும்ப நலத் துறையிலே 2.5 கோடி ரூபாயைத் தேசீய விருதாகப் பெற்று விட்டோம் வெற்றி வாகையாகப் பெற்றுவிட்டோம் என்று சொல்கிறார்கள். . . .

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: துணைத் தலைவர் அவர்களே, "என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில் ஏன் ஏந்த வேண்டும் கையை வெளிநாட்டில்" என்று பாட்டைச் சொன்னார்கள். வெளிநாட்டில் கையை ஏந்துவது நாம் மட்டும் அல்ல. எனவே அப்படிச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. தமிழகம் தான் போய் வெளிநாட்டிலே கையேந்துகிறது என்ற தவறான செய்தி வரக்கூடாது. இந்திய அரசே வெளிநாட்டில்

உலக வங்கியிலிருந்து கடன் வாங்குகிறது; மற்றைய மாநிலங் களுக்கு வாங்கிக் கொடுக்கிறார்கள். அப்படி வாங்கிக் கொடுக் கின்ற கடனை நாமும் வாங்குகிறோமே தவிர தமிழகத்திற்கு மட்டும் உலக வங்கி கடன் வழங்குவதில்லை. மற்ற மாநிலங் களுக்கும் வாங்குகிறார்கள், ஆகவே நாமும் கேட்கிறோம். இந்திய அரசாங்கம் வெளிநாட்டிலேயிருந்து வாங்குகிறது. எனவே, இந்தப் பாடலுக்கு மறு பாடல் பாட வைத்துவிட வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, எதற்கெடுத்தாலும் மத்திய அரசாங்கத்தைக் குற்றம் சாட்டிக் கொண்டிருப்பதால்தான் இதைக் குறிப்பிட வேண்டியிருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குடும்ப நலத் துறையைப் பொறுத்த வரையில் 2.5 கோடி ரூபாயை, இதற்காக நாங்கள் தேசிய விருதாகப் பெற்றிருக்கி றோம் என்று சொல்கிறார்கள். அதிகமாக எங்களுடைய இலக்கைப் பெற்றுவிட்டோம், இந்தியாவிலேயே மிகச் சிறந்த மாநிலம் என்று பெருமை பெற்றுவிட்டோம் என்று சொல்கி றார்கள். இந்தக் குடும்ப நலத் திட்டத்திலே அவர்கள் பெற்றி ருக்கின்ற தேசிய விருதை எண்ணிப் பார்க்கின்றபொழுது டாக்டர் நாவலர் அவர்கள் ஒருமுறை குறிப்பிட்டதுதான் இந்த இடத்தில் என்னுடைய ஞாபகத்திற்கு வருகிறது. அதாவது, பொய்களில் இரண்டு வகைகள் இருக்கின்றன; ஒன்று அன்றாடம் நாம் வாழ்க்கையிலே பேசும் பொய், இரண்டாவது, புள்ளி விவரத் துறை தரும் புள்ளி விவரங்கள் என்று அவர்கள் ஒருமுறை சொல்லியிருக்கிறார்கள். எனவே, இரண்டாவதாகச் சொன்னது இந்தக் குடும்ப நலத் திட்டத்தைப் பொறுத்த வரையில் எந்த அளவிற்குப் பொருந்தியிருக்கிறது என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

அதற்குப் பிறகு கடந்த ஆளுநர் உரையிலே மருத்துவப் பல்கலைக் கழகம் பற்றிக் குறிப்பிட்டிருந்தார்கள். ஆனால், அதைப்பற்றி எந்தவிதமான ஆக்கப் பணிகளும் துவங்கப்பட வில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

The Ho . Dr. H. V. HANDE : I would like to tell my friend— பொய் என்கிற வார்த்தையை நாம் சாதாரணமாக சட்ட மன்றத்தில் பயன்படுத்துவது கிடையாது. இருந்தாலும் கேட்கி றேன், எப்படி இது பொய் என்று கருதுகிறார்கள். கொடுத்த புள்ளி விவரத்தில் என்ன தவறு இருக்கிறது என்று எனக்குத் தெரியவில்லை. அதை அவர்கள் விளக்கினால் நல்லது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அகில இந்தியாவிலேயும் உள்ள எல்லா மாநிலங்களையும் ஒப்பிட்டுப் பார்த்துவிட்டு, தமிழக அரசு இந்த இலக்கை பெற்றிருக்கிறது என்பதைப்



பார்த்து தமிழக அரசுக்குத்தான் அந்த இரண்டரை கோடி ரூபாய் வந்திருக்கிறது. அப்படிப் பரிசு தந்ததே தவறு என்று கருதுகிறார்களா, புள்ளி விவரம் சரியாக இல்லை என்று கருது கிறார்களா என்று கேட்க விரும்புகிறேன்.

டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தப் புள்ளி விவரம் உண்மையானதுதானா என்பதில்தான் எனக்கு ஐயம் ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால் விதவைகளுக்கு குடும்ப நல அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருக் கிறது. திருமணம் ஆகாதவர்களுக்குச் செய்யப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு உறுப்பின ரவர்களுக்குச் சொல்கிறேன். அவர்கள் பலமுறை வந்து பார்த்து இருக்கிறார்கள். Please do not damage the interests of the State, if you do not want this Rs. 2.50 crores. நம்முடைய மாநிலத்தி னுடைய நலன்களில் அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். அதிலே தவறான வகையிலே நடந்திருக்கின்றது என்று உங்களுக்குத் தெரிந்தால், நீங்கள் அதை ஆதாரத்துடன் கொடுத்தால் இந்த மானியக் கோரிக்கை வரும்பொழுது நாம் பேசலாம். இப்பொழுது ஆதாரம் இருந்தாலும் அதைக் கொடுத்தால் பரிசீலிக்கலாம். அதற்குத் தயார். Sweeping statement is damaging the State. In the interests of the State only I am telling.

டாக்டர் ந. மாசிலாமணி: பேரவைத் துணைத் தலைவர் அவர் களே, எனக்கு நேரத்தை நீட்டித் தருமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறேன். இடையிலே இன்டரப்ஷன்ஸ் இருப்பதால் எனக்குக் கொடுக்கப்பட்ட நேரம் குறைகிறது.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: உங்களிடத்திலே தகவல் இருந்தால் கொடுங்களேன் இப்பொழுதே. If you have got proof kindly give us. If you have got the name and other details, please give. It would be in the interests of the State. விதவை என்றெல்லாம் சொன்னீர்கள். என்ன பெயர்? Please give the details. சும்மா சொல்லக் கூடாது. In the interests of the State only I am telling. You can do that.

டாக்டர் கே. சௌரிராஜன்: துணைத் தலைவரவர்களே, விதவை களுக்கு அறுவை சிகிச்சை செய்யக்கூடாது என்று எங்கேயாவது இருக்கிறதா? Are they not eligible to produce children? நம்முடைய கவர்ன்மெண்டே விதவைகள் மறு வாழ்வுத் திட்டம் வைத்திருக்கிறது. விதவைகளுக்குக் கருத்தடை என்றெல்லாம் செய்தால் ஒன்றும் தப்பு இல்லை என்கிறேன். Otherwise they will be able to produce. They can get married.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: டாக்டர் அவர்கள் இந்த நல்ல யோசனையைத் தங்கள் கட்சிகாரர்களுக்குச் சொல்ல வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மின் துறையைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே மூன்றில் ஒரு பங்கை, சுமார் 2,000 கோடி ரூபாயைச் செலவிட திட்டம் வகுத்திருக் கிறது என்று சொல்கிறார்கள். 1,416 மெகாவாட் மின் உற்பத்தித் திறன் கொண்டு மின்சக்தி உற்பத்தி நிலையங்களைத் தொடங்க திட்டம் வகுத்திருக்கிறோம் என்று குறிப்பிட்டிருக் கிறார்கள். ஆனால் திட்டத்தின் விவரங்களை விரிவாகச் சொல்லவில்லை, எனவே அவைகளையும் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பற்றி எதையும் குறிப்பிடவில்லை. அது வருந்தத்தக்க ஒன்று. இந்த நாட்டிலே இருக்கின்ற இளைஞர்களை, இளைஞர் ஆண்டிலே முழுக்க முழுக்கப் பாழடிக்கும் நிலை இருக்கிறது.

ஆதி திராவிட நலத் துறையை எடுத்துக் கொண்டால் இன்றைக்கு வீடு கட்டுவதற்கு 6,000 ரூபாய்தான் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அது போதவில்லை. எனவே, அதை 10,000 ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த வருடத்திலே புதிதாக அறிவிக்கப்பட்டிருக்கின்றது, அது உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டிய ஒன்று. அதாவது 10 இலட்சம் பேர்களுக்கு வீடு கட்டித் தருகின்ற திட்டம். ஆதி திராவிடர்கள், பழங்குடி மக்கள், நரிக்குறவர் ஆகியோருக்காக 5 இலட்சம் வீடுகளும், வறுமைக் கோட்டிற்குக் கீழே அவதியுறும் ஏனைய குடும்பங்களுக்கு 5 இலட்சம் வீடுகளும் கட்டிக் கொடுக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியுடன் பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

டாக்டர் ந. மாசிலாமணி: அதற்குப் பின்னாலே, நரிக் குறவர் களுக்கு 5 இலட்சம் வீடுகளும் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழ் கின்ற மக்களுக்கு 5 இலட்சம் வீடுகளும் கட்டிக் கொடுப்பதாக இதிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஒரு வீட்டினுடைய மதிப்பு மொத்தம் ரூ. 1000 என்று வைத்துக் கொண்டாலும் கூட 10 இலட்சம் வீடுகளுடைய மதிப்பு, கிட்டத்தட்ட ரூ. 1,000 கோடி. நம்முடைய தமிழக பட்ஜெட் சுமார் ரூ. 3,000 கோடி. தாலும் அதிலே மூன்றில் ஒரு பங்கு இதற்கு .



இருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கின்றபொழுது உண்மை யிலே வரவேற்கிறோம், பாராட்டுகிறோம், மகிழ்ச்சி தெரிவிக் கிறோம். ஆனால், நடைமுறையிலே முழுக்க, முழுக்க வருகின்ற நிதியாண்டிலேயே அதை நீங்கள் செய்து கொடுக்க வேண்டு மென்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். அதைப்பற்றி இறுதியான திட்டங்களும் விவரங்களும் இதிலே இல்லை என்பது மிகவும் குறை என்று சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

கல்வித் துறையை எடுத்துக் கொண்டோமானால், கல்வித் துறையிலே பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவது என்பது மிகவும் முக்கியமான ஒன்று. அதற்காக ஒதுக்கப்பட்டது மிகமிகக் குறை வானது. எனவே, அதிகப்படுத்தித் தரவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்களுடைய கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்றிட வேண்டும். திருச்சி மாவட்டத்தில் திருவள்ளுவர் மாவட்டத்தை உடனடியாகப் புதிய மாவட்டமாக அறிவித்து, அதை நடைமுறைக்குக் கொண்டு வந்து அதை தொழிலில் பின் தங்கிய மாவட்டமாக அறிவித்து அதற்கு ஆவன செய்ய வேண்டு மென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

டாக்டர் கே.பி. இராமலிங்கம் அவர்கள் இங்கே பேசுகின்ற பொழுது ஒன்றைக் குறிப்பிட்டார்கள், அவர்கள் குறிப்பிடுகின்ற பொழுது உலக வங்கியினுடைய கடனைப்பற்றிக் குறிப்பிடும்போது, சேட்டு வட்டி வாங்குகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். உண்மை யிலேயே சேட்டு வட்டி என்றால், நான் கேள்விப்பட்ட வரையில், 30% அவர்கள் பெற்றுக் கொண்டிருப்பதாக அறிகிறேன். எனவே, அப்படிப்பட்ட ஒரு தகவலை இந்த அவையிலே குறிப்பிட்டு இருக்க வேண்டுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவருக்குத் தெரிவித்துக் கொண்டு, அதை நீக்கி விட்டால் சிறப்பாக இருக்கும் என்று நான் கூறிக் கொள்கிறேன்.

உணவுப் பற்றாக்குறையைப் பற்றிக் குறிப்பிடுகிறபொழுது, அதிகமாக விளைச்சல் இருக்கிறது என்று கூறிக்கொண்டு அதற்குப் பின்னாலே, மத்திய அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறோம் என்பது முரண்பாடான வாக்கியமாக இருப்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த அரசைக் குறை சொல்ல வேண்டுமென்பது எங்களுடைய நோக்கம் அல்ல. நிறைகளை எந்த அளவுக்கு நாங்கள் பாராட்டுகிறோமோ அதைப்போல் குறைகளை அவ்வப் போது சுட்டிக்காட்ட வேண்டியது எதிர்க்கட்சிகளுடைய கடமை என்று மக்கள் எதிர்பார்க்கிறார்கள், நாங்களும் எதிர்பார்க்கிற காரணத்தால் அதை நான் உங்கள் மீது குறையாகச் சொல்ல வில்லை. இதைத் தயவு செய்து புரிந்து கொள்ள வேண்டுமென்று ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மூலமாக நான் கேட்டுக் கொள்கிறேன். குறைகளை, தயவுசெய்து நிறைகளாக மாற்றித் தரவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

கொள்வாரும் இல்லை, கொடுப்பாரும் இல்லை,
வள்ளலும் இல்லை, வறியவரும் இல்லை,
கள்வரும் இல்லை, காவலரும் இல்லை.

கொடுப்பவர்கள்—இலஞ்சம் கொடுப்பவர்களும், கடன் கொடுப்ப வர்களும் இல்லை; ஏனென்றால் வாங்குபவர்கள் இல்லை. வள்ளலும் இல்லை—ஏனென்றால், வறியவர்களும் இல்லை. காவலரும் இல்லை—ஏனென்றால், கள்வரும் இல்லை என்று ஸ்ரீ இராமச்சந்திரன் அந்தக் காலத்திலே, நாட்டை ஆண்ட பொழுது கம்பன் கண்டிருக்கிறான். இன்றையதினம் வள்ளல் இருக்கிறார். வறுமை ஒழிந்ததா? வறியவர்களும் ஒழிந்தார்களா? காவலர்கள் இருக்கிறார்கள்—கள்வர்கள் ஒழிந்தார்களா? இல்லவே இல்லை, இன்றைய தினம் சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்படுகிறதா? இவையெல்லாம் ஒரு கேள்விக்குறியாக இருக்கின்றன. கொடுப் பவர்களும் இருக்கிறார்கள். கொள்பவர்களும் இருக்கிறார்கள். எனவே, தமிழக முதல்வர் அவர்களை, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் மூலமாக கேட்டுக் கொள்வதெல்லாம், தங்கள் இந்த நாட்டை, கம்பன் கண்ட ஸ்ரீ இராமச்சந்திரன் ஆட்சியைப் போல் ஆக்க வேண்டும்—உங்களுடைய பொறுப்பிலே ஆட்சி இருக்கிறது அப்படி நீங்கள் உருவாக்கித் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அம்பாசங்கர் கமிஷன் அறிக்கையைப் பொறுத்தவரையிலே பிற்பட்ட சமூகத்திற்கு அது பெரிய அநீதி இழைத்துவிட்ட தாகப் பேசிக்கொள்கிறார்கள். அந்த கமிஷனுடைய அறிக்கை யினை இந்த அவையிலே வைக்குமாறு நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

பஞ்சாயத்துத் தேர்தல்களைப் பொறுத்தவரையிலே மாண்புமிகு அமைச்சர்களும் மற்ற ஆளுங்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் அதற்கான உறுதியைத் தந்திருக்கிறார்கள், நம்பிக்கையைத் தந்திருக்கிறார்கள். ஆனால் இராமன் காட்டுக்குச் சென்றதைப்போல் 14 ஆண்டுகளாக, 15 ஆண்டு களாக பஞ்சாயத்துத் தலைவர்கள் காட்டுக்குப் போயிருக் கிறார்கள். மீண்டும் வருவார்களா என்பது பிப்ரவரி 23-ஆம் தேதிதான் தெரியும். எனவே, அந்த நம்பிக்கை வீண் போகக் கூடாது என்று மீண்டும் நான் உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியைப் பொறுத்தவரையில் நானும் மாற விற்லை; நாங்கள் எல்லாம் நிறம் மாறாத பூக்களாக இருக் கிறோம். எனவே அவற்றையெல்லாம் மாற்றாமலே வைத்திருப் பதுதான் நோக்கம் என்று சொன்னால், சட்டமன்ற உறுப்பின ராக இருப்பதில் அர்த்தமே இல்லை என்பதைத்தான் நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்கு முன்னாலே என்னுடைய கட்சியைச் சேர்ந்த ரவீந்திரன் குறிப்பிட்டதைப் போல், இந்த நாட்டிற்கு அடிப்படை வசதி பெற வேண்டுமென்றால், பை எலக்ஷன் வந்தால்தான் முடியும் என்ற நிலைமை இருப்பதை நான் வருத்தத்தோடு



குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். எனது தொகுதியில் ஒரு பை எலக்ஷன் உருவாக்கி விடலாம்; ஆனால் ஆளுகின்ற கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அப்படி உருவாக்கி விட வேண்டாம்; நீங்கள் நீண்ட நெடிய காலம் வாழ வேண்டும்; நல்ல முறையில் அந்த சமூகத்திற்குச் சேவை செய்ய வேண்டுமென்று ஆளும் கட்சியை சேர்ந்தவர்கள் வேண்டுகோள் விடுத்ததால் அந்த வகையான ஒரு நிகழ்ச்சிக்குச் சாத்தியம் இல்லை என்றே நான் இந்த நேரத்திலே கருதுகிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்த அளவில் நான் அதிக மாகக் கேட்கவில்லை. அதிகமான நேரத்தை நான் எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. எனது தொகுதிக்கு நான் கேட்க விரும்புவதெல்லாம் பெரம்பலூரில் ஒரு சர்க்கரை ஆலை இருக் கிறது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு காங்கிரஸ் கட்சி உறுப்பினர் அவர்கள் இடைத் தேர்தல் வரவேண்டும், அப்போது தான் பல பணிகள் நடைபெறும் என்று குறிப்பிடுகிறார்கள். இப்படி காங்கிரஸ் கட்சி உறுப்பினர் கூறுவது வேடிக்கையாக இருக்கிறது. பொதுத் தேர்தலுக்குப் பிறகு திருப்பத்தூரிலே கூட இடைத் தேர்தல் வந்தது; நடத்தியிருக்கிறோம். திருப்பத்தூர் இடைத் தேர்தலையும் இதைப்போன்றுதான் நடத்திவோம் என்று கருதுகிறார்களா? இடைத் தேர்தலுக்கும் மக்களுக்குச் செய்யும் வசதிகளுக்கும் சம்பந்தமில்லை. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அப்படிக் கருதுவது தவறு. செய்ய வேண்டிய பணிகளை செய்தே தீரவேண்டும். இடைத்தேர்தல் வந்தால்தான் செய்வோம் என்பது சரியல்ல. திருப்பத்தூர் இடைத்தேர்தலில் காங்கிரஸ் கட்சிதான் வெற்றி பெற்றது. அங்கேயும் இப்படிச் செய்துதான் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றதா? அதையெல்லாம் மறந்து விட்டு, இப்படிப் பேசுவது முறையல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் ந. மாசிலாமணி: தொகுதிக்கு ஏதாவது வசதிகள்; தேவைகள் கிடைக்க வேண்டுமென்றால் 'பை எலக்ஷன்' வந்தால் தான் கிடைக்கும் என்று நாட்டு மக்கள் நம்புகிறார்கள். அதைத் தான் குறிப்பிடுகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: நாட்டு மக்கள் அப்படி நம்பவில்லை. இந்தத் தவறான செய்தியை எடுத்துச்சொல்ல வேண்டாம்.

டாக்டர் ந. மாசிலாமணி: என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையில் இதற்கு முன்னாலே பேசியபோதுகூட பல விவரங்களைக் குறிப்பிட்டிருக்கிறேன். எனவே இப்போது அதிகமாக நான் குறிப்பிட விரும்பவில்லை. ஆனால் மாண்புமிகு துணைத் தலைவர்

அவர்கள் மூலமாக ஆளுங்கட்சி உறுப்பினர்களை அன்போடு ஒன்றைக் கேட்டுக் கொள்கிறேன். பெரம்பலூரில் ஒரு சர்க்கரை ஆலை இருக்கிறது. அதனுடைய துணை ஆலை ஒன்றை ஆரம்பிக்கும் உத்தேசம் உள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் உங்கள் அனைவரையும் எனக்கு சிபாரிசு செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதி தொழில்துறையில் மிகவும் பின்தங்கிய பகுதி. ஆகவே, நீங்கள் எல்லாம் சிபாரிசு செய்து, அந்தத் துணைத் தொழிலை, துணை ஆலையை என்னுடைய தொகுதியில் தொடங்குவதற்கு முயற்சி செய்ய வேண்டுமென்று அன்போடு, பணிவோடு கேட்டு, கருத்து கூற வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி, முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (21-1-1986) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-36 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

93. தமிழ்நாடு சரிகை நிறுவனத்தின் 1984–85 ஆம் ஆண்டிற்கான பதிமூன்றாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

94. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் 1982–83 ஆம் ஆண்டிற்கான முப்பத்திநான்காவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ்.)

95. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் 1984–85 ஆம் ஆண்டிற்கான முப்பத்து ஆறாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.] (ஆங்கிலம்).

96. தமிழ்நாடு கதர்–கிராமத் தொழில் வாரியத்தின் 1981-82-ஆம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்குகள் [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு கதர்-கிராமத் தொழில் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1959) 24(3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)

97. தமிழ்நாடு கதர்-கிராமத் தொழில் வாரியத்தின் 1982-83-ஆம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்குகள் [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு கதர்–கிராமத் தொழில் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1959) 24 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்.)





98. தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் 1983–84 ஆம் ஆண்டிற்கான முதல் ஆண்டு அறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது. (ஆங்கிலம்).

99. தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தின் 1980–81 ஆம் ஆண்டிற்கான எட்டாம் ஆண்டறிக்கை (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது. (தமிழ், ஆங்கிலம்.)

### (ஆ). அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

30. இந்தியத் தணிக்கைத் துணைத் தலைவரின் 1980–81 ஆம் ஆண்டிற்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கையில் ஆதிதிராவிடர் வீட்டு வசதி–வளர்ச்சிக் கழகம் மற்றும் தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகம் தொடர்பான பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் (1985–86) (எட்டாவது பேரவை) பதினைந்தாவது அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்.)

31. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1974–75 மற்றும் 1975–76 ஆம் ஆண்டுகளுக்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கைகளில் போக்குவரத்துத் துறை குறித்த பத்திகளின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் (1983–84) முப்பத்தி ஆறாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் (1985–86) (எட்டாவது பேரவை) பதினாறாவது அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்.)

## இணைப்பு.

(348-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 60-க்கான விடையைக் காண்க.)

(அ) மீன் உற்பத்தியைப் பெருக்க மீன்வளத்துறையின் கீழ்க்கண்ட திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

கடல் மீன் வளத்தைப் பெருக்க கீழ்க்கண்ட திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

1 கண்ணாடி இழைப் படகுகள் வழங்குதல்.

2 நாட்டுக் கலன்களின் மீன்பிடிப்புத் திறனை அதிகரிப்பதற்கு உட்புறம்/வெளிப்புறம் பொருத்தப்படக்கூடிய இயந்திரங்களை அமைத்து நாட்டுக் கலன்களை இயந்திர மயமாக்குதல்.

3 நாட்டுக் கலன்களைக் கொண்டு மீன்பிடித் தொழில் செய்வோருக்கு நைலான் வலைகள் 20 சதவிகிதம் மானியமும் மற்றும் 80 சதவிகிதம் கடன் அடிப்படை யிலும் வழங்குதல்.

4 தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்திற்கு மீன்பிடி நாவாய் கள் வாங்குவதற்கு நிதியுதவி செய்தல்.

இத்துடன் சிறிய அளவில் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வரும் மீனவர்களுக்கு 50 சதவிகித மானியம் மற்றும் 50 சதவிகித கடன் அடிப்படையில் நாட்டுக் கலன்களை வழங்கும் திட்டம் ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு மீன்வளம்.

உள்நாட்டு மீன்வளத்தைப் பெருக்க தேசிய மீன்குஞ்சு உற்பத்தி திட்டம் என்ற திட்டத்தின் கீழ் 10 ஹெக்டேர் பரப்பளவுள்ள இரு மீன்குஞ்சு பண்ணைகள் அமைத்திடப்படும். இப்பண்ணைகள் முடிந்தபின் ஆண்டு ஒன்றுக்கு 300 மில்லியனுக்கு மேலாக மீன்குஞ்சிகள் உற்பத்தி செய்யப்படும். எல்லா குளங்களையும் துறையே மேற்கொண்டு உற்பத்தி செய்யப்படும். மேலும் முதற்படியாக மதுரை மற்றும் திவிரமீன் நெல்லை கட்டபொம்மன், தென்னாற்காடு மாவட்டங்களிலுள்ள 15,000 ஹெக்டேர் நீர் பரப்பில் தீவிர மீன் வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்படும். இறால்மீன் உற்பத்தியைப் பெருக்க இறால் மீன் குஞ்சுகள் பெரு மளவில் கிடைக்கக்கூடிய முகத்துவாரங்களுக்கு அருகில் சோதனை அடிப்படையில் இறால் மீன் பண்ணைகள் அமைக்கப்படுகின்றன. மேலும் தொழில் நுட்பமுறையில் அதிக அளவில் இறால்கள் வளர்த்திட இறால் குஞ்சு பொரிப்பகத்துடன் கூடிய இறால் பண்ணைகளும் அமைக்கப்படுகின்றன. உவர்நீர் மீன் வளர்ப்பை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள தொண்டியக்காடு என்னுமிடத்தில் மத்திய அரசு உதவியுடன் ரூ. 29.00 இலட்சம் செலவில் ஒரு 50 ஹெக்டேர் உவர்நீர் மீன் பண்ணை அமைக்கப்படும். மாநில திட்டத்தின் கீழ் ரூ. 12.69 இலட்சத்தில் காரங்காட்டில் 15 ஹெக்டேர் பரப்பளவில் ஒரு இறால் பண்ணை அமைக்கப் படும்

மீனவர்களின் நலனுக்காக கீழ்க்கண்ட நலத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. மீன்வளத் துறையின் மூலம், மீனவர் விபத்து காப்புறுதி திட்டம், மீனவர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல், மீனவர்களுக்கு கடற்கரையோர அடிப்படை வசதிகள், தொழிற்சார்ந்த உள்ளமைப்பு வசதிகள்; மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள், மீனவ கிராமங் களுக்கு இணைப்பு சாலைகள் அமைத்தல், கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரண நிதித்திட்டம் வழிகாட்டி விளக்குகள் அமைத்தல், மீனவர்களுக்கு பயிற்சி அளித்தல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.





மீன் வளத்துறையால் மேற்கொள்ளப்படும் மீன் வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் மீனவ நல திட்டங்கள் மீன்வளத்துறையின் கொள்கை விளக்கக் குறிப்பில் விரிவாகக் குறிப்பிடப்பட்டு அவைமுன் வைக்கப்படுகிறது.

(ஆ) ஆம்.

(இ) தஞ்சை மற்றும் நெல்லை என்ற இரு மீன்பிடி கலன்களை இயக்குவதன் மூலம், 1981-82 முதல் 1984-85 (9 மாதம் முடிய) கிடைத்த வருவாய் மற்றும் நிகர இலாபம் விவரம் பின்வருமாறு:—

| வருடம் | செலவு | வருவாய் (இலட்சத்தில்) | கிடைத்த நிகர இலாபம் |
|---|---|---|---|
| | | | (ரூ. இலட்சத்தில) |
| 1981–82 | 59.56 | 65.72 | 6.16 |
| 1982–83 | 51.23 | 74.49 | 23.27 |
| 1983–84 | 52.95 | 88.31 | 35.36 |
| 1984–85 (டிசம்பர் 84 முடிய 9 மாதங்கள்) | 41.39 | 70.20 | 28.91 |

(ஈ) ஆம்.

(உ) 17 விசைப்படகுகள்மூலம் மீன் பிடிக்கப்படுகிறது. இதில் 6 சுருக்கு வலைப்படகுகளும், அதனுடைய 5 உபபடகு களும் கழகத்தால் கட்டப்பட்டு, இயக்கப்பட்டுவரும் 6 படகு களும் அடங்கும். 6 சுருக்கு வலைபடகுகளையும் அவற்றின் 5 உப படகுகளையும் தமிழக கடற்கரையோரங்களில் இலாபகரமாக இயக்க முடியாததால் அவற்றை கர்நாடக மீன்வளர்ச்சிக் கழகத்துடன் இணைத்து, மேற்கு கடற்கரையில் இயக்கப்படுகிறது.

(ஊ) இப்படகுகளை இயக்குவதன் மூலம் கிடைத்த வருவாய் மற்றும் நிகர இலாபம்/நஷ்டம் பின்வருமாறு:—

சுருக்கு வலைப் படகுகள்.

| வருடம். | செலவு. | வரவு. | இலாபம் அல்லது நஷ்டம். |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1980–81 | 2.95 | 0.44 | 2.51 |
| 1981–82 | 13.68 | 2.42 | 11.23 |
| 1982–83 | 10.70 | 12.40 | –1.70 |
| 1983–84 (9 மாதங்கள்) | 11.40 | 6.73 | *4.67 |
| 1984–85 (டிசம்பர் வரை) | 11.50 | 6.57 | 4.95 |

3 நாட்டுக் கலன்களைக் கொண்டு மீன்பிடித் தொழில்
செய்வோருக்கு நைலான் வலைகள் 20 சதவிகிதம்
மானியமும் மற்றும் 80 சதவிகிதம் கடன் அடிப்படை
யிலும் வழங்குதல்.

4 தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்திற்கு மீன்பிடி நாவாய்
கள் வாங்குவதற்கு நிதியுதவி செய்தல்.

இத்துடன் சிறிய அளவில் மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு
வரும் மீனவர்களுக்கு 50 சதவிகித மானியம் மற்றும் 50 சதவிகித
கடன் அடிப்படையில் நாட்டுக் கலன்களை வழங்கும் திட்டம்
ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு மீன்வளம்.

உள்நாட்டு மீன்வளத்தைப் பெருக்க தேசிய மீன்குஞ்சு
உற்பத்தி திட்டம் என்ற திட்டத்தின் கீழ் 10 ஹெக்டேர்
பரப்பளவுள்ள இரு மீன்குஞ்சு பண்ணைகள் அமைத்திடப்படும்.
இப்பண்ணைகள் முடிந்தபின் ஆண்டு ஒன்றுக்கு 300 மில்லியனுக்கு
மேலாக மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படும். மேலும்
எல்லா குளங்களையும் துறையே மேற்கொண்டு தீவிரமீன்
உற்பத்தி செய்யப்படும். முதற்படியாக மதுரை மற்றும்
தென்னாற்காடு மாவட்டங்களிலுள்ள 15,000 ஹெக்டேர் நீர்
பரப்பில் தீவிர மீன் வளர்ப்புத் திட்டம் செயல்படுத்தப்படும்.
இறால்மீன் உற்பத்தியைப் பெருக்க இறால் மீன் குஞ்சுகள் பெரு
மளவில் கிடைக்கக்கூடிய முகத்துவாரங்களுக்கு அருகில் சோதனை
அடிப்படையில் இறால் மீன் பண்ணைகள் அமைக்கப்படுகின்றன.
மேலும் தொழில் நுட்பமுறையில் அதிக அளவில் இறால்கள்
வளர்த்திட இறால் குஞ்சு பொறிப்பகத்துடன் கூடிய உவர்நீர்
இறால் பண்ணைகளும் அமைக்கப்படுகின்றன. உவர்நீர் மீன்
வளர்ப்பை மேம்படுத்தும் திட்டத்தின் கீழ் தஞ்சாவூர்
மாவட்டத்தில் உள்ள தொண்டியக்காடு என்னுமிடத்தில்
மத்திய அரசு உதவியுடன் ரூ. 29.00 இலட்சம் செலவில் ஒரு
50 ஹெக்டேர் உவர்நீர் மீன் பண்ணை அமைக்கப்படும்.
மாநில திட்டத்தின் கீழ் ரூ. 12.69 இலட்சத்தில் காரங்காட்டில்
15 ஹெக்டேர் பரப்பளவில் ஒரு இறால் பண்ணை அமைக்கப்
படும்

மீனவர்களின் நலனுக்காக கீழ்க்கண்ட நலத்திட்டங்கள்
மேற்கொள்ளப்படுகின்றன. மீன்வளத் துறையின் மூலம், மீனவர்
விபத்து காப்புறுதி திட்டம், மீனவர்களுக்கு கூட்டுறவுச்
சங்கங்கள் அமைத்தல், மீனவர்களுக்கு கடற்கரையோர
அடிப்படை வசதிகள், தொழிற்சார்ந்த உள்ளமைப்பு வசதிகள்;
மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகள், மீனவ கிராமங்
களுக்கு இணைப்பு சாலைகள் அமைத்தல், கடல் மீனவர் சேமிப்பு
மற்றும் நிவாரண நிதித்திட்டம் வழிகாட்டி விளக்குகள்
அமைத்தல், மீனவர்களுக்கு பயிற்சி அளித்தல் போன்ற
திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.



மீன் வளத்துறையால் மேற்கொள்ளப்படும் மீன் வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் மீனவ நல திட்டங்கள் மீன்வளத்துறையின் கொள்கை விளக்கக் குறிப்பில் விரிவாகக் குறிப்பிடப்பட்டு அவைமுன் வைக்கப்படுகிறது.

(ஆ) ஆம்.

(இ) தஞ்சை மற்றும் நெல்லை என்ற இரு மீன்பிடி கலன்களை இயக்குவதன் மூலம், 1981-82 முதல் 1984-85 (9 மாதம் முடிய) கிடைத்த வருவாய் மற்றும் நிகர இலாபம் விவரம் பின்வருமாறு:—

| வருடம் | செலவு | வருவாய் (இலட்சத்தில்) | கிடைத்த நிகர இலாபம் (ரூ. இலட்சத்தில) |
|---|---|---|---|
| 1981–82 | 59.56 | 65.72 | 6.16 |
| 1982–83 | 51.23 | 74.49 | 23.27 |
| 1983–84 | 52.95 | 88.31 | 35.36 |
| 1984–85 | 41.39 | 70,30 | 28.91 |

(டிசம்பர் 84 முடிய 9 மாதங்கள்)

(ஈ) ஆம்.

(உ) 17 விசைப்படகுகள்மூலம் மீன் பிடிக்கப்படுகிறது. இதில் 6 சுருக்கு வலைப்படகுகளும், அதனுடைய 5 உபபடகு களும் கழகத்தால் கட்டப்பட்டு, இயக்கப்பட்டுவரும் 6 படகு களும் அடங்கும். 6 சுருக்கு வலைபடகுகளையும் அவற்றின் 5 உப படகுகளையும் தமிழக கடற்கரையோரங்களில் இலாபகரமாக இயக்க முடியாததால் அவற்றை கர்நாடக மீன்வளர்ச்சிக் கழகத்துடன் இணைத்து, மேற்கு கடற்கரையில் இயக்கப்படுகிறது.

(ஊ) இப்படகுகளை இயக்குவதன் மூலம் கிடைத்த வருவாய் மற்றும் நிகர இலாபம்/நஷ்டம் பின்வருமாறு:—

சுருக்கு வலைப் படகுகள்.

| வருடம். | செலவு. | வரவு. | இலாபம் அல்லது நஷ்டம். |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1980–81 | 2·95 | 0.44 | 2.51 |
| 1981–82 | 13.68 | 2,42 | 11.23 |
| 1982–83 | 10.70 | 12.40 | –1.70 |
| 1983–84 (9 மாதங்கள்) | 11.40 | 6.73 | *4.67 |
| 1984–85 (டிசம்பர் வரை) | 11.50 | 6.57 | 4.95 |

30 அடி படகுகள் (ஜூலை 83 முதல் ஜூன் 84 வரை)

| படகு எண். | செலவு. | வரவு | இலாபம். |
|---|---|---|---|
| ஐபி 1 | 91,987.00 | 1,45,101.00 | 53,114.00 |
| ஐபி 2 | 75,809.00 | 1,34,694.00 | 58,885.00 |
| ஐபி 3 | 83,320.00 | 1,26,361.00 | 43,041.00 |
| ஐபி 4 | 30,889.00 | 46,282.00 | 15,393.00 |
| ஐபி 5 | 27,338.00 | 38,665.00 | 11,327.00 |
| ஐபி 6 | 36,083.00 | 46,669.00 | 13,586.00 |

இதைத் தவிர பல்வேறு மீனவர் நலத்திட்டங்களும் செயல்படுத்தப்படுகின்றன.

*(இப்படகுகள் ஆரம்பக்கட்டத்தில் சோதனை ரீதியாக கிழக்கு கடற்கரையில் மீன்பிடிப்பதற்கு பயன்படுத்தப்பட்டன. அவ்வாறு பயன்படுத்தியதில் நட்டம் ஏற்பட்டது. தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வருவதால் கர்நாடக மீன் வளர்ச்சி கழகத்துடன் இணைந்து, மேற்கு கடற்கரை மீன்பிடிப்பு நடத்திட தீர்மானிக்கப்பட்டு மங்களூரில் செயல்பட்டு வருகிறது.)

ஆவணக்காப்பக
சென்னை-600 008
136438
N86
-3 94

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERN… PUBLICATION.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 P. Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts R… Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirun… Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Ma…
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1 Ponniamman Koil Street, E… Madras-8.

### IN MOFUSSIL OF TAMIL NADU.

1 A Venkatasubban & Company, Vellore (North Arcot District).
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V.Nathan Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Bros., Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Road, Coimbatore-12
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirap…
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiru…
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiru… …palli-4
13 Mary Martin, Booksellers, Kottagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 45D, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-10.
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavillas Book Shop, 90, Amman Sannathi, Madras-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 Inter National Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalayam, Pondicherry.
7 K. P. Bagchi & Company, 286, R. B. Gandhi Street, Calcutta-11.

---

Published under Rules 234 and 237 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.